# பாபாசாகேப்
# டாக்டர் அம்பேத்கர்

## நூல் தொகுப்பு :

தொகுதி 4



# டாக்டர் அம்பேத்கர்
# சைமன் குழுவுடன்
## (இந்தியச் சட்டப்படியான குழு)

# பதிப்புரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வெளியீட்டுப் பணி பலவகைச் சிரமங்களுக்கிடையிலும் விரைவாக நிறைவேறி வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் பேச்சும் எழுத்தும் அடங்கிய தொகுதிகளை ஆங்கிலத்தில் திரு. வஸந்த் மூன் அவர்கள் தொகுத்தளித்துள்ள பொருள் வரிசை நிறையிலேயே இந்தியிலும் பிற இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடுகின்றோம்; எனினும் வாசகர்களின் வசதியைக் கருதி ஆங்கிலத் தொகுதிகள் சிறிய அளவில் பல பகுதிகளாக வெளி வருகின்றன. மொழிபெயர்ப்பும் அதனிலும் ஒப்பு நோக்கும், பதிப்புப் பணியும் கடினமானவை. இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் அனைத்துத் தொகுதிகளையும் மொழிபெயர்த்து வெளியிட வேண்டும் என்னும் திட்டம் நிறைவேற்றுவதற்குக் கடினமாவது என்ற போதிலும் காலவரையறையைக் கருத்தில் கொண்டு விரைந்து செயற்படுகின்றோம். ஆற்றல்மிக்க நமது மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், பதிப்பாளர்கள் ஆகியோரின் துணைக்கொண்டு திட்டமிட்டவாறு இந்தப் பணியை நிறைவு செய்ய உறுதிபூண்டுள்ளோம்.

இந்த மொழிபெயர்ப்பு நூல்களை இலக்கியப் படைப்புகளாகக் கருதாமல், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் தத்துவங்களையும் சிந்தனைகளையும் நன்கு அறிந்து கொள்ள உதவும் எளிய மொழிபெயர்ப்பு நூல்களாகக் கருத வேண்டுகிறோம்.

படிப்போரின் வசதியைக் கருதி ஆங்கிலத்திலுள்ள இரண்டாம் தொகுதி: மொழிபெயர்ப்பில் — பம்பாய்ச் சட்டமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர், சைமன் குழுவினரோடு டாக்டர் அம்பேத்கர், வட்ட மேசை மாநாடுகளில் டாக்டர் அம்பேத்கர் என மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

முந்தைய தொகுதிகள் மக்களிடையே பெற்ற வரவேற்பு இந்தத் தொகுதிகளுக்கும் கிடைக்குமென நம்புகின்றோம்.

புது டில்லி
மார்ச்

**டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி**
தலைமைப் பதிப்பாளர்

# வாழ்த்துரை

டாக்டர் பாபாசாகேப் பி. ஆர். அம்பேத்கர் அவர்கள் இந்து சமுதாயத்தின் அடக்குமுறையையும் ஒடுக்கு முறையையும் தீவிரமாக எதிர்த்து நின்றதோடு பல்வேறு துறைகளில் ஆற்றலும் புலமையும் வாய்ந்தவராகவும் விளங்கினார்.

அரசியல் மாமேதையாகவும் தேசியத் தலைவராகவும் திகழ்ந்த அவர், இந்திய அரசியலமைப்புச் சட்டம் என்னும் அரிய செல்வத்தினை நமக்கு வழங்கிச் சென் றுள்ளார். கல்வியறிவில்லாமல் முன்னேற்றம் பெறுவது இயலாதென உறுதியான கருத்தினைக் கொண்டிருந்த அவர், பல பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவித் தலித் மக்கள் கல்விப்பேற்றினைப் பெறுவதற்கு வழிவகுத் தார்.

தமது வாழ்நாள் முழுவதும் சுரண்டப்பட்ட மக்களின் விடுதலைக்காக அயர்வின்றி போராடியவர். இதன் காரணமாகச் சமூக, பொருளாதார அநீதிகளிலிருந்து மனிதகுலத்தை மீட்பதற்குப் பாடுபட்டவர் என்று அனைத் துலகிலும் பாராட்டுப் பெற்றவர்.

அவர்தம் கருத்துக்களைப் பரப்பும் பொருட்டு டாக்டர் அம்பேத்கர் பௌண்டேஷன், அவரது சொற்பொழிவு களையும் நூல்களையும், இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் வெளிக்கொணர்வதை அறிந்து பெரு மகிழ்வடைகின்றேன்.

இந்தச் சீரிய பணி வெற்றி பெற எனது நல்வாழ்த் துக்கள்.

**கே. வி. தங்கபாலு**

இணை அமைச்சர்
நலத்துறை
இந்திய அரசு

புதுடில்லி
4.4.1994.

# அணிந்துரை

பாரத் ரத்னா டாக்டர் பாபாசாகேப் பீம்ராவ் அம்பேத்கர் அவர்கள் நம் நாட்டு அரசியமைப்புச் சட்டத் தந்தை மட்டுமல்லர்; மாபெரும் சமூக அறிவியல் அறிஞராகவும் ஆழ்ந்த சிந்தனையாளராகவும் விளங்கியவர். இந்தியத் தத்துவத்தில் மலிந்திருந்த பிற்போக்குப் பழமைக் கருத்துக்களை எதிர்த்தவர். சுரண்டலுக்காளான உழைப்பாளர்களுக்கும் தலீத் மக்களுக்கும் இரட்சகராக அவர் தோன்றினார். அவரது நூல்கள் நம் நாட்டு மொழிகளில் இல்லாததால் அவருடைய சிந்தனைகள் பொது மக்களுக்கு எட்டாமற்போயின.

நலவாழ்வுத் துறையைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுதிகளை இந்தியிலும் தமிழ் உட்பட இந்திய மொழிகள் பிறவற்றிலும் மொழி பெயர்த்து வெளியிட முடிவெடுத்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. பாபாசாகேப் அவர்களுடைய சென்ற ஆண்டின் பரிநிர்வாணமடைந்த நாளில் அவரது நூல் தொகுப்பின் இரண்டாவது தொகுதி இந்தியிலும் தமிழிலும் வெளிவந்து நாட்டுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

தற்போது, இந்தியிலும் தமிழிலும் அவருடைய நூல் தொகுப்பின் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது தொகுதிகளையும் பஞ்சாபி மொழியில் முதல் தொகுதியையும் அளிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

தலைமைப் பதிப்பாளர் டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி அவர்கள், பதிப்பாளர்க் குழு உறுப்பினர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்கியோர் முதலியவர்களின் ஒத்துழைப்புடன் இந்த மொழிபெயர்ப்புத் திட்டத்தை விரைவில் நிறைவு செய்வார்கள் எனவும், பாபா சாகேப் அவர்களின் செய்தியை மக்களுக்குத் தெரிவிப்பதன் மூலம் சமுதாயத்திற்குப் புதியதொரு வழியைக் காட்டுவார்கள் எனவும் நம்புகின்றேன்.

**சீதாராம் கேசரி**
நலவாழ்வுத் துறை அமைச்சர்
இந்திய அரசு

புது டில்லி
மார்ச் 5, 1994

**ஆங்கிலத் தொகுப்பாளர்:**

திரு. வஸந்த் மூன்

பம்பாய்

**தமிழ் நூல் பதிப்பாளர்:**

டாக்டர் எஸ். பெருமாள்

**மொழிபெயர்ப்பாளர்கள்:**

திரு. கோ. ஆளவந்தார்

திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)

திரு. எ. எஸ். மூர்த்தி

திரு. எ. எஸ். மணி

**ஒப்புநோக்கியோர்:**

திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)

**பிழைதிருத்த உதவி:**

டாக்டர் சு. நவநீதகிருட்டிணன்

## ஆலோசனைக் குழு

**மாண்புமிகு திரு. சீதாராம் கேசரி,**
நலத்துறை அமைச்சர்
இந்திய அரசு

**மாண்புமிகு திரு. கே. வி. தங்கபாலு,**
இணை அமைச்சர், நலத்துறை
இந்திய அரசு

**திரு. மாத்தா பிரஸாத்,** இ.ஆ.ப.,
செயலாளர், நல அமைச்சகம்

**திரு. கங்காதாஸ்,** இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்,
நல அமைச்சகம்,
மற்றும் உறுப்பினர்—செயலாளர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

**தலைமைப் பதிப்பாளர்:**

**பத்மஸ்ரீ டாக்டர் ஷ்யாம் சிங் ஷஷி,** பிஎச்.டி., டி.லிட்.,

**நிர்வாகப் பதிப்பாளர் (தமிழ்):**

**டாக்டர் எஸ். பெருமாள்,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.

This Volume IV in Tamil forms the second part of the English Edition Volume 2: **Dr. Babasaheb Ambedkar — Writings and Speeches** Published by the Education Department, Government of Maharashtra, 1982

முதற்பதிப்பு: மார்ச், 1994
சைத்ரா, 1916

© உரிமைப் பதிவு

**விலை ரூ. 40/-**
**நூலகப் பதிப்பு: ரூ. 100/-**

**வெளியீட்டாளர்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
நல அமைச்சகம், இந்திய அரசு,
புது டில்லி.

**விற்பனை நிலையம்:**

டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
25, அசோகா சாலை,
புது டில்லி-110 001.

---

அச்சிட்டோர்:

பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்,
சென்னை-600 014.
தொலைபேசி: 832441

*''பரிபூரண சுயாட்சி உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் நான் மிகுந்த அக்கறை கொண்டுள்ளேன்; ஆனால் அதேசமயம் மத்திய அரசாங்கத்தை எவ்விதத்திலும் பலவீனப்படுத்தக் கூடிய எந்த மாற்றத்தையும், அதன் தேசியத் தன்மையை ஊறுபடுத்தக் கூடிய எந்த மாற்றத்தையும், அதேபோல் மக்களின் கண் முன்னே அதனைச் சிறுமைப்படுத்தக்கூடிய எந்த மாற்றத்தையும் நான் எதிர்க்கிறேன். குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக ஒரே அமைப்பாக அமைந்த பல அரசாங்கங்கள் அடங்கிய ஒரு கூட்டிணைவாக மத்திய அரசாங்கம் ஆக்கப்படுவதும் எனக்கு உடன்பாடில்லை. இத்தகைய ஓர் ஏற்பாட்டினால் எத்தகைய விளைவு ஏற்படும் என்பது தெள்ளத்தெளிவு. இந்தக் கூட்டிணைவு பல அரசாங்கங்களின் ஒரு திரளாகத்தான் இருக்கும்; எனவே இந்த அரசாங்கங்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்து செல்வதெனத் தீர்மானிக்கும் போது, இந்தக் கூட்டிணைவு மறைந்துவிடும். இந்தக் கூட்டிணைவிலுள்ள அரசாங்கங்கள் விரும்பும்வரைதான் இத்தகைய ஒரு மத்திய அரசாங்கம் நீடிக்க முடியும். இந்த அமைப்புப் பல அரசாங்கங்களின் ஒரு கூட்டமைப்பு ஆதலால் அது அரசாங்கங்கள் விஷயத்தில்தான் செயல்பட முடியும். தனிநபர்களைப் பொறுத்த வரையில் அது அதிகம் எதுவும் செய்வதற்கில்லை....''*

*— டாக்டர் அம்பேதகர்*

*மாநில சுயாட்சி*



டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891　　　　பரிநிர்வாணம்: டிசம்பர் 6, 1956

டாக்டர் பாபாசாகேப்

# அம்பேத்கர்:

## பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு

## தொகுதி 4

அ

# பம்பாய் மாநிலச் சட்டமன்ற அமைப்பு பற்றிய அறிக்கை

## முன்னுரை

குழுவில் என்னுடன் பணியாற்றிய எனது கூட்டாளிகள் தயாரித்த அறிக்கையின் பொதுவான கருத்துப் போக்கை என்னால் ஒப்புக் கொள்ளவோ அல்லது நாங்கள் விசாரணை செய்த கருத்துக்களைப் பற்றி அவர்கள் எடுத்த முக்கியமான முடிவுகளை என்னால் ஏற்றுக் கொள்ளவோ இயலவில்லை என்பதற்காக வருந்துகிறேன். எனவே, எனது சொந்தக் கருத்துக்களையும் பரிந் துரைகளையும் கொண்ட இந்தத் தனி அறிக்கையை அளிக்கிறேன். எனது கூட்டாளிகளின் அறிக்கையை விட எனது அளவில் பெரி தாக உள்ளது. எனது அறிக்கையில் வெறும் கேள்வி பதில்களை மட்டும் அளித்திருந்தால், ஒரு வேளை அதன் அளவைக் குறைத் திருக்க முடியும். ஆனால், கேள்விக்கு விடை அளிக்கையில், விடைக்கு ஆதாரமாக் இருந்த கோட்பாடுகளையும் விளக்கங்களை யும் தராவிட்டால், அதைச் சரியானபடி புரிந்து கொள்ள முடி யாது என்று கருதினேன். நான் சுருக்கமாக எழுதியிருந்தால், அறிக்கையில் காணப்படும் பரிந்துரைகளுக்குப் போதுமான கார ணங்களோ அல்லது விவாதங்களோ தரப்படவில்லை என்று சிலர் கண்டித்து விமர்சிக்கும் நிலை ஏற்பட்டிருக்கலாம். எனவே, அறிக்கையைச் சுருக்கி எழுத நான் முயலவில்லை. ஆதலால் தான், அறிக்கை இந்த அளவை அடைந்துள்ளது.

பிரிவு: 1

# மாநிலத்தின் வட்டார அமைப்பில் மாற்றம்

1. பம்பாய் மாநிலத்தின் பரப்பளவு 12,23,541 சதுர மைல். இதில் (1) மஹாராஷ்டிரா (2) குஜராத் (3) கர்னாடகம் (4) சிந்து என நான்கு மொழிகளைப் பேசும் வட்டாரங்கள் அடங்கியுள்ளன. இந்தப் பல்வேறு வட்டாரங்களைச் சேர்ந்த மக்களும், ஒரே நிர்வாகத்தின் கீழ் நீண்ட காலமாக இருந்து வருகிறார்கள். குஜராத், மஹாராஷ்டிரா, கர்னாடகம் ஆகியவை பம்பாய் மாநிலத்தின் பகுதிகளாகக் கடந்த 110 ஆண்டுகளாக இருந்து வருகின்றன. சுமார் 85 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்து வட்டாரம் இத்துடன் இணைக்கப்பட்டது. இந்த மாநில அமைப்பிலிருந்து தனியே பிரிந்து செல்லக் கர்நாடகமும் சிந்துவும் இப்போது விரும்புகின்றன. இன்றுள்ள பம்பாய் மாநிலம் ஓர் இயல்பான அமைப்பு அல்லவென்றும், மொழி, இன அடிப்படையில் ஒன்றுபட்டதல்லவென்றும், ஓரினத்தன்மைக் கொண்ட பகுதிகளை வேண்டுமென்றே சிதைத்து, பலவகைக் குழுக்களைக் கொண்ட ஒரு வட்டாரத்துடன் இவை வலுக்கட்டாயமாக இணைக்கப்பட்டனவென்றும், கர்னாடகம் மற்றும் சிந்துவின் தரப்பில் விவாதிக்கப்படுகிறது. இதனால் பெரும் தீங்கு ஏற்பட்டுள்ளதென்றும், கட்டாயத் துண்டாடல் காரணமாகத் தம்முடைய பண்பாட்டுத் தனித்தன்மைக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதென்றும், பெரிய, வேறு இனப் பகுதிகளுடன் தாம் சேர்க்கப்பட்டதால், அரசியல் ரீதியாகத் தாங்கள் கவனிப்பற்றுப் போனதாயும் கர்னாடக, சிந்து வட்டார மக்கள் கூறுகின்றனர்.

2. கர்னாடகத்தைப் பொறுத்தமட்டில், இந்த வாதம் ஓரளவு சரியென்றே கூறலாம். கர்னாடகம் பல்வேறு சிதறிய பகுதிகளாகத் துண்டிக்கப்பட்டு, நிர்வாக நோக்கங்களுக்காக, கர்னாடகம் அல்லாத பகுதிகளுடன் சேர்க்கப்பட்டது. இதனால் பல சிரமங்கள் ஏற்பட்டன என்பது உண்மை. பம்பாய் மாநிலத்துடன் இணைக்கப்பட்ட பகுதிக்குப் பம்பாய்ச் சட்டமன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாததால், அப்பகுதி அரசியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டது என்பதையும் மறுப்பதற்கில்லை. இவையெல்லாம் இருந்தபோதிலும், பம்பாய் மாநிலத்திலிருந்து கர்னாடகத்தைத் தனியாகப் பிரிப்பதை நான் எதிர்க்கிறேன். நடைமுறையில் மொழிக்கு ஒரு மாநிலம் என்ற கொள்கையைச் செயல்படுத்த முடியாது. இந்தக் கோட்பாட்டை அமல்படுத்தினால், ஏராளமான மாநிலங்களை உருவாக்க வேண்டியிருக்கும்; அது நடைமுறைக்கு ஒவ்வாதது என்பது என் கருத்து. ''கடந்த காலத்தையும், எதிர்காலத்தையும் கொண்ட, தனிப் பண்புகள் கொண்ட

பண்பாட்டு மொழியாக ஒரு மொழி பேசப்படும் வட்டாரங்களிலும்,'' ''வலுவான மொழி உணர்வு இருக்கும் வட்டாரங்களிலும்'' கூட இத்தகைய மாநிலங்களை அமைப்பது நடைமுறைக்கு ஒவ்வாதது. கடந்த காலச் சிறப்புக்களைப் பெற்றிருக்கும் ஒவ்வொரு மொழிக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டால், அதற்குச் சிறந்த எதிர்காலம் அமையும் என்பது உண்மை; தனித்தனி மொழி பேசும் மக்கள் கூட்டத்திற்கு, அரசாங்க அதிகாரங்கள் வழங்கப் பட்டால், அது மொழி உணர்வைப் பெறும் என்பதும் உண்மை. இவற்றையெல்லாம் நான் மறுக்கவில்லை. இன்றுள்ள ஏற்பாட்டின் படி, கன்னட மொழி பேசும் மக்கள் தொடர்ந்து பம்பாய் மாநிலத் திலேயே சேர்ந்திருந்தால், கன்னடக் கலாசாரத்திற்குப் பெரும் பாதிப்பு கட்டாயம் ஏற்படும் என்று கூறுவதற்கில்லையென்றாலும், ஓரளவு பாதிப்பு ஏற்படலாம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அத்தகைய விளைவு ஏற்பட்டாலும், அது பெரிதும் வருந்தத்தக்க விஷயமல்ல என்று கருதுகிறேன். ஏனெனில், பொதுமக்களிடையே பொதுவான தேசிய உணர்வை உருவாக்கி வளர்க்க வேண்டியது தான் மிகவும் இன்றியமையாத உயிர்த் தேவை (Vital need) என்று நான் கருதுகிறேன். தாங்கள் முதலில் இந்தியர்கள் என்றும், அதன் பின்னர் தான் இந்துக்கள், முஸ்லீம் கள், சிந்திகள், கன்னடக்காரர்கள் என்னும் உணர்வு கொண்டிருப்பதற்கு மாறாக, தாங்கள் முதலிலும் இறுதியிலும் இந்தியர்கள், இந்தியர்கள் மட்டுமே என்ற பொதுவான தேசிய உணர்வை உருவாக்கி வளர்ப்பது உயிர் நாடியான பணி என்று கருதுகிறேன். இதுதான் நாம் கடைப்பிடிக்க வேண்டிய இலட்சியமென்றால், உள்ளூர்ப் பற்றையோ அல்லது குழு உணர்வையோ தூண்டி வலுப்படுத்தக் கூடிய செயல்கள் எதையும் நாம் செய்யக் கூடாது. இன்றைய பம்பாய் மாநிலம் வெவ்வேறு இன மக்களைக் கொண்ட கதம்பம் போல உள்ளது. இதிலுள்ள பல இன மக்களும் பொது வாகச் சேர்ந்து செயலாற்ற வேண்டியுள்ளது. எனவே, தனிப்பட்ட உணர்ச்சி வளருவதற்கு இது ஊக்கம் அளிக்கவில்லை, மேலும் அத்தகைய உணர்ச்சி வளராமல் தடுக்கிறது எனலாம். ஆயினும் நன்மை அளிக்கும் ஏற்பாட்டைப் பேணிக் காக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். எனவே, கர்நாடகம் தனியே பிரிக்கப்பட வேண்டும் என்பதை நான் எதிர்க்கிறேன்.

3. தனியாகப் பிரிந்து செல்ல வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்க, எவருமே மாநாட்டில் சாட்சி கூற முன் வராத தால், எனது கூட்டாளிகள் அந்தக் கோரிக்கையை ஒட்டுமொத்த மாக மறுத்து விட்டார்கள். இந்த விஷயத்தில் நானும் எனது கூட்டாளிகளும் ஒருமித்த கருத்துக் கொண்டிருப்பதால், இதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. ஆனால், சிந்து விஷயத்தில், எனது கூட்டாளிகள் வேறுவிதமான முடிவுக்கு வந்ததுதான் எனக்கு வியப்பு அளிக்கிறது. கர்னாடகத்துடன் ஒப்பிடுகையில், சிந்து விஷயத்தில் இத்தகைய முடிவு எடுப்பதற்கு வலுவான

ஆதாரங்கள் இல்லை. பம்பாய் மாநிலத்துடன் இணைக்கப்பட்டதால், சிந்து வட்டாரம் கணிசமான அளவு நலம் பெற்றுள்ளது என்பதைப் பற்றி இருவிதமான கருத்துக்களுக்கு இடமில்லை. சிந்துப் பகுதி நீண்ட தூரத்தினால் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் மாநில நிர்வாகத்தில், அதன் நிலை வேறு; மிகவும் கௌரவமான சலுகைகள் அளிக்கப்பட்டு, உயர்ந்த மதிப்புடன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆளுநரை அடுத்து உயர் மதிப்புப் பெற்றுள்ள ஒரு ஆணையர் (Commissioner) சிந்துவின் விவகாரங்களை நிர்வாகம் செய்கிறார்; சிந்துவின் சுதந்திரமான செயல்பாடு பெரிதும் பாதுகாக்கப்பட்டுள்ளது. அதனுடைய, தொன்மையான, மரபு வழக்கான சட்டங்கள் அப்படியே கடைப்பிடிக்கப்படுகின்றன. பம்பாய் மாநிலத்தில் பொதுவாகப் பிரகடனம் செய்யப்பட்ட சட்டங்கள், சிந்து வட்டாரத்திற்கும் அனுகூலமானது என்று கருதப்பட்டாலொழிய, அவ்வட்டாரத்திற்கு அவை அநேகமாய் அமல் செய்யப்படுவதில்லை. அங்குள்ள நடுவர் மன்றங்கள், பம்பாய் மாநிலத்தின் நடுவர் மன்றங்களிலிருந்து முற்றிலும் தனிப்பட்டு இயங்குகின்றன. அங்குள்ள அரசினர் பணியும், பம்பாய் மாநில அரசினர் பணியிலிருந்து முற்றிலும் தனித்தே செயல்படுகிறது எனலாம்; பெரும்பாலும் அங்கு இந்தியர்களே அரசினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பம்பாய் மாநிலத்துடன் சேர்ந்திருப்பதால், அதற்குப் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாய்க் கூற முடியாது. அதற்கு மாறாக, பரந்து கிடக்கும் பம்பாய் மாநிலத்தின் வசதிகளையெல்லாம் பயன்படுத்தி, அது வெகுவாக முன்னேறியுள்ளது; அது தனித்திருந்தால், இத்தகைய முன்னேற்றத்தைக் கண்டிருக்க முடியாது. இணைந்திருப்பதால் தான், பம்பாய் மாநிலத்தின் செல்வ வளங்களை அது நன்கு பயன்படுத்திக் கொள்ள முடிந்திருக்கிறது. மாநில அரசின் கவனத்தை அது பெரிதும் ஈர்த்துள்ளது. குறிப்பாக, சீர்திருத்தங்கள் அமலுக்கு வந்த பின்னர், சிந்து வட்டாரம் தனக்குரிய அளவை விட மிகக் கூடுதலான நன்மைகளை மாநில அரசிடமிருந்து பெற்றுள்ளது. இந்த உண்மைகளின் அடிப்படையில் பார்த்தால், சிந்து தனியே பிரிந்து போனால், வேறு என்ன கூடுதல் நன்மைகளைப் பெற்றுவிட முடியும்? இணைந்திருப்பதால் ஏற்படும் தீமைகள் இல்லாமல், தனித்திருப்பதால் ஏற்படும் நன்மைகள் அனைத்தையும் சிந்து ஏற்கெனவே பெற்றுள்ளதல்லவா?

4. சிந்துவில் வசிக்கும் எல்லாச் சமூகத்தினரும், ஒரே குரலில் இந்தக் கோரிக்கையை எழுப்பவில்லை என்பது தெளிவு. இந்தக் கோரிக்கைத் தொடர்பாக சிந்துவில் வசிக்கும் முஸ்லீம்களுக்கும் ஹிந்துக்களுக்குமிடையே பெரும் மன வேற்றுமை உள்ளது என்பது குழுவிலும் குழுவின் கூட்டு மாநாட்டிலும் அளிக்கப்பட்ட சான்றுகள் தெளிவுபடுத்துகின்றன. முஸ்லீம்கள் தனி மாநிலம் கோருகின்றனர், ஹிந்துக்கள் அதை எதிர்க்கின்றனர். இந்தப் பகுதியில், பொது மக்கள் கருத்தின் வரலாற்றைச் சற்றே ஆராய்ந்து பார்த்

தால், சிந்துவின் மதிப்பு பற்றிய பிரச்சினையை, 1917-ஆம் ஆண்டில் தான், அரசியல் உணர்வு பெற்ற பெருமக்கள் எழுப்பியுள்ளார்கள் என்பதைக் காணலாம். 1917 ஆகஸ்டு மாத அறிவிப்புக்குப் பின்னர், அரசியல் சீர்திருத்தங்களின் விளைவாகச் சிந்துவின் மதிப்பு எவ்வாறு இருக்கும் என்பதை ஆராய்வதற்காக, 1917 நவம்பரில் சிந்தி மக்கள் சிறப்பு மாநாடு ஒன்றை நடத்தினர். சிந்துப் பகுதியின் முக்கிய முஸ்லீம் தலைவரான மதிப்புக்குரிய திரு. ஜி. எம். புர்க்ரி (Bhurgri) வரவேற்புக் கமிட்டியின் தலைவராக இருந்தார்; திரு. ஹர்ச்சந்த்ராய் விஷின் தாஸ் (Harchandrai Vishindas) என்ற ஹிந்துப் பெருமகனார் மாநாட்டின் தலைவராக இருந்தார். மாநாட்டின் எதிரே நான்கு விதமான மாற்று யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருந்தன. அவை யாவன: (1) சிந்துவைத் தனி மாநிலமாக அமைத்தல்; (2) சிந்துவையும் பலுசிஸ்தானையும் இணைத்து ஒரே மாநிலமாக்குதல்; (3) சிந்துவைப் பஞ்சாப்புடன் இணைப்பது; (4) சிந்து இப்போது உள்ளது போலவே பம்பாயுடன் இருப்பது. சிந்துவைத் தனி மாநிலமாக அமைப்பது என்பது உள்பட மூன்று ஆலோசனைகளை, சிறப்பு மாநாடு மறுத்து விட்டது என்பது குறிப்பிடத் தக்கது. அது மட்டுமல்ல, சிந்துவிலுள்ள ஆணையரின் மதிப்பைப் பம்பாய் மாநிலத்தின் இதர பகுதிகளிலுள்ள வட்டார ஆணையர்களின் (Divisional Commissioners) மதிப்பிற்குக் குறைப்பதன் மூலம், சிந்துவுக்கும் பம்பாய் மாநிலத்துக்குமிடையே மேலும் நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று ஹிந்துக்கள் மற்றும் முஸ்லீம்களின் பேராதரவைப் பெற்ற தீர்மானம் சிறப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. ஹிந்துக்களையும் முஸ்லீம்களையும் உள்ளடக்கிய ஒரு தூதுக்குழு, இந்திய மந்திரி திரு. மாண்டேகு (Montague)-வையும், வைசிராய் (Viceroy Lord Reading) ரீடிங் பிரபுவையும் சந்தித்து, தனி மாநிலம் ஆவதைச் சிந்து விரும்பவில்லையென்று திட்டவட்டமாக அறிவித்தது. பின்னர் 1918, 1919, 1920-ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மாநாடுகளிலும், இரண்டு சமுதாயங்களையும் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையில், இதே போன்ற ஒருமித்த கருத்தையே வெளியிட்டார்கள். 1920-க்கு பின்னர், ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றதன் காரணமாக, மாநாட்டில் இந்தப் பிரச்சினை ஆராயப்படவில்லை. இதிலிருந்து ஒரு விஷயம் தெளிவாகிறது. அதாவது முஸ்லீம்கள் தாம் தம்முடைய நிலையை மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; ஒன்றுபட்ட கண்ணோட்டத்திலிருந்து அவர்கள் தாம் விலகிச் சென்றுள்ளார்கள்; சிந்து மாநிலக் கோரிக்கை, இப்போது ஓர் ஒன்றுபட்ட கோரிக்கை அல்ல; ஒரு பிரிவினர் அதாவது முஸ்லீம்கள் மட்டுமே இந்தக் கோரிக்கையை எழுப்பியுள்ளனர், என்பது.

5) மக்களில் ஒரு சாரார் எழுப்பும் இந்தக் கோரிக்கையின் பால் பரிவுகாட்டுவதற்கு முன்னர், இந்தத் தனி மாநிலக் கோரிக்

கைக்கான நோக்கம் சரியானது தானா என்பதைப் பற்றி முதலில் தீர்மானிக்க வேண்டும். முஸ்லீம் தூதுக் குழு இப்போது இந்தக் கோரிக்கையை எழுப்பியுள்ளது; ஆனால் அதே சமயம், ஹிந்து தூதுக்குழு இதை எதிர்த்துள்ளது. எனினும், தமது கோரிக்கையின் நோக்கமென்ன என்று முஸ்லீம் தூதுக் குழுவும், அதைத் தாங்கள் எதிர்ப்பதற்கான காரணம் என்ன ஹிந்து தூதுக் குழுவும் வெளிப் படையாக எதையும் கூறவில்லை. தத்தம் காரணங்களை இரு தரப்பினரும் வெளியிட்டால் தான் அதனதன் தகுதிகளை எவ ருமே நன்கு ஆய்ந்து கொள்ளவியலும். எனினும், எனக்குக் கிடைத்த தகவலின்படி இதற்கான காரணங்களை நானே எடுத் துரைக்க விரும்புகிறேன். ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையே நேச நல்லுறவு ஏற்படுவதற்கான சில நிபந்தனைகளைச் சில முஸ்லீம் பெருமக்கள் ''டில்லி முஸ்லீம் அறிக்கைகள்'' என்ற பெயரில் 1927 மார்ச் 20-ஆம் தேதியன்று வெளியிட்டனர். அந்த அறிக்கைகள் கீழ்க்காணும் கோரிக்கைகளை முன்வைத்தன: (1) சிந்துவைத் தனி மாநிலம் ஆக்க வேண்டும், (2) வடமேற்கு எல்லைப்புற மாநிலத்துக்கு இதர மாநிலங்களின் மதிப்பு அளிக்கப் பட வேண்டும், (3) பஞ்சாபிலும் வங்காளத்திலும், அங்கே வசிக் கும் முஸ்லீம் மக்கள்தொகைக்கு ஏற்பப் பிரதிநிதித்துவம் வழங்கப் பட வேண்டும். முஸ்லீம்கள் பெரும்பான்மையோராக உள்ளக் கூடுதல் மாநிலங்களை அமைப்பதுதான் இந்த அறிக்கைகளின் குறிக்கோள் என்பது இதிலிருந்து தெளிவாகும். தற்சமயம் பஞ்சா பிலும் வங்காளத்திலும் மக்கள்தொகையில் முஸ்லீம்கள் சிறிதளவு தான் கூடுதலாயுள்ளனர். இந்த மாநிலங்களில் மக்கள்தொகை யின் விகிதத்திற்கு ஏற்ப பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கோருவதன் மூலம், இந்த மாநிலங்களில் முஸ்லீம்கள் அரசியல் பெரும்பான்மை பெற்று, முஸ்லீம் அரசினை அமைக்க விரும்புகிறார்கள் என்பது கண்கூடு. பலுசிஸ்தானிலும், வட மேற்கு எல்லைப்புற மாநிலத்திலும் முஸ்லீம்கள் மிகப் பெரும் பான்மையோராய் இருக்கின்றனர். எனினும் அங்கே பிரதிநிதித் துவ அரசு அமைக்கப்படவில்லை. ஆதலால், அங்கே முஸ்லீம்கள் மிகப் பெரும்பான்மையோராய் இருந்த போதிலும், ஆட்சிபுரியும் பெரும்பான்மையோராய் இருக்கவில்லை. இந்தக் குறைபாட்டை நீக்குவதுதான் மேற்கூறிய அறிக்கைகளின் நோக்கம். இதனால் முஸ்லீம் பெரும்பான்மையுள்ள நான்கு மாநிலங்கள் உருவாகும்; அங்கே முஸ்லீம் அரசுகளை அமைக்க முடியும். முஸ்லீம் மக்கள் மிகக் கூடுதலாய் வசிக்கும் சிந்துவையும் தனி மாநிலமாக்கி விட் டால், அது ஐந்தாவது முஸ்லீம் மாநிலமாகத் திகழும் என்பதே அவர்களுடைய கணிப்பு. இந்த முஸ்லீம் மாநிலங்களை அமைப் பதற்குப் பின்னாலுள்ள குறிக்கோள் யாது? வகுப்புவாத வாக் காளர் தொகுதி போன்றது தான் இது என்று முஸ்லீம்கள் கருது கின்றனர். முஸ்லீம் மாநிலங்கள் பற்றிய தங்களுடைய அறிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், வகுப்புவாத வாக்காளர் தொகுதியைக்

கைவிட்டு விட்டு, எல்லா மாநிலச் சட்ட மன்றங்களிலும், மத்திய சட்டப் பேரவையிலும் கூட்டு வாக்காளர் தொகுதியை ஏற்றுக் கொள்ள ஆயத்தம் என்று, அறிக்கைகளை முன்வைத்த முஸ்லீம் பெருமக்கள் குறிப்பிட்டுள்ளனர். வகுப்புவாத வாக்காளர் தொகுதியை அமைத்திருப்பது முஸ்லீம் சிறுபான்மையினரைப் பாதுகாக்கும் நோக்கம் கொண்டது என்றும், இதே நோக்கத்திற் காகத் தான் தாங்கள் முஸ்லீம் மாநிலங்களை அமைக்க வேண்டு மெனக் கோருவதாகவும் வாதாடுகின்றனர். முஸ்லீம் மாநிலங் களைத் தோற்றுவிப்பதன் மூலம், ஹிந்துக்கள் பெருவாரியாக உள்ள மாநிலங்களில், ஹிந்துப் பெரும்பான்மையினரிடமிருந்து முஸ்லீம் சிறுபான்மையினரை எப்படிப் பாதுகாக்க முடியும் என்பது புலனாகவில்லை. வகுப்புவாத வாக்காளர் தொகுதியின் மூலம் தங்களுக்குக் கிடைக்கக் கூடிய, அல்லது கிடைப்பதாக நம்பிக் கொண்டிருக்கக் கூடிய பாதுகாப்பை நீக்கி விடுவதனால், முஸ்லீம் சிறுபான்மையினருடைய நிலை பலவீனமடையும் என்று தான் உண்மையில் தோன்றுகிறது; ஆனால் இந்தத் திட்டத்தை நன்கு ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், மேற்பரப்பில் தோன்றுவது போன்ற அவ்வளவு அப்பாவித்தனமானதல்ல இது. முஸ்லீம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கு இது மிகவும் தந்திரமான ஏற்பாடுடையது. ஹிந்து மாநிலங்களில், ஹிந்து பெரும்பான்மை யினர் முஸ்லீம் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கினால், ஐந்து முஸ்லீம் மாநிலங்களில், ஹிந்து சிறுபான்மையினர், முஸ்லீம் சிறுபான்மையினரால் அதே போல அடக்கி ஒடுக்கப்படுவார்கள். தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல், பயங்கரத்திற்கு எதிர்ப் பயங்கரம், இறுதியில் கொடுங்கோன்மைக்கு எதிராகக் கொடுங்கோன்மை என்ற முறையின் மூலம் கிடைக்கும் பாதுகாப்பு ஏற்பாடு இது. இந்த அறிக்கைகளின், இந்தத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் இதுவே; சிந்து மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை யின் உட்கருத்தும் இதுதான். இதில் எத்துணை ஐயமிருந்தாலும் அதை அகற்றிடும் பொருட்டு, நேரு கமிட்டி அறிக்கையை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த அறிக்கை கூறுவதாவது: ''சிந்து மாநிலம் தனியாக அமைக்கப்பட வேண்டும் என்ற முஸ்லீம்களின் கோரிக்கை, மகிழ்ச்சியான முறையில், நேரடியாக முன்வைக்கப்படவில்லையென்று நாங்கள் கருதுகிறோம். அது வகுப்புவாதத்தை அடிப்படையாகக் கொண்டது; அதனுடன் சிறிதும் தொடர்பற்ற வேறு பல கருத்துக்களுடன் அது சற்றும் ஒவ்வாத முறையில் பிணைக்கப்பட்டிருக்கிறது.'' தனி மாநில கோரிக்கையின் உண்மையான அடிப்படையை நேரு கமிட்டி அம்பலப்படுத்த விரும்பவில்லை. உண்மையான அடிப்படை நோக்கம் அவ்வளவு புகழத்தக்கதல்ல என்று கருதியிருக்க வேண் டும். எனினும் அதனுடைய மோசமான தன்மையைத் தெரிந்து கொள்வது நல்லது என்று கருதுகிறேன். இதைப் பற்றி மௌலானா அபுல்கலாம் ஆஜாத் கூறியதையே கேட்போம். அண்மையில்

கல்கத்தாவில் நடைபெற்ற முஸ்லீம் லீக் கூட்டத்தில் மிகவும் தெளிவாக, நறுக்குத் தெறித்தாற் போல அவர் பேசினார்; அவர் கூறியதாவது: ''லக்னோ உடன்பாட்டின் மூலம், தங்களுடைய நலன்களை அவர்கள் விற்றுவிட்டார்கள். கடந்த மார்ச்சு மாதத்தில் வெளியிடப்பட்ட டில்லி அறிக்கைகள்தாம், இந்தியாவில் முஸ்லீம்களுடைய உண்மையான உரிமைகளின் ஒப்புதலுக்கு, முதல் தடவையாகக் கதவைத் திறந்து விட்டுள்ளது. 1917-ஆம் வருட உடன்பாட்டின் மூலம் தோன்றிய தனி வாக்காளர் தொகுதி ஏற்பாடு, முஸ்லீம் பிரதிநிதித்துவத்திற்கு மட்டுமே உறுதி அளித்தது; ஆனால், முஸ்லீம் சமுதாயத்தினுடைய எண்ணிக்கைப் பலத்தை அங்கீகாரம் செய்வது தான், சமுதாயத்தின் உயிர் வாழ்க்கைக்கு அடிப்படையானதாகும். இந்தியாவின் எதிர் காலத்தில் தங்களுக்கு உரிய பங்கு கிடைப்பதற்கு உத்தரவாதமளிக்கும் நிலைமையை டில்லி அறிக்கைகள் தோற்றுவித்துள்ளன. மக்கள் தொகைக் கணக்கின்படி, வங்காளத்திலும் பஞ்சாபிலும் முஸ்லீம்கள் மிகக் குறைந்த பெரும்பான்மைதான் பெற்றுள்ளனர்; ஆனால், டில்லி அறிக்கைகள் அவர்களுக்கு, முதல் முறையாக ஐந்து மாநிலங்களை அளித்திருக்கின்றன. இவற்றில், சிந்து, வடமேற்கு எல்லைப்புற மாகாணம், பலுச்சிஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்கள், முஸ்லீம்கள் மிகக் கூடுதல் பெரும்பான்மை பெற்றுள்ள மாநிலங்களாகும். இந்த மகத்தான முன்னேற்றத்தை முஸ்லீம்கள் உணர்ந்து கொள்ளவில்லையென்றால், அவர்கள் உயிர்வாழத் தகுதியற்றவர்கள் (கரவொலி). இப்போது ஒன்பது ஹிந்து மாநிலங்களும் ஐந்து முஸ்லீம் மாநிலங்களும் இருக்கும். ஒன்பது மாநிலங்களில் ஹிந்துக்கள் முஸ்லீம்களை எப்படி நடத்துகிறார்கள், அதே போலத் தான், ஐந்து மாநிலங்களில் முஸ்லீம்களை ஹிந்துக்களை நடத்துவார்கள். இது ஒரு மகத்தான இலாபமில்லையா? முஸ்லீம்களின் உரிமைகளை வலியுறுத்துவற்குக் கிடைத்த புதிய ஆயுதமல்லவா இது?'' (ஹிந்துஸ்தான் டைம்ஸ், ஜனவரி 3, 1928). சிந்து மாநிலம் தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையின் உண்மையான நோக்கத்தை, எத்தகைய ஐயப்பாட்டிற்கும் இடமின்றி மிகவும் தெளிவாக இந்தப் பேச்சு எடுத்துரைக்கிறது. இந்த உண்மையான நோக்கத்திற்கும், சிந்துவின் கதிப்போக்கிற்குமிடையே (Destiny of Sind) எத்தகைய தொடர்பும் இல்லை என்பது தெளிவு. முஸ்லீம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காகத் தீட்டப்பட்ட ஒரு பெரிய திட்டத்தின் சிறிய பகுதி இது. போருக்கான தயாரிப்புக்களைச் செய்வதே, சமாதானம் காக்க மிகச் சிறந்த வழி என்ற கோட்பாட்டை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

(6) இந்தக் கோரிக்கையின் உண்மையான நோக்கத்தை அறிந்து கொண்ட பின்னர், இந்தக் கோரிக்கைக்குப் பரிவுகாட்ட வேண்டுமா என்பது தான் நம் முன் உள்ள பிரச்னை. என்னால் இதற்கு அனுதாபமோ, ஆதரவோ காட்ட இயலாது; நல்ல நிர்வாகத்தை

உளமார நேசிக்கும் எவரும் இந்தக் கோரிக்கையை ஆதரிக்க முடியாது என்று நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால், நேரு கமிட்டி எத்தகைய முடிவு எடுத்தது? தனி மாநிலம் அமைப்பதற்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டது. ''இந்தக் கோரிக்கையை வெளி யிட்டிருக்கும் பாங்கு, இந்த அறிக்கையின் தகுதிகளைப் பலவீனப் படுத்தி விட்டதாகக் கூறுவதற்கில்லை'' என்று அது குறிப்பிட்டது. என்னுடைய நிலை இதற்கு முற்றிலும் மாறானது. வெளியிட் டிருக்கும் பாங்கு, உள் நோக்கத்தை வெளிப்படுத்துகிறது என்றும், அந்த உள்நோக்கம் வெறும் அற்ப விஷயமல்லவென்றும், நிலை மையை முற்றிலும் மாற்றக் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் நான் கருதுகிறேன். இந்தத் திட்டத்திற்குப் பின்னால் மறைந்திருக்கும் உள்நோக்கம் மிகவும் பயங்கரமானது என்பதில் எத்துணை ஐயமுமில்லை. பழிக்குப்பழி வாங்கும் நடவடிக்கைகள் மூலம் நீதியையும் அமைதியையும் பராமரிக்கும் நோக்கம் கொண் டது அது. குற்றம் ஏதும் செய்திராத சிறுபான்மையினருக்கு, முஸ்லீம் மாநிலங்களில் ஹிந்துக்களுக்கும், ஹிந்து மாநிலங்களில் முஸ்லீம்களுக்கும், அவரவர் மதத்தைச் சேர்ந்தவர்கள் வேறு மாநிலங்களில் செய்த குற்றங்களுக்காக, பழி பாவங்களுக்காகத் தண்டனை பெறும் வாய்ப்பை இது அளிக்கிறது. தங்களுடைய மாநிலங்களில் வசிக்கும் சிறுபான்மையினரை மக்களாகக் கருது வதற்கு பதிலாகப் பிணையக் கைதிகளாகக் வைத்திருக்க வகை செய்யும் ஓர் அமைப்பு, இவர்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர் கள் வேறொரு மாநிலத்தில் நடந்து கொண்ட மோசமான நடத் தைக்குப் பழிவாங்கும் வகையில் இந்தச் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு வகை செய்யும் ஓர் அமைப்பு, சுய கண்டனத்திற்கு உட்பட்டதாகும். இத்தகைய பறிமுதலுக்கு வழி வகுக்கும் குறைகள், எப்போதும் நேர்மையானவை, உண்மை யானவையென்று எவரால் கூற முடியும்? சிறுபான்மையினருக்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டதாக, ஓர் அற்பக் காரணம் கிடைத் தாலும், அது, மாநிலங்களுடைக்கிடையே போர் மூண்டு விடுவதற் கான காரணம் ஆகிவிடக் கூடும். இத்தகைய அறிக்கைகளின் ஏற்பாட்டின் பின்விளைவுகள் மிகவும் பயங்கரமானவை, அவற் றைக் கண்டு நாம் வாளாவிருக்க முடியாது. ஹிந்து மாநிலங்களில் முஸ்லீம்களை அடக்கி ஒடுக்க அதே வாய்ப்பு உள்ளது என்ற காரணத்தினால் மட்டும், இந்த ஏற்பாட்டின் தன்மையை மேம் படுத்தி விட முடியாது. சச்சரவுப் பூசல், சீர்குலைவு ஆகியன இந்த ஏற்பாட்டில் உள்ளார்ந்து பொதிந்துள்ளன. இத்தகைய ஏற்பாடு இல்லாமல், முஸ்லீம்கள் தம்மால் அச்சமின்றி, பாதுகாப்பாய் வாழமுடியாது என்று கருதினால் இத்தகைய ஏற்பாடு இல்லாமல் அவர்களால் பாதுகாப்போடு வாழ முடியும் என்று உறுதியளிக் கும் விருப்பு வெறுப்பற்ற நம்பிக்கை ஏற்படும் வகையிலும், தேச விடுதலையைக் கூட ஒத்திப் போடலாம் என்று நான் கூறுவேன். ''தொடர்ந்தாற் போல நடைபெற்ற பற்பல வரலாற்று நிகழ்ச்சி

களின் காரணமாகத்தான், இந்தியாவில் இன்றுள்ளபடி வெவ்வேறு இன மக்கள் பரவிக் கிடக்கிறார்கள்'' என்றும், சமுதாய அடிப்படையிலான மாநிலங்களை அமைப்பதன் மூலம், ''இன்றுள்ள வெளிப்படை உண்மைகளைத்தான் நாம் ஒப்புகிறோம் என்றும் நேரு கமிட்டி விவாதிக்கிறது. இது உண்மைதான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், வகுப்புவாத உணர்வுகள் மிதமிஞ்சி இருக்கும் இச்சமயத்தில், தேசிய உணர்வுகள் தளர்ந்து பலவீனமுற்றிருக்கும் இந்த வேளையில், மத அடிப்படை கொண்ட இத்தகைய மாநிலங்களை உருவாக்குவதற்கு நாம் சம்மதிக்க வேண்டுமா என்பது தான் நம் முன்னுள்ள பிரச்சினை. இந்துக்களும் முஸ்லீம்களும் தம்முடைய மத உணர்வுகளை மறந்து, தாங்கள் முதலிலும் முடிவிலும் எப்போதுமே இந்தியர்கள் என்ற உணர்வைப் பெற்றிருக்கும் போது, இத்தகைய மாநிலங்களை அமைப்பதுதான் பொருத்தமாயிருக்கும். எனினும், தாங்கள் முதலில் இந்தியர்கள், பின்னர்தான் இந்துக்கள், முஸ்லீம்கள் என்று அவர்கள் உணரத் தொடங்கும் வரையிலும் இந்த மாநில அமைப்புப் பிரச்சினை காத்திருக்கத்தான் வேண்டும். தனியாக, சிந்து மாநிலம் அமைக்க வேண்டும் என்ற பிரச்சினையின்பால், எனது கூட்டாளிகள் காட்டிய அனுதாப அணுகுமுறையை, மேற்கூறிய காரணங்களினால், நான் எதிர்க்கிறேன்.

7) பம்பாய் மாநிலத்திலிருந்து சிந்துவைத் தனியாகப் பிரிப்பதால் ஏற்படும் நிதித்துறைச் சிரமங்களைப் பற்றி நான் எதுவும் கூறாததை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அதற்குக் காரணம், நான் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பதல்ல. அவற்றுக்கு நான் நிச்சயம் முக்கியத்துவமளிக்கிறேன். ஆனால், அவை மட்டுமே தீர்மானகரமானவையாய் இருக்க முடியாது என்பதே எனது கருத்து; நிதி சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டாலும் அல்லது அவை திரும்பப் பெறப்பட்டாலும், சிந்துவைத் தனியாகப் பிரிப்பது தொடர்பாக நான் ஏற்கெனவே எழுப்பிய மறுப்புக்கள் உறுதியாக நிலவியிருக்கும்.

## பிரிவு — 2

# மாநில நிர்வாக சபை

## அத்தியாயம் 1

## இரட்டையாட்சி அரசும் ஐக்கிய அரசும்

8. புதிய ஆட்சிமுறை அமலுக்கு வந்தபின், ஐந்து ஆண்டுகளுக்கு, சட்டம்-ஒழுங்குத்துறை ஒதுக்கப்பட்ட துறையாகத் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று எனது நண்பர்கள் பரிந்துரை செய்துள்ளனர். தன்னுடைய பணிகளைச் செவ்வனே செய்வதற்கான நிலையை அவை எய்துவதற்கு ஒரு சிறிய காலக்கெடு அளிப்பது என்பதைத் தவிர இந்த பரிந்துரையில் வேறு எதுவும் இல்லையென்றால் நான் கருத்து வேறுபாடு கொண்டிருக்க மாட்டேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, அவர்களின் பரிந்துரை இதற்கு மேலானதையும் உட்கொண்டுள்ளது; ''இந்தக் காலக்கெடுவிற்குப் பின், இத்துறை மாற்றப்பட வேண்டும் என்பதை, மேலவையின்-ஆளுநரின் இசைவுடன் முடிவு செய்ய வேண்டியதைச் சட்டமன்றத்திற்கு விட்டு விட வேண்டும்'' என்ற காப்பு வாசகமும் அந்த பரிந்துரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிந்துரையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; அவ்வாறு ஏற்றுக் கொள்வது இரட்டை ஆட்சியை காலவரையின்றி நீடிப்பது என்பதாகும். இரட்டை ஆட்சி நடைமுறைக்கு உகந்த அரசாங்க ஆட்சிமுறையென்றும், சென்ற காலத்தில் அது வெற்றிகரமாக நடைபெற்றது என்றும், எதிர்காலத்திலும் அவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும் என்றும் யூகம் செய்யும் அடிப்படையிலன்றி வேறு வகையில் இந்தப் பரிந்துரையை ஆதரிக்க முடியாது. ஆராயாது இவ்வாறு யூகம் செய்வது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல.

இரட்டை ஆட்சி, ஓர் அரசாங்க அமைப்பாகத் திருப்தியில்லாத முறையில் செயல்பட்டதற்குப் பல பொருள்கள் காரணமாகும் என்று சுட்டிக் காட்டப்பட்டது. பாதுகாப்புக்கள் என்று புகுத்தப் பட்ட சரிபார்த்தல் என்ற சில முறைகளால், மாற்றப்பட்ட அரசாங்கப் பகுதி இடையூறுகளுக்கு உட்பட்டது என்பது உண்மையே. அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட துறைகள் எல்லாம் மக்களின் நலம் தொடர்புடையவை. இத்துறைகள் சட்டம்-ஒழுங்குத் துறையிலிருந்து வேறுபாடுடையவை. இத்துறைகள் மாற்றப்பட்டதற்கு அவற்றின் தன்மைதான் முக்கிய காரணம். கொள்கை ரீதியாகப் பார்த்தால், மாநிலத்தின் நிதி, ஓர் அமைச்சரின் கையில் இருந்திருக்க வேண்டும். எந்தக் கொள்கையும் வெற்றியை எட்டும் வாய்ப்பைப் பெற வேண்டுமானால் அதற்கான

வழிமுறைகளை நிதி இலாகா கண்டுபிடிக்க வேண்டும். அரசாங்கத்தின் அமைச்சரவைப் பிரிவில் நிதித்துறை இலாகா இருந்தால் தான் இதை எதிர்பார்க்க முடியும். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. நிதித்துறைக் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின் பிரிவு 45ஏ(3) இந்தத் துறையின் அமைப்பிற்கும் அதன் செயல்பாட்டை முறைப்படுத்தவும் வகை செய்கிறது. இவ்வாறு அமைக்கப்பட்ட இலாகா, மாற்றப்பட்ட அல்லது ஒதுக்கப்பட்ட ஒன்றல்ல; அரசாங்கத்தின் இரு பக்கங்களுக்கும் பொதுவானது. என்றாலும், பொறுப்புரிமை மாற்று விதிகளின் 36(1) எண் நிதித்துறை நிர்வாக சபையின் ஓர் உறுப்பினரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று வகுத்துள்ளதால், அந்தத் துறை நடைமுறையில் ஓர் ஒதுக்கப்பட்ட துறையாக மாற்றப்பட்டது. சட்டமன்றத்திற்குப் பொறுப்பு வகிக்காத நிர்வாக சபை உறுப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டதால், அந்தத் துறை ஒதுக்கப்பட்ட பிரிவில் இருக்க வேண்டுமென்பது இயல்பானதே; துறையின் தலைவர், அமைச்சர்களுக்குப் பாதகமான முறையில், தம்மை ஒதுக்கப்பட்ட துறைகளின் பணிகளோடு இணைத்துக் கொள்வதும் இயல்பே. மாற்றப்பட்ட துறைகள் தொடர்பாக ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ள இடம், அரசாங்கத்தின் மாற்றப்பட்ட பகுதிக்குத் தீங்கு விளைவித்த மற்றோர் அம்சமாகும். அமைச்சர்களின் பரிந்துரையிலிருந்து மாறுபட்ட நிலை எடுக்கப் போதுமான காரணம் இருந்தாலல்லது, மாற்றப்பட்ட துறைகள் சம்பந்தப்பட்டவரை அவர்களின் (அமைச்சர்களின்) பரிந்துரையின்படி ஆளுநர் நடந்து கொள்வார் என்று பிரிவு 52(3) வரையறுக்கிறது. தனிச்சிறப்பான சந்தர்ப்பங்களில் மட்டும் தலையிடுவது என்று ஆளுநர்கள் தங்கள் தலையீட்டைக் குறைத்துக் கொள்வதற்குப் பதிலாக, சட்டப்படி அமைச்சர்கள் தங்களின் ஆலோசகர்கள் மட்டுமே என்றும், அவர்களின் பரிந்துரைகளை மறுக்க வேண்டுமென்று தோன்றினால் அவ்வாறு செய்யலாம் என்று ஆளுநர்கள் உரிமை கொண்டாடுகிறார்கள் என்பது தான் பொதுவானக் குற்றச்சாட்டாகும். வேண்டுமென்றே இவ்வாறு அளிக்கப்படும் தவறான விளக்கமானது, அமைச்சர்களின் நிலையை நிர்வாகசபை உறுப்பினர்களின் நிலையைவிட மோசமாக்கியது. பெரும்பான்மை வாக்கு கிடைத்தால் மட்டுமின்றிச் சாதாரண விஷயங்களில் நிர்வாக சபை உறுப்பினர்களின் முடிவுகளை ஒதுக்கித்தள்ள முடியாது. அதேசமயம், பிரிவு 52(3)-க்கு ஆளுநர்கள் கொடுக்கும் விளக்கத்தின்படி, அமைச்சர்களை ஆளுநரின் கருணையில் வைக்கிறது; நிர்வாகசபை உறுப்பினர்களுக்குக் கிடைத்த பாதுகாப்பு, அமைச்சர்களுக்கு இல்லை. அமைச்சர்களுக்கு எதிராக ஆளுநரின் அதிகாரத்தை மிகைப்படுத்திக் கொள்ளவும். அதனால் அமைச்சர்களின் நடவடிக்கை முடக்கப்படுவதற்கும் மற்றொரு காரணமும் உள்ளது. மாநில அரசுப் பணியாளர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றுவதற்கும், ஏற்றுக் கொள்ளப்பட்ட அவர்களின் உரிமைகள், சலுகைகள், நலன்

களையும் பாதுகாக்கும் பொறுப்பை செயல்துறை கட்டளைப் பத்திரம் ஆளுநருக்கு அளிக்கிறது. பணியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் சிக்கல் பற்றி மட்டுமே இந்தக் கடமை. அந்தப் பாத்திரத்திற்கு விரிவுபட்ட விளக்கத்தைக் கொடுத்து அரசுப் பணியாளர்களின் நியமனங்கள், அவர்கள் எங்கு வேலை பார்க்க வேண்டும் என்பது, அவர்களின் பதவி உயர்வு உள்ளிட்ட எல்லா விஷயங்களும் ஆளுநர் பொறுப்பில் வர வேண்டுமென்று ஆளுநர்கள் வலியுறுத்தினர். நிர்வாக சபை உறுப்பினர்களின் கீழ் இயங்கும் பணியாளர்கள் பற்றியும் பம்பாய் ஆளுநர் இவ்வுரிமையைக் கொண்டாடினார். இதைச் செய்யத் தமக்கு உரிமையுண்டு என்பதை ஆளுநர் செய்து காட்டினார். ''மன்றத்தின் சார்பில் ஆளுநர் நியமிக்கிறார்'' என்ற சாதாரணவாசகம் ''ஆளுநர் நியமிக்கிறார்'' என்று மாற்றப்பட்டது. ஓர் அமைச்சரவைத் துறையினர் செயலாளருக்கு அளிக்கப்பட்ட நிலையும் அமைச்சர்களின் அதிகாரத்தைப் பலவீனப்படுத்தவும் ஆளுநரின் எதேச்சாதிகாரத்தை அதிகரிக்கவும் உதவியது. ஏனெனில், அமைச்சர்களின் எந்த எந்த முடிவுகளிலிருந்து செயலாளர் கருத்து வேறுபாடு கொள்கிறாரோ, அந்த விஷயங்களில் தமது அரசியல் தலைவரையும் புறக்கணித்து ஆளுநரை அணுகி முடிவுகளை மாற்றும்படி அவரது ஆணையைப் பெறுவதற்கு அவர் (செயலாளர்) அனுமதிக்கப்பட்டார்.

**10.** இவையெல்லாம் ஐயமின்றி இரட்டையாட்சி திருப்திகரமாகச் செயல்படுவதைப் பாதித்தது. இந்த அம்சங்கள் இல்லாமல் இருந்திருந்தால், இரட்டையாட்சி ஒரு செயல்படக்கூடிய அரசாங்க அமைப்பு முறையாக இருந்திருக்கக் கூடும் என்ற கருத்து அடிக்கடி கூறப்படுகிறது: இந்தக் கருத்திலிருந்து என்னை வேறுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், இரட்டையாட்சி, ஒரு செயல்பட முடியாத அரசாங்க அமைப்பு என்று உறுதியாக நம்புகிறேன். அதிர்ஷ்டவசமாக இந்தக் கருத்தில் நான் தனியாக இல்லை. இது செயல்படுத்த முடியாத அமைப்பு என்று பம்பாய் அரசாங்கமே—அதன் உறுப்பினர்களில் சிலர் தனிப்பட்ட முறையில் இது தொடர்வதை ஆதரித்தபோதிலும்—1919-ல் கண்டித்திருக்கிறது. அது கூறியதை எடுத்துக்காட்டுவது பொருத்தமானதாக இருக்கும்: ''அரசாங்கத்தின் பதிவேடுகளை ஆராய்ந்தால், ஒரு விஷயம் தெளிவாகும். அரசாங்கத்தின் ஒரு துறையில் விவர்தித்து முடிவு எடுக்க வேண்டிய எந்த விஷயமும் மற்றோர் துறையின் கவனமான பரிசீலனைக்குட்படாமல் இருப்பதில்லை. அரசாங்கம் முழுவதின் முக்கிய கடமை சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநிறுத்துவதும், பலசாலிகளிடமிருந்து பலவீனமானவர்களைப் பாதுகாப்பதும், பாதிப்பிற்குள்ளான பல்வேறு வகுப்பாரின் முரண்பட்ட நலன்களைப் பற்றிய விஷயங்களைத் தீர்வு செய்வது மாகும். இதனால், எந்த ஒரு துறைக்கும் பொறுப்பு வகிக்கும் ஓர் அமைச்சர் அனுப்பும் முக்கியமான ஆலோசனையும் நடைமுறையில் ஒதுக்கப்பட்ட துறைகளின் அதிகாரிகளின் பார்வைக்கு

அனுப்ப வேண்டிவரும்.... (அரசாங்கத்தின் இரு பகுதிகளின் பணிகளில்) மற்றொன்றின் மீது படிந்திராத துறைகள் வெகு சிலவேதான். இதன் காரணமாக, ஓர் அமைச்சரின் பொறுப்பில் உள்ள ஒரு மாற்றப்பட்ட துறை தொடர்பான ஒதுக்கப்பட்ட துறைகள் தொடர்புள்ள அரசுத் துறைக்கு அனுப்பி வைக்காமல் முடிவு செய்வது இயலும் என்ற கருத்துக்கு எந்த அடிப்படையும் இல்லை.''

11. துறைகளைப் பிரிப்பதால் ஏற்படும் இருமைத் தன்மை இரட்டை ஆட்சியைச் செயலாற்ற முடியாத தாக்கிய உள்ளார்ந்த குறைபாடுகளில் ஒன்றாகும். மற்றொன்றும் உள்ளது. இதன்கீழ், ஒரு பொதுவான கொள்கையின் அடிப்படையில் ஓர் ஒன்றுபட்ட அமைப்பாக நிர்வாகம் இயங்க முடியாது. பொதுப் பேராண்மை உரிமை (mandate)யின் விளைவாக எழும் ஒரு பொதுவான நம்பிக்கையின் அடிப்படையில்தான் அத்தகைய ஐக்கியத்தை அடைய முடியும். சட்டமன்றத்திலிருந்து நியமிக்கப்படும் அமைச்சர் கள், அந்த அமைப்பின்பால் தங்களுக்கு ஓர் உண்மையான கடமை உள்ளது என்று எண்ணுவது இயல்பே. அதே காரணத்தால்தான் அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள்; அத்தகைய கடமை உணர்வு இருந்தாலன்றி முன்வைத்த நோக்கத்திற்காகப் பணியாற்ற முடி யாது. ஆனால், சட்டமன்றத்துடன் அவர்களைப் பிணைக்கும் ஒவ்வொரு கண்ணியும் அவர்களை அவர்களது அதிகாரிகளிட மிருந்து பிரிக்கவே செயல்படுகிறது. இதன் விளைவாக, இரட்டை ஆட்சியின் உள்ளார்ந்த ரீதியில் உள்ள இருமைத் தன்மை மேலோங்குகிறது. அரசாங்கத்தின் இரு பகுதிகளிடையே இந்த இருமைத்தன்மை நிலைநிறுத்திக் கொண்டால்—அமைச்சர்களும் நிர்வாகசபை உறுப்பினர்களும் சட்டமன்றத்தில் வெளிப்படை யாக ஒருவருக்கு ஒருவர் எதிராக உரை நிகழ்த்தியதோடு வாக் களித்த பல நிகழ்வுகள் இதன் இயல்பை மெய்ப்பிக்கிறது— அரசாங்கம் இயங்குவது இயலாமற் போகும். இரட்டை ஆட்சியில் உள்ள இந்த இருமைத்தன்மை, கூட்டணியால் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது. முற்றிலும் மாறுபட்ட பேராண்மை (வாக்காளர் அளிக்கும் உரிமை)யுடன் இருக்கட்சிகளுக்கிடையே கட்டாயமான செயற்கை முறையில் ஏற்பட்ட கூட்டணி எளிதாக ஓர் இக்கட் டான நெருக்கடிக்கு இட்டுச் செல்லக் கூடும். பம்பாய் மாநிலத்தில் அத்தகைய நெருக்கடி ஏற்படாதது, இரட்டை ஆட்சியில் உள் ளார்ந்தாக உள்ள இந்தக் குறையை மறுப்பது ஆகாது. நிர்வாக சபை உறுப்பினர்களிடம் இந்தக் கூட்டணியில், அமைச்சர்கள் அடைக்கலமடைந்து விட்டார் என்பதையே மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

12. உள்ளார்ந்த இந்தக் குறைபாடுகள் இருந்த போதிலும், இந்த மாநிலத்தில் இரட்டை ஆட்சி வெற்றிகரமாகச் செய லாற்றியது என்று கருதுகிறவர்களும் இருக்கிறார்கள். அரசியல்

சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கவோ, **இந்திய அரசுச் சட்டம்** (India Act) அவருக்கு அளித்துள்ள உடனடி அதிகாரங்களை (emergency powers) உபயோகிக்கவோ, ஆளுநருக்குக் கட்டாயம் ஏற்படவில்லை என்று கருதப்பட்டால்தான் இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியலாம். இது இயல்பானது ஆனால், கேள்வி என்னவெனில், இரட்டை ஆட்சி செயல்பட்டதா என்பதல்ல, அது ஒரு பொறுப்புள்ள அரசாங்க வடிவமாகச் செயல்பட்டதா என்பதுதான் கேள்வி. 1919-ல், சோதனைக்காக, இரட்டை ஆட்சிக்கு மாற்றாகப் பல்வேறு அரசாங்க வடிவங்கள் பற்றியும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன என்பதைப் புறக்கணிக்கக் கூடாது. அவற்றில் மற்றவை பற்றிச் சொல்லாவிட்டாலும், காங் கிரஸ்—லீக் திட்டம் (Congress League Scheme) பற்றியும், மாநிலங் களின் தலைவர்கள் முன்வைத்த திட்டம்பற்றியும் குறிப்பிட வேண் டும். இரட்டை ஆட்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்தத் திட்டங்களெல்லாம் மறுக்கப்பட்டன; பொறுப்பான அரசாங்கம் என்ற சோதனையில் திருப்தியளிக்க அவை தவறின என்று கூறப் பட்டது. எனவே, இந்தத் தலையாய காரணத்தின் அடிப்படையில் மட்டும்தான், இரட்டை ஆட்சிமுறையில் அமைந்த அரசாங்கத்தின் செயல்பாட்டைப்பற்றி மதிப்பீடு செய்ய வேண்டும். இதைக் கணக் கில் கொண்டு; இந்த மாநிலத்தில் இரட்டை ஆட்சியின் செயல் பாட்டைக் கணிக்கமுயன்றோமாயின், அது தோல்வியுற்றது என்ற முடிவுக்கு வருவது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது. பொறுப்புள்ள அரசாங்கம் என்றால், சட்டமன்றத்தில் அது ஒரு பெரும்பான்மை பெற்றிருக்கும் வரைதான் அந்த நிர்வாகம் அதிகாரத்தில் இருக் கிறது என்பதாகும். அமைச்சரவைப் பொறுப்பு என்பதன் சாரம் இதுவே. பம்பாய் மாநில இரட்டை ஆட்சி செயல்பட்டதை இந்த சோதனைக்கு உட்படுத்தி, மாற்றப்பட்ட துறைகள் தொடர்புள்ள அறிக்கைகள் மீது சட்டமன்றத்தில் வாக்கு எடுக்கப்பட்ட நிகழ்ச்சி களைக் கணக்கில் கொண்டால், ஒரு மிக மோசமான காட்சி நம் கண்முன் வருகிறது; அதாவது சட்டமன்றத்தில் அமைச்சர்கள் தோற்கடிக்கப்பட்ட போதிலும், எதுவும் நடைபெறாதது போல் அவர்கள் தொடர்ந்து ஆட்சியில் இருந்தனர். இந்த வருந்தத்தக்க கதையைக் கீழ்க்கண்ட அட்டவணை கூறுகிறது:

| ஆண்டு | வட்டாரங்களின் எண்ணிக்கை | வாக்கெடுப்பில் அரசாங்கம் நடு நிலை வகித்தவை அரசாங்கம் தோற்றவை | அரசாங்கம் தோல்வி யடைந்தவை | அதிகாரப் பகுதியை நீக்கினால் | அரசாங்கம் வெற்றி பெற்றவை | இணை யான நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1921 | 3 | ... | 2 | 2 | 1 | ... |
| 1922 | 17 | ... | 4 | 8 | 9 | ... |
| 1923 | 4 | 1 | 1 | 2 | 1 | ... |

| ஆண்டு | வட்டாரங்களின் எண்ணிக்கை | வாக்கெடுப்பில் அரசாங்கம் நடு நிலை வகித்தவை அரசாங்கம் தோற்றவை | அரசாங்கம் தோல்வி யடைந்தவை | அதிகாரப் பகுதியை நீக்கினால் | அரசாங்கம் வெற்றி பெற்றவை | இணை யான நிலை |
|---|---|---|---|---|---|---|
| 1924 | 19 | ... | 10 | 14 | 5 | 1 |
| 1925 | 30 | 1 | ... | 11 | 18 | ... |
| 1926 | 3 | ... | ... | 1 | 2 | 1 |
| 1927 | 26 | ... | 3 | 10 | 16 | ... |
| 1928 | 2 | ... | 1 | 1 | 1 | ... |

இந்தப் புள்ளி விபரங்கள் காட்டுவதென்ன? 1921-ல் வாக்கெடுப்பு நடந்த 3 வட்டாரங்களில் (divisions) அமைச்சர்கள் 2 தடவை தோற்கடிக்கப்பட்டனர்; 1922-ல் 17க்கு 8-ல் 1924-ல் 19-க்கு 14-ல்; 1925-ல் 30க்கு 11-ல்; 1926-ல் 3-க்கு 1-ல்; 1927-ல் 26க்கு 10-ல்; 1928-ல் 2க்கு ஒன்றில். இப்படி இருந்த போதிலும் இந்த மாகாணத்தில் எந்த அமைச்சரும் பதவி விலகல் செய்த நிகழ்ச்சி ஒன்றுகூட இல்லை. இந்த உண்மைகள் நம்முன்னால் உள்ளபோது, ஒரு பொறுப்பான அரசாங்க அமைப்பாக இரட்டை ஆட்சி செயல்பட்டது என்று முடிவுக்கு வருவதை யாரும் ஏற்றுக் கொள்ள முடியாது.

13. அமைச்சர்கள் பதவிவிலகல் செய்யவில்லையெனில் அதற்குக் காரணம், இந்த வாக்கெடுப்பின்மூலம் அவர்கள்மீது நம்பிக்கை இல்லை என்று சுட்டிக்காட்டும் எண்ணம் சட்டமன்த்திற்கு இல்லை; அப்படியாயின் தனது குறைபாடுடைய வாக்குமூலம் அவர்களுக்கு இழுக்கு (discredited) ஏற்படுத்தியபின், அவர்களுக்குப் பொருட்களை வழங்குவதற்கு மறுத்திருக்க வேண்டுமல்லவா?; இத்தகைய வாதத்திற்கும் இடமுண்டு. பம்பாய்ச் சட்ட மன்றம் மிகவும் வலுவிழந்திருந்ததால், தனது முடிவை அமைச்சர்கள்மீது அமல் நடத்த முடியவில்லை என்பது நன்கு தெரிந்த உண்மை. (மன்றம்) தன்னலக் குழுக்களாகவும் பிரிவுகளாகவும் பிளவுபட்டிருந்ததாலும், கோட்பாடுகளைவிடத் தனிப்பட்டவர்களைப் பின்பற்றும் ஒழுக்கக்கேடான பழக்கத்தாலும் நிர்வாகத்தின் கைப்பாவையாக அது ஆகிவிட்டது; தனது அதிகாரம் பற்றியும் அது நிறைவேற்ற வேண்டியதுபற்றியும் உணர்ந்துள்ள, மக்களுக்குப் பொறுப்புள்ள எந்தச் சட்டமன்றமும் நிறைவேற்ற வேண்டிய சில முக்கிய கடமைகளைக் கூட இந்த மன்றம் செய்யத் தவறியது. நிர்வாகத்தின் ஆதிக்கம் இருந்த போதிலும் மக்களுக்கு பொறுப்புள்ள எந்த மன்றமும், தனது எந்த உறுப்பினரையும், அவர் சொற்பொழிவாற்றுவதில் தமக்குள்ள ஆற்றல், கேள்விக்குப்

பதிலளிக்கும் சாமர்த்தியம், ஒரு விஷயத்தை கையாளுவதற்கு ஓரளவு திறமை, எல்லாவற்றிலுமே மேலாக சமுதாய — பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு பயனுள்ள கொள்கை பற்றிய கண்ணோட்டம் — இவற்றை வெளிப்படுத்த முடியாவிடில் அவரை (அமைச்சராக) சகித்துக் கொள்ளாது. இங்கிலாந்தில் அமைச்சரவைக்கு முழுமையான அதிகாரம் உள்ளது. அங்குக்கூட, பிரிட்டிஷ் பார்லிமென்ட் ஏற்றுக் கொள்ள முடியாத நபர்களைக் கீழ் மட்ட அதிகாரிகளாகக் கூட எந்தப் பிரதம மந்திரியும் நியமிக்க மாட்டார். பம்பாய்ச் சட்டமன்றத்திற்கு இந்தத் திறமை கூட இல்லாமல் போயிற்று; இதன் விளைவாக அரசியல்தன்மை வாய்ந்த அலுவலக நியமனங்கள் கூட அதிகத் திறமை வாய்ந்தவர்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை. ஆனால் சட்ட மன்றம் திறமையாக இயங்கி அதனுடைய முடிவுகளை நிறைவேற்றும்படி நிர்வாகத்தைக் கட்டாயமாக்கினால், விளைவு என்னவாயிருக்கும்? இரட்டை ஆட்சியை ஒரு பொறுப்புள்ள அரசாங்க அமைப்பாக அது ஆக்கியிருக்கமுடியுமா? எனது பதில் இல்லை என்பதே. நிர்வாக சபைக்கு எதிராகச் சட்டமன்றம் மேற்கொள்ளும் எந்த உறுதியான நடவடிக்கையும் ஒரே ஒரு விளைவையே ஏற்படுத்தியிருக்கமுடியும். அதாவது, அவசரகால அதிகாரங்களைப் பயன்படுத்தி அரசியல் சட்டத்தைத் தற்காலிகமாக ஆளுநர் நிறுத்தி வைப்பதில் கொண்டு விட்டிருக்கும்; சட்டம் அவருக்கு இந்த அதிகாரங்களை வழங்கியுள்ளது. சட்டமன்றம் எடுக்கும் எந்த உறுதியான நடவடிக்கையின் விளைவும் தவிர்க்க முடியாது இதுவாகவே இருக்கும்; பல மாநிலங்களில் அரசியல் சட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது இதற்குச் சான்று, இதை ஒப்புக் கொள்வது, சட்டமன்றம் தனது அதிகாரத்தை முழு அளவில் நிலைநிறுத்த முயன்றால், அவசரகால அதிகாரங்களால் ஆளுநர் முட்டுக் கொடுக்காவிடில் இரட்டை ஆட்சி சிதறுண்டு போகும் என்று ஒப்புக் கொள்வதாகும். எனவே, எப்படிப் பார்த்தாலும் இரட்டை ஆட்சி தோல்வியுறுகிறது என்பது தெளிவு. பம்பாய் மாநிலத்தில் சட்டமன்றம் செயலற்று இருப்பதால் தோல்வியடைகிறது; மத்திய மாநிலத்தில் சட்டமன்றத்தின் நடவடிக்கையால் அது தோல்வியடைகிறது. ஒன்றில் சட்டமன்றத்தின் இயலாமை காரணமாகப் பொறுப்பற்ற முறையில் செயல்பட நிர்வாகம் சுதந்திரத்தைப் பெறுகிறது. மற்றொன்றில் தன்னுடைய நடவடிக்கையால் ஒரு பொறுப்பற்ற நிர்வாகமாக வைத்திருக்க ஆளுநரை, சட்டமன்றம் வலியுறுத்துகிறது. பிரிவு 52(3) வகுத்துள்ளபடியும் கூட்டுப் பார்லிமென்டரி குழு அளித்த ஆலோசனையின்படியும் அரசியல் சட்டப்படியான சம்பிரதாய தலைவராகத் தம்மை ஆளுநர் கருதிச் செயல்பட்டிருந்தால், இரட்டை ஆட்சி மேலும் நல்ல முறையில் செயல்பட்டிருக்க முடியும் என்று பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துடன் எனக்கு உடன்பாடில்லை. முதலாவதாக, அரசியல் சட்டம் வகுத்துள்ளபடி

அத்தகைய தலைவராகச் செயல்பட வேண்டிய கட்டாயம் ஆளுநருக்கு இருக்கிறது என்பதற்கு அடிப்படை எதுவுமில்லை. அமைச்சர்கள் சம்பந்தப்பட்ட வரை, ஆளுநர் ஓர் அரசியல் சட்டப்படியான சம்பிரதாயத் தலைவராக இருப்பார் என்று மறைமுகமாகப் பொருள் கொள்ளும் அடிப்படையில் இரட்டை ஆட்சி ஒரு பொறுப்புள்ள அரசாங்க அமைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பது பல சமயங்களில் மறந்து போகிறது. ஆனால் அவர் (ஆளுநர்) இந்த நிலைக்குத் தாழ்த்தப்பட மாட்டார் என்று கூட்டு அறிக்கை தெளிவாக்கியுள்ளது. அவர்கள் திட்டவட்டமாகக் கூறியது வருமாறு: ''வெறும் அரசியல் சட்டச் சம்பிரதாயத் தலைவர் என்ற நிலையில் ஆளுநர் இருக்க வேண்டும் என்றும் அவரது அமைச்சர்களின் முடிவை அவர் கட்டாயம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் நாங்கள் நினைக்கவில்லை என்பதை முதலிலேயே கூறுகிறோம். கட்டுப்பாட்டு அதிகாரத்தை அவருக்கு ஒதுக்குகிறோம். ஏனெனில் அவரது நிர்வாகத்திற்குப் பொதுவாக பொறுப்புள்ளவராக அவரை நாங்கள் கருதுகிறோம்.'' ஓர் அரசியல் சட்ட ரீதியான ஆளுநராக அவர் செயல்பட வேண்டு மென்று கூட்டுப் பார்லிமென்டரிக்கு முழுவும் சிபார்சு செய்ய வில்லை. தங்கள் அறிக்கையின் 5-ஆவது பாராவில், அமைச்சர் கள் ஆளுநரின் உதவியுடன் அவரால் வழிகாட்டப்படுவர் என்றும் எப்பொழுதெல்லாம் இயலுகிறதோ அப்பொழுது அவர்களின் ஆலோசனையை ஏற்று அவர்களின் கொள்கையை முன்கொண்டு செல்வார் என்றும் குறிப்பாகக் கூறியுள்ளது. அரசியல் சட்ட ரீதியான ஒரு தலைவர் என்ற பாத்திரத்தை அவருக்கு அளிக்க இக்குழு விரும்பியது என்று சொல்வதற்கில்லை. உண்மையில் சட்டத்தின்கீழ் தெளிவாக ஆளுநருக்கு எதேச்சாதிகார அதிகாரங் கள் ஒதுக்கியிருப்பதால் மேற் சொல்லிய விருப்பம் முரணானதாக இருக்கும். கூட்டு அறிக்கையிலும் கூட்டுப்பார்லிமென்டரிக் குழு (Joint Parliamentary Committee)-வின் அறிக்கையிலும் இதைத் தள்ளி விடும்படி எதுவும் கூறவில்லை. ஆளுநர் தாமே ஆண்டிருந்தால், தம்மூலம் அமைச்சர்களை ஆள அனுமதிக்கவில்லையென்றால், அது அவரது தவறல்ல. அரசியல் சட்ட மரபுத் தலைவராக அவர் நடந்து கொண்டிருக்க வேண்டுமென்று வைத்துக் கொண்டாலும், கேள்வி என்னவெனில், இரட்டை ஆட்சியை ஒரு பொறுப்பான அரசாங்க அமைப்பாக அது இயங்கச் செய்திருக்க முடியுமா என்பதே. இந்தக் கேள்விக்கும் எனது பதில் இல்லை என்பதே. ஆளுநரின் அதிகாரத்தை எடுத்துவிட்டு அவரை அரசியல் சட்ட மரபுத் தலைவராக ஆக்கினால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டச் சட்டமன்றத்தின் தாக்குதலுக்கு அரசாங்கத்தின் ஒதுக்கப்பட்ட பகுதியை உள்ளாக்குகிறீர்கள். ஆளுநரின் பாதுகாப்பை இழந்து இந்த இடரிலிருந்து ஒதுக்கப்பட்ட பகுதி தப்பிக்க ஒரே வழிதான் உண்டு; சட்டமன்றத்தின் விருப்பப்படி ஆளப்படுவதற்கு ஒப்புக் கொள்வதுதான் அது. இந்தப்பகுதியை ஆளுநரின் பிடிப்பிலிருந்து

எடுத்துவிட்டால், ஒதுக்கப்பட்ட பகுதியையும் மாற்றப்பட்ட பகுதியின் நிலையில் வைப்பது தவிர வேறு வழியில்லை. இதை வேறு முறையில் சொல்வதென்றால், ஆளுநர் பதவியை அரசியல் சட்ட மரபுத் தலைவராகக் குறைப்பதுதான் விருப்பமெனில், முதலில் இரட்டை ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

15. வேறுபல காரணங்களால், இரட்டை ஆட்சி அமைப்பு செயல்பட முடியாமல் போனது என்ற வாதத்திற்கு எதிராக இதுவரை வாதித்தேன். அதன் உள்ளார்ந்த குறைபாடுகளினால் அது செயல்படுத்தக் கூடியதல்ல என்பது மட்டுமல்ல; பொறுப்புள்ள அரசாங்க அமைப்பாக அது செயல்பட முடியாது. உண்மையில் இருவேறு அரசாங்க அமைப்புக்களாக, இரு சட்டமன்றங்களானால்—ஒன்றில் சட்டமன்றம் நிர்வாக சபைக்கு உட்படும், மற்றொன்றில் நிர்வாக சபை சட்டமன்றத்திற்கு உட்படும்—செயல்படும் முழு இருமைத்தன்மை கொண்ட இரட்டை ஆட்சி (dyarchy with dualism) இன்றைய இருமையுடன் கூடிய இரட்டை ஆட்சி பற்றிய் மேற்கொண்ட விமர்சனத்திலிருந்து தப்பலாம். ஆனால் இருமையுடன் கூடிய இரட்டை ஆட்சிக்கு மாற்றாக முன்வைக்கப்பட்ட ஆலோசனை 1919-ல் இந்திய அரசால் மறுக்கப்பட்டது. **மார்லி-மின்டோ சீர்திருத்தம்** படி(Morley-Minto Reforms) அமைத்த அரசாங்க அமைப்பிற்குப் பொருந்திய மறுப்பு இதற்கும் பொருந்தும். இந்திய அரசியல் வாழ்வின் பரிணாம வளர்ச்சியின் இன்றையக் கட்டத்தில் அத்தகைய ஓர் அமைப்பிற்குத் திரும்பிச் செல்வது நினைத்துப் பார்க்க முடியாதது; எனவே, அத்தகைய அமைப்பிற்குத் திரும்பிச் செல்ல இயலாதது பற்றி நான் எதுவும் கூறப் போவதில்லை. இரட்டை ஆட்சி முறையைக் கைவிட்டுவிட்டு, அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்கு எல்லாத் துறைகளையும் மாற்றுவதுதான். அந்த ஒரே மாற்றம்.

16. இரட்டை ஆட்சித் தொடர்வதற்குத் தங்கள் ஏற்பினை அளித்துள்ள எனது நண்பர்களின் பரிந்துரைகளுக்கு எனது எதிர்ப்பிற்கான பொதுவான காரணங்களை இதுவரை எடுத்துரைத்தேன். இப்பொழுது, ஒரு குறிப்பிட்ட துறையை, அதாவது சட்டம்-ஒழுங்குத் துறையைத் தொடர்ந்து ஒதுக்கி வைப்பதற்கு என் மறுப்புகளின் அடிப்படைகளையும் விளக்கப்படுகிறேன். சட்டம்-ஒழுங்குத் துறையை ஓர் அமைச்சரின் பொறுப்பிற்கு மாற்றுவதற்கு எதிராக வலியுறுத்தப்படுவதற்கு முக்கிய காரணம் என்ன? வாக்காளர்களின் விருப்பங்கள் தொடர்புள்ள துறையாக இருப்பதாலும், சட்டமன்றத்தில் குறைபாடுடைய ஒரு வாக்கெடுப்பு நிகழ்ந்தால் பதவியிலிருந்து அகற்றப்படக் கூடியவராக அமைச்சர் இருப்பதாலும், அவர் இந்தத் துறையை விருப்புவெறுப்பின்றி நிர்வகிக்க முடியாது என்பதே. அம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் எழும் போது, அதன் விளைவாக அந்தத் துறையின் நிர்வாகத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் ஓர் ஆதரவற்ற நிலையில்

வைக்கப்படுவர் என்றும் அஞ்சப்படுகிறது. தங்களுக்கு எப்பொழுது ஆதரவு கிடைக்கும், எப்பொழுது கண்டிக்கப்படுவர் என்று தெரியாததால், எழும் நிச்சயமற்ற தன்மை அவர்களின் செயல்பாட்டை ஸ்தம்பிக்கச் செய்து, சமாதானத்தையும் நல்ல அரசாங்கத்தையும் மிக மோசமான நிலைக்கு இட்டுச் செல்லும் என்று வாதிக்கப்படுகிறது. பல இந்து—முஸ்லீம் கலவரங்கள் ஏற்பட்டுள்ளதால்—அவை சமீப காலத்தில் நடைமுறையாகி விட்டன—சட்டம், ஒழுங்குத் துறையை ஓர் அமைச்சரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றக் கூடாது என்றும் வலியுறுத்தப்படுகிறது; ஏனெனில், மக்களின் கருத்துக்களின் தாக்கத்திற்கு அமைச்சர்கள் உள்ளவர்கள் என்றும் வகுப்புவாதக் கோபத்தால்—இந்து அல்லது முஸ்லீமும் மக்களால் இழுத்துச்செல்லப்படுவது இயல்பென்றும் வலியுறுத்திக் கூறப்படுகிறது.

17. மனம் திறந்து கூறவேண்டுமெனில், எனது நண்பர்கள் கணிசமான அளவு இந்த வாதத்தின் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த போதிலும், என்மீது அது எந்தப்பாதிப்பையும், ஏற்படுத்தவில்லை, அதிகார வர்க்கம் வழக்கமாக உபயோகிக்கும் வாதங்களில் ஒன்றாகும் இது. இந்த வாதத்தின் தாக்கத்தை ஒப்புக்கொள்வது, அதிகார வர்க்க அரசாங்கம் (bureaucratic government) தான் சிறந்தது என்று ஒப்புக் கொள்வதாகும். துரதிர்ஷ்டவசமாக, அதிகார வர்க்க அரசாங்கம்பற்றி இந்தியாவில் நீண்ட காலமாகத் தெரிந்திருப்பதால், இத்தகைய வாதத்தால் எவரையும் ஏமாற்ற முடியாது. இது ஒரு மிகையான வாதம். இதை ஏற்றுக் கொள்வது, பொறுப்பு வாய்ந்த (மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும்) அரசாங்க அமைப்பை மறுதலிப்பதற்கும் அதன் முன்னோடிகள் எப்படி இருந்த போதிலும், மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்பது இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பதை ஒப்ப வேண்டும். காலம் எந்த மாற்றத்தைக் கொண்டுவரினும், இந்தக் கோட்பாட்டை விரிவுபடுத்தும் வழியில் செல்ல வேண்டும். இந்த அடிப்படைக் கோட்பாட்டை விரிவுபடுத்துவதற்கு இடஞ்சல் செய்யும் எந்தத் திட்டமும் அரசாங்கத்திற்கும் மக்களுக்குமிடையே கடும் மோதலை ஏற்படுத்தும். அதிகாரவர்க்க வாதத்தின் அடிப்படையில் செயல்பட்டு அத்தகைய ஒரு மோதலை வளரும்படி விடுவதற்குத் தேவை எதுவுமில்லை. ஏனெனில், மன்றத்தில் தங்களைப் பின்பற்றுபவர்களின் ஆரவாரத்திற்கு அமைச்சர்கள் அடி பணிவார்கள் என்றோ அல்லது அவர்களைப் பின்பற்றுபவர்கள் குறைபாடுடைய நிலை கொள்வர் என்ற பயப்படுவதற்கோ எந்த ஆதாரமும் இதுவரை இல்லை. அவ்வாறு கூறுவது உண்மையில் அவர்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். 1922-ல் உள்ளாட்சி மன்றங்களும் நகராட்சிகளும் ஒத்துழையாமைவாதிகளால் தேர்தலில் கைபற்றப்பட்ட பொழுது, திரு. காந்தியின் செல்வாக்கு உச்சக்கட்டத்தில் இருந்த போது,

அவை சிறிது காலம் விலக்கு (Suspend) செய்யப்பட்டன; வாக்காளர்களின் விருப்பத்திற்கு மாறாகச் சுதந்திரமாகச் செயல்பட அமைச்சர்களால் முடியும் என்று இந்தச் செயல் (விலக்குச் செய்தது) நம்பிக்கையளிக்கிறது. பம்பாய்ச் சட்டமன்றம் பொதுவாகத் தேவையான நிதானத்துடன் செயல்பட்டது என்ற அர்சாங்க உறுப்பினர்களே ஏற்றுக் கொள்வார்கள். கடமை உணர்வு அத்துடனேயே எப்பொழுதும் நிதானத்தையும் கொண்டு வருகிறது. வகுப்புவாத எண்ணங்களும் வகுப்புவாத மோதல்களும் ஏற்படும் போது சட்டமன்றம் பாதிப்பிற்குள்ளாகாது என்று ஒப்புக் கொள்ளாவிட்டாலும், துறைகளை மாற்றுவதற்கு எதிரான ஒரு வாதமாக அது இருக்க முடியாது. எந்த வகுப்பும் மற்றொரு வகுப்பின்மீது எத்தகைய கண்ணோட்டம் கொண்டிருந்தாலும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சீர்குலைவில் இலாபம் பெற நினைத்து சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்கும் எதிராகப் போகும் அளவுக்குப் பொறுப்பற்றுச் செயல்பட மாட்டார்கள் என்று கூற முடியும். எனவே, சட்டம்-ஒழுங்குத் துறை ஒதுக்கப்பட்டதாக இருப்பதை ஆதரிப்பவர் மனதில் தோன்றியுள்ள அச்சம் பார்க்கப் பெறாத, தெரிந்து கொள்ளாத, செய்து பார்க்கப் படாத ஒன்று ஆகும். (துறை) மாற்றத்தைப் பரிந்துரை செய்யாத எனது நண்பர்கள் சந்தேகமில்லாமல் மிக விழிப்பான வழியைப் பின்பற்றுகின்றனர். இதனால், அவர்கள் மிகப் புத்திசாலித்தனமான வழியைப் பின்பற்றுகிறார்கள் என்று நான் சொல்ல முடியாது. ஏனெனில் மிக எச்சரிக்கையாக இருப்பது என்று ஒன்று இருக்கிறது; அது ஆய்வு செய்து பார்க்கும் சுதந்திரத்தைத் தடைசெய்கிறது. பயம் உண்மையானதா இல்லையா என்று கண்டு பிடிக்கக் கோருவதுதான் மிக விவேகமான வழியாகும். தெரிந்து கொள்ளாத பயம்தான் சட்டம்-ஒழுங்குத் துறையை மாற்றுவதற்கு எதிராகத் தூண்டுகிறது. அதே பயம்தான், 1919-ல் இப்பொழுது அமைச்சர்களின் கட்டுப்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ள துறைகளையும் மாற்றக் கூடாது என்று வலியுறுத்திற்று. இந்த மறுப்புகளையெல்லாம், இந்திய விவகாரங்களுக்கான பிரிட்டிஷ் அமைச்சரும் வைஸ்ராயும் ஒதுக்கித் தள்ளினர். அவர்கள் இருவரும் இருளில் குதிக்கச் சம்மதித்தனர். சட்டம்-ஒழுங்குத் துறை பற்றி அதே வழியைக் கையாள வேண்டுமென நான் விரும்புகிறேன்.

18. நாம் சோதனை செய்து பார்க்க வேண்டுமெனில், அதைக் காலதாமதமின்றிச் செய்வது புத்திசாலித்தனம் என்பதற்கு வேறு ஒரு காரணமும் உள்ளது. ஒரு துறையை மாற்றும் போது அந்தத் துறையில் பணிபுரியும் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இந்தியர்கள் திறமை குறைந்தவர்களாக, எப்படியும் ஐரோப்பியப் பணியாளர்களைவிடக் குறைந்த அளவு திறமை பெற்றவர்களாக இருப்பது சாத்தியமே. எனவே சட்டம்-ஒழுங்கை மாற்றுவதை ஒத்திப் போடுவது, இடைக்காலத்தில் ஏற்படும் அபாயத்தை அதிகரிப்பதாகும். இதை உடனே எடுத்துக் கொள்வதும் இந்தக்

அளிக்கிறது. ஒதுக்கப்பட்ட துறையாக அது இருக்கும் போது அந்த அதிகாரம் மறுக்கப்படுகிறது. எசமானனின் நேர்பார்வையிலுள்ள ஓர் அயோக்கியன், அத்தகைய பார்வையின் கீழ் இல்லாத நேர்மை யாளனைவிட மேம்பட்ட விதத்தில் செயல்படுவான் என்ற கூற்றில் போதுமான உண்மை இல்லையா என்பதைச் சிறுபான்மை யினர் அக்கறையுடன் ஆராய வேண்டும். அப்படிச் செய்தால், எந்தப் பொறுப்புக்கும் உட்படாத சிறந்த அதிகாரிகளைவிட தரத் தில் குறைவான அதிகாரிஞுக்கு முதன்மை அளிப்பதற்கு நல்ல காரணம் உள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வில்லை என்று நான் எண்ணுகிறேன்; காரணம் பிந்தியவர்கள் மீது, அவர்கள் செல்வாக்கைச் செலுத்த முடியும்.

20. மாற்றப்படுவதற்குப் பதில் ஒதுக்கப்படுவதற்கே சிறு பான்மையினர் முதன்மை அளிப்பதற்கு ஒரு மிக முக்கிய கார ணம் உள்ளது. ஏனெனில் சட்டமன்றத்தில் அவர்களுக்கு அளிக்கப் படும் பிரதிநிதித்துவம் மிகக்குறைவு; எனவே அதனால் அவர் களுக்கு முக்கியத்துவம் கிடைப்பதில்லை. ஒரு பக்கம்; ஒதுக்கப் படும் துறையானால் அவர்களுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லை; மறுபக்கம், மாற்றமும் போதுமான பிரதிநிதித்துவமும்; இவற்றில் எதைத் தேர்ந்தெடுக்க போகிறார்கள் என்பதுதான் சிறுபான்மையோரின் முன் உள்ளது. முதலாவதைவிட இரண்டா வது அதிகம் பயனளிக்கக் கூடியது என்று கொள்ளலாம். சட்டம்-ஒழுங்கை மாற்றுவதை எதிர்ப்பதில் பிடிவாதமாக இருப்பதைவிட, போதுமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வலியுறுத்துவது சிறுபான்மையினரின் நலனுக்கு அதிகம் உகந்தது. சிறுபான்மை யினருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம் சட்டம்-ஒழுங்கு இலாகா அவர்களுக்கு முறைகேடாகத் தவறாகச் செயல்படும் என்ற அவர்களின் பயத்தைப் போக்காவிடில், என் னுடைய பரிந்துரைக்கு ஒரு காப்பு வாசகத்தைச் சேர்க்க நான் தயாராக இருக்கிறேன். அதாவது, சட்டமன்றத்தில் சிறுபான்மை யினரின் பிரதிநிதிகள் — உதாரணத்திற்கு 40 சதவிகிததினர் — வாக்கெடுப்பு மூலம் சட்டம்-ஒழுங்குத் துறை ஒதுக்கப்பட்ட இலாக் காவாக இருக்கட்டும் என்று முடிவு செய்தால், அப்பொழுது மாற்றப்பட்ட துறைகள் பட்டியலிலிருந்து இந்தத் துறை திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். பெரும்பான்மைக்குப் பதிலாக இந்த யோசனையை (40 சதவிகிதம்) முன்வைக்கிறேன். இதற்குக் காரணம், 1917 ஆகஸ்ட் 20-ஆம் தேதி பிரகடனத்தில் வகுக்கப் பட்ட மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த சர்க்கார் என்ற கோட்பாடு அமலாக்கப்பட வேண்டுமானால், இந்தத் துறை ஒருநாள் மாற்றப் பட வேண்டும்; உடனடியாக (மாற்றம் செய்வதை) அமலுக்குக் கொண்டு வருவதற்கு எனது யோசனை குறுக்கே வராது; அதே சமயம் ஏற்பட்டுள்ள பயத்திற்கு நல்ல ஆதாரம் உண்டு என்று அனுபவம் எடுத்துக் காட்டினால், இந்த மாற்றத்தை ரத்து செய்யும் ஏதுக்களையும் தடுக்காது.

## அத்தியாயம் 2

# நிர்வாக சபையின் செயல்பாடு

**21.** அமைச்சரவைப் பொறுப்பின் அடிப்படையான, ஒன்று பட்ட அரசாங்கத்தை அமலுக் கொண்டுவருவது நான்கு முக்கிய கேள்விகளை எழுப்புகிறது. இவற்றில், முதலாவது நிர்வாக சபையின் நிரந்தரம் பற்றியது; இரண்டாவது நிர்வாக சபையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்; மூன்றாவது நிர்வாக உபையின் பொறுப்பை அமலுக்குக் கொண்டுவருவது; நான்காவது நிர்வாக சபை உறுப்பினர்களிடையே விருப்பு வெறுப்பற்ற உறவு.

**22.** முதலாவது கேள்வியைப் பொறுத்தவரை, சட்டமன்ற உறுப்பினர்களின் வகுப்பு சார்புத் தன்மையின் காரணமாக, சட்ட மன்றம் பல்வேறு குழுக்களைக் கொண்டதாக இருக்கும் என்று கூறப்படுகிறது. கோட்பாடுகளைவிட வகுப்பே அதிகம் இணைந் திருப்பதால், வகுப்பு நலனுக்கு ஏற்ற முறையிலான வகுப்பு நம்பிக்கை அடிப்படையில் அமைச்சரவை இருப்பதால், வகுப்புகள் தங்களுடைய நம்பிக்கையைக் கோட்பாடுகளைப்பற்றிக் கவலைப் படாமல் தங்கள் விருப்பப்படி மாற்ற முனைந்தால், அமைச்சரவை அது அமைக்கப்பட்டவுடனே சிதறிப் போகக் கூடும். இந்தச் சீர்கேட்டைத் தடுக்க, சட்டமன்றத்தில் உள்ள பல்வேறு குழுக் களும் தேர்ந்தெடுக்கும் பட்டியலிலிருந்து அமைச்சரவை அமைக்கப் படலாம்; அமைக்கப்பட்டுவிட்டால், சட்டமன்றத்தின் காலம்வரை அமைச்சரவை நீக்கப்பட முடியாதது என்று ஆக்கப்பட வேண்டும். நிலையற்ற நிர்வாகசபை என்ற பயம் உண்மையாகலாம் என்பதை நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் இதற்கு ஒரு மாற்றுபாயம்—அல்லது ஆலோசனை உற்பட்ட பரிகாரம்—தேவையன்று நான் கருதவில்லை. சட்டமன்றத்தில் பிரிவுகளாக (வெவ்வேறு குழுக் களாக) இயங்கும் போக்குக் காணப்படுவது, இந்திய தேசத்தில் மட்டுமல்ல, பிரான்ஸ் நாட்டின் மக்கள் பிரதிநிதிகளது சபையில் காணப்படும் பிரிவுப் போக்கு மிக தெளிவாகத் தெரியும் உதாரண மாகும்; இதனால் அமைச்சரவைகள் அடிக்கடி சீர்குலைவிற்கு உள்ளாகின்றன. அப்படி இருந்தும், நிலைமை மோசமாயினும், ஒரு பரிகாரம் தேடுமளவுக்குப் பொறுக்க முடியாததாக இல்லை என்று பிரெஞ்சுகாரர்கள் கருதினர். ஆனால் எதிர்பார்ப்பது உண்மையில் நிகழ்ந்தால், நிலைமை பொறுக்கமுடியாத அளவு ஆகிவிட்டாலும், பரிகாரம் ஒரு சரியான ஒன்றல்ல என்று திட மாக நம்புகிறேன். பரிகாரம் அமைச்சர்களின் பொறுப்பை மிக அதிகமாகப் பலவீனப்படுத்தும் என்பது சந்தேகத்திற்கிடமில்லாதது. நான் பயப்படுவது என்னவெனில், திட்டம் பிரிவுகளை ஒன் றிணைப்பதற்குப் பதிலாக அவற்றைக் கடினமாக்கி நீடித்து நிலை பெறச் செய்யும் என நான் அஞ்சுகிறேன்; பரிகாரம் நோயைக் குறைப்படுத்துவதற்குப் பதிலாக அதை மேலும் கேடாக்கும்.

இன்றுள்ள வாக்காளர் பட்டியலை மாற்றியமைக்கும் வழியில் செல்வதுதான் உண்மையான பரிகாரமாகும்.

23. நாட்டின் நிர்வாக சபையில் வகுப்புவாதப் பிரதிநிதித் துவம் ஏற்றுக் கொள்ளப்படுவதை நான் முற்றிலும் எதிர்க்கிறேன். அதன்கீழ், அரசாங்க இயந்திரத்தின் கேந்திரப் பகுதியில் மிக மோச மான உருவத்தில் வியாதி வெடிக்கும். அமைச்சரவையில் பிரதி நிதித்துவம் அளிக்கப்பட வேண்டியவை ஏற்கப்பட்ட வகுப்புகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இரட்டை ஆட்சியாக அல்லது மூன்று பகுதி கொண்ட ஆட்சி அமைப்பாக அது இருக்கலாம். இன்று நாம் பெற்றிருக்கிற அரசியல் இரட்டை ஆட்சிக்குப் பதிலாக ஓரளவு மாறுபட்ட வகுப்புவாத அடிப்படையிலான இரட்டை ஆட்சியாக அது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அரசியல் இரட்டை ஆட்சியைவிட நல்லதாக அது ஆகாது. ஒன்றில் உள்ளார்ந்ததாக அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதன் நோக்கம் ஓர் ஒன்றுபட்ட அரசாங்கம் என்றால், வகுப்புவாத உருவத்திலுள்ள இரட்டை ஆட்சி, அரசியல் உருவத்தி லுள்ள இரட்டை ஆட்சியைப் போல் ஒட்டுமொத்தமாக மறுக்கப் பட வேண்டும். அரசியல் இரட்டை ஆட்சியை மறுப்பதற்கான காரணத்தைவிட, வகுப்புவாத இரட்டை ஆட்சியை மறுப்பதற்கு வலுவான இரட்டை ஆட்சியின்கீழ் கோட்பாடு அடிப்படையி லான ஓர் அரசாங்கத்திற்கு இயங்கும் திறன் உண்டு. ஆனால் வகுப்புவாத இரட்டை ஆட்சி, வகுப்புத் தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்ட ஒரு சர்க்கார் அமைவதில் கொண்டுவிடும்.

24. கிரேட் பிரிட்டனின், சுயாட்சியும் டொமினியன்களின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதன்மையான கோட்பாடு, ஒவ் வொரு மந்திரியும் நீதிமன்றத்திற்குக் கட்டுப்பட்டவர் என்பதாகும். இந்த விவேகமான கோட்பாட்டின் காரணமாக, அமைச்சரவை யின் தவறான செயல்களிலிருந்து தங்களையும் தங்கள் சொத்துக் களையும் தாயகத்திலும், பிற டொமினியன்களிலும் உள்ள பிரிட்டிஷ் பிரஜைகள் பாதுகாத்துக் கொள்கின்றனர். சட்ட விரோதமான காரியங்களுக்கு நிர்வாகத்தின் சட்ட ரீதியான பொறுப்பு விஷயத்தில் கிரேட் பிரிட்டன், டொமினியன்களி லிருந்து இந்தியா மட்டுமே விசித்திரமாக மாறான நிலையில் உள்ளது. சர் இலியஜா இம்பே (Sir Iliajah Impey) தலைமை தாங்கிய நீதித்துறைக்கும் வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) ஆதரவுபெற்ற நிர்வாக சபைக்கும் இடையே ஏற்பட்ட கடுமையான மோதுதலின் போது, 1780-ஆம் ஆண்டிலேயே நீதிமன்றங்களின் கட்டுப்பாட்டிலிருந்து இந்தியாவின் நிர்வாக சபை விலக்குப் பெறும் காப்புரிமையை பெற்றது. இந்தக் காப்புரிமை அன்றி லிருந்து அதற்குத் தொடர்ந்து இருந்தது. இப்போது இந்திய அரசுச் சட்டம் பிரிவுகள் 110, 111-ல் அது இடம்பெறுகிறது. அத்தகைய காப்புரிமை பொறுத்துக் கொள்ளப்பட்டதற்குக் காரணம், அது

பொதுவானதல்ல. உள்ளாட்சித் தன்மை வாய்ந்தது. ஏனெனில், இந்தியாவில் குற்றம்சாட்டப்பட முடியாத நிர்வாக சபை உறுப்பினர்கள் இந்தியாவில் செய்த சட்ட விரோத காரியங்களுக்கு இங்கிலாந்தில் குற்றம் சாட்டப்பட்டு விசாரிக்கப்படுவர் என்ற வழிமுறையும் அதில் இருந்தது. பதில் சொல்வதான முறை தொலைவான (remote)தாக இருந்த போதிலும், பயனிறைவுடையதாக (efficacious)-வே இருந்தது; ஏனெனில் பழைய ஆட்சி அமைப்பில் நிர்வாக சபையின் ஒவ்வோர் உறுப்பினரும், அவர் ஐரோப்பியராக இருந்தால், இங்கிலாந்திற்குத் திரும்பிச் சென்றார். இப்பொழுது நிர்வாக சபையின் தயவு ஒரு பெரும் மாற்றம் பெற்றுள்ளது. அதில் இடம்பெற்றுள்ளவர்களில் பெரும்பாலோர் இந்தியர்கள்; அவர்களில் எவரும் இங்கிலாந்துக்குப் போகும் வாய்ப்புப் பெறுவதும் அரிதாகையால், அவர்களின் தவறுகளுக்குப் பதில் சொல்ல வைப்பது ஒரு போதும் இயலாது, இப்பொழுது நிலவும் சூழ்நிலையில், அமைச்சர்களின் தவறான செயல்களுக்காக உடனடியாகவே, அல்லது தொலைவிலோ எந்த விலக்கும் பெற எந்த வழிவகையும் அளிக்கப்படவில்லை. இந்த நிலையைத் தொடர்ந்து நீடிக்க விடுவது, அரசியல் அமைப்புச் சட்ட அரசாங்கத்தின் அடிப்படையையே தகர்ப்பதாகும். எனவே அமைச்சர்கள் உத்தரவிட்ட சட்ட விரோதமான செயல்களுக்காக நீதிமன்றத்தை அணுகி நீதிபெற எல்லா பிரிட்டிஷ் மக்களுக்கும்—அவர்கள் இந்தியர்களாகவோ அல்லது ஐரோப்பியர்களாகவோ இருந்தாலும்—உரிமை வழங்கும் விதத்தில் இந்திய அரசாங்கச் சட்டத்தின் 110, 111 பிரிவுகள் திருத்தப்பட்டாக வேண்டுமென்று நான் பரிந்துரை செய்கிறேன். அமைச்சர்களைப் பொறுத்தவரை 1919-ன் சட்டத்தில் இத்தகைய மாற்றம் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. அது அப்பொழுது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. காரணம் அதை ஏற்றுக் கொள்வது அமைச்சர்களுக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்குமிடையே மனக்கசப்பை ஏற்படுத்தும், பாகுபாட்டை ஏற்படுத்தும் என்று கருதப்பட்டது. மாநிலங்களில் பொறுப்புள்ள அரசாங்கம் அமைக்கப்பட்டதையடுத்து இந்த மறுப்புக்கு இடமில்லை.

25. அமைச்சர்களின் சட்ட விரோதச் செயல்களுக்குச் சட்ட முறையிலான பொறுப்பை அவர் ஏற்க வேண்டுமென்று நான் உறுதியான கருத்தைக் கொண்டிருக்கிறேன்; இதற்காக, ஒரு விசாரணை மன்றத்தை அமைக்க அரசியல் அமைப்புச் சட்டம் வழிவகுக்க வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறேன்; இந்த நீதி மன்றத்தில் சட்டமன்றப் பிரதிநிதிகளும் நீதிமன்றப் பிரதிநிதிகளும் இடம்பெறுவர். தங்களின் சட்ட விரோதச் செயல்களுக்கோ, நாட்டின் நலனுக்குக் கேடு விளைவிக்கும் செயல்களுக்கோ அமைச்சர்கள் இந்த விசாரணை மன்றத்தின் முன் குற்றம்சாட்டப்பட்டு விசாரிக்கப்படலாம். அமைச்சரவைப் பொறுப்பு அமலுக்கு வந்ததன் காரணமாக, குற்ற விசாரணை பயன்படுத்தப்படாமல்

போய்விட்டது. அமைச்சரவைப் பொறுப்பு செயல்படுவது ஆரம்ப நிலையில் உள்ளது; சட்டமன்றமும் நிர்வாக சபையும் இதன் முழு அர்த்தத்தையும் உணர்ந்து கொள்ளும்வரை, வரம்புமீறிய அதிகாரத்தைப் பயன்படுத்தி அனுபவமில்லாத, சாதி-மதம் மீது மிகுந்த நம்பிக்கைக் காரணமாக அதிகாரத்தைத் தவறாக உபயோகிக்க கூடியவர்கள் கையில் வரம்பு மீறிய அதிகாரம் இருப்பதைக் கடிவாளமிட்டு கட்டுப்படுத்த நேரடியான வழிமுறைகளை ஏற்படுத்துவது நல்லது என்று நான் நினைக்கிறேன். பாதுகாப்பு ஒருபோதும் தேவையற்றதாகாது; ஏனெனில் அது அடிக்கடி உபயோகிக்கப்படப் போவதில்லை.

26. நிர்வாக சபை உறுப்பினர்களிடையே உறவுகளை நிர்ணயிக்கும் பிரச்சினை—ஒவ்வொருவரும் அவரின் செயல்களுக்கு மட்டும் பொறுப்பாக்கப்படுவாரா அல்லது எல்லோருடைய செயல்களுக்கும் ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டுமா, அதாவது பொறுப்பு தனிப்பட்ட விதத்திலா அல்லது கூட்டாகவா என்பன போன்றவை—யாரும் முடிந்த முடிவாகக் கூறமுடியாத ஒன்றாகும். எனினும், கூட்டுப் பொறுப்புக்கு நான் ஆதரவளிக்கிறேன். அதன்கீழ் கடமை தவறுகிற ஓர் அமைச்சரைத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கச் சட்டமன்றம் இயலாத நிலையில் உள்ளது. கூட்டுப் பொறுப்பில் ஓர் அமைச்சரின் எந்த செயலைச் சட்டமன்றம் ஏற்கவில்லையோ, அவரை அதனால் நீக்க முடியாது, அவரது நண்பர்களையும் நீக்க தயாராக இருந்தாலொழிய அவரை சம்பிரதாயமாகக்கூட கண்டிக்க முடியாது. பார்லிமெண்டரி முறை நிர்வாகக் குழுவுடன் செயல்படும் எந்த சட்டமன்றமும் இதுச் செய்யத் துணியாது. அவ்வாறு அது செய்து நிர்வாக சபையைத் தூக்கி எறிந்தால், சட்டமன்றத்தை—அதைக் கலைக்க வேண்டுமென்று கூறி—நிர்வாகக்குழு தூக்கி எறியும் இந்தக் குறைபாடு இருந்த போதிலும், இரு காரணங்களுக்காகக் கூட்டுப் பொறுப்பிற்கு நான் சாதகமாக இருக்கிறேன். ஒரு நவீன அரசில், சட்டத்தை அமல் நடத்தி ஒரு நிர்வாக அமைப்பாக நிர்வாக சபை செயல்படுவது இரண்டாம் கட்டப் பணியாகும். அதன் முக்கிய செய் கடமை, கொள்கையை நிர்ணயித்து அதற்கான ஆலோசனைகளை சட்டமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதாகும். நிர்வாக சபை இதைச் செய்யத் தவறினால்—இந்தச் சட்டமன்றம் பயனுள்ள முறையில் செயலாற்றுவது குறைந்து போகும். கொள்கை வகுக்கும் கடமையை நிர்வாகக்குழு செய்வதற்கு, அதன் உறுப்பினர்களிடையே ஒன்றுபட்ட கண்ணோட்டம் இருக்க வேண்டும். நிர்வாக சபையில் முழு ஒத்திசைவு இருந்தால்தான் அத்தகைய ஒன்றுபட்ட கண்ணோட்டம் இயலும். கூட்டுப் பொறுப்புதான் அத்தகைய ஒத்திசைவை அரண் செய்ய முடியும் என்று எனக்குத் தோன்றுகிறது. கூட்டுப் பொறுப்பை நான் பரிந்துரை செய்வதற்கான இரண்டாவது காரணம் என்ன? சாதி-மத எல்லைகளைக் கடந்து ஒரு பொதுவான அரசியல் மேடை வளர்வதைத் தனிப்பட்ட பொறுப்பு ஒரு

போதும் அனுமதிக்காது. அது தனிக் குழுக்களை நிலைபெறச் செய்யும். தனிக்குழுக் களின் கூட்டணி ஆட்சிக்கு மாநிலம் உள்ளாக்கப்படும்; நிர்வாகத்தில் நிலையற்ற தன்மை ஏற்படும்; கருத்துக்களின் அடிப்படையிலான கொள்கைக்குப் பதிலாக சூழ்ச்சிகளடிப்படையிலான கொள்கை செயல்படுத்தப்படும். நிர்வாகத்தின் நேர்மையான பணியை மிக மோசமாகப் பாதிக்கும். கூட்டுப் பொறுப்பில், பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்ட தனிக்குழுக்களின் கூட்டாக ஒரு கட்சி இருந்த போதிலும், ஓர் ஒன்றுபட்ட கொள்கையை உருவாக்குவதில் அவை தங்களால் முடிந்த அனைத்தையும் செய்யும் கட்டாயத்துக்கு உட்படுவதோடு, அதன் கொள்கைக்குக் கட்டுப்படும் கட்டாயமும் ஏற்படும். ஒரு கட்சி அளிக்கும் வேலைத் திட்டம்—தனிக்குழுவின் வேலைத் திட்டத்தைவிடப் பரந்த அடிப்படையில் இருக்கும்—மக்களுக்கு எடுத்துச் சொல்லுவதாக இருக்கும் இந்தியாவின் நிலையை அறிந்த எல்லோரும் இதன் அவசியத்தை நன்கு உணர்வர்.

27. கூட்டுப் பொறுப்பை எவ்வாறு அடைவது என்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகும். அதைச் சட்ட வடிவில் திட்டவட்டமாகக் கூறினால், நிர்வாக சபை முழுவதையும் நீக்காமல் ஓர் அமைச்சரை நீக்க நிர்வாகத் தலைவருக்கோ சட்ட மன்றத்திற்கோ உரிமை இருக்காது. எனவே இதை நடைமுறை மரபுக்கு விட்டுவிடுவது நல்லது. இந்த மரபை எவ்வாறு நடைமுறைக்குக் கொண்டு வருவது என்ற கேள்வி இருக்கிறது. ஆளுநர் அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பதற்குப் பதிலாகத் தம்முடைய நண்பர்களைத் தேர்ந்தெடுக்கும் கடமையை அமைச்சர்களில் ஒருவருக்குக் கொடுக்கலாம் என எனக்குத் தோன்றுகிறது; அவ்வாறு அமைக்கப்படும் ஓர் அமைச்சரவை, கூட்டுப் பொறுப்பில் இயங்கும் கட்டாயம் ஏற்படும்; அத்துடன் அரசாங்கத்தின் எல்லா உறுப்பினர்களையும் மாற்றாமல் ஓர் அமைச்சரை நீக்குவதற்கு இடம் அளிக்கும். எனவே, ஒவ்வோர் அமைச்சரையும் நேரடியாக நியமிக்கும் பொறுப்பை ஆளுநர் மேற்கொள்ளாமல் ஓர் முதல் அமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கோர வேண்டுமென்றும், அரசாங்கத்தை அமைக்கும் பொறுப்பை அவருக்கு (முதல் அமைச்சருக்கு) விட்டுவிட வேண்டுமென்றும் நான் யோசனை கூறுகிறேன்.

28. மாநிலத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்க 7 அமைச்சர்கள் இருக்க வேண்டுமென்று எனது நண்பர்கள் பரிந்துரை செய்துள்ளனர். அமைச்சர்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதைப் பொறுத்த வரையான பரிந்துரையுடன் என்னால் உடன்பட முடியவில்லை. மாநிலத்தின் எதிர்கால அரசாங்கம் 7 பேர்களுக்கும் குறைவாகவே வைத்துச் செயல்பட முடியலாம் 7 பேர்களுக்கும் அதிகமாகவே தேவைப்படும் என்றும் கருதலாம்; சட்டமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஆவல்களைத் திருப்தி செய்வதற்காக—அவர்களின் ஆதரவு இல்லாமல் அரசாங்கம் நடைபெறுவது

சாத்தியமில்லாமல் போகலாம்—துறைகள் இல்லாத அமைச்சர் களை நியமிக்க வேண்டி வரலாம் என்பது பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. இந்த சூழ்நிலையில், அமைச்சர்களின் எண் ணிக்கையைப் பொறுத்தவரை, அதை நிர்ணயிப்பதைச் சட்ட மன்றத்திற்கு விட்டுவிடுவதுதான் மிக விவேகமானதாகும்.

### அத்தியாயம் 3

## ஆளுநரின் நிலையும் அதிகாரங்களும்

29. இன்று அமலிலிருக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலை ஆளுநருக்கு இல்லை. மாநிலத்தின் அரசாங்கத்திற்கு எந்தப் பொறுப்பும் இல்லாமல், மாநிலத்தில் மன்னரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அமைப்புச் சட்டத் தலைவர் என்ற நிலை அவருக்கு இல்லை. மாநிலத்தின் விவகாரங்களை முழுமையாக வழிநடத்தும் பொறுப் பும் அவருக்கு இல்லை. அவரது நிலை இரண்டும் கலந்திருக்கிறது எதேச்சாதிகாரியாகவும் அரசியல் அமைப்புச்சட்டத் தலைவராக வும் இரட்டைப்பாத்திரத்தை வகிக்கும் நிலையில் ஆளுநரை வைப்பது, ஆளுநரின் பார்வையிலிருந்து அல்லது அரசாங்க இயந் திரம் எளிதாக இயங்குவதிலிருந்து பார்த்தாலும் ஒரு மிக மகிழ்ச்சிக் குரிய நிலையாகாது. ஆளுநர் வகித்த நிலையின் கஷ்டங்களின் தன்மை எதுவாயினும், 1919-ல் அமலுக்குக் கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அது உகந்ததாக இருந்தது. அரசியல் அமைப்புச் சட்டம் முழுமையான பொறுப்புள்ள அரசாங்கத்தை அளிக்காததால் இயல்பாகவே அரசியல் அமைப்புச் சட்டப்படி சம்பிரதாயமான தலைவர் என்ற நிலைக்கு ஆளுநர் குறைக்கப்படவில்லை. மறுபக்கத்தில் மாநிலத்தின் சில துறை களாவது அமைச்சர்களுக்கு மாற்றப்பட்டு அவற்றை நடத்தும் பொறுப்பு அவர்களிடம் விடப்பட்டதால், ஒரு பொறுப்பில்லாத தலைவர் என்ற அவரது பழைய நிலையிலும் ஆளுநர் வைக்கப்பட வில்லை. பொறுப்பான அரசாங்கம் என்பதை நோக்கிச் செய்யப் பட்ட முன்னேற்றத்திற்கு ஏற்ற அளவில் ஆளுநரின் நிர்வாகப் பொறுப்பு குறைக்கப்பட வேண்டும் என்ற விவேகமான கோட் பாட்டின்படி, அவரது நிலையிலும் மாற்றம் கொண்டுவரப் பட்டது. பொறுப்பை மாற்றுவதற்கேற்ப ஆளுநரின் நிலை அமை யும் என்று 1919-ல் வரையறுக்கப்பட்ட கோட்பாட்டின் தர்க்க ரீதியான அடிப்படையின்படி, அரசியல் அமைப்புச் சட்டப்படி யான சம்பிரதாயத் தலைவர் என்ற மாநிலத்தின் ஆளுநர் நிலை குறைக்கப்பட வேண்டுமென நான் பரிந்துரை செய்கிறேன். முழுப் பொறுப்பான அரசாங்க அமைப்பிற்கு இணையொத்த வேறு எந்த நிலையும் ஆளுநருக்கு நினைத்துப் பார்க்க முடியாது.

30. மாநிலத்தின் நிர்வாக சபையில், மன்னரின் பிரிதிநிதி என்ற முறையில் ஆளுநரின் அதிகாரங்களைப் பொறுத்தவரை, அமைச்சரவைக்கு ஆட்களை நியமனம் செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருப்பார். அதே தகுதியின் அடிப்படையில், நிர்வாகத்தின் எந்தத்துறை சம்பந்தப்பட்ட விஷயத்தில் அமைச்சர் பரிந்துரை செய்கிற எந்த உத்தரவுக்கும் ஒப்புதல் அளிக்கவோ, மறுக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு. சட்டமன்றத்தில் மன்னரின் பிரதி நிதி என்ற அந்தஸ்தில், சட்டமன்றம் நிறைவேற்றிய மசோதாக் களுக்கு (1) இசைவு அளிக்கவோ (2) மாட்சிமை தங்கிய மன்ன ரின் விருப்பம் கிடைக்கும் வரை ஒதுக்கி வைக்கவோ அல்லது (3) இசைவை மறுக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு.

31. ஆளுநருக்கு அளிக்கப்படும் இந்த அதிகாரங்கள் சட்ட மன்றத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர்களின் பரிந்துரையின் பேரிலேயே பயன்படுத்த வேண்டுமென்ற விதிமுறை நிபந்தனை யாக்கப்பட வேண்டும். இப்படிக் கூறும் போது, அவரது அமைச்சர் களுடன் கருத்து வேறுபாடு கொள்ளும் உரிமை அவருக்கு இல்லை என்று அர்த்தமல்ல. அதற்கு மாறாக, அவர்களுடைய கொள்கையை தாம் ஏற்கவில்லை என்று தமது அமைச்சர்களிடம் கூறுவது மட்டு மல்லாமல், அவர் எதிர்க்கும் கொள்கையில் விடாப்பிடியாக நிற்கும் அமைச்சர்களை நீக்கவும் உள்ள அதிகாரத்தை ஆளுநர் வைத்திருப்பார். ஒரு சட்டமன்றத்திற்குப் பொறுப்பாயுள்ள ஓர் அமைச்சர் சொல்வதைக் கேட்க வேண்டியது கடமையென்று அரசியல் அமைப்புச் சட்டத் தலைவரைக் கட்டாயப்படுத்த முடியாது. வாக் காளர்களின் பொதுவான விருப்பங்களுக்கேற்ப நடந்து கொள்வது தான் அவரது கடமையின் சாரமாகும்; அமைச்சரின் ஆலோ சனையை அவர் பின்பற்றுகிறார் என்றுதோன்றினால், அதற்குக் காரணம் ஓர் அமைச்சர் வாக்காளர்களின் விருப்பத்தைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம். பொது வாக்களர்களின் விருப்பத்தை அமைச்சர் சரியாகப் பிரதிபலிக் கிறாரா என்று ஆளுநர் சந்தேகப்படுவதற்கான காரணங்கள் உள்ள சந்தர்ப்பங்கள் வரலாம். அதன் காரணமாக இதற்கான சாத்தியப்பாடுகளை அங்கீகரிப்பதோடு, வாக்களர்களின் விருப் பம் என்ன என்று கண்டறிவதற்கான எல்லா வழிமுறைகளை எல்லாப் பொறுப்புள்ள அரசாங்கங்களின் அரசியல் அமைப்புச் சட்டங்களும் ஆளுநருக்கு உண்மையில் அளிக்கின்றன; இந்த நோக்கத்திற்காக எந்தவொரு பொறுப்புள்ள அரசாங்கத்தின் அரசியல் அமைப்புச் சட்டமும் அமைச்சர்களை நீக்கவும், அவ ருடன் உடன்பாடு தெரிவிக்கும் மற்றவர்களை நியமிக்கவும்— சட்டமன்றம் அவர்களை ஆதரிக்கும் என்ற நம்பிக்கையில்— ஆளு நருக்கு அனுமதி வழங்குகிறது. சட்டமன்றம் புதிய அமைச்சர்களை ஆதரிக்க மறுத்தால், எல்லாப் பொறுப்பான அரசாங்கங்களின் அரசியல் சட்டமும் அவருக்கு வேறு ஒரு வழிமுறையையும் அனு மதிக்கிறது; அதாவது, தம்மை ஆதரிப்பார்கள் என்ற நம்பிக்கையில்

வாக்காளருக்கு வேண்டுகோள் விடுப்பது. மாகாணத்தின் ஆளுநருக்கு இந்த வழிமுறை அனுமதிக்கப்பட்டாக வேண்டும். வாக்காளர்களின் விருப்பத்தைத் தெரிந்தபின் அவர்களின் முடிவு அது அவருக்கு எதிராக உள்ளது என்று கண்டு கொண்டால் அவர் விட்டுக்கொடுக்கவேண்டும், அல்லது பதவி துறக்க வேண்டும் அல்லது போராட வேண்டும், ஒரு மாநிலத்தின் ஆளுநர் இந்த வழிமுறையோடு திருப்தி அடையவேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் இன்றைய அரசியல் அமைப்புச் சட்டம் அளிக்கும் சுதந்திரமான அதிகாரங்கள் சட்டமன்றம் நிறைவேற்றாத விஷயங்களைப் பற்றி முடிவெடுத்துப் பிரகடனப்படுத்துவது, சட்டமன்றம் மறுத்த செலவினங்களுக்கு அங்கீகாரம் அளிப்பது, அமைச்சர்களை நீக்கி அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்து தாமே நிர்வாகத்தை நடத்துவது ஆகிய அதிகாரங்கள் — இப்போது அவருக்கு இருக்க முடியாது. எனவே, ஆளுநரை அரசியல் அமைப்புச் சட்ட சம்பிரதாயத் தலைவராக ஆக்குவதற்கு அவசியமானது என்னவெனில் அவசரகால அதிகாரங்களைப் பிரகடனப் படுத்தித் தற்காலிகமாக அரசியல் சட்டத்தை நிறுத்தி வைக்கும் அதிகாரங்களை எடுத்துவிட்டு சட்டமன்றத்திற்குப் பொறுப்புள்ள அமைச்சர்களை மீறி சுதந்திரமாகச் செயல்படுவதைச் சாத்தியமில்லாது ஆக்குவதாகும்.

32. அமைச்சரின் பரிந்துரையின் மேல் செயல்பட வேண்டியது ஆளுநருக்குக் கட்டாயமாக்கும் பகுதியின் சரியான வாசகம் பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும். இது பற்றிக் கூறும் பிரிவு 52(3)ன் வாசகம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டுள்ளது. அதன் வாசகம் திட்டவட்டமாக அமையாதிருப்பதால், விரும்பும் பலன் அளிக்காது. அவரது அமைச்சர்களின் பரிந்துரையின் மேல் ஆளுநர் செயல்படுவார் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக, ஆளுநரின் எந்த உத்தரவும், அது அமைச்சரால் உறுதி செய்யப்படாவிடில் செல்லுபடியாகாது என்று இருந்தால் நல்லது. கட்டுப்பாட்டை வலியுறுத்தும் அத்தகைய வாசகம் ஐயப்பாடற்றதாகும்.

33. ஆளுநரின் அதிகாரங்களை வரையறுப்பதுடன் சேர்ந்தே, நிர்வாக சபையில் அவருக்குள்ள இடம் பற்றியும் தெளிவுபடக் கூறவேண்டும். விவகாரங்களை வழிநடத்தும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டபின், ஆளுநரின் பாத்திரம் நிர்வாகப் பொறுப்பின்றி மேற்பார்வை செய்வதாக ஆகும். பொறுப்பு யார் மீது விழுகிறதோ அவர்களுக்கு வழிகாட்டும் முறையில் அரசியல் அமைப்புச் சட்டம் வகுத்துள்ள கோட்பாடுகளை மீறாமல் இருக்கிறார்களா என்பதைக் காண்பதுதான் அவரின் (ஆளுநரின்) பிரதான பணியாக இருக்கும். இந்தக் கடமையை அவர் நிறைவேற்ற வேண்டுமெனில், உள்ளூர் அரசியலில் மாட்டிக் கொள்ளாமல் சுதந்திரமாக இருக்க வேண்டும். இப்படிச் சுதந்திரமாகச் செயல்படுவது பாரபட்சமற்ற மேற்பார்வைப்பணிக்கு அத்தியா

வசியமாகும். அரசியல் சர்ச்சைகளில் ஆளுநர் நேராகப் பங்கெடுப் பதைப் போல, வேறு எதுவும் அவரது பாரபட்சமற்ற கணிப்பில் மக்களுக்குள்ள நம்பிக்கையைச் சீர்குலைக்காது. நிர்வாக சபைக்கும் சட்டமன்றத்திற்கும் இடையே உள்ள கருத்து வேற்றுமைகளோடு அவர் சம்பந்தப்படுவதும் வேறு எந்த விளைவையும் ஏற்படுத்தாது என்பதில் சந்தேகமில்லை. ஆளுநர் தனது கடமைகளில் நேர்மை யாக நடந்து கொள்கிறார் என்று எண்ணும்படி அமைய வேண்டு மானால் அவர் கட்சிக்கு அப்பால் இருக்க வேண்டும். இதற்கு, சட்டமன்றத்தோடு சம்பந்தப்படாமல் இருப்பது போல், நிர்வாக சபையிலிருந்தும் அவர் விடுவிக்கப்பட வேண்டும். எனவே, ஆளுநர் நிர்வாக சபையின் ஓர் அங்கமாக இருக்க மாட்டார் என்றும் அவர் அதன் கூட்டத்தில் தலைமை தாங்கமாட்டார் என்றும் வரையறுக்கப்பட வேண்டுமென்று நான் சிபாரிசு செய் கிறேன். நிர்வாக சபையின் கூட்டங்கள், ஆளுநரின் தலையீ டின்றி, பிரதம மந்திரியால் கூட்டப்பட்டு அவரால் தலைமை தாங்கப்படும்.

## பிரிவு 3

# மாநிலச் சட்ட மன்றம்

### அத்தியாயம் 1

## ஓட்டுரிமை

*34.* நகர்ப்புறங்களில் வாக்குரிமை இப்பொழுது போலவே இருக்க வேண்டும் என்றும் கிராமப்புறத்தில் நிலவரி மதிப்பீடு (வரி) பாதியாக்கப்பட வேண்டுமென்றும் எனது சகாக்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். என்னால் இதை ஏற்க முடியாது. வாக்குரிமைப் பிரச்சினையை உரிமை என்று பாராமல் ஒரு சலுகை என்று எனது சகாக்கள் இந்தப் பிரச்சினையைப் பார்த்திருக்கிறார்கள். எந்த நாட்டிலும் இந்தக் கருத்தை அரசியல் சமுதாயத்தின் அடிப்படையாக ஏற்றுக் கொள்வது ஆபத்தாகும். பிரதிநிதித்துவத்துக்கு உள்ள உரிமை என்ற கருத்து ஒவ்வாதது என்று தள்ளப்பட்டால்; பிரதிநிதித்துவத்திற்கான ஒரு தார்மிக உரிமையை ஒரு வறட்டுத்தனமான உணர்ச்சிவசப்படுகிற தடை என்று கருதுவது; அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்கள் அதை எவ்வாறு பயன்படுத்துவர் என்பது பற்றிய கணிப்பின் அடிப்படையில் அளிப்பதா மறுப்பதா என்று முடிவு செய்யப்படும் சலுகை என்று கருதுவது ஆகியன, வாக்குரிமை பெறாதவர்களின் விமோசனம் வாக்காளர்களாக இருப்பவர்களின் தயவில்தான் முற்றிலுமாக உள்ளது என்று தெளிவாகக் காட்டுகிறது. இந்த முடிவை ஏற்றுக் கொள்வது என்பது, அடிமைத்தனம் தவறு அல்ல என்று ஏற்றுக் கொள்வதாகும். அடிமைத்தனம் கூட, அதிகாரத்தில் இருப்பவர்கள் என்ன கொடுக்க விரும்புகிறார்களோ அதைத்தவிர மனிதர்களுக்கு உரிமை எதுவுமில்லை என்ற கற்பனை வாதத்தின் அடிப்படையில் அமைந்தது. இத்தகைய முடிவுக்கு கொண்டு செல்லும் தத்துவம் மக்கள் அரசாங்கத்தின் எந்த அமைப்பிற்கும் பேராபத்தானது; அதனால் அதை முற்றிலுமாக நிராகரிக்கிறேன்.

*35.* வாக்குரிமைப் பிரச்சினையை, ஒரு வாக்குப் பெட்டியில் புல பெயர்கள் எழுதப்பட்ட ஒரு காகிதத்துண்டைப் போடுவதற்கு உள்ள தகுதிப் பிரச்சினை என்பதைத்தவிர வேறல்ல என்று எனது சகாக்கள் அணுகுகிறார்கள். அப்படி இல்லையெனில், வாக்குரிமையை விரிவுபடுத்துவதற்கு எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது ஒரு தகுதியாக வற்புறுத்தியிருக்கமாட்டார்கள். வாக்குரிமை பற்றிய அத்தகைய கண்ணோட்டம் மேலெழுந்தவாரியானது; அது எதற்காக நிற்கிறது என்பதைப்பற்றிய ஒரு தவறான கருத்தில் உருவானது, பெரும்பான்மையினர் வாக்குரிமையின் பொருள்

என்ன என்பதை அவர்கள் மனதில் கொண்டால், ஒரு வாக்குச் சீட்டைக் குறித்துக் குறிபோடும் செயலாக மட்டுமல்ல என்பதை உணர்ந்திருப்பார்கள். "சமுதாய வாழ்க்கை நிலைபெற்று முன் னேறுவதற்கும் நல்லது நடப்பதற்கும் தேவையான நிலைமைகளை, வகுப்பதில் நேரடியாகவும் தீவிரமாகவும் பங்கெடுப்பது"தான் வாக்குரிமை. வாக்குரிமை பற்றிய இத்தகைய கண்ணோட்டத்தை ஏற்றுக் கொண்டால், அதிலிருந்து எழுவது, பைத்தியமில்லாத ஒவ்வொரு வயது வந்தோருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டும் என்பது. ஏனெனில், சமுதாய வாழ்க்கை ஒவ்வொரு வராலும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது; ஒவ்வொரு தனிநபரும் அதன் விளைவுகளால் பாதிக்கப்படுகிறார்; அதன் விதிமுறை களை நிர்ணயிப்பதில் ஒவ்வொரு தனிநபருக்கும் உரிமை உண்டு. இந்த அடிப்படையிலிருந்து தனிநபர் எவ்வளவு அதிகம் ஏழ்மை உடையவராக இருக்கிறாரோ, அந்த அளவுக்கு அவர் வாக்குரிமை பெறுவது அவ்வளவு அதிகம் தேவையாகிறது. தனிச்சொத்துரிமை அடிப்படையில் அமைந்த ஒவ்வொரு சமுதாயத்திலும்—உரிமை யாளர்களுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே உள்ள சமுதாய வாழ்க்கை ஆரம்பத்திலிருந்தே தொழிலாளர்களுக்கு எதிராக உள்ளது. தொழிலாளியின் நலன் உடைமையாளர்களால் அச் சுறுத்தப்படாமல் இருக்க வேண்டுமானால், அவர்களின் சமுதாய வாழ்வின் விதிமுறைகள் தொடர்ந்து புனரமைக்கப்பட வேண்டும். சொத்திலிருந்து வாக்குரிமை பிரிக்கப்பட்டு, சொத்தற்ற எல்லா வயதுவந்தோருக்கும் வாக்குரிமை விரிவுபடுத்தப்பட்டாலன்றி இது சாத்தியமாகாது. எவற்றை, எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த் தாலும், வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்று முடிவுக்கு வருவது எதிர்க்க முடியாததாகும். அந்த முடிவை ஏற்றுக் கொண்டு, வயது வந்தோர் அனைவருக்கும்—21 வயதுக்குமேற்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும்—வாக்குரிமை நீட்டிக்கப்பட வேண்டுமென்று பரிந் துரைகிறேன்.

36. வயது வந்தோருக்கு வாக்குரிமையை அமலுக்குக் கொண்டு வருவதற்கு அரசியல் நீதி மட்டும் ஒரே காரணமல்ல அரசியல் விவேகமும் கூட இதைக் கொண்டு வருவதற்குச் சாதகமாக உள்ளது. வகுப்பு அடிப்படையிலான வாக்காளர்கள் பற்றி முஸ்லீம் போன்ற சிறுபான்மையினர் வற்புறுத்துவதற்கான கார ணங்களில் ஒன்று; கூட்டுத் தொகுதி அடிப்படையில் தேர்தல் என்ற முறையில், பெரும்பான்மை வகுப்பைச் சார்ந்த வாக்காளர் கள் தேர்தல் முடிவைப் பெரும்பாலும் நிர்ணயிக்கும்போது, சிறு பான்மையினரின் பார்வையிலிருந்து நோக்கினால் சட்டசபை இடங்கள் விரும்பத்தகாதவர்களுக்கு போகும் என்ற பயம். அறிக்கை (report) பிரிதொரு பாகத்தில், வயது வந்தோருக்கு வாக்குரிமையை அமலாக்குவதன் மூலம் இந்தக் கருத்தை (பயம்) வெற்றிகரமாகப் போக்க முடியும் என்று நான் குறிப்பிட்டுள்ளேன். வகுப்புவாரி வாக்காளர் தொகுதிகள் என்பதற்கு மாற்று, வயதுவந்தோருக்கு

வாக்குரிமை என்பதன் முக்கியத்துவத்தைப் பெரும்பான்மை சமூகத்தினர் சிந்தித்துப் பார்க்கவில்லை. வகுப்புவாரி வாக்காளர் தொகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டியது நல்லது, வயதுவந்தோருக்கு வாக்குரிமை என்பது கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய கேடான ஒன்று என்ற அடிப்படையில் பார்க்கிறார்கள். என் கருத்து அதற்கு முற்றிலும் மாறானது. வகுப்புவாரி வாக்காளர் தொகுதிகள் கேடு விளைவிப்பவை என்றும் வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிப்பது நல்லது என்றும் கருதுகிறேன். வயது வந்தோருக்கு வாக்குரிமையைக் கொண்டு வருவது அதன் உள்ளார்ந்த நல்ல தன்மையினால் மட்டுமல்லாமல், வகுப்புகளடிப்படையில் வாக்காளர்களைப் பிரிப்பதைத் தடுக்க முடியும் என்பதாலும், என்னை ஆதரிப்பவர்கள் ஒப்புக் கொள்வார்கள். வயதுவந்தோர் வாக்குரிமையில் நம்பிக்கையில்லாத அரசியல் வாதிகள்கூட இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்வதில் எந்தக் கஷ்டமும் இருக்காது. பெரிய தீங்கைவிடச் சிறிய தீங்கை ஏற்பது விவேகமான செயல்; வகுப்பு அடிப்படையிலான வாக்காளர்களை விட வயதுவந்தோர் வாக்குரிமை குறைவான கேடு. அரசியல் நீதியின் ஆதரவைப்பெற்று அரசியல் விவேகத்தால் ஏற்படுகிற வயது வந்தோர் வாக்குரிமையானது, பொதுமக்களின் ஒரு கணிசமான பகுதியினரால் கோரப்படுகிறது எனத் தெரிகிறது. பிராமணரல்லாதவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நீங்கலாக எல்லா அரசியல் கட்சிகளின் கருத்தையும் உட்கொண்டுள்ள **நேரு கமிட்டியின்** அறிக்கையும் வயதுவந்தோர் வாக்குரிமை பெறுவதை ஆதரிக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் இதை வலியுறுத்தியுள்ளனர். இந்து முஸ்லீம் சங்கமும், பம்பாய் அரசாங்கத்தின் உறுப்பினர்களில் ஒஒ முஸ்லீமும் ஒரு பிராமணரல்லாதாரும் இதற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இவ்வாறு போதுமான பொது மக்கள் ஆதரவும் வயதுவந்தோர் வாக்குரிமைக்கு உள்ளது. இந்த அளவிலான மக்கள் ஆதரவை எனது நண்பர்கள் ஏன் ஒதுக்கித் தள்ளினர் என்பதற்கு அவர்கள் காரணம் ஏதும் தெரிவிக்கவில்லை.

37. வயதுவந்தோர் வாக்குரிமைக்கு எதிராக எனது நண்பர்கள் முடிவு செய்ததற்குக் காரணம் இரண்டு விஷயங்களுக்கு அவர்களைப் பெரிதும் முக்கியத்துவம் கொடுத்தது எனத் தோன்றுகிறது. ஒன்று நாட்டில் பெருமளவு நிலவுகிற கல்லாமையாகும். நாட்டில் பொது மக்கள் மத்தியில் கல்லாமை இருப்பதை யாரும் மறுக்க முடியாது. வாக்குரிமைப் பிரச்சினையை இது பாதிக்கும் என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. முதலாவதாக, படிக்காதவர்களின் கல்லாமை அவர்களின் தவறல்ல. மக்களுக்குக் கல்வி போதிக்கும் மிக முக்கியமான கடமையைப் பம்பாய் அரசாங்கம் நீண்ட காலமாகவே ஏற்றுக் கொள்ள மறுத்தது; கல்வியின் நன்மை மேல்மட்ட வகுப்பினருக்கு மட்டும்

வேண்டுமென்றே அளித்தது; பொது மக்களுக்கு நீட்டிப்பதை மறுத்தது.*.

*38. 1854*-ல் தான், உயர் மட்டத்தாருக்குக் கல்வி என்ற நிலையிலிருந்து மக்களுக்குக் கல்வி அளிப்பதற்கு ஏதுவாக இருப் பதாக அரசு அறிவித்தது. பொதுமக்களுக்கிடையே கல்வி பரவ வேண்டுமென்ற அரசாங்கத்தின் அக்கறை சில தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு மேல் அதிகதூரம் செல்லவில்லை, நிதி ஒதுக்கீடு விஷயத்தில், கல்விக்கு மிகக் கஞ்சத்தனம் காட்டியது. வரி விதிப்புக்கு எப்பொழுதும் ஆதரவான நிலை எடுக்கும் அரசாங்கம் கட்டாய ஆரம்பக்கல்வி அளிக்க மதிப்பிற்குரிய திரு. கோகலே—இதற்கான வரிவிதிப்பு ஆலோசனைக்காக ஒரு முறையையும் அத்துடன் அளித்ததை—ஏற்றுக் கொள்ள மறுத்தது. கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம் அபிவிருத்தியை அளிக்கவில்லை. மாநிலத்தில் கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டத்தை நிறைவேற்றி யதற்குப் பின், பொது மக்களுக்குக் கல்வி என்ற கணிசமான முன்னேற்றம் எதுவும் இல்லை. அதற்கு மாறாக, மெத்தனமும் அறியாமையும், கல்வி முன்னேற்றத்தில் அக்கறையில்லாதவர் களின் நிர்வாகத்திலுள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்குக் கல்வியை மாற்றியதன் விளைவாக நிலைமை மோசமடைந்துள்ள தையே காண்கிறோம்.

*39.* தாழ்த்தப்பட்ட வகுப்புகளைப் பொறுத்தவரை, கல்வி அறிவுபெறும் வாய்ப்பு உண்மையிலேயே மறுக்கப்படுகிறது. கல்விக்கு; தீண்டாமை ஒரு சமாளிக்க முடியாதத் தடையாக இருந் துள்ளது. அரசாங்கமும் அதற்குப் பணிந்து, இந்தியாவில் நிலவும் சமுதாய அமைப்பின் தன்மைக்கேற்ப, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொதுப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும் உரிமையை அது தியாகம் செய்துவிட்டது. தார்வாரிலுள்ள பள்ளி ஒன்றில் சேர ஒரு மகர் ஜாதிப் பையன் *1816*-ல் கொடுத்த மனுவை மறுத்த தீர்மானத்தில் பம்பாய் அரசாங்கம் பின்வருமாறு கூறுகிறது:

> ''கடிதப் போக்குவரத்தில் விவாதிக்கப்பட்ட பிரச்சினை மிக அதிகமான நடைமுறைக் கஷ்டமானது. ''மகர் மனிதர் பக்கம் கோட்பாட்டு ரீதியான நியாயம் இருக்கிறது என்பதில் சந்தே கம் இருக்க முடியாது; தார்வாரில் இப்பொழுது இருக்கிற கல்வி வசதியைப் பயன்படுத்துவதிலிருந்து தற்சமயம் அவரை தடுக்கும் தவறான போக்கு விரைவில் அகற்றப்படும் என அரசாங்கம் நம்புகிறது.

---

* இந்த உண்மை ஒரு கற்பனை என்று கருதப்படக் கூடாது என்பதற்காக, பம்பாய் மாநிலக் கல்வி வாரியம் *1850-51*-ம் ஆண்டுக்கான அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதிகளைக் கவனிக்கக் கோருகிறேன் (இந்தப் பகுதிகள் இந்த அறிக்கையின் இறுதியில் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.—*ஆசிரியர்*)

''ஆனால் ஒருவர் அல்லது ஒருசில தனி நபர்களுக்காகக் காலம் காலமாக உள்ள தவறான போக்கில் தலையிடுவது கல்வி நோக்கத்திற்கு ஒரு பெரும் சேதத்தை ஏற்படுத்தலாம் என்பதை மனதில் கொள்ளவேண்டிய கட்டாயம் அரசாங்கத் திற்கு உள்ளது. மனிதருக்கு ஏற்பட்டுள்ள பாதகமான நிலைக்கு இந்த அரசாங்கம் காரணமல்ல; அவர் இறைஞ்சிக் கேட்டுக் கொள்வது போல் அவருக்குச் சாதகமாகச் சட்டென்று அரசாங்கம் தலையிட்டு நீக்கக் கூடிய ஒன்று அல்ல.''

26 ஆண்டுகளுக்குப்பின் அமைக்கப்பட்ட ஹண்டர் கமிஷன் (The Hunder Commission) சாதி அடிப்படையில் மட்டும் அரசுக் கல்லூரி அல்லது பள்ளியில் சேர அனுமதியாருக்கும் மறுக்கக் கூடாது என்ற கோட்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று சொன்னது உண்மையே. ஆனால் இந்தக் கோட் பாடு, ''தேவையான ஜாக்கிரதையுடன் அமல்படுத்தப்பட வேண் டும்'' என்று கூற வேண்டும் என்றும் அதற்குத் தோன்றிற்று. அத்தகைய ஜாக்கிரதையின் விளைவு, அந்த கோட்பாடு ஒரு போதும் அமலாக்கப்படாததுதான். 1921-ல் டாக்டர் பரஞ்சி பாயால் (Dr. Paranjpye) அவர் கல்வி அமைச்சராக இருந்த போது, ஒரு துணிவான முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேக மில்லை. ஆனால் அவரது செயலுக்கு எந்தச் சட்ட உரிமையும் இல்லாததால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பள்ளியில் சேர்த்துக் கொள்வது பற்றிய அவரது சுற்றறிக்கையைத் தந்திரமாக அமலாக்கு வது தவிர்க்கப்பட்டது; இதன் விளைவு என்னவெனில், தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் வாழ்வில் கல்லாமை தொடர்ந்து ஒரு கேவல மான அம்சமாக இருந்து வருவதுதான்.

40. படிக்காத இத்தகைய மக்களுக்கு வாக்குரிமை எப்படிக் கொடுக்கப்படலாம் என்ற கேள்வி அடிக்கடிக் கேட்கப்படுகிறது; எனவே எனது பதில்: அவர்களின் கல்லாமைக்கு யார் பொறுப்பு? இதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்கவேண்டுமெனில், வாக்குரிமைக்குக் கல்வியறிவை முன் நிபந்தனையாக ஆக்குவது, மக்களின் பெரும்பான்மையினரை ஒதுக்கி வைப்பதாகும். கல்வி அறிவு பெற எந்தச் சந்தர்ப்பத்தையும் பெறாதது அவர்களின் தவறினால் அல்ல. கல்லாமையை அகற்றுவதைத் தொடர்ந்துதான் வாக்குரிமை விரிவு என்று வைத்துக் கொண்டால், கல்லாமையைப் போக்க எவ்வளவு இயலுமோ அவ்வளவு விரைவில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுமோ என்பதற்கு உத்தரவாதம் என்ன இருக் கிறது? கல்விப் பிரச்சினையும், நாட்டின் பிற வளர்ச்சிப் பிரச் சினைகள் போல, முடிவாக நிதி சம்பந்தப்பட்டதாகும். போது மான அளவு நிதி இல்லாமல், கல்வியில் முன்னேற்றம் இருக்க முடியாது. எனவே நிதியை எவ்வாறு பெறுவது என்ற பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதாகும். இன்றைய வாக்குரிமையின் அடிப் படையில் தேர்ந்தெடுக்கப்படும் சட்டமன்றம் இந்தச் சிக்கலுக்கு

தீர்வுகாண ஒருபோதும் முடியாது என்பது சந்தேகத்திற்கு இடமில்லாதது. எளிதான காரணம்: பணக்காரர்களுக்கு வரிவிதித்துதான் கல்வி நிதி பெறமுடியும்; பணக்காரர்கள்தான் இன்றைய மன்றத்தில் ஆதிக்கம் வகிக்கின்றனர்; ஏழைகளின் நலனுக்காகத் தங்களுக்கு வரிவிதித்துக் கொள்ள வற்புறுத்தப்பட்டாலொழிய, பணக்காரர்கள், ஒப்புக் கொள்ள மாட்டார்கள். மன்றத்தின் இயைபில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டால்தான் அத்தகைய நிர்ப்பந்தம் வரமுடியும்; இயைபில் தீவிரமாற்றம் ஏற்பட்டால்தான் ஏழைகள், கல்வி அறிவு பெறாதவர்களின் குரல், போதுமான அளவு எழ முடியும். இது நடைபெறாவிடில் கல்லாமைப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது. அவர்களுக்கு அந்த உரிமையை மறுப்பது அநீதி நிறைந்த நிலைமையை ஏற்படுத்தும். மக்களைக் கல்லாதவர்களாகவே வைத்துக் கொண்டு அதே சமயம் அவர்களுக்கு வாக்குரிமை வழங்காததற்கு அதையே காரணமாக்குவது ''வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது'' போலாகும். நிலைமை இதைவிட மோசமாகும். காயத்தை மேலும் கடுமையாக்குவதாகும். கல்லாதவர்களாக வைத்துக் கொண்டு அவர்களின் கல்லாமையை அகற்றுவதற்கு எந்த வாக்குரிமை அவர்களுக்குப் பயனுள்ள வகையில் உதவும் ஒரே சாதனமோ அதை மறுப்பது அவர்களின் கல்லாமையை நீடிக்கச் செய்வதும், அவர்கள் வாக்குரிமை பெறுவதைக் காலவரையின்றி ஒத்தி வைப்பதுமாகும்.

41. கல்லாமைக்கு யார் பொறுப்பாளி என்பதல்ல பிரச்சினை என்று கேட்கப்படலாம்; பிரச்சினை என்னவெனில், எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு வாக்களிக்க உரிமை வழங்கப்பட வேண்டுமா என்பதாகும். எழுதப்படிக்கத் தெரியுமா அல்லது எழுதப்படிக்கத் தெரியாதா என்று கேள்வி இருக்க முடியாது என்புது எனது பதில். அறிவுத்திறன் மட்டுமே பிரச்சினையாக இருக்க முடியும். கல்வி அறிவுதான் ஒரு சோதனை என்றும் வாக்குரிமைக்கு அது முன்தேவை என்றும் வலியுறுத்துகிறவர்கள் இரு தவறுகள் செய்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். அவர்களின் முதல் தவறு கல்லாத ஒருவர் அறிவுத்திறனற்றவராகவே அவசியம் இருப்பார் என்ற நம்பிக்கை. கல்வி கற்காத ஒருவர் அறிவுத்திறன் பெற்றவராகவும் இருக்க முடியும் என்று கூறுவது முரணான கூற்றாகாது என்பதை அனைவரும் அறிவர். அனுபவத்திற்கு வேண்டுகோள் விடுப்பது, இந்தியா உட்பட உலகம் முழுவதிலுமுள்ள கல்வியறிவு இல்லாதவர்கள், தங்கள் விவகாரங்களைப் புரிந்து கொள்ளவும் அவற்றைச் சமாளிக்கவும் அறிவுத்திறன் பெற்றிருக்கிறார்கள் என்ற முடிவை வலுப்படுத்தும். என்னவாயினும், ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொருவரும் தம்முடைய விவகாரங்களைப் புரிந்து கொண்டு சமாளிக்கும் அளவுக்குத் தேவையான அறிவுத்திறன் பெற்றிருக்கிறார் என்று சட்டம் கருதுகிறது. தம்முடைய வாக்குரிமையைப் பயன்படுத்துவதில் கல்லாதவர் எளிதாகத் தவறு

செய்யலாம். ஆனால் பம்பாய் வளர்ச்சி இலாகா (Development Department of Bombay) பெரும் தவறுகளைச் செய்துள்ளது; அவை கண்டிக்கப்பட்டாலும் அவை பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. அவர்கள் பெரும் தவறுகள் செய்வார்கள் என்றாலும், அவர்கள் வாக்குரிமை பெற்றிருப்பது நல்லது சுதந்திரத்தின் தவறுகளால் ஏற்படும் நஷ்டத்தைவிட மக்கள் தங்கள் அனுபவத்தால் பெறும் இலாபம் அதிகம் என்ற உறுதியான எண்ணத்தின் அடிப்படையில் தான் சுதந்திரமான மக்கள் அரசு மீது நம்பிக்கை இருக்கிறது; அரசியல் இல்லாத துறையில் தனி நபர்களுக்குப் பொருந்தும் உண்மையானவ அரசியல் துறையில் ஏன் பொருந்தாது என்பதைப் புரிந்து கொள்வது கஷ்டமாக உள்ளது. அவர்களின் தவறு, கல்வி கற்காதவரிடம் இருப்பதைவிட, அதிகமான அறிவுத் திறமையையும் ஞானத்தையும் கல்வி அளிக்கிறது என்று அவர்கள் நம்புவதாகும். இதுபற்றிப் பிரைஸ் கூறுவதை மேற்கோள் காண் பிக்கலாம். ''தற்காலத்திய குடியரசுகள்'' (Modern Democracies) என்ற அவரது ஆய்வில், எழுதப்படிக்கத் தெரிவதற்குள்ள திறமை எந்த அளவு பொது விவகாரங்களுக்கு உதவுகிறது என்ற கேள் வியை எழுப்பி இவ்வாறு அதற்குப் பதிலும் அளிக்கிறார்: ''நடை முறையில் உள்ள ஒரே சோதனை என்பதால், அது ஒரு போது மான சோதனை என்று நாம் எண்ணுகிறோம். அது உண்மையா? நம்மில் சிலருக்கு நினைவு இருக்கலாம்! அறுபது ஆண்டுகளுக்கு முன், நாகரிகமற்ற, கிராமப்புற ஆங்கிலேயர்கள், விவேகமான மனிதர்கள், படிக்கத்தெரியாவிட்டாலும் ஏராளமான புத்திக் கூர்மையுடன் விஷயங்களைச் சரியாகக் கணிக்கும் திறமை பெற் றிருந்தனர்; இன்று பத்திரிகை படிக்கிற, கும்மாளத்துடன் திரைப் படம் பார்க்கிற அவர்களின் பேரக் குழந்தைகளைப் போல் வாக் களிக்கும் தகுதியை அவர்கள் பெற்றிருந்தனர்.... ஆதன்ஸ் நகர வாக்காளர்கள் ... இதிலும் அதிகம் திறமை பெற்றிருந்தனர்....; தற்கால குடியரசுகளில் உள்ள மிகப் பெரும்பாலான வாக்காளர் களைவிடப் பொதுவாக்கெடுக்கும் தகுதியை அதிகம் பெற்றிருந் தனர். கிரீஸ் வாக்காளர்கள் அரசியலைக் கற்றுக் கொண்டது நூல் களைப் படித்தல்ல; திறமை வாய்ந்த பேச்சாளர்களின் உரை களைக் கேட்டும் ஒருவருக்கொருவர் கலந்துரையாடியும் கற்றுக் கொண்டனர். பேசுவது, படிப்பதைவிட அதிக நன்மை அளிக்கக் கூடியது; பேசுவது (கேட்பது) மனதின் செயலற்ற தன்மையைக் குறைக்கும். சிந்தனைதான் முக்கியமானது; படிப்பதல்ல; சிந்திப் பதன் மூலம்—உண்மைகளைக் கண்டுபிடிக்கும் திறமையைக் குறிப் பிடுகிறேன்—அதைத் தொடர்ந்து அவைபற்றி வாதிப்பதும். உரையாடல்களில் அறிவுத் திறமைகள் மோதுகின்றன; இதற்குச் சிந்தனை ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். இப்பொழுதெல் லாம். சிந்திப்பதற்கு மாற்றாகப் படிப்பது என்றாகிவிட்டது. தமது கட்சி செய்தித்தாள் மட்டும் படிப்பவர், மற்றக் கதம்பங்களுடன் அதன் அரசியல் திறமையையும், குற்றங்கள் பற்றிய செய்திகள்,

கால்பந்துப் போட்டிகள் பற்றிய வருணனை படிப்பவர், ஒரு பிரச்சினைக்கு ஒரு பக்கம் மட்டுமல்லாமல் பல அம்சங்கள் உள்ளன என்று தெரிந்து கொள்ளத் தேவையில்லை. அப்படி இருக்கிறதா என்று கேட்டால் அது அரிதாக இருக்கும்; செய்தித் தாள் அவருக்குக் கூறுவதற்கு என்ன ஆதாரம் என்று கேட்க மாட்டார். அச்சடித்துள்ள பக்கம், அது அறிய முடியாத ஆற்றலின் வடிவமாக கருதுவதால், அவர் பேச்சில் கேட்பதைவிட மிக இலகுவாக இதை நம்புகிறார். அதில் உள்ள அறிக்கைகளை—அவை ஆதாரமற்றவையாக இருக்கலாம், கற்பனையின் அடிப் படையாலான தாகம் ஒருவேளை இருக்கலாம்—அப்படியே எடுத்துக் கொள்கிறார்; அவருடன் பணிமனையில் வேலைசெய்யும் ஒருவர் கூறுவதை எடுத்துக் கொள்ள மாட்டார். மேலும், அறிவு ஞானம், தீங்கானதாகவும் நல்லதாகவும் இருக்கலாம். மிக விரிவாகப் படிப்பவர்கள், படித்ததை அலசி ஆராயும் திறமை உள்ளவர்களைத் தவிர, மற்றவர்ளுக்கு அச்சில் வருவதில் பொய்யானவைவிட உண்மையானவைக்கு அதிக வாய்ப்பு இல்லை. சில, உண்மைகளை மறைக்கும், சில, உண்மைகளைத் திரித்துக் கூறும், ஒரு கட்சி ஏடு வழிகாட்டுவதில் மிகமோசமானது; ஏனெனில், திரும்பத் திரும்ப விடாமல் பொய்யை வலியுறுத்திக் கூறுவது மற்ற எந்த மனிதனும் அல்லது பலர் கொண்ட குழுவும் அச்சுக்கலை கண்டு பிடிக்கப்படும் முன்—ஆன்மிக அதிகாரம் பெற்ற மதக்குருக்களைத் தவிர—கூறுவதைவிட அதிக பலமான தாக்கத்தை அது ஏற்படுத்தும். தனது கட்சி ஏடுகளால் வழிகாட்டப்படுகிற ஒரு புதிய வாக்காளர்; எண்பது வருடங்களுக்குமுன் தமது நில உரிமையாளர் அல்லது முதலாளி அல்லது (அயர்லாந்தில்) பாதிரியார் ஏவியபடி வாக்களித்த அவரது தாத்தாவைவிட நல்ல நிலையில் இல்லை. தாத்தாவுக்காவது தாம் யாரைப் பின்பற்றுகிறோம் என்பதாவது தெரியும்; ஒரு கருத்து வேறுபாடு உடைய விஷயத்தில் ஒரு பக்கத்தையே அச்சிடும் பத்திரிகைகளைப் படிக்கும் பேரன் அப்பத்திரிகைகளின் உரிமையாளர்களான சுயநலவாழிகளின் நலன்களுக்குப் பலியாகிறார்; அவை பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கின்றன அல்லது அவை மக்களின் நலனில் அக்கறை கொண்டவை என இவர் தனது அப்பாவித் தனத்தால் முடிவு செய்கிறார். படிக்க மட்டுமேயல்லாமல் சிந்தித்து நிர்ணயிப்பதற்கும் (மதிப்பீடு செய்வதற்கும்) போதிக்காத மக்களாட்சி படிக்கத் தெரிவதனால், நல்லதாக இருக்காது.''

42. இந்தியாவின் பொதுமக்களின் கல்வி அறியாமையைப் பற்றி அதிகமாக மிகைப்படுத்திக் கூறப்படுவதாகத் தோன்றுகிறது. ஆங்கிலம் கற்ற வாக்காளர், அவர் வாக்காளர் என்ற முறையில் எவ்வாறு நடந்து கொள்கிறார் என்று ஆராய்ந்தால் நாம் காண்பது என்ன? 1924 ஆகஸ்ட் 21 டைம்சின் (Times) இலக்கிய துணையோடு சப்ளிமென்ட் இந்த வாக்காளரைப் பற்றிக் கூறுவது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சட்டசபை அத்தகைய பொறுப்பினைப் பெற்றிட முடியும். நியமன உறுப்பினர் என்ற அமைப்பானது, சட்டசபையைப் பிரதிநிதித்துவம் அற்றதாக ஆக்குவதோடு, நிர்வாகம் பொறுப்பற்றதாக ஆவதற்கும் வழிசெய்கிறது. நிர்வாகத்தின் ஆலோசனையின் பேரில்தான் நியமன அதிகாரம் பிரயோகிக்கப்படுவதால், நிர்வாகம் ஏறக்குறைய சட்டசபையில் 25 சதவிகித உறுப்பினர்களை நியமனம் செய்கிறது; அதன் விளைவாக, சட்டசபையின் போதிய பகுதியினர், நிர்வாகத்தின் விமர்சகர்களாக அல்லாமல், அதன் ஊழியர்களாகச் செயல்படுகின்றனர். நியமனம் செய்யப்படும் அதிகாரிகளல்லாதோர், அரசாங்க ஊழியர்களல்லர் என்ற வாதமானது, இதனை எவ்வகையிலும் மறுதலிக்க இயலாது. ஏனெனில், நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளல்லாதோர், எப்பொழுதுமே விலைப் பேசப்பட இயலும்; மற்றும், தேர்ந்தெடுக்கப்பட்டதொரு உறுப்பினரது சுதந்திரத்தை விலை பேசும் நோக்குடன், நிர்வாகம் அவர்மீது செல்வாக்கினைப் பயன்படுத்த பல்வேறு வழிகள் உள்ளன. ஓர் உறுப்பினருக்குப் பட்டங்களும், கௌரவ அந்தஸ்தும் அளித்தல், அல்லது அவரது நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஆதரவுகளை வழங்குதல் ஆகியவை அவற்றுள் சில. ஆனால், நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளல்லாத உறுப்பினர்கள், ஏற்கனவே நிர்வாகத்தை, முழுமையாகச் சார்ந்த நிலையிலிருப்பதால், அவர்களது சுதந்திரத்தை வாங்கத் தேவையில்லை. அவர்களுக்கு (தங்களை) விற்பதற்கானச் சுதந்திரம் எதுவுமில்லை. அவர்கள் நிர்வாகத்தின் படைப்புகள்; நிபந்தனைகளின் பேரிலோ, அல்லது புரிந்து கொள்ளும் தன்மையின் அடிப்படையிலோ, நிர்வாகத்தின் நண்பர்களாகச் செயல்படுவர் என்று தான் அவர்களுக்குப் பதவியளிக்கப்படுகிறது. அத்தகைய எழுதப்படாத ஒப்பந்தத்தை உடைத்தெறியும் திறமையுள்ள நியமன உறுப்பினரை, நிர்வாகம் ஏதும் செய்ய முடியாது என்பதல்ல; மறு நியமனம் செய்ய மறுப்பதன் மூலம், அவருக்குக் கொடிய தண்டனையளிக்கவும் முடியும்; அத்தகைய தண்டனை அளிக்கப்பட்டதற்கான சான்றுகளும் உள்ளன. மன்னரது ரத்து அதிகாரத்தைப் போல, மறு நியமன அதிகாரம் நிர்வாகத்திடம் உள்ளது என்ற உணர்வே, ஒவ்வொரு நியமன உறுப்பினரையும் நிர்வாகத்தின் எடுபிடியாக இருக்க வைக்கிறது.

48. நியமன முறையினால் தோன்றும் மற்றொரு தீமையும் சுட்டிக் காட்டப்பட வேண்டும். அரசாங்கத்தின் நலன்களை ஆதரிப்பதற்காக, அதிகாரிகள் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதைப் போன்று, தற்போதுள்ள தேர்தல் அமைப்பில், சில சமூகப் பகுதியினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க இயலாததால், அந்தக் குறிப்பிட்ட சமூகப் பகுதியினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக, அதிகாரிகளல்லாத உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவெனில், நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள், அரசாங்க நலன்களுக்குத் தொண்டு

செய்வது போன்று, நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளல்லா தோர், தங்கள் வகுப்பினருக்குத் தொண்டு செய்யத் தவறிவிடு கின்றனர். உண்மையில், நியமனம் செய்யப்பட்ட அதிகாரியல்லா தோர், தங்கள் வகுப்பினருக்குத் தொண்டு செய்ய முடியாது. ஏனெனில், பெரும்பாலும், அரசாங்கச் செயல்பாட்டில் செல் வாக்குச் செலுத்துவதன் மூலமாகத் தான், அந்தந்த வகுப்பினரின் நலன்களுக்கு உதவ முடியும்; நிர்வாகத்தைக் கடும் தாக்குதலுக்கு உள்ளடக்கி, எதிர்மறை வாக்குகளின் விளைவுகளை அதற்கு உணர்த்துவதன் மூலமே அது சாத்தியமாகும். ஆனால், அவரது நியமன மதிப்பின் விளைவாகவே, நியமன உறுப்பினருக்கு அந்த வழி அடைக்கப்பட்டு விடுகிறது; அதன் விளைவாக, நியமன உறுப்பினரின் ஆதரவு, நிர்வாகத்திற்கு உறுதியானதால், அது அவரது கோரிக்கையில் அக்கறை செலுத்துவதில்லை; ஆக, சுதந்திரம் இழந்த நியமன உறுப்பினர்,—அவர் எந்த வகுப் பினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக உள்ளாரோ, அந்த வகுப்பினரின் நிலையில் எந்த மாற்றத்தையும் கொணர இயலாத வராக உள்ளார். எனவே, நியமனப் பிரதிநிதித்துவம், பிரதிநிதித் துவமே அல்ல. அது ஒரு கேலிக்கூத்தே.

49. நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகளல்லாதோர், அமைச்ச ராகத் தகுதியுடையவர்களல்லர் என்பது, நியமன அமைப்பின் மற்றுமொரு பெரிய குறைபாடாகும். தத்துவார்த்த ரீதியில், சட்ட சபை உறுப்பினர் ஒருவருக்கு, நிர்வாகத்தின் அமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்படுவதற்கு எந்த வரையறைகளும் இருக்கக் கூடாது. அந்த உரிமை ஒரு வரம்புக்குட்பட்டதாகக் கொண்டாலும், அந்த வரம்பின் நோக்கம், நல்ல திறமையான நிர்வாகத்தின் நலன் களையே கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால், அந்த வரம்பின் நோக்கம் அதுவல்ல என்பது மட்டுமன்றி, வெவ்வேறு வகுப்பினரிடையே, பிரதிநிதித்துவ முறையில் வேறுபாடு இருப் பதால், அந்த வரம்பு, பல்வேறு வகுப்பினரிடையே சமத்துவமற்ற நிலையைத் தோற்றுவித்து, சில வகுப்பினருக்குப் பாதிப்பினை ஏற்படுத்துகிறது; அந்தக் குறைபாட்டிலிருந்து அவர்கள் அகற்றப் பட வேண்டும். வேறு எந்த வகுப்பினரைக் காட்டிலும் தாழ்த்தப் பட்ட வகுப்பினரது மேன்மைக்கு, அரசாங்கத்தின் நேரடிச் செயல் பாடு பெரிதும் தேவைப்படுகிறது. எந்த அரசாங்கச் செயல் பாட்டின் அளவும், நிலைமையை முழுமையாகவும், விரைவாகவும் மாற்றிவிட முடியாது என்பது உண்மையே. இதனை எல்லா வகையிலும் ஏற்றுக் கொண்டாலும் கூட, விவேகமான சட்டங்கள் மக்களிடையே பரப்பவிருக்கும் பெருத்த ஆதாயங்களை எவரும் மறுக்க முடியாது. இந்த எல்லா வகுப்பினரும், உண்மையில், தங்கள் வாழ்வின் தொடக்கத்தையும், முடிவையும், தாங்கள் பரம்பரையாகப் பெற்ற தீமைகள் மற்றும் சமூகக் கஷ்டங்களின் சுமையிலேயே கழிக்கின்றனர்; அதற்குச் சமுதாயமே பொறுப் பானதாகும்; அதனைத் தளர்த்துவதற்குச் சட்டத்தின் மூலம்

எவ்வளவோ செய்ய முடியும். தனிப்பட்ட நபர்களின் வாழ்வினை மாற்றுவதற்குச் சட்டங்கள் ஆற்றும் பயன்கள், உலகெங்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப் பினரைப் போன்றோ, நாட்டின் அமைச்சரவையில் இடம்பெற்றா லொழிய, சமூக முன்னேற்றத்தின் இந்தக் கட்டுப்பாடு அங்கீகரிக்கப் பட மாட்டாது. எனவே, நியமன அமைப்பு என்பது கண்டனத்துக் குரியது. கீழ்த்தர வகுப்பினருக்கு, அவர்தம் நலன்களைக் காட்டி லும், பதவி விழைவினை உருவாக்குவதே இதன் பயனாகும்.

### தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்

50. *வகுப்புத் தேர்வுத் தொகுதி:* இந்த வகுப்புத் தேர்வுத் தொகுதி, மார்லி-மின்டோ சீர்திருத்தங்களின் வாரிசாகும். ஒப்புக் கான ஜோடனை முயற்சியே மார்லி-மின்டோ திட்டமாகும். அதன் கீழ் நடைமுறையில் அல்லாது, பொதுமக்கள் ஆட்சி என்ற தோற்றமளிக்கும் வகையில், தொகுதிகளையும், வாக்குகளையும் ஏற்பாடு செய்து, ஆட்சி செய்யும் தனது எண்ணத்தை அதிகார வர்க்கம் கைவிடாது சட்டசபைகளைத் தோற்றுவிப்பதற்கான சூழ்ச்சியே அது. அத்தகைய திட்டங்களுக்கு, வகுப்புவாதத் தொகுதிகள் மிகவும் பொருத்தமானதாக இருந்தது. ஆனால் மாண்டேகு-செம்ஸ்ஃபோர்டு திட்டம் ஒரு கண்துடைப்பு அல்ல. அது மக்கள் ஆட்சியையே திட்டமிட்டது. அதன் விளைவாக, மேற்கொள்ள வகுப்புத் தொகுதிகளை ஒழிக்க ஆலோசனை கூறப் படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், இந்த வகுப்புகள் எப்பொழுதுமே செலுத்தி வந்த சக்தி வாய்ந்த செல்வாக்கினால், அந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள், அவை தொடர்வதற்குப் பரிந்துரைக்குமாறு தூண்டப்பட்டனர்; அந்தப் பரிந்துரை சவுத் பரோ கமிட்டி (Southborough Committee) யினால் நடைமுறை யாக்கப்பட்டது. இந்த வகுப்புவாதத் தொகுதிகளைத் தக்க வைப் பதற்கான காரணம் எதுவாக இருப்பினும், அவை நீடிப்பதானது, மக்கள் ஆட்சி என்ற உள்ளார்ந்த நோக்கிற்குப் பொருந்தாது. அவற்றின் வகுப்புவாதத் தன்மையே, அவற்றைக் கண்டனம் செய் வதற்குப் போதுமான காரணமாகும். பொது அபிப்பிராயத்திற்கு உகந்த முறையில், பொது நலப் பிரச்சினைகள் தீர்மானிக்கப்படும் சட்டசபை போன்ற விவாத அரங்கில், தீர்மானத்தில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள், ஒவ்வொருவரும் அந்த எண்ணத்தைப் பிரதிபலிக்க வேண்டியது தேவையாகும். சபையில் விவாதிக்கப் படும் பிரச்சினைகளில் தீர்மானமான வாக்கு அளிப்பதற்கு, வேறு எந்த நபரும் தகுதியுடையவராக மாட்டார். ஆனால், வகுப்பு நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவோர், அந்த வகுப்பினரது கருத்துகளையும் தப்பெண்ணங்களையுமே பிரதிபலிப்பர்; அவர் தம் வகுப்பு நலன்களின் எல்லைக்கு அப்பாற்பட்ட பிரச்சினை களுக்கு முடிவெடுப்பதில் பங்கு பெறத் தகுதியற்றவர்களாகக் கருதப்பட வேண்டும். அவர்களது வகுப்புத் தன்மை எவ்வாறிருந்த

போதும், சட்டசபை உறுப்பினர்கள் என்ற அளவில், அவர்களது வகுப்பு நலன்களைக் குறித்த பிரச்சினையோ அல்லது அதற்கு அப்பாற்பட்ட பிரச்சினையோ, எதுவாயினும் எல்லாப் பிரச்சினை களிலும், அவர்கள் வாக்களிக்கும் தகுதி பெற்றவர்களாகின்றனர். எனது கருத்துப்படி, இது மக்கள் ஆட்சிக் கோட்பாட்டிற்குக் குழி பறிப்பதாகும். சபை பகுப்பியல்பு அற்றதாக இருப்பதால், அது அறிந்திராத பகுப்பியல்பான பிரச்சினைகளில், நிபுணத்துவ ஆலோசனை வழங்குவதற்கு, அத்தகைய வகுப்பு நலன்களின் பிரதிநிதிகள் தேவைதான் என்று வாதிடலாம். ஆனால், மாறாக, தன்னாட்சி என்பதே, மக்களாட்சியின் இறுதிக் கோட்பாடு என்பதை நினைவில் கொள்வது அவசியம். அதன் பொருள், எல்லா விஷயங்களிலும் இறுதி முடிவு, மக்கள் ரீதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட நபர்களால்தான் மேற்கொள்ளப்பட வேண்டுமே யல்லாது, நிபுணர்களால் அல்ல. மேலும், அத்தகையோரது ஆலோசனைகள், சட்டசபைக்குப் பயன்படத்தக்கதாக எப்போதுமே இருப்பதில்லை என்பதால், அது தேவையற்றது. அவர்தம் ஆலோ சனைகளெல்லாம், வகுப்புவாத சித்தாந்தத்தின் சொற்சிலம்ப விளக்கங்களாகத்தான் இருக்குமேயல்லாது, விவாதத்திற்குரிய பிரச்சினைத் தீர்வுகாண விழுமிய விளக்கமாக இருக்காது.

51. என்னும், அந்த வகுப்பினரின் நலன்களைப் பாதுகாப் பதற்கோ, அல்லது அவற்றின் சார்பாகச் சபைக்கு ஆலோசனை வழங்குவதற்கோ, அது தேவையென்றாலும் கூட, பொதுத் தேர்வுக் தொகுதிகளின் மூலம், அந்த நலன்கள் போதுமான அளவு பிரதி நிதித்துவம் பெறாது என்பது நிரூபிக்கப்படவில்லை. அவர்களது நலன்களுக்குப் பிரதிநிதித்துவம் இருக்குமென்றே, நம் வசமுள்ள உண்மைகள் காட்டுகின்றன. இனாம்தார்களின் உதாரணத்தை எடுத்துக் கொண்டால், அவர்களுக்கான சிறப்பு தொகுதிகளின் மூலம் அவர்களுக்கு மூன்று இடங்கள் கொடுக்கப்பட்டிருந்தும், பொதுத் தேர்வுத் தொகுதியின் மூலம் அவர்கள் 12 இடங்களைப் பிடித்துள்ளனர். அது மட்டுமின்றி, இந்தச் சபையிலுள்ள இதர நிலச்சுவான் உறுப்பினர்களுடனான ஒருமைப்பாட்டு உணர்வுடன் அவர்கள் சில மாதங்களுக்கு முன்னர் தங்கள் வகுப்பினரின் தலைவருக்கு, ஓர் அமைச்சகப் பதவி வேண்டும் என்று கோரும் அளவிற்குத் தங்களை எண்ணிக்கையில் பலம் வாய்ந்தவர்களாகக் கருதினர். தவிரவும், வகுப்புவாதத் தொகுதிகள் இல்லையெனில், சபையில் இந்த வகுப்புகளுக்குப் பிரதிநிதித்துவம் இராது என்பதும் உண்மையன்று. அந்த வகுப்பின் ஒரு அங்கத்தினராலும், அவர் பொதுத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும், தகுந்தவாறு பாதுகாக்கப்படும். சட்டசபையில் பதவியேற்கும் ஓர் உறுப்பினர், தனது தொகுதியை நேரடியாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார் என்ற போதும், அவர் மறைமுகமாக ஓரளவிற்குத் தனது வகுப்பையும் பிரதிநிதித்துவப்படுத்தவே செய்கிறார். நடை முறைப் போக்கின்படி பார்த்தால், ஓர் உறுப்பினர் மறைமுக

மாகத் தன்னையே பிரதிநிதித்துவப்படுத்தும் இந்த நோக்கு, தடுக்கப்பட அல்லது கட்டுப்படுத்தப்பட அல்லது நிராகரிக்கப்பட முடியும் என்றாலும் கூட, அது நேரடிப் பிரதிநிதித்துவத்தை நிச்சய மாகப் பின்னணிக்குத் தள்ளி விடுகிறது. வர்த்தக சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் ஐரோப்பிய பெருமகனார், அவர் வர்த்தக சபையினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதால், வர்த்தக நலன்களை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துவார், ஐரோப்பிய இனத்தவரின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார் என்று எவரும் நம்ப முடியாது. தனது தொகுதியைக் காட்டிலும், ஒரு மனிதனின் சுய உணர்வு அவனுக்கு மிக அருகிலேயே இருப் பது இயற்கையே. ஒரு மனிதனின் தோல், அவனது சட்டையைக் காட்டிலும் நெருக்கமாக இருப்பதாக ஒரு கூற்று உண்டு; சட்ட சபை உறுப்பினர்களின் நல்லெண்ணத்திற்கு ஊறு விளைவிக்காத வகையில் இதனை நான் எடுத்துரைக்கிறேன். ஒரு காலத்தில், கப்பல் வணிகம், கம்பளி வணிகம், லினன் வணிகம் ஆகியவற் றிற்கு, காமன்ஸ் சபையில் தனித்தனிப் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று கோரிய ஆங்கிலேய மக்களை, அத்தகைய வகுப்புவாதத் தொகுதிகளைக் கைவிடுமாறு இந்த உணர்வுதான் வழி செய்தது. மற்றொரு நாட்டில் கைவிடப்பட்டதோர் அமைப்பு இந்தியாவில் ஏன் தொடர வேண்டுமென்பதைப் புரிந்து கொள் வது கடினமாக உள்ளது. அது இந்த வகுப்புகளின் நலன்களுக்கு அவசியமுமல்ல; மற்றும், அரசியல் அமைப்புக்கே தீமை பயப்பது மாகும். ஒரே பிரச்சினை என்னவெனில், வர்த்தக மற்றும் தனி வகுப்புகளைச் சேர்ந்த நபர்கள், பொதுத் தொகுதிகளின் மூலம் தேர்தலில் இடங்களைப் பெற முடியுமா என்பதே. தேர்தல் போட்டியில், இதர வகுப்பினருக்குத் தடையாக இருக்கும் எதையும் என்னால் கூறமுடியவில்லை. பொதுத் தேர்தலில் சர்தார்களும், இனாம்தார்களும் பெற்ற வெற்றியிலிருந்தே அதற்கு எந்தத் தடை களும் கிடையா என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இனாம்தார் களும், சர்தார்களும் வெற்றி பெற்றுள்ள போது, ஏன், வர்த்தக மற்றும் தொழில்துறைப் பிரதிநிதிகள் வெற்றி பெற முடியாது என்பதற்கான காரணம் எதுவுமில்லை.

52. *ஒதுக்கப்பட்ட தொகுதிகள் :* ஒதுக்கப்பட்ட தொகுதி களுக்கு எதிராக மூன்று மறுப்புகள் எழுப்பப்படலாம். ஒன்று, பெரும்பான்மையினரது, தேர்தலுக்கான சாத்தியத்தை அது உத்தர வாதம் செய்கிறது. மராத்தியர்களும், மாநிலத்திலுள்ள மராத்தி பேசும் மக்களில் பெரும்பான்மையினரும், எவ்வித அரசியல் பாதுகாப்பும் தேவையற்றவர்கள் என்பது உண்மையே.. ஆனால், மறைந்திருக்கும் தனது வலிமையையும், சக்தியையும் பிரயோகிக்க முடியும் என்ற உணர்வுடையோர்களுக்கும், தனது வலிமையையும் சக்தியையும் அறிந்தோர்களுக்குமிடையே பெருத்த வேறுபாடு உள்ளதென்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அந்த அதிகாரம் அல்லது சக்தி பற்றி மராத்தியர்களோ அல்லது அவர்

தம் நேச இணங்களோ உணரவில்லை என்ற உண்மையே, தேர்தலில் பங்கேற்றப் பல்வேறு பிரதிநிதிகளிடையே, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட தொகுதிகளிலிருந்து அவர்கள் வாக்களித்த விதத்திலிருந்தே நிரூபணமாகின்றது. அத்தகைய ஒவ்வொரு தொகுதியிலும், இதர வகுப்பு வாக்காளர்களைக் காட்டிலும், மராத்திய வாக்காளர்கள் பெரும்பான்மையினராயிருந்தனர். எனினும், 1923 மற்றும் 1926 தேர்தல்களின் போது, அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஏழு இடங்களில், அவர்களுக்கான தனித் தொகுதிகளாக அவை இருந்ததால் மட்டுமே, மூன்று இடங்களை அவர்களால் கைப்பற்ற முடிந்தது. வாக்காளர் பட்டியலில் உயர்ந்த இடத்திலுள்ள வகுப்பினரின் வேட்பாளர்கள், கீழ்மட்டத்திற்கு அநேகமாக மூழ்கும் நிலைக்குத்—தள்ளப்பட்டது உண்மையில் வித்தையே. தான் பெற்றுள்ள சக்தி குறித்து சற்றும் ஓர்மையில்லாது, வெளியிலிருந்து அதன் மீது செயல்படும் செல்வாக்கிற்கு அது ஆட்பட்டதற்கானதொரு குறியீடே அந்த விந்தையான உண்மை.

53. தனித்து ஒதுக்கப்படும் தொகுதி அமைப்பால், குறிப்பாகப் பாதிக்கப்படும், உயர் வகுப்புகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வலியுறுத்தும் மறுப்புக்கான இரண்டாவது காரணமாவது ஒரு நேரடித் தேர்தல் போட்டியில், தங்களுக்கு வெற்றிக் கிடைப்பதற்கான வாய்ப்பினை அது அனுமதிப்பதில்லை என்பதே. கீழ்மட்ட வகுப்பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, மேல் வகுப்பினரது உரிமைக்கு, இந்த அமைப்பு ஒரு தடங்கலாக இருப்பது உண்மைதான். ஆனால், ''பிரதிநிதியாக இருக்கும் உரிமை''யும் ''பிரதிநிதித்துவப்படுத்தப்படும் உரிமை''யும், ஒரு வரைமுறைக்குக் குட்படாத உரிமையாக இருப்பதற்கு ஏதேனும் காரணம் உண்டா என்ன? வாக்களிக்கும் உரிமைக்கு வரம்பு கட்டுவதற்கான காரணங்களைக் கண்டுபிடிப்பதற்குத் தற்காலத்திய அரசியல்வாதிகள் தங்களது அறிவாற்றல் அனைத்தையும் செலவிட்டுள்ளனர். என்னுடைய அபிப்பிராயப்படி, பிறரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு ஒரு வேட்பாளருக்குள்ள உரிமைக்கு வரம்பு கட்ட நாம் முயல்வதற்கான, பெரும் அவசியம் உள்ளது. பிரதிநிதித்துவச் செயல்பாட்டில் உள்ளார்ந்துள்ள சிக்கல்கள், அதனைப் பெறுவதற்கான நிலையை வரையறுத்துக் கூறாததற்கு எந்தக் காரணமுமில்லை. சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உரிமைக்கு வரம்பு கட்டுவதானது, உதாரணமாக, ஒரு உள்ளாட்சி நிறுவனத்தில் குறிப்பிட்ட ஆண்டுகள் சேவை செய்திருப்பதையோ, அந்த நிபந்தனைக்கு உட்படாதோருக்கு அந்த உரிமையை மறுப்பதோ, முன்னர் சொன்ன உரிமையை மீறுவதாகாது. சட்டசபையில் பிரதிநிதியாக இருப்பதற்கான வேட்கையை ஏற்றுக் கொள்ளும் முன்னர், அதற்கான உளச்சார்பும் அனுபவமும் மெய்ப்பிக்கப் படும் அளவுக்கு, சட்டசபையின் சேவை முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதுவது முற்றிலும் நியாயமானதேயாகும். கீழ்வகுப்

பினரைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு, உயர் வகுப்பினரது உரிமைக்கு வரம்பு கட்டும் வாதமும், இதன்பாற்பட்டதே. அவ்வாறு பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமையை ஏற்பதற்கு முன்னர், ஒரு குறிப்பிட்ட சமூக நோக்கு இருக்க வேண்டும் என்பதே ஒரு நிபந்தனையாகக் கொள்ளப்படுகிறது. அத்தகைய நிபந்தனை தேவையற்றது என்றும் கூறிவிட முடியாது. ஏனெனில், தான் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பும் மக்கட் பகுதியினர் குறித்த ஒரு வேட்பாளரின் சமூக நோக்கினைக் காட்டிலும், உளச்சார்பும், அனுபவமும் அத்துணை முக்கியமானதல்ல. பார்க்கப்போனால், சரியான சமூக நோக்கும், அதனால் வழிநடத்தப்படும் உணர்வுமில்லையெனில், வெறும் உளச்சார்பும், அனுபவமும் நாச விளைவுகளையே தோற்றுவிக்கும். கீழ்மட்ட வகுப்பினரைக் குறித்த உயர் வகுப்பினரது சமூக நோக்கு, சரியானதல்ல என்பதில் சந்தேகமில்லை. அறிவு சார்ந்த வகையில், இந்தியாவிலேயே மிகச் சக்தி வாய்ந்த வகுப்பினர், உயர் வகுப்பினரே என்று கூறப்படுவது அவர்களுக்குப் பெருமை தருவதேயாகும். ஆனால், அவர்கள் தங்களது அறிவாற்றலை, கீழ் வகுப்பினரது சேவைக்குப் பயன்படுத்தவில்லை என்பதும் அதே அளவு உண்மையே. அது மட்டுமின்றி, வேறுபட்ட தரத்தினைச் சேர்ந்தவர்களையோ, அல்லது தமது இனத்திலிருந்து மாறுபட்ட இனத்தவரையோ சேர்ந்த மக்களை அவர்கள் அசட்டை செய்து, வெறுத்து, ஒதுக்கிக் கைவிட்டு விடுகின்றனர். எந்த வகுப்பினரும் மற்றொரு வகுப்பினரை, அதிலும் இந்தியாவிலுள்ள உயர் வகுப்பினர் ஆட்சி செய்ய உரிமை கிடையாது. அவர்களது நடத்தைப் படிவத்தின் படி, அவர்கள் தங்களது சொந்தத் தவறான கருத்துக்களில் ஊறிய, பெரும் தனித்துவ வகுப்பினராகவும், பொது மக்களின் ஆவல்களைப் பகிர்ந்து கொள்ளாதவர்களாகவும், அவர்களுடன் தங்களுக்கு எந்த உறவும் இன்றி, தங்களது நலன்களுக்கு மாறுபட்ட நலன்களைக் கொண்டவர்களாகவும், கருதிக் கொள்கின்றனர். எனவே, பிறரைப் பிரதிநிதித்துவப்படுத்த விழையும் ஒரு வேட்பாளர், அவர்களது குறிக்கோள்களையும், நோக்கங்களையும், இலக்குகளையும் பகிர்ந்து கொள்பவராக இருக்க வேண்டும் என்று கூறுவது நியாயமற்றதன்று.

**54.** ஒரு தரமான வேட்பாளரை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தரங் குறைந்த வேட்பாளர் இடத்தைப் பிடிப்பதன் மூலம் திறமையின்மைக்கு வழி வகுக்கிறது என்பது ஒதுக்கப்பட்ட தனித்தொகுதி அமைப்புக்கு எதிராகக் கூறப்படும் மூன்றாவது எதிர்ப்பு வாதமாகும். இந்த விமர்சனமும் உண்மையே. இதிலும் கூட, வேறு சில விஷயங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். முதற்கண், பேராசிரியர் டிஸ்ஸி, (Professor Dicey) சரியானபடி கூறியுள்ளதைப் போன்று, ''அறிவுத் திறனில், சாத்தியமான அளவில் மிகச் சிறந்த நாடாளுமன்றத்தை உருவாக்குவது அரசியல் சட்ட ஏற்பாட்டின் பிரதான நோக்கம் அல்ல. தேசத்திலுள்ள பொது

மக்களைக் காட்டிலும், அறிவுத் திறனில் மிக மேம்பட்டதொரு நாடாளுமன்றத்தை உருவாக்குவதற்கான முயற்சி, பிரதிநிதித்துவ அரசாங்கக் கோட்பாட்டிற்கு ஒவ்வாததாகும்', எனினும், அறிவுத் திறனற்ற வேட்பாளர்கள், சட்டமன்ற இடங்களைப் பிடிப்பது ஒரு நஷ்டம்தான் என்றாலும், பின்தங்கியவரும் பிறரது இயற்கையான குறிக்கோள் நிறைவு செய்யப்படுவதன் மூலம் அந்த இழப்பு ஈடு செய்யப்படுகிறது. உயர் வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், மிகச் சில்லறை விஷயங்களில் ஈடுபடுவர் என்பதோடு, தேச விஷயங் களைக் காட்டிலும், பெரும்பாலும் தங்களது சொந்த வகுப்பினரது விஷயங்களிலேயே கவனம் செலுத்துவர். அவர்களது வாழ்க்கை மிகவும் சுறுசுறுப்பானதாகவும், வளமாகவும் உள்ளது; அந்த வகுப்பினைச் சேர்ந்த தனி நபர்களோ தன்னிறைவும், சுய திருப்தி யும் உடையவர்களாக இருப்பதால், அவர்களுக்குச் சமூக முன் னேற்றம் என்பது எப்போதேனும் தோன்றும் ஒரு மறைந்து விடும் சிந்தனையாகவே உள்ளது. ஆனால், கீழ் வகுப்பைச் சேர்ந்தவர் கள் எப்பொழுதும் தங்களது துன்பத்தை நினைவில் கொள் வதோடு, ஒரு சமூக மாற்றத்தினால் மட்டுமே அதனை காண முடியும் என்று அறிந்துள்ளனர். கூட்டுச் செயல்முறையின் தேவை களினால் விளையும் பரஸ்பரச் சார்பு உணர்வானது, தாராளத் தன்மைக்கு வழிவகுக்கிறது; ஆனால், பயிற்சியற்ற அதிகார உணர் வும், வளர்ச்சியுறாத செயல் திறனும் ஆசைகளைத் தோற்றுவிக் கின்றன. முன்னேற்றத்திற்கான இயக்காற்றல் நோக்கினை நாம் கீழ்மட்ட வகுப்பினரிடையே தான் காண முடிகிறது. பிற்படுத்தப் பட்ட ஹிந்து வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்வதானது, சக்தி மிக்க சமூக ஆற்றலைத் தேசியப் பணியில் ஈடுபடுத்துகிறது; அதன்றி, எந்த நாடாளுமன்ற அரசாங்கமும் வறியதாகவே இருப் பதாகக் கருத வேண்டும்.

55. வகுப்புவாத தேர்தல் தொகுதிகள்: வகுப்பினர்களுக்கு, ஓரளவு உத்தரவாதமான பிரதிநிதித்துவம் அவசியமானதும், தவிர்க்க முடியாததும் ஆகும்; அவர்களது நலன்களை முன் னிட்டே வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள் ளன என்பது விவாதத்திற்கு அப்பாற்பட்டதாகும். என்றாலும் கூட, வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகள் மூலமாகத் தான் வகுப்புப் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமா, என்ற கேள்வி, இன்னும் சில காலத்திற்கு எழுப்பப்படும் திறந்த கேள்வியாகவே இருக்கும். நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், அண்மையில் நிகழ்ந்த வகுப்புவாதத் தகராறுகளுக்கு, வகுப்புவாதத் தேர்தல் தொகுதி களுக்கும், வகுப்புவாதக் குழப்பங்களுக்கும் எத்தகைய நேரடித் தொடர்பு உள்ளது என்பதை எவரும் உடனடியாகக் காண முடிய வில்லை. அதற்கு மாறாக முஸ்லீம்களது கோரிக்கையைப் பூர்த்தி செய்ததன் மூலமாக, வகுப்புவாத தேர்தல் தொகுதிகள், அதிருப் திக்கும், வெறுப்புணர்வுக்குமான ஒரு காரணம் அகற்றப்பட்டு விட்டது என்றும் வாதிடப்படுகிறது. ஆனாலும், வகுப்புவாதத்

தேர்தல் தொகுதிகள், வகுப்புவாதத் தகராறுகளை மட்டுப்படுத்த உதவவில்லை என்பதும், உண்மையில் அவற்றைத் தீவிரப்படுத்த உதவியுள்ளது என்பதும் உண்மையேயாகும். வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகள், வகுப்புவாத உணர்ச்சியைத் தீவிரப்படுத்த வழி வகுத்துள்ளது; இரு வகுப்புகளைச் சேர்ந்த தலைவர்களையும், விருப்பு வெறுப்பற்று ஒருவுர்க்கொருவர் பொறுப்பு வாய்ந்தவர் களாக ஆக்கவில்லை; அதன் விளைவாக, தத்தம் மக்களை அமைதியை நோக்கி இட்டுச் செல்வதற்குப் பதிலாக, கும்பலின் கணநேர உணர்ச்சி வெறிகளைப் பின்பற்றுமாறு அவர்களை ஆக்கியுள்ளது.

56. வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளைத் தக்க வைத்துக் கொள்ள வலியுறுத்தும் முஸ்லீம்கள், மூன்று காரணங்களுக்காக, அந்த நிலையை எடுத்துள்ளனர்.

57. முதற்கண், இதர வகுப்பினர்களது நலன்களைக் காட்டிலும், முஸ்லீம் வகுப்பினரின் நலன்கள் தனிப்பட்டவை என்றும், அந்த நலன்களைப் பாதுகாத்துக் கொள்ள, அவர்களுக்குத் தனியான தேர்தல் தொகுதிகள் இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். தனிப்பட்ட நலன்களைப் பாதுகாக்கத் தனிப்பட்ட தேர்தல் தொகுதிகள் அவசியம் தானா என்ற கேள்வி ஒருபுற மிருக்க, இதர வகுப்பினரது நலன்கள் அல்லாத சில தனிப்பட்ட நலன்கள் ஏதேனும் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். மதத்துறையினின்றும் மாறுபட்ட, சமயச் சார்பற்ற துறையில், ஒவ்வொரு விஷயமும், அனைவருக்கும் பொதுவான அக்கறையுள்ள விஷயமே ஆகும். வரிகள் கொடுக்கப்பட வேண் டுமா, கூடாதா, அப்படியெனில் அது எந்த விகிதத்தில், தேசியச் செலவீடு, இதர எந்தத் துறையைக் காட்டிலும் எந்த ஒரு குறிப் பிட்ட துறைக்குத் திசைப்படுத்தப்பட வேண்டுமா; கல்வி இலவச மாகவும், கட்டாயமாகவும் ஆக்கப்பட வேண்டுமா; அரசாங்க நிலங்கள் வரம்புக்குட்பட்ட குத்தகையில் அல்லது உரிமைக் குத்தகையில் விடப்பட வேண்டுமா; தொழில்களுக்கு அரசு மான்யம் வழங்கப்பட வேண்டுமா; ஒரு குறிப்பிட்ட பகுதியில் அதிகக் காவல் துறையினர் இருக்க வேண்டுமா; நோய், வேலை யின்மை, அல்லது மரணத்திற்கான சமூகக் காப்பீட்டுத் திட்டத் தின் மூலம், தொழிலாள வர்க்கத்திற்கு வறுமைக்கு எதிராக ஏதேனும் செய்யப்பட வேண்டுமா; கௌரவ நீதிபதிகள் நியமனத் தின் மூலம், நீதித்துறைச் செயல்பாடு, மேம்படுமா; மேலும் சிறந்த பயன்களைப் பெறுவதற்கு மருத்துவ நெறிகளும், சட்ட நெறிகளும் மாற்றப்பட வேண்டுமா; என்பவை வழக்கமாகச் சபையின் முன் எழுப்பப்படும் பிரச்சினைகளாகும். இந்தப் பிரச்சினைப் பட்டிய லில், எந்தவொரு பிரச்சினையும் முஸ்லீம் வகுப்பினருக்கு மட்டுமே அக்கறையுள்ள பிரச்சினை என்று குறிப்பிடப்பட முடி யுமா? கல்வி மற்றும் பொதுச்சேவை குறித்து முஸ்லீம் வகுப்பினர்

குறிப்பிட்ட ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது உண்மைதான். ஆனாலும் கூட, இந்தப் பிரச்சினைகளில், குறிப்பான முக்கியத் துவம் அளிக்கும் வகுப்பு, முஸ்லீம் வகுப்பு மட்டுமே அல்ல என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டும். இந்தப் பிரச்சினை யில், பிராமணரல்லாத வகுப்பினரும், தாழ்த்தப்பட்ட வகுப் பினரும், அதே அளவு ஈடுபாடு கொண்டுள்ளனர் என்பது, பம்பாய்ச் சட்ட மேல்சபையில், பல்கலைக்கழகச் சீர்திருத்த மசோதா விவாதத்திற்கு வந்தபோது, மூன்று வகுப்பினரும், ஒன்று பட்ட முயற்சியை மேற்கொண்டனர் என்பதிலிருந்து தெளி வாகிறது. ஆகவே, முஸ்லீம் வகுப்பினருக்குத் தனிப்பட்ட நலன் கள் உள்ளன என்பது ஒரு கட்டுக்கதையேயாகும். இருப்பது என்னவெனில், தனிப்பட்ட நலன்கள் அல்ல; ஆனால் சில குறிப் பிட்ட விஷயங்களில் சிறப்பான ஈடுபாடே ஆகும்.

58. எனினும், தனிப்பட்ட நலன்கள் உள்ளன என்று வைத்துக் கொண்டாலும் கூட, அவை, பொதுத் தேர்தல் தொகுதிகளையும், ஒதுக்கப்பட்ட இடங்களையும் காட்டிலும், தனித் தேர்தல் தொகுதி களினால் மேன்மை அடையுமா? எந்தச் சிறுபான்மையினரின் தனிப்பட்ட அல்லது விசேஷ நலன்கள், தனிப்பட்ட தேர்தல் தொகுதிகளைக் காட்டிலும், பொதுத் தேர்தல் தொகுதி அல்லது ஒதுக்கப்பட்ட இடங்களின் மூலம் தான் மேம்படுத்தப்பட முடியும் என்பதே எனது அழுத்தந்திருத்தமான பதிலாகும். முக்கியமாகப் பொறுப்பற்ற தீவிரவாதிகள் இருப்பதால், எந்த ஒரு நலனுக்கும் ஊறு விளையக் கூடும் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். எனவே, நாட்டின் சட்ட சபைகளிலிருந்து அத்தகைய நபர்களை அகற்று வதே நோக்கமாக இருக்க வேண்டும். நாட்டின் சட்டசபைகளி லிருந்து இரு வகுப்புகளையும் சேர்ந்த பொறுப்பற்ற நபர்கள் வீற்றிருப்பதை அகற்றி விட்டால் ஹிந்துக்களின் வாக்குகளில் முஸ்லீம் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், முஸ்லீம் வாக் காளர்களால் ஹிந்து வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் மிகச் சிறந்த அமைப்பானது, ஆகும். வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளைக் காட்டிலும், கூட்டுத் தேர்தல் தொகுதிகள் அமைப்பு வரவேற்கத்தக்கது; ஏனெனில், தனிப்பட்ட தேர்தல் தொகுதி களைக் காட்டிலும், அது நல்ல பயன்களை ஏற்படுத்தும். எவ்வா றேனும், தனிப்பட்ட தேர்தல் தொகுதி அமைப்பினைக் காட்டி லும், கூட்டுத் தேர்தல் தொகுதிகளின் கீழ், சிறுபான்மையினர் பெருத்த நன்மை பெறுவர் என்பதை உறுதியாகக் கூறத்தான் வேண்டும். தனிப்பட்ட தேர்தல் தொகுதிகளில், சிறுபான்மை யினர், தங்களுக்குரிய சொந்தப் பிரதிநிதித்துவ ஒதுக்கீட்டைப் பெறுகின்றனர்; அதற்கு மேல் ஏதும் இல்லை. சபையில் மீதி யுள்ளவர்கள் அதற்கு எந்தக் கடப்பாடும் காட்டுவதில்லை; எனவே, சிறுபான்மையினரின் விருப்பங்களை நிறைவு செய் வதற்குத் தூண்டப்படுவதில்லை. இவ்வாறாக, சிறுபான்மையினர் தங்களது சொந்த ஆதாரங்களையே நம்ப வேண்டியுள்ளது; எந்தப்

பிரதிநிதித்துவ அமைப்பும், சிறுபான்மையும், பெரும்பான்மை ஆக்கிவிட முடியாது என்பதால், அது அமுங்கி விடுகிறது. அதற்கு மாறாக, கூட்டுத் தொகுதிகள் மற்றும் ஒதுக்கப்பட்ட இடங்களின் விஷயத்தில், சிறுபான்மையினர், தமக்குரிய பிரதிநிதித்துவ ஒதுக் கீட்டைப் பெறுவதோடு மட்டுமின்றி, மேலும் கூடுதலாகச் சில வற்றைப் பெறுகின்றனர். எப்படியெனில், பெரும்பான்மையைச் சேர்ந்த ஒவ்வோர் உறுப்பினரும், சிறுபான்மை அங்கத்தினராக இல்லையெனினும், சிறுபான்மையினரின் ஓரளவு வாக்குகளின் பலத்தில் தான் வெற்றி பெற்றுள்ளனர்; எனவே, அவர்களும் சிறுபான்மையைச் சேர்ந்த உறுப்பினர் ஆகிறார். என்னுடைய கருத்துப்படி, இது சிறுபான்மையினருக்கு மிகப் பெரும் ஆதாய மாகும்; சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்கு, தனிப்பட்ட தேர்தல் தொகுதிகளைக் காட்டிலும், கலப்புத் தேர்தல் தொகுதிகளே மேம்பட்டது ஆகும். மேல்சபையானது, போப் பாண்டவரைத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் கூட்டப்படும். மத குருக்களின் கூட்டம் போன்றும், அது சில மதப் பிரச்சினைகளைத் தீர்மானிப்பதற்காகக் கூட்டப்பட்டதாகவும், முஸ்லீம் சிறுபான்மை யினர் எண்ணுவதாகத் தோன்றுகிறது. அது உண்மையாக இருக் கும் பட்சத்தில், அவர்கள் வலியுறுத்துவதைப் போன்று, ஒரு சில ஆனால் ஆற்றல் மிக்கவர்களைச் சபையிலிருத்துவது விவேகமான செயல்பாடாக இருக்கக் கூடும். ஆனால், அவை கவுன்சில் (council) என்பது ஒரு மதக் கூட்டம் அல்லவென்பதையும், மதச் சார்பற்ற பிரச்சினைகளைத் தீர்மானிப்பதற்காகக் கூட்டப்படும் மதச்சார்பற்ற நிறுவனம் என்பதையும் அந்த வகுப்பினர் இப் போதாவது உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய பிரச்சினை களுக்குத் தீர்வு காணப்படும் போது, முடிவு பலருக்கும் சாதக மாகவே இருக்கும். அப்படியிருக்கும்போது, தங்களது சொந்த உறுப்பினர்களோடு, பிறரையும், தனது கோரிக்கைகளுக்கு வற் புறுத்தும் ஓர் அமைப்பு, சிறுபான்மையினரின் நலன்களுக்கு உகந்ததல்லவா?

**59.** தனித்துவத் தொகுதிகள் கோருவதற்கான இரண்டாவது காரணம், முஸ்லீம்கள், தாங்கள் ஒரு தனி வகுப்பினர் என்றும், மதத்தில் மட்டுமன்றி, அவர்களது வரலாறு, மரபுகள், கலாச் சாரம், சொந்தச் சட்டங்கள், சமூகப் பழக்கங்கள் மற்றும் எந்தப் பொதுவான சமூகப் பிணைப்புகள், பிரிவுகள், வசதிகள் இவை களினால் சற்றும் பாதிக்கப்படாததொரு, முற்றிலும் வேறுபட்ட தொரு வாழ்வு குறித்த கண்ணோட்டம் ஆகியவற்றில் இதர வகுப்பினரிடமிருந்து மாறுபடுவதாகக் கூறுகின்றனர். இந்த நாட் டில் பல நூற்றாண்டுகளாக அவர்கள் வாழ்ந்து வந்த போதும், அவர்கள் ஒரு தனித்துவ மக்களே; தங்களை அவ்வாறே அவர்கள் கருதிக் கொள்கின்றனர். இந்தக் கருத்தினடிப்படையில், இதர வகுப்பினருடன், பொதுவான தொகுதிகளைப் பகிர்ந்து கொள்ளு மாறு அவர்கள் வற்புறுத்தப்படுவதாகவும், அத்தகைய அரசியல்

கலப்பானது அவர்களது வகுப்பின் தனித்தன்மைக்கு ஊறு விளை விப்பதாகவும் அவர்கள் வாதிடுகின்றனர். இந்த யூகம் எந்த அளவிற்கு, உண்மைக் காட்சியை எடுத்துக் காட்டுகிறது என்ற விஷயத்திற்கு நான் செல்லவில்லை. என்னுடைய கருத்துப்படி அந்தக் கருத்து, வாழ்வுடன் ஒத்ததல்ல என்று மட்டுமே கூறுவது போதுமானதாகும். அதனை உண்மை என்றே ஏற்றுக் கொண் டாலும், அந்த வகுப்பினர் ஏற்றுக் கொள்ளும் இலட்சியம், முஸ்லீம் வகுப்பினரது தனித்தன்மையைப் பாதுகாப்பதுதான் என்று கொண்டாலும் கூட, அதற்கு, வகுப்புவாதத் தொகுதிகள் தான் தேவைப்படுவ்து என்பது எவ்வாறு என்று ஒருவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. பற்பல இன மக்களை ஒரு பொதுவான அரசாங்கத்தின் கீழ்க் கொணர முனையும் நாடு இந்தியா மட்டுமே யல்ல. ஆங்கிலப் பேரரசிலுள்ள இரண்டு நாடுகளான கனடா வும், தென்னாப்பிரிக்காவும், பல்வேறு இன மக்களைக் கொண் டவை; அவை, பொதுவான அரசாங்க அமைப்பினை உருவாக்க முனைந்து வருகின்றன. இந்தியாவிலுள்ள ஹிந்துக்கள் மற்றும் முஸ்லீம்களைப் போன்றே, தென்னாப்பிரிக்காவில் பிரிட்டி ஷாரும், டச்சுக்காரர்களும், கனடாவிலுள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு இனத்தவரும், தங்களுக்குரிய வேறுபட்ட கலாச்சாரத்தைக் கொண் டுள்ள இரண்டு தனிப்பட்ட வகுப்பினரேயாவர். ஆனால், தேர்தல் நோக்கிற்காக, இரண்டு வகுப்பினரும், பொதுவான தொரு வட்டத்தில் செயல்படுவது, தங்களது தனித்துவத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று கூறி, பொதுத் தேர்தல் தொகுதி களுக்கு எதிர்ப்புக் காட்டியதாகத் தெரியவில்லை. பேரரசிற்கு வெளியேயும், பல்வேறு வகுப்பினர், பொதுவான தேர்தல் தொகுதிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான உதாரணங்கள் பல உள்ளன. போலந்தில், போலிஷ், ருதேனியன், யூதர்கள், வெண் ரஷ்யர்கள், ஜெர்மானியர்கள், லிதுவேனியர்கள் ஆகிய இனத்த வர் உள்ளனர். லாத்வியாவில், லாத்வியர்கள், ரஷ்யர்கள், யூதர் கள், ஜெர்மானியர்கள், போலிஷ் லிதுவேனியர்கள், எஸ்தோனி யர்கள் ஆகியோர் உளர். எஸ்தோனியாவில், ஜெர்மானியர், யூதர்கள், ஸ்வீடிஷ், ரஷ்ய, லாத்விய, தார்த்தார் இனத்தவர் உள்ள னர். செக்கோஸ்லாவாக்கியாவில், செக், ஸ்லாவக், ஜெர்மன், மாக்யார், ருதேனியர்கள், யூதர்கள், போலிஷ் ஆகிய இனத்தவரும், ஆஸ்திரியாவில், ஜெர்மன், செக் மற்றும் ஸ்லோவனியர்களும் உள்ளனர்; ஹங்கேரியில் ஹங்கேரிய, ஜெர்மன், ஸ்லாவக், ருமேனிய, ருதன்னிய, குரோட்டியன் மற்றும் செர்பிய இனத்தவர் வாழ்கின்றனர். இந்த எல்லாக் குழுக்களும், வெறும் வகுப்புகள் மட்டுமே அல்ல. தங்களுக்கே சொந்தமான, உயிரோட்டமுள்ள தனித்தன்மைகளைக் கொண்ட தேசிய இனங்கள்; ஒரு பொது வான அரசாங்கத்தின் கீழ், ஒருவர்க்கொருவர் அருகருகே வசித்து வருபவர்கள். இருந்தும் கூட, அவர்களில் எவருமே, தங்களது தனித்துவம் அழிந்து விடும் என்ற காரணத்திற்காக, பொதுத் தேர்தல் தொகுதிகளில் பங்கேற்க எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

60. இந்த வாதத்தின் பயனின்மையைக் காட்டுவதற்கு முஸ்லீம் அல்லாத இனத்தவர்களின் உதாரணங்களை எடுத்துரைப்பது தேவையற்றது. உலகின் இந்த பகுதிகளில் முஸ்லிம்கள் சிறு பான்மையினர் பலருள்ளனர்; அவர்களில் எவருமே, இதர வகுப் பினருடன் அரசியல் தொடர்பு வைத்துக் கொள்வது தொற்றிக் கொள்ளும் கிருமியாக எண்ணி, தங்களது தனித்துவத்தைப் பாது காத்துக் கொள்ள, வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகள் அவசியம் என்று கருதவில்லை. முஸ்லிம்கள் சிறுபான்மையினராக உள்ள நாடு இந்தியா மட்டுமே அல்ல என்பது போதுமான அளவிற்குத் தெரிந்திருக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதே நிலையில் அவர்கள் உள்ள, இதர நாடுகளும் உள்ளன. அல்பேனியாவில் முஸ்லீம்கள் ஒரு பெரும் சமூகத்தவராவர். பல்கேரிய, கிரீஸ், ருமேனியாவில் அவர்கள் சிறுபான்மையினராவர். யுகோஸ்லாவி யாவிலும், ரஷ்யாவிலும் அவர்கள், மிகப் பெரும் சிறுபான்மை யினராவர். அந்த நாடுகளிலெல்லாம், தனிப்பட்ட தேர்தல் தொகுதிகள் இல்லாமலே முஸ்லிம்கள் வாழ்கின்றனர் என்பது அரசியல் சரித்திரம் படித்த அனைவருக்கும் தெரிந்ததே; அது மட்டுமன்று. ஒரு குறிப்பிட்ட பிரதிநிதித்துவ வீதாசாரம் இல்லா மல் கூட அவர்கள் வாழ்கின்றனர். என்றாலுங்கூட, இந்தியா, இன்னமும் முழுமையான மதச் சார்பின்மைக் கட்டத்தை எட்டாத தால், முஸ்லீம் இனத்தவருக்குப் போதுமான பிரதிநிதித்துவம் உத்தரவாதம் செய்யப்பட வேண்டுமென்ற ஒரு பொதுக் கருத்து, இங்கு நிலவுகிறது. இல்லையெனில், பெருவாரியானவர்களின் மத வெறுப்பின் காரணமாக, அரசியல் துறையில் அவர்கள் முற்றிலுமாக மறைக்கப்பட்டு விடுவர் என்று கருதப்படுகிறது. உலகின் இதர பகுதிகளிலுள்ள முஸ்லீம் சிறுபான்மையினர், உறுதியான ஒதுக்கீட்டு வசதியின்றியே தங்கள் விவகாரங்களை நிர்வகித்து வருகின்றனர். எனவே, இந்தியாவில், முஸ்லீம்களின் நிலை மிகைப்படுத்தப்படுகிறது; எனது கருத்துப்படி, அது நம்பிக்கை யூட்டத் தவறுகிறது.

61. முஸ்லீம்களுக்குத் தனியே வகுப்புவாதத் தேர்தல் தொகுதி கள் தக்க வைக்கப்பட வேண்டும் என்பதை நியாயப்படுத்த மூன்றாவதாகக் கூறப்படும் காரணம் இது தான்: ஒரு கலப்பினத் தொகுதியில், முஸ்லீம் வேட்பாளர் வெற்றி பெற்றாலும் கூட, அவர் பலவீனமானவராகவோ அல்லது முஸ்லீம்களது உண்மை யான பிரதிநிதியாக இருப்பதற்குப் பதிலாக, முஸ்லீம்கள் அல்லாத இனத்தவர்களின் பொம்மையாகவே செயல்படும் அளவிற்கு, கலப்பினத் தொகுதியில், முஸ்லீம்களின் வாக்குப் பலத்தைக் காட்டி லும், முஸ்லீம் அல்லாதோரின் வாக்குகளே அதிகமாக இருக்கும். இந்த அச்சம், ஓரளவு மெய்யாகத் தோன்றினாலும், சற்றுச் சிந்தித்துப் பார்த்தால், அது ஆதாரமற்றது என்று புலனாகும். பெருவாரியான முஸ்லீம் அல்லாத வாக்காளர்கள், ஒரு முஸ்லீம் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் போது, முஸ்லீம் அல்லாதோர்,

தீங்கிழைப்பதில் குறியாகவிருந்தால், முஸ்லீம்கள் எதிர்பார்ப்பதைப் போன்று நிகழக் கூடும். ஆனால், நடைமுறையில் தேர்தலின் போது, பல முஸ்லீமல்லாத வேட்பாளர்களும் போட்டியிடவே செய்வர். அவ்வாறிருக்கும்போது, முஸ்லீம் அல்லாத எல்லா வாக்காளர்களும், முஸ்லீம் வேட்பாளர்களுக்கு வாக்களித்திருக்க முடியாது. அதோடு, முஸ்லீம் அல்லாத வேட்பாளர்கள், முஸ்லீம் அல்லாத எல்லா வாக்காளர்களது வாக்குகளையும், முஸ்லீம் வேட்பாளருக்கு அளிக்குமாறு அனுமதிக்கப் போவதில்லை. மாறாக, அனைத்தையுமே இல்லையெனினும், கணிசமான வாக்குகளைத் தாங்கள் பெற ஏற்பாடு செய்வர். இந்த ஆய்வு உண்மையெனில், முஸ்லீம் வேட்பாளருக்கு வாக்களித்தவர்களில் முஸ்லீம் அல்லாத வாக்காளர்கள் மிகச் சிலரே இருக்க முடியும். எனவே, வெற்றி பெற்ற முஸ்லீம் வேட்பாளருக்கெதிராக, முஸ்லீம் அல்லாத வாக்காளர்கள், பொதுமக்கள் நடவடிக்கையில் ஈடுபடுவர் என்ற முஸ்லீம்களின் அச்சமானது, வெறும் மனப் பிராந்தியேயன்றி வேறல்ல. முஸ்லீம்களே அதனை நம்பவில்லை என்பது ''டில்லி''ப் பிரேரணைகள் என்று அழைக்கப்படுவதிலிருந்து தெரிய வருகிறது. அந்தப் பிரேரணைகள் இந்த அறிக்கையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன்படி வகுப்புவாத மாகாணங்களும், பஞ்சாபிலும், வங்காளத்திலும் பிரதிநிதித்துவம் குறித்த வேறு சில சலுகைகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டால், கூட்டுத் தேர்தல் தொகுதிகளுக்கு ஆதரவாக, வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளை விட்டு விட முஸ்லீம்கள் ஒப்புதல் தெரிவித்துள்ளனர். வகுப்புவாத மாகாணங்கள் அவற்றிற்கு வெளியே எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தப் போவதில்லை என்று கொண்டாலும்—அவ்வாறு தான் நாம் பாவித்துக் கொள்ள வேண்டும்—இதர எந்த மாநிலத்திலும் உள்ள, முஸ்லீம் சிறுபான்மையினர், கூட்டுத் தொகுதிகளிலிருந்து தாங்கள் பெறும் பாதுகாப்பைக் கொண்டு மனநிறைவு அடைகின்றனர் என்பது தெளிவாகிறது. அப்படியானால், வகுப்புவாத மாநிலங்களுடன் கூட்டுத் தேர்தல் தொகுதிகள் போதுமானவை என்றால், வகுப்புவாத மாநிலங்கள் இல்லாத போது, அவை எப்படிப் போதுமானதாக இருக்கவில்லை என்பது கேள்வி. இது ஒருபுறமிருக்க, கூட்டுத் தேர்தல் தொகுதி அமைப்பில் உள்ள தீமை, வாக்குகள் நீர்த்துப் போகின்றன என்ற முஸ்லீம் கருத்தில் ஏதேனும் பொருள் உண்டெனில், அதற்கான தீர்வு, வகுப்புவாதத் தொகுதிகளைத் தக்க வைப்பதில் அல்ல என்பதே எனது கருத்து. அதற்கான தீர்வு வயதுவந்தோருக்கு வாக்குரிமை புகுத்தப்படுவதன் மூலம், முஸ்லீம் அல்லாத வாக்குகள் கலந்து நீர்த்துப் போகும் விளைவுக்கு ஈடுகட்டுவதற்காக, முஸ்லீம் வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும்; முஸ்லீம் வகுப்பினரது வாக்கு வலிமை பலம் பொருந்தியதாக இருக்கும்.

62. இவையனைத்திலிருந்தும், நேர்மையான எக்காரணம் கொண்டும், வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளை நியாயப்படுத்த முடியாது என்று தெரிகிறது. அதற்கு ஆதரவாக இருப்பது மன உணர்ச்சி மட்டுமே. அரசியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மன உணர்ச்சிக்கும், உணர்வுகளுக்கும் இடமில்லை என்று நான் கூறவில்லை. அரசாங்க விசுவாசம் என்பது நம்பிக்கையினால் விளைவது; நம்பிக்கை என்பது உணர்வைப் பொறுத்த விஷயம் என்பதை நான் முற்றிலும் உணர்கிறேன். அரசியல் அமைப்புக்கு எவ்வித பாதிப்புமின்றிப் பெறப்பட முடியுமானால், அந்த நம்பிக்கை ஈட்டப்பட வேண்டும். ஆனால், வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் என்பது அடிப்படையிலேயே தவறானது; அந்த விஷயத்தில் உணர்வுக்கு இடம் கொடுப்பதானது, ஒரு தீமையை நீட்டிப்பதாகும். அந்த அமைப்பின் அடிப்படைத் தவற்றை, அதன் எதிரிகள் கூட, சரியாகக் கணிக்கத் தவறிவிட்டனர். அது செயல்படும் விதத்தை நோக்கினால், அந்தத் தவறு தெளிவாகத் தெரியும். முஸ்லீம்களின் பிரதிநிதிகள், முஸ்லீம் அல்லாதோருக்குச் சட்டங்களை அளிக்கின்றனர் என்பது தெளிவு. முஸ்லீம் அல்லாதோரிடமிருந்து வசூலிக்கப்படும் வருவாயை அவர்கள் விருப்பத்திற்கேற்பச் செலவிடுகின்றனர். முஸ்லீம் அல்லாதோரின் கல்வியை அவர்கள் தீர்மானிக்கின்றனர்; முஸ்லீம் அல்லாதோர் என்னென்ன வரிகளை எவ்வளவு செலுத்த வேண்டும் என அவர்கள் முடிவு கட்டுகின்றனர். சட்டமன்ற உறுப்பினர்களாக முஸ்லீம்கள் செய்யும் சில ஜீவாதாரமான செயல்கள் இவை; இவை முஸ்லீம் அல்லாதோரின் நலன்களைப் பாதிக்கின்றன. எந்த உரிமையினால் அவர்கள் அவ்வாறு செய்கின்றனர் என்று கேட்கக் கூடும். முஸ்லீம் அல்லாதோரின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமையினால் அதற்கான பதில் அல்ல என்று குறிப்பிட்டாக வேண்டும். முஸ்லீம்களின் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உரிமையினால் தான் என்பதே அதற்கான பதில்! ஆளப்படுபவர்களின் ஒப்புதலின் பேரிலேயே ஓர் அரசாங்கம் இருக்க வேண்டும் என்பது அனைவராலும் ஏற்கப்பட்ட அரசியல் வாழ்வின் நியதியாகும். நான் மேலே கூறியவற்றிலிருந்து, வகுப்புவாதத் தொகுதிகள், அந்த நியதியை மீறுவதாகும். ஏனெனில், அது ஒப்புதலில்லாத அரசாங்கமாகும். சில வகுப்புக்கள், தாங்கள் வாக்களித்துத் தாங்கள் உடன்படாமலேயே, வேறொரு வகுப்பினைச் சார்ந்த உறுப்பினர்களை, அவர்களை ஆட்சி செய்ய அனுமதிப்பதானது, எந்த அரசியல் நீதியுணர்வுக்கும் விரோதமானதாகும். முஸ்லீம்களே கூறிக் கொள்வதைப் போன்று, அவர்கள் இதர வகுப்பினரிடமிருந்து முற்றிலும் வேறுபட்ட வாழக்கைக் கண்ணோட்டம் கொண்டவர்களாக இருப்பின், அந்த அமைப்பில் உள்ளடங்கியுள்ள அபாயம் மேலும் பயங்கரமானதாகிறது; அதைக் கண்டு கொள்ளாமல் பாராமுகமாக இருத்தல் கூடாது.

63. கவுன்சிலது தற்போதுள்ள அமைப்பின் குறைபாடுகள் அவ்வாறுள்ளன. அது, 1919-ல் சவுத்பரோ கமிட்டியால் உருவாக்கப்பட்டது. அந்தக் கமிட்டி தயாரித்த கட்டுக் கோப்பின் தன்மையினை 1919 ஏப்ரல் 23-ந் தேதியிட்ட அமைச்சருக்கு அனுப்பிய இந்திய அரசாங்கக் குறிப்பு (எண் 4—1919) தெளிவாக எடுத்துரைக்கிறது;

> ''2 (சவுத்பரோ கமிட்டியின்) அறிக்கையை விவரமாக நாம் ஆராயும் முன்னர், மிக முக்கியமானதொரு பூர்வாங்கக் கேள்வி அதில் தெளிவாகிறது. கோட்பாடுகளை நிறுவுவது குறித்து, கமிட்டியின் பணி, பெரும் அளவு திருப்பப்பட வில்லை. தங்கள் முன் வைக்கப்பட்ட பல்வேறு பிரச்சினை களையும் ஆராய்வதில், தீர்வுக்குப் பொதுவான பகுப்பாய் வினை அடிப்படையாகக் கொள்வதைக் காட்டிலும், உடன் பாட்டின்படித் தீர்வு காண்பதையே கடைப்பிடித்துள்ளனர்.''

64. தற்போதுள்ளபடியான கட்டுக் கோப்பில் உள்ளார்ந்துள்ள மதிப்பினைக் கவனத்தில் கொள்ள எனது தோழர்கள் அக்கறை காட்டவில்லை. நியமன அமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் பரிந்துரைத்துள்ளனர் என்பது உண்மையே; அதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதைத் தவிர, வேறு எந்த வகைக் குறையுமே அதில் இல்லாததைப் போன்று, தேர்தல் அமைப்பு முழுவதையும் அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளனர். இந்த விஷயத்தில் நான் அவர்களிடமிருந்து மாறுபடுகிறேன். நான் இதற்கு முன்னர்ச் சுட்டிக் காட்டியுள்ளபடி அந்த அமைப்பு முழுவதுமே தவறானது; முற்றிலும் திருத்தி அமைக்கப்பட வேண்டியது. 1917 ஆகஸ்டு அறிவிப்பில் பொதிந்துள்ள சீர்திருத்தங்களின் நோக்கம், தன்னாட்சி நிறுவனங்களை நிறுவுவதே இலட்சியம் என்று பிரகடனப்படுத்தியுள்ளதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்போது கொண்டு வரப்பட்ட தேர்தல் அமைப்பானது, ஓர் அரை குறை வீடாகத்தானிருந்தது; மற்றும், அதிகார வர்க்க ஆட்சியிலிருந்து, மக்கள் ஆட்சிக்கு மாறும் போது ஓர் இடைக்காலக் கட்டம் அவசியமானதொன்று என்று ஏற்றுக் கொள்ளப்பட்டதால் அது நியாயப்படுத்தப்பட்டது. தற்போதுள்ள பிரதிநிதித்துவ அமைப்பானது, ஒரு முழுமையான அரசாங்கத்துடன் ஒவ்வாததாகும்; எனவே, அது முழுமையாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

65. நடைமுறை பிரதிநிதித்துவ அமைப்பு ஏன் முழுமையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதற்கு மற்றொரு காரணமும் உண்டு. பிரதிநிதித்துவ அரசாங்கம் எங்கணுமே ஒரு கட்சி அரசாங்கமாக உள்ளது. ஒரு கட்சி அரசாங்கத்தின் மூலமாக அன்றி, பிரதிநிதித்துவ அரசாங்கம் செயல்பட முடியாது என்று கூடக் கூறுமளவிற்கு, கட்சி அரசாங்கம், பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்குச் சார்வாம்ச துணைச் சொல் ஆகிவிட்டது. கட்சி அரசாங்கத்தின்

மிகச் சிறந்த வடிவமானது; நிலைத்தன்மையையும், பொறுப்பான அரசாங்கத்தையும் உறுதிப்படுத்தும். இரு கட்சி அமைப்பின் கீழ் நிலவுவதேயாகும். ஒரு நிர்வாகமானது, சட்டத்தினால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குத்தான், சட்டசபைக்குப் பொறுப் புள்ளதாகச் செய்ய முடியும். ஆனால், நிர்வாகத்தின் மீது தனது முடிவாற்றலைத் திறம்படத் திணிக்க முடியாத அளவில் சட்ட சபை அமைக்கப்பட்டிருப்பின், அந்தப் பொறுப்புப் பெயரள விலேயே இருக்கும். ஒரு நிலையான அரசாங்கத்திற்கு, உறுதியற்ற தன்மை அறவே இருக்கக் கூடாது. ஒரு முறையான கொள்கைத் திட்டத்தைத் தொடர்ந்து திட்டமிட்டு, ஒரு நிர்வாகம் செயல் படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனால், அதற்குப் பெரும் பான்மையினரின் ஊசலாட்டமற்ற ஆதரவு தேவைப்படுகிறது. இதனை இரு கட்சி அமைப்பின் மூலமாக மட்டுமே பெற முடியும். குழு அமைப்பின் மூலம் அதனை ஒரு போதும் அடைய முடியாது. குழு அமைப்பின் கீழ், நிர்வாகம் ஒரு பொதுவான கருத்துக் கோர்வையைப் பிரதிநிதிப்படுத்த முடியாது; ஆனால், அதிகார நிமித்தம், தங்களது நேர்மையையும், நாணயத்தையும் சமரசம் செய்ய ஒப்புக் கொண்டுள்ள, பல்வகைக் குழுக்களின் தலைவர் கள் கொண்டுள்ள கோட்பாடுகளின் ஒட்டு வேலையையே பிரதி நிதித்துவப்படுத்த முடியும். அத்தகையதோர் அமைப்பு, ஒரு நிலை யான அரசாங்கத்திற்குத் தேவையான தொடர்ந்த ஆதரவினை ஒரு போதும் உத்தரவாதம் செய்ய முடியாது; ஏனெனில், தனிப்பட்ட நன்மைகளுக்காகக் குழுக்களை மாற்றியமைப்பதற்கான தூண்டு தல் ஆசை எப்போதும் இருந்து வரும். பிரதிநிதித்துவ அமைப்பின் காரணமாக அமைந்துள்ள தற்போதைய கவுன்சிலை, பர்க்கின் வார்த்தைகளின் மூலம் விவரித்தால்; ''குறுக்காக வெட்டப்பட்டு, மனம் போனபடி பொருத்தி ஒட்டவைக்கப்பட்டதொரு துண்டம்; ஒன்றுக் கொன்று தொடர்பற்ற ஒரு பல்வண்ணப்பட்டை; ஒட்டு வதற்கான சிமெண்ட் அற்ற தாறுமாறாகக் கிடக்கும் நடைபாதை; தேசபக்தர்களும், அரசவை ஏமாற்றுக்காரர்களும் அரசாங்கத்தின் நண்பர்களும், வெளிப்படையான எதிரிகளும் கொண்ட கூட்டு இது. இத்தகைய வியப்பான சட்டசபைக் காட்சி, அணுகுவதற்குப் பாதுகாப்பற்றது; நிலை நிற்பதற்கும் நிச்சயமற்றது''. இந்தக் கவுன்சில், ஒரு, இரு கட்சி அரசாங்க அமைப்புக்கு வழி செய்யாது; கட்சி அமைப்பின்றி, நிலையான அரசாங்கமோ அல்லது ஒரு பொறுப்புமிக்க அரசாங்கமோ ஏற்பட முடியாது. குழு அமைப் பின் தோற்றத்தினை, தேர்தல் தொகுதிகளின் உருவாக்கத்தில் காண முடியும். ஏனெனில் பார்க்கப் போனால், தேர்தல் தொகுதி கள் என்பவை வார்ப்புகளே; அவற்றில்தான் கவுன்சில் வார்த் தெடுக்கப்படுகிறது. கவுன்சில் திறம்படச் செயலாற்றுமாறு திருத்தி அமைக்கப்பட வேண்டுமெனில், அச்சினை மறுவார்ப்புச் செய்ய வேண்டுமென்பது தவிர்க்க முடியாததேயாகும்.

66. தேர்தல் அமைப்பினை மாற்றியமைப்பதற்கான எனது கருத்துக்களை வழங்குவதில், நான் மூன்று முக்கிய நோக்கங்களை வழிகாட்டியாகக் கொண்டுள்ளேன்: (1) தேர்தல் அமைப்புச் சுத்தமாகப் பிராந்திய அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும்; நாட்டின் சமூக நிலைகளுடன் அதற்கு எவ்வித உறவும் இருக்கக் கூடாது என்று உரைக்கும் இந்தியாவின் பற்பல அரசியல்வாதிகளின் ஆபத்தான எளிமைக்கு இரையாகாதிருத்தல்; (2) பிராந்தியத் தொகுதிகளின் மூலம், பிரதிநிதித்துவம் பெறக் கூடிய, விசேஷ பிரதிநிதித்துவத்திற்கான எந்த நலனையும், அது சமூக நலனாயினும், பொருளாதார நலனாயினும்—ஏற்காமலிருத்தல் (3) விசேஷப் பிரதிநிதித்துவத்திற்குத் தகுதியுண்டு என்று ஏதேனும் ஒரு நலன் ஏற்கப்பட்டால், அதன் பிரதிநிதித்துவ முறையானது, அத்தகைய நலன்களின் பிரதிநிதிகளுக்குத் தனிப்பட்டக் குழு அமைப்பதற்கான சுதந்திரம் இல்லாத வகையில், அமைக்கப்பட வேண்டும்.

67. மேற்சொன்ன மூன்று நோக்கங்களில், இரண்டாவது, வாக்குகளின் போக்கினைச் சார்ந்துள்ளது என்பது தெளிவு. இந்த அறிக்கையின் மற்றொரு பகுதியில், நான் வயது வந்தோருக்கு வாக்கு எனும் முறையைப் புகுத்தப் பரிந்துரைத்துள்ளேன். அது ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. அந்த அடிப்படையில்தான், நான் எனது பரிந்துரைகளை வழங்குகின்றேன். அது ஒருவேளை ஏற்றுக் கொள்ளாது, வரம்புக்குட்பட்ட வாக்குரிமையே தொடருமானால், அப்போது வேறுவிதப் பரிந்துரைகள் தேவைப்படும்; அதனையும் தர நான் உத்தேசித்திருக்கிறேன். மேற்சொன்ன காரணங்களுக்காகவும், இறுதியாகக் கூறப்பட்ட நோக்கினைத் தொடர்ந்தும், நான் சமர்ப்பிப்பது என்னவெனில்,

(அ) வயது வந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டால், முகம்மதியர்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஆங்கிலோ-இந்தியர்கள் ஆகியோர் நீங்கலாக, பிராந்தியப் பிரதிநிதித்துவம் இருக்கும்.

(ஆ) வரம்புக்குட்பட்ட வாக்குரிமை தொடருமானால், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், ஆங்கிலோ இந்தியர், மராத்தியர்கள் மற்றும் அதன் நேச இனங்கள், தொழிலாளர்கள் நீங்கலாக, எல்லாப் பிரதிநிதித்துவமும் பிராந்திய ரீதியிலானதாகவிருக்கும்.

(இ) விசேஷப் பிரதிநிதித்துவம், பொதுத்தேர்தல் தொகுதிகளின் மூலமும், ஒதுக்கப்பட்ட இடங்களுக்கும், தொழிலாளர்களுக்கும், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் தேர்தல் தொகுதிகளின் மூலமும் நடைபெறும்.

68. இந்த ஆலோசனைகளிலிருந்து, நான் எல்லா வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளையும் ஒழிப்பதையே ஆதரிக்கிறேன்.

அவையாவன: 1) இனாம்தார்கள் மற்றும் சர்தார்கள் 2) இந்திய அல்லது ஐரோப்பிய தொழிலும் வணிகமும், 3. இந்திய கிறிஸ்தவர்கள், மற்றும் 4) தொழில்துறை; அவற்றைப் பொதுத் தேர்தல் தொகுதிகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும். சாதாரண வழிகளில், சபைகளில் அவர்களது குரல் கேட்கப்படுவதைத் தடுப்பதற்கு எதுவுமில்லை. இரண்டாவதாக, சில குறிப்பிட்ட வகுப்பினர் சிறப்புப் பிரதிநிதித்துவம் பெறுவதை நான் ஆதரித்த போதும், அதனைத் தனியான தேர்தல் தொகுதிகளின் மூலம் பெறுவதை நான் எதிர்க்கிறேன். மிகப்பெரும் மக்களாட்சியற்ற இந்த நாட்டில், மக்களாட்சி முறையைப் புகுத்துவதற்காக உருவாக்கப்படும் எந்தப் பிரதிநிதித்துவத் திட்டத்திலும், பிராந்தியத் தொகுதிகள் மற்றும் தனித் தொகுதிகள் ஆகிய இரு வகை உச்ச நிலைகளும் தவிர்க்கப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட இடங்களைக் கொண்ட கூட்டுத் தேர்தல் தொகுதிகள் அமைப்பே பொன் போன்ற வழியாகும். அதைக் காட்டிலும் குறைந்தால், அது போதுமானதாக இருக்காது; அதைக் காட்டிலும் அதிகமாகச் சென்றால், அது நல்ல அரசாங்கத்தின் இறுதி நோக்கங்களைத் தகர்த்து விடும். தெளிவான காரணங்களை முன்னிட்டு, ஐரோப்பிய இனத்தவரின் விஷயத்தில் நான் விதிவிலக்குக் காட்டுகிறேன். அவர்கள் தங்களுக்கான விசேஷத் தொகுதிகளைக் கொண்டிருக்க அனுமதிக்கப்படலாம். ஆனால் அவை, பொதுத் தொகுதிகளாகத்தான் இருக்குமேயன்றி, வகுப்புத் தொகுதிகளாக இருக்காது.

### அத்தியாயம் 3

## இடங்களின் பங்கீடு

### 1. சிறுபான்மையினரிடையே இடப் பங்கீடு

69. பல்வேறு சிறுபான்மையினருக்கு எனது தோழர்களால் ஒதுக்கப்பட்ட இடங்கள் கீழ்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| சிறுபான்மையினர் | 140 இடங்களில் பெறுபவை பொது | + சிறப்பு |
|---|---|---|
| 1. ஐரோப்பியர்கள் ... ... ... | 2 | 5 |
| 2. ஆங்கிலோ இந்தியர்கள் ... ... ... | 2 | 0 |
| 3. இந்திய கிறிஸ்துவர்கள் ... ... ... | 1 | 0 |
| 4. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ... ... ... | 10 | 0 |
| 5. முஸ்லீம்கள் ... ... ... | 43 | 2 |

70. இந்த அட்டவணையிலிருந்து, பல்வேறு சிறுபான்மையினருக்கு, இடங்களைப் பங்கீடு செய்வதில், எனது தோழர்கள் எந்த

ஒரே சீரான கொள்கையையும் கடைப்பிடிக்கவில்லை என்பது காணப்படுகிறது. அதோடு, தொடர்புடைய சிறுபான்மையின ருக்கு நீதி கிடைக்கவும் அவர்கள் முயன்றதாகத் தோன்றவில்லை. முஸ்லீம்களை அவர்கள் நடத்து முறையுடன், தாழ்த்தப்பட்ட வகுப் பினரை அவர்கள் நடத்து முறையுடன் ஒப்பிடும் போது இது தெளிவாகத் தெரிகிறது. மாநிலத்திலுள்ள மக்கட் தொகையின ரில், முஸ்லீம்கள் 19 சதவிகிதத்தினர் ஆவர். சட்ட மேல்சபையி லுள்ள மொத்த இடங்களில் 31 சதவிகிதத்திற்கும் கூடுதலாக அவர்களுக்கு அளிப்பதற்கு எனது தோழர்கள் பிரரேபித்துள்ள னர். அதற்கு மாறாக, மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை யினரில் மிகச் சிக்கனமான கணக்கீட்டின்படியே 8 சதவிகிதமாக உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, மொத்த இடங்களில் 7 சதவிகிதத்தை மட்டுமே அவர்கள் அனுமதித்துள்ளனர். இந்தப் பாரபட்சத்திற்கான காரணம் புரிந்து கொள்ளக் கடினமானது. அவ்விரண்டு சிறுபான்மை இனங்களிலும், முஸ்லீம் சிறுபான்மை யினர், சந்தேகத்திற்கிடமின்றி, மற்றதைக் காட்டிலும் எண்ணிக்கை யிலும், செல்வ வளத்திலும், கல்வியிலும் வலிமை வாய்ந்தவர் கள். எண்ணிக்கையிலும், செல்வத்திலும், கல்வியிலும், தாழ்த்தப் பட்ட வகுப்பினர் பலவீனர்களாக இருப்பதோடு, முஸ்லீம்களுக்கு அறவே இல்லாத சில இயல்பு நிலைகளும் அவர்களுக்கு உள்ளது. பொது நிதியிலிருந்து போற்றி வளர்க்கப்பட்ட போதும் கூட, பொது நீர்நிலைகளிலிருந்து அவர்கள் தண்ணீர் எடுக்க முடியாது; ஆனால், முஸ்லீம்களால் அது முடியும். எந்தத் தனி நபருக்கும், அவரது இனம், சாதி, நிறம் ஆகிய காரணங்களுக்காக, எந்தப் பொதுப் பதவிக்குமுள்ள உரிமை மறுக்கப்படக் கூடாது என்று இந்திய அரசாங்கச் சட்டம் கூறுகிறது என்றாலும் கூட, தாழ்த்தப் பட்ட வகுப்பினர், தீண்டத்தகாதவர்களாக இருப்பதால், போலீஸ், இராணுவம், கடற்படை ஆகியவற்றில் நுழைய முடியாது. பொது நலப் பணி விஷயத்தில், முஸ்லீம்களுக்குக் கதவுகள் திறந்தே யுள்ளன என்பதுடன், சில துறைகளில் அவர்கள் மிக அதிகமான பங்கினையும் பெற்றுள்ளனர். பொதுப் பள்ளிகள், பொது நிதி யிலிருந்து நிர்வகிக்கப்பட்ட போதும், தாழ்த்தப்பட்ட மக்கள் அப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். முஸ்லீம் களுக்கு எதிராக அவ்விதத் தடை ஏதும் இல்லை. தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒருவன் தொடுவதே தீட்டு ஆகிறது; ஆனால் முஸ்லீம் தொடும்நிலை அவ்வாறு அல்ல; வர்த்தகத் தொழில் துறைகள் முஸ்லீம்களுக்குத் திறந்து விடப்பட்டுள்ளது; ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒருவனுக்கு அது மூடப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்ட இனத்தவன் ஒருவனைப் போன்று கீழ்ப்பட்ட நிலை என்ற கரையினை ஒரு முஸ்லீமால் தாங்கிக் கொள்ள முடியாது; அதன் விளைவாக முஸ்லீம் ஒருவர் தன் விருப்பம் போல உடையுடுத்திக் கொள்ளலாம்; தன் விருப்பப் படி வாழலாம்; தான் செய்ய விரும்பும் எதையும் செய்யச்

சுதந்திரம் உண்டு. இந்தச் சுதந்திரம் தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு மறுக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒருவருக்கு, நல்ல ஆடைகளை வாங்குவதற்கான பொருளாதார வசதி இருந்த போதும் கூட, அவர் கிராமத்தார்களைக் காட்டிலும் சிறந்த உடை உடுத்த முடியாது. அவன் குடிசையில் தான் வாழ வேண்டும். பண்டிகை தினங்களில் கூட, தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒருவன் தனது செல்வத்தையும், பகட்டையும் வெளிப்படையாக வெளிப்படுத்தக் கூடாது; அவன் வீட்டுத் திருமணத்தின் போது, நிச்சயமாக, அவன் மணமகனைக் குதிரையிலேற்றி, முக்கிய தெருக்களின் வழியாக உலா வரக் கூடாது. வழக்கமான நெறிகளுக்குப் புறம்பாகவோ, அல்லது அவனது அந்தஸ்துக்கு மீறிய எந்தச் செயலிலும் அவன் ஈடுபட்டால், அவன் எந்தக் கிராமத்தார் மத்தியில் வாழ்கிறானோ, அந்தக் கிராமத்தினரின் கடுங்கோபத்திற்கு ஆளாக வேண்டி வரும். பெரும்பான்மையினரின் கொடுமைக்கு, முஸ்லீம்களைக் காட்டிலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஆளாகின்றனர். அதற்குக் காரணம் என்னவெனில், ஒரு மனிதனுக்குள்ள எல்லா அடிப்படை உரிமைகளும் வழங்கப்பட்டுள்ள முஸ்லீம்கள் — மதப்பிரச்சினை ஏதேனும் முன்னணிக்கு வந்தாலொழிய — பெரும்பான்மையினருடன் சச்சரவுக்கான எந்தக் காரணமும் இல்லை. ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு மனிதனின் நிலை முற்றிலும் மாறுபட்டது. சாதாரண மனித உரிமைகளைப் பெறுவதற்காக இடையறாது போராட வேண்டிய அவனது வாழ்வு, அவனுக்கு உரிமைகளை மறுக்கும் பெரும்பான்மையினருக்கு, எப்பொழுதும் ஒரு சவாலாகவே உள்ளது. அதன் விளைவாக, அவன் பெரும்பான்மையினருடன் இடையறாத பகைமையுடன் வாழ வேண்டியுள்ளது. அது மட்டுமன்று ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு முஸ்லீம், பெரும்பான்மையினரின் கொடுமைக்கு ஆளாக வேண்டி வந்தால், அவருக்குப் பக்க பலமாகப் போலீஸ் மற்றும் நீதித் துறையினரது ஆதரவுக் கரம் நீளுகிறது. ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஒரு மனிதன் பெரும்பான்மையினரின் கொடுமைக்கு ஆளானால், போலீஸோ, நீதித்துறையின் கரங்களோ அவனது உதவிக்கு வருவதில்லை. அதற்கு மாறாக, அவனுக்குப் பாதகமான முறையில் பெரும்பான்மையினருடன் சேர்ந்து, அவை செயல்படுகின்றன; அதற்குக் காரணம், மாநிலப் போலீசிலும், நீதித்துறையிலும் பல முஸ்லீம் உதவினர்களின் ஆதரவினை ஒரு முஸ்லீம் பெற முடியும். அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எவரும் அத்துறைகளில் கிடையாது. மேலும், வைதீக ஹிந்து சக்திகளின் ஆத்திரத்தை மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்கள் எதிர்க்கொள்ள வேண்டியுள்ளது என்பதல்ல; முஸ்லீம்களின் எதிர்ப்பையும் அவர்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எதிரான, ஹிந்துக்களின் சமூகத் தப்பெண்ணங்களிலிருந்து முஸ்லீம்கள், விடுபட்டிருப்பர் என்று சாதாரணமாகக்

கருதப்படுகிறது. இதைக் காட்டிலும் பெரிய தவறு வேறு ஏதும் இருக்க முடியாது. நகர்ப்புறங்களை விடுத்து, கிராமப்புறங்களில் உள்ள முஸ்லீம்கள், இந்துக்களைப் போன்றே அந்த விதத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். கொலாபா மாவட்டத்தில் மன்குவான் வட்டத்திலுள்ள, ஹர்குல் (Harkul) என்ற கிராமத்தில் நடந்த சச்சரவு இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இந்த மாவ்ட்டத்தில், சமூக மேம்பாட்டுக்கும், தங்களை இழிந்தவர்களாகக் கருதப்படும் சிலர் அசுத்தப்பணிகளை எதிர்த்தும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். அந்தத் தூய்மையற்றப் பணிகளை (Unclean practices)க் களைந்தெறிவது, அந்த மக்களின் மேம்பாட்டுக்கு அவசியம் என்று அந்த மக்களுக்கு, முன்னர் அறிவுரை கூறி வந்த அந்த மாவட்டத்திலுள்ள ஹிந்துக்கள், அந்த ஏழை மக்களுக் கெதிராகத் திரும்பினர்; அவர்களுக்கெதிராகச் சமூக, பொரு ளாதாரக் கட்டுப்பாடுகளைக் கொணர்ந்து அவர்களைக் கொடுமைக் குள்ளாக்கினர். ஆனால், அந்த மாவட்டத்தின் முஸ்லீம்களும், தங்களது ஹிந்து அண்மை அயலார்களைப் பின்பற்றுவர் என்று எவரும் எதிர்பர்ர்க்கவில்லை. மாறாக, (தீண்டத்தக்க) ஹிந்துக் களுடனான தங்களது போராட்டத்தில், முஸ்லீம்கள் தங்களது நண்பர்களாகச் செயல்படுவர் என்று தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் நம்பியிருந்தனர். ஆனால், அவர்களது நம்பிக்கை சுக்கல் சுக்கலாக உடைந்தது. முஸ்லீம்கள் தீண்டாமையைக் கடைப் பிடிக்காவிடினும் கூட, தாழ்த்தப்பட்ட மக்கள், கீழ்த்தர சமூக அந்தஸ்துடன் பிறந்தவர்கள் என்றும், அவர்களது அசுத்த வழக்கங் களைக் கைவிட்டு அவர்கள் தங்களை உயர்த்திக் கொள்ளும் முயற்சியானது அவமதிப்பும், பழிப்பும் கொண்டது என்றும் அதனை அடக்கி ஒடுக்க வேண்டும் ஹிந்துக்கள் கொண்டிருந்த தீய எண்ணத்தினால், முஸ்லீம்களும் பீடிக்கப்பட்டிருந்தனர் என்பது விரைவிலேயே வெட்ட வெளிச்சமாயிற்று. அதன் விளைவாக, அந்த மாவட்டத்தில் முஸ்லீம்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிடையே பல சண்டைகள் நடந்தன; அவற்றில் ஒன்றில், ஹர்குல் கிராமத்தில் ஒரு தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவன் உயிரிழந்தான்.

71. ஆகவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினரது பிரச்சினை முஸ்லீம்களது பிரச்சினையைக் காட்டிலும் மிகப் பெரிதாகும். முஸ்லீம்கள் இனத்தால் பின்தங்கியவர்களாக இருக்கலாம்; ஆனால், அவர்கள் முன்னேறிய ஹிந்துக்களுக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பிடிக்கும் அளவுக்குக் கல்வியில் முன் னேறியவர்கள். அவர்களுக்கு உறுதியாக எவ்வித இடையூறுகளும் கிடையாது; ஊக்கமும், முயற்சியும் இருந்தால் அவர்கள் மேலெழ வாய்ப்புக்கள் உள்ளன. அதற்கு மாறாகத், தாழ்த்தப்பட்ட இனத்த வர், வெறுமே பின்தங்கியவர்கள் மட்டுமல்ல; அவர்களுக்குத் தடைகள் பல உள்ளன; அந்தத் தடைகள் முதலில் அகற்றப் பட்டாலொழிய, எவ்வகை ஊக்கமும், முயற்சியும் அவர்களை

மேலெழச் செய்ய முடியாது. இரு சாராருக்குமுள்ள வேறுபாடு இவ்வாறிருக்க, முஸ்லீம்களின் பின்தங்கிய நிலையை மாற்று வதற்கு எந்த அளவுக்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுகிறதோ, அதைக் காட்டிலும் இருமடங்கோ அல்லது அதற்கு மேலேயோ அந்த அதிகாரம் தேவைப்படும். எனினும், எனது தோழர்கள், அவர்களது பிரதிநிதித்துவ விகிதத்தை மாற்றி அமைத்துள்ளனர். பலம் பொருந்திய சிறுபான்மையினராகவுள்ள 19 சதவிகித முஸ்லீம்களுக்குக் கவுன்சிலில் 31 சதவிகித இடங்களும், மிகச் சிக்கனக் கணக்கீடுகளின் படியே, மக்கள் தொகையினரில் 8 சத வீதமாக உள்ள தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு, கவுன்சிலில் 7 சத இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன; இது அவர்களது மக்கள் தொகை விகிதத்தைக் காட்டிலும் 1 சதவீத குறைவேயாகும்.

72. தாழ்த்தப்பட்ட இனத்தவரின் பிரச்சினை ஒரு சமூகப் பிரச்சினை என்றும், அதற்கான தீர்வினை சமூகத் துறையில் காண வேண்டும் என்றதொரு கருத்து நிலவுகிறது. இந்தக் கருத்து உயர் வட்டாரங்களிலும் கூட நிலவுகிறது என்பது எனக்கு வியப் பளிக்கிறது. இந்தக் கருத்தினைக் கொண்டுள்ளவர்கள், மனித சமுதாயத்தின் ஒவ்வொரு பிரச்சினையுமே ஒரு சமூகப் பிரச்சினை தான் என்பதை மறந்து விடுகின்றனர். மதப் பிரச்சினை, சம்பளம், வேலை நேரம், வீட்டு வசதி, வேலையில்லாதோருக்குக் காப்பு ஊதியம் ஆகிய எல்லாப் பிரச்சினைகளுமே சமூகப் பிரச்சினைகள் தாம். அதே பொருளில், தீண்டாமையும் கூட ஒரு சமூகப் பிரச் சினை தான். ஆனால், ஒரு பிரச்சினை சமூகப் பிரச்சினையா என்பது கேள்வியல்ல. அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்பதே கேள்வி. அந்தக் கேள்விக்கு எனது ஆணித்தரமான பதில் ‘முடியும்’ என்பதே. இந்தியாவிலுள்ள அரசு, விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், தீண்டத்தகாதவர்களையும், தீண்டத்தக்கவர்களையும், ஒரு குடும்பத் தின் உறுப்பினர்களாக, வற்புறுத்தி முடியாது என்பது உண்மையே. அல்லது, அரசு ஒரு சட்டமியற்றி, நிர்வாகச் சபையின் உத்தரவின் பேரில், அவர்களை ஒருவர்க்கொருவர் நேசிக்குமாறோ, கட்டித் தழுவிக் கொள்ளுமாறோ செய்யவும் முடியாது. ஆனால், அதற்குப் சற்றுக் குறைவாக, தீண்டத்தகாதவர்கள், அவர்களது அவமான நிலையிலேயே நீடித்திருப்பதற்கான எல்லாத் தடைகளையும் அரசு அகற்ற முடியும். இந்தக் கருத்து சரியானதென்றால், போதுமான அரசியல் பிரதிநிதித்துவம் பெறுவதற்குத் தாழ்த்தப்பட்ட இனத்த வரைக் காட்டிலும், வேறு எந்த இனத்திற்கும் இன்றியமையாத தேவை கிடையாது.

73. முஸ்லீம் சிறுபான்மையின்ர் ஏன் தங்களது மக்கட்தொகை வீதாசாரத்தைக் காட்டிலும் 12 சதவிகித இடத்தைப் பெற வேண் டும் என்பதையும், தாழ்த்தப்பட்ட மக்கள், தங்களது தொகை விகித அடிப்படையிலேயே ஏன் தங்களது பங்கினைப் பெறக்

கூடாது என்பதையும், எனது தோழர்கள் எந்த இடத்திலும் விளக்க வில்லை. கூடுதல் பிரதிநிதித்துவத்தைக் கோறிய முஸ்லீம் சான்று கள், எவரும் எதிர்பார்ப்பதைப் போன்றே, அது தங்களது முன்னேற்றத்தையும், நலவாழ்வையும் உறுதிப்படுத்துவதற்காகவே, என்ற காரணத்தைக் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லீம்கள், ஆண்ட வர்க்கத்தின் வாரிசுகள் என்றும், அதிகப் படியான பிரதிநிதித்துவம் தங்களுக்கு இல்லையெனில், தங்கள் இனம் முக்கியத்துவமும், செல்வாக்கும் இழந்து விடும் என்று தாங்கள் அஞ்சுவதாகவுமே அதற்கு ஒரே காரணம் கூறினர். இதிலிருந்து, அதிகப்படியான பிரதிநிதித்துவக் கோரிக்கையானது, தகுதியின் அடிப்படையிலல்லாது, மேலாதிக்க அடிப்படையில் எழுந்தது என்று தெரிய வருகிறது. எந்த ஜனநாயக அரசாங்க அமைப்பு முறையிலும், எல்லா இனத்தவரும், சமமான அரசியல் முக்கியத்துவம் பெற்றவர்கள் என்றே நடத்தப்பட வேண்டுமென் பதும், தாங்கள் பிறரைக் காட்டிலும் மேம்பட்டவர்கள் என்று எந்த இனத்தவரும் கருத இடமளிக்கக் கூடாது என்பதும், எனது வலுவான கருத்தாகும். தனது இனம் முக்கியமானது என்றும், அதற்குப் போதுமான, நியாயமான பிரதிநிதித்துவம் அளிக்கப் பட வேண்டும் என்றும் எந்த இனமாவது கோரினால், அது அனைவராலும் பரிவுடன் ஆராயப்பட வேண்டியதே. ஆனால், எந்த ஓர் இனமும், தான் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததென வும், அதன் காரணமாக, தனது நியாயமான பங்கினைக் காட்டி லும் அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கோரினால், சந்தேகத்திற்கும், மறுப்புக்கும் இடமில்லாதவாறு அதன் பொருள், இதர இனங்களனைத்தும், ஒப்பு நோக்கின், அவர்கள் தாழ்வான வர்கள் என்பதும், அவர்களது நியாயமான பங்கினைக் காட்டிலும் அவர்கள் குறைவாகவே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான். இந்த நிலைக்கு, பிற இனங்கள் ஒப்ப மாட்டார்கள் என்பது இயற்கையே. எனவே, இந்த எல்லை மீறிய கருத்தினை எவ்வளவு விரைவில் முஸ்லீம் சமூகத்தினர் அகற்றிக் கொள்கிறார்களோ, அவ்வளவுக்கு அந்தச் சமூகத்தினரின் எதிர்காலத்திற்கு நல்லது. ஏனெனில், இதர இனத்தினர் மனமுவந்து வழங்காத எந்த ஆதாயத்திலும், எவ்விதப் பயனும் கிடைக்காது. அதற்கு மாறாக அது மனமுறிவுக்கான விதைகளை ஊன்றுவதன் மூலமும், ஒருக் கால், இதர சமூகத்தினரின் எதிர்ப்புணர்வைத் தூண்டுவதாலும், முஸ்லீம் சமூகத்தினருக்கு நேரடியான தீங்கினை விளைவிப்பதில் முடியலாம்.

74. தங்களது நிலையிலிருந்து வீழ்ச்சியுற்ற ஆண்ட வர்க்கத் தினர் முஸ்லீம்கள் மட்டுமே அன்று. கனடா நாட்டில் பிரெஞ்சுக் காரர்களும், தென்னாப்பிரிக்காவில் டச்சுக்காரர்களும் அதற்கு உதாரண புருஷர்கள்; ஆளும் வகுப்பார் என்ற நிலையிலிருந்து ஆளப்படுபவர்களாக வீழ்ச்சி அடைந்ததற்கான சான்றுகள் அவர் கள், ஆனால், முன்னாள் ஆட்சியாளர்கள் என்ற நிலையை நிறுத்திக்

கொள்வதற்காக, கனடாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களோ, தென்னாப்பிரிக்காவின் டச்சுக்காரர்களோ, எல்லை மீறிய பிரதிநிதித்துவம் கோரவில்லை. தவிர, உலகின் இதர பாகங்களில் முஸ்லீம் சிறுபான்மையினருக்கு, அத்தகைய சலுகைகள் காட்டப்படுவதில்லை. அல்பேனியா, ருமேனியா, கிரீஸ், பல்கேரியா நாடுகளிலுள்ள முஸ்லீம் சிறுபான்மையினர், ஒரு காலத்தில் ஆட்சியாளர்களாக இருந்தவர்களின் எஞ்சியவர்களேதாம். எனினும், அவற்றில் எந்த நாட்டிலும், அவர்கள் பிரதிநிதித்துவத்தில் அரசு பங்கு கேட்கவில்லை. செல்வாக்குக்குத் தகுந்தாற் போன்ற பிரதிநிதித்துவத்துக்கான முஸ்லீம் கோரிக்கை, இது காறும் கேள்விப் பட்டிராத ஒன்று என்பதுடன், பிரதிநிதித்துவ அரசாங்க அமைப்புக்கு முற்றிலும் அன்னியமானது ஆகும். நிலப் பிரபுக்களும், முதலாளிகளும், மதகுருமார்களும் ஒவ்வொரு சமுதாயத்திலும் பெருத்த செல்வாக்கும் படைத்தவர்களே; என்றாலும், அந்த வகுப்பார்களுக்கு, அதிகமான பிரதிநிதித்துவப் பங்கினை அளிக்க வேண்டுமென்று எவரும் ஒப்புக் கொண்டதில்லை. எல்லா இடங்களிலும், இத்தன்மைக்கான கோரிக்கைகள் தள்ளுபடி செய்யப் பட்டிருக்கும் போது, முஸ்லீம்களின் கோரிக்கை மட்டும் ஏன் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் கிடையாது.

75. முஸ்லீம்கள் இந்தியாவை ஐந்து நூற்றாண்டுகளுக்கு ஆண்டார்கள் எனில், அவர்களுக்கு முன்பும், பின்பும் கணக்கற்ற நூற்றாண்டுகளுக்கு ஹிந்துக்கள் ஆட்சி செய்துள்ளனர் என்பதையும் மறந்து விடலாகாது; இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி தோன்றுவதற்கு முன்னர், முஸ்லீம்களின் நிலை எவ்வாறாக இருந்த போதும், பிரிட்டிஷாரின் வெற்றியின் விளைவாக, எல்லா இனத்தவருமே பொதுவான மட்டத்தில் உள்ளனர் என்றும், அவர்களது அரசியல், கடந்த காலம் பற்றிக் கவனம் செலுத்தக் கூடாதென்றும், அடிப்படையில் நாம் சிந்திப்பதே சரியான வழியாகும். அத்தகைய நோக்கு நியாயமானது என்பதுடன், இந்தியக் குற்றவியல் சட்டத் தொகுப்பினை வகுத்துரைத்த, சட்ட ஆணையர்கள் வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பிய உரையில், வெளிப்படுத்திய உணர்வுகளுக்குப் பொருந்த உள்ளன. அதில் அவர்கள் கூறியுள்ளதானது :

''கம்பெனி பிராந்தியத்திற்குள் வசிக்கும், இந்தியாவின் எந்தப் புராதன சுயாட்சி பெற்ற மனைகளுக்கும் இந்த நடைமுறைகளிலிருந்து விலக்களிக்க நாங்கள் முன்மொழியவில்லை என்பதைச் சபையின் மேன்மை தங்கிய பெருமக்கள் காணக் கூடும். அத்தகைய விதிவிலக்கு ஏற்படுத்தப்பட வேண்டுமா என்பது ஒரு கேள்வி. அந்தக் கேள்வியை, தற்போதுள்ள உடன்படிக்கைகள் குறித்து எங்களுக்கு மேலும் துல்லியமாகத் தெரிந்திராததாலும், அந்த உடன்படிக்கைகள் எத்தகைய உணர்வில் புரிந்து கொள்ளப்

படுகிறது, அந்தப் பேச்சு வார்த்தைகளின் வரலாறு; குறிப்பிட்ட குடும்பங்களது மன நிலைப் போக்கு மற்றும் அவர்களது அதிகாரம், அந்தக் குடும்பங்கள் குறித்த மக்கட் குழுவினரின் உணர்வு போன்றவற்றைத் தெரிந்திராததாலும், நாங்கள் தீர்மானிக்க முயல இயலாது. அவ்வாறு ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு விதி விலக்கும் ஒரு தீமை என்றும், எந்த ஒரு மனிதனும் சட்டத்திற்கும் மேம்பட்டவன் என்பது ஒரு தீமை என்றும்; சட்டத்திற்கும் மேம் பட்டிருப்பது ஒரு உயர்ந்த, பொறாமைப்படக் கூடியதொரு தனிச் சிறப்பு என்று மக்களுக்குக் கற்றுக் கொடுப்பது அதைக் காட்டிலும் பெரிய தீமை என்றும், அந்தச் சலுகைகள் எவ்வளவு காலம் நீடிக் கிறதோ, அந்த அளவுக்கு அவற்றைத் திரும்பப் பெறுவது கடினம் என்றும்; அத்தகைய சலுகைகளைத் திரும்ப பெறுவதற்கான மிகச் சிறந்த வாய்ப்பு, பல்வேறு இன மத மக்கள் அனைவரையும் ஒரு சேரப் பிணைக்கும் ஒரு புதிய சட்டத்தினை அரசாங்கம் பிரகடனம் செய்வதற்கான நேரத்தைக் காட்டிலும் சிறந்தது இருக்க முடியாதென்றும்; பொது நம்பிக்கை வாக்குறுதியைக் காட்டிலும், வேறு எந்தக் கருத்தும், சமமான நீதியின் சாதக நிலைகளுக் கெதிராக எடை போடப்பட முடியுமா என்று நாங்கள் கருது கிறோம் என்றும்; நாங்கள் மிகப் பணிவன்புடன் உங்கள் முன் சமர்ப்பிக்க அனுமதி கோருகிறோம்.''

76. இவை பெரும் விவேகத்துடன் கூறப்பட்ட வார்த்தைகள்; இந்தியப் பொதுவிவகாரங்களைக் கவனிப்போரது வழிகாட்டலுக்கு, இதைக்காட்டிலும் மேலான விவேக வாசகங்கள் கூறப் பட்டதில்லை என்று நான் உறுதியாகக் கூறுவேன். அந்த வாசகங் கள் உரைக்கப்பட்டச் சந்தர்ப்பம், மற்றும் நோக்கம் ஆகிய வற்றால் மட்டுமே அந்த விவேக வாசகத்தின் பொருளை வரை யறைப்படுத்தி விட முடியாது. அவை, தற்போதைய சந்தர்ப்பத் திற்கும், அதே அளவு அல்லது அதைக் காட்டிலும் மிகுந்த வலிமை யுடன் பொருந்துவதாக உள்ளது. சட்ட ஆணையர்களின் வார்த்தை களில் கூறப் போனால், எந்த ஓர் இனமும், மற்றவற்றைக் காட்டி லும் மேலானது என்று நாட்டின் அரசியல் சட்ட விதி ஏற்பது ஒரு பெரும் தீமை என்று நான் கூற முற்படுகிறேன். ஒரு இனத்தை உயர்வாகவும், வேறொன்றைத் தாழ்வாகவும் கருதுமாறு, அரசியல் முக்கியத்துவத் தராசில் அவற்றை மக்கள் பகுதியினர் எடை போடு மாறு அவர்களுக்குக் கற்பிப்பது, அதைக் காட்டிலும் பெரிய தீமையாகும்; அத்தகைய எண்ணங்கள் எவ்வளவு நீண்ட காலம் நீடிக்கிறதோ, அவ்வளவுக்கு அவற்றை அகற்றுவது கடினம்; பல்வேறு இன, மதங்களைச் சேர்ந்த மக்களை ஒன்றாகப் பிணைக் கும் அரசியல் சட்டத்தின் புதிய விதியை நாடாளுமன்றம் பிரகடனப் படுத்தும் போது, அந்த எண்ணங்களை அகற்றுவதற்கான மிகச் சிறந்த சந்தர்ப்பமாகும்.

77. பிரதிநிதித்துவ விஷயத்தில், எல்லாச் சிறுபான்மை யினரையும் சமமாகப் பாவித்தல் என்பது சிறுபான்மைப் பிரதி

நிதித்துவப் பிரச்சினையின் ஒரு பகுதியேயாகும். இட ஒதுக் கீட்டில், திருப்திகரமான அளவு ரீதியிலான செயல்பாட்டை நிர்ணயிப்பது, அந்தப் பிரச்சினையின் மற்றொரு முக்கியமான பகுதியாகும். ஆனால் இது வெறும் கருத்து மாறுபாட்டுக்குரிய பிரச்சினையாகும். ஒன்றுக்கொன்று கருத்து மாறுபட்டுக்குரிய பிரச்சினையாகும். ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு கோட் பாடுகளில், மக்கள் தொகையினரின் சரியான வீதாசாரப்படி, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பது ஒன்று. சிறுபான்மையினரால் பலமாகப் பிடித்துக் கொள்ளப் பட்ட மற்றொன்று, அத்தகைய பிரதிநிதித்துவம் போதிய அளவில் இருக்க வேண்டுமென்பதாகும். பிரதிநிதித்துவத்தில் கணக்கீட்டுக் கோட்பாட்டினை ஒப்புக் கொள்ள முடியும் என்று நான் நினைக்க வில்லை. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான, ஒவ்வொரு இனப் பிராணியும் வைக்கப்பட்டுள்ள, மிருகக் காட்சிச் சாலை அல்லது அருங்காட்சியகமாகச் சட்ட மன்றம் இருக்குமேயானால், சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்திற்கான அத்தகைய கோட் பாடு, சகித்துக் கொள்ளத் தக்கதாகவிருக்கும். ஆனால், சட்ட சபையானது ஒரு மிருகக் காட்சி சாலையோ அல்லது அருங்காட்சி யகமோ அல்ல. அது உரிமைகளைப் பெறுவதற்கும், சலுகைகளை அழிப்பதற்கும், அநீதியைத் தடுப்பதற்கும் ஆனதொரு போர்க் களமாகும். இந்தக் கண்ணோட்டத்தின்படி பார்க்கும் போது, ஒரு சிறுபான்மையினம், தனது மக்கட்தொகையின் முழு அளவுக்குத் தகுந்தாற்போல் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளதைக் கண்ட போதிலும், எதிர்ப்புணர்ச்சியுள்ள பெரும்பான்மையினருக்கு எதிராக, தனது நிலையைப் பாதுகாத்துக் கொள்ளவும், மேம் படுத்தவுமான ஒவ்வொரு முயற்சியின் போதும், தாங்கள் தோற் கடிக்கப்படும் அளவுக்கு, தங்களது எண்ணிக்கைக் குறைவாக இருப் பதைக் காண்பார்கள். சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவம் ஒரு அரசியல் கோரிக்கையாக அமையக் கூடாதெனில், மக்கள் தொகை வீதாசாரப்படியான பிரதிநிதித்துவக் கருத்துக் கைவிடப் பட வேண்டும்; மக்கள் தொகை விகித்தத்தைக் காட்டிலும் மிதப்பு அளிக்கும் வகையில் சற்றுக் கூடுதலாக அவர்களுக்குப் பிரதிநிதித் துவம் அளிக்கப்பட வேண்டும்.

78. மதிப்பளிப்பதன் அவசியத்தை ஏற்பது மிக முக்கியமான தாகும். அந்த மதிப்பீடானது புத்திசாலித்தனமும், நேர்மையு மானதொரு கோட்பாட்டின்படி, சிறுபான்மையினருக்கு அளந்து அளிக்கப்பட வேண்டியது அதைக் காட்டிலும் முக்கியமானதாகும். ஏனெனில், தேவையான பாதுகாப்பினைக் கோரும் வகையில் சிறுபான்மையினரது கோரிக்கைகள், சிறிதும் பொருந்தாத நிலை யிலும் இருக்கக் கூடும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். இதைத் தவிர்ப்பதற்கு, போதுமான பிரதிநிதித்துவம் என்பதை நாம் எவ்வாறு பொருள் கொள்கிறோம் என்பதை நாம் வரை யறை செய்ய வேண்டும். போதுமானது என்பதைத் துல்லியமாக

வரையறுப்பது முடியாத காரியம் என்பதில் சந்தேகமில்லை; ஆனால், நாம் சில பரந்த அடிப்படைகளை மனதில் கொண்டால், தெளிவற்ற தன்மையைப் பெரிதும் குறைத்து விட முடியும். முதலாவதாக, சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தில், ஒருபுறம் போதுமானது என்பதற்கும், மறுபுறம் மேலாண்மை என்பதற்கும் இடையேயான வேறுபாட்டினை நாம் வரையறுக்க வேண்டும். மேலாண்மை என்றால், சிறுபான்மையினரைச் சர்வாதிகாரிகளாக்கும் அளவிலான பிரதிநிதித்துவத்தையே நான் குறிப்பிடுகிறேன். போதுமான அளவு பிரதிநிதித்துவம் எனும் போது, பெரும்பான்மையினரில் எந்தத் தரப்பும், சிறுபான்மையினரிடம் நேசக்கரம் கொள்வது நலம் பயக்கும் என்று கருதுமளவிலான பிரதிநிதித்துவத்தையே நான் கூறுகிறேன். எப்பொழுது ஒரு கட்சி, சிறுபான்மையினருடன் நேசக்கரத்திற்கு வற்புறுத்தப்படுகிறதோ, அப்பொழுது சிறுபான்மை, ஒரு சர்வாதிகார நிலையை எட்டி விடுகிறது. அதற்கு மாறாக, எப்பொழுது ஒரு கட்சி, சிறுபான்மையினருடன் நேசக் கரத்திற்கு விழைகிறதோ, அப்பொழுது அது போதுமான அளவு பிரதிநிதித்துவப்பட்டுள்ளது. எனவே, சிறுபான்மையினருக்கு இடங்களை ஒதுக்கும் விஷயத்தில் மனதில் கொள்ள வேண்டியது, போதுமானது. மற்றும் மேலாண்மை ஆகிய இரு துருவங்களையும் தவிர்ப்பதேயாகும். என்னுடைய அபிப்பிராயப்படி, சிறுபான்மையினருக்கு எத்தனை இடங்கள் தரப்பட வேண்டும் என்பதை முறைப்படுத்துவதற்கு, சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்திற்கு நாம் ஒரு சூத்திரத்தைக் கடைப்பிடித்தால், மேற்சொன்ன இரு துருவங்களையும் நாம் தவிர்க்க முடியும். அதாவது, சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவ இடங்கள் எவ்வாறிருக்க வேண்டுமெனில், மொத்த இடங்களில், சிறுபான்மையினரின் விகிதத்தை, ஒன்றுக்கு மேற்பட்ட ஆனால் இரண்டுக்கு குறைவானதொரு அம்சத்தால் பெருக்கினால் வரும் எண்ணிக்கையாக இருக்க வேண்டும்.

79 இந்தக் கோட்பாடானது, சிறுபான்மையினருக்கான பிரதிநிதித்துவம் எந்த வரம்புக்குள் இருக்க வேண்டுமென்பதை மட்டுமே நிர்ணயிக்கிறது. இந்தப் பெருக்குத் தொகை எவ்வாறு வேறுபடும் என்பதை அது நிர்ணயிக்காமல், தெளிவற்றதாக விட்டுள்ளது. சம்பந்தப்பட்ட, குறிப்பிட்டச் சிறுபான்மையினரின் தேவைகளைப் பொருத்து, அந்த எண் மாற வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த முறையின் மூலம், சிறுபான்மையினரின் மதிப்பினை அளவிடுவதற்கானதொரு கோட்பாடு நமக்குக் கிடைக்கிறது; இது விவேகமானதும், நியாயமானதுமாகும். சிறுபான்மையினரின் தேவைகள் ஏறக்குறைய துல்லியமாகக் கண்டறியப்படக் கூடியதே. அரசியல் பாதுகாப்புக்கான சிறுபான்மையினரின் தேவைகள், சமூகப் போராட்டத்தில் அது தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான அதிகாரத்திற்குத் தகுந்தவாறு அமையவேண்டும் என்பதில் பொதுவான உடன்பாடு இருக்கும். அந்த அதிகாரமானது, சிறு

பான்மையினரின் கல்வி மற்றும் பொருளாதார அந்தஸ்தைப் பொறுத்தது என்பது கூறாமலே விளங்கும். ஒரு சிறுபான்மையினரின் கல்வித் தரமும், பொருளாதாரத் தரமும் எவ்வளவுக்கெவ்வளவு உயர்ந்துள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அந்தச் சிறுபான்மையினரை அரசியல் ரீதியாகப் பாதுகாக்கும் தேவை குறைகிறது. அதற்கு மாறாக, அதன் கல்வி மற்றும் பொருளாதார அந்தஸ்து குறைந்திருந்தால், அந்த அளவுக்கு அரசியல் பாதுகாப்பிற்கான அவசியம் அதிகரிக்கும்.

80. சமத்துவக் கோட்பாடு ஒரு புறமும், தகுந்த அளவு எனும் கோட்பாடு மறுபுறமாக எனது திட்டவட்டமான அடிப்படை நிலையிலிருந்து, பல்வேறு சிறுபான்மையினருக்கும் எனது தோழர்கள் ஆலோசனை வழங்கிய இட ஒதுக்கீடு பற்றி நான் சில சந்தேகங்களை எழுப்ப வேண்டியதாகிறது. மொத்த 140 இடங்களில், முஸ்லீம்களுக்கு 33 இடங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 15 இடங்களும் தருவதே எனது முன்மொழிவு. இது கவுன்சிலின் மொத்த இடங்களில் முஸ்லீம்களுக்கு 23 சதவிகிதமும் தாழ்த்தப்பட்டோருக்கு 10.7 சதவிகிதமும் ஆகும். இதன் மூலம், அவரவர்களது மக்கள் தொகை விகிதத்தைக் காட்டிலும் முஸ்லீம்கள் 4 சதத்தையும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் 2 சதத்தையும் அதிகமாகப் பெறுகின்றனர். அந்தந்த இனத்தவர்களுக்கு இந்த அளவு மதிப்பு அளித்தல் நியாயமானதும், தேவையானதும் ஆகும் என்றும், அது அனுமதிக்கப்படக் கூடியதே என்றும் நான் கருதுகிறேன். அதன்றி, முஸ்லீம் பிரதிநிதித்துவ விகிதம் மாற்றப்படாமலுள்ளது என்பது எனது ஆலோசனைக்கு ஏற்பாக உள்ளது. தற்போதைய கவுன்சிலில், மொத்தப் பிரதிநிதித்துவத்தில் முஸ்லீம்கள் 23 சதவீதமாக உள்ளனர். எனது திட்டத்தின் விளைவாக, புதிய கவுன்சிலில் அவர்களது அதே விகிதப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

81. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நான் அனுமதித்துள்ள பிரதிநிதித்துவ அளவு குறித்து — சிலர் — எதிர்ப்பு என்று நான் கூறவில்லை. ஆதரவின்மையைத் தெரிவிப்பதால், அந்த மூட்டத்தைக் கலைப்பதற்கு நான் கூடுதல் விளக்கம் அளிக்க வேண்டியவனாகின்றேன். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு, தொடக்கத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரதிநிதித்துவம் முற்றிலும் நியாயமற்றது என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. கூட்டு அறிக்கையைத் தயாரித்தவர்கள், தெளிவாகக் கூறியுள்ளனர் (153-வது பத்தி): ''(தாழ்த்தப்பட்ட வகுப்பினரது) பிரதிநிதித்துவத்திற்கு எங்களால் முடிந்த அளவு சிறந்த ஏற்பாடுகளைச் செய்ய நாங்கள் எண்ணியுள்ளோம்.'' ஆனால், வாக்குரிமை, தொகுதிகளை அமைத்தல், இந்தியாவில் நிலவும் வழக்கத்திற்கு மாறான சமூக நிலைமைகளின் விளைவாக, உத்தேசிக்கப்பட்ட மக்கள் அரசாங்க அமைப்பில் எத்தகைய சீரமைப்பைக் கொணரலாம் என்பதைப் பரிந்

துரைப்பதற்கு, அதற்குப் பின்னர் அமைக்கப்பட்ட சவுத்பரோ கமிட்டி, மேற்சொன்ன வாக்குறுதியை காற்றில் பறக்க விட்டு விட்டது. தாழ்த்தப்பட்ட சமூகங்களின் நலன்களைப் பாதுகாப் பதற்குப் போதுமான ஏற்பாடுகளைச் செய்யும் பிரச்சினையில் சவுத்பரோ கமிட்டி எவ்வளவு அப்பட்டமான மெத்தனம் காட்டி யுள்ளது என்பது, இது விஷயத்தில் குறிப்பான அக்கறையோ, உணர்ச்சியோ, இல்லாத இந்திய அரசாங்கமே, சவுத்பரோ கமிட்டியின் அறிக்கை பற்றிய தனது தாக்கீதின் 13-வது பத்தியில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளது: ''பொதுவாக, நாங்கள் அக் கருத்தினை (அதிகாரபூர்வமற்ற நியமனத்தை) ஏற்றுக் கொள் கிறோம். ஆனால், கமிட்டி தந்துள்ள கவனத்தைக் காட்டிலும், அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியதொரு சமூகம் இருப்பதாக எங்களுக்குத் தோன்றுகிறது. இந்திய அரசியல் சட்ட சீர்திருத்த அறிக்கையானது, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிரச்சினையைத் தெளிவாக ஏற்று, அவர்களுக்கு மதிப்பளிப்பதாக வாக்குறுதி தந்துள்ளது. கமிட்டியின் அறிக்கையில், குறிப்பிடப்பட்டுள்ள ''ஹிந்துக்கள்-இதரர்கள்'' என்ற சாதிகள், பல்வேறு சொற் றொடர்களால் வர்ணிக்கப்பட்டிருந்தாலும் கூட, பொதுவாகப் பார்க்கப் போனால், அனைவருமே ஒரே வகைப்பட்ட மக்களே. அவர்களைத் தவிர்ப்பதில் காட்டப்படும் கண்டிப்பில் உள்ள வேறுபாடுகளைத் தவிர, அவர்கள் அனைவருமே ஏறக்குறைய சென்னை 'பஞ்சமர்'களின் நிலையிலேயே உள்ளனர்; கோவில் களில் நுழைவதிற்கு அனுமதிக்கப்பட்ட ஹிந்து இனத்தவருக்கு, நிச்சயம் அப்பாற்பட்டே உள்ளனர். அவர்கள், மொத்த மக்கள் தொகையினரில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு ஆகின்றனர்; அவர்களுக்கு, மார்லி-மின்டோ கவுன்சில்களில் எந்தப் பிரதி நிதித்துவமும் கொடுக்கப்படவில்லை. கமிட்டியின் அறிக்கையில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பற்றி இருமுறை குறிப்பிடப் பட்டுள்ளது; அதுவும்கூட, அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தேர்தல் தொகுதிகள் திருப்திகரமாக இல்லாததால், நியமனம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் அந்த மக்களின் ஆற்றல் குறித்த நிலை பற்றி அது விவாதிக்கவில்லை. தவிர, அவர்களுக்கு எவ்வளவு நியமன இடங்கள் கொடுப்பதென்ற குறிப்புகளும் விளக்கப்படவில்லை. (வாக்குரிமைக் கமிட்டியின்) அறிக்கையின் 24-ஆவது பத்தி, நியமன இடங்களுக்கு வரம்பு கட்டுவதை நியாயப்படுத்துகிறது; அதற்கான காரணங்களைக் கூறும்போது, கமிட்டி தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தான் குறிப்பிடுகிறது என்று காட்ட ஏதுமில்லை. இந்த வகுப்பினருக்கு அவர்கள் முன்மொழிந்துள்ள பிரதிநிதித்துவ அளவு கீழ்வருமாறு:

| மாநிலம் | மொத்த மக்கள் தொகை (பத்து இலட்சத்தில்) | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தொகை (பத்து இலட்சத்தில்) | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட இனங்களுக்கான இடங்கள் |
|---|---|---|---|---|
| சென்னை .................. | 39.8 | 6.3 | 120 | 2 |
| பம்பாய் ..................... | 19.5 | 0.6 | 113 | 1 |
| வங்காளம் .................. | 45.0 | 9.9 | 127 | 1 |
| ஐக்கிய மாநிலங்கள் ....... | 47.0 | 10.1 | 120 | 1 |
| பஞ்சாப் .................... | 19.5 | 1.7 | 85 | — |
| பீஹார் மற்றும் ஒரிசா .... | 32.4 | 9.3 | 100 | 1 |
| மத்திய மாநிலங்கள் ....... | 12.0 | 3.7 | 72 | 1 |
| அஸ்ஸாம் .................. | 6.0 | 0.3 | 54 | — |
| | 221.2 | 41.9 | 791 | 7 |

இந்த விவரங்கள் சுய விளக்கம் தருபவை. பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த மக்கள்தொகையினரில் ஐந்தில் ஒரு பங்காக உள்ளவர்களுக்கு, அநேகமாக 800 இடங்களில் 7 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எல்லாக் கவுன்சில்களிலும், தோராயமாக ஆறில் ஒரு பங்கு அதிகாரிகள் இருப்பர் என்பது உண்மைதான்; அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களின் நலன்களை மனதில் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது; ஆனால், அந்த ஏற்பாட்டினை, சீர்திருத்தங்கள் குறித்த அறிக்கை நோக்காகக் கொள்ளவில்லை என்பதே எமது கருத்து. சுய பாதுகாப்புப் பாடத்தையும், தாழ்த்தப்பட்ட இனத்தவர் கற்றுக் கொள்ள வேண்டுமென 'அறிக்கையின் ஆசிரியர்கள் கூறியுள்ளனர். 60-லிருந்து 90 சாதி ஹிந்துக்கள் உள்ளதொரு சபையில், தாழ்த்தப்பட்ட இனத்தவரில் ஒரே ஓர் உறுப்பினரைச் சேர்ப்பதன் மூலம், அது சாத்தியம் என்று எதிர்பார்ப்பது நம்பிக்கையே. அறிக்கையின் 151, 152, 155 பத்திகளின் கோட்பாடுகளைச் சரிக் கட்டுவதற்கு, நாம் சமூகத்தின் புறம்பானவர்களை மேலும் பரிவுடன் நடத்த வேண்டும்....''

82. தாழ்த்தப்பட்ட இனத்தவரது பிரதிநிதித்துவ விஷயத்தில் சவுத்பரோ கமிட்டி நியாயமற்ற முறையில் நடந்து கொண்டுள்ளது என்று கூட்டுத் தேர்வுக் கமிட்டியே கூட ஏற்றுள்ளது. ஏனெனில் தனது அறிக்கையில் அந்தக் கமிட்டி கீழ்வருமாறு கூறும்படியாயிற்று: ''தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள பிரதிநிதித்துவம் போதுமானதல்ல. வாக்குரிமைக் கமிட்டி அறிக்கையில் காட்டப்பட்டபடி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகையினரில் பெரும்பகுதியினர் அந்த வரையறையில்

அடக்கப்பட்டுள்ளனர். அது ஆலோசனை வழங்கியுள்ளதைப் போன்று, ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கைக்கு மதிப்பளித்து, உள்ளாட்சி நிறுவனங்கள் கலந்தாலோசித்து, இந்திய அரசாங்கம், அத்தகைய வகுப்பினருக்கு, நியமனம் மூலம், விரிவான பிரதிநிதித்துவப் பங்கினை மேற்கொள்ள வேண்டுமென்று அவர்கள் எண்ணுகின்றனர். இத்தகைய பிரதிநிதித்துவமானது, தேவைப்பட்டால், பொதுத் தேர்தல் தொகுதிகளுக்குக் கூடுதலாகத் தான் இருக்க வேண்டுமேயல்லாது, அதற்குக் குறைவாக அல்ல.'' இவை அனைத்தும் என்ன பயனுமில்லை; தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு சவுத்பரோ கமிட்டி இழைத்த தவறு அகற்றப்படாமலேயே உள்ளது. தற்போதைய நடவடிக்கையானது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அளவுக்கதிகமான பிரதிநிதித்துவம் வழங்கும் முயற்சி அல்ல. இழைக்கப்பட்ட தவற்றை அகற்றுவதற்கான முயற்சியே அது. பிரதிநிதித்துவ அளவினைக் கூறும்போது, அது அளவுக்கு மீறியது என்ற குற்றச்சாட்டு எழுப்பப்படும் என்றும் கூற முடியாது. ஏனெனில், ''இந்த இரு நலன்களுமே (அதாவது, தொழிலாள வர்க்கம் மற்றும் தாழ்த்தப்பட்டவர்கள்) மேலும் கூடுதலான பிரதிநிதித்துவம் பெறுவது விரும்பத்தக்கது என்ற உண்மை மிகப் பரவலாக ஏற்கப்படுகிறது'' என்றும், ''இந்தக் கருத்துடன் தனக்கு உடன்பாடு உண்டென்றும்'' தெரிவித்த முடிமான் கமிட்டி கூட, 113 பேர் கொண்ட சட்டக் கவுன்சிலில் அவர்களுக்குப் 11 இடங்களை முன் மொழிந்துள்ளது 113 இடங்களில் 11 என்பது நியாயமான ஒதுக்கீடு எனில், 140 இடங்களில் 15 என்பது மிகவும் மிதமானதேயாகும். தொடக்க ஒதுக்கீடு மிகவும் குறைவாக இருந்ததால், 15 என்பது மிக அதிகம் போல் தோன்றுகிறது. தற்போதுள்ள ஒதுக்கீட்டைக் காட்டிலும் 15 என்பது மிகப் பெரிய எண்ணிக்கை என்று எதிர்ப்புக் காட்டுவோர், தரமான அளவு தங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டத் தொடக்க ஒதுக்கீடு நேர்மையானதோ, நியாயமானதோ அல்ல என்பதை மறந்து விடுகின்றனர்.

83. தெளிவுபடுத்தப்பட வேண்டிய மற்றுமொரு விஷயம் உள்ளது. முஸ்லீம் இனத்தாருக்கு இட ஒதுக்கீட்டினை விவாதிக்கும், தங்களது அறிக்கையின் 16-வது பத்தியில், எனது தோழர்கள், ''எங்களது உறுப்பினர்களில், சர்தார் மஜும்தார், டாக்டர் அம்பேத்கர் ஆகிய இருவரும், எல்லா மாநிலங்களையும் பொறுத்த அளவில் லக்னோ ஒப்பந்தம் நீடிக்கும் வரை தான் இந்த ஏற்பாடு நீடிக்க முடியும் என்ற கருத்தினைத் தெரிவித்துள்ளனர்'', என்று கூறியுள்ளனர். எனது தோழர்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டதால், என்னைத் தவறாகக் கூறியுள்ளனர். நான் சுட்டிக் காட்ட விரும்பியது என்னவென்றால், வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளையோ அல்லது முஸ்லீம்களுக்கு வழங்கப்படும் இடங்களின் எண்ணிக்கையோ. அவர்கள் நியாயப்படுத்தாததால், இது லக்னோ உடன்பாட்டிற்கு ஏற்ப உள்ளது என்று தங்களது அறிக்கையில் குறிப்பிடுவது நல்லது என்று கூறினேன். ஆனால்,

நான் கூறியனவற்றை, எனது தோழர்கள் எடுத்துரைப்பதைப் பார்க்கும் போது, நான் லக்னோ ஒப்பந்தத்தை ஆதரிப்பதைப் போல உள்ளது. இந்தக் குறிப்பு முறைகேடானது என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்கிறேன்.

### 2. புவியியல் ரீதியிலான இட ஒதுக்கீடு

84. பல்வேறு சிறுபான்மையினருக்கும் இடங்களை ஒதுக்குவது பற்றிய பிரச்சினையில் மட்டுமே, என் சகாக்களுடன் எனக்குள்ள வேறுபாடு நின்று விடவில்லை. அது, வெவ்வேறு தொகுதிகளிலும், இடங்களைப் பகிர்ந்தளிக்கும் விஷயத்திலும் தொடர்கிறது. இப்போது அமைக்கப்பட்டிருக்கும் கவுன்சிலின் ஒரு வெறுப்பூட்டும் அம்சம், சில பகுதிகள் மிகு பிரதிநிதித்துவம் பெற்றுள்ள போது, மீதியுள்ளவை குறை பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதாகும். இத்தீமையின் மாபெரும் அளவினைக் கீழ்க்காணும் விவரங்கள் தெளிவுபடுத்தும்.

| மாநிலங்கள் | பரப்பு(சதுர மைல்களில்) | மக்கள் தொகை | 1925-26 நில வருவாய்க் கோரிக்கை | தற்போது கவுன்சிலில் இடங்கள் |
|---|---|---|---|---|
| | | | ரூபாய் | |
| மகாராஷ்டிரா ... ... | 47,854 | 8,536,217 | 218,18,155 | 25 |
| குஜராத் ... ... | 10,118 | 2,958,849 | 99,41,264 | 16 |
| கர்னாடகம் ... ... | 18,870 | 3,188,523 | 82,91,225 | 8 |
| சிந்து ... ... | 46,506 | 3,279,377 | 103,85,031 | 19 |

85. சமத்துவமற்ற நிலை எவ்வளவு உறுத்தலாக உள்ளது என்பது மேற்சொன்ன அட்டவணையிலிருந்து தெரிகிறது. மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டால், மகாராஷ்டிரமும், கர்னாடகமும் பெரிதும் குறைவான பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. குஜராத்தை ஒரு எடுத்துக்காட்டாகக் கொண்டால், மகாராஷ்டிரத்திற்கு 48 இடங்களும், கர்னாடகத்திற்கு 17 இடங்களும் இருந்திருக்க வேண்டும். நில வருவாயை அடிப்படையாகக் கொண்டாலும், மகாராஷ்டிரமும், கர்னாடகமும் சந்தேகமின்றி மிகவும் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டுள்ளன. ஏனெனில் அந்த அடிப்படையிலும் கூட, மகாராஷ்டிரத்திற்கு 32-ம், கர்னாடகத்திற்கு 15 இடங்களும் கிடைத்திருக்க வேண்டும். சமமான வாக்காளர் அதிகாரத்திற்கான இந்தக் கோரிக்கையானது, வெறும் உணர்ச்சி வயப்பட்ட கோரிக்கையோ அல்லது சரியான வாக்கு ஒழுங்கமைவுக்காகவோ அல்ல. இதன் பின்னே, போதிய தத்துவார்த்த நியாயங்கள் உள்ளன. ஏனெனில், ஒரு தொகுதியில் வாக்குகளின் மதிப்பு உயர்வாகவும், மற்றொன்றில் குறைவாகவும்

இருப்பின், தங்களது ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில், ஒரு இனத்தைச் சேர்ந்த ஒவ்வோர் உறுப்பினருக்கும், இதர மக்கள் ஒவ்வொருவருடனும் சமமான பங்கு இல்லை என்ற வெளிப் படையான எதிர்ப்புக்கு அது உள்ளாகிறது. எல்லா வாக்கு களுக்கும் துல்லியமான சமத்துவக் கோட்பாடு, அரசியல் ரீதியின் அடிப்படைக் கோட்பாடாகக் கருதப்படாவிடினும் கூட, இவ் வகைப்பட்ட வேறுபாடுகள், நாட்டின் ஒரு பகுதி, அதிக பிரதி நிதித்துவம் பெற்றிருப்பதால் அல்லது ஒரு சாராரின் அபிப் பிராயங்களும், நலன்களும், மற்றவர்களது நலன்களையும் அபிப் பிராயங்களையும் வெளிப்படுத்த முடியாமல் போவதால், தீய விளைவுகளை ஏற்படுத்தத் தவறுவதில்லை. தற்போதுள்ள இடப் பங்கீட்டு முறை, சட்ட மன்ற மற்றும் நிர்வாகச் செயல்பாட்டின் புவி ஈர்ப்பு மையத்தை, இராஜதானியின் சில குறிப்பிட்ட பகுதி களுக்கு—இதர பகுதிகளின் இழப்பின் மூலம்—முறையற்றுப் பிரித்து விடுகிறது; அதன் விளைவாக, இதர பகுதிகள் காரண மின்றி, அரசாங்கத்தின் கவனத்தையும், கருத்தையும் கவர்வதற்குப் போதுமான பங்கினைப் பெற முடியாமல் போகிறது. இந்த நடை முறைக் கண்ணோட்டத்தின்படி, தற்போதுள்ள இடப் பங்கீட்டு முறை குறைபாடானதே; அதிலுள்ள நியாயத்தை எவரும் மறுக்க முடியாது. தற்போதுள்ள நிலவரத்தின்படி, கர்னாடகமும், மகா ராஷ்டிரமும், அவற்றின் உறுப்பினர்களது எண்ணிக்கையின் காரணமாக, இந்த மாநிலத்தில், அரசாங்கத்தின் மீது செல் வாக்குச் செலுத்த முடியாது. கர்னாடகத்தின் சான்று குறிப்பிட் டுள்ளதைப் போன்று, இது ஒரு வலுவான குறைபாடாகும். சட்டக் கவுன்சிலின் பொறுப்பான தன்மை அதிகரிக்கும் போது, இந்தக் குறைபாடும் அதிகரிக்கவே செய்யும்; அதோடு, பொது விவகாரச் செயல்பாட்டில் அது பிரயோகிக்கும் செல்வாக்கும் அதிகரிக்கும். எனவே, கசப்புணர்வு மடிவதற்குப் பதிலாக, மேன் மேலும் தீவிரப்படும் என்று பயப்படக் காரணம் ஆகியது. ஆகவே, ஒரு பொறுப்பான பிரதிநிதித்துவமான அரசாங்கமாக ஆக்கும் நோக்குடன், நாம் அரசாங்க இயந்திரத்தையே பழுது பார்த்துச் சீரமைக்கும் போது, இந்தக் குறைபாடும் களைந்தெறியப் பட வேண்டும்.

86. இடப்பங்கீட்டு விஷயத்தில் எந்தவொரு குறிப்பிட்ட கொள்கையையும் கடைப்பிடிக்க மறுத்து, மனம் போன போக்கில் சவுத்பரோ கமிட்டி செயல்பட்டுள்ள காரணத்தால், மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு இழப்பு ஏற்படும் வகையில், சில பகுதிகள் அதிகப் பிரதிநிதித்துவம் பெறும் தீமை நிகழ்ந்துள்ளது. இடப் பங்கீடு விஷயத்தில், கூடுமான அளவிற்கு, எனது தோழர்கள் ஒரே சீரான கோட்பாட்டைப் பின்பற்றியுள்ளனர் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், எனது குற்றச்சாட்டு என்ன வெனில், அவர்கள் இடப்பங்கீட்டுக்கு அடிப்படையாக, மிக மோசமான கோட்பாட்டைக் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்பதே

ஆகும். அரசாங்கக் கருவூலத்திற்குச் செலுத்தப்படும் ப்ங்கு, பட்டிய லிலுள்ள வாக்காளர்கள், தொகுதியின் மக்கள் தொகை ஆகிய மூன்று ஆய்வுகள், இடப் பங்கீட்டிற்கான அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். இந்த மூன்றில், வாக்காளர் ஆய்வு பெரிதும் நியாயமற்றதும், நிலையற்றதுமாகும். முதலாவதாக, இப்போதிருப்பதைப் போன்று, வாக்குகள் பெரிதும் வரம்புக்குட் பட்டிருப்பதால், செல்வத்தின் ஆட்சி என்றே அதனைக் கூறலாம். அதன் பொருள் என்னவெனில், சொத்துத் தகுதியின் தன்னிச்சை யான ஆய்வின்படி, ஒரு குறிப்பிட்ட பகுதியில், வாக்காளர்களின் அடிப்படைப் பங்கு இல்லையெனில், அப்பகுதி பிரதிநிதித்துவம் பெறாமலே போய்விடும். வாக்காளர் ஆய்வினைத் தொடர்ந்து, இத்தகைய விளைவு தவிர்க்க முடியாததாகும் என்பதை தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கான பெரும்பான்மை இயக்கம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது; அதன் பங்கீட்டு முறைப்படி, சில பகுதிகளிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பெருமளவு பிரதிநிதித்துவமும், பிற பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பிரதிநிதித் துவமே இல்லாமல் ஆகியுள்ளது. இத்தகைய பொருந்தாத விளை வினைத் தோற்றுவிக்கும் ஒரு தத்துவம் வலிமையற்றதென்று கருதி ஒதுக்கித் தள்ளப்பட வேண்டும். வாக்காளர் ஆய்வினைக் காட்டி லும், வருவாய் ஆய்வு சிறந்தது. ஏனெனில், அரசாங்கத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் அதிகாரம், அரசாங்கத்திற்குச் செலுத்தப் படும் நிதிக்குப் பொருத்தமாக இருக்க வேண்டும் என்று வாதிடக் கூடும். இந்தச் சோதனையும் நிறைவானதல்ல வென்றும், போலி யானதென்றும் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டியதே; ஏனெனில், ஈட்டப்படும் போது, எல்லா வருவாயும் செலுத்தப்படாமலிருக்க லாம்; அப்போது, ஒரு அரசின் உண்மையான வருவாயைக் கண்டறிவது கடினம். பெருத்த வருவாயை ஈட்டும் ஒரு தொகுதி, இடப் பங்கீட்டில் பாதிக்கப்படலாம்; ஏனெனில் அந்த வருவாய் வேறொரு தொகுதியில் கட்டப்படக் கூடும். ஆனால், இந்த இரு ஆய்வுகளுக்குமான, இறுதி எதிர்ப்பு என்னவெனில், அரசு வாக்காளர்கள் அல்லது வரி செலுத்துவோரின் நலனுக்காக அமைவதல்ல என்பதேயாகும். தவிர, அரசு, தனது கட்டாய நடவடிக்கைகளை அவர்களுடன் நிறுத்திக் கொள்வதில்லை. அதன் ஆட்சி அதிகாரம் எல்லா மக்களிடமும்—அவர் வரி செலுத்து வோராயினும், அல்லராயினும், வாக்காளரோ, அல்லரோ— விரிந்து கிடக்கிறது. இதிலிருந்து, மக்கள் தொகை ஆய்வு மட்டுமே, ஒரு நியாயமான, முறையான இடப்பங்கீட்டுக்கான சோதனை என்பது தெரிய வருகிறது. பிரதிநிதித்துவ அரசாங்க அமைப்பு உள்ள, இங்கிலாந்திலும், மற்ற எல்லா நாடுகளிலும் இந்த ஆய்வே பிரயோகிக்கப்படுகிறது; பம்பாய்ச் சட்டக் கவுன்சிலுக்கான இடங் களும், அந்த அடிப்படையிலேயே பங்கீடு செய்யப்பட வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்.

### 3. இடப் பங்கீட்டின் இதர அம்சங்கள்

87. எனது தோழர்கள் முன்மொழிந்துள்ள, சிறுபான்மையினரின் இடப்பங்கீட்டு முறையில் காணப்படும் கோட்பாடின்மை, முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமிடையேயும் நில உரிமையாளர்களுக்கும் பண்ணையாட்களுக்குமிடையேயும் காணப்படுகிறது. வர்த்தகம் மற்றும் தொழிற்துறையினால் பிரதிநிதித்துவப் படுத்தும் முதலாளிகளுக்கு அவர்கள் 11 இடங்களையும், தொழிலாளர்களுக்கு 4 இடங்களையும் மட்டுமே தந்துள்ளனர். பண்ணையாட்களுக்கு அவர்கள் இடமே அளிக்கவில்லை; பொதுத் தேர்தலில் அவர்கள் தப்பிப் பிழைத்து இடம்பெற விடப்பட்டுள்ளனர்; நிலவுரிமையாளர்களுக்கு 5 இடங்களைத் தந்துள்ளனர். இது சரியானதல்ல; ஏனெனில் சிந்து உறுப்பினர்களையும் மாநிலத்திலுள்ள பிறரையும் கணக்கிலெடுத்துக் கொண்டால் கவுன்சிலில் உரிமையாளர்களின் இடங்கள் எளிதில் 40-ஐ அடையும் மற்றும் நகர்ப்புற கிராமப்புற பகுதிகளில் சரியான இடப் பங்கீட்டுப் பிரச்சினையில் அவர்கள் போதுமான கவனம் செலுத்தியுள்ளனர் என்று நான் கூற முடியாது. சட்டமன்றம் தற்போது பெரிதும் கிராமப்புற மக்களைச் சார்ந்தே உள்ளது; நிரந்தரக் குடியிருப்புகள், குறைந்த செலவுள்ள உழவு, மற்றும் பாதுகாக்கப்படாத காடுகள் ஆகியவற்றை வீணாகச் சட்டபூர்வமாக்குவதற்கு விவசாயிகளின் பெயரில் அரசாங்க அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தும் பேரபாயமும் இருக்கிறது. இத்தகைய வீண் எண்ணங்களை சட்டப் புத்தகத்திலிருந்து அரசாங்கம் அகற்ற வேண்டுமெனில் நகர மக்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கப்பட வேண்டியது தேவையாகிறது; நகர மக்களின் திறமைக்கும் அவர்களது பங்கிற்கும் ஏற்றவாறு அவர்களது பிரதிநிதித்துவம் அமையவில்லை. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிடையே தகுந்த இட ஒதுக்கீட்டுப் பணியை ஒரு தனிக் கமிட்டியிடம் எனது தோழர்கள் விட்டிருந்தால் அது சிறப்பாகயிருந்திருக்கும். பலவீனமான இனத்தவர்களுக்கு நீதி அளிப்பதில் அவர்கள் வெற்றிபெற்றார்கள் என்று நான் கூற முடியாது. இந்தப் பிரச்சினையை ஆய்வதற்கு ஒரு தனிக் கமிட்டி அமைக்க வேண்டும் என நான் கூறுகிறேன்.

### 4. இடங்களும் குடியிருப்புத் தகுதிகளும்

88. பம்பாய்த் தேர்தல் விதிகள் 6 (1) (அ) யின் கீழ் சட்டக் கவுன்சில் தேர்தலுக்கான வேட்பாளர்களுக்கு ஒரு குடியிருப்புத் தகுதியைப் பரிந்துரைத்துள்ளது. அந்த விதியின்படி, ''ஒரு தொகுதியில் வேட்பாளர் நியமனத்திற்கான இறுதித் தேதிக்கு உடனடி முன்னதாக ஆறுமாதகாலத்திற்கு அந்தத் தொகுதியில் வசிப்பவராயிருந்தாலோ அல்லது அந்தத் தொகுதியைச் சேர்ந்த இதர எந்தப்பகுதியிலும் வசிப்பவராயிருந்தாலோ அவரே ஒரு பொதுத் தொகுதியைப் பிரதிநிதித்துவதப்படுத்தும் கவுன்சில் உறுப்

பினராகத் தேர்தலில் வேட்பாளராக முடியும்.'' ஒரு தொகுதியில் உண்மையில் அல்லது வழக்கமாக குடியிருப்பது (தங்குமிட மாகவோ அல்லது அப்போதைக்கப்போது வந்து போகுமிட மாகவோ இருக்கக் கூடாது), அந்தக் குறியிட்ட தொகுதியில் தேர்த லுக்கு அவர் வாக்காளராக நிற்பதற்கு அவசியமாகும். இந்தப் பிரச்சினை குறித்து எனது கருத்தினைக் கூறுவதற்கு முன்பு இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினைக்குள்ள தடையை நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்: அன்றிருந்த தேர்தல் அமைப்பின் குறிப்பிடத்தக்க விளைவு, சட்டத் தொழிலைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெரும் சதவிகிதத்தினராக இருந்தனர் என்று கூறி, ஒரு தொழிலைச் சேர்ந்த மனிதர்கள் அரசியல் அரங்கில் இத்துணை பெருவாரியாக இருப்பது, பொர்து மக்களின் நலனுக்கு நிச்சயமாக உகந்ததல்ல என்று குறிப்பிட்டு, புதிய தொகுதிகளை அமைக்கும்போது இதர வகுப்பினரும், தொழில் துறையைச் சேர்ந்தவர்களும் போதுமான அளவில் கவுன்சில்களில் இடம் பெறுவதை மனதில் கொள்வது ஒரு முக்கிய நோக்கமாக இருக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கி, கிராமப்புற இடங் களுக்குச் சில குறிப்பிட்ட தகுதிகளைப் பரிந்துரைப்பதன் மூலம் இதனை சாத்தியமாக்கலாம் என்றும், கூட்டு அறிக்கையின் 84-ஆவது பத்தி கூறியுள்ளது. இந்தப் பிரச்சினையைச் 'சவுத்பரோ' கமிட்டி கவனமாகப் பரிசீலித்தது; அது தனது அறிக்கையின் 29-ஆவது பத்தியில், இந்த விஷயத்தைக் குறிப்பிட்டு, ஐக்கிய மாநிலங்கள், பீஹார், ஒரிசா மற்றும் அஸ்ஸாம் போன்ற உள் ளாட்சி அரசாங்கங்கள் குடியிருப்புத் தகுதியைப் புகுத்த வலி யுறுத்தவில்லை என்றும், வங்காளம், பம்பாய், மதராஸ் மற்றும் பஞ்சாப் அரசாங்கங்கள், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்த விழை யும் பகுதிகளில் வசிக்காத நபர்களை வேட்பாளர்களாக அனு மதிப்பது, புதிய தேர்தல் தொகுதிகளிலுள்ள பெருவாரியானவர் களுக்குப் பாதகமாக இருக்குமென்றும் கூறியுள்ளது. 'சவுத்பரோ' கமிட்டியின் பெரும்பான்மையினர் கொள்கையளவில் குடியிருப்புத் தகுதிக்கு எதிரானவர்கள்; ஆனால், சமரசத்தைக் கருத்தில் கொண்டு, அவர்கள் அந்த வரம்பினை மத்திய மாநிலங்கள், பம்பாய் மற்றும் பஞ்சாபில் மட்டுமே, விதித்தனர்; பிற மாநிலங் களில் அவர்கள் அதை விதிக்கவில்லை. சவுத்பரோ கமிட்டியின் பரிந்துரைகளின் மீது தனது கருத்தினை வெளியிட்ட இந்திய அரசாங்கம், அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது; ஆனால் வரம்பிற்கு ஆதரவாக, சில உள்ளாட்சி அரசாங்கங்களின் கருத் தினை ஏற்றுக் கொண்ட கமிட்டி, அதனையே சம அளவில் வலியுறுத்திய வேறு சிலவற்றின் கருத்துக்களை மறுத்ததின் மூலம்—கமிட்டி இப்பிரச்சினையைக் கையாண்ட முறை, இந்திய அரசாங்கத்தை இடரில் ஈடுபடுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டி யுள்ளது. இந்திய அரசாங்க மசோதாவின் மீது கருத்துத் தெரி வித்தக் கூட்டு நாடாளுமன்றக் கமிட்டி, வாக்காளர் கமிட்டியினால்

எடுத்துரைக்கப்பட்ட சமரசத்தை ஏற்றுக் கொள்ளும்படி பரிந் துரைத்தது. அவ்வாறே அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, குடியிருப்புத் தகுதிகள் மத்திய மாநிலங்கள், பம்பாய், பஞ்சாப் ஆகிய மாநிலங் களில் மட்டும் திணிக்கப்பட்டது. ஆனால், 1923 பொதுத் தேர்த லுக்கு முன்னதாக விதிகள் மாற்றியமைக்கப்பட்ட போது, பஞ்சா பில் குடியிருப்புத் தகுதிகள் அகற்றப்பட்டன. முதலாவது பொதுத் தேர்தலின் போது, குடியிருப்புத் தகுதிகள் கிராமப்புறப் பிரதிநிதி களை அலைக்களித்தது; அதனின்றும் அவர்கள் மீளவில்லை; அந்தத் தகுதியை மீண்டும் கொண்டுவர, எந்தக் காரணமும் போது மானதாகவில்லை என்று முடிமான் கமிட்டியிடம், பஞ்சாப் அரசாங்கமும் கருத்துத் தெரிவித்துள்ளது. தற்போதைய நிலைமை யில், பம்பாய், மத்திய மாநிலங்களில் மட்டுமே குடியிருப்புத் தகுதி முறைகள் இன்றும் இருந்து வருகின்றன. இந்த நிலை பம்பாய் மாநிலத்தில் சரியாக வற்புறுத்தப்படுவதைப் போன்று, மத்திய மாநிலங்களில் இந்த வரம்பு விளக்கமுறவில்லை. இந்த மாநிலத் தைக் காட்டிலும் மிகவும் பின்தங்கியுள்ளவையே, இந்த வரம்பின் அவசியத்தை உணராத போது, இந்தியாவின் மிக முன்னேறிய இந்த மாநிலத்திற்கு இந்த வரம்பினை நீட்டிப்பதை நியாயப் படுத்துவது கடினம் என்பதே எனது கருத்து. அந்தஸ்து, ஆற்றல், நிரூபனமான அரசியல் தகுதி ஆகியவை கொண்ட பலரும் பெரும் பாலும் பெரிய நகரப்பகுதிகளில் உள்ளனர்; ஏதேனும் ஒரு காரணத்தால் அவர்கள் தமது சொந்தக் குடியிருப்புப் பகுதியி லிருந்து தேர்தலுக்குப் போட்டியிடாது போகலாம்; அத்தகை யோர், இந்தத் தகுதிமுறை இருப்பதன்றால், வேறு தொகுதிகளில் போட்டியிட முடியாது போகின்றது; அப்படிப்பட்டவர்களைக் கவுன்சிலுக்கு வெளியேயும், தரத்தில் தாழ்ந்தவர்கள் கவுன்சி லுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும், இந்த வரையறை நீடிப்பது ஓரளவு காரணமாக இருக்கக் கூடும் என்று நான் நினைக்கிறேன். எனவே, இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில் குடியிருப்புத் தகுதி வரையறை, இப்போது அகற்றப்பட வேண்டுமென்று நான் பரிந் துரைக்கிறேன்.

## அத்தியாயம் 4

## லக்னோ ஒப்பந்தம்

*89.* வகுப்புவாதத் தேர்தல் தொகுதிகளுக்குப் பதிலாக, கூட்டுத் தொகுதிகள் புகுத்தப்பட வேண்டுமென்றும், இடப்பங்கீடு பற்றியது மான எனது பரிந்துரைகள், முஸ்லீம் இனத்தவரின் பிரதிநிதித் துவத்தைப் பாதிக்கின்றன என்ற அளவில், லக்னோ ஒப்பந்தத் தின் வாசகக் கருத்திலிருந்து முரண்படுவதை நான் அறிவேன். 1919-இல் வகுக்கப்பட்ட விதிகளின்கீழ் முடிவு செய்யப்பட்ட முஸ்லீம் இனத்தவருக்கான பிரதிநிதித்துவம், லக்னோ ஒப்பந்தம்

என்றழைக்கப்படுவதன் அடிப்படையிலேயே பெரிதும் அமைந் துள்ளது. முஸ்லீம்களின் சார்பாக, முஸ்லீம் லீக், ஹிந்துக்களின் சார்பாக காங்கிரஸ் ஆகிய கட்சிகளிடையே 1917-ல் லக்னோ வில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தையே அது குறிக்கிறது. அது, முஸ்லீம்களுக்கு வகுப்புத் தேர்தல் தொகுதிகளையும், மாநில, மத்திய சட்டசபைகளில் வெவ்வேறு விகிதத்திலான இடங் களையும் வழங்கிற்று. முஸ்லீம் இனத்தவரின் பிரதிநிதித்துவம் குறித்து, நான் முன்வைத்துள்ள கருத்துக்கள், அந்த ஒப்பந்தத்தை நிலைகுலையச் செய்கிறது என்பதை நான் உணர்கிறேன்; இந்த ஒப்பந்த்ம் முடிவுகளைக் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஏன் நான் நினைக்கிறேன் என்பதை எடுத்துரைப்பது எனது கடமை யாகும் என்று நான் உணர்கிறேன்.

90. லக்னோ ஒப்பந்தத்தில் பொதிந்துள்ள உடன்பாடு ஒரு தவறான உடன்பாடு என்பது எனது முதலாவது வாதமாகும். இதனை எல்லா உள்ளாட்சி நிறுவனங்களும் ஒப்புக் கொண் டுள்ளன. வாக்காளர் கமிட்டியின் பரிந்துரைகளை திறனாய்வு செய்து, இந்திய அரசாங்கம் வெளியுறவு அமைச்சருக்கு அனுப் பியதாக இதில் கீழ்வருமாறு அறிவித்துள்ளது: ''அந்த ஒப்பந்தத் திற்கு ஆதரவு தருவதில் உள்ளாட்சி நிறுவனங்கள் ஒருமித்த கருத்தினைக் கொண்டிருக்கவில்லை என்று காண்கிறோம். அதற்கு மதிப்பளிக்காமலேயே, சென்னை அரசாங்கம் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவத்திற்கான தனது சொந்தத் திட்டத்தை வகுத்துள் ளது. ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்ட போதிலும், பம்பாய் அரசாங்கம், மக்கள் தொகை அடிப்படையில், பிரதிநிதித்துவத் திட்டம் ஒன்றை விவாதிப்பதை ஒதுக்கி விடவில்லை. தனியான முஸ்லீம் தேர்தல் தொகுதிகளை, மத்திய மாநிலத்தின் தலைமை ஆணையர் எதிர்த்துள்ளார்; ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள சத விகிதம், ''அந்த இனத்தின் பலத்திற்கும், அந்தஸ்திற்கும் அறவே ஒவ்வாதது'' என்று கருதுகிறார். அவர்களது எண்ணிக்கை விகி தத்திற்கும் அதிகமாக அந்த இனத்திற்குப் பிரதிநிதித்துவம் தருவது, முஸ்லீம்களது கண்ணோட்டத்திலிருந்தே கூட ஒரு தவறு என்று அஸ்ஸாம் தலைமை ஆணையர் எண்ணுகிறார்''. மாநில அரசாங்கங்கள் கொண்டுள்ள பொதுவான கருத்திலிருந்து, இந்திய அரசாங்கமும் மாறுபடவில்லை. லக்னோ ஒப்பந்தம், பல்வேறு மாநிலங்களிலும் ஏற்படுத்தியுள்ள விளைவுகளை மதிப் பீடு செய்து அவர்கள் கூறுவதாவது: ''மக்கள்தொகை அடிப்படை யில் கணக்கிட்டால் எவ்வளவு கிடைக்குமோ, அதில் முக்கால் பங்கினை வங்காள முஸ்லீர்களும், 10-ல் 9-ஐ பஞ்சாப் முஸ்லீம் களும் பெறும்போது, இதர மாநில்த்திலுள்ள முஸ்லீம்கள் நல்ல பேரத்தை—அவற்றில் மிகச் சிறந்த சில ஆதாயத்தைப் பெறு கின்றனர். இத்தகைய நிலை, பல்வேறு மாநிலங்களுக்கிடையே யுள்ள முஸ்லீம்களுக்கிடையேயும், இதர இனத்தார்களுக்கிடையே யும் சரியான உறவுகளை ஏற்படுத்தும் என்று எங்களாலேயே கூற

முடியவில்லை.'' மாறுபட்ட குறிப்பினை வழங்கிய சர் வில்லியம் வின்சென்ட், ''என்னுடைய கருத்தின்படி..... லக்னோ உடன்பாட்டின் விபரங்களுக்கு மதிப்பளிக்காது, நாம் எதைச் சிறப்பானது என்று கருதுகிறோமோ, அந்த வழியில் முஸ்லீம்களுக்கு நாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்'' என்று கூறுமளவிற்குச் சென்றுள்ளார்.

91. சில மாநிலங்களில் தாராளமாகவும், சில மாநிலங்களில் கஞ்சத்தனமாகவும், சமச்சீரற்ற வகையில் பல்வேறு மாநிலங்களிலுள்ள முஸ்லீம்களை, லக்னோ ஒப்பந்தம் நடத்தியது அதில் அடங்கியுள்ள பெருந்தவறு அன்று. ஒப்பு நோக்கின், இது ஒரு சிறிய விஷயமே. லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய குறைபாடு, முஸ்லீம்களுக்கு இடங்களை ஒதுக்கும் போது, அது இதர நலன்களை எவ்வாறு பாதிக்கும் என்று கருத்தில் கொள்ளாததேயாகும். இந்திய அரசாங்கம் சுட்டிக்காட்டியதைப் போன்று, முஸ்லீம்களுக்கு எந்த ஆதாயங்களை அளித்தாலும், அது வேறு சில நலன்களைப் பறிக்கிறது என்பதை, ஒப்பந்தத்தை உருவாக்கியவர்கள், நினைவில் கொள்ளத் தவறிவிட்டனர். சர் வில்லியம் வின்சென்ட்டும் இதைச் சுட்டிக்காட்டுவதில் கவனம் செலுத்தியுள்ளார். தனது மறுப்புக் குறிப்பில், அவர், ''இன்றைய காலகட்டத்தில் அந்த ஒப்பந்தம், கண்டனத்தைக் காட்டிலும், பெருமளவு உடன்பாட்டையே ஏற்படுத்தியுள்ளது; ஆனால், இனிமேல், வாக்குகள் மற்றும் பிரதிநிதித்துவத்தின் மதிப்பு உணரப்படும் போது, அதனால் பாதிக்கப்படப் போகும் நலன்கள், இந்திய அரசாங்கம் அதை ஏற்றுக் கொண்டது பற்றி, அநியாயமாகக் குறைகூறுவர்'', என்று கூறியுள்ளார். இந்த முன்னறிதல் எவ்வளவு சரியானது என்பது வியக்கத்தக்கதாகும்; லக்னோ ஒப்பந்தத்தின் விளைவாக, எல்லாவகையிலும் திருப்தியின்மை ஏற்பட்டது; இதுவே, லக்னோ உடன்பாடு ஒரு தவறான உடன்பாடு என்பதற்குப் போதிய சான்றாக உள்ளது. இப்பொழுது, தவறாக ஏற்பாடு செய்யப்பட்டதை, மறுபடியும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறுவதில் எந்த முறைகேடும் இல்லை. இந்தக் கோரிக்கை முஸ்லீம் இனத்தவரின் எதிர்ப்பைச் சந்திக்கவே செய்யும் அளவுக்கு மீறிய அளவில் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற அவர்கள், முன்மாதிரியையும், கடந்த கால உரிமைகளையும் காட்டி, ஒரு நிலையெடுப்பர். ஆனால், தாமஸ் பெய்ன் சுட்டிக்காட்டியபடி, தங்களது உரிமைகளை மதிக்கும் பழங்கால முன்மாதிரியைக் காட்டுவோர் செய்யும் தவறு அதிகார நலன்கள் ஏதுமற்ற அந்த தொடக்க நிலைக்கு காலத்தைக் கொண்டு செல்ல இயலாது என்பது தான். உரிமைகள் என்பவை மாற்றப்பட முடியாதவை அல்ல என்பதுடன், அவை வரலாற்று வீழ்ச்சிகள் என்பதையும், அதன் காரணமாக, காலத்திற்கேற்றவாறு அவை மாற்றியமைக்கப்படக் கூடியவைதான் என்பதையும் அவர்கள் உணர வேண்டும். இவ்வாறு தான் நிலைமை இருக்க வேண்டும்; தவறாகத் தீர்வு காணப்பட்ட

எதுவும், தீர்வுக் காணப்படாதது தான் என்பதையும், எந்தத் தவறுக்கும் ஒரு சட்ட ரீதியிலான பாரம்பர்யம் கிடையாது என்ற நன்னெறியின் அடிப்படையிலேயே எல்லா அரசியல், சமூக முன்னேற்றமும் அடங்கியுள்ளது.

லக்னோ ஒப்பந்தத்தைப் போன்றதொரு ஒப்பந்தம், திருத்தப் பட வேண்டும் என்ற கோரிக்கை, இது ஒன்றே அல்ல. அயர்லாந் துக்கும், இங்கிலாந்திற்கும் இடையேயான ஒன்றியச் சட்டமும் இதே வகைப்பட்டதுதான். எனினும் லக்னோ ஒப்பந்தத்தைக் காட்டிலும், அதற்கு அதிகமான பிணைப்பு வலிமை நிச்சயமாக இருந்தது. உண்மையில், அயர்லாந்துக்கு நாடாளுமன்றத்தில் 100 இடங்களை உத்தரவாதம் செய்யும் உடன்பாடாக அது கருதப் பட்டது. இருந்த போதிலும், அயர்லாந்துக்கு அளிக்கப்பட்ட அளவற்ற பிரதிநிதித்துவம், நிச்சயமானதொரு தவறு என்று உணரப்பட்ட போது, அயர்லாந்தின் பிரதிநிதித்துவ இடங்களில் 30-ஐக் குறைக்க வழிவகுத்த மசோதாவை 1905-ல் கொண்டு வர பால்ஃபோர் அரசாங்கம் தயங்கவில்லை. ஆனால், பால்ஃபோர் அரசாங்கம் பதவி துறக்க நேர்ந்ததால், அது சட்டமாகவில்லை என்பது வேறு விஷயம். ஆனாலும் கூட, இரண்டு கட்சிகளிடையே யான உடன்பாட்டின் அடிப்படையில் அமைந்த ஒப்பந்தமாக இருப்பினும், பிரதிநிதித்துவ விஷயத்தில், அதனைத் திருத்தி அமைப்பது இயலும் என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது. அயர்லாந்தின் உடன்பாட்டுடன் மட்டுமே இந்தத் திருத்தம் செயல் படுத்தப்பட முடியும் என்ற கருத்திற்கும் பால்ஃபோர் உடன்பட வில்லை. உண்மையில், ஐரிஷ் எதிர்க்கட்சியினரது தீவிர எதிர்ப் பிற்கிடையே, அவர், இட மறுஒதுக்கீட்டுத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். ஆனால், நமக்கு வெகு அருகிலேயே ஒரு முன்மாதிரி இருக்கும் போது, அவ்வளவு தொலைவு நாம் செல்ல வேண்டிய அவசியமில்லை. வகுப்புவாதப் பிரதிநிதித்துவத்தையும், வகுப்பு வாத இட ஒதுக்கீட்டையும் அனுமதிக்கும், பல்வேறு நிறுவனங் களுக்கிடையேயான ஒப்பந்தங்களையும், ‘‘பிரதிநிதித்துவப் பிரச் சினையை முழுமையாக மீண்டும் ஆராய்ந்தால், இனங்களுக்கும், குழுக்களுக்குமிடையே தனிப்பட்ட ஏற்பாடுகள்—அவை கவனத் திற்குரியவைதான் என்றாலும்—சிலோன் மக்கள் அனைவரது நலன்களையும் முன்னிட்டு, முன்னிலைப் பெற்றதாகாது’’ என்று 1928-ஆம் ஆண்டின் சிலோன் கமிஷன் அழுத்தம் திருத்தமாகக் கருத்துத் தெரிவித்துள்ளது. எனவே, சிலோனில், பிரதிநிதித்துவத் திட்டத்தை முழுமையாக, இனங்காணமுடியாதவாறு திருத்தி அமைக்க அது தயங்கவில்லை. மற்ற இடங்களில் செய்துள்ள வற்றைக் காட்டிலும் அதிகமாக, இங்குச் செய்ய வேண்டுமென்று கேட்கவில்லை.

92. மேலும், லக்னோ ஒப்பந்தம் மதிப்பு ஏதும் இல்லாதது; ஏனெனில், அதன் வாசகங்கள், இந்திய அரசாங்கத்தின் வார்த்தை

களில் கூறப் போனால், ''தேர்ந்து தெளிந்த ஆய்வினைக் காட்டிலும், அரசியல் பேச்சு வார்த்தைகளின் விளைவே''யாதலால் மட்டுமன்றி, அவை யாருடைய சார்பில் செயலாக்கம் பெற வேண்டுமோ, அந்த இரண்டு நிறுவனங்களுமே, அவர்களது சார்பில் பேசுவதற்கு மெய்யான அதிகாரம் பெற்றிராததால் ஒப்பந்தத்தை உருவாக்கியதனாலும், அதற்கு மதிப்பு ஏதும் இல்லை. எல்லா முஸ்லீம்களின் சார்பாகப் பேசுவதற்கு அகில இந்திய முஸ்லீம் லீகிற்கு உரிமை கிடையாது; சவுத்பரோ கமிட்டி அறிக்கையின் மீது, இந்திய அரசாங்கம் விடுத்துள்ள தாக்கீதிலிருந்து, அது மிகத் தெளிவாகவே தெரிய வருகிறது. காங்கிரசைப் பொறுத்த மட்டில், அது பெருவாரியான பிராமணரல்லாதவர்களையோ, தாழ்த்தப்பட்ட இனத்தவரையோ பிரதிநிதித்துவப்படுத்தாததொரு நிறுவனம் என்பது சர்ச்சைக்கிடமற்றது. பெருவாரியான மக்களின் கூட்டு அமைப்புகளாக இல்லாத நிறுவனங்கள், தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொள்ளலாம்; ஆனால் அவை, மக்களைப் பொதுப்படையாகக் கட்டுப்படுத்த முடியாது என்பது நிச்சயம். வேறுபட்ட அரசுகளின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளிடையே பேச்சு வார்த்தைகளின் மூலம் உருவாக்கப்பட்டதோர் ஒப்பந்தம் என்று அதனைக் காட்ட முயல்வதானது, தங்களுக்கு அளிக்கப் படாத அதிகாரத்தை லீகும், காங்கிரசும் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வதேயாகும். பம்பாய் அரசாங்கம் மேற்கொண்ட கருத்தின் காரணமாகவும், அந்த ஒப்பந்தத்தின் சக்தியை மதிப்பீடு செய்வது அவசியமாகிறது. அது கூறுவதாவது; ''தனிப்பட்ட தேர்தல் தொகுதிகளை ஒழிப்பதற்கான எந்த மாற்றமும், இரு இனத்தவர்களிடையே மேற்கொள்ளப்படும் ஒப்பந்தத்தை அடிப் படையாகக் கொண்டிருக்க வேண்டும்; அதனை முஸ்லீம்களின் விருப்பத்திற்கெதிராக அவர்கள் மீது திணிக்க முடியாது. இந்தப் பிரச்சினை அகில இந்திய ஒன்றாகும்; அதனை ஒவ்வொரு மாநில மும் தனிப்பட்ட வழிகளில் கையாள முடியாது. பம்பாய் அரசாங் கத்தைப் பொறுத்தமட்டில், அது 1916-ல் வெளியிட்ட அதே கருத் தினை, அதாவது வகுப்புவாதத் தொகுதிகள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது என்றும், லக்னோ ஒப்பந்தத்தைப் போல இரு தரப்பினரது ஒப்புதலுடன் பெற முடிந்தால், அதனை ஒழிப்பது விரும்பத்தக்கது என்றும், இன்னமும் கடைப்பிடிக்கிறது.'' என்னுடைய கருத்துப்படி, இது எவ்வளவுக் கெவ்வளவு பொறுப் பற்றதோ, அவ்வளவுக்கவ்வளவு ஆபத்தானதும் கூட. இந்த விஷயத்திற்குத் தீர்வு காண்பதற்கு, நாடாளுமன்றத்தின் உரிமையை பலி கொடுப்பதால் அது பொறுப்பற்றது ஆகும். ''ஒருமித்த நலனுக்கும் ஒன்றுபட்ட அரசியல் முன்னேற்றத்திற்காகவும், பெரும்பான்மையினரானதோர் இனத்தின் சார்பில், தனது உடனடி நலன்களை, குறைந்தபட்சம், உள்ளடக்கிக் கொள்ள அது முயன்றதானது'', ஒரு பெரிய முரண்பாடான விஷயத்தில் இரு இனத்தார்களின் பங்கிற்கு மேற்கொள்ளப்பட்ட மெய்யான

சபையொன்றினை நிறுவுவதை எனது தோழர்கள் பரிந்துரைத்து, அதன் அமைப்பிற்கான கட்டுக் கோப்பையும் எடுத்துரைத்துள்ள னர். அதை அமைப்பது குறித்த இன்னல்களில், எனது தோழர்கள் போதிய கவனம் செலுத்தவில்லை என்று நான் எண்ணுகிறேன். இரண்டாவது, சபை ஒன்று இருக்கப் போவதானால், அது, அதன் அமைப்பு ரீதியாக, முதலாவதிலிருந்து வேறுபட்டதாக இருக்க வேண்டும். முதலாவது சபைக்கு எந்தக் கெடுதலும் இல்லாத அளவுக்கு இரண்டாவது சபை செயல்படுமாறு, அதன் அதிகாரங் கள் இருக்க வேண்டும். இந்த இரு நிபந்தனைகளுக்கும் இசைவாக, ஒரு இரண்டாவது சபையை அமைப்பது மிகவும் கடினம் என்று எனக்குத் தோன்றுகிறது. நியமனம் செய்யப்படும் இரண்டாவது சபை என்ற பேச்சுக்கே இடமில்லை. நியமிக்கப்பட்ட இரண் டாவது சபையைப் புகுத்துவதற்கு எதிரான நிரந்தர எச்சரிக்கை யாகக் கனடாவின் செனட்சபை உள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட சபையைப் போல, அதன் முடிவுகளுக்கு மரியாதையையும், மதிப்பையும் பெறுவதற்கான தார்மிக அதிகாரம் அதற்கு இருக்க முடியாது. மேலும், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைக்கு, நிர்வாகத்தின் செயலில் நீதி வழங்கும் சுதந்திரம் இருப் பதைப் போல அதற்கு இருக்க முடியாது; ஏனெனில் நிர்வாகம் தான் அதற்கு உருக்கொடுக்கிறது. இரண்டாவது சபையும் தேர்ந் தெடுக்கப்பட்டதாக இருப்பின், முதலாவதுடன் அது சுமுகமாகப் பணியாற்றுவது, அவ்வவ்வற்றிற்குரிய வாக்காளர்கள், தேர்தல் நேரம், மற்றும் அவற்றின் அதிகாரங்களைப் பொருத்து அமையும். இரண்டாவது சபை, ஒரு வரம்புக்குட்பட்ட வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், மக்களின் எதிர்காலத்தின் மீது ஒரு சிறந்த கட்டுப்பாட்டு அளவைச் செலுத்தவல்ல, மேல்மட்டத்தின ரிடமிருந்து ஒரு சிறு குழுவினைத் தோற்றுவிப்பதிலேயே முடியும் என்பது உறுதி. அத்தகையதொரு இரண்டாவது சபை, கீழ்சபை ஏதேனும் பதட்டத்துடன் முடிவு செய்தாலும், அதைத் தடுப்பதற் கான மறு ஆய்வுச் சபையாக அமையாமல், பொதுவான மேம் பாட்டுக்கு ஊக்கமளிப்பதற்குப் பதிலாக அதிகாரவாக்க நலன் களைப் பாதுகாப்பதற்கே ஊக்கமளிக்கும். பழைமைவாத நிர்வா கத்தின் கீழ், அது செயலற்றதாக இருக்கும்; தீவிரவாத நிர்வாகத் தின் கீழ் விழிப்புடன் செயல்படும். திருத்த வேண்டிய போது, அது அதனை மறுக்கும்; திருத்தத்தை மறுக்க வேண்டிய போது, அது திருத்தங்களைச் செய்யும்; மற்றும் ஒருவேளை தடைகளையும் ஏற்படுத்தும். இரண்டு சபைகளும், ஒரே மாதிரியான வாக்காளர் களால் தேர்ந்தெடுக்கப்பட்டால், இரண்டாவது சபை, முதலா வதன் மறுபதிப்பாகவே இருக்கும்; அது தேவையற்றதாகிவிடும். முதலாவது சபையுடன் ஒரே நேரத்தில், இரண்டாவது சபை தேர்ந்தெடுக்கப்பட்டாலும், விளைவு அதுவே தான். மறுபுறத்தில், இரண்டாவது சபை, முதலாவதைத் தேர்ந்தெடுக்கும் காலத்தி லிருந்து, வேறோர் சமயத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டால், அது

நிர்வாகத்தைப் பலவீனப்படுத்தி, அதன் திறனைக் குறைத்து விடும். தகுந்த கொள்கை, வகுப்பிற்கு இடையூறாக அது செயல் பட்டு, நிர்வாகக் கொள்கையில் வலுவான விரிசலை ஏற்படுத்து வதால், அது எப்பொழுதும் பொதுத் தேர்தல்களுக்கு இட்டுச் செல்லும். இரண்டு சபைகளுக்கும் அதிகாரங்கள் சமஅளவில் இருந்தால், உறுதியாக முட்டுக்கட்டை நிலைகள் ஏற்படவே செய் யும்; அத்தகைய முட்டுக்கட்டைகளைத் தவிர்க்க இயலாத விளைவு, துயரூட்டும் சமரசங்கள், அல்லது தகராறுக்குரிய கொள்கை முற்றிலுமாகக் கைவிடப்படுதல் ஆகியவை விருக்கும. அவ்வா றின்றி, இரண்டாவது சபையின் அதிகாரங்கள், முதலாவதைக் காட்டிலும் குறைந்தவையாக இருந்தால், அது முதல்சபை மேற் கொள்ளும் பதட்டமானதொரு முடிவைக் கட்டுப்படுத்த முடியா மல் போகலாம்; அதனால், அது தனது குறிக்கோளை ஆற்றத் தவறுவதாகவும் அமையும்.

95. இரண்டாவது சபை அமைப்பினை உருவாக்குவதில், எனது தோழர்கள் இந்தக் கஷ்டங்களையெல்லாம் புறக்கணித் துள்ளனர். அதன் மூலம், ஓர் இரண்டாவது சபைக்கு இருக்க வேண்டிய நற்பண்புகள் ஏதுமற்ற—ஆனால் எல்லாத் தவறுகளும் உள்ளதொரு சபையைத் தோற்றுவித்தனர் என்று நான் கூறு கிறேன். இரண்டாவது சபை என்ற கருத்தை ஆதரிக்கையில், எனது தோழர்கள் ஏறத்தாழ, கும்பல் மன உணர்வைப் பின்பற்றி யுள்ளனர் என்று எனக்குத் தோன்றுகிறது. வரலாற்று ரீதியாக, இரண்டாவது சபைகள் பரவலாக இருப்பதானது, மக்கள் அரசாங் கத்திற்கு இரண்டாவது சபை ஓர் அவசியமான துணையாகும் என்ற அரசியல் அறிவியல் சித்தாந்தத்தைத் தோற்றுவித்துள்ளது. ஆனால், இங்கிலாந்தில் தோன்றி இரு சபை அமைப்பு, முற்றிலும் ஒரு வரலாற்று நிகழ்வேயாகும் என்பது மறக்கப்பட்டு விட்டது. இதர நாடுகளது அரசியல் அமைப்பிலும் அது இடம்பெற்ற தானது, மேல் தரத்தினரைப் பார்த்துக் கீழ்த்தரத்தினர் பின்பற்று வதன் விளைவேயாகும்; பொது மக்கள் சபை ஆத்திரத்தில் மேற் கொள்ளக் கூடிய பதட்ட, நிலைக்குத் தடை போடும் பணியை அது செய்கிறது என்ற நற்பண்பினை அதற்குச் சூட்டியதானது, அனைத்தும் நடைமுறையாகிவிட்ட ஒன்றினை நியாயப்படுத்து வதற்கு மனித மனம், பிற்காலத்தில் இட்டுக் கட்டிய கண்டு பிடிப்பேயாகும். ஆனால், இரண்டாவது சபையில், சமீப காலத் தில் நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். கனடா, தென் ஆப்பிரிக்கா நாடுகளின் (முதலாவது) யுத்த முற்கால அரசியல் அமைப்புக்களும், லாத்வியா, லிது வேனியா, எஸ்தோனியா, யுகோஸ்லாவியா நாடுகளது யுத்த பிற்கால அரசியல் அமைப்புக்களும், இரண்டாவது சபையை இல்லாததாக்கி விட்டன. ஒரு அரசாங்கம் அதன் சமச்சீரமைப் பினால் அல்லாது, அதன் நடைமுறை சாதனைகள் மூலமும்,

மக்களுக்கு அது வழங்கும் நடைமுறைப் புணிகளின் உள்ளடக்கத்தின் மூலமும், தேசம் முழுவதற்கும் அது கொணரும் நல வாழ்வின் மூலமும்தான் தீர்மானிக்கப்படும் என்ற வளர்ந்துவரும் உறுதிப்பாட்டினால், தான் அந்த விளைவு ஏற்பட்டுள்ளது.

96. பயனீட்டுக் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும், இரண்டாவது சபையை' நிறுவுவதானது, ஒரு மறு ஆய்வுச் சபையாகப் பணிபுரியும் என்பதை ஒப்புக் கொள்ள நான் மறுக்கிறேன். மறு ஆய்வு என்பதனை, வாக்காளர்களது உள்ளக்கிடக்கையை வெளிப் படுத்துவது என்று பொருள் கொண்டாலும், வாக்காளர்களது உள்ளக் கிடக்கை என்ன என்பதை முதலாவது சபையைக் காட்டிலும், இரண்டாவது சபை எவ்வாறு சரியானபடி எடுத்துக் கூற முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. கீழ்சபையின் உறுப்பினர்களைக் காட்டிலும், இரண்டாவது சபை உறுப்பினர்கள், தங்களது அந்தஸ்தின் காரணமாக பெருமளவு செல்வாக்குப் பெற்றவர்கள் என்று நாம் கொண்டாலொழிய, அத்தகைய பிரச்சினை எழும்போது, வாக்காளர் தாமே அன்றி, இரண்டாவது சபை சிறந்த நீதிபதியாக இருக்க முடியாது என்பதே எனது கருத்தாகும். இரண்டாவது சபைக்கு அத்தகைய ஒழுக்கம் ஏதும் இருப்பதை நான் மறுக்கிறேன். மக்கள் விளைவினைச் சரியானபடி அளந்தறிய இரண்டாவது சபையும் தவறக் கூடும் என்பது உண்மையாயினும், ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அதற்குச் சொந்தமாக உள்ள நலன்களானவை, ஒரு சுதந்திரமான, அறிவார்ந்த தீர்ப்பினை வழங்க இயலாதவாறு ஏதேனும் ஒரு வழியில் அதற்குச் சொந்த ஒரு பக்க பலத்தை அளிக்கக் கூடும். எனவே, தனியொரு சபையைக் கொண்டிருப்பதே சிறந்தது, பாதுகாப்பானது, பெரிதும் நியாயமானது; ஐயப்பாடுகள் எழுந்தால், சபையைத் தேர்ந்தெடுத்த வாக்காளரிடமே முடிவுக்கான பொறுப்பினை விட்டுவிடலாம். தவிர, முதலாவது சபையின் முடிவினைத் தாமதப் படுத்துவது தான், இரண்டாவது சபையின் உள்ளடங்கியுள்ள கருத்து என்று, கொண்டால், ஏற்கனவே கவர்னருக்கு அந்த அதிகாரம் உள்ளது; சட்டசபை நிறைவேற்றிய எந்தக் குறிப்பிட்ட நடவடிக்கையையும், மறுபரிசீலனைக்கு மீண்டும் அனுப்ப அவர் அதிகாரம் பெற்றுள்ளார். சட்டசபை அதனை மறுபரிசீலனை செய்யாது, ஏற்கனவேயிருந்த வடிவில் அதனை நிறைவேற்றினாலும், அதனை நீச்கம் செய்து, கவர்னர் தடுத்து விடலாம். கவர்னரது முடிவுக்குச் சட்டசபை ஒத்துப்போகவில்லை எனில், சபையைக் கலைக்க வற்புறுத்துவதன் மூலம், தகராறுக்குரிய விஷயத்தை வாக்காளரிடமே விட்டுவிடக் கோரலாம். எனவே, இரண்டாவது சபை என்ன செய்ய முடியுமோ அல்லது அதனிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறதோ, அதனைத் தனது ரத்து அதிகாரத்தின் மூலமும், மீண்டும் சட்டசபையின் கவனத்துக் கொண்டு வருவதன் மூலமும் மற்றும் சபையைக் கலைப்பதன் மூலமும் கவர்னர் செய்ய முடியும். இதனை ஒத்துக் கொண்டால், பின்னர்

இரண்டாவது சபை, மக்கள் சபைக்கானதொரு பயனற்ற ஒட்டுறுப்பாகவே இருக்கும்.

97. தனியொரு சபை, ஆராயாது, விரைவாக, தவறான கருத்துக்களடங்கிய சட்டத்தை நிறைவேற்றக் கூடும் என்ற எண்ணம் உறுதியான சான்றுகளின் அடிப்படையிலேயே எழுந்தவை என்பதை எனது தோழர்கள் உறுதிசெய்து கொண்டிருந்தால், பயனீட்டுத் தரத்தினைப் பிரயோகிக்காமல், இதர சில நாடுகளின் நிலையினால் தவறாக இட்டுச் செல்லப்பட்டிருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அந்த எண்ணம் முற்றிலும் ஆதாரமற்றது; மற்றும், அது நவீன அரசியலின் நடப்பு குறித்த முற்றிலுமான அறியாமையையே வெளிக்காட்டுகிறது. நவீன காலத்தில், எந்த ஒரு சட்டமும், திடீரென சட்டசபையில் தூக்கி எறியப்படுவதில்லை. அதற்கு மாறாகச் சட்டமாவதற்கு முன் ஒவ்வொரு பிரேரணையும், நீண்ட நெடுங்காலமாகப் பொது மக்களால் விவாதத்திற்கும் மற்றும் ஆய்வுக்கும் உட்படுத்தப்படுகிறது. சட்டப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு நடவடிக்கையின் முற்கால வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால், அந்தக் கருத்து உருவான காலத்திற்கும், அது சட்டமானதற்குமான கால கட்டம் மிக நீண்டதாக இருக்குமேயன்றிக் குறைந்ததாக இராது என்பதுதான் உண்மை. நிலைமை அவ்வாறிருக்க, ஒரு மக்கள் சபை, அவசரப்பட்டுச் செயல்படக் கூடும் என்றும், எனவே அதன் சக்கரங்களுக்கு தடுப்பு கற்கள் தேவை என்றும் எண்ணுவது, இல்லாத நோய்க்கு மருந்து அளிப்பதைப் போன்றதே.

98. என்றாலும் கூட, எனது தோழர்கள் விரும்புவது, மறுபரிசீலனைக்கான சபை அல்ல; ஆனால் ஓர் ஆளும் சாதியேயாகும். அதற்கு அளிக்கப்பட்டுள்ள நோக்கையும், அதனை அமைப்பதற்கு நாடும் வாக்காளர்களையும், அதற்கு அளிக்கப்படவிருக்கும் அதிகாரத்தையும் பார்க்கும் போது, இது தெளிவாகிறது. ஒரு குறிப்பிட்ட இனத்திற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட நலன்களுக்குக் கேடு விளையும் வகையில், சட்டசபையின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படாமலிருப்பதற்கு ஒரு காப்பாக, இரண்டாவது சபையை அமைத்து, சட்டசபைக்குள்ள அதிகாரப் பிரயோகத்திற்கு வரம்புகட்ட அவர்கள் எண்ணியிருக்கக் கூடும் என்பது எனக்கு வியப்பை அளிக்கிறது என்று நான் ஒத்துக் கொள்கிறேன். மத்திய அரசு அல்லது அரசியல் அதிகாரத்தின் சமநிலை மாறாமலிருப்பதற்கு நமக்குச் சீர்திருத்தம் வேண்டும் என்பதல்ல; ஆனால், சில குறிப்பிட்ட வரையறைகளுக்குள், அது கள்ளத்தனமாக மக்களது திசையில் மாற்றப்பட வேண்டும் என்பதற்கான விழைவே உணரப்பட்டது என்று தான் நான் அதைப் புரிந்து கொள்கிறேன். இந்த அதிகார மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சியாக, சம்பந்தப்பட்ட பல்வேறு இனங்களிடையே அதிகாரச் சமநிலையை மாற்றாமலிருக்கும் ஓர் அரசியல் சீர்திருத்தமே, பெரிதும் விரும்பத்

தக்க வகையிலானது என்று எனது தோழர்கள் எண்ணுகின்றனர். இத்தகைய கருத்தினைக் கொண்டுள்ள உறுப்பினர்கள், எனது அபிப்பிராயப்படி, என்று அரசியல் சீர்திருத்தத்தின் பொருள் தெரியாதவர்கள், அல்லது அதன் பொருள் தெரிந்து, இதுகாறும் உள்ள நிலையைக் குலைக்க விரும்பாத சீர்திருத்தத்தை விழைபவர்கள் ஆவர். என்னைப் பொறுத்தமட்டில், பல்வேறு இனத்தவர்களிடையே, அதிகாரச் சமநிலையை மாற்றுவதே, எல்லாச் சீர்திருத்தங்களின் சாரம் என்ற உண்மையை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன். கீழ்த்தர மக்கள் ஆதாயமடைந்தால், இதர இனத்தினர் இழந்தே ஆக வேண்டும். ஒவ்வோர் இனமும், அதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் அதிக அரசியல் அதிகாரத்தைப் பெறாமல் இருந்தால், அப்பொழுது எந்த உண்மையான சீர்திருத்தமும் இருக்க முடியாது. ஒரு நடவடிக்கையை அரசியல் சீர்திருத்தம் என்று அழைப்பதாலோ அல்லது ஒவ்வொன்றிலும் மாற்றத்தை முன்மொழிந்து, பழைய நிலையிலேயே விஷயங்களை இருத்திக் கொள்ளும் நடவடிக்கையாலோ, அல்லது, அதைப் பற்றிய வரை கீழ்த்தர வகுப்பினரோ சீர்திருத்தத்தில் ஈடுபாடு காட்டும் வகுப்பினரோ எவரும் திருப்தியடைவர் என்று எண்ணுவது முட்டாள் தனமானது. மக்களை அடையாமல், இனங்களுடன் மட்டுமே நின்று விடும் வகையில் அதிகார ஓட்டம் கட்டுப்படுத்தப்படுவது தான் அதிகார மாற்றத்திற்கான திட்டம் என்று தெளிவான சொற்றொடர்களில் கூறுவது எவ்வளவோ சிறப்பாக இருக்கும். அப்படிப்பட்டச் சீர்திருத்தத் திட்டம் எதற்கும் நான் ஒத்துப் போக இயலாது என்பதை நான் தெளிவாக்குகிறேன்.

99. இரண்டாவது சபை இன்றியமையாத ஒன்று என்றே வைத்துக் கொண்டாலும்கூட, அதனை அமைப்பதில் தலையான ஒரு துன்பம் உள்ளது. மாநிலங்களில் இரண்டாவது சபைகளை நிறுவும் பிரச்சினையை, 1917-ல் மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு அறிக்கையின் கர்த்தாக்கள் கவனமாக ஆராய்ந்தனர். ஆனால், அவர்கள் எல்லா விஷயங்களையும் கருத்தில் கொண்டு, அந்தக் கருத்துக்கெதிராகவே முடிவெடுத்தனர். அவர்கள் கூறியதாவது: ''அந்தக் கருத்துக்கு மிகத் தீவிரமான நடைமுறை எதிர்ப்புகளை நாங்கள் காண்கிறோம். பல மாநிலங்களிலும், இருசபைகளுக்குமான தகுதியான உறுப்பினர்களைப் போதுமான எண்ணிக்கையில் பெறுவது முடியாத காரியம் ஆகும். மேலும், நில உரிமையாளர்கள் பணம் படைத்தவர்கள் ஆகியோரது பிரதிநிதிகளையே முக்கியமாகக் கொண்டிருக்கும் இரண்டாவது சபை, அந்த நலன்களைப் பாதிக்கும் எந்தச் சட்டத்திற்கும், பயன்மிக்க தடைகளாகத் திகழக்கூடும் என்றும் நாங்கள் அஞ்சுகிறோம். மேலும், இரண்டாவது சபையில்பெரும் நில உரிமையாளர்கள் வீற்றிருப்பதானது, அதே வர்க்கத்தைச் சேர்ந்த இதர உறுப்பினர்கள், வாக்காளர்களின் வாக்குகளைப் பெறுவதற்கு ஊக்கமளிக்காத, துரதிருஷ்டமான விளைவினைத் தோற்றுவிக்கக்கூடும். இரண்டு சபை

களின் மூலமாகச் சட்டம் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளதால், ஏற்படக் கூடிய தாமதம், மாநில சட்டமன்றங்கள் ஆழ்ந்து பணி யாற்றுவதற்கு முட்டுக்கட்டையாகவிருக்கும். எனவே மாநிலங் களில் இருசபை அமைப்புக்கு எதிராக, தற்போது, நாங்கள் முடிவெடுக்கிறோம்.'' இரண்டாவது சபைகளுக்கெதிராக 1917-ல் எழுப்பப்பட்ட வாதங்கள் இன்றைக்கும் கூடப் பொருந்தும். இரண்டு சபைகளையும் நடத்தும் அளவுக்குப் போதுமான எண் ணிக்கையில் மேன்மையானவர்கள் இந்த மாநிலத்தில் கிடையாது என்று நான் உறுதியாகக் கூறுவேன். இரண்டாவது சபை முதலா வதன் உயிரை உறிஞ்சி விடும்; அல்லது முதலாவது, இரண்டா வதன் உயிரை உறிஞ்சி விடும். இரண்டையுமே நிர்மாணிக்க நம் மிடம் போதிய பொருள்கள் இல்லை. அத்தகைய சூழ்நிலைகளின் கீழ், இரண்டு ஆயத்த நிலைகளிலுள்ள சபைகளைக் காட்டிலும், தனியொரு திறமை மிக்க சபையே சிறந்தது. இந்தக் காரணங்களுக் காக, நான் இந்த மாநிலத்தில் இரண்டாவது சபை அமைப்பதை எதிர்க்கிறேன்.

## அத்தியாயம் 6

## சட்ட சபையின் அதிகாரங்கள்

*100. தலைவரை நியமிப்பதற்கும் அகற்றுவதற்குமான அதிகா ரம்:* 1919 சீர்திருத்தங்களுக்கு முன்னதாக, மாநிலத்தின் முக்கிய நிர்வாகியாகவிருந்த ஆளுநரே, மாநில் சட்டசபைத் தலைவருமாக விருந்தார். 1919-ல் புகுத்தப்பட்ட மாற்றங்களின்படி, தங்களது உறுப்பினர்களில் ஒருவரையே தலைவராகத் தேர்ந்தெடுக்கவும், அவரைப் பதவியிலிருந்து நீக்கவுமான உரிமையை மாநிலச் சட்ட சபை பெற்றது. இது ஒரு மதிப்பு மிக்கத் தனிச் சலுகையாகும். எனினும், தலைவரது நியமனம் ஆளுநரது ஒப்புதலின் பேரிலும், அவரை அகற்றுதல் ஆளுநரது இசைவின் பேரிலும் என்ற அள விற்கு இந்தச் சலுகையின் பிரயோகம் சில வரையறைகளுக்குட் பட்டது ஆகும். சட்டசபையைக் காட்டிலும், நிர்வாகமும் உயர் வானது என்று கருதப்பட்ட காலத்தின் மீதங்களே அந்த வரை யறைகள் ஆகும். அவை, குடியேற்ற நிலை நாடுகளின் அரசியல் சட்டத்தில் காணப்படுவதில்லை. அவை சட்டசபையின் சுதந்திரத் திற்கு ஒவ்வாததாகையால், அவை அகற்றப்பட வேண்டும். தலைவர் நிர்வாகத்திலிருந்து சுதந்திரமானவர் என்று கொண்ட போதிலும், ஒரு கேள்வி: அவர் நீதித்துறையிலிருந்தும் சுதந்திர மானவராக ஆக்கப்பட வேண்டுமா? இந்திய அரசாங்கச் சட்டத்தின் 110-ஆவது பிரிவு, உயர்நீதிமன்ற ஆட்சி எல்லையிலிருந்து விலக்குப் பெற்றுள்ள அதிகாரிகள் மற்றும் எந்தெந்த விஷயங் களில் அவ்வாறு விலக்குப் பெறுவர் என்று வரையறுக்கிறது. இந்த பாதிப்பின்மையை அனுபவிக்கும் அதிகாரிகளில் சட்டசபைத்

தலைவர் சேர்க்கப்படவில்லை. அவ்வாறிருக்கும் போது, தலைவர் என்ற முறையில், அவரது செயல்பாடும், நீதிமன்ற ஆட்சி எல்லைக்குட்பட்டதாகிறது. அதன் பொருள், சட்டசபைத் தலைவர் என்ற முறையில் அவரது நடத்தை, நீதிமன்றங்களில் விசாரணைக் குட்பட்டதாகும். சட்டசபை நடவடிக்கைகளில் பெரும் கால தாமதத்தை ஏற்படுத்தக்கூடிய அளவில், இது அலுப்பூட்டும் வழக்கு களுக்குப் பெரிதும் இடம் தந்து விடுகிறது என்று அஞ்சப்படு கிறது. நீதிமன்ற அதிகாரத்திலிருந்து தலைவருக்கு விலக்களிப் பதன் மூலம் இதனைத் தவிர்க்க வழிதேடப்படுகிறது. இந்த மாற்றத்தினை நான் எதிர்க்கிறேன்; அவை எப்போதும் போலிருக் கும்படி விட்டு விட நான் விரும்புகிறேன்.

**101.** *சலுகைகளை வரையறுக்கும் அதிகாரம்:* சட்டசபை போன்றதொரு குழுவின் வாழ்வுக்கும், அது ஆற்ற எண்ணியுள்ள செயல்களைச் சரிவர ஆற்றுவதற்கும், நியாயமாகத் தேவைப் படும் எல்லா அதிகாரத்தையும் சட்டசபைக்கு வழங்குவதற்கான தேவையை யாரும் மறுக்க முடியாது. தற்போதுள்ள சட்டத்தின் கீழ், மாநிலச் சட்டசபைகளின் நிலை பெரிதும் திருப்திகரமான தாக இல்லை. சட்டசபை உறுப்பினர்களுக்குச் சில காப்பு நிலை களை வழங்குவது, ஒழுங்கற்ற முறையில் நடந்து கொள்ளும் ஓர் உறுப்பினரை வெளியேற்றுவதற்குச் சட்டசபை விதிகளின், விதி 17-ன்படி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம், இவை நீங்கலாக, சட்டசபையின் பணியைத் தடைசெய்வதற்குத் திட்ட மிடப்பட்டும் ஒரு தவற்றுக்கு எதிராகவோ, சபையின் கண்ணி யத்தை இழிவுபடுத்தும் ஒரு செயலுக்கு எதிராகவோ, தன்னைக் காத்துக் கொள்வதற்கான எந்த அதிகாரத்தையும் சட்டம் வழங்க வில்லை. அத்தகைய அதிகாரம், இனியும் சபைக்குத் தரப்படாமல் இருக்கக் கூடாது. எனவே, டொமினியன் சட்டசபைகளைப் போன்றே, மாநிலச் சட்டசபைகளுக்கும், குறிப்பிடப்பட்ட வரம் பிற்குள், தனது சொந்த நலனுக்குத் தேவை என்று அது எண்ணும் அதிகாரங்களையும், சலுகைகளையும் வரையறுக்கும் அதிகாரம் சட்டரீதியாக வழங்கப்பட வேண்டும்.

**102.** *நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கான அதிகாரம்:* பம்பாய்ச் சட்டசபை அலுவல் நடத்தை, இந்திய அரசாங்கச் சட்டம் பகுதி 72D(6)ன் கீழ் வகுக்கப்பட்ட விதிகளின்படியும், அதற்குத் துணையாக அதே சட்டம் பகுதி 12D(7)ன்கீழ் வகுக்கப் பட்ட நிலையான ஆணைகளின் படியும், ஆட்சி செய்யப்படு கிறது. இந்த நடவடிக்கை விதிகளை உருவாக்குவதில், மாநில சட்டசபைக்குப் பங்கு எதுவும் இல்லை. நிலையான ஆணைகள் கவர்னர்-ஜெனரலால் உருவாக்கப்படுகின்றன; என்றாலும், அதற் குரிய திருத்தங்களுக்கு ஆலோசனை வழங்கச் சட்டசபைக்குச் சுதந் திரம் உண்டு. ஆனால், கவர்னர்-ஜெனரல் பகுதி 129-ன்கீழ் வகுக்கப்பட்ட விதிகள், ஆணைகளை மாற்றவோ, தள்ளுபடி

செய்யவோ மாநிலச் சட்டசபைக்கான அதிகாரத்தைத் தெளிவாகத் தடைசெய்கிறது. மாநிலச் சட்டசபை தனது சொந்த நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கான அதிகாரம் பெற்றிருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். வேறுசில நாடுகளில் அரசியல் சட்ட விதியின் பகுதிகளாக அமையும் சில வாசகங்களை, அந்த விதிகளில் சில தன்னகத்தே கொண்டிருக்கின்றன என்ற உண்மையிலிருந்துதான், மாநிலச் சட்டசபைக்கு அத்தகைய சுதந்திரம் வழங்குவதற்கான துன்பம் எழுகிறது என்று தோன்றுகிறது, அதன்மூலம், விதிகளைத் திருத்துவதற்கான அதிகாரம், நடைமுறையில் அரசியல் சட்டத்தை மாற்றும் அதிகாரமாக ஆகிறது. இந்திய அரசாங்கச் சட்டத்தின் பகுதியாக, அத்தகைய விதிகளை இயற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டால் இந்தக் கஷ்டம் எளிதில் தவிர்க்கப்படலாம். அவ்வாறு செய்யப்பட்டால், நான் கூறிய பரிந்துரைகள் சுலபமாக நடைமுறைப்படுத்தப்படலாம்; ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, கானடா நாடுகளது டொமினியன் சட்டசபைகளுக்கு இணையாக மாநிலச் சட்டசபைகளையும் கொண்டு வரலாம்.

*103. சட்டமியற்றும் அதிகாரம்:* கவர்னர்-லெப்டினன்ட் கவர்னர் அல்லது தலைமை ஆணையாளர் ஆகியோரது முக்கிய இசைவின்றி, ஒரு மாநிலத்தின் பொது வருவாயைப் பாதிக்கும் அல்லது அந்த வருவாய்களின் மீது எந்த அதிகக் கட்டணத்தையும் விதிக்கும் மசோதாவை எந்த உள்ளூர்ச் சட்டசபை உறுப்பினரும் கொண்டு வருவது சட்டவிரோதமானது என்று இந்திய அரசாங்கச் சட்டம் 80C பிரிவு கூறுகிறது. இந்தப் பிரிவு, சட்டசபை அதிகாரங்களின் மீது தீவிர வரம்பினைப் புகுத்துகிறது. நாட்டு விவகாரங்களைச் செயல்படுத்துவதில் மக்களுக்கு எந்த உரிமையுமே அற்ற காலத்தின் எஞ்சியுள்ள மீதமே அந்தப் பிரிவு. நிர்வாகத்தைக் காட்டிலும், மேலான சட்டசபையுடன், அந்த அதிகாரங்களையும் தக்கவைப்பது பொருத்தமுடையதாகாது. ஆகவே, இந்தப் பகுதி அகற்றப்பட வேண்டும். அப்படியிருந்தும், சபை நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் ரத்துச் செய்வதற்கான அதிகாரம் கவர்னருக்கு உண்டு. அந்த அதிகாரம் போதுமானதாகும். முழுமையான அமைச்சரவைப் பொறுப்பு ஆகிய அமைப்பின்கீழ், அதற்கும் அதிகமான அதிகாரம் இருப்பது அவரது நிலைக்கு ஒத்ததாக இருக்காது.

*104. பண ஒதுக்கு அதிகாரம்:* ஒரு கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்கவோ, அல்லது அதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கவோ அல்லது அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை முழு மான்யத்தையும் குறைப்பதன் மூலமோ அல்லது அந்த மான்யத்தின் பகுதியாகவுள்ள எந்த ஒரு பிரிவிற்கான செலவீட்டைக்குறைக்கவோ, தவிர்க்கவோ செய்வதன் மூலம் குறைக்கவோ, பிரிவு 72D யின்படிச் சட்டசபைக்கு அதிகாரமுண்டு இந்த அதிகாரம், சில

குறிப்பிட்ட நியதிகளுக்கு உட்பட்டதாகும். தனி ஒதுக்கீடு சம்பந்தப் பட்டதொரு கோரிக்கையாக இருப்பின், அந்தக் கோரிக்கையில் அளிக்கப்பட்டுள்ள செலவீடு, அந்தத் தலைப்பின் கீழ்தான் ஆற்ற வேண்டிய பொறுப்பிற்கு அது அத்தியாவசியமானது என்று கவர்னர் சான்றுரை வழங்கினால், அந்த முடிவினை மறுக்கும் அதிகாரம் அவருக்கு உண்டு. சட்டசபையின் ஒதுக்கீட்டு அதிகாரத் திற்கு வரம்பு கட்டும் மற்றொரு காப்பு வாசகம், பிரிவு 72-D, உபபிரிவு (2)(b)-ல் அடங்கியுள்ளது; அதன்படி, ''மாநிலத்தின் பாதுகாப்பையும், அமைதியையும் காப்பதற்கு, அவரது கருத்துப் படி, தேவையான செலவீட்டையும், அல்லது எந்தவொரு துறையை யும் வழிநடத்திச் செல்லவோ, அவசரகால நிலையின் போது அதிகார ஆணை பிறப்பிக்கும் அதிகாரமோ,'' அவருக்கு உள்ளது. சட்டசபை அதிகாரங்களின் மீது, இவையும்கூட தீவிர வரையறைகளைச் சுமத்துபவை தான்; அவை, சட்டத்திலிருந்த அகற்றப்பட வேண்டுமென்று நான் கூறுகிறேன். முற்றிலும் பொறுப்பு வாய்ந்ததாகவும், அதில் ஆளுநருக்கு விஷயங்களைத் திசை திருப்புவதில் எந்தப் பளுவும் சுமத்தாததுமான ஒரு அரசாங் கத்தில், முதலாவது காப்பு வாசகத்தின் கீழ் ஆளுநருக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரம், பொருத்தமற்றதாகும். மாநிலத்தின் பாது காப்பும், அமைதியும், பொறுப்புவாய்ந்த நிர்வாகத்தினைக் காட்டி லும், அதிகமாக ஆளுநருக்குச் சிறந்த அக்கறையுடையது அன்று. அதன் பயனாக, இரண்டாவது காப்பு வாசகத்தின்படி ஆளு நருக்கு அளிக்கப்பட்ட அதிகாரம் தேவையற்றது; அது அகற்றப் பட வேண்டும்.

105. சட்டசபையின் நிதி அதிகாரத்தின் மீதுள்ள மற்றொரு தடை, பகுதி 72(D) 3-ல் அடங்கியுள்ளது. இதன் பயனாக, அதில் குறிப்பிடப்பட்டுள்ள சில குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ், நிர்வா கம் செலவிடும் தொகையினை, அது சட்டசபையின் வாக்கெடுப் புக்கு உட்படுத்தத் தேவையில்லை. அதன் விளைவாகச் சட்ட மன்றம் தொடக் கூடாத பெருமளவிலான நிரந்தர ஒதுக்கீடுகள் மாநில பட்ஜெட்டில் இடம்பெறும். தத்துவார்த்த ரீதியில் பார்க்கப் போனால், ஒவ்வோர் ஆண்டும் செலவீட்டின் ஒவ்வொரு இனமும், சட்டசபையால் ஏற்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அநேகமாக ஒவ்வொரு நாட்டிலும், ஆண்டுதோறும் சட்டசபை யினால் வாக்களிக்கப்படத் தேவையற்ற நிரந்தர ஒதுக்கீடுகள், அவற்றின் பட்ஜெட்டில் காணப்படவே செய்கின்றன. மொத்த வருடாந்தரச் செலவீட்டில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு அளவிற்கு யுத்தத்திற்கு முன்னர், இங்கிலாந்தில், நிரந்தர ஒதுக்கீட் டுப் பட்டியலாக வளர்ந்துள்ளது. இந்தத் தொகையை நிர்ணயிக்க வும், பொதுச் செலவீட்டின் தன்மைகளைத் தீர்மானிக்கவும், நிர்வாகத்தை நம்பலாமா, அல்லவா என்பது, அரசியல் சட்ட ரீதியான அரசாங்கத்தை அடைவதில் மக்கள் அடைந்துள்ள வளர்ச்சிச் சட்டத்தையே சார்ந்துள்ளது. அரசாங்கம் மற்றும்

மக்களது அரசியல் உரிமைகளைப் பொறுத்து, ஒரு நிச்சயமற்ற தன்மை நிலவும் சட்டமாக இருந்தால், பகுதி 72டி(D)(3)-ல் கண்டுள்ளபடி, சட்டசபையின் ஒப்புதலின்றி, பொதுப் பணத்தை அவ்வாறு நிரந்தர ஒதுக்கீட்டுக்கு அனுமதிப்பது அவ்வளவு பாதுகாப்பானது அல்ல. மாநிலங்களில் பொறுப்பான அரசாங்கத்திற்கான அடிப்படை இப்போதுதான் இடபட்டு வருகிறது என்பது உண்மையே, நிர்வாகத்தின் அத்து மீறல்களுக்கெதிராக மாநிலச் சட்டசபைகள் விழிப்புடன் செயல்பட வேண்டியுள்ளன. இருந்த போதிலும், பொது அதிகாரத்தைத் தன்னிச்சையாகப் பயன் படுத்துவதன் மீது உள்ள பல்வேறு கட்டுப்பாடுகளின் கீழ், பொதுச் செலவீட்டிற்கான ஒவ்வோர் இனத்தையும் வருடாந்தர இசைவானைக்காக அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தத் தேவையில்லாத அளவுக்கு, பொது விஷயங்களின்பால் பொது மக்கள் கட்டுப்பாட்டு உரிமை ஏற்றப்பட்டு, புதிய அரசியல் சட்டத்தில் அது முழுமையாக வழங்கப்படும் என்று நான் நினைக்கிறேன். எனவே, இந்த நிரந்தர ஒதுக்கீட்டுத் திட்டத்தை நான் மறுக்கவில்லை. ஆனால் சட்டத்தின் மூலம் அது அவ்வாறு செய்யப் படுவதையும், அதன் மூலம் சட்ட சபையின் அதிகாரங்களைக் குறைப்பதையும் நான் மறுக்கிறேன். வாக்கெடுப்புக்குத் தேவையில்லாத இனங்களின் கீழுள்ள கொள்கையினையும் விவாதிப்பதற்குக் கூடச் சட்டசபையைத் தடைசெய்யும் விளைவினையே, அவற்றைச் சட்டப் பொருளாக்குவது ஏற்படுத்துகிறது. வாக்கெடுப்புக்குத் தேவையற்ற இனங்களைத் தோற்றுவிப்பது, வசதியைப் பொறுத்த விஷயமாக இருக்க வேண்டும். அது குறித்து எந்தத் தடைகளும் சட்டரீதியாகச் சட்டசபைக்கு விதிக்கப்படக் கூடாது.

**106.** *நிர்வாகத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்:* ஆரம்பத்தில் 1919-ன் சீர்திருத்தப்பட்ட அரசியல் சட்டத்தின்கீழ் மாநிலச் சட்டசபைகள் அமைச்சரை மூன்று வழிகளில் கட்டுப்படுத்த முடியும்: 1) சட்டத்தின் மூலம் 2) பொருள்களை வழங்க மறுப்பதன் மூலம் 3) அவர்களது சம்பளத்தை மறுப்பது அல்லது குறைப்பதன் மூலம் மந்திரிகளது நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சட்ட சபைக்குள்ள இரண்டு வழிகள், மேற்சொன்னவற்றில் இரண்டாவதும், மூன்றாவதும்தான். இந்தக் கட்டுப்பாடு, வழக்கமாக ஆண்டிற்கு ஒரு முறைதான் செலுத்தப்பட முடியும்; எனவே அது போதாது. பின்னர், 1926-ல் ஓர் அமைச்சரின் மீது நம்பிக்கையின்மை தெரிவிப்பதற்கு வகை செய்யப்பட்டது. ஓர் அமைச்சரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கும, சட்டசபைக்கு இந்த அதிகாரங்கள் போதுமானவையே; அமைச்சர்கள் தனித்தனியே தங்களது செயல்களுக்குப் பொறுப்புள்ளவர்கள் என்ற கருத்துக்கு ஏற்ப இது உள்ளது. எதிர்கால அமைச்சரவை, கூட்டுப் பொறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்படும்; அதன்கீழ் அமைச்சர்கள் ஒன்றாக நிற்கவோ, வீழவோ செய்வர். அமைச்சரவையை முழுமையாகப் பணி நீக்கம் செய்வதற்கான விருப்

பத்தைக் காட்ட, சட்டசபையின் தற்போதுள்ள அதிகாரத்தில் எதுவும் இல்லை. தற்போதுள்ள மசோதாவிலிருந்து மாறுபட்ட ''நம்பிக்கை இல்லா மசோதா'' என்றழைக்கப்படும், புதிய வகை மசோதாவுக்கு வகை செய்வதற்கு வழிவகுக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன்; அந்த மசோதாவுக்கு ''ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு அமைச்சரின் கொள்கைக்கு வினா எழுப்பும் மசோதா'' என்று செயல்பட வேண்டும். இதனை முடிமான் கமிட்டி குறிப்பிட்டது; ஆனால் அது நிறைவேற்றப்படவில்லை.

107. அரசியல் சட்டத்தை மாற்றும் அதிகாரம்: மாநிலச் சட்டசபைகள், அவற்றைத் தோற்றுவித்த பத்திரத்தின் வாசகங் களுக்குக் கட்டுப்பட்டவையாகும். அந்தப் பத்திரத்தின்படி, இதர எல்லா நலன்களைக் காட்டிலும், அவற்றின் பிராந்தியத்தில் ஒரு விசேஷ, வரையறுக்கப்பட்ட அரசாங்க அதிகாரத்தைப் பெற் றுள்ள ''முழு நிறைவான சக்தி'' பெற்ற நிறுவனங்களாக அவை ஆக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் முழு நிறைவான அதிகாரங் கள், அரசியல் சட்டத்தை மாற்றும் அதிகாரத்தைப் பெற்றிருக்க வில்லை. ஒரு மாநிலத்தின் அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு, மாநிலச் சட்டசபைகளுக்கு, அரசியல் நிர்ணய சபையின் அதிகாரங் களும் இருக்க வேண்டும் என்றதொரு விழைவு உள்ளது. அத்த கைய பிரேரணைக்குச் சாதகமாக நிறையக் கூறமுடியும். ஒரு மாநிலத்தின் மக்களுக்குத் தன்னாட்சி அமைக்க நாடாளுமன்றம் ஒப்புக் கொண்டிருப்பதால், அந்த மாநில மக்கள், தாங்கள் எந்த வகை ஆட்சியின்கீழ் வாழ விரும்புகிறார்களோ, அத்தகைய அரசாங்க அமைப்பினைத் தீர்மானிப்பதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், தங்களது அரசியல் சட்ட உரிமைகள் பெரும்பான்மையினரால் தீர்மானிக்கப்பட விரும்பாத சிறுபான்மை யினர் உள்ளனர் என்பதையும், அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு மாநில சட்டசபைகளுக்கு உரிமை அளித்தால் அவ்வாறுதான் நடக்கும் என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். கனடா வின் அரசியல் சட்டத்தை மாற்றுவதற்கு கனடிய நாடாளுமன்றத் திற்கு, அந்த அரசியல் அதிகாரத்தை, அளிக்காததற்கு முக்கிய காரணம் அதுவே. எனினும், சான்றுக்குத் தென் ஆப்பிரிக்காவை எடுத்துக்கொண்டால், சிறுபான்மையினரின் நிலைகளுக்குக் கெடுத லில்லாத முறையில், அரசியல் சட்டத்தை மாற்றும் அதிகாரம் சட்டசபைக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே, தென்னாப்பிரிக் காவை ஏன் பின்பற்றப்படக் கூடாது என்பதற்குக் காரணமே இல்லை. நில அரசியுல் சட்டத்தை மாற்றுவதற்கு, மாநிலச் சட்ட சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன்;'' ஆனால் ஒரு நிபந்தனை! சட்டசபையில் சிறுபான்மையினரது 'பிரதிநிதித்துவம் குறித்த பகுதிகளை மாற்று வதற்கு அதற்கு அதிகாரம் இருக்கக் கூடாது.

108. அத்தகையதொரு' சட்டத்தை இயற்றுவதற்கு எவ்வகை

விசேஷ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைத் திர்மா ணிப்பது மிகக் கடினமானது. எனினும், அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான முறையானது, குடிமக்களின் அடிப்படை உரிமை களைப் பாதுகாக்கப் போதுமான அளவு சரியாக ஆனால் அதே சமயத்தில், வளர்ச்சி என்பது வாழ்வினைப் போன்றே வாழ்க்கை யின் நியதி என்பதையும், பெரும்பான்மையினரின் ஆட்சிக் கோட் பாட்டுடன் ஒன்றுபட்டு இணக்கமாக, ஒரு நடவடிக்கையையும், இறுதி முடிவினையும் எடுக்கு முன்னர் ஆழ்ந்த சிந்தனையையும் பெறவேண்டுமென்பதையும் ஏற்கும் அளவிற்கு நெகிழ்வுடையதாக வும் இருக்க வேண்டும் என்று நாம் கூறமுடியும். அரசியல் சட்டத் திற்கான வெவ்வேறு வகையான திருத்தங்களுக்கு, வெவ்வேறு வகையான நிகழ்ச்சி முறைகளைக் கடைப்பிடிப்பதே, பாதுகாப் பான வழி என்று எனக்குத் தோன்றுகிறது. அரசியல் சட்டத்தின் குறைந்த அடிப்படைப் பகுதிகளுக்கான திருத்தங்களைக் காட்டி லும் மிக அடிப்படைப் பகுதிகளுக்கான; தீர்மானங்களுக்கான நிகழ்ச்சி முறை மிகவும் இறுக்கமானதாக இருக்க வேண்டும்.

பிரிவு 4

# மாநில சுயாட்சி

அத்தியாயம் 1

## மாநில அரசாங்கத்துக்கும் இந்திய அரசாங்கத்துக்கும் இடையேயான உறவு

*109.* ஒரு மாநிலத்தின் நிர்வாகத்துறை மாநிலச் சட்டமன்றத்துக்கு உட்பட்டதாக இல்லாமல் இந்த மாநிலத்துக்கு வெளியே உள்ள வேறு ஏதேனும் ஓர் அமைப்புக்கு உட்பட்டதாக இருக்குமானால், அல்லது மாநிலச் சட்டமன்றம் தனது துறையில் உயர் அதிகாரம் படைத்ததாக இல்லாமல் தனது அதிகாரங்களைச் செலுத்தும் முறையில் வேறு எந்த ஓர் அதிகார அமைப்புக்கும் உட்பட்டதாக இருக்குமானால், அப்போது நிர்வாகத் துறையின் பொறுப்பு, பயனற்றதாகி விடும் என்பது தெளிவு. வேறு விதமாகச் சொன்னால் மக்களுக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள அரசாங்கம் சுயாட்சி உரிமை படைத்த அரசாங்கமாகவும் இருப்பது தேவை. இவ்வாறு மாநிலங்களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டுமென்றால், மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் செயற்பாட்டுத் துறைகள் தெள்ளத் தெளிவாக, திட்டவட்டமாக வரையறுக்கப்படுவது முக்கியம்.

*110. 1919* ஆம் ஆண்டுக்கு முன்னர் பின்கண்ட நிலைமை இருந்தது: அப்போது, *1915* ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டம் *45*-ஆவது பிரிவின்படி, மாநில அரசாங்கம் நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்-ஜெனரலின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்ள வேண்டும்; மேலும் மாநில அரசாங்கம் தனது நடவடிக்கைகளையும், கவர்னர்-ஜெனரலுக்கு அனுப்பியாக வேண்டும் என்று, தான் கருதும் எல்லா விஷயங்கள்ளயும் அல்லது அவர் கேட்கும் தகவல்களையும் அவ்வப்போது அவருக்குக் கவனமாகத் தெரிவிக்க வேண்டும்; மாநிலத்தை ஆட்சி புரிவது தொடர்பான அனைத்து விஷயங்களிலும் மாநில அரசாங்கம் கவர்னர்-ஜெனரலின் கண்காணிப்பிலும், வழிகாட்டுதலிலும், கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும். அப்படியானால் இதன் பொருள் என்ன? அதன் பொருள் இதுதான்; அதாவது, தாம் நிர்வகித்து வரும் விஷயங்கள் எதிலும் மாநில அரசாங்கங்களுக்கு எத்தகைய சொந்த அதிகாரமும் கிடையாது; அவை செலுத்தும் அதிகாரங்கள் யாவும் மத்திய சர்க்கார் வழங்கும் அதிகாரங்களேயாகும்; ஒரு கல்லூரி முதல்வர் தனது அதிகாரத்தைத் தன்னுடைய பிரதிநிதி ஒருவருக்கு வழங்குவது போன்றதுதான் இது. ஆயினும் *1919*-ஆம்

ஆண்டுச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு நிலைமையில் மாற்றம் ஏற்பட்டது. மாநில சர்க்காருக்கும் மத்திய சர்க்காருக்கும் இடையே யான உறவு 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் விதிகளுக்கு உட் படுத்தப்பட்டது. ''மாநில விஷயங்கள் தொடர்புடைய அதிகாரங் களை உள்ளாட்சி அரசாங்கங்களுக்கு மாற்றிக் கொடுப்பதற்கும், வருவாய்களையும் இதர நிதிகளையும் அந்த அரசாங்கங்களுக்கு ஒதுக்கித் தருவதற்கும்'' 1919-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 45 (1) (பி) பிரிவு வகை செய்கிறது. அதே சமயம் 45 (3)-ஆவது பிரிவு கூறுவதாவது: ''மாற்றப்பட்ட துறைகள் விஷயத்தில் மாநில அரசாங்கங்களைக் கண்காணிப்பதற்கும், அவற்றுக்கு வழிகாட்டு வதற்கும், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் கவர்னர்-ஜென ரலின் கவுன்சிலுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இந்தச் சட்டத்தின் விதிகளில் குறிப்பிட்டுக் கூறப்பட்டுள்ள நோக்கங் களுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்; ஆனால் எந்த ஒரு குறிப்பிட்ட விஷயத்திலும் இத்தகைய அதிகாரங்களைச் செலுத்தும் நோக்கம் இந்தச் சட்டத்தில் குறிப்பிட்டுக் கூறப் பட்டிருக்கும் நோக்கங்களில் அடங்குமா என்பதைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்-ஜெனர லுக்குத்தான் உண்டு.'' ஆக, 1919-ஆம் ஆண்டுச் சட்டம் பின் கண்ட இரு மாற்றங்களைச் செய்துள்ளது என்பது கண்கூடு: (1) இந்திய சர்க்காரின் பிரதிநிதிகள் என்ற முறையில் மாநிலங் கள் இதுவரை பெற்றுவந்த அதிகாரத்துக்குப் பதிலாக அவற்றுக்கு அவற்றின் சொந்த அதிகாரத்தை இந்தச் சட்டம் வழங்கியது. (2) அமைச்சர்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்ட துறைகள் சம்பந்தமாக இந்திய சர்க்காருக்கு மாநிலங்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்ற பழைய கடமைப் பொறுப்பிலிருந்து அவற்றை இச்சட்டம் விடுவித்தது; ஆயினும் அதேசமயம் கண்காணிப்பு அதிகாரங்களை மத்திய சர்க்காரிடம் அப்படியே விட்டு வைத்தது. எல்லாத் துறைகளையுமே அமைச்சர்களின் கட்டுப்பாட்டுக்கு முற்றிலுமாக மாற்ற முடியும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. ஆனால் இவ்வாறு மாற்றுவது இந்திய சர்க்காரின் கண்காணிப்பு அதிகாரங்களுக்கு எப்போதும் உட்பட்டதாகவே இருக்கும்; இத னால் மாநில சர்க்காரின் செயல் சுதந்திரத்தில், மத்திய சர்க்கார் தலையிட முடியும். ஆகவே, மத்திய அரசாங்கத்துக்கு இந்தக் கண்காணிப்பு அதிகாரங்கள் இருப்பது அவசியம்தானா, அப்படி அவசியம்தான் என்றால், இந்த அதிகாரங்கள் மாநில சுயாட்சி உரிமைக்கு முரண்படாத வகையில், மத்திய அரசாங்கத்துக்கும் மாநில அரசாங்கத்துக்கும் இடையேயான உறவுகள் சம்பந்தமாக வேறு ஏதேனும் வடிவத்தைப் பற்றிச் சிந்திப்பது சாத்தியமா என்பதே இங்குள்ள பிரச்சினை.

111. 1919-ஆம் ஆண்டுச் சட்டமும் அதன் விதிகளும் மாநிலங் களுக்கான துறைகளை மத்திய சர்க்காரின் துறைகளிலிருந்து வேறு படுத்தி வரையறுத்துக் காட்டியுள்ளன. அப்படியிருந்தும் மாநிலத்

நான் யோசனை கூறுகிறேன். ஆனால் அதேசமயம் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் ஆகிய இரண்டின் கூட்டு அதிகார எல்லைக்குட்பட்ட விஷயங்களில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை மாநில அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும்.

117. இந்திய அரசாங்கத்திடமிருந்து வேறுபட்டதொரு அமைப் பாக மாநில்ங்கள் அரசியல் ரீதியில் செயல்படுவதை நடைமுறைப் படுவதற்கு மாநில நிர்வாக அமைப்பிலும், மாநிலச் சட்டமன்றத் திலும் மன்னரின் பிரதிநிதித்துவம் முன்னிலும் தெளிவாக, வெளிப் படையானதாக இருக்க வேண்டும். தற்போதுள்ள சட்டத்தின் படி இந்திய அமைச்சர் மன்னரைப் பெரிதும் பின்னுக்குத்தள்ளி விட்டார்; உண்மையில் அவரது இடத்தை அபகரித்துக் கொண்டு விட்டார் என்று கூடச் சொல்ல வேண்டும். இந்தியாவுக்கான அமைச்சர் அலுவலகம் (Office of the Secretary of State for India) காலனிகளுக்கான அமைச்சர் அலுவலகத்தை (Office of the Secretary of State for Colonies) ஒத்ததாகும். ஆனால் இவை இரண்டும் முற்றிலும் வேறுபட்ட பணிகளை ஆற்றுகின்றன. குடியேற்ற நாடுகளின் (Dominions) அரசியலமைப்புச் சட்டத்தில் காலனி களுக்கான அமைச்சர் எத்தகைய இடத்தையும் பெறவில்லை. அனைத்துக் குடியேற்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களும் தமது நிர்வாக மற்றும் சட்டமியற்றும் அரசாங்கம் மன்னரின் அதிகாரத்தின்கீழ் இருப்பதாகவே திட்டவட்டமாகப் பறைசாற்று கின்றன. ஆனால் இந்திய அரசாங்கச் சட்டத்தின் 2-ஆவது பிரிவோ இந்திய மந்திரிக்கு ஒரு தெள்ளத்தெளிவான சட்ட மதிப்பை வழங்குகிறது. இந்த அமைச்சருக்கு அளிக்கப்பட்டிருக் கும் அந்தஸ்து கிட்டத்தட்ட மன்னரை இருட்டடிப்புச் செய்யும் அளவுக்கு மேலோங்கி நிற்கிறது. 1 ஆவது பிரிவில் ஏதோ போகிற போக்கில் குறிப்பிடப்பட்டிருப்பதைத் தவிர இந்திய அரசாங்கச் சட்டத்தில் வேறு எங்கும் மன்னர் பிரஸ்தாபிக்கப் படவில்லை என்று கூறலாம். இதற்கு வரலாற்றுக் காரணங்கள் உண்டு; 1773 ஆம் வருட ஒழுங்குமுறைச் சட்டம் இயற்றப்பட்ட போது, கிழக்கில் தான் கைப்பற்றிய பிரதேசங்கள்மீது மன்னர் உரிமை கொண்டாடியதை கிழக்கு இந்தியக் கம்பெனி கடுமையாக எதிர்த்தது என்பது இங்கு நினைவுகூரத் தக்கதாகும். வரலாற்று வேறுபாடுகள் எப்படியிருந்த போதிலும், குடியேற்ற நாட்டுச் சட்டங்கள் அது தொடர்புடைய அமைச்சரை ஏற்கவில்லை ஆனால் அதேசமயம் இந்தியச் சட்டம் அவரை ஏற்கிறது என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. இதன் விளைவாக காலனி களுக்கான அமைச்சர், குடியேற்ற நாடுகள்ள ஆளுவதில்லை. குடியேற்ற நாடுகளின் குறிப்பிட்ட சட்டங்களை அங்கீகரிக்கலாமா அல்லது நிராகரிக்கலாமா என்னும் விஷயத்தில் மன்னருக்கு ஆலோசனை கூறுவதே அவரது பணி. ஆனால் அதே சமயம் இந்தியாவுக்கான அமைச்சர் மன்னருக்கு வெறும் ஆலோசகர்

மட்டுமல்ல; இந்திய அரசாங்கச் சட்டம் 2-ஆவது பிரிவின்படி அவருக்கு முழு அரசாங்க் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

118. இரண்டாவது பிரிவில் இடம்பெற்றுள்ள விதிகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியாது. அவை மன்னரின் அந்தஸ்தை இழிவுபடுத்துவதோடு, இந்திய மந்திரியின் உண்மையான நிலையைத் திரித்துப் புரட்டிக் கூறுகின்றன. அது மட்டுமல்ல, மாநில அரசாங்கங்களின் அந்தஸ்து குறித்து ஒரு தவறானப் படப்பிடிப்பையும் அவை வழங்குகின்றன. 2-ஆவது பிரிவில் அடங்கியுள்ள விதிகளுக்கு 1919-ஆம் ஆண்டுக்கு முன்னர் என்ன காரணங்கள் கூறப்பட்ட போதிலும், அந்த ஆண்டுக் கொண்டுவரப்பட்ட மாற்றங்களின் விளைவாக அவை யாவும் அகற்றப்பட்டு விட்டன. அரசாங்க அதிகாரங்கள் மக்களுக்கு மாற்றப்பட்டுவிட்ட நிலைமையில், அந்த அதிகாரங்களை இந்திய மந்திரியின் கைகளில் இனியும் விட்டுவைப்பது சாத்தியமில்லை. அவ்வாறு விட்டுவைப்பது கடுமையான முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய ஓர் இரட்டை அரசாங்க முறையைப் புகுத்துவதாகவே அமையும். எனவே, இந்திய அரசாங்கச் சட்டத்தின் 2-ஆவது பிரிவை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்கண்ட இரண்டு புதிய பகுதிகள் சேர்க்கப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன்:

(1) மாநிலத்துக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் ஒரு மாநில நாடாளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; அது மன்னரையும் மன்னரது கவுன்சிலையும் பிரதிநிதிகள் கவுன்சிலையும் கொண்டதாக இருக்கும்; இனிமேல் அது ''மாநிலச் சட்டமன்றம்'' என்று அழைக்கப்படும்.

(2) மாநிலத்தின் நிர்வாக அதிகாரம் மன்னரிடம் இருக்கும்; மன்னரின் பிரதிநிதியான ஆளுநர் அந்த அதிகாரத்தைச் செலுத்துவார்; அரசியலமைப்புச் சட்டத்தையும் மாநிலச் சட்டங்களையும் செயல்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் இந்த அதிகாரம் விஸ்தரிக்கப்படும்.

இந்திய அரசாங்கத்தில் மன்னரின் அந்தஸ்தைக் குறிக்கும் இதே போன்ற பிரிவுகள் 1919 ஆம் ஆண்டுச் சட்டத்துடன் இணைக்கப்பட வேண்டும். இத்தகைய மாற்றம் செய்வது மன்னரும் இந்திய அமைச்சரும் தமக்குரிய உண்மையான அந்தஸ்தைப் பெறுவதற்கு உதவும்; அது மட்டுமன்றி, இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தைக் குடியேற்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு இசைவானதாக ஆக்கவும் துணைபுரியும்.

பிரிவு 5

# அரசுப் பணித்துறைகள்

## 1. பணித்துறைகளின் மறுசீரமைப்பு

119. *பணித்துறைகளின் பிரிவினை:* 1886-87-ல் இந்தியாவின் அரசுப் பணித்துறைகள் பற்றி ஆராய்வதற்காக 'அய்ச்சிசன் பொறுப்பாண்மைக் குழு' அமைக்கப்பட்டது. அந்தக் குழு தெரிவித்த பரிந்துரைகளின் அடிப்படையில்தான் தற்போது இந்தியாவில் அரசுப் பணித்துறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இந்தக் குழு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஏராளமான ஊதியம் கிடைக்கக் கூடிய உயர் பதவிகள் எல்லாம் பெரும்பாலும் ஐரோப்பியர்களைக் கொண்டே நிரப்புப்பட்டு வந்தன. இதனால் அரசுப் பணித்துறைகளில் தங்களுக்கு உயர் பதவிகள் அளிக்கப்பட வேண்டும்; இத்துறைகளில் விரிவான வேலைவாய்ப்புக்கு வகை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை இந்தியர்களிடமிருந்து எழுந்தது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதைத் தெரிவிக்குமாறு இந்தக் குழு முக்கியமாகக் கேட்டுக் கொள்ளப்பட்டது. இதன் பேரில் குழு சிவில் சர்வீஸ் என்பது "மிகவும் பொறுக்கியெடுத்தவர்களைக் கொண்டதாக" மட்டுமே இருக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தது. மேலும், உயர் அதிகாரிகளை இங்கிலாந்தில் தேர்வு செய்வதைப் பெருமளவுக்குக் குறைக்க வேண்டும் என்றும், பெரிய பதவிகளுக்கு இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்ட ஒரு பணித்துறையை (Series) அமைக்க வேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்தது. இந்தப் பரிந்துரைகளின் விளைவாய், இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் இம்பீரியல் பணித்துறையினராகவும் (Imperial Services), உள்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் மாநிலப் பணித்துறையினராகவும் (Imperial Services) அமைந்தனர். இந்த இரண்டு பணித்துறைகளையும் சேர்ந்த அதிகாரிகளை நியமிக்கும் போது, அவர்களது சம்பளம், விடுப்பு, ஓய்வு ஊதியம் முதலியவை தனித்தனியாகத் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றுக்கொன்று எத்தகைய தொடர்பும் இருக்க வேண்டியதில்லை என்றும் கூறப்பட்டது. இந்தப் பிரிவினை நாட்டின் பெரும்பாலான ஆட்சித் துறைகளில் நடைமுறையில் இருந்து வருகிறது; இது குறித்து இங்கு விவரமாக எடுத்துரைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனினும் ஒரு முக்கியமான விஷயத்தை மனத்தில் கொள்ள வேண்டும். அதாவது இங்கிலாந்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும், இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளையும் வேறுபடுத்திக் காட்டவே இந்தப் பிரிவினைச் செய்யப்பட்டதேயன்றி, இந்திய அரசாங்கத்தின் கீழ் நியமிக்கப்பட்டு இந்தியா முழுவதிலும் பணியாற்ற

வேண்டிய அதிகாரிகளையும், மாநில அரசாங்கத்தின் கீழ் நிய மிக்கப்பட்டுக் குறிப்பிட்ட மாநிலங்களில் மட்டுமே பணியாற்ற வேண்டிய அதிகாரிகளையும் பிரித்துக் காட்டுவதற்காக இந்தப் பிரிவினை செய்யப்படவில்லை. பின்கண்ட உதாரணங்களி லிருந்து இதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். தந்தி (பொறியியல்) இலாகாவிலும், இந்திய நில ஆய்வுத் துறையிலும் (Survey of India) உள்ள மாநிலப் பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் நேரடியாக இந்திய அரசின் கீழ் இருப்பதையும், எந்த ஒரு குறிப்பிட்ட மாநிலத்துடனும் அவர்கள் கட்டுப்படாததையும் பார்க்கலாம். இதே போன்று, கல்வித் துறையிலும் காவல் துறை யிலும் உள்ள இம்பீரியல் பணித்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் பல்வேறு மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு மாநிலமும் தனது சொந்த சிவில் துறையை உரு வாக்கிக் கொள்வதற்கான தருணம் வந்து விட்டது என்றே கருது கிறேன். இதன் பொருட்டு, அரசுப் பணித்துறைகளின் அகில இந்தியத் தன்மைக்கு முடிவு கட்டுவது அவசியமாகும். இந்திய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்தப் பல்வேறு துறைகளை நிர்வகிப்பதற்கும், மத்திய அரசு தனக்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களது சேவைகளைப் பயன் படுத்திக் கொள்வதற்கும் ஒரு மத்திய ஆட்சிப் பணி (Central Civil Service) உருவாக்கப்பட வேண்டும்; இதன் உறுப்பினர்கள் எந்த மாநில அரசின் கீழும் பணியாற்ற வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் இருக்கக் கூடாது. இதே போன்று ஒவ்வொரு மாநில அரசும் தனக்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கும், அவர்களைத் தனது பணிகளுக் கென்றே தனி யுரிமையுடன் அமர்த்திக் கொள்வதற்கும் ஒரு மாநில ஆட்சிப் பணி (Provincial Civil Service) தோற்றுவிக்கப்பட வேண்டும். இந்தப் பரிந்துரை அரசுப் பணித்துறை அமைப்பில் எத்தகைய பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தி விடாது. ஏனென்றால், இம்பீரி யல் சர்வீஸையும் மாநில சர்வீஸையும் சேர்ந்தவர்கள் இந்தியா வின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்ற கடமைப்பட்டிருந்தாலும், அவர்களது அகில-இந்தியத் தன்மை, பெயரளவுக்குத்தான் இருக் கும். சிவில் சர்வீஸ் உறுப்பினர் ஒருவர், அவர் இம்பீரியல் சர்வீஸைச் சேர்ந்தவராயினும் சரி, மாநில சர்வீஸைச் சேர்ந்தவ ராயினும் சரி, அவர் ஆரம்பத்தில் பணிக்கமர்த்தப்பட்ட மாநிலத் திலிருந்து பிறிதொரு மாநிலத்தில் சேவை புரியும்படி பணிக்கப் பட்ட சந்தர்ப்பங்கள் மிகமிகக் குறைவு என்ற உண்மையிலிருந்தே இதனைத் தெரிந்து கொள்ளலாம். கிட்டத்தட்ட இவர்களில் எல்லாருமே துவக்கத்தில் பணிக்கு அமர்த்தப்பட்ட அதே மாநிலத் திலேயே தொடர்ந்து சேவை செய்து வந்திருக்கின்றனர். எனவே, நான் பரிந்துரைத் துள்ள சீர்திருத்தம் எத்தகைய பெரிய மாற்றத் தையும் ஏற்படுத்துவதாகாது. அது செய்வதெல்லாம் உள்ள நிலை மையை அப்படியே ஏற்றுக் கொள்வதே ஆகும்.

**120.** சிவில் சர்வீஸை ஒழுங்கமைப்பதில் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துவதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவதாக, இந்திய அரசின் கீழ்ப் பணியாற்றுபவர்களை மத்திய சர்வீஸ் என்றும், மாநில அரசின் கீழ் பணியாற்றுபவர்களை மாநில சர்வீஸ் என்றும் அரசுப் பணித் துறைகளைப் பிரிப்பதில் ஒரு மாபெரும் அனுகூலம் உண்டு. மாநில அரசாங்கத்தின் இயல்பு மாறியுள்ள நிலைமையில், இது மிக முக்கியமான, இன்றியமையாத சீர்திருத்தம் என்பதுதான் அந்த அனுகூலமாகும். இப்போதுள்ள முறை அப்படியே நீட்டிக்குமானால், அமைச்சருக்குள்ள பொறுப்பை நிறைவேற்றுவது என்பது கடினமாகி விடும். இந்திய அரசாங்கச் சட்டம் 96(பி) பிரிவின்படி, மன்னர் திருவுளங் கொள்ளும் வரைதான் இந்தியாவிலுள்ள அரசாங்க அலுவலர்கள் பதவியில் நீட்டிக்க முடியும். ஆனால் அதே சமயம் ஓர் அதிகாரியைப் பதவியிலிருந்து நீக்க மேன்மைமிகு மன்னர் எப்போது திருவுளங் கொள்ள வேண்டும் என்று தீர்மானிக்கும் அதிகாரத்தை இந்தச் சட்டம் அமைச்சருக்கு வழங்கவில்லை என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும். இந்த அதிகாரம் அந்த அதிகாரியை நியமிக்கும் அதிகாரமுடையவருக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், பதவியிலிருந்து விலக்கப்பட்ட அதிகாரி இந்திய மந்திரியிடம் மேல் முறையீடு செய்து கொள்ளும் உரிமை பெற்றிருக்கிறார். ஓர் அதிகாரியைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் அமைச்சருக்கு இல்லை என்பது மட்டுமல்ல; எந்தத் தடையுமின்றி அவரால் அந்த அதிகாரியைத் தண்டிக்கவும் முடியாது; ஏனென்றால், இந்திய மந்திரியால் நியமிக்கப்பட்ட ஓர் அதிகாரி ஆளுநரின் (Governor) மாநிலம் ஒன்றில் உள்ள ஒரு மேலதிகாரி பிறப்பித்த உத்தரவால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகக் கருதினால் அவர் ஆளுநரிடம் முறையீடு செய்து கொள்ளவும், அந்த முறையீட்டை ஆளுநர் விசாரித்து, தமக்கு நியாயமானதாக, நேர்மையானதாகத் தோன்றும் ஆணையைப் பிறப்பிக்கவும் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சட்டமன்றத்தின் விருப்பத்துக்கிணங்க அதற்கு அமைச்சர் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள கொள்கையைச் செயல்படுத்த மறுத்து அடம்பிடிக்கும் ஒரு சிவில் சர்வீஸ் அதிகாரியின் முன்னால் எந்த அமைச்சரவையும், அவர் என்னதான் சக்தி வாய்ந்தவராக இருந்தாலும், இந்த விதிகள் முற்றிலும் அவரை ஆதரவற்றவராகவே ஆக்கும். தனக்குக் கீழே பணிபுரியும் ஓர் அதிகாரி தவறு இழைத்தால், அவ்வாறு தவறு செய்யும் அதிகாரி மீது உறுதியான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் ஓர் அமைச்சருக்கு இருக்க வேண்டும்; அமைச்சரின் பொறுப்பு என்பதற்கு இதுதான் பொருளாக இருக்க முடியும். அது மட்டுமன்று, தன் இலாகாவுக்கு எத்தனை அதிகாரிகள் இருக்க வேண்டும், எந்தப் பதவிக்கு யாரை நியமிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரமும் அவருக்கு இருக்க வேண்டும். இத்தகைய அதிகாரங்கள்

எவற்றையும் இப்போதுள்ள விதிகள் அவருக்கு வழங்கவில்லை. சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்ததும் நியமிக்கப்பட்ட லீ கமிஷனே இந்த முறைகேட்டை ஒப்புக் கொண்டுள்ளது. மாற்றப் பட்டத் துறைகளில் அகில-இந்திய அடிப்படையில் மேற்கொண்டு வந்த நியமனங்களும் செய்யப்படக் கூடாது என்றும், இந்தத் துறைகளுக்கு வேண்டிய அதிகாரிகளை எதிர்காலத்தில் மாநில அரசாங்கங்களே தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும் என்றும் இந்தக் கமிஷன் பரிவுரை செய்தது. இந்தச் பரிந்துரையின் விளைவாய்; இதுவரை மாற்றப்பட்ட துறைகளில் பணியாற்றிவந்த அகில-இந்திய சர்வீஸைச் சேர்ந்த அதிகாரிகள் காலி செய்யும் இடங்களை நிரப்பும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிகளை வகுக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளும்படி சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அதிகார வர்க்கத்தினரை நிர்ப்பந்தித்துள்ளன. நான் முன்மொழிந்துள்ள சீர்திருத்தம் இதே கோட்பாட்டின் ஒரு விரிவாக்கமே தவிர வேறல்ல. ஒதுக்கப்பட்ட துறைகளுக்கும் மாற்றப்பட்ட துறைகளுக்கும் இடையேயான வேறுபாடு முற்றிலும் பொறுப்பு வாய்ந்த ஓர் அரசாங்க அமைப்பின் கீழ் நிச்சயம் மறைந்துவிடும் என்ற காரணத்தைக் கூறி, இந்த விரிவாக்கத்தை இப்போது தாமதிக்க முடியாது.

121. ஒரு தனியான, சுயேச்சையான மாநில சிவில் சர்வீஸை உருவாக்குவதால் ஏற்படும் இரண்டாவது நன்மை மாநில சர்வீஸைச் சேர்ந்த அடிப்படையான பிரிவைத் திருத்தியமைப்பதற்கு அது மாநில அரசாங்கங்களுக்கு வழங்கும் சுதந்திரமாகும். அகில-இந்திய அமைப்பைப் பொறுத்த வரையில் அதற்கு ஒரு முக்கியமான குறைபாடு உண்டு. அது என்னவென்று பார்ப்போம். அகில-இந்திய சர்வீஸைச் சேர்ந்த அதிகாரிகள் வகிக்கும் பதவிகள் அளவுக்கு மீறிய எண்ணிக்கையில் இருப்பதை ஓர் அமைச்சர் கண்கூடாகப் பார்க்கிறார்; இவர்கள் ஆற்றும் கடமைகள் அனைத்தையும் மாநில சர்வீஸைச் சேர்ந்த சுமாரான ஊதியம் பெறும் அதிகாரிகளைக் கொண்டே திறமையாக நிறைவேற்ற முடியும் என்றும் அவர் உணர்கிறார்; அப்போது இத்தகைய பதவிகளை ஒழிக்க வேண்டும் அல்லது மாநில சர்வீசுக்கு அவற்றை மாற்ற வேண்டும் என்று அவர் விரும்புகிறார்; ஆனால் இவ்வாறு அவரால் செய்ய முடியாது; ஏனென்றால் இந்தச் சட்டத்தின் கீழ் அவருக்கு இத்தகைய அதிகாரம் இல்லை. அவரால் செய்யக் கூடியதெல்லாம் இத்தகைய பதவியை அப்படியே விட்டுவைக்கலாம் அல்லது மாநில சர்வீஸைச் சேர்ந்த ஓர் அதிகாரியை குறிப்பிட்ட காலத்துக்கு இந்தப் பொறுப்பைக் கவனிக்கும்படி விடலாம். ஆனால் இதிலும் கூட அவருடைய அதிகாரங்கள் வரம்புக்குட்பட்டவை. ஏனென்றால் விதிகளின்படி, இந்திய மந்திரியின் அனுமதியில்லாமல் இதனைக் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மாதங்களுக்கு மேல் அவரால் செய்ய முடியாது. அரசுப் பணித்

துறைகள் அகில-இந்திய ரீதியில் ஒழுங்கமைக்கப்படுவதன் விளைவாய் எழும் மிகக் கடுமையான கட்டுப்பாடாகும் இது; இவ்வகையில் இந்தக் கட்டுப்பாடு சீர்திருத்தக் கவுன்சில் ஆரம்பம் முதலே கோரிவரும் பொருளாதாரக் குறிக்கோள்களின் நிறைவேற்றத்துக்குத் தயார்ராக இருக்கிறது.


122. இவை மட்டும் தான் ஒரு சுதந்திரமான மாநில சிவில் சர்வீஸை அமைப்பதால் கிட்டக் கூடிய அனுகூலங்கள் என்று எண்ணிவிடக் கூடாது. ஊதியம், விடுப்புப் படிகள், பதவி உயர்வு, ஓய்வூதியம் போன்ற வேலை நிலைமைகள் தொடர்பான பணித்துறைகளின் அகில-இந்திய இயல்பு மாநிலங்கள் மீது ஒருபடித்தான தன்மையைத் திணிக்கிறது. இத்தகைய ஒருபடித்தான தன்மை ஏழை மாநிலங்களின் வளமான ஆதாரங்கள் மீது சொல்லொண்ணா சிரமங்களைச் சுமத்துகிறது. அவை பணித்துறைகளுக்காக நியாயமாகச் செலுத்த வேண்டியதை விட மிக அதிகமாகச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அது மட்டுமன்று, எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக ஊதியம் வழங்குவது வாழ்க்கைத் தரத்தில் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்கு அவசியமானது என்றும் கூறிவிட முடியாது. உள்ளூர் நிலைமைகளில் காணப் படும் வேறுபாடு காரணமாக இரண்டு வெவ்வேறு மாநிலங்களில் முற்றிலும் வேறுபட்ட ஊதியத்திலிருந்து ஒரே மாதிரியான வாழ்க்கை வசதிகளைப் பெற முடியும் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். அப்படியிருக்கும் போது ஊதியத்தில் இத்தகைய ஒருபடித்தான தன்மை ஒரு சுமையாகவோ, அல்லது நியாயமற்றதாகவோ இருக்கையில், அதனைத் திணிப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று தெரியவில்லை.

123. வேலை நிலைமைகளில் ஒரே சீரான தன்மை இருக்க வேண்டிய அவசியமும் சிவில் சர்வீசின் அகில-இந்திய இயல்பிலிருந்தே நேரடியாகத் தோன்றுகிறது; பணித்துறை இந்த இயல்பை விட்டொழித்தாலொழிய அது மறையாது. ஒரு சுதந்திரமான மாநில சிவில் துறையை உருவாக்குவது இந்தக் குறிக்கோளை எய்துவதற்கான ஒரு மார்க்கம் என்றாகிற பொழுது, அதனை நிச்சயமாக வரவேற்க வேண்டும்; அதிலும் குறிப்பாக, இவ்வாறு செய்வது நிர்வாகச் செலவை வெகுவாகக் குறைக்கிறது; மாநிலங்கள் தமது சொந்த விவகாரங்களை நிர்வகித்துக் கொள்வதற்கு அவற்றுக்கு முழுச் சுதந்திரத்தை அளிக்கிறது. அரசுப் பணித்துறைகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், மாநில அரசாங்கங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் இந்திய மந்திரியின் நிலை தீவிரமாக மாற்றப்பட வேண்டும் என்பதையே இது குறிக்கிறது. இந்திய மந்திரி, பொதுவாக ஆட்களை வேலைக்கமர்த்திக் கொள்பவராகவும், தங்கள் பிரதேசங்களில் பணிபுரிவதற்குத் தேவையான நபர்களின் எண்ணிக்கை சம்பந்தமாக மாநிலங்கள் அவருடன் ஒப்பந்தம்

செய்து கொள்பவையாகவும் இருப்பதற்குப் பதிலாக, இங்கிலாந்தில் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பது அவசியமாகும்போது, இந்திய மந்திரி குறிப்பிட்ட மாநிலங்களின் ஏஜெண்டாக செயல்படலாம்; அதுவும் அவர் விதிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் அல்லாமல், மாநில அரசாங்கம் நிர்ணயிக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் அவர் இந்தத் தேர்வை நடத்தலாம். இந்திய மந்திரி ஏற்பாடு செய்துதரும் நபர்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் அதிகார அமைப்புகளாக இருப்பதை மாநிலங்கள் இனிமேல் நிறுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு முறை நீட்டிக்கும் வரை, இந்திய அரசாங்கச் சட்டம் 96-பி பிரிவின் கீழ் இந்திய மந்திரி இப்போது அனுபவித்துவரும் அதிகாரங்கள் மீது அவர் உரிமை கொண்டாடவே செய்வார். சிவில் சர்வீஸ் மீது இந்திய மந்திரிக்குள்ள அதிகாரங்கள் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தை நடத்துவதைச் சாத்தியமற்ற தாக்கி வருகின்றன என்று அமைச்சர்கள் நிறைய புகார்கள் கூறி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் சரியானதே ஆகும். ஆனால் இந்தியா மந்திரி ஆட்களைத் தேர்ந்தெடுப்பவராக இல்லாமல் இருந்தால்தான் இந்த அதிகாரங்களை அவரிடமிருந்து எடுத்துக் கொள்ள முடியும் என்ற உண்மையை இத்தகைய குற்றச் சாட்டுகளைக் கூறுவோர் உணர்ந்திருப்பதாகத் தெரியவில்லை.

*124.* அரசுப்பணித் துறைகளைப் பிரிக்கும் இந்தச் சீர்திருத்தம் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் பட்சத்தில், மாநில சிவில் சர்வீஸைப் பின்கண்டவாறு வகைப்படுத்தலாம் என்று நினைக் கிறேன் :

**மாநில சிவில் சர்வீஸ்**




*125.* மாநில சிவில் சர்வீசுக்கான ஆளெடுப்பு நிறுவனம்: ஆளெடுப்புப் பணிபுரிவதை இந்திய மந்திரி நிறுத்திக் கொள்ளும் போது, மாநில சிவில் சர்வீசுக்குத் தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை எந்த நிறுவனத்திடம் ஒப்படைப்பது என்பது நாம் பரிசீலிக்க வேண்டிய அடுத்த விஷயமாகும். அரசியல்

செல்வாக்கின் தீய விளைவுகளிலிருந்து சிவில் சர்வீஸ் விடுபட வேண்டுமானால், அந்த சர்வீசுக்குத் தேவையான அதிகாரிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அமைச்சர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்படாத ஒரு சுதந்திரமான அமைப்பிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கூறப்படுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இவ்வகையான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஒரு மாநில சிவில் சர்வீஸ் கமிஷன் அமைக்க வேண்டும் என்று கூற நான் தயாராக இல்லை, நிதிக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது இது மிகவும் செலவு பிடிக்கும் ஒரு யோசனையாகும். எனினும் பணித்துறை விஷயங்களைச் சிறப்பாக, கவனிப்பதற்கென்று ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு முழுநேர அதிகாரி இருக்க வேண்டும் என்னும் யோசனை எனக்கு உடன்பாடானதாகும். அவர் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கும் ஸ்தல அரசாங்கத்துக்கும் இடையே ஓர் இணைப்பு அதிகாரியாக இருக்க வேண்டும்.

### 2. பணித்துறைகளை இந்தியமயமாக்குதல்

**126.** (i) *இந்தியர்களைத் தேர்ந்தெடுத்தல்:* இந்தியமயமாக்கக் கோட்பாடு 1915-ல் ஸ்லிங்டன் கமிஷனால் ஏற்றுக் கொள்ளப் பட்டது. சீர்திருத்தங்கள் வெற்றி பெறுவதற்கு இந்தியமயமாக்கம் அவசியமானது என்பதைக் கூட்டு அறிக்கையும், லீ கமிஷனும் வலியுறுத்திக் கூறின; பல்வேறு பணித்துறைகளில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையேயான விகிதாசாரத்தையும் அவை நிர்ணயித்தன. எனவே, இந்தியமயமாக்கத்துக்கு ஆதரவான வாதத்தைப் புதிதாக அடியிலிருந்து தொடங்க வேண்டிய அவசியம் ஏதுமில்லை. இப்போது சொல்ல வேண்டியதெல்லாம் ஸ்லிங்டன் கமிஷனின் நியமனத்துக்கும் லீ கமிஷனின் நியமனத்துக்கும் இடையே கழிந்துபோன இடைக்காலத்தில் இந்தப் பிரச்சினை குறித்த கண்ணோட்டம் அடியோடு மாறி விட்டது என்பதே ஆகும். ஸ்லிங்டன் கமிஷன் நியமிக்கப்பட்ட காலத்தில் ''இந்தியப் பணித்துறைகளில் எத்தனை இந்தியர்களை அனுமதிக்க வேண்டும்?'' என்பதே பிரச்சினையாக இருந்தது. ஆனால் லீ கமிஷன் காலத்திலோ ''இன்னமும் குறைந்தபட்சம் எத்தனை ஆங்கிலேயர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்?'' என்பதாக இந்தப் பிரச்சினை மாறிவிட்டது. இந்த மாறுபட்ட கண்ணோட்டத்துக்கு லீ கமிஷன் முழு ஆதரவு அளித்தது என்பதைக் கூற மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியமயமாக்கத்தைத் விரிவுபடுத்தும் பொருட்டு, இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையேயான விகிதாசாரத்தை வகுப்பதற்கு லீ கமிஷன் மேற்கொண்ட கோட்பாடுகளில் எத்தகைய மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதே இப்போது நம் முன்னுள்ள பணியாகும். ஒரு துறையின் தேவைகளையும், அந்தத் துறையை நிர்வகிக்கும் இந்தியர்களின் தகுதிகளையும் கொண்டுதான் இந்த விகிதாசாரத்தை வரையறுக்க வேண்டும் என்பது என் கருத்து. இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்

படுமானால், லீ கமிஷன் நிர்ணயித்த விகிதாசாரங்களைச் சட்டம்-ஒழுங்கு, வனத்துறை, மற்றும் இதர தொழில்நுட்பத் துறைகள் தவிர எல்லாத் துறைகளிலுமே இந்தியர்களுக்குச் சாதகமான முறையில் மாற்றியமைக்க வேண்டியிருக்கும்.

127. (ii) *இந்தியர்களுக்கான ஊதியங்கள்:* இந்தியமயமாக்கத்தை அதன் சொந்தத் தகுதிகளுக்காக மட்டுமன்றி, மாநிலத்தின் நிதி நிலைமையில் அது ஏற்படுத்தும் தாக்கத்துக்காகவும் நான் வலியுறுத்துகிறேன். இந்தியமயமாக்கம் நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கொண்டுவர உதவும் என்றும் நம்புகிறேன். ஊதிய விஷயத்தில் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையே சமத்துவம் நிலவுவதை ஓர் அகில-இந்திய சர்வீசில் அங்கம் வகிப்பதன் முக்கியமான பலனாக ஏன் கருத வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. தகுதி என்னும் கண்ணோட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையைப் பார்க்கும்போது, இரண்டு வகைப்பட்ட அதிகாரிகளுக்கும் சம ஊதியம் வழங்குவது என்பது தருக்கவியல் ரீதியில் நியாயமானது என நான் கருதவில்லை. இவர்களில் ஒரு பிரிவினர் தமது தாயகத்திலிருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவிலுள்ள ஒரு நாட்டில் பணி புரிகின்றனர்; இங்கு அவர்களால் தங்கள் பிள்ளைகளுக்கு முறையான கல்வி வசதிகளைச் செய்து தர முடியும் என்றோ, தங்கள் உடல்நலத்தை நன்கு பாதுகாக்க முடியும் என்றோ எதிர்பார்க்க முடியாது. மேலும், அவர்களுக்கு இன்னொரு சிரமமும் இருக்கிறது: அதாவது உயர்ந்த வாழ்க்கைத் தரத்துடன் தாயகத்தில் ஒரு குடும்பத்தையும், இங்கு ஒரு குடும்பத்தையும் பராமரிக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருக்கிறது. இந்த இரட்டைப் பொறுப்பு இந்தியாவைத் தங்கள் தாயகமாகக் கொண்ட அதிகாரிகளுக்கு இல்லை. அவர்கள் தங்களுடைய ஐரோப்பிய நண்பர்களுக்கு மாறுபட்ட முறையில் இந்தச் சிக்கல்களிலிருந்தெல்லாம் விடுபட்டு வாழும் ஒரு நாட்டில் பணிபுரிகின்றனர்; பருவநிலைக் கோளாறுகள் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும் நிலைமை அவர்களுக்கு ஏற்படுவதில்லை; தவிரவும், குறைந்த வாழ்க்கைத்தர நிலைமைகளில் வாழ்வதற்கு அவர்கள் பழக்கப்பட்டு விட்டனர். எனவே, தங்களது ஐரோப்பிய நண்பர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இவர்கள் ஏற்க வேண்டியுள்ள பொருளாதாரச் சுமை குறைவு. இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பார்க்கும்போது, இந்த இரு வகையான அதிகாரிகளுக்கும் ஒரே மாதிரியாக ஊதியம் அளிப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது என்பதே என் கருத்து. இந்தியாவிலுள் இந்த இருவகையான அதிகாரிகளின் ஒட்டுமொத்த நிலையை ஒப்பிட்டுப்பார்த்தால் ஒரு விஷயம் தெள்ளத் தெளிவாகும்: அதாவது ஐரோப்பிய அதிகாரிகளுக்கு இப்போது வழங்கப்பட்டு வரும் ஊதியம் போதுமானது என்றால், இந்திய அதிகாரிகளுக்கு அதிக ஊதியம் தரப்படுகிறது என்பது சர்ச்சைக்கிடமற்றதாகும். எனினும் இந்திய அதிகாரிகளுக்கு அதிகம் ஊதியம்

முடியுமா? இந்தக் கோரிக்கையை அவர்கள் தகுந்த முறையில் நியாயப்படுத்தி வாதாடினாலொழிய, முற்றிலும் திறமையின் அடிப்படையில் நியமனம் செய்யும் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாட்டில் அவர்களால் எந்த மாற்றமும் செய்ய முடியாது; திறமை தவிர வேறு அம்சங்களின் அடிப்படையிலும் நியமனம் செய்ய முடியும் என்பதை அவர்களால் நிலைநாட்ட முடியாது. இந்த முக்கியமான பிரச்சினையில் பிற்பட்ட வகுப்பினரின் கோரிக்கைக்கு மிகப் பலமான ஆதாரம் இருக்கிறது, அடிப்படை இருக்கிறது என்பதை எத்தகைய தயக்கமின்றிக் கூறுகிறேன். றேன்.

131. முதலாவதாக, அரசுப் பணித் துறைகளில் நியமன விஷயத்தில் திறமை ஒன்றையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துபவர்களுக்கு இன்றைய நவீன யுகத்தில் நிர்வாகம் என்பது எத்தகைய விஷயங்களை உள்ளடக்கியுள்ளது என்பது பற்றிப் போதிய ஞானம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுக்கு நிர்வாகம் என்பது சட்டமன்றம் இயற்றும் அதிகாரங்களைப் பிரயோகிக்கும் ஓர் இயக்க நிகழ்வாக மட்டுமே தோற்றுகிறது. நிர்வாகத்தின் வீச்சையும் முக்கியத்துவத்தையும் அவர்கள் மிகவும் அறைகுறையாகவே புரிந்து கொண்டுள்ளனர். நாட்டின் விதிமுறைகளைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, சட்டங்களை நுணுகி ஆராய்வதை விடவும் அதிகமான விஷயங்கள் இக்காலத்தில் நிர்வாகம் என்பதில் அடங்கியுள்ளன. ஒரு குறிப்பிட்ட சட்டத்தை நிர்வகிக்கும் நோக்கத்திற்காகப் பல்வேறு விதிகளை வகுக்கும் பரந்த அதிகாரங்கள் தற்காலத்தில் பல சந்தர்ப்பங்களில் காலத்தின் கட்டாயத்தாலோ அல்லது சூழ்நிலை காரணமாகவோ ஓர் அரசாங்க இலாகாவுக்கு வழங்கப்படுவதைப் பார்க்கிறோம். இத்தகைய சந்தர்ப்பங்களில் நிர்வாகம் என்பது சட்டத்தைச் செலுத்துவது மட்டுமே அல்ல என்பது தெளிவு. சட்டத்தின் வலிமையுள்ள விதிகளை வகுத்து உருவாக்குவதும் நிர்வாகம் என்பதில் அடங்கும். அதிகார ஒப்படைப்பு மூலம் விதிகளை வகுக்கும் இந்த வழிமுறை இன்றைய நவீன அரசாங்கங்கள் எல்லாவற்றிலும் காணப்படும் மிகவும் பொதுவான ஓர் அம்சமாகி விட்டது; வரப்போகும் ஆண்டுகளில் இது மேன்மேலும் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. மக்களில் மிகப் பெரும்பாலான வகுப்பினரின் நல்வாழ்வு சம்பந்தப்பட்ட விதிகளை வகுக்கும் பரந்த அதிகாரங்களை ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த நிர்வாகிகளின் கைகளில் நம்பகமாக ஒப்படைக்க முடியாது என்பதைச் சர்ச்சைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக ஒப்புக் கொள்ள வேண்டும்; ஏனென்றால் இந்த வகுப்பினர் தமது நோக்கங்களிலும் நலன்களிலும் ஏனைய மக்களுக்கு எதிரானவர்கள்; சமுதாயத்தில் செயல்பட்டு வரும் இதர உயிர்களிடம் பரிவுணர்ச்சி காட்டாதவர்கள்; அவர்களது தேவைகளையும் சுகதுக்கங்களையும், வேட்கைகளையும் விருப்பங்களையும் பற்றிச் சற்றும்

கவலைப்படாதவர்கள்; அவர்களது ஆர்வங்களையும் நாட்டங் களையும் பகை உணர்வோடு பார்ப்பவர்கள்; இத்தனைக்கும் மேலாக அவர்கள் கல்வித் தகுதி ஒன்றால் மட்டுமே இந்த உயர்ந்த நிலைக்கு வந்தவர்கள்.

132. நிர்வாகம் என்பது சட்டமன்றம் இயற்றும் சட்டங் களைப் பிரயோகிக்கும் ஓர் இயக்க நிகழ்வே தவிர வேறல்ல என்பதை வாதத்திற்காக ஏற்றுக் கொண்டாலும் கூட அப்போதும் பிற்பட்ட வகுப்பினர் எடுத்துள்ள நிலை எவ்வகையிலும் பலவீன மடையவில்லை என்றே சொல்ல வேண்டும். இதற்கு வலுவான, ஆழமான அடிப்படைகள் உண்டு. ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்த அதிகாரிகளை எடுத்துக் கொண்டு பாருங்கள். மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமை உணர்வைவிடச் சாதி உணர்வே அவர் கள் மனத்தில் மேலோங்கி நிற்கிறது; கொடி கட்டிப் பறக்கிறது; அவர்கள் தங்களது சொந்த சமூகம் செழித்து வளர வேண் டும் என்பதற்காகப் பொது மக்களுக்குப் பாதகமான முறை யில் தங்கள் அதிகாரங்களுக்குப் பாதகமான முறையில் தங்கள் அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்கின்றனர்; தங்கள் பதவி களைக் கொச்சைப்படுத்துகின்றனர்; மிகவும் இழிவுப்டுத்துகின்ற னர்; அதிகாரச் சந்தையில் விலை பேசுகின்றனர். இதுவே வேண் டாம், ஒரு சாதாரண மம்லத்தாரையே எடுத்துக் கொள்ளுங்கள், அவர் என்ன செய்கிறார்? சர்க்கார் நிலங்களைக் குத்தகைக்கு விடுவது அவர் பொறுப்பு. இதில் அவர் சட்டப்படி நடந்து கொள் கிறார் என்றே தோன்றும். ஆனால் உண்மையில் சட்டத்தை அமல் செய்யும்போது, பாரபட்சமான முறையில் தனக்கு வேண்டியவர் களைக் குத்தகைதாரர்களாக அவர் தேர்ந்தெடுக்க முடியும்; அதிலும் சாதி அடிப்படையில் சில குத்தகைதாரர்களுக்கு எதிராக அவர் முடிவெடுக்கவும் வாய்ப்பு உண்டு; இது வெளித் தோற்றத் துக்கு வகுப்புவாதமற்ற நடவடிக்கையாகத் தென்படக் கூடும். இது போக, இன்னொரு உதாரணத்தையும் இங்குப் பார்ப்போம். குடிமதிப்புப் புள்ளி விவர இலாகாவில் பொறுப்பிலுள்ள ஓர் அதிகாரியை எடுத்துக் கொள்வோம். பல்வேறு வகுப்பினரின் சாதிப் பெயர்கள், சமூக அந்தஸ்து முதலியவை சம்பந்தப்பட்ட விஷயங்களில் முடிவெடுப்பது அவரது பொறுப்பு. இந்நிலைமை யில் இந்தத் துறைக்குப் பொறுப்பாயுள்ள ஓர் அதிகாரி ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்தவராக இருந்தால், தமது நிர்வாகத் தின் போது இன்னொரு சாதியினருக்கு அவர்களுக்குரிய சாதிப் பெயர்களையோ அல்லது சமூக அந்தஸ்தையோ வழங்க மறுத்து அவர்களுக்கு அநீதி இழைக்க முடியும். முக்கியமாக சாதி, மத அடிப்படையில் சலுகை காட்டுவது என்பது சர்வ சாதாரணமாக நடைபெறும் நிகழ்ச்சிகளாகும்; ஆனால் இவை ஏதேனும் சாக்குப் போக்கின் பேரில் எப்போதும் மன்னிக்கப்பட்டு வந்துள்ளன; இதற்கு எத்தனை எத்தனையோ உதாரணங்களைக் கூறலாம். சென்னை மாநிலத்தைச் சேர்ந்த விஸ்வகர்மாக்கள் சம்பந்தப்பட்ட

ஒரு நிகழ்ச்சியை இந்தச் சந்தர்ப்பத்தில் இங்குக் குறிப்பிட விரும்பு கிறேன். 1924-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சீர்திருத்த விசார ணைக் குழுவுக்கு அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருந்தனர். அதில் அவர்கள் பின்வரும் குற்றச்சாட்டைக் கூறியிருந்தனர்: ''சென்னை நிர்வாக சபையில் சர் (அப்போது திரு) பி. சிவசாமி அய்யர் என்ற ஒரு பிராமண உறுப்பினர் இருக்கிறார்; அவர் சட்ட இலாகாவுக்குப் பொறுப்பாக இருந்த போது, விசுவகர்மாக்கள் தங்கள் பெயர்களுக்குப் பின்னால் வழக்கமாகப் பயன்படுத்தும் 'ஆசாரியர்' என்னும் சொல்லை ஆட்சேபித்து, அதற்குப் பதிலாக ''அஸ்ரி'' என்னும் சொல்லைப் பயன்படுத்தும்படி உத்தரவு பிறப் பித்தார்; இது பொதுவாக இகழ்ச்சியைக் காட்டும் ஒரு சொல் லாகும், சட்டத்துறை உறுப்பினர் எடுத்துக் கொண்ட இந்த நடவடிக்கைக்கு எத்தகைய அவசியமும் அதிகாரமும் இல்லாத போதிலும், தவறான உச்சரிப்பதைத் திருத்துவதற்கான குழுவின் பரிந்துரையின் பேரில் செய்யப்பட்டது போல் இந்த அரசு ஆணையைச் சட்ட இலாகா பிரசுரித்தது. இதில் எங்கள் துரதிர்ஷ் டம் என்னவென்றால், இந்தக் குழுவில் இருந்த அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர் கள், தங்களுடைய சக சமூகத்தினரின் உரிமைகளை எவ்வாறு மதிப்பது என்பதை அறியாதவர்கள், இதனால் தாங்கள் எடுக்கப் போகும் முடிவைப் பற்றி எங்களுக்கு ஒருபோதும் தெரிவிக்க வில்லை. இந்த விஷயம் கிட்டத்தட்ட இரகசியமான முறையில் கையாளப்பட்டது என்றே கூற வேண்டும்.''

133. இது தவிர்க்க முடியாதாகும். வர்க்க ஆட்சி என்பது வர்க்க நலன்கள் மற்றும் வர்க்கப் பாரபட்சங்கள் என்னும் அடிப் படையில் நடைபெறும் ஆட்சியையே குறிக்கும். இத்தகைய விளைவுகள் தவிர்க்க முடியாதவை என்றால், நேர்மையான மக்கள் அனைவரின் உள்ளத்திலும் பின்வரும் கேள்வி எழுவது இயல்பே; திறமையான அரசாங்கம் நல்ல அரசாங்கத்தையும் நமக்கு அளித்திருக்கிறதா? அப்படியில்லை என்றால் இதற்குத் தீர்வுதான் என்ன? பிராமண சமூகத்தையும் அதனை ஒத்த இதர சமூகங்களையும் சேர்ந்த அதிகாரிகள் வர்க்கக் கண்ணோட்டத் தோடு கடைப்பிடிக்கும் பாரபட்சமான போக்கினால் தோன்றும் பிரதிகூலங்கள் அவர்களது திறமையால் ஏற்படக்கூடிய அனுகூலங் களையெல்லாம் பெரிதும் அமுக்கி விடுகின்றன, இதனால் மொத்தத்தில் அவர்கள் நன்மையைவிடத் தீமையயே அதிகம் செய்துள்ளனர் என்பது என் கருத்து. அரசுப் பணித்துறையில் பல்வேறு சமூகங்களும் உரிய முறையில் கலந்து இடம் பெறுவதே இதற்குத் தீர்வாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன். இதன் காரணமாக ஒருவேளை, சிறிய அளவில் திறமையின்மை தலை தூக்கக் கூடும். ஆனால் வர்க்கப் பாரபட்சம் என்னும் நோய்க்கு, அதன் தீங்குகளுக்கு அரியதொரு மருந்தை, நிவாரணியை இது வழங்கும், நாட்டில் தற்போது சமூகப் போராட்டங்கள் நடை

பெற்று வரும் நிலைமையில் இது என்றையும்விட மிக அவசியமாகி விட்டது. சகல ஏற்றத்தாழ்வுகளையும் ஒழித்துக்கட்டி, சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காகப் பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதோருக்கும், ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும், தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டாதாருக்கும் இடையே நடைபெற்றுவரும் கடுமையான போராட்டங்கள், அவை சரியானவையா, தவறானவையா என்பதைத் தீர்மானிப்பதில், நீதிபதிகள், மாஜிஸ்ட்ரேட்டுகள், அரசு அலுவலர்கள், காவல் துறையினர் போன்றோர் மீது தாக்கத்தை ஏற்படுத்தாமல் இருக்க முடியாது. போராடும் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் அவர்கள் விருப்பு வெறுப்பற்று நடந்து கொள்ளவே செய்வார்கள்; இதன் விளைவாய், பொது மக்கள் தங்கள் ஊழியர்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை, பேரிழப்புக்கு உள்ளாகக் கூடும்.

**134.** நிர்வாகத் துறையில் பயன்படக் கூடியவர்கள் என்ற அடிப்படையில்தான் இதுவரை பிற்பட்ட வகுப்பினர்களைப் பற்றிக் கூறிவந்தேன். ஆனால் அரசுப் பணித் துறைகளில் அவர்களுக்கு இடம்பெற்றுத் தருவதற்குத் தார்மிகக் காரணங்களும் உண்டு. அரசுப் பணித் துறைகளில் சேர்த்துக் கொள்ளாமல் ஒரு நபரை ஒதுக்குவதால் ஏற்படக் கூடிய தார்மிகக் கேடுகளை காலஞ்சென்ற திரு. கோகலேயைப் போன்று, அத்தனைச் சிறப்பாக வேறு யாராலும் படம்பிடித்துக் காட்டிவிட முடியாது. உணர்ச்சிமயமான ஒரு சொற்பொழிவில் அவர் பின்கண்டவாறு குறிப்பிட்டார்: “இந்திய அமைப்பு அளவுக்கு மீறிச் செலவு இழுத்து வைப்பதாக இருந்து வருவதைப் பார்க்கிறோம்; ஆயினும் அதன் தீமை இது ஒன்று மட்டுமே அன்று. இதைவிடவும் பெரிதான தார்மிகத் தீமை ஒன்றும் இருக்கிறது. தற்போதைய அமைப்பின் கீழ் இந்திய இனம் கூனிக் குறுகி வருகிறது, வளர்ச்சித் தடைப்பட்டு மெலிந்து நலிந்து வருகிறது, செயற்பாடுகள் குன்றி முடங்கி வருகிறது. தாழ்வு உணர்வு மேலோங்கி நிற்கும் ஒரு சூழ்நிலையில்தான் நம் வாழ்நாள் முழுவதையும் அழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போதைய அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, நம்மில் உயரமானவர்கள் வளைந்து கொடுக்க வேண்டியவர்களாக; குனிந்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்ற ஓர் உந்துணர்வு ஈட்டனில் அல்லது ஹாரோவில் உள்ள ஒவ்வொரு பள்ளிச் சிறுவனிடமும் ஊட்டி வளர்க்கப்படுகிறது. இதனால், ஒரு நாள்தான் ஒரு கிளேட்ஸ்டோனாகவோ ஒரு நெல்சனாகவோ அல்லது ஒரு வெல்லிங்டனாகவோ ஆக முடியும் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்படுகிறது. தன் ஆற்றல் அனைத்தையும் அவன் இந்த வழியில் செலுத்துகிறான். ஆனால் இந்த உத்வேகம் நமக்கு மறுக்கப்படுகிறது. நமது ஆண்மை எட்டக் கூடிய வானளாவிய சிகரத்தை இன்றைய அமைப்பின் கீழ் நாம் அடைய முடியாது போலிருக்கிறது. சுய ஆற்றல் கொண்ட ஒவ்வொருவரும் உணரக்

கூடிய தார்மிகக் கொடுமுடியை, தார்மிக மேம்பாட்டை நாம் உணர முடியாதவர்களாக இருக்கிறோம். நமது நிர்வாகத் திறமையும், இராணுவ ஆற்றலும் சரிவரப் பயன்படுத்தப்படாத காரணத்தால் அவை படிப்படியாக மறைந்தொழியவே செய்யும். கடைசியில் நமது சொந்த நாட்டிலேயே நமது கதி, விதி விறகுவெட்டுபவர்களாகவும், தண்ணீர் இறைப்பவர்களாகவுமேதான் முடியும்.''. அரசுப் பணித் துறைகளில் பிரவேசிக்கும் விஷயத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு நியாயம் வழங்க மறுப்பவர்களைக் கேட்கிறோம்: இந்திய மக்கள் சார்பில் அந்நிய அமைப்புக்கு எதிராக திரு. கோகலே கூறிய அதே குற்றச்சாட்டைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பிராமணர்களுக்கும் அவர்களை ஒத்த சாதியினருக்கும் எதிராகவும் கூறலாமல்லவா? அரசுப் பணித் துறைகளில் தங்களைச் சேர்க்காமல் ஒதுக்கிவைப்பதன் மூலம் தங்கள் சமூகங்களின் வளர்ச்சியைத் தடுத்துக் கூனிக் குறுகச் செய்யும் காரியம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்று பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் பிராமணரல்லாதோரும், முஸ்லீம்களும் குற்றம் சாட்ட முடியுமல்லவா? தாங்கள் புறக்கணிக்கப்பட்டு வருவதன் விளைவாய், தாழ்வு உணர்வு மேலோங்கி நிற்கும் ஒரு சூழ்நிலையில் தங்கள் வாழ்நாள் முழுவதையும் கழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், இப்போதைய அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தங்களில் உயரமானவர்கள் வளைந்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம், குனிந்து கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று அவர்கள் முறையீடு செய்ய முடியும் அல்லவா? ஒரு நாள் தாங்கள் ஒரு சின்ஹாவாகவோ, ஒரு சாஸ்திரியாகவோ, ஒரு ரானடேயாகவோ, ஒரு பராஞ்பியேவாகவோ ஆக முடியும் என்று பிராமண சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொரு பள்ளிச் சிறுவனிடமும் ஊட்டி வளர்க்கப்படும். உந்துணர்வு தங்களுக்கு மறுக்கப்படுகிறது என்று அவர்கள் புகார் செய்யலாம் அல்லவா? தீங்கள் ஆண்மை எட்டக்கூடிய வானளாவிய சிகரத்தை இன்றைய அமைப்பின் கீழ்த் தங்களால் ஒருபோதும் எட்ட முடியாது என்று அவர்கள் கோபாவேசத்தோடு கூற முடியுமல்லவா? சுய ஆற்றல் கொண்ட ஒவ்வொருவரும் உணரும் தார்மிகக் கொடுமுடியை, தார்மிக மேம்பாட்டைத் தாங்கள் உணர முடியாதவர்களாக இருக்கிறோம், தங்களது நிர்வாகத் திறமையும் இராணுவ ஆற்றலும் சரிவரப் பயன்படுத்தப்படாத காரணத்தினால் அவை படிப்படியாக மறைந்தொழிந்து வருகின்றன, கடைசியில் தமது சொந்த நாட்டிலேயே தமது கதி, விதி விறகு வெட்டுபவர்களாகவும், தண்ணீர் இறைப்பவர்களாகவுமேதான் முடியும் என்று அவர்கள் மனம் நொந்து கூற முடியுமல்லவா? இந்தக் கேள்விகளுக்குகெல்லாம் 'ஆம்' என்பதே பதிலாக இருக்க முடியும். நாட்டின் அரசுப் பணித் துறைகளில் முன்னேற்றமடைந்த சமூகத்தினரை நுழைய விடாமல் அவர்களை ஒதுக்குவது அநீதி என்றால், இத்துறையிலிருந்து பிற்பட்ட சமூகத்தினரை ஒதுக்கித்

தள்ளுவதும் அநீதிதான். இந்த அநீதிக்கு முடிவு கட்டுவது அவசியம்.

135. பிற்பட்ட வகுப்பினரை நான் ஆதரித்து நிற்பதற்கு இந்த அம்சங்கள்தான் காரணம். இந்த அம்சங்கள் இந்தியமயமாக்கத்துக்கு ஆதரவாக வலியுறுத்தப்படும் அம்சங்களிலிருந்து எவ்வகையிலும் வேறுபட்டதல்ல என்பதையும் இங்குக் கவனிக்க வேண்டும். இந்தியமயமாக்கத்துக்கு ஆதரவான வாதம் திறமையான நிர்வாகத்தைச் சார்ந்திருக்கவில்லை என்பதையும் மறந்துவிடக் கூடாது. அது நல்ல நிர்வாகத்தைச் சார்ந்திருக்கிறது. ஒரு திறமையான நிர்வாகத்துக்கு அவசியமான பண்புகள் விஷயத்தில் இந்தியர்கள் ஐரோப்பியர்களுக்குத் தாழ்ந்தவர்களாகவே உள்ளனர் என்பது மறுக்கப்படவில்லை. ஐரோப்பிய அதிகார வர்க்கத்தினர் தமது சாலைகளை மேம்படுத்தியுள்ளனர்; விஞ்ஞானக் கோட்பாடுகளின் அடிப்படையில் கால்வாய்களைக் கட்டியுள்ளனர் ரயில் போக்குவரத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துள்ளனர்; ‘பென்னி போஸ்ட்’ என்னும் அஞ்சல் முறை மூலம் தங்கள் கடிதங்களை அனுப்ப ஏற்பாடு செய்துள்ளனர்; தகவல்களை மின்னல் வேகத்தில் பரிமாறிக் கொண்டுள்ளனர்; தங்கள் நாணயச் செலாவணியை அபிவிருத்தி செய்துள்ளனர்; தங்களுடைய எடையைளவுகளையும் முகத்தலளவைகளையும் ஒழுங்குபடுத்தியுள்ளனர்; புவியியல், வான்கோள ஆய்வியல், மருத்துவ இயல் முதலியவை பற்றிய கண்ணோட்டத்தைத் திருத்தியமைத்துள்ளனர்; தங்களது உட்பூசல்களை நிறுத்தியுள்ளனர். இதை மறுதலிப்பதற்கில்லை. ஐரோப்பிய அதிகாரவர்க்கம் கூடிய மட்டும் மிகத் திறமையான அரசாங்கத்தை உருவாக்கியுள்ளது என்பதற்கு இதைவிடப் பெரிய சான்றுகள் ஏதும் இருக்க முடியாது. ஆனால் ஐரோப்பிய அதிகார வர்க்கம் திறமையானது என்ற போதிலும், மனிதநேயம் மிக்க நிர்வாகத்துக்குத் தேவையான நற்பண்புகள் அதனிடம் இல்லை என்பதற்காக அது கண்டிக்கப்பட்டு வந்துள்ளது. ஆகவே, இந்தியமயமாக்கத்தை ஆதரித்து உரைத்த குரல் எழுப்பி வந்திருப்பவர்கள் இந்தியமயமாக்கத்துக்கு ஆதரவான வாதத்தில் பிற்பட்ட வகுப்பினருக்கு ஆதரவான வாதமும் அடங்கியுள்ளது என்பதை மறந்துவிட்டு, பிற்பட்ட வகுப்பினர் பக்கம் காற்று வீசிவருவதை எதிர்ப்பது விந்தையாக இருக்கிறது. இது எப்படியிருந்த போதிலும் மாநிலச் சுயாட்சியைவிட, மாநில நிர்வாகத்துக்குப் முழுப் பொறுப்பு வழங்குவதைவிட இதற்கே நான் மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறேன். ஏனைய வகுப்பினர் ஒதுக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் கைகளில் விரிவான அதிகாரங்கள் குவியக் கூடிய சாத்தியமிருக்கிறது என்று நான் உணரும் பட்சத்தில், இப்போது இந்த அதிகார மாற்றத்தை அனுமதிப்பதற்கு நான் ஒருபோதும் இணங்க மாட்டேன், இதுவே எனது கருத்தாக இருப்பதால், என்னுடைய பரிந்துரைகள் செயல்படுத்தப்படுவதற்குப்

பின்கண்ட நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று யோசனை கூறுகிறேன்:-

(1) உயர்நிலைப் பணித் துறைகளிலும், முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்புப் பணித்துறைகளிலும், அதேபோன்று துணை நிலைப் பணித்துறைகளிலும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள காலி இடங்கள் தேர்வில் வெற்றி பெறுவதை அடிப்படையாகக் கொண்ட நியமன முறையின் மூலம் ஒவ்வோர் ஆண்டும் நிரப்பப்பட வேண்டும். ஒரு வேட்பாளரின் தகுதியை உரிய முறையில் மதிப்பிடக் கூடியவர்களும், மேலே குறிப்பிடப்பட்ட சிவில் சர்வீஸ் அதிகாரியுடன் இணைந்து செயல்படக் கூடியவர்களுமான நபர்களைக் கொண்ட ஒரு பொறுக்குக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த நியமனங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். இத்தகைய நியமனங்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், முகமதியர்கள், பிராமணரல்லாதோர் போன்றவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் ஒதுக்கப்பட வேண்டும்; அவர்களது எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தை எட்டும் வரை இவ்வாறு செய்ய வேண்டும்.

(2) இந்த வகுப்புகளைச் சேர்ந்த அதிகாரிகளைத் தலைமைச் செயலகங்களில் மேன்மேலும் அதிக எண்ணிக்கையில் பணியிலமர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) நியமனங்களுக்காகவும் காலி இடங்களுக்காகவும் செய்து கொள்ளப்படும் எல்லா விண்ணப்பங்களையும் பதிவு செய்து கொள்ளும் பொருட்டும், வேலை காலியுள்ள அல்லது எதிர்காலத்தில் காலியாகக் கூடிய அலுவலகங்களுடன் விண்ணப்பதாரர்களைத் தொடர்பு கொள்ளச் செய்யும் பொருட்டும் ஒரு மத்திய ஆளெடுப்பு வாரியத்தை அமைக்க வேண்டும்; இந்த வாரியம் ஒரு மத்திய நிறுவனமாக இருக்க வேண்டும். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் மனிதனுக்கும் வேலைக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்துவது அவசியம். இத்தகைய ஒரு வாரியம் இல்லாததால்தான் இது விஷயத்தில் பம்பாய் அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியில் எதிர்பார்த்த அளவு வெற்றி பெற முடியாமல் போயிற்று.

## பிரிவு 6

# பரிந்துரைகளின் சுருக்கம்

## பிரிவு 1

கர்நாடகம் அல்லது சிந்து பம்பாய் மாநிலத்திலிருந்து பிரிக்கப் படக் கூடாது.

## பிரிவு 2

*அத்தியாயம் 1.—* மாநில நிர்வாகத் துறைக்கு முழுப் பொறுப் பளிக்க வேண்டும்; ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் இதனை ஒதுக்கப்பட்டத் துறையாக ஆக்குவதெனத் தீர்மானித்ததால், அவர் களது தீர்மானம் செயல்படுத்தப்பட வேண்டும்.

*அத்தியாயம் 2.—* எந்தச் சந்தர்ப்பச் சூழ்நிலைகளிலும் நிர்வா கத் துறையை அகற்றப்பட முடியாததாக ஆக்கக் கூடாது. நிர்வாகத் துறையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது. அமைச்சர்கள் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவர்கள் நீதிமன்ற விசாரணைக்கு உட்பட வேண்டும். அமைச்சர்கள் மீது குற்றச் சாட்டுகள் கொண்டுவருவதற்கு அரசியல் சட்டத்தில் வகை செய்யப் பட வேண்டும். நிர்வாகத் துறையில் கூட்டுப் பொறுப்பு நிலவ வேண்டும். நிர்வாகத் துறைக்குப் பிரதமர்தான் தலைவராக இருக்க வேண்டுமே தவிர, ஆளுநர் த்லைவராக இருக்கக் கூடாது.

*அத்தியாயம் 3.—* ஆளுநர் அரசியல் சட்ட ரீதியான தலை வராக மட்டுமே இருக்க வேண்டும். அவசர அதிகாரங்கள் எவற்றையும் அவருக்கு அளிக்கக் கூடாது.

## பிரிவு 3

*அத்தியாயம் 1.—* வயதுவந்தோருக்கு வாக்குரிமை இருக்க வேண்டும்.

*அத்தியாயம் 2.—* சட்டமன்றம் முற்றிலும் தேர்ந்தெடுக்கப் பட்டதாக இருக்க வேண்டும். ஐரோப்பியர்களின் தொகுதி தவிர மற்றபடி வர்க்க அடிப்படையிலும் வகுப்பு அடிப்படையிலும் அமைந்த எல்லாத் தொகுதிகளும் ரத்து செய்யப்பட வேண்டும். வாக்குரிமை ஒரு வரையறைக்குட்பட்ட முறையில் தொடர்ந்து இருக்குமானால் அப்போது முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்ட வகுப் பினர், ஆங்கிலோ-இந்தியர்கள் போன்றோருக்குத் தனி இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

*அத்தியாயம் 3.—* சட்டமன்றம் 140 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இவற்றில் முஸ்லீம்களுக்கு 33

இடங்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 15 இடங்களும் ஒதுக்கப்பட வேண்டும். சில மாவட்டங்களுக்குக் குறைந்த பிரதி நிதித்துவமும், வேறு சில மாவட்டங்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவ மும் இருப்பதை மக்கள்தொகை அடிப்படையில் திருத்தி அமைக்க வேண்டும். பல்வேறு வகுப்புகளுக்கும் நலன்களுக்கும் இடையே இடங்களை ஒழுங்குபடுத்துவதற்கு ஒரு குழு அமைக்கப்பட வேண் டும். வேட்பாளருக்குக் குடியிருப்புத் தகுதி (Residential Qualification) இருப்பது அவசியம் என்ற நிபந்தனை நீக்கப்பட வேண் டும்.

*அத்தியாயம் 4.*— லக்னோ ஒப்பந்தம் ஒரு நிரந்தரமான ஒப்பந்தம் அல்ல, அதிலிருந்து புதிதாக எழக்கூடிய எந்தப் பிரச் சினையையும் அதன் தகுதி அடிப்படையில் பரிசீலிப்பதை இந்த ஒப்பந்தம் தடுக்க முடியாது.

*அத்தியாயம் 5.*— மாநிலத்தில் இரண்டவாது அவை ஒன்றை அமைக்கக் கூடாது.

*அத்தியாயம் 6.*— தலைவரை நியமிப்பதற்கும் நீங்குவதற்கும், தனது உரிமைகளை வரையறுத்துக் கொள்வதற்கும், தனது நிகழ்ச்சி முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் சட்டமன்றத்துக்கு அதிகாரம் இருக்க வேண்டும். இந்திய அரசாங்கச் சட்டத்தின் 72டி, 80சி பிரிவுகள் சட்டத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். ''நம்பிக்கையில்லாத் தீர்மானம்'' கொண்டுவருவதற்குச் சட்ட மன்றத்திற்கு உரிமை இருக்க வேண்டும். சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசியல் சட்டத்தை மாற்றுவதற்குச் சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

## பிரிவு 4

*அத்தியாயம் 1.*— முழு மாநில சுயாட்சி இருக்க வேண்டும். முன்அனுமதி பெறுதல், ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்துதல் என்னும் முறையிண் மூலம் தற்போது மத்திய அரசாங்கம் கைக் கொண்டுவரும் கட்டுப்பாட்டை ஒழித்துக் கட்டும் கண்ணோட்டத் தோடு, மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே பணிகள் பிரிவினையை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

*அத்தியாயம் 2.*— மாநில அரசாங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளின் வரம்புக்குட்பட்டு, அந்த அரசாங்கத்துக்கும் மன்னரின் அரசாங்கத்துக்கும் இடையேயான உறவுகள் நேரடியாக இருக்க வேண்டுமேயன்றி மத்திய அரசாங்கத்தின் மூலமாக இருத்தல் கூடாது. இந்திய அரசாங்கச் சட்டத்தின் இரண்டாவது பிரிவு நீக்கப்பட வேண்டும்; ஏனென்றால் இந்தியாவை ஆள்வது சம்பந்தப் பட்ட விஷயத்தில் அது மன்னரின் நிலையைத் தெளிவற்றதாக்கு கிறது.

## பிரிவு 5

ஒரு தனியான மாநில சிவில் சர்வீஸ் உருவாக்கப்பட வேண்டும்; ஓர் ஆளெடுப்பு அமைப்பின் பணியை இந்திய மந்திரி செய்து வருவதை அறவே கைவிட வேண்டும். பணித்துறைகள் சம்பந்தமான அவரது பணிகளை ஒரு மாநில சிவில் சர்வீஸ் கமிஷனோ அல்லது இந்தியாவின் பப்ளிக் சர்வீஸ் கமிஷனுடன் இணைந்து செயல்படும் ஓர் அதிகாரியோ செய்யலாம். அரசுப் பணித்துறைகளை இந்தியமயமாக்குவதை இன்னும் விரைவாகச் செய்ய வேண்டும். அதன் வேகம் அரசின் பல்வேறு இலாகாக்களது இயல்புக்கேற்ப வேறுபடக் கூடியதாக இருக்க வேண்டும். இந்தியமயமாக்கத்தைத் தொடர்ந்து ஒரு வேறுபட்ட ஊதிய விகிதத்தையும், படிகள் விகிதத்தையும் செயல்படுத்த வேண்டும். அரசுப் பணித் துறைகளை இந்தியமயமாக்கும் பணி நடைபெற்றுவரும் வேளையில், பிற்பட்ட வகுப்புகளது கோரிக்கைகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்ய வேண்டும்.

17, மே, 1929 **பி. ஆர். அம்பேத்கர்**

தங்கிய மகாராணியின் அமைதிக்காவலர்கள் போன்ற சொந்த நாட்டவரின் திறமைக்கு மதிப்பளிக்கக்கூடிய மிக உயர்ந்த பதவி களைப் பெற வேண்டுமென்று அவர்களுக்கு இருக்கும் ஆர்வ விருப்பத்தை எதாலும் தடுத்து நிறுத்த முடியாது. இத்தகைய நியமனங்கள் ஹிந்து சமூகத்தினரிடையே கிளர்த்தி விடக்கூடிய துவேஷ உணர்வுகளுக்கு—சீற்ற உணர்வுகளுக்கு அடிபணிந்து போவது என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் காணப்படும் குறுகிய கண்ணோட்டத்தையும் அதன் பலவீனத்தையுமே காட்டு கிறது என்று பரந்த மனோபாவம் படைத்தவர்கள் கருதுகின்றனர்; சாதித் தடையாளர்கள் மீது வெளிப்படையாகத் தாக்குதல் வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.''

### மாண்புமிகு மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டனின் விவேக மிக்க கருத்துகள்

''பத்தி 23. ஆனால் இங்கு, இந்தியாவின் இந்தப் பகுதியில் மிகவும் முற்போக்கான, பரந்த மனோபாவம் படைத்த நிர்வாகி யாகத் திகழ்ந்து வந்த திரு. எல்பின்ஸ்டனின் விவேகமிக்கக் கருத்து கள் உண்மையில் நாம் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. அவர் கூறுகிறார்: 1 மிகவும் தாழ்ந்த சாதி களைச் சேர்ந்த மாணவர்களையே மிகச் சிறந்த மாணவர்களாக மிஷனரிகள் கருதுகின்றனர் என்று கூறப்படுகிறது; ஆனால் இப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு விசேடத் தூண்டுதல் அளிப்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அவர்கள் மிகவும் இழிவானவர்களாகக் கருதுப்படுவது மட்டுமல்லாது, சமுதாயத் தின் மாபெரும் பிரிவுகளில் மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ள பிரிவினரும் ஆவர்; இந்நிலைமையில் நமது கல்வி முறை முதலில் இவர்களிடையே வேரூன்றுமானால், அது ஒருபோதும் மேலும் முன்னேற முடியாது என்று அஞ்சப்படுகிறது; பயனுள்ள அறிவாற் றலைப் பெறுவதில் மற்றவர்களைவிட மேலான நிலையிலுள்ள, ஆனால் மற்ற சாதியினரால் வெறுக்கப்படுகிற, இழிவாகக் கருதப் படுகிற ஒரு புதிய வர்க்கத்தின் தலைமைப் பொறுப்பை நாம் ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படும். நமது அதிகாரம் இராணுவத்தை யும் மக்களில் ஒரு பகுதியினரது பரிவையும் சார்ந்திருப்பது குறித்து நாம் மனநிறைவு அடைவோமானால் அப்போது இத்த கைய நிலைமை விரும்பத்தக்கதாகவே இருக்கும்; ஆனால் இதை இன்னும் விரிந்த பரந்த அடிப்படையில் நிறுவுவதற்குச் செய்யப் படும் ஒவ்வொரு முயற்சிக்கும் இது முரண்பட்டதாக இருக்கும்.''

# பி

## அறிக்கை

### பம்பாய் மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கல்வி நிலை சம்பந்தமாக

*பஹிஷ்கிரித ஹிதகரிணி சபா*
(பம்பாய்த் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கழகம்)

*சார்பில்*

**இந்தியச் சட்டக் கமிஷனுக்கு**

**டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்,** எம்.ஏ., பிஎச்.டி., டி.எஸ்ஸி., பார்-அட்-லா
பம்பாய்ச் சட்ட மேலவை உறுப்பினர்

*சமர்ப்பித்தது*

**29 மே, 1928**

தாமோதர் ஹால்
பரேல், பம்பாய்-12
இந்தியா

**குறிப்பு:** இந்த அறிக்கையில் பிற்பட்ட வகுப்பினர், தாழ்த்தப் பட்ட வகுப்பினர் என்னும் பதங்கள் மாறி மாறிப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1. 1813 முதல் 1854 வரை

1. 1815-ஆம் ஆண்டில் பம்பாய்க் கல்விக் கழகம் நிறுவப் பட்டதைத் தொடர்ந்துதான் பிரிட்டிஷ் ஆட்சியில் பம்பாய் மாநிலத் தில் கல்வி போதனை தொடங்கியது என்று சொல்ல வேண்டும். அந்தக் கழகம் ஐரோப்பியக் குழந்தைகளுக்குக் கல்வி போதனை அளிக்கும் தனது முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவில்லை. சூரத்திலும் தாணாவிலும் கழகத்துக்குப் பள்ளிக் கூடங்கள் இருந் தன. அந்தப் பள்ளிகளில் சேர்ந்து படிக்கும்படி உள்ளூர் சிறுவர் கள் ஊக்குவிக்கப்பட்டனர். இதுவன்றி, 1820-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் உள்ளூர்க்காரர்களுக்காகத் தனியாக நான்கு பள்ளிக் கூடங்கள் ஆம்பிக்கப்பட்டன. அவற்றில் சுமார் 250 மாணவர்கள் படித்து வந்தனர். அதே ஆண்டு ஆகஸ்ட் மாதம் உள்ளூர்க் கல்வியை விரிவுபடுத்துவதற்கு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. வட்டார மொழிகளில் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதற்காகவும், வட்டார மொழி பள்ளிக் கூடங்களை நிறுவுவதற்காகவும் அல்லது அவ்வாறு நிறுவுவதற்கு உதவுவதற்காகவும் ஒரு விசேடக் குழுவைக் கழகம் அமைத்தது. ஆனால் முக்கியமாக ஏழைகளின் கல்விக்கென்றே அமைக்கப் பட்ட இந்தக் கழகத்தின் நோக்கங்களையும் பணியையும் மேலும் விரிவுபடுத்துவது அவசியம் என்று உணரப்பட்டது; எனவே 1882-ல் இந்தக் குழுவானது ஒரு தனிக் கார்ப்பரேஷனாக மலர்ந் தது; பம்பாய் ஸ்தல பள்ளிப் புத்தக மற்றும் பள்ளிக்கூடக் கழகம் என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. 1827-ல் இந்தப் பெயர் பம்பாய் ஸ்தல கல்விக் கழகம் என மாற்றப்பட்டது. மாண்புமிகு மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டன் புதிய கழகத்தின் முதல் தலைவ ரானார். பிரதம நீதிபதியும், பம்பாய் அரசாங்க நிர்வாக சபை யின் மூன்று உறுப்பினர்களும் துணைத் தலைவர்களாக இருந் தனர்; நிர்வாகக் குழுவில் பன்னிரண்டு ஐரோப்பியர்களும் பன்னிரண்டு இந்தியர்களும் இடம்பெற்றனர்; காப்டன் ஜார்ஜ் ஜெர்விஸ் ஆர். இ. யும் திரு. சதாசிவ காசிநாத் சத்ரேயும் செய லாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாதாந்தர அரசாங்க மான்யம் 600 ரூபாயுடன் கழகம் தனது பணியைத் தொடங் கிற்று. 1825-ஆம் ஆண்டுத் தொடக்கவாக்கில் பம்பாய் அரசாங் கம் மாவட்ட நகரங்களில் தனது சொந்தச் செலவில் தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்தது; அவற்றை மாவட்ட ஆட்சியர்களின் பொறுப்பில் விட்டது. இவ்விரண்டு தனித்தனி அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தும் பொருட்டு 1840-ல் கல்வி வாரியம் அமைக்கப்பட்டது; இவ்வாரியம் ஆறு உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது; இவர்களில் மூவர் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவர்கள்; மற்ற மூவர் உள்ளூர் கல்விக் கழகத்தின் பிரதிநிதிகள். 1855-ல் பொதுக் கல்வி இயக்குநர் நியமிக்கப்படும் வரை இந்த வாரியமே கல்வித்துறைக்குப் பொறுப்பாக இருந்து வந்தது.

2. 1855 மார்ச்சில் வாரியம் கலைக்கப்பட்டபோது பம்பாய் மாநிலத்தில் அதன் பொறுப்பில், 2850 மாணவர்களைக் கொண்ட 15 ஆங்கிலக் கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும், 18,888 மாணவர்களைக் கொண்ட 256 வட்டார மொழிப் பள்ளிக் கூடங்களும் இருந்தன. இதே அறிக்கையில் வாரியம் குறிப்பிட் டிருந்ததாவது:

> ''24. ஆகஸ்டில் (1855) அகமத் நகர்வாசிகளிடமிருந்து எங்களுக்கு ஒரு விண்ணப்பம் வந்திருந்தது. கீழ்ச் சாதியினர் கல்வி பயில ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவும்படி அந்த விண்ணப் பத்தில் அவர்கள் கேட்டுக் கொண்டிருந்தனர். அண்மைய விதிகளின்படி ஆசிரியர்களின் சம்பளத்தில் பாதியைத் தாங் கள் தருவதாகவும் அவர்கள் தெரிவித்திருந்தனர். விண்ணப்ப தாரர்கள் ஒரு பள்ளிக்கூட அறையையும் கட்டித்தந்தனர். முப்பது சிறுவர்கள் பள்ளியில் சேரக்கூடும் என்று கணக்கிடப் பட்டது. ஆனால் இத்தகைய பள்ளிக்கூடம் திற்க்கப்படுவதை பணக்கார மேல் சாதியினர் விரும்பவில்லை; இதனால் தங்கள் கௌரவத்துக்கு இழுக்கு ஏற்படும் என்று அவர்கள் கருதினர். இது மட்டுமல்ல, வேறொரு சிக்கலும் ஏற்பட்டது. சுமாரான சம்பளத்தில் ஓர் ஆசிரியர் கிடைப்பதும் சிரமமாக இருந்தது. ஆனால் இந்த விஷயம் குறித்து அண்மையில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் கண்டிருந்த நிபந்தனைகளுக்கு முற்றிலும் உட்பட்டதாக இந்த விண்ணப்பம் இருந்ததால், அவர்களது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டோம். இதன் பேரில் நவம்பர் மாதம் பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. இந்த சாதியினருக்காக ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்குவது இதுவே முதல்முறை என்பதால்தான் இந்த விஷயத்தை நாங் கள் இங்கு (மூலத்தில் சாய்வு எழுத்துக்களில்இல்லை) குறிப் பிடுகிறோம்.''

3. இந்த மாகாணத்தில் கீழ்ச்சாதியினருக்காக ஒரு பள்ளிக் கூடத்தை நிறுவுவது இதுவே முதல் தடவை என்று வாரியம் தனது அறிக்கையில் கூறியிருப்பது இயல்பாகவே பின்வரும் கேள்வியை எழுப்புகிறது: தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கல்வி விஷயத்தில் 1855-க்கு முன்னர் பிரிட்டிஷ் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கொள்கை என்ன? இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு இந்த மாநிலத்தில் 1813 முதல் 1854 வரையிலான பிரிட்டிஷ் அரசாங் கத்தின் கல்விக் கொள்கையின் வரலாற்றைச் சற்றுப் பின்னோக்கிப் பார்ப்பது அவசியம். பீஷ்வா அரசாங்கம் இருந்த போது தாழ்த்தப் பட்ட வகுப்பினர்களுக்கும் கல்வி போதனை அறவே மறுக்கப் பட்டு வந்தது. அரசாங்கத்தின் எந்தக் கல்வித் திட்டத்திலும் அவர் கள் இடம் பெறவில்லை. பீஷ்வா அரசாங்கம் மனு சூத்திரங்களின் அடிப்படையில் அமைந்த ஓர் இறைமையியல் ஆட்சியாக இருந்து வந்ததே இதற்குக் காரணம். இந்தச் சூத்திரங்களின்படி சூத்திரர்

களுக்கும் ஆதி சூத்திரர்களுக்கும் (கல்வித் துறையினர் குறிப்பிடும் பிற்பட்ட வகுப்பினரைப் போன்ற வகுப்பினர்) உயிர், உடைமை, சுதந்திரம் போன்றவற்றில் எத்தகைய உரிமை இருந்தாலும், கல்வி கற்பதற்கு அவர்களுக்கு நிச்சமாக உரிமை கிடையாது. இத்தகைய இடர்ப்பாடுகளால், இக்கட்டுகளால் பெரிதும் அவதியுற்றுக் கண் பிதுங்கி வந்த, கண்கலங்கி வந்த தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்த வெறுக்கத்தக்க ஆட்சி வீழ்ச்சியுற்ற போது நிம்மதிப் பெருமூச்சு விட்டதில், வியப்பேதும் இல்லை. அப்போது பிரிட்டிஷ் ஆட்சி யின் வருகை, தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடையே மிகப் பெரும் நம்பிக்கைகளைக் கிளர்த்தி விட்டது. இதற்குப் பல காரணங்கள் உண்டு: முதலாவதாக, பிரிட்டன் ஜனநாயக நாடு; மனிதர் யாவரும் சரிநிகர் சமானம் என்னும் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டது பிரிட்டிஷ் ஜனநாயகம் என்று அவர்கள் எண்ணினர். இத்தகைய ஜனநாயகம் தனது கோட்பாடுகளுக்கு நம்பிக்கையுடன் இருந்திருக்குமானால், அது பீஷ்வாவின் இறைமையியல் ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்திருக்கும், இரண்டாவதாக, பிரிட்டிஷார் இந்த நாட்டைக் கைப்பற்றுவதற்கு உதவி புரிந்தவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்; எனவே, பிரிட்டிஷார் இதற்குக் கைமாறாகத் தங்களுக்கு விசேட சலுகைகள் ஏதும் அளிக்கா விட்டாலும் ஏனையோருடன் சரிசமமாகவாவது தங்களை நடத்து வார்கள் என்று அவர்கள் நம்பினார்கள்; இது முற்றிலும் இயல்பே.

4. ஸ்தல மக்கள் மத்தியில் கல்வியை வளர்க்கும் பிரச்சினை குறித்துப் பிரிட்டிஷார் நீண்டகாலம் மௌனம் சாதித்து வந்தனர். இந்திய மக்களிடையே அறிவைப் பரப்ப வேண்டிய அவசியத்தை யும் கடமையையும் இந்திய நிர்வாகத்தில் உயர் மட்டத்திலிருந்த தனிப்பட்ட அதிகாரிகள் அடியோடு புறக்கணித்துவிடவில்லை என்ற போதிலும், இதில் அரசாங்கத்திற்குள்ள பொறுப்பு பற்றி வெளிப்படையான பிரகடனம் ஏதும் 1813-ஆம் ஆண்டு வரை வெளியிடப்படவில்லை. கடைசியில் அந்த ஆண்டில்தான் ஜார்ஜ் IV அத்தியாயம் 155, சட்டம் 53-ன் 43-ஆவது பிரிவுப் பிரகாரம் பாராளுமன்றம் ஓர் அறிவிப்பைச் செய்தது; ''இலக்கியத்தைப் புனரமைப்பதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும், அறிவுவளம் நிரம்பிய இந்தியர்களை ஊக்குவிப்பதற்காகவும், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களில் வாழும் மக்களிடம் விஞ்ஞான அறி வைப் புகுத்தி வளர்ப்பதற்காகவும் இந்தியாவின் அதிக வருமானங் களிலிருந்து ஆண்டுதோறும் 1 லட்சத்துக்குக் குறையாத பணத்தை ஒதுக்கி, மேலே கண்ட நோக்கங்களின் பொருட்டு செலவிட வேண்டும்'' என்று அது கூறிற்று. ஆயினும் இந்தச் சட்ட ரீதியான நடவடிக்கையைத் தொடர்ந்து, இந்தியர்களின் கல்வியை ஓர் உறுதி யான, ஒழுங்கமைக்கப்பட்ட அடித்தளத்தின் மீது கட்டி உருவாக்கு வதற்கு 1823-ஆம் ஆண்டுவரை எத்தகைய திட்டவட்டமான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியே ஏதேனும்

நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தாலும் அது எந்த லட்சணத்தில் இருந்தது என்பதைப் பார்ப்போம். 1813-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 43 ஆவது பிரிவை எவ்விதம் அமல் செய்ய வேண்டும் என்பது பற்றி இயக்குநர்கள் குழு நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்-ஜெனரலுக்கு 1814 ஜூன் 3-ஆம் தேதியிட்டு ஒரு விரைவுச் செய்தியை அனுப்பியிருந்தது; ஹிந்துக்களிடையே சமஸ்கிருதப் போதனையைப் பரப்புவது நாடாளுமன்றம் உத்தேசித்திருக்கும் நோக்கங்களை நிறைவேற்றும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்விதம் இந்தியர்களின் கல்வியை ஓர் உறுதியான, ஒழுங்கமைக்கப்பட்ட அடித்தளத்தின் மீது கட்டி உருவாக்கும் முயற்சி, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றமாக, பேரிடியாக முடிந்தது என்பதைப் பாருங்கள்!! *பிரிட்டிஷாரைப் பொறுத்தவரையில் கல்வி என்பது மேல் வகுப்பினர்களுக்கு மட்டுமே உரிய உரிமை என்ற கொள்கையைத் திட்டமிட்டுக் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்* என்பது தெளிவு, இது ஏதோ புனை கதை என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். பம்பாய் மாநிலத்தின் கல்வி வாரியம் சமர்ப்பித்த 1850-51-ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலிருந்து கீழே தரப்பட்டுள்ள சில பகுதிகளைப் படித்தாலே இந்த உண்மை புரிந்துவிடும்:

**இயக்குநர்கள் குழுக் கருத்தின் அடிப்படையில் வாரியம் ஏற்ற அமைப்பு முறை**

''பத்தி 5. இவ்வாறு இயக்குநர்கள் குழுவிலிருந்து வந்த ஆணைகளுக்கு இணங்கவும், இந்தியாவில் கல்வியின் முன்னேற்றத்தைக் கூர்ந்து கவனித்து வரும் ஆக்லந்து பெருமகன் மேஜர் கேண்டி போன்றோரின் கருத்துகளைவிட உள்நாட்டவர்களில் மிகவும் அறிவுத் திறம் வாய்ந்தவர்கள் பகிரங்கமாக வெளியிட்ட விருப்பங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டும் இந்த மாநிலத்தின் கல்வி வாரியம் ஒரு கல்வித் திட்டத்தை வகுத்துவிட்ட நிலைமையில், இந்த நடவடிக்கையை உடனே நிறுத்தும்படி பெருமகனாருக்கு முன்னர் பதவியிலிருந்தவரால் வாரியத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.''

**மேல்நிலை வகுப்பினருக்குக் கல்வி போதனை அளிப்பதன் அவசியம் பற்றி குழுவின் கருத்துகள்**

''பத்தி 8. கல்வியின் பொருட்டு செலவிடுவதற்கு மிகக் குறைந்த பணமே கைவசம் இருக்கும் நிலையில், அரசாங்கத்தின் கல்விப் பணி எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்பது குறித்து குழு தந்துள்ள குறிப்புகள் எங்களுக்கு மிகவும் விவேகமானவையாகத் தோன்றுகின்றன. குழு 1830-ல் சென்னைக்குப் பின்வருமாறு எழுதிற்று: 'கல்வித் துறையை மேம்படுத்துவது என்னதான் ஒரு மக்களினத்தின் தார்மிக, அறிவுத்துறை நிலையை உயர்த்துவதற்கு மிகவும் உறுதிப் பயனுள்ள முறையில் பங்காற்ற முடியும் என்ற போதிலும், அது மேல் வர்க்கத்தினரின், தங்கள் நாட்டு மக்களது மனத்தை இயல்பாகவே வசப்படுத்தக் கூடியவர்களின், நிறைய ஓய்வு நேரமுள்ள

*வர்களின் கல்வி போதனை சம்பந்தப்பட்ட விஷயமாகவே இருப்பதைக் காண்கிறோம். எண்ணிக்கையில் மிகப் பெருமளவில் உள்ள வகுப்பினரிடம் நேரடியாகச் செயல்படுவதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் பலனைவிட மேல்நிலை வகுப்புகளிடையே கல்வியின் தரத்தை உயர்த்துவதன் மூலம் சமுதாயத்தின் கருத்துகளிலும் உணர்வுகளிலும் மிகப் பெருமளவில் அனுகூலமான மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தவிரவும். தங்கள் பழக்க வழக்கங்கள் மூலமும் தங்கள் திறமையின் மூலமும் நமது இந்திய அரசாங்கத்தின் கீழ் இதுவரை நடைமுறையில் இருந்து வந்ததைவிட, தங்கள் நாட்டின் சிவில் நிர்வாகத்தில் பெரும் பங்காற்றக் கூடிய, உன்னத நிலையை எய்தக்கூடிய ஓர் உள் நாட்டுப் பிரிவினர் நம்மிடம் இருக்க வேண்டும் என்று நாம் ஆர்வம் கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்! இப்படியெல்லாம் இருந்தும் பலர், இதிலும் பரந்த மக்கட் பகுதியினருக்குக் கல்வி போதனை அளிப்பதும், ஐரோப்பாவின் கலைகளையும் விஞ்ஞானங்களையும் இந்தியாவிலுள்ள பத்து கோடி அல்லது பதினான்கு கோடி மக்களிடையே (இங்கு எண்ணிக்கை முக்கியமல்ல) பரப்புவதும் எத்தகைய அவசியம், இதற்கு எவ்வளவு பெருந்தொகை செலவாகும் என்பதை எல்லாம் தெரிந்திருக்க வேண்டியவர்கள் கூட இந்த விஷயம் குறித்து தெளிவில்லாமல், மிகப் பொதுப்படையாகப் பேசுவதைக் கேட்கிறோம்; அதுவும் இங்கிலாந்தில் ஒரு தனிப்பட்ட அமைப்புக்கு ஒதுக்கப்படும் தொகையைவிடவும் மிகக் குறைந்த தொகையே இங்குக் கல்விக்காகச் செலவிடப்படுகிறது என்பது தெரியாமல், நாட்டின் நிதி முழுவதுமே கல்வி வாரியங்கள் வசம் இருப்பதாக நினைக்கும் ஓர் அப்பாவிப் பார்வையாளனைப் போல் இவர்கள் பேசுவதைக் கேட்கிறோம்.''*

**கடந்த பத்தாண்டுக்காலத்தில் கல்வி சம்பந்தப்பட்ட உண்மை விவரங்களைத் திரும்பிப்பார்ப்பது அவசியம்**

பத்தி 9. உண்மை விவரங்களைக் கவனமாகப் பரிசீலித்துப் பார்ப்பதும், இந்த மாநிலத்தில் கல்வி சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போது வெளிப்பட்ட முக்கியநிகழ்ச்சிப் போக்குகளைப் பகுத்தாய்வதும் பலனில்லாமல் போகாது என்பதை முந்தைய சில பத்திகளில் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்கள் புலப்படுத்துகின்றன; ஆனால் உதவாக்கறையான வீண் சர்ச்சைகளையும் பலவிதமான ஊகங்களையும் ஒதுக்கித் தள்ளும் உறுதியான தீர்மானத்தோடு இதைச் செய்ய வேண்டும். 1850-ல் இரண்டாவது பத்தாண்டுக்காலம் தொடங்கிய போது, இந்த மாநிலத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடங்கள் முற்றிலும் அரசாங்க வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இந்த நிலைமையில் கடந்தகால அனுபவங்களைத் திரும்பிப்பார்ப்பது இன்றைய காலகட்டத்தில் பெரிதும் அவசியமாகிறது; இவ்விஷயம் குறித்து இதுவரை ஏராளமான தகவல்கள் சேகரிக்கப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை; இப்போதைய உறுப்பினர்களில் பெரும்பாலோர் அச்சமயம்

அநேக சந்தர்ப்பங்களில் வாரியத்தில் இடம்பெற்றிருந்தமையால், தங்களது சென்றகால அனுபவத்தை எடுத்துரைப்பதன் மூலம் சில தெளிவற்ற, ஆனால் இந்த வாரியத்தில் தங்களுக்குப் பின்னால் உறுப்பினர்களாக வரக் கூடியவர்களின் முன்னே அவ்வப்போது எழக்கூடிய மிக முக்கியமான பிரச்சினைகள் குறித்து அவர்கள் தெளிவாக விளக்கம் அளிக்க முடியும்.

**ஒரே மாதிரியான ஒரு அமைப்புமுறை வங்காளத்திலும் பம்பாயிலும் தானாகவே உருவாகி விடுகிறது**

"பத்தி 10. கல்வி சம்பந்தமாக நமது கவனத்துக்கு வந்துள்ள முக்கிய உண்மைகள் குறித்த நுட்பமான விவரங்களை நம்மால் முடிந்தளவு இப்போது கூறுவோம்; இந்த விவரங்கள் உரிய முறையில் மதிப்பிடப்படும் போது, இந்தியக் கல்வித் துறையில் எழும் பல சர்ச்சைக்குரிய பிரச்சினைகள் தாமாகவே தீர்க்கப்பட்டு வருவதும், நாட்டின் சூழ்நிலைமைகளுக்கு உகந்த ஓர் அமைப்பு முறை பம்பாயைப் போலவே இதர மாநிலங்களிலும் பொதுவாக உருவாகி வருவதும், இதற்குரிய பொதுக் காரணங்கள் செயல்பட்டு வருவதும் தெளிவாகத் தெரியவரும்.

**பம்பாயில் கல்வி குறித்த புள்ளி விவரங்கள்**

பத்தி 11. கல்வி நிலையங்கள் முதன் முதலில் வாரியத்தின் கட்டுப்பாட்டிற்குள் வந்த போது, 1840-ஆம் ஆண்டிலும் 1850 ஏப்ரலிலும் அரசாங்கத்தின் கீழ் இருந்த பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையையும், மாணவர்களின் எண்ணிக்கையையும் பற்றிய ஓர் ஒப்பு நோக்குக் கண்ணோட்டத்தை கீழே தந்துள்ளோம். பிந்திய கட்டத்தில் 4 ஆங்கிலப் பள்ளிகளும், 83 வட்டார மொழிப் பள்ளிகளும் புதிததாக ஆரம்பிக்கப்பட்டதையும், மாணவர்கள் எண்ணிக்கை நூறு சதவிகிதம் அதிகரித்திருப்பதையும் இது காட்டுகிறது. தற்போதுள்ள மொத்த மாணவர்கள் பின்கண்டவாறு அரசாங்கக் கல்வி பெற்று வருகின்றனர்:

| | | |
|---|---|---|
| ஆங்கிலக் கல்வி | ... ... | 1,699 |
| வட்டார மொழிக் கல்வி | ... ... | 10,730 |
| சமஸ்கிருதக் கல்வி | ... ... | 283 |

(ஒப்பீட்டுப்புள்ளி விவரங்கள்: 1840-ல் 97 பள்ளிக்கூடங்கள் இருந்தன; மொத்த மாணவர்கள் 5,491. 1850-ல் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 185; மாணவர்களின் எண்ணிக்கை 12,712)

**இதேவிஷயம்**

"பத்தி 12. ஆனால் பம்பாய் மாகாணத்தின் தற்போதைய மக்கள் தொகை 1 கோடி என்று தகுதி வாய்ந்த அதிகாரிகளால் கணக்கிடப்பட்டுள்ளது. முந்தைய அறிக்கை ஒன்றில் (1842-43, பக்கம் 26) குறிப்பிடப்பட்டுள்ள பிரஷிய நாட்டுக் குடிமதிப்புக் கணக்கை அடிப்படையாகக் கொண்ட புள்ளி விவர விதியை இங்குப் பயன்

படுத்திப் பார்ப்போமேயானால் இந்த எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகையில், பள்ளி செல்லுவதற்குத் தகுதி வாய்ந்த ஆண் குழந்தைகள் 9,00,000 பேருக்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றாகிறது. ஆகவே, பள்ளி செல்லும் வயதுள்ள ஒவ்வொரு அறுபத்து ஒன்பது சிறுவர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவருக்குக் கல்வி போதனை அளிக்கும் வாய்ப்பை இந்த மாநிலத்தில் அரசாங் கத்தால் வழங்க முடியவில்லை என்பது இதிலிருந்து தெளிவா கிறது.

இதே விஷயம்

பத்தி 13. தவிரவும், வட்டார மொழிப் பள்ளிகளில் போதிக் கப்படும் கல்வி திறமையானதாக இல்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. திரு. வில்லோபி எழுதியுள்ள குறிப்பில், இந்தப் பள்ளிக்கூடங் களின் மோசமான நிலைமை பற்றியும், அவை எத்தகைய குறிப் பிடத்தக்க சாதனைகளையும் புரியாததைப் பற்றியுமே பெரும் பாலும் கண்டனம் தெரிவித்துள்ளார். வாரியம் இந்த உண்மையை ஒப்புக் கொண்டதோடு, இந்தக் குறைபாட்டைக் கடந்த பல ஆண்டுகளாகச் சுட்டிக்காட்டியும் வந்துள்ளது. அதுமட்டுமன்றி, கல்வித்துறையின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருபவர் கள் சிலரும் வட்டார மொழிப் பள்ளிக்கூடங்களைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்கவில்லை. ஆனால் இந்தக் குறைபாடு களைப் போக்குவதற்கு வழிதான் என்ன? மிகச் சிறந்த ஆசிரியர் கள் வேண்டும், ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் பள்ளிகள் வேண் டும், சிறந்த கண்காணிப்பு வேண்டும், வட்டார மொழிகளில் இன்னும் அதிகமான புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும் என்று திரு. வில்லோபி கூறுகிறார். இவ்விஷயங்களைப் பற்றி யெல்லாம் கடந்த பல ஆண்டுகளாகவே வாரியம் கவனம் செலுத்தி வருகிறது; இருப்பினும் கூடுதலாகச் செலவு செய்யாமல் இந்த வழியில் ஓரடிகூட முன்னால் எடுத்து வைக்க முடியாது. ஆனால் 'இன்னும் கணிசமான காலத்திற்கு வாரியத்திற்குக் கூடுதல் பொருளாதார உதவி அளிப்பது அரசாங்கத்திற்குச் சாத்தியமாக இராது' என்பதைக் கனம் நீதிபதி அவர்களின் கடிதத் திலிருந்து நாங்கள் புரிந்து கொண்டோம்.

பரந்த மக்கட் பகுதியின ருக்குக் கல்வி போதனை அளிக்க வசதி இல்லை

பத்தி 14. இந்த விவரங்களிலிருந்து ஒரு விஷயம் மிகத் தெளிவாகத் தெரிகிறது: அதாவது 175 வட்டார மொழிப் பள்ளிகளை உரிய முறையில் ஒழுங்கமைப்பதற்கும், 10,730 சிறார்களுக்கு சிறந்த ஆரம்பக் கல்வி அளிப்பதற்கும் போதிய நிதி வசதி இல்லை என்கிறபோது, 'பொது மக்களை' '14 கோடி மக்களை', பம்பாய் மாநிலத்திலுள்ள 9,00,000 சிறுவர்களை கல்வியறிவுடையவர்களாக்குவது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போகிறது. இந்தக் குறிக்கோள் ஈடேற்றக் கூடியதோ, அரசாங்கத் தால் அணுகக்கூடியதோ அல்ல என்பது கண்கூடு. ஆகவே, கல்வி

வாரியங்கள் பெரும் அறச் செயல்கள் புரிய வேண்டும் என்று கற்பனை உலகில் சஞ்சரித்து, நடைமுறைச் சாத்தியமான, வரை யறைக்குட்பட்ட செயற்களத்திலிருந்து விலகிச் செல்லத் தம்மை அனுமதிக்கக் கூடாது.''

**குறைந்த வசதிகளுடன் செயல்படுவதற்கான சிறந்த வழி பற்றி இயக்குநர் நீதி மன்றத்தின் கருத்துகள்**

பத்தி 15. கடந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முடிவை குழு எப்போதுமே மிகத் தெள்ளித் தெளிவாகத் தன் பார்வையில் வைத்து வந்துள்ளது. கல்வித் துறையில் மக்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மிகச் சிறிய அளவிலேயே மேற்கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்துள்ள அவர்கள் குறைந்த வசதிகளைக் கொண்டு மிகப் பெரும் பலன்களை அளிக்கக்கூடிய சிறந்த வழியைத் தங்களுடைய பல்வேறு அரசாங்கங்களுக்குச் சுட்டிக்காட்டுவது அவசியமெனக் கருதுகின்றனர். இந்த விஷயம் குறித்து (பத்தி 7) சென்னை அரசாங்கத்துக்கு அவர்கள் பிறப்பித்த ஆணையை ஏற்கெனவே நாம் குறிப்பிட்டுள்ளோம். அதே நாளில் அரசாங்கத்துக்கு அவர்கள் அனுப்பியுள்ள செய்தியும் திட்டவட்டமாக இதே உணர்வைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது; இந்திய மக்களில் மேல் வகுப்பினர் ஐரோப்பிய விஞ்ஞானங்களைக் கற்றுக் கொள்வதற்கும், நாகரிகமடைந்துள்ள ஐரோப்பாவின் இலக்கியத்தைப் பரிச்சியம் செய்து கொள்வதற்கும் அவர்களுக்கு உதவ நாங்கள் ஆர்வமுடன் இருக்கிறோம். போதிய அவகாசமும் செல்வாக்குமுள்ள இந்த வகுப்பினர் பெறும் குண இயல்பு மக்கள் அனைவரின் குண இயல்பையும் இறுதியாகத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.''

**இந்தியாவின் மேல் வகுப்பினர்கள் குறித்த ஆய்வு**

பத்தி 16. இந்தியாவில் ஒரு சிறு மக்கள் பகுதியினரைத்தான் அரசாங்கக் கல்வியின் செல்வாக்கிற்குள் கொண்டு வர முடியும் என்பது தெளிவாகி விட்ட நிலைமையில், இந்தச் சிறு பகுதி 'மேல்வகுப்பினர்களை'க் கொண்டதாகத்தான் இருக்க வேண்டும் என்று குழு தீர்மானித்துவிட்ட நிலைமையில், இனி இந்த மேல் வர்க்கம் என்பது யாரைக் குறிப்பிடுகிறது என்பதை நிர்ணயிப்பது அவசியமாகிறது: இங்கு ஓர் ஐரோப்பிய ஆய்வாளன் ஐரோப்பிய ஒப்புமைகளிலிருந்து தனது மனத்தை விடுவித்துக் கொள்வது முற்றிலும் அவசியம்; ஏனென்றால் இந்த ஒப்புமைகள் பல சந்தர்ப்பங்களில் ஆங்கிலோ-இந்தியக் கற்பனைக் கோட்டைக்குள் அநேகமாகத் தம்மை அறியாமலேயே புகுந்து கொள்கின்றன. ஐரோப்பாவில் அதிலும் முக்கியமாக இங்கிலாந்திலுள்ள சூழ்நிலைமைகள் மேல்வகுப்பினருக்கும் கீழ் வகுப்பினர்களுக்கும் இடையே பழக்க வழக்கங்கள், செல்வம், அரசியல் செல்வாக்கு முதலியவற்றில் ஒரு தீர்க்கமான, திட்டவட்டமான எல்லைக் கோட்பாடை வரைந்துள்ளன. ஆனால் இத்தகைய எல்லைக் கோட்டை

இந்தியாவில் காண முடியாது. இங்கு எல்லா எதேச்சாதிகார ஆட்சிகளிலும் வாழ்க்கையின் மிகவும் கீழான நிலையிலிருந்து மிக மேலான நிலைக்கு உயர்வதற்கு அரசரின் ஆதரவும் தயவும்தான் தேவை. எனவே, இங்கு எப்போதும் பழக்கவழக்கங்களில் மிகப் பெரிய ஒற்றுமை நிலவி வந்திருக்கிறது; பிரிட்டிஷ் கண்ணோட்டங் களின்படி ஒரு 'பரதேசி' 'ஸ்டாக்ஸ்' என்னும் பலகையில் கைகால் களைப் பொருத்தி வைத்துத் தண்டிப்பதற்கோ அல்லது தொழி லகத்தில் கட்டாய உழைப்புக்கோதான் உரியவன்; ஆனால் இந்தியாவில் அப்படியல்ல; இங்கு அவன் மரியாதைக்குரியவன்; பிராமணத் தத்துவத்தின்படி அவன் பூசனைக்குரியவன். அது மட்டுமல்லாமல், கல்வி கேள்வி ஞானத்தை வளர்த்துக் கொள் வதற்காகவும், எத்தகைய தங்குதடையுமின்றி ஆண்டவனின் தியா னத்தில் ஆழ்ந்து ஈடுபடுவதற்காகவும் வாழ்க்கையின் சகல இன்பங் களையும் துறந்தவனாக இந்தத் தத்துவம் அவனைக் கருதுகிறது.''

**இந்தியாவில் மேல் வர்க்கத்தினர்**

பத்தி 17. இந்தியாவில் செல்வாக்கு மிக்கவர்களாக மதிக்கப் படுகின்ற மேல் வகுப்பினர்களைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்:

முதலாவது. நிலக்கிழார்கள், ஜாகிர்தார்கள், பழைய பண்ணை நிலவுரிமை முறையின் பிரதிநிதிகள், உள்ளூர் ஆட்சிகளில் அதிகாரத்தில் இருந்தவர்கள், படைவீரர் வர்க்கத்தினர்.

இரண்டாவது. தொழில், வர்த்தகத்தின் மூலம் செல்வந்தர் களானவர்கள் அல்லது தொழில், வணிக வர்க்கத்தினர்.

மூன்றாவது. அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள்.

நான்காவது. பிராமணர்கள். எழுதுவதையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்ட பம்பாயின் பர்பூஸ்கள், சென்விஸ்கள், வங்காளத்தின் காயஸ்தர்கள் போன்ற உயர் சாதி எழுத்தாளர் களுடன் இவர்களுக்குத் தொடர்புகள் உண்டு. பிராமணர்கள் கல்வி அறிவின் மூலமோ சமுதாயப் படிநிலை மூலமோ உயர் அந்தஸ்தைப் பெறுகிறார்கள்.''

**பிராமணர்கள் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர்கள்**

''பத்தி 18. இந்த நான்கு வர்க்கத்தினரில் மிகவும் செல்வாக்கு வாய்ந்தவர்கள், அதிக எண்ணிக்கையில் உள்ளவர்கள், மொத்தத்தில் அரசாங்கத் துடன் எளிதாக இணங்கிப் போகிறவர்கள் கடைசியாகக் குறிப் பிடப்பட்ட பிராமணர்களே ஆவர். பண்டைய ஜாகிர்தார்களும் சரி, படைவீரர் வர்க்கத்தினரும் சரி நமது ஆட்சியில் நாளுக்கு நாள் நலிந்து வருகின்றனர் என்பது இந்தியா முழுவதும் நன்கு தெரிந்த விஷயமாகும். அவர்களது பழைய தொழில் மறைந்து விட்டது. வேறு ஏதேனும் புதிய தொழிலை மேற்கொள்ளும் எண்ணமோ, திறமையோ அவர்களுக்கு இல்லை. நில உடைமை

யாளர்களைக் கொண்ட ஓர் ஆளும் வர்க்கத்தை உருவாக்கி முட்டுக் கொடுத்துத் தூக்கி நிறுத்துவதற்கு இந்த மாநிலத்தில் திரு. எல்பின்ஸ்டனும், அவருக்குப் பிறகு வந்தவர்களும் மேற் கொண்ட முயற்சிகள் யாவும் பரிதாபகரமாகத் தோல்வியையே தழுவின. வீண் ஆடம்பரத்திலும், ஊதாரித்தனத்திலும், இந்துஸ் தான் சமவெளியில் தமது மூதாதையர் நடத்திய வெற்றிகரமான படையெடுப்புகளின் பழைய நினைவுகளிலும் ஊறித் திளைப் பதிலேயே இன்பம் காணப் பழகிப்போனவர்களுக்குக் கௌரவப் பட்டங்கள் அளிப்பதன் மூலமும் கல்வியின் மூலமும் ஓர் ஒளி மயமான பாதையைத் திறந்துவிட எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளும் முழு ஏமாற்றத்தில்தான் முடிந்தன. இதேபோல் வணிக வர்க்கத்தினரிடையேயும் உயர் கல்வி செல்வாக்குப் பெறு வதற்கு அதிக வாய்ப்பில்லை—வேண்டுமானால் இதற்கு ஒரு சில விதிவிலக்குகள் இருக்கலாம். எல்லா நாடுகளையும் போன்றே, அதிலும் பெரிதும் நாகரிகமடைந்த ஐரோப்பிய நாடுகளை விடவும் இந்தியாவில் ஓர் இளம் வணிகர் அல்லது வர்த்தகர் தனது தொழி லுக்குத் தேவையான சிறந்த அனுபவத்தை மார்க்கெட்டில் அல்லது வணிகரின் அலுவல் துறையில் பெறும் பொருட்டு ஆரம்பத் திலேயே பள்ளிப்படிப்பை விட்டுவிட வேண்டியிருக்கிறது. இறுதி யாக, அரசாங்கத்தை அணுகும் ஏராளமானோரிடையே அரசு ஊழியர்கள் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும், அரசாங்கத் துடன் தொடர்பில்லாத மிகப் பலரிடையே அவர்களுக்கு எத்தகைய செல்வாக்கும் இருப்பதில்லை; இங்கிலாந்தில் அரசு அலுவலர்கள் அரசின் கைக்கூலிகள் என இழிவாகக் கருதப் போடுவது போலவே இந்தியாவிலும் அரசு ஊழியர்களைப் பொது மக்கள் அவ நம்பிக்கையோடேயே பார்க்கின்றனர்.''

''பத்தி 19. மேலே கண்ட பகுத்தாய்வு சற்று நீளமாக இருந்தா லும் அத்தியாவசியமானது;, ஏனென்றால் அதிலிருந்து சில முக்கியமான முடிவுகளை நாம் பெற முடிந் துள்ளது. முதலாவதாக, அரசாங்கத்தால் கல்வி விதைகளைத் தூவ முடிந்துள்ள செல்வாக்கு மிக்க வகுப்பு பிராமணர்களும் அவர் களைப் போன்ற உயர்சாதியினருமே என்பதை இது வெளிப் படுத்தியுள்ளது. ஆனால் பிராமணர்களும் இந்த உயர்சாதியின்ரும் பெரும்பாலும் கொடிய வறுமையில் வாடுபவர்களாகவே உள்ள னர்; இந்தியாவின் பல பகுதிகளில் 'பிராமணன்' என்னும் சொல்லும் 'யாசகன்' என்னும் சொல்லும் ஒரே பொருளைக் குறிப்பதாகவே உள்ளன.''

பிராமணர்களின் வறுமை

பத்தி 20. 1850 ஏப்ரல் 24 ஆம் நாளன்று மதிப்பிற்குரிய இயக்குநர் குழு எழுதிய கடிதத்தில் எங்க குப் பிறப்பித்திருந்த ஆணையை—எடுத்த எடுப்பிலேயே சரியானதாகவும், உசிதமான தாகவும் தோன்றிய ஆணையை நிறைவேற்று வது எல்லாவித நம்பிக்கைக்கு இடமளிக்காததாக உள்ளது என்பதை

மேல்நிலைக் கல்வியைப் பணக்கார வர்க்கங்கள் தற்போது ஆதரிக்க மாட்டா

இங்குப் பார்க்க வேண்டும். உண்மையில் மேல்நிலைக் கல்வியைப் 'பணக்காரர்களுக்கும், அதன் செலவை ஏற்கத் தயாராக இருப்பவர்களுக்கும், அசாதாரணமான அறிவுத்திறம் படைத்த அளவும் மக்களுக்கும்' மட்டுமே வழங்குவதற்கு வாரியமே பல சந்தர்ப்பங்களில் முயன்று பார்த்தது. ஆனால் இத்தகைய கருத்தை அமல் செய்ய முற்பட்ட காலையில் வாரியத்துக்கு ஏற்பட்ட அனுபவம் இதுதான்; மேற்கல்வி விஷயத்தில் பணக்காரர்கள் முற்றிலும் அலட்சிய மனோபாவம் காட்டுகின்றனர்; ஏழைகளான இளம் மக்களைப் பொறுத்த வரையில், பள்ளிப் பயிற்சியின் மூலம் அவர்களது திறமையை வளர்த்து வளப்படுத்தும்வரை அவர்களது அசாதார்ணமான அறிவுத் திறத்தை உறுதி செய்வதற்கு வழி ஏதுமில்லை. எனினும் செல்வந்தர் வர்க்கத்தில் ஒரு சிறு பகுதியினர் மேல் நிலைக் கல்வியின் அனுகூலங்களை நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை. இப்படிப்பட்ட பகுதியினர் பம்பாயை விடவும் வங்காளத்தில் அதிகமாக உள்ளனர்; அங்கு அரசாங்கம் நீண்ட காலமாகவே கல்வியைப் பேணி வளர்த்து வருவதே இதற்குக் காரணம்; கல்வியில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவது உன்னத நிலைக்கு இட்டுச் செல்கிறது என்பதையும், சமூக சமத்துவத்தின் அடிப்படையில் ஐரோப்பியர்களோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்கு அது வழி வகுக்கிறது என்பதையும் அனுபவ ரீதியாக உணரும்போது, இத்தகைய வர்க்கம் வளர்ச்சியுறுவது தவிர்க்க முடியாதது என்று நாங்கள் கருதுகிறோம்; ஆயினும் இப்போதுள்ள நிலைமையில், ஐரோப்பியக் கலைகளிலும் விஞ்ஞானங்களிலும் கல்வி போதனை அளிப்பதற்குப் பணக்கார மாணவர்களையோ, அவர்களது பணத்தையோ நம்பியிருக்க முடியாது என்ற முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம்.

**கீழ்ச் சாதியினருக்குக் கல்வி போதனை அளிக்கும் பரிசீலனை**

''பத்தி 21. *பல ஆண்டுக்கால அனுபவம் நம் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ள இந்த விவரங்களிலிருந்து நாம் பெறக்கூடிய நடைமுறை ரீதியான முடிவு இதுதான்: நம்மிடமிருந்து கல்வி போதனை பெற விரும்பும் உயர் சாதிக் குழந்தைகளுக்குக் கதவுகள் அகலத் திறந்துவிடப்பட வேண்டும். ஆனால் அதே சமயம் இங்கு மற்றொரு சங்கடமான கேள்வி எழுகிறது; நம் கவனத்திற்குரிய அந்தக் கேள்வி இதுதான்: ஏழை மக்களின் குழந்தைகள் அரசினர் கல்வி நிலையங்களில் தாராளமாக அனுமதிக்கப்படும்போது, தெத்துகள், மஹர்கள் முதலிய சகல தாழ்ந்த சாதியினர் குழந்தைகளும் கூட்டமாகப் பள்ளிக்கூடங்களுக்குப் படையெடுப்பதை எது தடுக்க முடியும்?*

**ஹிந்துக்களின் சமூகப் பாரபட்சக் கண்ணோட்டங்கள்**

பத்தி 22. *பின்னர் குறிப்பிடப்பட்டவர்கள் அடங்கிய ஒரு கல்விக் கூடம் பம்பாயில் உருவாக்கப்படுமானால், வாரியத்தின் கீழ்ப் பணியாற்றும் பேராசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களின்*

சிறந்த, தேர்ந்த வழிகாட்டுதலில் சமூகத்தில் மிக உயர்ந்த அறிவுத் திறம் கொண்டவர்களாக அவர்களைப் பயிற்றுவித்து உருவாக்க முடியும் என்பதில் ஐயமில்லை. இத்தகைய உயர்ந்த கல்வி தகுதி களை அவர்கள் பெறும்போது, நீதிபதிகள், ஜூரர்கள், மாட்சிமை தங்கிய மகாராணியின் அமைதிக்காவலர்கள் போன்ற சொந்த நாட்டவரின் திறமைக்கு மதிப்பளிக்கக்கூடிய மிக உயர்ந்த பதவி களைப் பெற வேண்டுமென்று அவர்களுக்கு இருக்கும் ஆர்வ விருப்பத்தை எதாலும் தடுத்து நிறுத்த முடியாது. இத்தகைய நியமனங்கள் ஹிந்து சமூகத்தினரிடையே கிளர்த்திவிடக் கூடிய வெறுப்பு உணர்வுகளுக்கு, சீற்ற உணர்வுகளுக்கு அடிபணிந்து போவது என்பது பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் காணப்படும் குறுகிய கண்ணோட்டத்தையும், அதன் பலவீனத்தையுமே காட்டு கிறது என்று பரந்த மனோபாவம் படைத்தவர்கள் கருதுகின்றனர்; சாதித் தடையரண்கள்மீது வெளிப்படையாகத் தாக்குதல் தொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.''

**மாண்புமிகு மவுண்ட் ஸ்டுவர்ட் எல்பின்ஸ்டனின் விவேக மிக்க கருத்துகள்**

பத்தி 23. ஆனால் இங்கு, இந்தியாவின் இந்தப் பகுதியில் மிகவும் முற்போக்கான, பரந்த மனோ பாவம் படைத்த நிர்வாகியாகத் திகழ்ந்து வந்த திரு. எல்பின்ஸ்டனின் விவேக மிக்க கருத்துகள் உண்மையில் நாம் எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. அவர் கூறுகிறார்; 'மிகவும் தாழ்ந்த சாதிகளைச் சேர்ந்த மாணவர்களேயே மிகச் சிறந்த மாணவர்களாக மிஷனரிகள் கருதுகின்றனர் என்று கூறப்படு கிறது; ஆனால் இப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு விசேடத் தூண்டு தல் அளிப்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்; அவர் கள் மிகவும் இழிவானவர்களாகக் கருதப்படுவது மட்டுமல்லாமல் சமுதாயத்தின் மாபெரும் பிரிவுகளில் மிகக் குறைந்த எண்ணிக்கை யுள்ள பிரிவினரும் ஆவர்; இந்நிலைமையில் நமது கல்வி முறை முதலில் இவர்களிடையே வேரூன்றுமானால், அது ஒருபோதும் மேலும் முன்னேற முடியாது என்று அஞ்சப்படுகிறது; பயனுள்ள அறிவாற்றலைப் பெறுவதில் மற்றவர்களைவிட மேலான நிலையி லுள்ள, ஆனால் மற்ற சாதியினரால் வெறுக்கப்படுகிற, இழிவாகக் கருதப்படுகிற ஒரு புதிய வகுப்பின் தலைமைப் பொறுப்பை நாம் ஏற்க வேண்டிய நிலைமை ஏற்படும். நமது அதிகாரம் இராணுவத்தையும் மக்களில் ஒரு பகுதியினரது பரிவையும் சார்ந் திருப்பது குறித்து நாம் மனநிறைவு அடைவோமானால், அப் போது இத்தகைய நிலைமை விரும்பத் தக்கதாகவே இருக்கும்; ஆனால் இதை இன்னும் விரிந்த பரந்த அடிப்படையில் நிறுவு வதற்குச் செய்யப்படும் ஒவ்வொரு முயற்சிக்கும் இது முரண்பட்ட தாக இருக்கும்.''

5. ஆகவே, பம்பாய் மாநிலத்தில் 1855-ஆம் ஆண்டுக்கு முன்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பள்ளிக்கூடங்கள் ஏதும்

திறக்கப்படவில்லை என்றால், கல்வியின் பலனை ஏழை மேல் சாதியினருக்கு அதிலும் குறிப்பாகப் பிராமணர்களுக்கு வழங்கு வதோடு நிறுத்திக் கொள்வது என்னும் கொள்கையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் திட்டமிட்ட முறையில் கடைப்பிடித்து வந்ததே அதற்குக் காரணம். இந்தக் கொள்கை சரியானதா, தவறானதா என்பது வேறு விஷயம். ஆனால் கல்வியின் அருள் வளத்தைத் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் பகிர்ந்து கொள்வதற்கு அரசாங்கம் அனுமதிக்க வில்லை என்ற உண்மை கண்கூடானது.

## II. 1854 முதல் 1882 வரை

6. 1854 ஜூலை 19-ஆம் தேதியிட்டு அனுப்பிய தங்களது 49-ஆம் எண் விரைவுச் செய்தியில் இயக்குநர்கள் குழு பின் வருமாறு கூறியிருந்தது: ''இதுவரை நாம் ஒரு முக்கியமான விஷ யத்தைப் பெரிதும் அலட்சியப்படுத்தி வந்திருக்கிறோம் என்பதை நாம் ஒப்புக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்; தங்கள் சொந்த முயற்சியால் எத்தகைய கல்விப் போதனையையும் அறவே பெற முடியாதிருக்கும் பரந்த மக்கள் பகுதியினருக்கு வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்துக்கும் உகந்ததான பயனுள்ள, செயல் முறை அறிவை அளிப்பதுதான் அந்த விஷயம்; இப்படிப்பட்ட முக்கியத் துவம் வாய்ந்த விஷயத்தில் இப்போது நாம் கவனம் செலுத்த வேண்டும்; எதிர் காலத்தில் அரசாங்கத்தின் செயலூக்க மிக்க முயற்சிகள் இந்தக் குறிக்கோளின்பால் முக்கியமாகச் செலுத்தப் பட வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்; இந்தக் குறிக் கோளை நிறைவேற்றுவதற்காகக் கணிசமாகக் கூடுதல் செலவினத்தை அனுமதிக்கவும் நாங்கள் தயாராக இருக்கிறோம்: ''இந்தச் செய்தி தான் இந்த நாட்டில் பரந்த மக்கள் பகுதியினரின் கல்வி போத னைக்கு அடித்தளமிட்டதாகக் கருதுவது மிகச் சரியானதே ஆகும். 1882-ல் அமைக்கப்பட்ட இந்தியக் கல்வி குறித்த ஹன்டர் குழுதான் இந்தக் கொள்கையின் பயன்களை முதல் முதலில் ஆரா்ய்ந்தது எனலாம். 28 ஆண்டுக் காலத்தில் என்ன சாதிக்கப் பட்டது என்பதைப் பின்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்:

*ஆரம்பக் கல்வி*
*1881-82*

| | மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த எண் ணிக்கையில் சதவீதம் |
|---|---|---|
| கிறித்துவர்கள் | 1,521 | 0.49 |
| பிராமணர்கள் | 63,071 | 20.17 |
| இதர ஹிந்துக்கள் | 2,02,345 | 64.69 |
| முகமதியர்கள் | 39,231 | 12.54 |

| | மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் சதவீதம் |
|---|---|---|
| பார்சிகள் | 3,517 | 1.12 |
| **ஆதிவாசியினர், மலைஜாதியினர்** | **2,713** | **0.87** |
| **கீழ்ச் சாதி ஹிந்துக்கள்** | **2,862** | **0.87** |
| யூதர்களும் மற்றவர்களும் | 373 | 0.12 |

## இடைநிலைக் கல்வி
## 1881-82

| | | நடுநிலைப் பள்ளிகள் | | உயர்நிலைப் பள்ளிகள் | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் சதவிகிதம் | மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் சதவிகிதம் |
| கிறித்துவர்கள் | .... .... | 1,429 | 12,06 | 111 | 2.26 |
| பிராமணர்கள் | .... .... | 3,639 | 30.70 | 1,978 | 40.29 |
| இதர ஹிந்துக்கள் | சாகுபடியாளர்கள் | 624 | 5.26 | 140 | 2,85 |
| | **கீழ்ச் சாதியினர்** | 17 | 0.14 | — | — |
| | இதர சாதியினர் | 3,823 | 32.25 | 1,573 | 32.04 |
| முகமதியர்கள் | .... .... | 687 | 5.80 | 100 | 2.04 |
| பார்சிகள் | | 1,526 | 12.87 | 965 | 19.66 |
| **ஆதிவாசிகள், மலைசாதியினர்** | .... .... | 6 | 0.05 | — | — |
| யூதர்கள் உட்பட இதரர்கள் | .... .... | 103 | 0.87 | 92 | 0.86 |

## கல்லூரிக் கல்வி
## 1881-82

| | | மாணவர்கள் எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் சதவிகிதம் |
|---|---|---|---|
| கிறித்தவர்கள் | .... .... | 14 | 3 |
| பிராமணர்கள் | .... .... | 241 | 50 |
| இதர ஹிந்துக்கள் | சாகுபடியாளர்கள் | 5 | 1 |
| | **கீழ்ச் சாதியினர்** | 0 | 0 |
| | இதர சாதியினர் | 103 | 21.3 |
| முகமதியர்கள் | .... .... | 7 | 1.5 |
| பார்சிகள் | .... .... | 108 | 21.5 |
| **ஆதிவாசிகளும் மலைஜாதியினரும்** | .... .... | 0 | 0 |
| யூதர்கள் உட்பட இதரர்கள் | | 2 | 0.4 |

7. இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுவது என்ன? பரந்த மக்கள் பகுதியினருக்குக் கல்வி போதனை அளிப்பதே அரசாங்கத்தின் கொள்கையாக இருந்த போதிலும் அப்பகுதியினர் 1854-ஆம்

ஆண்டுக்கு முன்னர் இருந்தது போலவே இப்போதும் கல்வி வசதி பெற முடியாமல் இருந்து வருவதையும், ஹிந்துக்களில் மிகவும் தாழ்ந்த வகுப்பினரும், பூர்விகக் குடியினரும் கல்வித் துறையில் இன்னமும் படுபாதாளத்தில் அமிழ்ந்திருப்பதையும் இந்தப் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன; இதனால் இந்த வகுப்பைச் சேர்ந்த எவருமே இம்மாநிலத்தின் உயர்நிலைப் பள்ளிகளில் அல்லது கல்லூரிகளில் இடம்பெறாதப் பரிதாபக் காட்சியைக் காண்கிறோம். கல்வி விஷயத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை ஏனையோரின் மட்டத்துக்கு உயர்த்த முடியாமல் போனதுக்குக் காரணம் என்ன? இந்தக் கேள்விக்கு விடை காண்பதற்கு இந்த மாநிலத்தின் அரசாங்கம் கடைப்பிடித்து வந்த கல்விக் கொள்கை யின் வரலாற்றை மீண்டும் திரும்பிப் பார்ப்பது அவசியம்.

8. 1854-ஆம் ஆண்டு இயக்குநர்கள் குழு அனுப்பிய செய்தி 40 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு முக்கிய விஷயத்தை முதல் முறை யாக ஒப்புக் கொண்டது: அதாவது பெருமளவிலான மக்களின் கல்விப் பணியை மேற்கொள்வது அரசின் கடமை என்பதை ஏற்றுக் கொண்டது. ஆயினும் இந்தச் செய்தியில் வகுத்துத் தரப் பட்டிருந்த கோட்பாடு விவேகமானதா என்பது குறித்துப் பெரிதும் ஐயப்பாடுகள் கொண்ட கடைந்தெடுத்தப் பிற்போக்காளர்கள் பலர் இருக்கவே செய்தனர்; இந்தக் கொள்கை கைவிடப்பட வேண்டும் என்று அவர்கள் கிளர்ச்சி செய்து வந்தனர். பிற்பட்ட வகுப்பினரை இப்போதைய அவர்களது நிலையிலிருந்து கைதூக்கி விடுவதனால், முன்னேற்றுவதானல் பிரிட்டிஷ் அரசுக்குக் கடுமை யான விளைவுகள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவரான எல்லன்பரோ (Ellenbourogh) போன்ற வர்களைப் பெரிதும் உலுக்கி வந்தது; இதனால் அவர் 1858-ஆம் ஆண்டு ஏப்ரல் 28-ஆம் நாளன்று இயக்குநர்கள் குழுவின் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதினார்; அக் கடிதத்தில் அவர் பின் கண்டவாறு எச்சரிக்கத் தயங்கவில்லை:

''பெருந்தகையீர், 1854-ல் இயக்குநர்கள் குழு அனுப்பிய ஆணையின்படி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கல்வியின் நிலை குறித்து ஆராய்ந்து அண்மைக் காலத்தில் அனுப்பப்பட்டப் பல கடிதங்கள் என் முன்னே இருக்கின்றன. அந்த நாட்டில் தற்போது நிறுவப் பெற்றுள்ள கல்வி அமைப்பினால் எதிர்பார்த்த பலன் கிட்டியுள்ளது என்ற எண்ணத்தை இக் கடிதங்கள் என் னிடம் ஏற்படுத்தவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன் ஆனால் எதிர்பார்க்கப்பட்ட எல்லாக் கட்டண உயர்வும் வசூலிக்கப் பட்டு வருவதாகவே தோன்றுகிறது.

★ ★ ★ ★ ★

''பத்தி 11. கீழ் வகுப்பினர்களை தங்கள் குழந்தைகளை நமது பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பும்படித் தூண்ட வேண்டுமானால்,

நாம் விரும்புகிறபடிக் கல்வியைப் பரப்புவதில் வெற்றிபெற வேண்டுமானால், உழைக்கும் வகுப்பினரின் மனத்தை நடைமுறையில் பெரிதும் பண்படுத்த வேண்டும்; ஆனால் இச்செயலை நாம் அரிதாகவே செய்கிறோம்; அதேசமயம் செல்வந்தர்களை அறியாமையில் மூழ்கிக்கிடக்கச் செய்கிறோம்.

''பத்தி 13. இது ஓர் ஆரோக்கியமான சமுதாய நிலையை உருவாக்கத் துணை புரியாது. நாம் கிளர்த்திவிடும் பேரார்வத்தை நிறைவேற்றக் கூடிய வாய்ப்பு வசதிகளைக் கீழ் வகுப்பினரில் மிகவும் கல்வி அறிவு படைத்த மக்களுக்கு நமது அரசாங்கத்தால் வழங்க முடியாது.

பத்தி 13. நாம் வழங்கிய உயர்தரமான கல்வியின் வாயிலாகப் பரந்த மக்கள் பகுதியினர் மீது மகத்தான செல்வாக்குச் செலுத்தக் கூடிய மிகவும் அதிருப்தியடைந்த ஏழைகளைக் கொண்ட ஓர் அமைப்பினை நாம் உருவாக்க வேண்டும்.

பத்தி 14. கல்வியும் பண்பாடும் மேல் வகுப்பினரிடமிருந்து கீழ் வகுப்பினரை வந்தடைய முடியும்; இதன்மூலம் சமூகத்திற்குப் புதிய உத்வேகத்தை ஊட்ட முடியும்; ஆனால் அவை ஒருபோதும் கீழ் வகுப்பினரிடமிருந்து மேல் வகுப்பினரைச் சென்றடைய முடியாது; கீழ் வகுப்பினரிடையே மட்டும் இவற்றை வளர்த்தோமானால், அது பரவலான அமளிக்கும் குழப்பத்துக்கும்தான் இட்டுச் செல்லும்; அயல்நாட்டினர்தான் இதற்கு முதலில் பலியாவார்கள்.

பத்தி 15. கல்வியைப் பரப்ப நாம் விரும்பினால் அதனை முதலில் மேல் வகுப்பினருக்கு வழங்க முயற்சிக்க வேண்டும்.

பத்தி 16. இதனைச் செய்வதற்கு இரண்டு வழிகள்தான் உள்ளன—ஒன்று, மேல்வர்க்கத்தினரை மட்டுமே அனுமதிக்கும் கல்லூரிகளை நிறுவ வேண்டும்; இரண்டு, படைத்துறையைச் சீரமைக்கும்போது, மேல் வகுப்பைச் சேர்ந்த தகுதியானவர்களுக்கு உயர் பதவிகளை (Commissions) வழங்க வேண்டும்.''

9. ஐரோப்பிய அதிகாரிகள் தீண்டாதார்பால் காட்டிவந்த இந்த வெறுப்புணர்ச்சிக்கு இந்திய அமைச்சர் 1859-ஆம் ஆண்டு அனுப்பிய ஆணையில் இறுதியில் முடிவு கட்டினார்; மக்களது கல்வியைப் பரப்புவதில் அரசுக்குள்ள பொறுப்பை அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

10. மக்கள் அனைவருக்கும் கல்வி வசதி அளிப்பது தனது பொறுப்பு என்று ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசு அளித்த உறுதிமொழி வெறும் கண்துடைப்புதான் என்று கூறினால் அது வியப்பளிப்பதாகத் தோன்றலாம். ஆனால் உண்மை அதுதான்: ஏனென்றால், பல்வேறு மாவட்டங்களில் பரந்த மக்கள் பகுதியினருக்காகப் பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்ட போதிலும், ஒடுக்கப்

பட்ட மக்களின் குழந்தைகளை இப்பள்ளிக்கூடங்களில் அனுமதிக்கும் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாமலேயே இருந்தது. இத்தகைய பிரச்சினை 1856-ஆம் ஆண்டில் எழுந்தது. ஆனால் அரசு மேற்கொண்ட முடிவு ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சாதகமாக இல்லை. பம்பாய் மாநிலத்தின் பொதுக் கல்வி இயக்குநர் அளித்த 1856-57-ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் காணப்படும் பின் கண்ட பகுதிகளிலிருந்து இதனைத் தெரிந்து கொள்ளலாம்:

*''பத்தி 177. கீழ்ச் சாதியினருக்கும் காட்டுச் சாதியினருக்குமான பள்ளிக்கூடங்கள். அரசு தன் பொறுப்பில் நேரடியாக நிறுவிய கீழ்ச் சாதிப் பள்ளிக்கூடங்கள் ஏதுமில்லை; மைய அரசு இத்தகைய பள்ளிக்கூடங்கள் அமைக்கப்படுவதை ஏற்கவில்லை. முற்றிலும் அரசின் ஆதரவில் நடைபெறும் சாதாரணப் பள்ளிக்கூடங்கள் எத்தகைய பாகுபாடுமின்றி எல்லாச் சாதியினருக்குமே கொள்கை அளவில் திறந்துவிடப்பட்டுள்ளன. 1855-56-ஆம் ஆண்டுக்கான என்னுடைய அறிக்கை பற்றி அரசு கருத்துத் தெரிவிக்கும் போது, பின்கண்ட ஆணையைப் பிறப்பித்தது: ''அரசினர் பள்ளிகளில் கீழ்ச் சாதி மாணவர்களை அனுமதிக்கும் பிரச்சினை ஒரே ஒரு சந்தர்ப்பத்தில்தான் அரசிடம் எழுப்பப்பட்டது; அது ஒரு மஹர் சிறுவன் தொடர்பானதாகும்; 1856 ஜூனில் அவன் சார்பில் ஒரு விண்ணப்பம் முன்வைக்கப்பட்டது; வழக்கமானப் பள்ளிக் கட்டணங்களைச் செலுத்துவதற்கு அவன் தயாராக இருந்த போதிலும் தார்வார் அரசினர்ப் பள்ளியில் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அந்த விண்ணப்பத்தில் முறையிடப் பட்டிருந்தது.*

*''கொள்கை அளவிலான ஓர் உரிமை குறித்துத் தாங்கள் கொண்டுள்ள கருத்துகளும் எந்த மக்களுக்கு மிகக் கூடுமானவரை கல்வி அறிவை ஊட்ட வேண்டுமென்பதற்காக கல்வித்துறை நிறுவப்பெற்றிருக்கிறதோ அந்த மக்களின் பொது உணர்வுகளும் முரண்படக்கூடிய ஒரு பிரச்சினையில் முடிவெடுக்க வேண்டிய ஒரு பெரிய நடைமுறைச் சிக்கல் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசுக்கு ஏற்பட்டது; குறிப்பிட்ட சாதியினரைச் சேர்ந்த மாணவர்கள் மட்டுமே பயிலும் ஒரு பள்ளியில் தன்னை அனுமதிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ள ஒரு மஹர் சிறுவனுக்காக, ஒரு தனி நபருக்காக அந்தக் கல்வி நிலையத்தை நடைமுறையில் ஏராளமான மக்களுக்குப் பயனற்றதாக்குவதும், அவனை அவர்களுடன் கட்டாயமாகப் பிணைப்பதும் சரியல்ல என்று முடிவு செய்யப் பட்டது; அச்சமயம் ஓரளவு தயக்கத்துடன் ஏற்கப்பட்ட தீர்மானத்திலிருந்து* இதனைத் தெரிந்து கொள்ளலாம்.''*

---

* 1856 ஜூலை 21-ஆம் நாளன்று அரசு மேற்கொண்ட தீர்மானத்தின் வாசகம் வருமாறு:—

1. கடிதப்போக்குவரத்தில் விவாதிக்கப்பட்டுள்ள இந்தப் பிரச்சினை மிகவும் நடைமுறைச் சிக்கல் வாய்ந்த ஒரு பிரச்சினையாகும்.

1857 ஜனவரி 23-ஆம் தேதியிட்டு இந்திய அரசு அனுப்பிய 111-ஆம் எண்ணுள்ள கடிதத்தில் இந்த விஷயத்தில் பம்பாய் அரசின் நடவடிக்கைகள் குறித்துப் பின்கண்டவாறு குறிப்பிடப் பட்டுள்ளது:

''இந்த விஷயத்தில் பம்பாய் அரசு அநேகமாக விவேகத்துடன் நடந்து கொண்டுள்ளது என்றே நிர்வாக சபையுடன் கூடிய கவர்னர்-ஜெனரல் கருதுகிறார்; ஆனால் வங்க மாநிலத்தில் எந்த அரசினர் பள்ளியிலும் இந்தச் சிறுவனுக்கு அனுமதி மறுக்கப் பட்டிருக்காது என்று நான் (இந்திய அரசின் செயலாளர்) கூற விரும்புகிறேன்.''*

இந்தக் கடிதம் கிடைப்பதன் பேரில், சாதி விஷயத்தில் நடை முறையிலிருப்பதைவிடக் குறைந்த அளவில் ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடெங்கிலுமுள்ள பள்ளிக்கூடங்களுக்கு எந்த வசதிகளைச் செய்து தருவதையும் இந்த அரசு அலட்சியப்படுத் தாது என்று இந்திய அரசுக்கு உறுதி கூற முடிவு செய்யப்பட்டது; ஆனால் அரசினர்ப் பள்ளிகள் பொதுவாக இகழ்ச்சிக்கே உள் ளாகாதபடியும், அவற்றின் திறமை நசித்துப் போகாதபடியும், எந்த நோக்கங்களுக்காக அவை அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கங்கள் தோல்வியுறாதபடியும் இது செய்யப்பட வேண்டும். அரசினர்ப் பள்ளிகளைப் பொதுவாக சிறந்த முறையில் பயன் படுத்திக் கொள்ளும் கோட்பாடு வங்காளத்தில் எவ்விதம் செயல் படுத்தப்பட்டு வருகிறது என்பது குறித்தும் ஆய்வு செய்வதைனத் தீர்மானிக்கப்பட்டது.

---

2. மஹர் விண்ணப்பதார் பக்கம், கொள்கை அளவில் நியாயம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை; தார்வாரிலுள்ள கல்வி வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடி தற்போது அவரைத் தடுக்கும் பாரபட்சப் போக்குகள் விரைவிலேயே நீங்கும் என்று அரசு நம்புகிறது.

3. ஆனால் காலங்காலமாய் இருந்துவரும் இந்தப் பாரபட்சப் போக்குகளில் ஒரு சில நபர்களுக்காக அதிரடியான முறையில் தலையிடுவது கல்வி லட்சியத்திற்கு மிகப் பெரும் தீங்கை விளைவிக்கக்கூடும் என்பதையும் அரசு கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது. விண்ணப்பதாரருக்கு இப்போது ஏற்படக்கூடிய பாதிப்பு அரசினால் ஏற்படக்கூடிய பாதிப்பன்று; மாறாக அவரது வேண்டுகோளின்படி அவருக்கு ஆதரவாக இந்தப் பாரபட்சங்களை மூர்க்கத்தனமாக அகற்றுவதால் ஏற்றபடக்கூடிய பாதிப்பாகத்தான் இருக்கும்.

* இயக்குநர்கள் குழு 1855 ஏப்ரல் 28-ஆம் தேதியிட்டு அனுப்பிய தனது 58-ஆம் எண் விரைவுச் செய்தியில் பின்கண்ட உத்தரவைப் பிறப்பித்திருந்தது: ''அரசின் கல்வி நிலையங்கள் எல்லா வகுப்பினருக்கும் பயன்பட வேண்டும் என்பதே நமது நோக்கம்; மிக முக்கியமான இந்தச் சிறந்த கோட்பாட்டிலிருந்து நாம் விலகிச் செல்ல முடியாது; இந்தக் கோட்பாட்டைப் பாதுகாப்பதற்கே முதலிடம் தர வேண்டும். இந்தக் கோட்பாட்டைச் செயல்படுத்துவதால் சில சந்தர்ப்பங்களில் மாணவர்களில் ஒரு பகுதியினர் பள்ளி யிலிருந்து வெளிவரலாம்; இது நடை பெறக்கூடியதே. ஆனால் இந்தக் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்துவதை எதிர்ப்பவர்கள் தாங்கள் அளித்து வரும் நிதி உதவி களை நிறுத்திக் கொள்வதற்கும், வேறுபட்டதொரு அடிப்படையில் அமைந்த பள்ளிக் கூடங்களை உருவாக்கி அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் அவர்களுக்கு உரிமை உண்டு என்பதை நாம் அவர்களிடம் சொல்லிவிட வேண்டும்.''

11. வங்காளத்தில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைப் பற்றி ஆய்வு நடத்தியதில் ஒரு விஷயம் தெரிய வந்துள்ளது: அதாவது தாழ்ந்த சாதி மாணவர்களுக்கு அனுமதி வழங்குவதையோ அல்லது மறுப்பதையோ பற்றி உள்ளூர் மக்களின் உணர்ச்சிகளுக்கு ஏற்ப முடிவு செய்யும் பொறுப்பை மாவட்டக் கல்விக் குழுக்களுக்கு வங்க அதிகாரிகள் இந்திய அரசின் கருத்துக்கு மாறாக விட்டு விட்டனர் என்பதை இந்த ஆய்வு புலப்படுத்தியுள்ளது. இதன் விளைவு என்ன? அரசு தனது குடிமக்கள் அனைவரின் நலன் களுக்காக ஏற்றி வைத்த அறிவு விளக்கின் முன் அமர்வதற்கு தாழ்த்தப்பட்ட மக்களைத் தீண்டத்தக்கவர்கள் அனுமதிக்க மறுத்த காரணத்தால் அவர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு வந்தனர்.

12. இத்தகைய சூழ்நிலைமையில் 1854-ஆம் ஆண்டுச் செய்தி யில் குறிப்பிடப்பட்டிருந்த, மக்கள் அனைவருக்கும் கல்வி என்ற கோட்பாடு ஒடுக்கப்பட்ட வகுப்பினர் தவிர இதர எல்லா மக்களுக் கும் நடைமுறையில் பயன்படுவதாக இருந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் கல்வி வசதி பெறுவதற்கு இருந்த தடை 1854-ல் நீக்கப் பட்டது, என்றாலும் அந்த நீக்கம் பெயரளவில் மட்டுமே இருந்தது. கல்வி பெறும் உரிமையை எவருக்கும் மறுக்கக் கூடாது என்ற கோட்பாடு அரசால் உறுதி செய்யப்பட்ட போதிலும், அந்தக் கோட்பாட்டை நடைமுறையில் செயல்படுத்துவது மிகக் கவன மாகத் தவிர்க்கப்பட்டு வந்தது; இதனால் இந்தத் தடை நடைமுறை யில் தொடர்ந்து நீடித்து வந்தது என்றே சொல்ல வேண்டும்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கல்வி குறித்து அக்கறை செலுத் திய ஒரே அமைப்பு கிறித்துவ சமயப் பரப்பாளர் அமைப்பே யாகும். மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டனின் சொற்களில் கூறு வதானால் ''தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத்தான் மிகச் சிறந்த மக்களாக'' அவர்கள் கருதினர். ஆனால் மத விஷயத்தில் நடு நிலைமைக் கொள்கையைக் கடைப்பிடிக்க அரசு உறுதி பூண் டிருந்ததால், அவர்கள் மிஷன் (Mission) பள்ளிகளை ஆதரிக்க வழியில்லாமல் போயிற்று. 1854 ஆண்டுக் கல்வி சம்பந்தமாக அனுப்பப்பட்ட செய்தியில் மிஷன் பள்ளிகளுக்கு மான்யம் அளிப் பது தடைசெய்யப்படவில்லையானாலும் இந்தக் காலகட்டத்தின் ஆரம்ப ஆண்டுகளில் இந்த மாநிலத்தில் எந்த மிஷன் பள்ளிக் கூடங்களுக்கும் பண உதவி அளிக்கப்படவில்லை.

13. இந்த இக்கட்டிலிருந்து விடுபடுவதற்கு அரசு இரண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டது: (1) கீழ்ச் சாதிக் குழந்தைகளுக் காகத் தனியாக அரசினர்ப் பள்ளிகளை அமைப்பது; (2) மிஷனரி அமைப்புகள் கல்விப் பணியைத் தொடர்ந்து நடத்தி வரும் பொருட்டு, மான்ய உதவி விதிகளைத் தளர்த்தி, அவற்றுக்கு விசேட ஊக்கமளிப்பது. இந்த இரண்டு நடவடிக்கைகளும் எடுத் துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றால், தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மிகக் குறைந்த அளவு பலனைக்கூட அளித்திருக்

காது; 1882-ல் ஹண்ட்டர் (Hunter Commission) கமிஷன் மேற்கொண்ட கணிப்பு இதனைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது.

## III. 1882 முதல் 1928 வரை

1882-ஆம் ஆண்டுக்குப் பிறகு, 1923-ஆம் ஆண்டு பம்பாய் மாநிலத்தின் கல்வி வரலாற்றில் அடுத்தத் திருப்புக் கட்டத்தைக் குறிக்கிறது. அந்த ஆண்டில்தான் தொடக்கக் கல்வியானது மாநில அரசுகளின் கட்டுப்பாட்டிலிருந்து உள்ளாட்சி அமைப்புக்களின் கட்டுப்பாட்டுக்கு மாற்றப்பட்டது. ஆகவே, 1923-ஆம் ஆண்டில் இருந்த நிலைமையை மதிப்பிடுவது இங்குப் பொருத்தமாக இருக்கும். கல்வித் துறை முன்னேற்றத்தில் 1923-ஆம் ஆண்டில் பல்வேறு வகுப்பினரும் எய்தியிருந்த நிலையைப் பின்வரும் விளக்க அட்டவணை இரத்தினச் சுருக்கமாக எடுத்துரைக்கிறது:

| மாநிலத்தில் வகுப்புவாரியாக* மக்கள் தொகை | மக்கள் தொகை தொடர்பான வரிசை முறை | கல்வித் தொடர்பான வரிசை முறை | | |
|---|---|---|---|---|
| | | ஆரம்பக் கல்வி | இடைநிலைக் கல்வி | கல்லூரிக் கல்வி |
| முன்னேறிய ஹிந்துக்கள் | 4 ஆவது | 1 ஆவது | 1 ஆவது | 1 ஆவது |
| நடுத்தர ஹிந்துக்கள் | 1 ஆவது | 3 ஆவது | 3 ஆவது | 3 ஆவது |
| பிற்பட்ட ஹிந்துக்கள் | 2 ஆவது | 4 ஆவது | 4 ஆவது | 4 ஆவது |
| முஸ்லீம்கள் | 3 ஆவது | 2 ஆவது | 2 ஆவ்து | 2 ஆவது |

15. கல்வி விஷயத்தில் இந்தப் பல்வேறு வகுப்பினரும் அடைந்துள்ள முன்னேற்றத்தில் மிகப் பெரும் வேறுபாடு நிலவுவதை மேலே உள்ள அட்டவணையிலிருந்த தெரிந்து கொள்ளலாம். மக்கள் தொகை அடிப்படையிலும், கல்வியில் அவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தின் அடிப்படையிலும் அமைந்த வரிசை முறைப்படி இந்தப் பிரிவுகளை ஒப்பு நோக்கிப் பார்த்தால், மக்கள் தொகையில் முதல் இடத்திலுள்ள ''நடுத்தர ஹிந்துக்கள்'' கல்லூரிக் கல்வியிலும், இடைநிலைக் கல்வியிலும், ஆரம்பக் கல்வியிலும் மூன்றாவது இடத்தில் இருப்பதைக் காணலாம்.

* பம்பாய் அரசின் கல்வித் துறை இந்த மாநிலத்தின் மக்களை நிர்வாக வசதிக்காக நான்கு வெவ்வேறு பிரிவுகளுக்காகப் பிரித்திருந்தது. இவற்றில் ஒரு பிரிவில் பிராமணர்களும் அவர்களையொத்த சாதியினரும் அடங்கியிருந்தனர்; இவர்கள் ''முன்னேறிய ஹிந்துக்கள்'' என்று அழைக்கப்பட்டனர். மராத்திர்களும் அவர்களையொத்த சாதியினரும் ஒரு தனிப்பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டு ''நடுத்தர ஹிந்துக்கள்'' என்று குறிப்பிடப்பட்டனர். மக்கள்தொகையில் எஞ்சிய பகுதி தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரைக் கொண்டதாக இருந்தது; மலைச் சாதியினரும் குற்றப் பரம்பரை சாதியினரும் தனி வகுப்பினராக அமைந்து ''பிற்பட்ட வகுப்பினர்'' என்ற மெயரைப் பெற்றனர். இந்த மூன்று பிரிவினரைத் தவிர இந்த மாநிலத்தையும் சிந்துவையும் சேர்ந்த முஸ்லீம்கள் நான்காவது பிரிவினராயினர்.

மக்கள் தொகையில் மூன்றாவது இடத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கல்லூரிக்கல்வியிலும், இடைநிலைக் கல்வியிலும், ஆரம்பக் கல்வியிலும் நான்காவது இடத்தில் அதாவது கடைசி இடத்தில் உள்ளனர். இதே போன்று மக்கள் தொகையில் இரண் டாவது இடத்திலுள்ள முஸ்லீம்கள் கல்லூரிக் கல்வியிலும், இடை நிலைக் கல்வியிலும், ஆரம்பக் கல்வியிலும் இரண்டாவது இடத் தில் இருக்கின்றனர்; ஆனால் அதேசமயம் மக்கள் தொகையில் நான்காவது இடத்திலுள்ள ''முன்னேறிய ஹிந்துக்கள்'' கல்லூரிக் கல்வியிலும் சரி, இடைநிலைக் கல்வியிலும் சரி, ஆரம்பக் கல்வி யிலும் சரி முதல் இடத்தை ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். இவற்றை எல்லாம் கருத்திற் கொண்டு பார்க்கும்போது, 1882-ஆம் ஆண்டு இருந்த நிலைமையில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்பட வில்லை என்று துணிந்து கூறலாம்.

16. பம்பாய் மாகாணத்தின் பொதுக்கல்வி இயக்குநர் 1923-24-ஆம் ஆண்டுக்கு அளித்த அறிக்கையின் அடிப்படையில் அமைந்த மேலே கண்ட விவரங்கள் பல்வேறு வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்தில் காணப்படும் வேறுபாட்டை மட்டுமே வெளிப்படுத்துகின்றன. ஆனால் பல்வேறு வகுப்பினரின் கல்வித் தரத்தில் காணப்படும் இந்த ஏற்றத்தாழ்வு மிக அதிக அளவில் இல்லாதிருந்திருந்திருந்தால், இது சிறு விஷயமாகவே கருதப் பட்டிருக்கும். இந்த வேறுபாட்டின் அளவைத் தெரிந்து கொள் ளாமல் நாம் எந்த முக்கிய முடிவுக்கும் வர முடியாது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நிலைமையைத் தெளிவுப்படுத்தும் பொருட்டே பின்கண்ட விளக்க அட்டவணை இங்குத் தரப்படு கிறது:

**அட்டவணை**

| வகுப்புவாரியாக மக்கள் தொகை | ஆரம்பக்கல்வி வகுப்பு வாரி மக்கள் தொகையில் 1,000 பேருக்கு மாணவர் கள் விகிதம் | இடைநிலைக்கல்வி, மக்கள் தொகை யில் 1,00,000 பேருக்கு மாணவர் கள் விகிதம் | கல்லூரிக்கல்வி, மகைகள் தொகை யில் 2,00,000 பேருக்கு மாணவர் கள் விகிதம் |
|---|---|---|---|
| முன்னேறிய ஹிந்துக்கள் | 119 | 3,000 | 1,000 |
| முஸ்லீம்கள் | 92 | 500 | 52 |
| நடுத்தர வகுப்பினர் | 38 | 140 | 14 |
| பிற்பட்ட வகுப்பினர் | 18 | 14 | இல்லை (அல்லது அப்படியே இருந்தா லும் அநேகமாக ஒருவர்) |

17. ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றில் ஒவ்வொரு வகுப்பினரும் மற்ற வகுப்பினர்களிட

மிருந்து எவ்வளவு தூரம் முன்னணியில் உள்ளனர் என்பதை மேலே உள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. இந்த மாநிலத் தில் உள்ள பல்வேறு வகுப்பினரிடைக் காணப்படும் ஏற்றத் தாழ்வின் வீச்சையும் இவை புலப்படுத்துகின்றன. அது மட்டு மன்று, இவர்க்ளில் சில வகுப்பினரின் நிலை மிகவும் அதிர்ச்சி அளிப்பதாக இருப்பதையும் இவை வெளிப்படுத்துகின்றன. மேலே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இரண்டு உண்மைகள் விவாதத்திற்கிடமற்ற முறையில் மிக முனைப் பதாகத் தெரிகின்றன: (1) இந்த மாநிலத்திலுள்ள பிற்பட்ட வகுப் பினர்களின் கல்வி நிலை மிகவும் வருந்தத்தக்கதாக, இரங்கத்தக்க தாக உள்ளது. மக்கள் தொகையில் அவர்கள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றனர். ஆனால் கல்வி விஷயத்திலோ அவர்கள் கடைசி இடத்தில் மட்டுமின்றி, மிகமிகக் கீழான இடத்திலும் உள்ளனர்; (2) இந்த மாநிலத்தைச் சேர்ந்த முஸ்லீம்கள் கல்வித் துறையில் மிக நீண்ட அடிகள் எடுத்து வைத்து வெகு தூரம் முன்னேறியுள்ளனர்; இதனால் மிகக் குறுகிய 30 ஆண்டுக் காலத்தில் அவர்கள் நடுத்தர வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர் போன்ற இதர வகுப்பினர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு முன்னேறி இருப்பதோடு, பிராமணர்களையும் அவர்களைப் போன்ற சாதியினரையிம் கூட நெருங்கி வந்து விட்டனர்.

18. இதற்குக் காரணம் என்ன? பல்வேறு சமூகத்தினரை ஏற்றத்தாழ்வான முறையில் நடத்தும் அரசின் கொள்கையே இதற்குக் காரணம்; இதுதான் இந்த நிரந்தரமானக் கேள்விக்கு நாம் மீண்டும் அளிக்கும் பதிலாகும். இரண்டு வகுப்பினர், ஒருவருடன் ஒருவரை ஒப்பிடும்போது, எவ்விதம் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்பதைக் கல்வி குறித்த ஐந்தாண்டு அறிக்கையிலிருந்து எடுக்கப் பண்ட பின்வரும் பகுதிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கல்வி விஷயத்தில் முஸ்லீம்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என்பது குறித்து மூன்றாவது ஐந்தாண்டு அறிக்கையில் (1892-1896) இடம்பெற்றுள்ள பின்வரும் கருத்துக் கள் குறிப்பிடத்தக்கவையாகும்:

''பம்பாயில் முஸ்லீம்களின் கல்வி தொடர்பான புள்ளி விவரங்களைப் பொறுத்த் வரையில்.... 'பாதகமான சந்தர்ப்ப சூழ்நிலைமைகள் இல்லாதிருந்திருந்திருந்ததால் எண்ணிக்கை அதிகரிப்பு இன்னும் பெரிய அளவில் இருந்திருக்கும், என்று இயக்குநர் எழுதுகிறார். மக்களில் ஏனைய பகுதியினரைவிட முஸ்லீம்கள் பொது நிறுவனங்களை அதிக அளவில் பயன் படுத்திக் கொள்கின்றனர் என்பது பம்பாயில் நீண்ட காலமாகவே ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயமாகும். முஸ்லீம்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கு என்ன செய்யப்பட்டுள்ளது என்ற பொதுப் படையான பிரச்சினையைப் பொறுத்தவ்ரையில் இயக்குநர் பின் கண்டபடி எழுதுகிறார்:

‘முதலாவதாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு முஸ்லீம் அதிகாரி துணைக் கண்காணிப்பாளராகவோ அல்லது உதவித் துணைக் கண்காணிப்பாளராகவோ நியமிக்கப்பட்டுள்ளார்; கைரா, ஷோலாப்பூர், ஹைதராபாத் ஆகிய இடங்களில் மூன்று முஸ்லீம் பட்டதாரிகள் துணைக் கண்காணிப்பாளர்களாக இருக் கின்றனர்; நான்காவது பட்டதாரி வருவாய்த் துறையில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு, முஸ்லீம் மக்களுடன் அரசுப் பணியாளர்கள் தொடர்பு கொண்டிராத எந்த மாவட்ட முமே இல்லை எனலாம். பம்பாய், கராச்சி, ஜுனாகத் (கத்திய வாரிலுள்ள ஒரு முஸ்லீம் சமஸ்தானம்) ஆகிய இடங்களில் முஸ்லீம்களுக்காக, சலுகைக் கட்டணங்கள் கொண்ட உயர்நிலைப் பள்ளிக்கூடங்களைத் திறக்கச் சிறப்பான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. வேறு பல இடங்களில் முஸ்லீம் கழகங் களான அஞ்சுமான்கள் சிறுசிறு பள்ளிக்கூடங்களை ஆரம்பித்து நடத்தி வருகின்றன. கல்வித்துறை அவர்களுடைய நன்மைக்காக விசேட வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது; சில பகுதிகளில் பிரத்தியேகப் பள்ளிக்கூடங்களை நடத்தி வருகிறது; மாநில மற்றும் உள்ளாட்சி உபகாரச் சம்பளங்களில் மூன்றிலொரு பங்கு அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இவையன்றி, கான் பகதூர் காகி ஷாபுதீன் (பரோடாவில் ஒரு காலத்தில் திவானாக இருந்த வர்) நிறுவிய சிறப்பு உபகாரச் சம்பளங்கள் வேறு இருக்கின்றன; சிந்துவில் கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் உணவுக் காகக் கைர்பூர் சமஸ்தானத்தின் வாரிசு சில குறிப்பிட்ட எண் ணிக்கையுள்ள உதவிச் சம்பளங்களை நிறுவினார். (இந்த உபகாரச் சம்பளம் மாதம் 25 ரூபாய் மதிப்புடையதாக இருந்த போதிலும், சென்ற வருடம் இவற்றை நிரப்புவதற்கு மிகவும் சிரமப்பட்டு விட்டேன்). ஆரம்பப்பள்ளிகளில் கட்டணங்கள் விஷயத்தில் முஸ்லீம்களுக்கு மிகுந்த சலுகைக் காட்டப்படுகிறது. பயிற்சிப் பள்ளிகளில் சேருவதற்கு அவர்கள் பெரிதும் ஊக்குவிக்கப்படு கின்றனர்; ஹிந்துக்கள் தேர்வுகள் எழுதுவதற்கு முன்பே அவர்கள் தேர்வுகள் எழுதுவதற்குத் தனி விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன... பம்பாயிலுள்ள கூட்டுப்பள்ளிக் குழு ஒரு முஸ்லீம் துணைக் கண்காணிப்பாள்ரை நியமித்து, முஸ்லீம்களின் கல்வியை ஊக்கு விப்பதற்கு அண்மையில் தனி முயற்சிகளை மேற்கொண்டுள் ளது......’’

19. தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி குறித்து ஐந்தாவது ஐந்தாண்டு (1902-07) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துகளை இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் அந்த அறிக்கை கூறுவதாவது:

‘‘959. பம்பாய்—பம்பாயின் மத்திப் பிரிவில் கீழ்ச் சாதி மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் இலவசமாக அனுமதிக்கப்படுகின் றனர்; அவர்களுக்குப் புத்தகங்கள், கற்பலகைகள் முதலியவையும்

இலவசமாக வழங்கப்படுகின்றன.... கத்தியவாரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மூன்று குழந்தைகள் மட்டுமே கல்வி கற்று வருகின்றனர். தெற்குப் பகுதியில் இவர்களுக்கென 72 தனிப் பள்ளிக்கூடங்கள் அல்லது வகுப்புகள் நடத்தப்படுகின்றன; இவற்றில் பெரும்பாலானவை தகுதிபெற்ற ஆசிரியர்களின் கீழ் உள்ளன.''

20. இத்தகைய ஏற்றத்தாழ்வான அணுகுமுறைக்கு ஹண்டர் கமிஷனின் (Hunter Commission) பரிந்துரைகளே அடிப்படைக் காரணம். முஸ்லீம்கள் விஷயத்தில் அது செய்துள்ள பரிந்துரைகளைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள் தொடர்பாக அது செய்துள்ள பரிந்துரைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அது எவ்வளவு ஓரவஞ்சனையாக நடந்து கொண்டுள்ளது என்பது தெரியவரும். முஸ்லீம்கள் சம்பந்தமாக அது 17 பரிந்துரைகளைக் கூறியுள்ளது. அவற்றில் பின்கண்டவை கவனத்திற்குரியவை ஆகும்:

(1) முஸ்லீம்களின் கல்விக்குத் தனி ஊக்கமளிப்பதை உள்ளாட்சி, நகராட்சி, மாநில நிதி உதவியுடன் நடைபெற வேண்டிய ஒரு சட்டப்பூர்வமான க்டமைப் பொறுப்பாகக் கருத வேண்டும்.

(7) முஸ்லீம்களின் ஆங்கிலக் கல்வி தாராளமாக ஊக்குவிக்கப்பட வேண்டும்; இவ்வகையான கல்வி தொடர்பாகத்தான் அச் சமூகத்திற்குச் சிறப்பான உதவி தேவைப்படுகிறது.

(8) படிப்படியாக அமைந்த விசேட உதவிச் சம்பள முறை முஸ்லீம்களுக்கென நிறுவப்பட வேண்டும்; அவை (அ) ஆரம்பப்பள்ளிகளில் தொடங்கி நடுநிலைப் பள்ளிகள் வரையிலும் (ஆ) நடுநிலைப் பள்ளிகளில் தொடங்கி உயர்நிலைப் பள்ளிகள் வரையிலும், பின்னர் (இ) மெட்ரிக்குலேஷன், முதலாண்டுக் கலைத்துறைத் தேர்வுகளின் முடிவுகள் அடிப்படையில் கல்லூரிகள் வரையிலும் இந்த உதவிச் சம்பளங்கள் வழங்கப்பட வேண்டும்.

(9) பொது நிதிகளிலிருந்து பராமரிக்கப்படும் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், வகுப்புகளிலும் மாணாக்கர்களுக்கான மான்ய உதவிகளில் (Studentships) குறிப்பிட்ட விகிதாசாரத்தை முஸ்லீம் மாணவர்களுக்குக் கட்டாயம் ஒதுக்க வேண்டும்.

(10) முஸ்லீம்களின் நலனுக்காக அறக்கொடை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு, அரசின் நிர்வாகத்தின்கீழ் செயல்பட்டு வரும் இடங்களில், இந்த நிறுவனங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் கிடைக்கும் நிதியை முஸ்லீம்

இதேபோன்று பரந்த மனப்பான்மையோடு நடந்து கொண்டிருக்க வேண்டும்; அதுதான் நியாயம், ஆனால் ஹண்டர் கமிஷனோ தாழ்த்தப்பட்ட மக்களை அதல பாதாளத்தில் தள்ளிவிட்டது; அப்படித் தள்ளப்பட்ட இடத்திலேயே அவர்கள் விழுந்து கிடந்தனர்; அரசு அவர்கள்பால் எத்தகைய கவனத்தையும் செலுத்தவில்லை; அவர்களை ஏறிட்டும் பார்க்கவில்லை. டில்லி, 1913 பிப்ரவரி 21 என்று தேதியிட்டு இந்திய அரசின் கல்வித் துறை வெளியிட்ட தீர்மானத்தை இந்த அப்பட்டமான அலட்சியப் போக்குக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இந்திய அரசின் மிக முக்கியமான தீர்மானங்களில் இதுவும் ஒன்றாகும். பல்வேறு மாநிலங்களில் கல்வி அமைப்புகளை விரிவுபடுத்துவதற்கு, செழுமைப்படுத்துவதற்கு மத்திய அரசின் வருவாயிலிருந்து பெருந்தொகைகளை மானியமாகக் கொடுத்து உதவுவதற்கு மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது ''நிரந்தரக் குடியிருப்பு சமூகத்தினரதும்'', முஸ்லீம் சமூகத்தினரதும் கல்வித் தேவைகளை அவர்கள் முக்கியமாக மாநில அரசுக்குச் சுட்டிக்காட்டியிருந்தனர். ஆனால் இந்தத் தீர்மானத்தில் எந்த ஓர் இடத்திலும் அவர்கள் பிற்பட்ட வகுப்பினர்களைப் பற்றி ஒரு வார்த்தைகூடக் குறிப்பிடவில்லை. பம்பாய் அரசு உடனடியாக இந்த யோசனைகளை ஏற்று, முஸ்லீம்களிடையே கல்வியைப் பரப்புவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து கூறுவதற்கு 1913-ல் ஒரு முஸ்லீம் தலைமையில் குழு ஒன்றை அமைத்தது. 1913-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்திய அரசு வழங்கிய பெரும் மானியங்கள் யாவும் 1912 ஜனவரி 6-ஆம் நாளன்று, கல்கத்தாப் பல்கலைக் கழகம் வாசித்தளித்த வரவேற்புரைக்குச் சக்கரவர்த்திப் பெருமகனார் பதிலளித்தபோது வெளியிட்ட பிரகடனத்தை நிறைவேற்றும் வகையில் அளிக்கப்பட்ட மானியங்களே ஆகும் என்பதை உணரும் எவரும், இத்தகைய குரூரமான புறக்கணிப்பு ஆண்டு நியாயமாகக் கடும் சீற்றம் கொள்ளவே செய்வர். பிரகடனத்தில் சக்கரவர்த்தி கூறியிருந்ததாவது:

''நாடெங்கும் ஏராளமான பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும் நிறுவப்பட வேண்டும், நம்பிக்கையான, வீறுமிக்க, பயனுள்ள குடிமக்கள் அவற்றிலிருந்து உருவாக வேண்டும், தொழில்துறையிலும் வேளாண்மைத் துறையிலும், இதர சகல துறைகளிலும் அவர்கள் வலுவாகக் காலூன்றிப் புகழ்பெற்று விளங்க வேண்டும் என்பது என் விருப்பம். எனது இந்தியக் குடிமக்களின் இல்லங்கள் ஒளி பெற வேண்டும், அறிவொளி பரவுவதன் மூலம் அவர்களது உழைப்பு இனிமையுற வேண்டும், இதனைத் தொடர்ந்து, மிக உன்னதமான சிந்தனை வளமும், வாழ்வும், வசதிகளும், ஆரோக்கியமும் பெருக வேண்டும் என்பதும் என் விருப்பமாகும், கல்வியின் மூலமே எனது இந்த விருப்பம் நிறைவேற முடியும். இந்தியாவின் இந்தக் கல்வி லட்சியம் என்றென்றும் என் இதயத்துக்கு மிக நெருக்கமாக இருந்துவரும்.''

## IV 1923 ஆண்டுக்குப்பிறகு

23. சீர்திருத்தச் சட்டம் 1921-ல் நடைமுறைக்கு வந்தது. கல்வியானது ஓர் அமைச்சரின் பொறுப்பில் மாற்றப்பட்ட துறையாக ஆயிற்று; அவரது வழிகாட்டுதலில் கல்வித் துறையில் துரித முன்னேற்றம் ஏற்படும் என்று இயல்பாகவே எதிர்பார்க்கப் பட்டது. ஆயினும் கல்வித்துறையை அமைச்சர்களின் பொறுப்புக்கு மாற்றுவதன் மூலம் தங்களுக்கு ஏதேனும் பயன் இருக்குமா என்பது குறித்துப் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஐயம் இருக்கவே செய்தது. ஏனென்றால் அவர்கள் கல்வி விஷயத்தில் ஏற்கெனவே அதிகாரவர்க்கத்திடம் மிகவும் அவதிப்பட்டவர்கள், பெருந் தொல்லைக்குள்ளானவர்கள். முதல் கட்டத்தில் கல்வியின் பலன்களை அனுபவிக்க அதிகாரவர்க்கத்தினர் அவர்களை அனுமதிக்கவில்லை. இரண்டாவது கட்டத்தில் அவர்கள் கல்வி வசதி பெற அதிகார வர்க்கத்தினர் உதவிவில்லை. எனினும் கல்வி வசதி பெறப் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு உரிமை உண்டு என்ற கோட்பாட்டை வெளிப்படையாக மறுக்கும் துணிச்சல் அவர்களுக்கு இல்லை. அதிகார வர்க்கத்தினரின் இடத்துக்கு வருவதற்காகப் போராடிக் கொண்டிருந்த இந்திய அறிவுத் துறையினர் வெளிப்படுத்திய அதே அறிவெழுச்சியை பிற்பட்ட வகுப்பினரால் வெளிப்படுத்த முடியவில்லை. பிற்பட்ட வகுப்பினருக்கு எந்த அரங்கில் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள் இல்லையோ அந்த அரங்கைத்தான் இந்திய அறிவுத்துறையினர் தங்களது அடித்தளமாகக் கொண்டிருந்தனர். இதனால் கடந்த காலத்தை மீண்டும் நிகழ்காலத்தில் அனுபவிக்க வேண்டிவருமோ என்று அவர்கள் அஞ்சினர்; ஐயம் கொண்டனர்.

24. துரதிர்ஷ்டவசமாக அவர்களது ஐயங்கள் மெய்யாயின; சீர்திருத்தங்களின் கீழ், பம்பாய் மாநிலத்தில் அவர்களது நிலைமை முன்னிலும் மோசமடைந்தது; அவர்கள் நிலை நரக நிலையாயிற்று. இது இப்போதைய நிலை குறித்த மிகக் கடுமையான கருத்துரையாக, மதிப்பீடாக இருக்கலாம். ஆனால் கட்டாய ஆரம்பக்கல்விச் சட்டத்தினால் (1923-ஆம் ஆண்டுப் பம்பாய்ச் சட்டம் எண் IV) பம்பாய் மாநிலத்தில் பிற்பட்ட வகுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலையை வேறு எந்தச் சொற்களாலும் வருணிக்க முடியாது. இந்தக் கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டத்தை மிக முக்கியமான ஒரு பொருளில், அர்த்தத்தில் ஒரு "மோசடி" என்று கூறலாம். இதன் முன்னர் சுயவிருப்ப அடிப்படையில் அமைந்திருந்த ஆரம்பக் கல்வியைக் கட்டாயமாக்குவதே இந்தச் சட்டத்தின் நோக்கம் என்று கூறப்பட்டது. ஆனால் உண்மையில் இச்சட்டம் அப்படி எதையும் செய்துவிடவில்லை. சட்டத்தின் 10-ஆவது பிரிவே இந்த "மோசடியை" அம்பலப்படுத்தப் போதுமானது. ஆரம்பக் கல்வி அமைப்புமுறை முன்னர் போலவே சுயவிருப்ப அடிப்படையிலேயே அமைந்துள்ளது; இனியும் காலங்காலமாக

அவ்வாறே நீட்டித்து இருந்துவரும். ஆரம்பக் கல்வியைக் கட்டாய மாக்கும் கடமைப் பொறுப்பு எதுவும் சட்டத்தில் இல்லை; அது மட்டுமன்று, இந்தக் கடமைப் பொறுப்பை நிறைவேற்றுவதற்கான காலக்கெடுவும்கூடச் சட்டத்தில் நிர்ணயிக்கப்படவில்லை. இது மட்டுமல்லாமல், இந்தக் கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம் ஆரம்பக் கல்வியைக் கண்காணிக்கும் நிர்வாக அமைப்பில் ஒரு மட்டுமீறிய மாற்றத்தையும் செய்துள்ளது. ஆரம்பக் கல்வியைக் கண்காணிக்கும், நிர்வகிக்கும் அதிகாரம் இதுவரை மாநில அரசிடம் இருந்து வந்தது; ஆரம்பக் கல்விக்கான செலவு முழுவதும் மாநில வருவாய்களிலிருந்தே ஈடு செய்யப்பட்டு வந்தது; ஊராட்சி அமைப்புகள் சில குறிப்பிட்ட இனங்களிலிருந்து கிடைக்கும் வருவாயில் மூன்றிலொரு பங்குக்குச் சமமான ஒரு சிறு தொகையை மட்டுமே ஆரம்பக் கல்விக்காகக் கொடுத்து வந்தன. ஆனால் கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டத்தின்படி, இந்த ஏற்பாடு தலை கீழாக மாற்றப்பட்டுள்ளது. ஆரம்பக் கல்வியைக் கண்காணிப்பதும் நிர்வகிப்பதும் இப்போது மாவட்டக் கல்வி வாரியங்களிடம் (இவை மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கமிட்டிகளாகும்) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; உள்ளாட்சி அமைப்புகள் மாநில அரசுக்கு மானியத்தொகை அளிப்பதற்குப் பதிலாக, மாநில அரசு தான் இனி மாவட்டப் பள்ளி வாரியத்துக்கு மானியத் தொகை வழங்க வேண்டும். இவ்விதம் ஏட்டிக்குப் போட்டியாக அமைந் திருக்கிறது இந்த மாற்றம். இந்த மாற்றத்தின் காரணமாக, இப் பள்ளி வாரியங்கள் தனது சொந்த நிர்வாக அதிகாரியை நிய மித்துக் கொள்ளும் அதிகாரம் பெற்றுள்ளன — பம்பாய் நகராட்சி போன்ற முன்னேற்றமடைந்த அமைப்புக்குக்கூட இந்த அதிகாரம் மறுக்கப்பட்டுள்ளது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

25. இந்த மாற்றம் மிகவும் தீவிரமான மாற்றம் என்றும், இந்த மாநிலத்தின் நலன்களுக்கு, அதிலும் குறிப்பாகப் பிற்பட்ட வகுப் பினர்களின் நலன்களுக்கு அது பெரும் தீங்கு விளைவிக்கும் என்றும் சபா கருதுகிறது. கல்வி வசதி பெறும் இன்றியமையாதத் தேவையை மக்களில் எல்லா வகுப்பினர்களும் இன்னமும் பூர்த்தி செய்துகொள்ளவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண் டும். கல்வி என்பது பிராமணர்களைத் தவிர வேறு எவருடைய அக்கறைக்குரியதுமன்று என்ற கருத்து எங்கும் நிலவுவதைப் பார்க் கிறோம். அரசியலில் ஈடுபட்டுள்ள ஒரு சிலர்தான் கல்வியைப் பரப்புவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். கல்வி அறிவில்லாத பல கிராமவாசிகளைக் கொண்டுதான் கல்வி வாரியங்களை அமைக்க வேண்டியிருக்கும். கல்வி பிராமணர்கள் மட்டுமே கவலைப்பட வேண்டிய விஷயம் என்று எண்ணும் மரபில் வளர்ந்து ஆளானவர்கள் இந்தக் கிராமவாசிகள், எனவே, கல்வி விஷயத்தில் இவர்கள் அத்தனை அக்கறை காட்ட மாட்டார்கள்; கல்வியைக் கட்டாயமாக்குவதை எதிர்க்கவும் செய்வார்கள்; இது முற்றிலும் இயல்பே. ஆகையால் கல்வி இன்னும் சிறிது காலத்

திற்கு மாநில அரசின் பொறுப்பில், கல்வியின் தேவையை உணர்ந்த அரசியல்வாதிகள் அநேகமாக அங்கம் வகிக்கக் கூடிய சட்ட மேலவையின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து வரவேண்டும். கல்வியை கல்வித் துறையிடமிருந்து பள்ளி வாரியங்களுக்கு மாற்றுவது நம்பகமானவர்களின் கரங்களிலிருந்து தகுதியற்றவர்களின் கரங்களுக்கு அதனை மாற்றுவதையே குறிக்கும். இத்தகைய மாற்றம் பொதுவாகக் கல்வியின் முன்னேற்றத்துக்கு, குறிப்பாகப் பிற்பட்ட வகுப்பினரின் நலன்களுக்கு மிகுந்த தீங்கு விளைவிக்கும். மக்களில் பெரும்பாலோர் கல்வியில் நம்பிக்கை வைத்துள்ளனரா, இல்லையா என்பது குறித்து ஓரளவு ஐயம் இருக்கக் கூடும்; ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்: பிற்பட்ட வகுப்பினர்களின் கல்வியில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை; இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஆரம்பக் கல்வியைச் சமூகத்தின் கீழ்நிலை வகுப்பினருக்கு விரிவுப்படுத்துவது குறித்து மேல்நிலை வகுப்பினரின் மனப்போக்கு என்ன? இது பற்றி ஹண்டர் கமிஷன் கூறியிருப்பதாவது' ''கீழ்ச்சாதி சிறுவர்களைப் பள்ளியில் அனுமதிப்பதற்குக் கடுமையான எதிர்ப்பு இருப்பதாகப் பல சாட்சிகள் பதிலளித்துள்ளனர். செருமன்கள் என்னும் பண்டைய அடிமைச் சாதியினருக்காக கள்ளிக் கோட்டையில் அமைக்கப்பட்டிருக்கும் பள்ளிக்கூடம் பற்றிச் சென்னையைச் சேர்ந்த ஒரு சாட்சிப் பின்வருமாறு கூறுகிறார்: இச்சாதியைச் சேர்ந்த சிறுவர்கள் பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும்போது நாகர்களும், தியாங்களும் வழியிலேயே அவர்களை மடக்கி அவர்களது புத்தகங்களைப் பறித்துக் கொள்கின்றனர் என்று குறிப்பிடுகிறார்.... இந்த விஷயம் குறித்து நாங்கள் விவாதித்து வந்தபோது, ஒன்றை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தனர்: அதாவது, பம்பாயையும் மத்திய மாநிலங்களையும் சேர்ந்த சில பகுதிகளில் கீழ்ச் சாதியினருக்குக் கல்வி போதிப்பதைக் கிராம சமூகத்தினர் வன்மையாக எதிர்க்கின்றனர்; இந்தக் கீழ்ச்சாதி மக்கள் கல்வி கற்றால் வாழ்க்கையில் முன்னேறி விடுவார்கள், இதனால் தற்போதைய கொத்தடிமைத்தன நிலையிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள அவர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுவிடுவார்கள் என்பதுதான் இந்த எதிர்ப்புக்குக் காரணம் என்று எங்களிடம் தெரிவிக்கப்பட்டது. பம்பாய்ப் பொதுக் கல்வி இயக்குநர் 1896-97-ஆம் ஆண்டுக்கான தமது அறிக்கையில் கைரா மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார்: அங்கு உள்ளூர் அதிகாரிகள் கீழ்ச்சாதி மாணவர்களைப் பள்ளிகளில் சேர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொண்டனர். இதனால் ஐந்து அல்லது ஆறு பெரிய பள்ளிக்கூடங்கள் ஆண்டுக் கணக்கில் மூடப்பட்டன; ஒரு கிராமத்தில் கீழ்ச்சாதி மக்களின் குடிசைகள் சுட்டெரிக்கப்பட்டன; அவர்களுடைய பயிர்கள் நாசமாக்கப்பட்டன; அந்தக் கிராமத்தில் இரண்டாண்டுக் காலத்துக்குப் பலத்த தண்டக் காவல் நிலையத்தை அமைக்கும்படி ஆயிற்று.''

**26.** கிராம சமூகத்தினரின் போக்கு இவ்வாறு இருக்கும் போது, பெரும்பாலும் அந்தச் சமூகங்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டே அமைக்கப்பட்ட பள்ளி வாரியங்கள் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினருக்குக் கல்வி வசதிகளைச் செய்துதரும் தம் பொறுப் பின்னை நம்பிக்கையோடு நிறைவேற்றும் என்று எப்படி எதிர் பார்க்க முடியும்? பிற்பட்ட வகுப்பினரின் கல்வியை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பள்ளி வாரியங்களுக்கு அளிப்பது குற்றவாளியை நீதிபதி பீடத்தில் அமர்த்துவது போன்றதாகத்தான் இருக்கும். எனவே, ஆரம்பக் கல்வியின் நிர்வாகத்தைப் பள்ளி வாரியங் களுக்கு மாற்றியத்தைக் கண்டித்துப் பிற்பட்ட வகுப்பினர்கள் ஆங்காங்குத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருப்பதில் வியப்பேதும் இல்லை, தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களின் பிரதிநிதிகள் கல்வி வாரியங்களில் போதிய எண்ணிக்கையில் இடம்பெற்றிருந்தால் ஓரளவு அவர்களுக்கு நிம்மதி கிடைத்திருக்கும். கவுன்சில் முதல் உள்ளாட்சி அமைப்புகள் வரையிலான சுயாட்சி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப் பதற்கு அரசு மேற்கொண்டு வரும் திட்டம் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. தனது அருங்காட்சியகத்தில் ஒவ்வொரு இனத்திலும் ஒரு வகை மாதிரிக்கு மேல் வைக்க விரும்பாத ஓர் அருங்காட்சி யகக் காப்பாளரைப் போல்தான் அரசு நடந்து கொள்கிறது. சுமார் 40 உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட உள்ளாட்சி அமைப்பில் பிற்பட்ட வகுப்பினர்களைச் சேர்ந்த ஒரே ஒரு உறுப்பினரைத்தான் அரசு நியமிக்கிறது. இதேபோன்று தான், தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரிடமிருந்து ஓர் உறுப்பினரை இணக்கத் தேர்வு (கோ-ஆப்ட்) முறையில் பள்ளிக்கூட வாரியத்துக்கு நியமித் துக் கொள்ளும்படி பணிக்கப்பட்டுள்ளது. இணக்கத் தேர்வு முறை யில் தவறான நபர் நியமனம் பெறும் அபாயம் எப்போதும் உள்ளது. அண்மையில் நடைபெற்ற பள்ளிக்கூட வாரியத் தேர்தல் களில் கிழக்குக் காந்தேஷைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அந்தக் கசப்பான அனுபவம் ஏற்பட்டது. ஆனால் சரியான நபர் இணக்கத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் கூட ஒரு பள்ளி வாரியத்தின் அதிகப்பட்ச எண்ணிக்கையான 15 பேர் அடங்கிய, குரோத உணர்ச்சி கொண்ட ஒரு குழுவில், ஒரு தனி நபர் என்ன செய்து விடமுடியும்?

**27.** தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வியை மேம்படுத்தும் விஷ யத்தில் அரசு உண்மையிலேயே நேர்மையாக இருக்குமானால், அது சில நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பாக அரசு என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து சபாவுக்குச் சில சொந்தக் கருத்துக்கள் உண்டு. அவற்றை யோசனை கள் வடிவத்தில் இங்குத் தருகிறோம்:

(1) கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம் நீக்கப்பட வேண் டும்; ஆரம்பக் கல்வியைக் கல்வி வாரியங்களுக்கு மாற்றுவது

நிறுத்தப்பட வேண்டும்; இல்லையெனில் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினரின் கல்வி மிகப் பெரும் பின்னடைவை அடையும் என்று சபா அஞ்சுகிறது.

(2) ஆரம்பக்கல்வி விஷயத்தில் கட்டாயத் தன்மையை ஒரு கடமைப் பொறுப்பாக்க வேண்டும்; ஆரம்பப் பள்ளிகளில் மாணவர்களை அனுமதிப்பதைக் கண்டிப்பான முறையில் செயல்படுத்த வேண்டும்; இல்லையெனில் பிற்பட்ட வகுப்பினரின் கல்வி முன்னேற்றத்திற்கு இன்றியமையாத நிலைமைகள் உருவாக மாட்டா.

(3) முஸ்லீம்களின் கல்வி தொடர்பாக ஹண்டர் கமிஷன் செய்துள்ள பரிந்துரைகளைத் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினர்களுக்கும் பயன்படுத்த வேண்டும்; இல்லையெனில் அவர்களது கல்வி முன்னேற்றத்தைச் சாதிக்க இயலாது.

(4) அரசுப் பணிகளில் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினர் சேருவதற்கான வாய்ப்பு உறுதி செய்யப்பட வேண்டும்; இல்லையெனில் கல்வி கற்க வேண்டும் என்ற தூண்டுதல் அவர்களுக்கு இருக்காது.

28. சீர்திருத்தங்களின் கீழ் இந்த மாநிலத்தின் கல்வி நிர்வாகத்தால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து இந்தக் கருத்துக்களைத் தெரிவிக்கும் அதே சமயம், மேற்கல்விக்குச் சில உபகாரச் சம்பளங்கள், மாணவர் விடுதிகள் போன்ற வடிவத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் கல்விக்காகச் சில விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதையும் சபா மறந்து விடவில்லை. ஆனால் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியை உறுதி செய்யும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாலொழியத் தாழ்த்தப்பட்ட மக்களின் மேற்கல்விக்காக வசதிகள் செய்து தருவதில் எந்தப் பயனும் இல்லை என்பதைச் சபா சுட்டிக்காட்ட விரும்புகிறது. மேலும், இத்தகைய சலுகைகள் நீடிக்கும் என்ற உத்தரவாதமும் இல்லை. அதேசமயம், கல்வித் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் குறிப்பிட்ட அமைச்சரின் கொள்கையையும், சட்ட மேலவையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ள வாக்குரிமைப் பலத்தையும் இவை பெருமளவுக்குச் சார்ந்துள்ளன; இந்த இரண்டுமே நிச்சயமற்ற அம்சங்களாகும்; எனவே அவற்றை நம்பியிருக்க முடியாது.

இ

# பம்பாய் மாநிலத்தில் சிறுபான்மையினர் என்ற முறையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான உத்தரவாதங்கள், அவை மாநில தன்னாட்சியின் கீழ் நிறைவேற்றப்பட பம்பாய்ச் சட்ட மன்றத்தின் அமைப்பில் மாற்றங்கள், மற்றும் பெற வேண்டிய உத்தரவாதங்கள் பற்றிய

# அறிக்கை

இந்தியச் சட்டப்படி அமைந்த கமிஷனுக்குப்

**பகிஷ்கிரிதா ஹிதகாரணி சபா**
(பம்பாயின் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நிறுவனம்)

*சார்பில்*

**டாக்டர் பீம்ராவ் ஆர். அம்பேத்கர்,** எம்.ஏ.,
பி.ஹெச்.டி., டி.எஸ்ஸி., பார்-அட்-லா
(சட்ட மேலவை உறுப்பினர், பம்பாய்)

*சமர்ப்பித்தது*

29, மே 1928
தாமோதர் ஹால்
பரேல், பம்பாய்—12
இந்தியா.

## I போதுமான பிரதிநிதித்துவம் மூலம் பாதுகாப்பு

1. *முன்னுரை:* சட்டப் பேரவை அமைந்த கமிஷனில் ஓர் இந்தியரை நியமிக்கப் போவதில்லை என்ற நாடாளுமன்றத்தின் முடிவு சபாவை ஒரு பெரும் கவலையிலிருந்து விடுவிக்கிறது. ஒரு பொது இந்தியக் கோரிக்கையான தன்னாட்சி — அரசாங்கம் பற்றி கமிஷன் விசாரிப்பதாக இருந்தால், ஓர் இந்தியரை நியமிக்கக் கோரும் கிளர்ச்சி நியாயமாக இருந்திருக்கும். இந்தக் கமிஷன் ஒரு கோரிக்கையை மட்டுமல்ல, நாட்டில் நிலவும் பல்வேறுபட்ட நலன்களின் கோரிக்கைகள் பலவற்றையும் ஆராய வேண்டியிருக்கிறது. உண்மை இவ்வாறு இருக்கும்போது இத்தகைய நலன்கள் எல்லாவற்றிற்கும் பிரதிநிதித்துவ வேண்டுமென்பதற்காகக் கிளர்ச்சி இருந்திருக்க வேண்டும். தங்கள் நலன்க்ள் உள்ளிட்ட, நாட்டிலுள்ள பல்வேறு நலன்களைப் பிரதிபலிக்கும் இந்தியர்கள் நியமிக்கப்பட்ட வேண்டுமென்பதை விட வேறு எதுவும் அதிகம் தன்னைத் திருப்திபடுத்தியிருக்க முடியாது என்று சபா சுட்டிக் காட்ட விரும்புகிறது. இந்தக் கமிஷனில் பிரதிநிதித்துவத்திற்கான கோரிக்கை அத்தகையதாக இல்லாததால், இந்தக் கோரிக்கையுடன் சபா உடன்பட முடியாது. தன்னுடைய கருத்துக்களுக்கேற்ப, கமிஷனில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவத்திற்காக, சபா கிளர்ச்சி செய்திருக்க வேண்டுமெனினும், அது அவ்வாறு செய்யவில்லை என்பதும் உண்மை. இஃது ஏனெனில், நாட்டின் விவகாரங்களுக்குப் பொறுப்புள்ளோராகிய வைசிராய் முதல் இறுதிவரை உள்ளோர் கூச்சல் போடும் சிலரை ஏற்பதும், ஊமைகளாய் இருக்கும் இலட்சோப லட்சம் மக்களை மறப்பதும் என்ற பழக்கத்தை வளர்த்துக் கொண்டுள்ளது என்று சபா கருதியதால்தான் அவர்களிடம் இதை எதிர்பார்ப்பது மிக அதிகம் என்று எண்ணுகிறது. பர்க்கின் வார்த்தைகளில் கூற வேண்டுமெனில், செடிகளின் அடியில் உள்ள வெட்டுக் கிளிகள் கூக்குரலிடுவது போல், அரை டஜன் அரசியல்வாதிகள் தங்களின் கூக்குரலை மீண்டும் மீண்டும் எழுப்புகின்றனர். அதே சமயம் கருவேல மரத் தடியில் பல்லாயிரக்கணக்கான ஆடு-மாடுகள் அசைபோட்டுக் கொண்டிருப்பது போல், பொதுமக்கள் சப்தம் போடாமல் அமைதியாக இருக்கிறார்கள். சத்தம் போடும் அரசியல்வாதிகள் தான் அரசாங்கத்தில் உள்ளவர்கள் — அவர்களில் பலர் உள்ளனர் — என்று இந்திய அரசு கருதுகிறது. தன்னுடைய கருத்துக்களைச் சபா வலியுறுத்தாதற்கு வேறு ஒரு காரணமும் இருந்தது. சபாவின் அபிப்பிராயம் இந்தியர்கள் சட்டப்படி அமைந்த இந்தக் கமிஷனில் மக்களுக்குக்கிடைத்த சிறு அளவிலான கருணையால் அல்ல என்பது. அவர்கள் (இந்தியர்கள்) கமிஷனில் நியமிக்கப் படாததால், தங்களின் நிலைபற்றித் தவறான கருத்து ஏற்பட விருந்த நிலையிலிருந்து தாழ்த்தப்பட்டோர் தப்பினர்; அவர்களின் நிலைமை பற்றிக் கமிஷன் முன்பு வைக்க சபா பொறுப்பேற்றுள்ளது.

2. 1919-ல் தாழ்த்தப்பட்டோருக்கு இழைக்கப்பட்ட அநீதி: ''எந்தக் கருத்துகளின் மீது உலகின் மற்றைய பாகங்களில் பிரதி நிதித்துவம் பெறும் அமைப்புகள் உள்ளனவோ அந்தக் கருத்துக் களுக்கு ஒவ்வாத இந்திய சமுதாயத்தின் ஓர் அம்சம்'' சமூகப் பாகு பாடுகளும் பிரிவுகளும் இருப்பது என்பதை மாண்டேகு-செம்ஸ் போர்டு அறிக்கை முற்றிலுமாக ஏற்றது (பத்தி 151). ''இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பிற இடங்களில் உள்ள மக்களுக்கு அமைந்த பொறுப்புள்ள அரசாங்க உருவங்கள், இந்திய வாழ்க்கை யின் விசேஷ நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றாக அமைய வேண் டும்'', என்றும் அந்த அறிக்கையின் கர்த்தாக்கள் கருதினர் (பத்தி 153). இந்தச் சீர்திருத்தங்கள் அமலாக்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினரை அமைதிபடுத்த அவர் களின் நலன்களைப் பாதுகாக்க ஒப்புக் கொண்டவர்; இந்த அறிக்கையின் 155 பத்தியிலுள்ள கீழ்க்கண்ட வாசகம் இதை எடுத்துக் காட்டும்: ''விவசாயிக்கு அரசியற் கல்வி அளிப்பது மிக வேகமாக நடக்க முடியாத ஒன்று என்றும் அது ஒரு மிகக் கடின மான, படிப்படியான வளர்ச்சிப் போக்கு என்றும் நாங்கள் எடுத் துக் காட்டியுள்ளோம். அது முடியும் வரை அவரை (விவசாயியை) விட வலுவான, கெட்டிக்காரர்களின் கொடுமைக்கு அவரை ஆளாக்குகிறோம்; அவரின் நலனை அவருடைய கைகளிலே ஒப்படைக்கும் வரை, அவர் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்திச் சட்டமன்றம் ஆராயும் வரை, அவரைப் பாதுகாக்கும் பொறுப்பை நம்மிடம் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்தவரை, அவர்களே முடிவாகத் தற்காப்புப் பாடத்தைக் கற்பதற்கு வழிவகுக்கும் முறையில் அவர்களின் பிரதி நிதித்துவத்திற்கு ஒரு சிறந்த ஏற்பாட்டைச் செய்யக் கருதியுள்ளோம். ஆனால், அவர்கள் நலன்கள் பாதிக்கப்படுகின்றன என்றால், பொதுவான முன்னேற்றத்தில் அவர்கள் பங்கு பெறவில்லையென் றால், அவர்களுக்கு உதவ, நம் கையில் தேவையான அதிகாரத்தை வைத்துக் கொள்ள வேண்டும்.....''

3. பின்பு அமைக்கப்பட்ட சவுத்பரோ கமிட்டி இந்த வாக் குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டது; இது வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் முறை. தொகுதிகளைப் பிரிப்பது, பொறுப்புள்ள எத்தகைய அரசு இந்தியாவில் நிலவும் பிரத்தியேக நிலைமை களுக்கு ஏற்ப—எந்த மாற்றங்களுடன் அமைய வேண்டும் என்பது பரிந்துரை செய்வது ஆகியவற்றிற்காக நியமிக்கப்பட்டது. ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக எத்தகைய வழிமுறைகள் தேவை என்பது பற்றி முற்றிலும் பாரா முகமாக இது இருந்து விட்டது; இதில் அதிகம் அக்கறை கொள் ளாத இந்திய அரசுங் கூட இந்தக் கமிட்டியின் அறிக்கை பற்றிய தங்கள் குறிப்பில் (பத்தி 13) கீழ்க்கண்டவாறு குறிப்பிட வேண்டிய தாயிற்று: ''பொதுவாக அதிகாரபூர்வமற்ற நியமனத்தை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் ஒரு சமூகம் பற்றி, கமிட்டி

அளித்ததை விட மிக அதிகமான முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென எங்களுக்குத் தோன்றுகிறது.. தாழ்த்தப்பட்ட வகுப் பினரின் பிரச்சினையை இந்திய அரசியல் சட்ட சீர்திருத்தம் பற்றிய அறிக்கை தெளிவாகப் புரிந்து கொண்டதோடு, அவர் களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும் வாக்குறுதி அளித்தது. கமிட்டியின் அறிக்கையில் 'இந்துக்கள் — மற்றவர்கள்' என்று குறிப் பிட்டுள்ள சாதிகள், அவை பல்வேறு பெயர்களில் அழைக்கப் பட்டாலும், பரந்த அடிப்படையில் குறிப்பிட வேண்டுமானால், அவர்கள் எல்லாம் ஒரே மாதிரியானவர்களே. ஒதுக்கி வைக்கப் படுவதின் கடுமையில் உள்ள வேறுபாடுகளைத் தவிர, அவர்கள் எல்லோரும் அநேகமாகச் சென்னை (மாநில) பஞ்சமர்கள் நிலை யில்தான் உள்ளனர்; ஆலயங்களில் நுழைவதற்கு அனுமதிக்கப் படும் இந்து சமூகத்தின் பிரிவினர்களாக அவர்கள் இல்லை. மொத்த மக்கள் தொகையில் அவர்கள் ஐந்தில் ஒரு பங்கினர்; மார்லி-மின்டோ மன்றங்களில் அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. கமிட்டியின் அறிக்கை இருமுறைத் தாழ்த்தப் பட்ட வகுப்புகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது. அதுவும் அவர் களுக்குத் திருப்திகரமான வகையில் வாக்காளர் தொகுதிகள் வழங்கப்படாத போது, நியமனத்திற்கான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்று விளக்குவதற்காகத்தான். இந்த மக்களின் நிலை பற்றியோ, தங்கள் நலனை தாங்களே கவனித்துக் கொள்ள அவர்களுக்கு திறமை உள்ளதா என்பது பற்றியோ அது விவாதிக்க வில்லை. நியமனம் செய்யப்படுவதற்கு அவர்களுக்கு எத்தனை இடங்கள் ஒதுக்க வேண்டுமென அது பரிந்துரை செய்கிறது என்பது பற்றியும் அது குறிப்பிடவில்லை. வாக்குரிமைக் குழுவின் அறிக்கையில் 24-ஆவது பத்தியில் நியமிக்கப்படும் இடங்களின் எண்ணிக்கை குறுக்கப்பட்டதை நியாயப்படுத்துவதற்கான கார ணங்களில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரை குழு கவனத்தில் கொண் டுள்ளது என்றும் கூறவில்லை. இந்த வகுப்பினருக்குப் பிரதிநிதித் துவம் அளிக்கப் போவதாக அவர்கள் செய்துள்ள பரிந்துரை களைப் பற்றிக் கீழே காணலாம்.

| மாநிலம் | | மொத்த மக்கள் தொகை (லட்சத்தில்) | தாழ்த்தப் பட்ட வகுப் பினரின் எண்ணிக்கை (லட்சத்தில்) | மொத்த இடங்கள் | தாழ்த்தப் பட்டவர் களுக்கான இடங்கள் |
|---|---|---|---|---|---|
| சென்னை | ... | 39.8 | 6.3 | 120 | 2 |
| பம்பாய் | ... | 19.5 | 0.6 | 113 | 1 |
| வங்காளம் | ... | 45.0 | 9.9 | 127 | 1 |
| ஐக்கிய மாகாணம் | ... | 47.0 | 10.1 | 120 | 1 |
| பஞ்சாப் | ... | 19.5 | 1.7 | 85 | — |

| மாநிலம்<br><br>மாநிலம் | மொத்த மக்கள் தொகை<br>(லட்சத்தில்) | தாழ்த்தப் பட்ட வகுப் பினரின் எண்ணிக்கை<br>(லட்சத்தில்) | மொத்த இடங்கள் | தாழ்த்தப் பட்டவர் களுக்கான இடங்கள் |
|---|---|---|---|---|
| பீஹாரும் ஒரிஸ்ஸாவும் ... | 32.6 | 9.3 | 100 | 1 |
| மத்திய மாகாணம் ... | 12.0 | 3.7 | 72 | 1 |
| அஸ்ஸாம் ... | 6.0 | 0.3 | 54 | — |
| மொத்தம் ... | 221.4 | 41.9 | 791 | 7 |

''இந்தப் புள்ளிவிவரங்களே நிலைமையை விளக்குகின்றன. பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பாகம் உள்ள இவர்களுக்குக் கிட்டதட்ட 800 மொத்த இடங்களில் 7 மட்டுமே ஒதுக்க வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகிறது. சட்ட மன்றங்களில் ஆறுக்கு ஒன்று என்ற விகிதத்தில் அதிகாரிகள் இடம் பெறுவர்; இந்த அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைக் கவனத்தில் கொள்வார்கள் (?) என எதிர்பார்க்கப் படலாம்; சீர்திருத்தங்கள் பற்றிய அறிக்கையின் நோக்கம் இவ்வாறான ஏற்பாடல்ல என நாங்கள் கருதுகிறோம். தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ளும் வகையைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் குறிப்பிட்டிருந்தனர். சட்டமன்றத்தில் 60 முதல் 90 சாதி இந்துக்கள் இருக்கும் போது தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் ஒருவரை மட்டும் சேர்த்துவிட்டு மேற்சொன்ன பயனை எதிர்பார்ப்பது விசித்தரமான கற்பனைதான். அறிக்கையின் 151, 152, 154, 155 பத்திகளின் கோட்பாடுகளை அமலாக்க வேண்டுமெனில், தீண்டப்படாத சாதியினரை மிக அதிகமான பெருந்தன்மையுடன் நாம் நடத்த வேண்டும்....''

1919-ஆம் ஆண்டின் சீர்திருத்தத் திட்டம் தயாரித்தவர்களால் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றிய தனது கருத்தில் சபா தனித்து இல்லை என மகிழ்கிறது. சீர்திருத்தத் திட்டத்தை அபிவிருத்தி செய்து விரிவாக்குவதற்கு உள்ள வேறுபாட்டுக் கூறுகளைப் பற்றி ஆலோசனை கூறுவதற்காக இரு ஆண்டுகளுக்குப் பின் நியமிக்கப்பட்ட முடிமன் கமிட்டியும் இதே கருத்தை வெளியிட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவம் போதுமானதல்ல என்று அது தனது அறிக்கையில் (பத்தி 64) ஒப்புக் கொள்கிறது.

*5. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அவசியம் அளிக்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவத்தின் அளவு:* தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவம், போது

மானது என்று சொல்லக்கூடிய அளவு எவ்வளவு இருக்க வேண்டும்? சபாவின் அபிப்பிராயப்படி, பம்பாய் மாநிலச் சட்டமன்றத்தில்—சிந்து இம்மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு விடும் என்ற அடிப்படையில்—கீழ்க்கண்டபடி பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டால் அது தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கோரிக்கையைத் திருப்திப் படுத்தும் என்று கருத முடியும்.

### I. பம்பாய் மாநிலத்திற்கு (சிந்து நீக்கி) பம்பாய்ச் சட்டமன்றத்தின் இயைபு

| தேர்தல் தொகுதிகள் | | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | முஸ்லீம் களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | மராத்தியர் களுக்கும் அவர்களுடன் இணைந்த சாதிகளுக்கும் ஒதுக்கப் பட்டவை |
|---|---|---|---|---|---|
| I. பொது | | | | | |
| (அ) நகர்ப்புறம் | | | | | |
| 1. பம்பாய் நகரம் வடக்கு | ... | 5 | 1 | 1 | இப்பொழுது உள்ளது போலவே |
| 2. பம்பாய் நகரம் தெற்கு | ... | 3 | — | — | |
| 3. அகமதாபாத் நகரம் | ... | 3 | 1 | 1 | |
| 4. சூரத் நகரம் | ... | 1 | — | — | |
| 5. ஷோலாப்பூர் நகரம் | ... | 3 | 1 | 1 | |
| 6. புனே | ... | 1 | — | — | |
| (ஆ) கிராமப்புறம் வடக்குப்பிரிவு | | | | | |
| 7. அகமதாபாத் மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 8. பரோச் மாவட்டம் | ... | 4 | 1 | 1 | |
| 9. கைரா மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 10. பஞ்ச்மகால் மாவட்டம் | ... | 4 | 1 | 1 | |
| 11. சூரத் மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 12. தானா மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| மத்தியப்பிரிவு | | | | | |
| 13. அகமத்நகர் மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 14. கந்தேஷ் கிழக்கு மாவட்டம் | ... | 6 | 1 | 1 | |
| 15. கந்தேஷ் மேற்கு மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 16. நாசிக் மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |
| 17. புணே மாவட்டம் | ... | 6 | 1 | 1 | |
| 18. சதாரா மாவட்டம் | ... | 6 | 1 | 1 | |
| 19. ஷோலாப்பூர் மாவட்டம் | ... | 5 | 1 | 1 | |

| தேர்தல் தொகுதிகள் | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | முஸ்லீம்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் | மராத்தியர்களுக்கும் அவர்களுடன் இணைந்த சாதிகளுக்கும் ஒதுக்கப் பட்டவை |
|---|---|---|---|---|
| தெற்குப்பிரிவு | | | | |
| 20. பெல்காம் மாவட்டம் ... | 5 | 1 | 1 | இப்பொழுது உள்ளது போலவே |
| 21. பீஜப்பூர் மாவட்டம் ... | 5 | 1 | 1 | |
| 22. தார்வார் மாவட்டம் ... | 6 | 1 | 1 | |
| 23. கனரா மாவட்டம் ... | 4 | 1 | 1 | |
| 24. கொலாபா மாவட்டம் ... | 4 | 1 | 1 | |
| 25. ரத்னகிரி மாவட்டம் ... | 6 | 1 | 1 | |
| மொத்தம் ... | 112 | 22 | 22 | |
| II. *சிறப்பு* | | | | |
| 26. தொழிற்சங்கங்கள் ... | 4 | | | |
| 27. பல்கலைக் கழகங்கள் ... | 3 | | | |
| 28. ஐரோப்பியர் ... | 4 | | | |
| 29. மில் அதிபர்கள் ... | 2 | | | |
| 30. வர்த்தகம் ... | 2 | | | |
| 31. விவசாயம் | 3 | | | |
| 32. இனாம்தார்கள் ... | 1 | | | |
| 33. அதிகாரிகள் ... | 9 | | | |
| சிறப்பு மொத்தம் ... | 28 | | | |
| ஒட்டுமொத்தம் ... ... | 140 | | | |

இது பம்பாய்ச் சட்டமன்றத்தின் மொத்த இடங்கள்

6. சிந்துவையும் பம்பாய் மாநிலத்தின் பகுதியாகவே வைத்திருப்பது என்று முடிவு செய்யப்பட்டால், பம்பாய்ச் சட்டமன்றத்தின் இயைபு கீழ்க்கண்டபடி இருக்க வேண்டுமென்று சபா ஆலோசனை கூறுகிறது:

## II. சிந்துவுடன் சேர்ந்த பம்பாய் மாநிலம் பம்பாய் சட்டமன்றத்தின் இயைபு

| தேர்தல் தொகுதிகள் | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்ட இடங்கள் | மராத்தியர் களுக்கும் அவர்கள் சார்ந்த சாதிகளுக்கும் |
|---|---|---|---|
| **I. முஸ்லீம் அல்லாதோர்** | | | |
| **(அ) நகர்ப்புறம்** | | | |
| 1. பம்பாய் நகரம் வடக்கு ... ... | 5 | 1 | இப்பொழுது உள்ளது போலவே |
| 2. பம்பாய் நகரம் தெற்கு ... ... | 4 | — | |
| 3. கராச்சி நகரம் ... ... | 1 | — | |
| 4. அகமதாபாத் நகரம் ... ... | 3 | 1 | |
| 5. சூரத் நகரம் ... ... | 2 | — | |
| 6. ஷோலாப்பூர் நகரம் ... ... | 4 | 1 | |
| 7. புனே நகரம் ... ... | 2 | — | |
| **(ஆ) கிராமப்புறம்** | | | |
| 8. அகமது நகர் மாவட்டம் ... ... | 5 | 1 | |
| 9. பரோச் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 10. கைரா மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 11. பஞ்ச் மகால் மாவட்டம் ... | 4 | 1 | |
| 12. சூரத் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 13. தாணா மாவட்டம் ... | 4 | 1 | |
| 14. அகமத்நகர் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 15. கந்தேஷ் கிழக்கு மாவட்டம் ... | 5 | 1 | |
| 16. நாசிக் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 17. புனே மாவட்டம் ... ... | 5 | 1 | |
| 18. சத்தாரா மாவட்டம் ... ... | 5 | 1 | |
| 19. பெல்காம் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 20. பீஜப்பூர் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 21. தார்வார் மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 22. கனரா மாவட்டம் ... ... | 4 | 1 | |
| 23. ரத்னகிரி மாவட்டம் ... ... | 5 | 1 | |
| 24. கிழக்கு சிந்து மாவட்டம் ... ... | 2 | 1 | |

| தேர்தல் தொகுதிகள் | | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டது | மராத்தியர் களுக்கும் அவர்கள் சார்ந்த சாதிகளும் |
|---|---|---|---|---|
| 25. மேற்கு சிந்து மாவட்டம் | ... ... | 2 | — | இப்பொழுது உள்ளது போலவே |
| 26. ஷோலாப்பூர் மாவட்டம் | ... ... | 4 | 1 | |
| 27. கொலாபா மாவட்டம் | ... ... | 4 | 1 | |
| 28. கந்தேஷ் மேற்கு மாவட்டம் | ... ... | 4 | 1 | |
| மொத்தம் | ... ... | 86 | 22 | |

### II. முஸ்லீம்கள்

#### (அ) நகர்ப்புறம்

| | | |
|---|---|---|
| 29. பம்பாய் நகரம் | ... ... | 2 |
| 30. கராச்சி நகரம் | ... ... | 2 |
| 31. அகமதாபாத் நகரம் | ... ... | 1 |
| 32. சூரத் நகரம் | ... ... | 1 |
| 33. புனே நகரம் | ... ... | 1 |
| 34. ஷோலாப்பூர் நகரம் | ... ... | 1 |

#### (ஆ) கிராமப்புறம்

| | | |
|---|---|---|
| 35. வடக்குப் பிரிவு | ... ... | 2 |
| 36. மத்தியப் பிரிவு | ... ... | 3 |
| 37. தெற்குப் பிரிவு | ... ... | 3 |
| 38. ஹைதராபாத் மாவட்டம் | ... ... | 2 |
| 39. கராச்சி மாவட்டம் | ... ... | 2 |
| 40. லார்ச்சானா மாவட்டம் | ... ... | 2 |
| 41. சுக்கூர் மாவட்டம் | ... ... | 2 |
| 42. தார்-பர்கர் மாவட்டம் | ... ... | 2 |
| 43. நவாப்ஷா மாவட்டம் | ... .. | 2 |
| 44. மேற்கு சிந்து எல்லைப்புறம் | ... | 2 |
| மொத்தம் | ... ... | 30 |

### III. சிறப்புத் தொகுதிகள்

| | | |
|---|---|---|
| 45. தொழிற்சங்கங்கள் | ... ... | 4 |
| 46. பல்கலைக்கழகங்கள் | ... ... | 4 |
| 47. ஐரோப்பியர்கள் | ... ... | 1 |
| 48. மில் உரிமையாளர்கள் | ... ... | 1 |

| தேர்தல் தொகுதிகள் தொகுதிகள் | | மொத்த இடங்கள் | தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப் பட்டது | மராத்தியர் களுக்கும் அவர்கள் சார்ந்த சாதிகளும் |
|---|---|---|---|---|
| 49. வர்த்தகம் | ... ... | 1 | | |
| 50. விவசாயம் | ... ... | 1 | | |
| 51. இனாம்தார்களும், ஜாகீர்தார்களும் | ... ... | 2 | | |
| 52. அதிகாரிகள் | ... ... | 9 | | |
| மொத்தம் | ... ... | 24 | | |
| **ஒட்டுமொத்தம்** | ... ... | **140** | | |

இதுதான் சட்டமன்றத்தின் மொத்த இடங்களாக இருக்க வேண்டும்.

7. இதில் எந்த ஒன்றாயினும், 140 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் பிரதி நிதிகள் 22 பேர் இருக்க வேண்டுமென்பது சபாவின் கோரிக்கை. 140 பேரடங்கிய மன்றத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த அளவு பிரதிநிதித்துவம் மிக நியாயமானதுதான் என்று சபா உறுதியாகக் கூற விரும்புகிறது. இந்தக் கோரிக்கை அதிகப்படி யானது என்று சிலர் கூறக்கூடும் என்பது சபாவுக்குத் தெரியும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மீதுள்ள தீங்கான எண்ணத்தின் விளைவே இக்கருத்து என்று கொள்ள வேண்டும்; ஒரு குறிப்பிட்ட காரணத்தின் அடிப்படையில் இது அமைந்ததல்ல. தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மொத்த எண்ணிக்கை (மக்கள் தொகை) பற்றிய சரியான கணிப்பு இம்மாதிரி தவறான கருத்துக்களைத் திருத்தப் போதுமானது என்று சபா நினைக்கிறது. எந்த ஒரு வகுப்பாருக் கும் பிரதிநிதித்துவம் பற்றிக் கணிக்க மக்கள் தொகைதான் ஓர் அளவு கோலாகும் என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும். எனவே, தாழ்த்தப்பட்டோரின் பலம் (எண்ணிக்கை) பற்றிச் சரி யாகப் புள்ளி விவரங்களோடு கணிப்பது போதுமான முக்கியத் துவம் வாய்ந்தது. 1919-ல் சவுத்பரோ கமிட்டி அளித்த அநீதியால் ஏற்கனவே தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லலுறுகிறார்கள். தாழ்த்தப் பட்ட வகுப்பினரின் மக்கள் தொகையைப் பற்றித் தவறாக அந்தக் கமிட்டி தனது அறிக்கையில் கொடுத்திருந்தது. 1911 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படிப் பார்த்தால் இது முற்றிலும் ஆதாரமற்றது.* இந்தக் கமிட்டி கொடுத்த எண்ணிக்கை மிகக்

* சவுத்பரோ கமிட்டியால் கொடுக்கப்பட்டு இந்திய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட படி தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மொத்த எண்ணிக்கை 5,77,516. இந்தக் கமிட்டிக்கு ஆதாரமாக இருந்த அதிகாரபூர்வமான தகவலின்படி பம்பாய் மாநிலத்தில் 1911-இல் தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை 21,45,208 ஆகும்.

குறைவாக இருந்ததால், பம்பாய்ச் சட்டமன்றத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 2 பிரதிநிதிகள் கொடுக்கப்பட வேண்டுமென்ற யோசனைக்கும் எந்த மதிப்பும் இல்லாது போயிற்று. தாழ்த்தப் பட்ட மக்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்ட பொறுப் பான வட்டாரங்களில் இப்பொழுதும் முயற்சி செய்யப்படுகிறது. உதாரணமாக, மத்திய சட்ட சபையில் மத்திய அரசின் சார்பில் பேசிய திரு. பாஜ்பேய், ''தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை மிகைப்படுத்திக் கூறப்பட்டது. அவர்களின் மக்கள் தொகை உண்மையில் 285 லட்சம்தான் (2 கோடியே 85 லட்சம்); 600 லட்சம் (6 கோடி) அல்ல'' என்று முன்பு போல் கூறினார். சவுத் பரோ கமிட்டி போன்றே, இந்த (சட்டப்படி அமைந்த) கமிஷனும் அதே தவற்றைச் செய்து, அதே தவறான கணிப்பின்படி ஆலோசனைகளை முன்வைக்கலாம் என்று சபா அஞ்சுகிறது. இது சம்பந்தமாக மக்கள் கணக்கெடுப்பின் டைரக்டர் என்ன கூறுகிறார் என்பதைக் கமிஷனின் கவனத்திற்குக் கொண்டு வர சபா விரும்புகிறது. 1921 இந்திய மக்கள் கணக்கெடுப்பு அறிக்கை 2-வது பாகம், அத்தியாயம் 11-ல், டைரக்டர் குறிப் பிடுகிறார்:

''பத்தி 193. சமீப ஆண்டுகளில் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவைத் 'தாழ்த்தப்பட்ட வகுப்பினர்' என்று கூறுவது பழக்கமாகி விட்டது. எனக்குத் தெரிந்தவரை, இந்தச் சொல்லாட்சிக்கு எந்த முடிவான பொருள் விளக்கமும் கிடையாது. யாரை அது உட் படுத்துகிறது என்பதும் திட்டவட்டமாக இல்லை. 1912 முதல் 1917 வரைக்கான கல்வி முன்னேற்றம் பற்றி 5 ஆண்டுக்கான மதிப்பாய்வுரை (அத்தியாயம் 18, பத்தி 505)யில், கல்விக்கான உதவியும் முன்னேற்றமும் என்ற கருத்தோட்டத்திலிருந்து தாழ்த்தப் ப்பட்ட வகுப்பினர் பற்றிக் குறிப்பாக ஆராயப்பட்டிருக்கிறது; மேலும், அதன் அனுபந்தம் 18-ல், சமுதாயத்தின் இந்தப் பிரிவில் உட்படும் சாதிகள், மலை சாதியினர் பற்றிய ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. தாழ்த்தப்பட்டவர்கள் என்று இப்பட்டியல் களில் இடம்பெறுபவர்களின் எண்ணிக்கை 3 கோடியே 10 லட்சம் ஆகும்; பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள இந்துக்கள், மலை சாதியினர் ஆகியவர்களின் மக்கள் தொகையில், தாழ்த்தப்பட்ட வர்களாகப் பட்டியல்களில் சேர்க்கப்பட்டவர்கள் 19 சதவிகிதத் தினர் ஆவர். ஒரு பொது அறிக்கையில் வகுப்புப் பாகுபாடு களைக் குறிப்பிடுவதில் உணர்வைப் புண்படுத்தும் அபாயம் இருக்கிறது என்பதில் ஐயமில்லை; இது பகைமை ஏற்படுத்தும் பாகுபாடு என்று கருதப்படக் கூடும்; ஆனால், இந்தப் பட்டியல் கள் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளதாலும், இந்தத் 'தாழ்த்தப் பட்டவர்கள்' குறிப்பாகத் தென்னிந்தியாவில் ஒரு (வகுப்பு) வர்க்க உணர்வும் ஒரு வர்க்க அமைப்பும் பெற்றுள்ளதாலும், உதவி செய் யும் அமைப்புகளின் சேவைகளைப் பெற்று சட்டமன்றங்களில் அதிகாரபூர்வமான பிரதிநிதித்துவம் பெற்றுள்ளதாலும்— இந்த

உண்மைகளைக் கணக்கில் கொண்டு அவர்களின் மக்கள் தொகை பற்றிப் புள்ளி விவரங்களுடன், கூடிய மதிப்பீட்டைச் செய்வது நிச்சயமாக மேன்மையுமாகும். எனவே மாநிலங்களின் சூப்பிரண் டென்டுகளை, மக்கள் தொகைக் கணிப்புப் புள்ளி விவரங்களி லிருந்து 'தாழ்ந்தவர்கள்' என்று வழக்கமாகக் குறிப்பிடப்படும் சாதிகளின் மக்கள் தொகை பற்றிய உத்தேசமான எண்ணிக்கை யைத் தரும்படி கேட்டேன். ஐக்கிய மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்கள், ராஜ்யங்களிலிருந்தும் ஒரு மாதிரிப் பட்டியல்கள் எனக்குக் கிடைத்தன; அதிகாரபூர்வ உணர்வின் இக்கட்டான நிலையின் காரணமாக, ஐக்கிய மாநிலத்திலிருந்து கிடைக்க வில்லை. கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் திட்டவட்டமாக ஒரே மாதிரியான அடிப்படையில் அமையவில்லை; ஏனென்ில் இந்தியாவின் பல்வேறு பாகங்களில் அந்த வகுப்பின் நிலை பற்றி உள்ள பார்வை வேறுபட்டிருந்தது; எனவே, கல்வி சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்களைக் கொண்டும் 1911-ஆம் ஆண்டு அறிக்கை கள் அட்டவணைகளில் உள்ள தகவல்களைக் கொண்டும் சில வற்றைப் பற்றிய கணிப்பில் மாற்றம் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கெனவே விளக்கியபடி பொதுவான குறைபாட்டிற்கு, அதாவது எந்த ஒரு சாதியின் மொத்த மக்கள் தொகையும் குறிக்கப்பட வில்லை என்ற குறைபாட்டிற்கு உட்பட்டது இந்த மதிப்பீடு. ஒரே இடத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கை (கீழே எடுத்துக் கொடுக்கப்படுகிறது) இந்து சமுதாயத்தின் ''தாழ்த்தப்பட்ட வகுப் பினர்'' குறைந்தபட்சம் ஏறத்தாழ எவ்வளவு எண்ணிக்கையில் உள்ளனர் என்பதை அளிக்கிறது. இந்தத் தற்போதைக்கான புள்ளி விவரங்களைச் சேர்த்தால் 5 கோடியே 30 லட்சம் ஆகிறது. எனினும், இது ஒரு குறைவான, தோராயமான மதிப்பீடு என்று கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் 1) அவை சம்பந்தப்பட்ட சாதிகள், பழங்குடிகள் பற்றிய முழு பலத்தையும் கொண்டிருக்க வில்லை. மேலும் 2) மிக அண்மையில் இந்து மதத்தைத் தழுவிய இந்தப் பழங்குடியினரில் பெரும்பாலோர் தூய்மையற்றவர்கள் என்று கருதப்படுகிறார்கள். இவர்களின் மக்கள் தொகை இந்தியா வில் 5½ கோடியிலிருந்து 6 கோடி வரை இருக்கலாம்.

**இந்தியாவில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மக்கள்தொகை**

| மாநிலங்கள் | | (ஆயிரத்தில்) |
|---|---|---|
| மொத்தம் | ... ... | 52,680 |
| அஸ்ஸாம் | ... ... | 2,000 |
| வங்காளம் | ... ... | 9,000 |
| பீகார்-ஒரிஸ்ஸா | ... ... | 8,000 |
| பம்பாய் | ... ... | 2,800 |
| மத்திய மாநிலம்-பீரார் | ... ... | 3,300 |

| மாநிலங்கள் | | (ஆயிரத்தில்) |
|---|---|---|
| சென்னை | ... ... | 6,072 |
| பஞ்சாப் | ... ... | 2,893 |
| ஐக்கிய மாநிலம் | ... ... | 9,000 |
| பரோடா | ... ... | 177 |
| மத்திய இந்தியா | ... ... | 1,140 |
| குவாலியர் | ... ... | 500 |
| ஹைதராபாத் | ... ... | 2,339 |
| மைசூர் | ... ... | 932 |
| ராஜபுதனம் | ... ... | 2,267 |
| திருவாங்கூர் | ... ... | 1,260 |

8. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் மக்கள் தொகை பற்றி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் எச்சரிக்கையுடனும் நிதானத்துடனும் அளித்துள்ள மதிப்பீடு ஊகங்களையும் தோராய மதிப்பீட்டையும் ஒதுக்கித் தள்ளுகிறது; திரு. பாஜ்பாயின் மதிப்பீட்டின் தகுதியைத் தகர்த்தெறிகிறது. எந்த மாநிலக் கல்வி அறிக்கைகளின் அடிப்படையில் தமது மதிப்பீடு அமைந்துள்ளது என்று திரு. பாஜ்பாய் கூறுகிறாரோ, அதே அறிக்கைகளில் உள்ள புள்ளி விவரங்களைக் கூர்ந்து ஆராய்ந்த பின்பே மேற்சொன்ன இயக்குநரின் மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் சரியான தன்மையை ஒப்புக் கொண்டாக வேண்டும். ஏனெனில் இயக்குநர் கூறுவது போல் ஆழ்ந்து சிந்தித்த பின் செய்யப்பட்ட ஆராய்வின் அடிப்படையிலான கணிப்பு இதுவாகும். வேறு எந்த மதிப்பீட்டிற்குமல்லாமல் இந்த மதிப்பீட்டிற்கு முன்னுரிமை அளித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சபா, சட்டப்படி அமைந்த கமிஷனை வலியுறுத்தும். இந்த மதிப்பீட்டின்படி, பம்பாய் மாநிலத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மக்கள் தொகை 28,00,000 அல்லது மொத்த மக்கள் தொகையில் 10.8 சதவிகிதமாகும். இந்த எண்ணிக்கை பலத்தின் அடிப்படையிலேயே மொத்தம் 140 இடங்களில் (சட்ட மன்றத்தில்), 18 இடங்கள் பெறத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தகுதி பெறுகின்றனர்.

9. ஒரு சமூகத்தினரின் பிரதிநிதித்துவத்தின் அளவை நிர்ணயிக்கும் ஒரே அம்சம் அதன் எண்ணிக்கையின் பலம் மட்டுமே என்றால், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு மேலும் அதிகமாக 7 இடங்கள் வேண்டுமென்ற கோரிக்கை தகுதிக்கேற்ப உள்ள உயர்வல்ல என்ற ஐயமும் எழும். ஆனால், ஒரு சமூகத்தினரின் எண்ணிக்கை வலிமை மட்டுமே இம்மாதிரி விஷயங்களை நிர்ணயிக்கும் ஒரே அடிப்படையாக இருக்க முடியாது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு சமூகத்தினரின் பிரதிநிதித்துவப் பங்கை

நிர்ணயிப்பதற்கு கணக்கில் கொள்ள வேண்டிய அம்சங்களில் சமூகத்தில் அவர்களுக்குள்ள அந்தஸ்து எதற்கும் குறைவான ஒன்றல்ல.அந்தச் சமூகத்தின் அந்தஸ்து என்பது, சமுதாயப் போராட்டத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அதன் வலிமை ஆகும். சமூகத்தின் கல்வி. பொருளாதார அந்தஸ்தைப் பொறுத்துள்ளது அந்த ஆற்றல் என்பது தெளிவு. சமுதாயத்தில் அந்தஸ்து குறைவானால் தேர்தல் ஒதுக்கீட்டில் அதிக நன்மை பெற வேண்டுமென்ற கோட்பாட்டிலிருந்து இதைப் பார்க்க வேண்டும். மாநிலத்தில் கல்வியிலும் பொருளாதாரத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் மதிப்பு மிகக் குறைவானது என்பது பற்றிக் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. இதனால், மக்கள் தொகையின் அடிப்படையில் அவர்கள் பெற வேண்டியதை விட தேர்தலில் இடஒதுக்கீட்டில் கொஞ்சம் நன்மை பெற அவர்களுக்கு உரிமை உண்டு. இதே அளவு எண்ணிக்கையும் மதிப்பும் உடைய வேறு எந்த சமூகத்தையும் விடத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைப் பொறுத்த வரை தேர்தல் தொகுதிகள் ஒதுக்கீட்டில் அது அதிக மான அனுகூலம் பெற வேண்டும்; ஏனெனில், தாழ்த்தப்பட்ட சமூகம் போல் வறுமைத் துயருக்கு ஆளாக்கப்பட்ட ஒரு சமூகம் வேறு எதுவும் இருக்க முடியாது. தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குள்ள மிகக் கடுமையான இயலாமைகளும் பாதகமான அம்சங்களும் வேறு எந்த வகுப்பிற்கும் இருப்பதாகச் சொல்ல முடியாது; வாழ்க்கையில் அதற்குள்ள இழிவான நிலையிலிருந்து வெளி வருவதற்கு இந்த இயலாமைகள் அவர்களைத் தடுக்கின்றன. தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு அதிகப்படியான பிரதிநிதித்துவம் கோருவதை நியாயப்படுத்துவதற்கு வேறு ஒரு காரணமும் இருக் கிறது என்று சபா கருதுகிறது. சிறுபான்மையினருக்குப் பிரதி நிதித்துவம், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமெனில், அது பயனளிப்பதாக இருக்க வேண்டும். இல்லையெனில், அது போலியாகி விடும். இந்த அவப்பெயருக்கு ஆளாகாமல் இருக்க, ஒரு சிறுபான்மை பாதுகாக்கப்பட வேண்டுமெனில், அது கீழே முழுவதும் மூழ்காமலிருக்க, அதற்கு போதுமான பிரதிநிதித்துவம் இருக்க வேண்டியது தேவை என்பதை ஏற்க வேண்டும். இதையே ஒரு திட்ட ஆலோசனை வடிவில் கூற வேண்டுமெனில், ஒரு சிறுபான்மையின் பிரதிநிதித்துவம் பயன்படும் விதத்தில் இருப் பது, அது முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட முடியாத அளவு அதிக எண்ணிக்கையில் இருப்பதை பொறுத்ததாகும். நாட்டிலுள்ள மற்ற சிறுபான்மையினரைப் போல், தாழ்த்தப்பட்ட வகுப்பின ருக்கு இந்த அதிகப்படியான பிரதிநிதித்துவம் கோருவதற்கு ஆதர வாக இந்தக் கோட்பாட்டை சபா ஆதாரமாகக் கொள்கிறது.

10. எல்லாச் சிறுபான்மை வகுப்பினரும் பாரபட்சமற்ற முறையில் நடத்தப்பட வேண்டியதன் அவசியம்: பிரதிநிதித்துவத் தின் எல்லை பற்றிய இந்தக் கோட்பாடுகளெல்லாம், சவுத்பரோ கமிட்டி அறிக்கை பற்றிய தங்கள் குறிப்பில் இந்திய அரசு வகுத்

துள்ளவையே. இந்தியாவிலுள்ள வேறு எந்த சமூகத்தையும் விடத் தாழ்த்தப்பட்ட சமூகம் இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுவதில் அதிகத் தகுதி பெற்றுள்ளது என்று சுட்டிக்காட்டச் சபா விரும்பு கிறது. நடைமுறையில், இந்தக் கோட்பாடுகளின் பலன் இந்தியா முழுவதிலும் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்கு மறுக்கப்படுகிறது; அதே சமயம் இந்தச் சமூகத்தை விட அதிகமான பலமும் மேம்பட்ட நிலையிலும் உள்ள முஸ்லீம்கள் போன்ற சமூகத்திற்கு நன்மைகள் வாரிப் பொழியப்படுகின்றன. இம்மாதிரி சமத்துவமற்ற முறை யில் நடத்தப்படுவதற்கு ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்ட கீழே இரு விஷயங்களைப் பற்றிக் கமிஷனின் கவனத்திற்கு சபா கொண்டு வருகிறது :

| மாநிலங்கள் | முஸ்லீம் மக்களின் தொகை | முஸ்லீம் களுக்கான இடங்கள் | தாழ்த்தப் பட்ட வகுப் பினரின் தொகை | தாழ்த்தப் பட்ட வகுப் பினருக்கான இடங்கள் |
|---|---|---|---|---|
| மத்திய மாநிலம் | 5,74,276 | 11 | 30,60,232 | 2 |
| பம்பாய் மாநிலம் | 12,07,443 | 7 | 16,27,980 | 1 |

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதி பற்றி ஒருவர் எவ்வளவு சீற்றம் கொண்ட போதிலும், இந்திய அரசு அது பற்றி வெட்கப்படுவதில்லை. ஏனெனில், முஸ்லீம்களுக்கு மட்டுமே கையாள்வதற்கான மிகக் குறுகிய கட்டுக் கோப்பான நோக்கத்திற்காக இக் கோட்பாடுகளை அது அறிவித் தது. பல்வேறு சமூகங்களின் அரசியல் முக்கியத்துவத்தில் இந்திய அரசு காட்டிய பாகுபாட்டின் காரணம்தான் இது என்பதை எல்லோரும் அறிவர். இவ்வாறு அரசியல் முக்கியத்துவம் என்ற பேரில் பாரபட்சம் காட்டப்படுவதைச் சபா கண்டிக்கிறது. எல்லா வகுப்புகளுக்கும் சமத்துவமான முக்கியத்துவம் அளித்தால் மட் டுமே, விழிப்புள்ள பாதுகாப்பான ஆட்சி நிலவ முடியும். நச்சுத் தன்மை வாய்ந்த இந்தப் பாகுபாடுதான் எல்லா வகுப்புப் பூசல் களுக்கும் ஆணி வேர்; சமத்துவமான வாய்ப்பு என்ற கருத் தோட்டத்தைத் தகர்க்கக் கூடியது. சீர்திருத்தங்களின் முதல் பகுதியை அமல் நடத்துவதற்குப் பார்லிமென்ட் அங்கீகாரம் வழங்கியுள்ள சந்தர்ப்பத்தில் இந்தியாவின் ஆட்சி முறையில் இந்த (பாகு பாடான) கோட்பாட்டை நுழைக்க முயன்றது, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நலன்களுக்குப் பேரிடரை ஏற்படுத்தியிருக்கும். ஏற்கெனவே கொண்டுவரப்பட்டுள்ள அரசியல் சீர்திருத்தங்களின் செயலாக்கத்தை விரிவுபடுத்துவது பற்றி முடிவு எடுப்பதில் முக்கியமான பரிசீலனையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் நிலை பற்றிய பிரச்சினை உள்ளதாக இப்போதைய பிரிட்டிஷ் சர்க்கா ரின் இந்திய மந்திரி உணர்ந்திருப்பது கண்டு சபா மகிழ்ச்சி யடைகிறது. அவ்வாறு உணர்ந்திருப்பது மட்டும் பயனளிக்காது;

நாட்டின் அரசியல் சட்ட அமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களில் அது பிரதிபலித்தால் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பயனளிக்கும்.

11. *பிரதிநிதித்துவ முறை:* நியமனம் செய்வது என்ற கோட்பாட்டைச் சபா எதிர்க்கிறது; தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தேர்ந்தெடுப்பது என்ற கோட்பாடு நீட்டிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறது. பொறுப்பான சர்க்கார் என்ற அடிப்படையில் தேர்தல் கோட்பாட்டு ரீதியில் சரியானது என்பது மட்டுமல்லாமல், அரசியல் கல்வி என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் நடைமுறைக்கு அது தேவையுமாகும்: அரசியல் கல்விக்கு ஒவ்வொரு சமூகமும் (வகுப்பும்) சந்தர்ப்பம் பெற வேண்டும்; வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலம் அதை அடைய முடியும். மற்ற எந்த வகுப்பாரையும் விடத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அத்தகைய கல்வி அதிகம் தேவைப்படுகிறது; அதிவேகமாக வளர்ந்துவரும் இந்தியாவின் அரசியல் வாழ்வில் தங்கள் பங்கை வகிக்க சந்தர்ப்பம் மறுக்கப்பட்டால் அது துரதிர்ஷ்வசமானது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு தேர்தல் அவசியம் என்பதற்கு மற்றமொரு காரணமும் உள்ளது. அமைச்சர் பதவி ஒரு முக்கியமான சிறப்புரிமையுமாகும். அதைத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இழக்க முடியாது. அமைச்சரவையில் அவர்களுக்கு இடம் கிடைத்தாலன்றி அரசியல் சீர்திருத்தங்கள் அமலுக்குக் கொண்டு வரப்படுவுதால் அவர்களுக்கு நன்மை எதுவும் கிடைக்காது; அமைச்சரவையில் இருக்கும்போதுதான் அரசின் கொள்கையை உருவாக்குவதில் செல்வாக்கை உபயோகிக்க முடியும். அவர்களின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்கும் உரிமை மறுக்கப்பட்டால், மேற்சொன்ன சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்காமல் போகும். பொறுப்புள்ள அரசாங்கத்தின் கீழ், நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அமைச்சரவையில் சேரும் தகுதியைப் பெறாமலே இருப்பர். தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இந்த உரிமையை மறுக்கும் நியமனமுறை கண்டனத்திற்கு உள்ளாக வேண்டியதாகும்.

12. தேர்தல் கோட்பாடு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படுவதற்கு எதிராக வழக்கமாக இரு மறுப்புகள் வற்புறுத்தப்படுகின்றன.

*(அ) தொகுதிகள் அமைப்பதில் உள்ள இடையூறு:* இது நேர்மையற்றது என்று இந்த மறுப்பு தள்ளப்பட வேண்டுமென்று சபா கருதுகிறது. தொகுதிகள் அமைக்கும் விஷயத்தில் உள்ள இடையூறு காரணமாகத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பிரதிநிதித்துவம் அளிக்கும் விஷயத்தில் நியமனத்திற்கு முன்னுரிமை அளித்தது என்றால், முஸ்லீம்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் தேர்தல் கோட்பாட்டைப் பின்பற்ற அரசு எவ்வாறு முன்வந்தது என்பதைப் புரிந்து கொள்வது கஷ்டம். தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் போலவே இந்த வகுப்பினர்களும் சிதறிக் கிடக்கிறார்கள். தாழ்த்தப்

பட்ட வகுப்பினருக்கு, இப்பொழுது உள்ள தொகுதியை உள்ளிட்டுக் கொண்டு எந்தத் தொகுதியும் அமைக்க முடியாது என்பது தர்க்க ரீதியில் பார்த்தால், பொருத்தமற்றது, கண்டிக்கத்தக்கது. அப்படியிருந்தும், பம்பாய் அரசாங்கம் பண்புணர்வைக் கைவிட்டு, இந்த வகுப்பினருக்கு ஒரே அளவிலான தொகுதிகளை அமைப்பது இயலாது என்று தெரிந்தும் அமைக்க முற்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் தொகுதிகளை அமைக்கும் விஷயத்திலுள்ள இந்த இடையூறுகளையெல்லாம் சபா முன்வைத்துள்ள திட்டம் போக்கி விடும். பிரச்சினை எளிதாக்கப்பட்டு விட்டதால், நியமனத்திற்குப் பதில், தேர்தல் கோட்பாடு கொண்டு வருவதற்கு எந்த மறுப்பினையும் கிளப்ப முடியாது.

*(ஆ) வாக்காளர்களைப் போதுமான எண்ணிக்கையில் அடைவதில் உள்ள இடையூறு:* தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பிரதிநிதிகள்) சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதில் ஓர் உண்மையான தேர்தல் என்று கூறும்படி எந்தத் தொகுதியிலும் போதுமான எண்ணிக்கையில் வாக்காளர்கள் இருப்பார்களா? நியமன முறைக்குப் பதில் தேர்ந்தெடுக்கப்படும் முறையில் உள்ள இடையூறு பற்றி வழக்கமாக இந்தக் கேள்வி எழுப்பப்பட்டு அதற்கு மறுப்புக் கூறப்படும். இன்றுள்ள வாக்குரிமை மாற்றப்படாமல் அப்படியே இருந்தால், வாக்காளர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருக்கும் என்பதைச் சபா ஒப்புக் கொண்டாக வேண்டும்; எந்த அடிப்படையில் பார்த்தாலும் இத்தகைய வாக்குரிமை நியாயமற்றது என்று கருதுகிறது. பொறுப்புள்ள அரசாங்கம் என்பதை இது கேலிக் கூத்தாக்கி விட்டது. அதன் அர்த்தம் என்ன? 2 கோடி மக்கள் தொகை கொண்ட மாநிலத்தில், இன்றுள்ள வாக்காளர் பட்டியலில் அதிர்ஷ்டவசமாக இடம்பெற்றுள்ள ஏழு லட்சம் பேர்களின் சிறுபான்மை அரசாக அது இருக்கும். இந்த நிலை தீங்கானது; பெயரளவில் மட்டுமல்லாமல் உண்மையிலேயே பொறுப்புள்ள அரசாங்கமாக அது இருக்க வேண்டுமெனில், எதிர்காலத்தில் இந்நிலை தொடர அனுமதிக்க முடியாது. சீர்திருத்தங்கள் கோரி கூக்குரலிடும் வகுப்பார் வாக்குரிமை பற்றிய பிரச்சினையை சரியாக வலியுறுத்தவில்லை என்பது வருந்தத்தக்கது. இந்த வகுப்புதான், மக்களாட்சி தனது நோக்கம் என்று பறைசாற்றிக் கொள்கிறது. உண்மையை பர்மா அரசாங்கத்தின் வார்த்தைகளில் குறிப்பிடில்— ''மக்களாட்சி அமைப்புகளுக்கு அவர்கள் சாதகமாக இருப்பதற்கு முக்கிய காரணம், ஒரு மக்களாட்சி நாட்டிற்கு அவர்கள் வேண்டுகோள் விடுப்பதால்தான். மக்களாட்சிக்கு 'மக்களை' விட்டு விட்டு அவர்கள் குரல் கொடுக்க முடியாது. சீர்திருத்தங்களில் அவர்களுக்குள்ள முதன்மையான நலன்கள், நிர்வாகத்தில் அவர்கள் பெறவிருக்கும் அதிகாரத்தை மையமாகக் கொண்டுள்ளது. விரிவாக்கப்பட்ட வாக்குரிமை, கிராம வாக்காளர்கள் பொறுப்புடன் வாக்கெடுப்பில் பங்கு பெறுவது ஆகியவை உண்மையில்

அவர்களின் கோரிக்கையின் முக்கிய அம்சமாகவே இல்லை. அவர்கள் விரும்பும் அதிகாரத்தை வகிக்கக் கூடியவர்களை அவர்கள் வர்க்கம் சட்டமன்ற உறுப்பினர்களாக அனுப்ப முடியும் வரை, இவர்கள் குறைவான அல்லது அதிகமான வாக்காளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்களா என்பது அவர்களுக்கு பொருட்டல்ல''. வாக்குரிமை என்ற முக்கிய பிரச்சினை பற்றி இந்திய அரசியல்வாதிகளின் கணிப்பு இத்தகையது தானா இல்லையா என்ற போதிலும், காங்கிரஸ் அரசியலைப் பொறுத்தவரை, அதிகாரமாற்றப் பிரச்சினைகளை விட, வாக்குரிமை பிரச்சினை மிகக் குறைவான இடத்தையே பெற்றுள்ளது என்பது சபாவின் கருத்து. நிர்வாகத்திற்கு இப்பொழுது பொறுப்பு வகிக்கும் சக்திகளை, திருப்திகரமான மாற்று சக்திகள் அவர்கள் இடத்தை எடுத்துக் கொள்ளத் தயாராகும் முன்பு, பின்வாங்க முடியாது என்பது இந்திய அரசின் கொள்கையாகும்; சரியான நோக்கில் விஷயங்களை அணுக விரும்பும் எல்லாப் பிரிவினருக்கும் இது ஏற்புடையதாக இருக்க வேண்டும். மாற்று அமைப்புகள் எனில், வாக்காளர்களாகத்தான் இருக்க வேண்டுமென்பது தெளிவு. அரசாங்கம் கொண்டுவர மீவண்டிய பொறுப்பின் எல்லை, தன்மை ஆகியவை வாக்காளர்களின் பலத்தை (எண்ணிக்கையை)ப் பொறுத்தது. வாக்குரிமை என்பது உயிரான பிரச்சினையாகும். அதை முடிவு செய்வதின் அடிப்படையில்தான், அரசியல் அதிகார மாற்றத்தின் அளவு (தரம்) இருக்க முடியும். எனவே, வாக்குரிமை எதுவாக இருக்க முடியும் என்பது மிக முக்கியமான கேள்வியாகும். இது பற்றி இன்றைய முடிவைப் பார்த்தால், பொறுப்புள்ள அரசாங்கம் என்ற முக்கிய குறிக்கோள் கைவிடப் பட்டதாக சபா சுட்டிக்காட்ட விரும்புகிறது. வாக்குரிமை என்பது, சமுதாய வாழ்வின் நியதிகளை நிர்ணயிப்பதாகும். அதன் பொருள் வேறு எதுவாகவும் இருக்க முடியாது. வாக்குரிமையின் பொருள் அதுவானால், என்ன செய்ய வேண்டும்? தங்கள் நலம் பற்றி பேரம் பேசுவதற்கு வலிமையற்ற சக்தியைப் பெற்றிருப்பதன் காரணமாக, யாருடைய வாழ்க்கை நியதிகள் குறைபாடுடைய முறையில், மேம்பட்ட நிலையில் உள்ளவர்களால் முடிவு செய்யப் படும் அபாயம் உள்ளதோ, அவர்களுக்கு இந்த வாக்குரிமை வழங்கப்பட வேண்டும். இதுதான் உண்மையெனில், வாக்குரிமை என்ற சொல் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டால், சமுதாயத்தில் மிகப் பெரும்பான்மையினராக உள்ள ஏழைகளுக்கும் தாழ்த்தப் பட்டவர்களுக்கும் வாக்குரிமை கிடைக்கும் விதத்தில் வாக்குரிமைக்கான தகுதி மிக எளிதான முறையில் அமைய வேண்டும். உண்மையில், வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற முறை தான், வாக்குரிமை என்ற சொல்லின் உண்மையான பொருளுக்கு ஏற்றதாக இருக்கும். சட்டமன்றத்திற்கு வாக்காளர்களை நிர்ணயிப்பதில், மாநிலத்தின் கிராமப்புறத்தில், 'தாலுகாபோர்டு' தேர்தலுக்கு உள்ள அதே அடிப்படையிலும், நகர்ப்புறங்களில் மாதத்

திற்கு ரூ. 3/- தீர்வை (வரி) கட்டுவோருக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டால் சபா திருப்தியடையும். அத்தகைய விதத்தில் வாக் குரிமைக்கான தகுதி குறைவாக நிர்ணயிப்பது அறியாமையில் உள்ள மிகப் பெரும்பான்மையினரை வாக்காளர்களாக ஆக்கி விடும் என்று அரசாங்கம் அடிக்கடி அஞ்சுவதற்கு எந்த அடிப் படையும் இல்லை. பெரிய சொத்துக்கு அறியாமை ஒவ்வாத ஒன்றல்ல. அதே சமயம் மிகக் கடுமையான வறுமை மிக உயர் வான அறிவுத் திறனுக்கு ஒவ்வாததல்ல. சொத்து அறிவுத் திறனை மழுங்கடிக்கலாம். மாறாக, வறுமை பல சந்தர்ப்பங்களில் அறிவுத் திறமைக்குத் தூண்டு கோலாக உள்ளது. ஒரு பெரிய சொத்து அடிப்படையிலான தகுதி அறியாமையிலிருந்து பாதுகாக்கிறது என்ற அரசாங்கத்தின் சிந்தனை ஒரு மூட நம்பிக்கையேயன்றி வேறல்ல; தங்களுடைய அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள பொதுமக்களுக்குள்ள உரிமையைப் பறிப்பதற்காகத் திட்டமிட்ட அடிப்படையில் (மேல்) வர்க்கங்களால் வித்திடப்பட்டு அரசாங்கத் தால் வளர்க்கப்பட்ட மூட நம்பிக்கை இது.

13. *தேர்தல் முறை:* தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் பொறுத்த வரை, பொதுத் தொகுதிகளில் சுதந்திரமான தேர்தல் என்பது இயலாது என்பது சபாவின் கருத்து. மறுபுறத்தில், வகுப்புக ளடிப்படையிலான தேர்தல் தொகுதிகளைச் சபா விரும்ப வில்லை. பொதுத் தொகுதிகளில் ஒதுக்கப்பட்ட இடங்கள் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கப்பட்டால் அது போதுமானது என்பது அதன் கருத்து. தாழ்த்தப்பட்ட வகுப்புகளிலிருந்து போட்டி யிடுபவர்கள் சம்பந்தப்பட்ட வரை, அந்த வட்டாரத்தில் வசிக்க வேண்டும் என்ற அடிப்படை (தகுதியை) முற்றிலுமாகக் கைவிட வேண்டுமென்றும் டெபாசிட் விஷயத்தில் கொஞ்சம் (தொகை) தளர்த்தப்பட வேண்டுமென்றும் சபா வற்புறுத்துகிறது.

14. *சட்ட சபையில் பிரதிநிதித்துவம்:* 1919-ல் மத்திய சட்ட சபையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உரிமை ஏற்கப்படாததை சபா மரியாதையுடன் கண்டிக்கிறது. தன்னுடைய நேரடிக் கட்டுப் பாட்டில் உள்ள விஷயங்களிலும் அல்லது மாநில அரசாங்கங் களின் ஒதுக்கப்பட்ட பகுதி சம்பந்தமான விஷயங்களிலும் இந்திய அரசே இன்னமும உயர் அதிகாரத்தைக் கொண்டிருக்கிறது. மாற்றப்பட்ட துறைகளைப் பொறுத்த வரையிலும் கூட, மேற் பார்வையிடும் அதிகாரம் அதனிடம் தொடர்ந்து இருக்கிறது. எனவே இந்தப் பரவலான அதிகாரங்கள் செலுத்தப்படுவதில் குரல் எழுப்ப தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கொஞ்சம் வாய்ப்புப் பெற வேண்டியது தேவை என்பது தெளிவு. எனவே பம்பாய் மாநிலத்தின் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிலிருந்து மூன்று பேர்கள் ஸ்தல சட்ட மன்றத்திலுள்ள அவர்களின் பிரதிநிதிகளால் மத்திய சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று சபா கோரு கிறது.

## II உத்தரவாதங்கள் மூலம் பாதுகாப்பு

போதுமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்று கோருவதோடு, பம்பாய் மாநிலத்தில் ஒரு சிறுபான்மை வகுப்பினர் என்ற முறையில் நாட்டின் அரசியல் சட்டத்தில் அதன் அடிப்படைப் பகுதியாக, தாழ்த்தப்பட்டோருக்கு பிரஜா உரிமைகளை உத்தரவாதம் செய்யும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும் என்றும் அது கோர வேண்டியது அவசியமென்று கருதுகிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலன் சம்பந்தமாகக் கீழ்க்கண்ட ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்:—

(1) மாநிலத்தின் வருமானத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில், தாழ்த்தப்பட்டோருக்கு நன்மை பயக்கும் விதத்தில் நேர்மையான முறையிலும் விகிதாசார அடிப்படையிலும் ஒதுக்கப்பட வேண்டும்.

(2) இராணுவம், கடற்படை, போலீஸ் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடு எதுவுமில்லாமல், சாதி என்ற முறையில் குறிப்பிட்ட அளவோடு நிற்காமல், தாழ்த்தப்பட்டோர் சேர்க்கப்படுவதற்கு உரிமை.

(3) அரசுப் பணிகளுக்கு நியமிப்பதில்—கெஜட் பதிவான இடங்களுக்கும் கெஜட் பதிவில்லாத இடங்களுக்கும் ஒரு 30 ஆண்டு காலத்திற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு முன்னுரிமை அளிப்பது ப்ற்றி அங்கீகரித்தல்.

(4) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரிலிருந்து ஒரு விசேஷ போலீஸ் இன்ஸ்பெக்டர் நியமிக்கப்படும் உரிமை ஒப்புக் கொள்ளப்பட வேண்டும்.

(5) உள்ளாட்சி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குப் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் உரிமையை மாநில அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(6) இந்த உரிமைகள் மாநில அரசாங்கத்தால் மீறப்பட்டால் இந்திய அரசுக்கு அப்பீல் செய்யும் உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும்; சம்பந்தப்பட்ட விஷயம் பற்றிச் சட்டத்திற்கு உகந்த முறையில் நடந்து கொள்ளுமாறு மாநில அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தும் அதிகாரம் இந்திய சர்க்காருக்கு வழங்கப்பட வேண்டும்.

16. *இத்தகைய உத்தரவாதங்களுக்கான நியாயம்:* தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சட்ட மன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படும் போது, பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத சிறுபான்மையிருக்குப் போல், இவர்களின் உரிமைக்கு எந்த அபாயமும் இருக்க முடியாது என்று வாதிக்கப்படலாம். பறகு

ஏன் இந்த உத்தரவாதங்கள்? பிரதிநிதித்துவ முறையிலான அரசாங்கம், பெரும்பான்மையின் கொடுமையிலிருந்து சிறு பான்மையை நல்ல முறையில் பாதுகாக்கும் என்பதில் சபா அதிகம் நம்பிக்கை கொள்ளவில்லை. ஜான் ஸ்டூவர்ட் மில்லின் கருத்துக்களைக் கமிஷனின் கவனத்திற்குச் சபா கொண்டு வர விரும்புகிறது. மக்களுக்குப் பொறுப்புள்ள சர்க்கார் என்பது ஒரு கனவாக இருந்தாலோ அல்லது நீண்ட காலத்திற்கு முன்பு இருந்த தாகப் படித்தாலோ, மக்கள் தங்கள் மீது செலுத்தும் அதிகாரத் திற்கு எல்லை விதிப்பதற்கு அவசியமில்லை என்பது ஒரு தெளி வான கருத்தாகத் தோன்றலாம். உள்ளாட்சி அரசு, தங்கள் மீதே மக்களின் அதிகாரம் ஆகிய சொற்றொடர்கள் உண்மையான நிலையை வெளிப்படுத்தவில்லை. அதிகாரத்தைச் செலுத்துபவர் கள் எப்பொழுதும் யார் மீது அந்த அதிகாரம் செலுத்தபடுகிறதோ அவர்களாக இருப்பதில்லை; உள்ளாட்சி அரசு என்று பேசப் படுவது ஒவ்வொருக்குமாக அவரே நிர்வகிக்கிற அரசு அல்ல; ஆனால் ஒவ்வொருவராலும் மற்றவர்களுக்காக என்பதுதான் அது. மேலும் மக்களின் விருப்பம் என்று சொல்லும் பொழுது நடை முறையில் மிக அதிகமான எண்ணிக்கையுள்ள, அல்லது மக்களில் மிகத் தீவிரமாகச் செயல்படும் பகுதியினர் என்றாகும். பெரும் பான்மையினர் அல்லது தங்களை பெரும்பான்மை என்று ஒப்புக் கொள்ளச் செய்வதில் வெற்றி பெற்றோர்; இதனால் மக்களின், தங்கள் எண்ணிக்கையில் ஒரு பகுதியினரைக் கொடுமைப்படுத்த விரும்பலாம்; வேறு எந்த அதிகார துஷ்பிரயோகத்திற்கு எதிராகத் தேவைப்படுவது போல், இதற்கு எதிராகவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தேவை. அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர் கள், சமுதாயத்திற்கு, அதாவது அதில் பலம் வாய்ந்த பகுதிக்கு, முறையாக ஜவாப் சொல்ல வேண்டியிருந்தால், தனி நபர் மீது அரசுக்கு உள்ள எல்லை (கட்டுப்பாடு) அதன் எந்த முக்கியத் துவத்தையும் இழந்து விடாது. சிந்தனை செய்பவர்களின் புத்திக் கூர்மைக்கும், ஐரோப்பிய சமுதாயத்தின் முக்கியமான வர்க்கங் களின் — அவர்களின் உண்மையான அல்லது கற்பிதமான நலன் களுக்கு மக்களாட்சி குறைபாடுடையது — விருப்பத்திற்கு மேலே சொன்ன இந்தக் கருத்துத் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதில் எந்த இடையூறும் இருக்காது; அரசியல் ஊகங்களில் பெரும் பான்மையின் கொடுங்கோன்மை, சமுதாயம் தன்னைப் பாதுகாத் துக் கொள்ள வேண்டிய தீங்குகளில் ஒன்றாக பொதுவாகச் சேர்க்கப்படுகிறது.

17. ஒரு நாட்டின் சிறுபான்மையினரின் நலன்களைப் பாது காக்க இத்தகைய உத்தரவாதங்களின் அவசியத்தைப் பிரதிநிதித் துவ அரசு முற்றிலுமாகப் போக்காது என்பது மேற்சொன்ன வற்றிலிருந்து தெளிவாகிறது. பிரதிநிதித்துவ முறையிலான அரசு சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு அளிக்கும் கருவியாக இருப் பதைவிட, அதற்கு மேலும் போதுமானதாக இல்லாத ஒன்றாக

என்று பிரிக்கப்பட்டுள்ளன; ஆனால் அவை ஒவ்வொன்றும், தனித்தன்மை கொண்டும் ஒன்று மற்றொன்றுக்கு எதிராகப் பெரும்பாலும் குரோத மனப்பான்மை கொண்டும் உள்ளன. இந்தச் சாதிகளில் ஒருவர் செல்வாக்கான ஓர் இடத்தை எய்தி விட்டால் அவர் அலுவலகங்களில் தனது சாதியைச் சேர்ந்தவர்களை அமர்த்துகிறார்; இது ஓர் இழிவான செயலாகும். அரசின் நிலை ஆணைகள் இந்தப் போக்கைக் கண்டு கொண்டு அதன் விளைவுகளைத் தடுப்பதற்கு வழிகாட்டுதல்களை அளிக்கின்றன. கூட்டு அறிக்கையும் இதைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் இல்லை; ஏனெனில் அது பின்வருமாறு கூறுகிறது: ''மத, இன, சாதிப் பிளவுகள் பல இந்திய சமுதாயத்தில் நிலவுகின்றன; அதன் ஒருமைப்பாட்டிற்கு அவை தொடர்ந்து ஆபத்தை விளைவித்து வருகின்றன. இந்த சாதிப் பாகுபாடுகள் இந்திய ஒருமைப்பாட்டை அபாயத்துக்குள்ளாக்குவதோடு, இந்த ஒருமைப்பாடு எப்பொழுதாவது ஏற்படுவதையும் தடுக்கிறது.

''9. பிராமணர்களையும் பிராமணரல்லாத சாதி—இந்துக்களையும் அடுத்து வருவது கீழ்ச்சாதிகள் அல்லது சரியாகச் சொல்ல வேண்டுமெனில் சாதிகளில்லாதவர்கள்; இவர்களின் எண்ணிக்கை இந்த (சென்னை) மாகாணத்தில் சுமார் ஒரு கோடி. வசதிக்காக, அவர்களைப் பஞ்சமர்கள் அல்லது பறையர் சமூகம் என்று அழைக்கலாம். இம்மக்கள் ஒரு கீழ்த்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று மட்டும் கருதப்படுவதில்லை; அவர்கள் (பிற சாதியினர்) முன்பு வந்தாலே தூய்மைக்கேடு (தீட்டு). இந்தத் தீட்டை தூய்மைப் படுத்த மதச் சடங்குகள் தேவைப்படுகின்றன.

''13. படிப்பறிவில்லாத மாற்றமுடியாத கண்டிப்பான சாதிகளாகப் பிளவுபட்டுள்ள ஒரு சமுதாயத்தில், பிராமணன் உச்சியிலும், பிராமணரல்லாத சாதி—இந்துக்கள் நடுவிலும் பாரபட்சமின்றி இந்த இரு பிரிவினரின் கொடுமைக்குள்ளாகும் கீழ்ச் சாதியினர் இறுதியிலும் உள்ள ஒரு சமுதாயத்தில், மக்களாட்சி அமைப்புக்களைக் கொண்டு வருவதில் உள்ள இடையூறு பெரியது. கூட்டு அறிக்கையின் கர்த்தாக்கள் இந்தக் கஷ்டத்தைப் போதுமான அளவு புரிந்து கொள்ளவில்லை. தங்கள் நிலை பற்றி தெளிவாக எடுத்துக் கூறத் தெரியாத மக்களின் நல்ல அரசுக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியது எந்த சீர் திருந்தத் திட்டத்தின் முதல் இன்றியமையாத தேவையாகும் .....''

19. மாநில விவகாரங்களின் இன்றைய நிலை பற்றி இதுதான் சரியான விளக்கம் என்றால், தங்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் பெறுவதற்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு இருக்கும் தேவை ஐரோப்பிய சிறுபான்மையினருக்கு இருப்பதை விட அதிகமாகும். சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் கட்டாயத்தால் உலகின் பல நாடுகளின் மக்கள் வீழ்ச்சியடைந்துள்ளனர். வீழ்ச்சி அடைந்த அவர்கள் எழுந்து நிற்க உரிமை பெற்றுள்ளனர். அதற்கு மாறாக,

வீழ்ச்சியடைந்து மீள முடியாது இருக்கும் ஒரே மக்கள் தாழ்த்தப் பட்ட வகுப்பினர்கள்; வீழ்ச்சியிலிருந்து மீண்டும் எழுந்து நிற்க முடியாமல் அவர்கள் இருப்பதற்குக் காரணம், அவர்கள் நாட்டு மக்களின் பெரும்பான்மையினரின் சமய கோட்பாடுகள் அதற்கு எதிராக இருப்பதுதான். கிணறுகள், மருத்துவ நிலையங்கள், தர்ம சாலைகள் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குத் திறந்து விடப்பட வேண்டுமென்று பல்வேறு சட்ட மன்றங்கள் நிறைவேற்றிய தீர்மா னங்கள், மற்றவர்கள் குழந்தைகளோடு தாழ்த்தப்பட்ட வகுப் பினரின் குழந்தைகளும் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டு மென்று கல்வி அமைச்சர்கள் வெளியிட்ட சுற்றறிக்கைகள் ஆகி யவை பற்றி முடிமன் கமிட்டி முன் சில நபர்கள் மிகைப்படுத்திக் கூறினார்கள். இந்த அறிக்கையின் பின் சேர்க்கை (அ)-வைக் கவனித்தால், இந்தத் தீர்மானங்களும் சுற்றறிக்கைகளும் எப்படி ஒரு கேலிக் கூத்து என்பதைக் கமிஷன் புரிந்து கொள்ள முடியும். நாட்டின் பல்வேறு செய்தித் தாள்களில் அவ்வப்போது பிரசுரிக்கப் பட்ட நிகழ்ச்சிகள், தாழ்த்தப்பட்ட வகுப்பார் மீது பெரும் பான்மை கொண்டுள்ள கண்ணோட்டத்தைத் தெளிவாக எடுத்துக் காட்டும். (எண். 1 முதல் 10 வரை). இந்தச் செய்தித் துணுக்கு களைக் கவனித்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ராணுவம், கடற் படை, போலீஸ் ஆகியவற்றில் சேர முடியாது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்; ஏனெனில் அவர்கள் இவற்றில் சேர்க்கப் படுவது பெரும்பான்மையின் மதக் கருத்துக்களுக்கு எதிராக உள்ளது. (எண். 12). அரசாங்க மருத்துவமனைகளை அவர்கள் பயன்படுத்த முடியாது; காரணம், தங்களுக்கோ அல்லது தங்க ளின் மருத்துவமனைகளுக்கோ இவர்களால் தூய்மைக்கேடு (தீட்டு) விளைவதை மருத்துவர்கள் அனுமதிக்க மாட்டார்கள் (எண் 2, 5). ஒரு சுத்தமான, உயர்வான வாழ்க்கையை இவர்களால் வாழ முடியாது; ஏனெனில், அவர்களுக்காக வகுக்கப்பட்ட நிலை யிலிருந்து உயர்வாக வாழ்வது பெரும்பான்மையினரின் மதக் கோட்பாடுகளுக்கு எதிரானது (எண். 1, 6). தாழ்த்தப்பட்ட வகுப் பினருக்கு எதிராக, சமூக நியதி அமுல் செய்யப்படுவது இவ்வளவு கடுமையாக இருக்கிறது; எனவே, தங்களது அடிப்படையான குடியுரிமைகளைச் செயல்படுத்தத் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மேற்கொள்ளும் எந்த முயற்சியும் வரலாறு கண்டிராத மிக மோச மான அளவில் சமூகக் கொடுமையை நடைமுறைப்படுத்தப் பெரும்பான்மையினரை ஆத்திரமூட்டும் (எண். 4, 7, 11). சமுதாயமே ஒரு கொடுங்கோலனாக இருக்கும் போது, கொடுமைப் படுத்துவதற்கான வழிமுறைகள் அதை அமல் நடத்து பவர்களின் செயல்களோடு நின்று விடாது; தப்பித்துக் கொள் வதற்கு வழிகள் அநேகமாக இல்லை. அது வாழ்வின் எல்லா அம்சங்களிலும் ஊடுருவும்; ஆத்மாவையே அது அடிமைப் படுத்தும். இந்தக் கொடுங்கோன்மைக்கு எதிராகப் பாதுகாப்பு அரசின் போலீஸ் அதிகாரத்தில்தான் வழக்கமாகப் பார்க்க

முடியும். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, ஒரு பக்கத்தில் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்கும் மறுபக்கத்தில் இந்துக்களின் மேல் சாதி யினருக்கும் இடையே நடைபெறும் எந்தப் போராட்டத்திலும், போலீஸ் அதிகாரம் கொடுங்கோலான பெரும்பான்மைக்கு எப் பொழுதும் ஆதரவாகப் பிரயோகிக்கப்படுகிறது. (எண். 11); இதற்கான எளிமையான காரணம் நாட்டின் போலீஸிலோ, நீதித் துறையிலோ தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எந்த இடமும் இல்லாதது.

எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சாதகமாக சில சட்ட மன்றங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன என்பதாலும் சில அமைச்சர்கள் சுற்றறிக்கைகள் அனுப்புயுள்ளனர் என்பதாலும், தங்கள் நாட்டு மக்களின் கரங்களில் தங்கள் நலன்கள் பா.துகாப் பாக உள்ளன என்று தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தாலாட்டி உறங்க வைப்பது நியாயமற்றது. இந்தப் பெரும்பான்மை பற்றி அதன் சில நல்ல நிகழ்ச்சிகளிலிருந்து மட்டும் ஒரு நல்ல அபிப் பிராயம் கொள்ளும்படி ஏய்ப்புக்கு உள்ளாகக் கூடாது என்று கமிஷனைச் சபா எச்சரிக்க விரும்புகிறது. ஒருபுறம் அன்புடன் அதிகாரம் செலுத்தப்படுவது, மறுபுறம் இந்த அதிகாரப் பிரயோ கத்திற்கு அன்புடன் கட்டுப்படுவது, மிகச் சிறந்த அறிவாற்றல் உள்ளவர் தங்களைச் சார்ந்திருப்பவர்களின் நன்மைக்காக எல்லா வற்றிற்கும் உத்தரவிடுவது — இக்காட்சிகள் படிப்பதற்கு மிக இன்பத்தைத் தரலாம். இந்து சமுதாயத்தில் நல்ல மனிதர்கள் இல்லையென்று தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் எவராவது மறுத் தால் தான் இந்தக் காட்சிகள் பயனளிக்கலாம். தாழ்த்தப்பட்ட வகுப்பினரில் ஒருவரும் ஒரு நல்ல இந்துவின் அரசின் கீழ் பெருமளவுக்கு மகிழ்ச்சி நிலவும் என்பதை ஐயப்படவில்லை. ஆனால், சட்டங்களும், அமைப்புகளும் அமைக்கப்படுவது நல்ல மனிதர்களுக்காக அல்ல, கெட்டவர்களுக்காகவுமே. இந்தக் கண் ணோட்டத்திலிருந்து பார்த்தால், கொடுமை வாய்ந்த பெரும் பான்மையில், சிறுபான்மையினர் பால் அனுதாபம் உள்ள சில நல்ல மனிதர்கள் என்ற கற்பனையின் அடிப்படையில், சிறு பான்மையினரைப் பாதுகாப்பின்றி விட்டு விடுவதை விட, அவர் களுக்காக சில உத்தரவாதப் பிரிவுகளை உட்படுத்தித் தேவையான பாதுகாப்பு அளிப்பது உசிதமாகும். இத்தகைய வாக்குறுதிகள் தேவையற்றவை என்று தாழ்த்தப்பட்ட வகுப்பினரல்லாதவர்கள் குறைப்படலாம். ஆனால் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நிலையி லிருந்து இது இன்றியமையாத பாதுகாப்பு ஆகும். சிலர் சீர்திருத் தங்கள் பற்றித் தாழ்த்தப்பட வகுப்பினரிடையே பரவியுள்ள பெரும் அளவிலான அச்சம் இருப்பதால், இச்சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வந்துள்ள னர். சீர்திருத்தங்களுக்கு எதிரான அவர்களின் உணர்வு அவ்வளவு வலுவானதாக இருந்ததால், திரு. மான்டேகுக்கு அளித்த மனுக்கள் ஒன்றில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பின்வருமாறு பறைசாற்றினர்:

''பிரிட்டிஷார் கரங்களிலிருந்து நாட்டின் அதிகாரத்தை உயர் சாதி இந்துக்கள் என்றழைக்கப்படுபவர்களின் கரங்களுக்கு மாற்றுவதற்கான எந்த முயற்சிக்கும் எதிராக, எங்கள் கடைசித் துளி ரத்தம் வரை நாங்கள் போராடுவோம்.'' வாக்குறுதி அளிக்கும் முறையைப் போல் வேறு எதுவும் இத்தகைய பயங்களைப் போக்காது. அரசு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது; காரண காரியங்கள் அடிப்படையிலல்ல. புதிய அரசியல் சட்டத்தின் மீது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு நம்பிக்கை இல்லை எனில், இங்குக் கோரப்பட்ட உத்தரவாதச் சலுகைகளை அளிப்பதன் மூலம் சாதிக்க முடியுமென்றால், அவ்வாறு நம்பிக்கையை வாங்குவது அரசியல் விவேகமாகும்.

*பிற்சேர்க்கை அ*

**வகை எண்: 1**

*(1928-பிப்ரவரி 8-ஆம் தேதிய 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழிலிருந்து)*

**அந்தியஜாக்களுக்கு உயர்வு இல்லை**

சென்ற மாதம், உள்ளூர் நர நாராயணன் கோவிலில் நடை பெற்ற பம்பாய் சனாதன (வைதீக) அக்கிரவால் மார்வாடிகளின் கூட்டத்தில், மஹோமஹோபாத்தியாய பண்டிட் அனந்த கிருஷ்ண சாஸ்திரியின் (கல்கத்தா பல்கலைக் கழகப் பேராசிரியர்) உரை யானது இந்திய சமூகச் சீர்திருத்தத்தின் விரைந்த முன்னேற்றத் தில் ஓர் எல்லைச் சின்னமாகும். எவரும் கவனியாது புறக் கணிக்கப்படும் நிலையிலிருந்து அதனை மீட்க வேண்டியது அவசி யம். பிரசங்கத்திற்கான பொருள் ''பதித்துகளை (Patite) (வீழ்ச்சி யடைந்த தீண்டத்தகாதவர்கள்) உயர்த்துவதற்கான வழி'' என் பதாகும்; அக்கூட்டத்திற்குப் பம்பாயின் புதிய வைஷ்ணவ கோயிலைச் சேர்ந்த ஸ்ரீ ஜகத்குரு அனந்தாச்சர்ய மகராஜ் தலைமை வகித்தார். பல்வேறு சாதிகளும் நெடுங்காலமாக இருந்து வருகின் றன என்றும், காலம் முடியும் வரை அவை தொடர்ந்து நீடிக்கவே செய்யும் என்றும் சாத்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டி அவர் கூறினார். ''வீழ்ச்சி''யடைந்துள்ள (அந்தியஜாக்கள்) (Antyajas) வர்களை உயர்த்துவது பற்றி பேசுபவர்கள், வெறுமனே பேசிக் கொண்டுதானிருக்கிறார்கள் என்றும், நான்கு வருணங்களில் ஏதேனும் ஒன்றில் அவர்களை அனுமதிப்பது என்ற பொருளிலோ அல்லது தற்போதைய அவர்களது சமூக நிலையிலிருந்து அவர் களை மீட்கவோ செய்து, அவர்களை உயர்த்துவதற்கு எந்த வழியும் இல்லை என்றும் அவர் கூறினார்.

**வைதீகப் பெருந்தன்மை**

''உயர்த்தப்பட முடியாத வீழ்ச்சியடைந்தவர்களை'' உயர்த்து வதற்கான ஒரே வழி, தற்போது சிந்தனையற்ற, வைதீகமற்ற சாதி மக்கள் எல்லை மீறி ஆக்கிரமிப்புச் செய்துள்ள, அவர்களது மாற்ற முடியாத தொழில்களைத் தாராளமாக அவர்களுக்கு மீட்டுக் கொடுப்பதுதான் என்று அறிவாளியான பேச்சாளர் கூறினார். ''இந்த 20-ஆம் நூற்றாண்டில் காலை எழுந்தவுடன், மக்கள் தங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள காலைச் சடங்குகளை ஆற்று வதற்குப் பதிலாக, விலையுயர்ந்த தங்களது காலணிகளைச் சுத்தம் செய்ய அமருகின்றனர். அடுத்தது, அவர்கள் முகத்தைச் சிரைக்க அமருகின்றனர். சுதேசி முறையில் (ஆல், வேல் குச்சிகள் போன்ற வற்றால்) அவர்கள் தங்களது பற்களைத் துலக்குவதற்குப் பதிலாக, பற்களில் பொடியைத் தூவி, மயிர்க்குச்சுகளால் (brushes) பல் விளக்குகின்றனர். இவற்றைச் செய்வதன் மூலம், அவர்கள் செம்

மான்களையும் (மோச்சிகள்), நாவிதர்களையும் (ஹஜம்கள்) பற்குச்சி விற்போரையும் வேலை இழக்கச் செய்கின்றனர். ஒவ்வொருவரும், தர்மத்தின்படி தமது கடமையை ஆற்றட்டும்; அத்துடன் திருப்தி அடையட்டும். அந்திய ஜாக்களின் உயர்வுக்கு அது ஒன்றே வழியாகும்; வீழ்ச்சியடைந்த மக்களின் வாழ்வுக்கான வருவாய் வழியை அவர்களிடமிருந்து பறித்தோர், அதனை அவர்களுக்கு மீட்க வேண்டும்'' என்று மஹோ மஹோ பாத்தியாயா கூறினார்.

**வகை எண் 2**

*(1928 மார்ச்சு 2-ந்தேதிய ''டைம்ஸ் ஆப் இந்தியா' இதழிலிருந்து)*

**இந்தியாவில் அந்தியஜாக்கள்**

ஆனால், இவையெல்லாம், பிரிட்டிஷ் இந்தியாவில், இந்திய இந்தியாவில் அல்ல என்று தேசபக்தர்கள். எதிர்க்கக் கூடும். ஆம்! ஒரு பெரிய மத்திய இந்திய சமஸ்தானத்தில், தங்க, வெள்ளி ஆபரணங்களை அணிந்து, தீண்டத்தக்க சாதி ஹிந்துக்களைப் போன்று, முட்டாள்தனமாகத் தங்களைப் பாவித்துக் கொண்ட பலாய்களுக்கு, (Balais) சில நாட்களுக்கு முன்னர் என்ன நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். துரதிருஷ்டம் பிடித்த இந்த மக்கள்பால் மகாராஜாவே ஆழ்ந்த அனுதாபப்படும் பரோடா பிராந்தியத்தில் உள்ள அந்தியஜாக்கள் பற்றி 'சௌராஷ்டிரா' பத்திரிகை கூறுவதாவது: ''குஜராத்தி பள்ளிகளில் அந்தியஜா இனப் பையன்களைச் சேர்த்துக் கொள்ளும் ஆணை வெறும் தாளிலேயே உள்ளது. 95 சதவிகிதப் பள்ளிகளில், அந்தியஜா குழந்தைகள், குளிரிலும், வெயிலிலும், மழையிலும் வெளியே உட்கார்த்தி வைக்கப்படுகின்றனர்; மற்றும், அவர்கள் சாணி, சுள்ளி, கீழே போடப்படுபவை, குப்பை ஆகியவற்றைப் பொறுக்கி வருமாறு கூறப்படுகின்றனர்... 1927 ஏப்ரலில், மருந்துக்காக, ஓர் அந்தியஜா டாம் நகர் (Dam nagar) மருந்தகத்திற்குச் சென்றார். டாக்டர் அவரை 12 மணி நேரம் காக்க வைத்து, பின்னர் சற்று தூரத்திலிருந்து அவரைப் 'பரிசோதித்து', தூரத்திலிருந்தே மருந்தையும் கொடுத்தார். இது, பரோடா சட்டமன்ற அந்தியஜா உறுப்பினரது முன்னிலையிலேயே நடந்தது.'' நவசாரி அந்தியஜா ஆசிரமத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர், நோயுற்ற ஒரு பையனை, உள்ளூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ற போது, அங்குப் பணியிலிருந்த டாக்டர், அவர்களிருவரையும், ''போய் விடுங்கள் இங்கிருந்து! இது காந்தி ராஜ்யமல்ல. ஆனால் பரோடா சர்க்கார் ராஜ்யம்!'' என்ற அற்புதமான வார்த்தைகளைக் கூறி விரட்டி விட்டார்.

### வகை எண் 3

*(1926 மே 11-ந் தேதிய ''ஈவினிங் நியூஸ்'' பத்திரிகையிலிருந்து)*

## ஜம்புசார் நகராட்சியில் தீண்டத்தகாதவன்

#### நான்கு ஹிந்துக்கள் பதவி விலகல்

ஜம்புசார் நகராட்சிக்கு, ஒரு தீண்டத்தகாதவர் தேர்ந்தெடுக்கப் பட்டதை அடுத்து ஒரு பரபரப்பு ஏற்பட்டது. இதையொட்டி நான்கு ஹிந்து உறுப்பினர்கள் ராஜினாமா செய்தனர்; மீதி யுள்ளவர்கள், தீண்டத்தகாத உறுப்பினைரைத் தொடுவதில்லை என்றும், ஒரு வேளை தொட்டு விட்டால், உடனே குளித்துத் தீட்டு போக்கிக் கொள்வதாகவும் வாக்களித்தனர்.

### வகை எண் — 4

*('பாம்பே கிரானிக்கல்' பத்திரிகையிலிருந்து)*

## கொலாபா தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மாநாடு

மஹத்தின் கலகம் பற்றிய அறிக்கையொன்றை 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் 24-ந் தேதிய இதழ் தந்துள்ளது. ஆனால், அரை குறையாக இருப்பதாலும், என்ன நடந்தது என்ற சரியான எண்ணத்தைத் தரத் தவறியதாலும், அந்தக் கலகம் பற்றிய முழுமை யான, சரியான விவாதத்தைத் தருவது அவசியமாகிறது.

கொலாபா மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தவர் மாநாடு ஒன்று, மஹத்தில் 19 மற்றும் 20-ஆம் தேதிகளில் (அதாவது, 1927 மார்ச்சில்) டாக்டர் பி. ஆர். அம்பேத்கர், பார்-அட்-லா வின் தலைமையில் நடந்தது. மாநாட்டுக்கு 2,500க்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட இன மக்கள் வந்திருந்தனர்; பெருத்த உற்சாகம் நிலவிற்று. ஆனால், மாநாட்டின் பணி ஒரு கலகத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது; அதற்கான பொறுப்பு முழுவதும் மஹத்தைச் சேர்ந்த உயர் ஜாதி ஹிந்து நகரவாசிகளையே சாரும். மாநாட்டின் முதல் நாளன்று, தலைவர் உரையாற்றி முடித்த பின்னர், பல உயர் ஜாதி ஹிந்துக்கள், தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு, எல்லா வழிகளிலும் தாங்கள் உதவத் தயாராக இருப்பதாக உறுதி கூறி, உயர் ஜாதி ஹிந்துக்களின் மீது தாழ்த்தப்பட்ட வகுப்பினர் வெறுப்பினை வளர்க்கக் கூடாது என்று வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்து, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் உயர்வுக்கு, மேல் ஜாதி ஹிந்துக்கள் என்ன செய்ய வேண்டுமென்பதை வகுத்து, இதர பலவற்றுடன், ஒரு தீர்மானத்தையும் 'சப்ஜக்ட் கமிட்டி' வரைந் தது. குடிப்பதற்கான நீரைப் பெறுவதற்கு, தாழ்த்தப்பட்ட வகுப் பினர் மஹத் நகரில் பெரும் கஷ்டப்படுகின்றனர், மற்றும் இந்தக் கஷ்டத்தை மஹத் நகரில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டு மின்றி, அரசாங்க அலுவல் நிமித்தமோ, அல்லது சொந்தத் தனிப்

பட்ட விஷயங்களுக்காகவோ, மஹத்திற்கு வரும் பல கிராமங்களின் தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் இதே கஷ்டத்தை அனுபவிக்கிறனர் என்ற உண்மையை, சிலர் சப்ஜக்ட் கமிட்டியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். மாநாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, ஒவ்வொரு நாளும் ரூ. 15 பெறுமானமுள்ள நீரை வாங்க வேண்டிய அளவுக்கு, நீர் பற்றாக்குறை அவ்வளவு தீவிரமாக இருந்தது. சில காலத்திற்கு முன்னர், நகரிலுள்ள குளங்கள் பொதுமக்கள் அனைவருக்கும் திறந்து விடப்படுவதாக, நகர சபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது; ஆனால், அது பற்றிய அறவிப்புப் பலகைகள் வைக்கப்படாததால், அதை நாட மக்கள் அஞ்சினர். எனவே, மாநாட்டில் பங்கு கொண்ட உயர் வகுப்பினரது உணர்வை, இந்த விஷயத்தில் கருத்தில் கொண்டு, மாநாட்டினர் ஒரு குழுவினராக சௌதார் குளத்திற்குச் சென்று, தண்ணீர் எடுப்பதற்கு தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குள்ள உரிமையை நிலை நாட்டுவதென சப்ஜக்ட் கமிட்டி தீர்மானித்தது.

## ஒரு தவறான வதந்தி

ஆக, 20-ஆம் தேதி காலை மாநாடு கூடிய போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, உயர் வகுப்பினர் என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவிக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கொண்டு வந்த முதல் தீர்மானம் மாநாட்டின் முன்னர் கொண்டுவரப்பட்ட போது, திருவாளர்கள் புருஷோத்தம் பிரபாகர் ஜோஷியையும், கோவிந்த் நாராயண் தார்யாவையும் (உயர் ஜாதிப் பிரதிநிதிகளாக) தீர்மானத்தின் மீது உரையாற்றுமாறு தலைவர் அழைத்தார். கலப்புத் திருமணம் பற்றிய ஒரு தீர்மானத்திலிருந்த ஒரு பிரிவைத் தவிர, அவர்களிருவரும் தீர்மானத்தை ஒப்புக் கொண்டனர். இவ்வாறாக, தனக்குப் பின்னே பொதுவான ஆதரவு இருப்பதை உறுதிப்படுத்திக் கொண்டதனால், மாநாட்டுக் கூட்டம் முடிவடைந்த பின்னர், அது ஒரு குழுவாக, அந்தக் குறிப்பிட்ட குளத்திற்குச் சென்றது. அந்த ஊர்வலம் மிக அமைதியான தொன்றாக இருந்தது; எல்லாமே அமைதியாக நடந்து முடிந்தது. ஆனால், அதற்கு இரண்டு மணி நேரத்திற்குப் பின்னர், நகரின் சில தீய உள்ளம் கொண்ட தலைவர்கள், வீரேஷ்வர் கோவிலுக்குள் நுழைய தாழ்த்தப்பட்ட மக்கள் திட்டமிட்டுள்ளனர் என்ற பொய்யான வதந்தியைப் பரப்பினர்; அதையடுத்து, மூங்கில் கழிகளை ஆயுதமாகக் கொண்ட, போக்கிரிகளைக் கொண்டதொரு பெரிய கும்பல் அணி திரட்டப்பட்டது. அந்தக் கும்பல் விரைவிலேயே தாக்குதலுக்கு ஆயத்தமாகியிருந்தது; உடனே, தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் இரத்தத்தைக் குடிக்க ஆர்ப்பரிக்கும், கிளர்ந்தெழும் ரௌடிகளால் நகர் கொந்தளித்தது.

## இருபது பேருக்குக் காயம்

தங்களது கிராமங்களுக்குக் கலைந்து செல்லுமுன்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் உணவருந்துவதில் ஈடுபட்டிருந்தனர். அவர்

யெனில், அந்த மருத்துவரே முன்வந்து, தனது மனிதத் தன்மை யற்ற நடத்தையால், சமூகத்திற்கு அவர் இழைத்த கொடுமைக்குத் தகுந்த பிராயச்சித்தம் செய்வார் என்று நான் நம்புகிறேன்.

## படித்துச் சிந்தித்து, அழுங்கள்

கத்தியவாதின் என்ற கிராமத்தில், ஒடுக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்காக ஒரு பள்ளிக் கூடம் உள்ளது. அதன் ஆசிரியர் 'தேத்' அல்லது நெசவாளர் (தீண்டத்தகாதவர்) வகுப்பினைச் சேர்ந்த ஒரு பண்பாடுள்ள, தேசபக்த மனிதராவார். மேன்மைதங்கிய கெய்க்வாடு மஹாராஜாவின் கட்டாயக் கல்விக் கொள்கையினால் கல்வி பெற்று, தனது வகுப்பினைச் சேர்ந்தவர் களது மேம்பாட்டிற்கு அவர் தன்னாலான சிறிய பணியினை ஆற்றி வருகிறார். தீண்டத்தகாத வகுப்பினைச் சேர்ந்தவர் என்றே எவரும் அவரை அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி, தூய்மையான பழக்கங்களையும், பண்பட்ட தன்மைகளையும் கொண்ட மனிதர் அவர். ஆனால், கத்தியவாட் என்னும் பழமை வாதிகள் மிகுந்த கிராமத்தில், அவர் தனது சொந்தக் குழந்தை களுக்கு கல்வி கற்பிக்கும் அதிர்ஷ்டம் அல்லது துரதிருஷ்டத்தின் காரணமாக, ஒவ்வொருவரும் அவரைத் தீண்டத்தகாதவர் என்று கருதுகின்றனர். அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், அவர் அமைதியாகத் தனது வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். என்றாலும் கூட, சகிக்க முடியாத நிலைகளின் கீழ் வசிக்கும் எத்த கைய பொறுப்பான மனிதரும், தனது கோபத்தையும், வேதனையை யும் வெளிப்படுத்தவே செய்வர்; அந்தப் பள்ளி ஆசிரியரிட மிருந்து வந்த கீழ்வரும் கடிதங்களிலிருந்து அது தெளிவாகிறது. அதிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும், அவலத்தால் நிறைந்துள்ளது. நான் வேண்டுமென்றே, அந்தக் கிராமத்தின் பெயரையும், அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள எல்லா மக்களது பெயர்களையும் கூறாமல் விடுகிறேன்; இல்லையெனில் அந்தப் பள்ளி ஆசிரிய ருக்கு மேலும் இடையூறுகள் ஏற்படும்.

நமஸ்கார். என் மனைவிக்கு 5-ஆம் தேதி ஒரு குழந்தை பிறந் தது. 7-ம் தேதியன்று அவளுக்கு உடல் நலம் குறைந்தது; வயிற்றுப் பெருக்கு ஏற்பட்டு, அவள் தனது பேச்சினை இழந்தாள்; மூச்சு விடச் சிரமப்பட்டாள்; மார்பில் வீக்கம் ஏற்பட்டு, விலா எலும்பு களில் மிகுந்த வலி ஏற்பட்டது. நான், டாக்டர்—ஐ அழைக்க எண்ணினேன். ஆனால், அவர், "நான் தீண்டத்தகாதோரின் குடியிருப்புகளுக்கு வரமாட்டேன்; அவளைப் பரிசோதிக்கவும் மாட்டேன்" என்று கூறினார். பிறகு நான் நாகர்ஷெத்—மற்றும் காசியா தர்பார்—ஐ அணுகி, எனக்காக அவர்களைப் பரிந் துரைக்குமாறு மன்றாடினேன். அவர்கள் வந்தார்கள். டாக்டருக் கான கட்டணமாக ரூ. 2 தருவதற்கு நாகர்ஷெத் எனக்குப் பிணை யாக நிற்க ஒப்புக் கொண்டதன் பேரிலும், நோயாளி தீண்டத்

தகாதவனின் குடியிருப்பிலிருந்து வெளியே கொண்டு வரப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும், டாக்டர் வர ஒப்புக் கொண்டார். இரண்டு நாளே ஆன குழந்தையைக் கொண்டிருந்த அவளை நாங்கள் வெளியே கொண்டு வந்தோம். டாக்டர் அவரது தர்மாமீட்டரை ஒரு முஸ்லீமிடம் கொடுத்து, என்னிடம் தரச் சொன்னார். நா்ன் தர்மாமீட்டரை நோயாளிக்கு வைத்துப் பார்த்து, முஸ்லீமிடம் கொடுத்து, அவர் அதை டாக்டரிடம் தந்தார். அப்போது மணி எட்டு இருக்கும். ஒரு விளக்கு வெளிச் சத்தில் தர்மாமீட்டரைப் பார்த்த பின், "அவளுக்கு நிமோனியா காய்ச்சலும், மூச்சுத் திணறலும்" இருப்பதாக டாக்டர் சொன்னார். அதன் பின்னர் டாக்டர் போய், மருந்து அனுப்பினார். நான் கடையிலிருந்து ஆளிவிதை வாங்கி வந்து, ஆளிவிதை மாவுத் துணிக் கட்டை வீக்கத்திற்கு இட்டு, மருந்தையும் கொடுத்தேன். டாக்டர் அவளைப் பரிசோதிக்க மனமிரங்கவில்லை; சற்று தூரத்தி லிருந்து அவளைப் பார்த்தார். நான் அவருக்குக் கட்டணமாக ரூ. 2 கொடுத்தேன். அது ஒரு தீவிர நோய். எல்லாம் ஆண்டவன் அருள்!

II

என் வாழ்வின் ஒளி அணைந்து விட்டது. இன்று மதியம் 2 மணிக்கு அவள் இறந்து விட்டாள்.

இதற்கு விளக்கம் தேவையில்லை. தர்மாமீட்டரைத் தானே வைத்துப் பார்க்க மறுத்து, அதனைத் தூய்மைப்படுத்துவதற்கு ஒரு முஸ்லீமின் மூலமாகக் கையாண்டு, இரண்டு தினங்களாகப் படுக்கையில் கிடக்கும் ஒரு நோயாளிப் பெண்ணை, ஒரு நாயை யும், பூனையையும் விட மோசமாக நடத்திய படித்த மனிதனான டாக்டரது காட்டுமிராண்டித்தனம் பற்றி என்ன சொல்வது? இத்தகைய கொடுமையைச் சகித்துக் கொள்ளும் சமூகத்தைப் பற்றி என்ன சொல்வது? அது குறித்துச் சிந்தித்து, அழ முடியும்.

**ஏ. வி. தக்கர்**

**வகை எண் — 6**

*(1.4.28 மற்றும் 10.2.28 தேதிய 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ்களிலிருந்து)*

## ஹிந்துக்களின் கொடுங்கோன்மை

**பாலாய்களுக்கான விதிகள், வாழ்க்கை முறை வரையறுக்கப்படுகிறது.**

இந்தூர் ஜில்லாவிலுள்ள கனாரியா, பிச்சோலி ஹஃப்சி, பிச்சிலி, மர்தானா மற்றும் சுமார் 15 கிராமங்களைச் சேர்ந்த, உயர் ஜாதி ஹிந்துக்கள், அதாவது, கிராமங்களின் படேல்கள், மற்றும் பட்வாரிகள் உள்ளிட்ட கபோடா, ராஜ்புத், பிராமணர்கள்

ஆகியோர் சென்ற மே மாதம், அந்தந்த கிராமங்களிலுள்ள பலாய் வகுப்பினர், தங்களிடையே வாழ வேண்டுமெனில், கீழ்க்கண்ட விதிகளுக்கு அவர்கள் கட்டுப்பட வேண்டுமென்று தாக்கீது பிறப் பித்தனர் :

1. ஜரிகை இழைகள் கொண்ட தலைப்பாகையை பலாய் இனத்தவர் அணியக் கூடாது. 2. ஆடம்பர அல்லது வண்ணக் கரைபோட்ட வேஷ்டிகளை அவர்கள் கட்டக் கூடாது. 3. எந்த ஹிந்துவும் இறந்து விட்டால், அந்தச் சாவுச் செய்தியை இறந்த வரின் உறவினர்களுக்கு — அவர்கள் எவ்வளவு தொலைவில் வசிப் பவர்களாயிருப்பினும், — அறிவிக்க வேண்டும். 4. எல்லா ஹிந்து திருமணங்களின் போதும், ஊர்வலத்தின் முன்னும், திருமணத் தின் போதும் பலாய்கள் வாத்திய இசை வழங்க வேண்டும். 5. பலாய் இனப் பெண்கள் தங்க அல்லது வெள்ளி ஆபரணங் கள் அணியக் கூடாது; ஆடம்பர ஆடைகளை அணியக் கூடாது. 6. ஹிந்து மாதர் அனைவரது மகப் பேறுகளையும் பலாய் பெண் கள் கவனித்துக் கொள்ள வேண்டும். 7. பலாய் இனத்தவர் தங்க ளது சேவைக்கு ஊதியம் எதுவும் கோரக் கூடாது; ஒரு ஹிந்து மனமுவந்து கொடுப்பதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். 8. இந்த நிபந்தனைகளுக்குப் பலாய் இனத்தவர் இணங்கி நடக்க ஒத்துக் கொள்ளாவிடில், அவர்கள் கிராமங்களை விட்டு வெளியேறி விட வேண்டும்.

## பலாய்கள் இணங்க மறுப்பு

பலாய் இனத்தவர் அதற்கு இணங்க மறுத்தனர்; ஹிந்துக்கள் அவர்களுக்கெதிராக நடவடிக்கை மேற்கொண்டனர். கிராமத்துக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க அவர்கள் அனுமதிக்கப்பட வில்லை; அவர்களது ஆடு, மாடுகள் மேய்ச்சலுக்கு அனுமதிக்கப் படவில்லை. ஒரு ஹிந்துவுக்குச் சொந்தமான நிலத்தின் வழியே செல்ல பலாய் இனத்தவருக்குத் தடைவிதிக்கப்பட்டது; அதனால், தனது சொந்த வயலையே பலாய் இனத்தைச் சேர்ந்தவர்கள் எட்ட முடியவில்லை.

பலாய் இனத்தவரின் வயல்களில் ஹிந்துக்கள் தங்களது ஆடு, மாடுகளை மேய விடவும் செய்தனர். இந்த அடக்குமுறை அட்டூழி யத்திற்கெதிராக, பலாய் இனத்தவர் தர்பாருக்கு விண்ணப்பம் சமர்ப்பித்தனர்; ஆனால், உரிய நேரத்தில் அவர்களுக்கு விமோ சனம் கிடைக்காது ஒடுக்குமுறை தொடர்ந்ததால், நூற்றுக்கணக் கான பலாய் இனத்தவர், தங்கள் மனைவி, மக்களுடன், பல தலைமுறைகளாகத் தாங்கள் வாழ்ந்து வந்த தங்களது மூதாதையர் கள் வாழ்ந்த தங்களது வீடுகளை விட்டு, அண்டையிலுள்ள சமஸ்தானங்களுக்கு, அதாவது, தார், திவாஸ், பக்லி, போபால், குவாலியர் மற்றும் இதர சமஸ்தான கிராமங்களுக்கு இடம்பெயர நேரிட்டது.

## கட்டாய ஒப்பந்தம்

இந்தோர் நகரத்திற்கு வடக்கே 7 மைல் தொலைவிலுள்ள ரியோடி கிராமத்து ஹிந்துக்கள், சில தினங்களுக்கு முன்னர், இதர கிராமங்களைச் சேர்ந்த ஹிந்துக்கள் பலாய்களுக்கு எதிராக வகுத்துள்ள விதிகளுக்கேற்ப, பலாய்கள் நடந்து கொள்வதற்கு முத்திரைத் தாள் ஒப்பந்தத்தில் அவர்கள் கையெழுத்திட வேண்டு மென்று ஆணையிட்டனர். பலாய் இனத்தவர் அதற்கு இணங்க மறுத்தனர். அவர்களில் சிலர் ஹிந்துக்களால் உதைக்கப்பட்ட தாகக் கூறப்படுகிறது; பலாய் இனத்தைச் சேர்ந்த ஒருவன், ஒரு கம்பத்தில் கட்டப்பட்டு, ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டால், அவன் அவிழ்த்து விடப்படுவான் என்று கூறப்பட்டது. அவன் ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டான்; விடுவிக்கப்பட்டான். அடுத்த நாள், அதாவது, டிசம்பர் 20-ம் தேதி, சில பலாய் இனத்தவர், பிரதம மந்திரியிடம் சென்று, ரியோடி கிராமத்து ஹிந்துக்களிடம் தாங் கள் படும் கொடுமை பற்றி புகார் கொடுத்தனர். அவர்கள் ஜில்லாவின் சுபாவிடம் (மாவட்ட) அனுப்பப்பட்டனர். இந்த அதிகாரி, போலீசின் உதவியுடன், கிராமத்தில் விசாரணை நடத்தி, ஹிந்துக்களுக்கு எதிராக இந்திய பீனல் சட்டம், பிரிவு 342 மற்றும் 147-ன் கீழும், பலாய் இனத்தவருக்கு எதிராகப் பிரிவு 147-ன் கீழும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பரிந் துரைத்தார்.

## கிராமங்களை விட்டு பலாய்கள் வெளியேறுகின்றனர்
## ஜாதிக் கொடுமை
## சட்டம் குறித்த அறியாமை ஓர் இடையூறு

சில கிராமங்களிலுள்ள ஹிந்து குடியிருப்போரால், பலாய்கள் நடத்தப்படும் விதத்தில் எந்த மேம்பாடும் ஏற்படவில்லை. உயர் சாதி ஹிந்துக்களால், பலாய் இனத்தவர் கொடுமைப்படுத்துவது குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தோர் ஜில்லாவின் தெபல்பூர் பர்கானாவிலிருந்து மட்டுமே, பெரும் எண்ணிக்கையி லான பலாய் இனத்தவர், தங்கள் வீடுகளை விட்டு அருகிலுள்ள சமஸ்தானங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். பலாய் இனத்தவர் வெளியேறுமாறு வற்புறுத்தப்பட்ட கிராமங்கள்; படோலி, அஹிர், கெராய், பிப்போடா, மூர்கெரா, பமால்பூர், கரேடா, சத்வாடா, நியூரி பான், சனாவதா, அர்னோடி, கத்தேடி மற்றும் சனாவ்தா ஆகியவை. பாமல்பூர் கிராமத்திலிருந்து முற்றிலுமாக அவர்கள் அகன்று விட்டனர்; பலாய் இனத்தைச் சேர்ந்த எந்தவொரு ஆண், பெண், குழந்தையும் அங்குக் கிடையாது. மேற்கூறிய கிராமங்கள் ஒன்றினைச் சேர்ந்த நந்த பலாய் என்பவர், அந்தக் கிராமத்து ஹிந்துக்களால் கடுமையாக உதைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஒரு கிராமத்தில், பலாய் இனத்தைச் சேர்ந்தவர்களது எல்லாக் குடியிருப்புகளும், ஹிந்துக்களால் எரிக்கப்பட்டன என்றும்,

குற்றம் புரிந்தோர் எவருமே கண்டுபிடிக்கப் பட வில்லை என்றும் ஒரு செய்தி கூறுகிறது.

பலாய் இனத்தவர் ஏதுமறியா கிராமத்து மக்கள்; சட்ட நடவடிக்கை பற்றி அவர்களுக்கு எதுவும் தெரியாது; அரசுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பினால், தங்களுக்குத் தேவையான அனைத்தும் செய்யப்பட்டு விடும் என்று நினைக்கின்றனர். ஒரு புகாரை இறுதிவரைத் தொடருவதற்கான அறிவோ அல்லது அதற்கான வழி வகைகளோ, நடைமுறைகளோ அற்றவர்கள்; சில சந்தர்ப்பங்களில், தங்கள் குற்றசாட்டுகளுக்கு ஆதரவாக சாட்சிகளைக் கொணராததாலோ அல்லது விசாரணையின் போது ஆஜராகத் தவறியதாலோ, மாஜிஸ்டிரேட்டிற்கு, புகாரினைத் தள்ளுபடி செய்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லாது போனதாகவும் கூறப்படுகிறது.

**வகை எண். 7**

*(1928, பிப்ரவரி 25-ந் தேதிய 'பாம்பே கிரானிக்கல்' இதழிலிருந்து)*

**வைதீகம் வெறிபிடித்தோடுகிறது**
**''தீண்டத்தகாதவர்கள்'' காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்படுவதாகக் குற்றச்சாட்டு**
**மஹர்களாக இருக்கும் குற்றம்**

அஹமதாபாத்தைச் சேர்ந்த திரு.கேஷவாகி ரான்சோத்ஜி வாகேலா என்பவர் பாஹிஷ்கிரிய் ஹித்காரினி சபாவின் தலைவரான டாக்டர் பி. ஆர். அம்பேத்கரிடம் கீழ்வருமாறு அறிவிக்கிறார்: பாபூராவ் லஷ்மண் என்பாரும், அவரது சகோதரர் சௌராவும், கடந்த ஆறு ஆண்டுகளாக அஹமதாபாத்தில் வசிப்பவர்கள். அவர்கள் மராத்தா இனத்தைச் சேர்ந்த டெக்கானிலுள்ள சிலருடன் கலந்துறவாடுவதுண்டு. சௌராவின் மகன்களான தாமூ மற்றும் லஷ்மண் இருவரும், மராத்தாக்களின் பஜனை கோஷ்டியில் பங்கேற்பதுண்டு. தாமூ, லஷ்மண் சகோதரர்கள், மஹர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று அண்மையில் மராத்தாக்களுக்குத் தெரிய வந்தது; அதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, சூரத் மற்றும் அஹமதாபாத்திற்கும் இடையே ஓடும் பார்சல் ரயிலில் வேலை செய்யும் இரண்டு மஹர்கள் விசேஷமாக அழைக்கப்பட்டு தாமூவையும், லஷ்மணையும் அடையாளம் காட்டுமாறு பணிக்கப்பட்டனர். தாமு, லஷ்மண் இருவரும் மஹர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று உறுதி செய்யப்பட்ட பின்னர், அவர்களிருவரும், 11-ஆம் தேதி நடுநிசியில் பந்தேரிபோலில், காலுப்பூரில் ஒரு பஜனைக் கோஷ்டிக்கு அழைக்கப்பட்டனர். அப்போது அவர்களிடம், அவர்கள் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்று கேட்ட போது, அவர்களிருவரும் தாங்கள் சோம்வான்ஷிகள் என்று

பதிலளித்தனர். இந்த பதில் மராத்தாக்களுக்குக் கோபமூட்டியது; அவர்கள் தங்களையும், தங்கள் இடங்களையும் கறைப்படுத்தியதற் காக, தாராளமாக வசைவுக்கு உள்ளானார்கள். மஹார் சகோதரர் கள், மராத்தாக்களால் தாக்கவும் பட்டனர். சகோதரர்களில் ஒருவர் தங்க மோதிரம் ஒன்று அணிந்திருந்தார். அது அவரிட மிருந்து வல்லடியாகப் பறிக்கப்பட்டு ரூ. 11-க்கு விற்கப்பட்டது. இந்தத் தொகையில் ரூ. 6/- சகோதரர்களை இனங்காட்ட தூரத்தி லிருந்து அழைக்கப்பட்ட மஹார்களுக்குக் கொடுக்கப்பட்டது. தங்களை வீட்டிற்குச் செல்ல அனுமதிக்குமாறு இரு சகோதரர் களும் கெஞ்சினர்; ஆனால், மராத்தாக்கள், அவர்கள் ரூ. 500/- அபராதமாகக் கொடுத்தாலொழிய அவர்களை விட்டு விட மறுத்த னர். அவ்வளவு பெரிய தொகையைத் தங்களால் கொடுக்க முடியாது என்று சகோதரர்கள் கெஞ்சவே, மராத்தாக்களில் ஒருவர், மஹார் சகோதரர்களுக்கு ரூ. 125/- அபராதம் விதிக்க வேண்டுமென்று கூறினார். ஆனால், மராத்தாக்களில் ஒருவன் அபராதம் விதிப்பதை எதிர்த்து, தங்களது ஜாதியை மறைக்கும் குற்றத்தைப் புரிந்த மஹார்களுக்கு, வெறும் அபராதம் விதிப்ப துடன் திருப்தியடையாது, அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கூறினான். அவ்வாறு தீர்மானித்து, அந்த மஹார் சகோதரர்கள் காலை 9 மணி வரை அங்கேயே வைக்கப்பட்டு, பின்னர் காட்டுமிராண்டித்தனமான அவமதிப்புக்கு உட்படுத்தப் பட்டனர். இடது புறமுள்ள அவர்களது மீசையும், வலது புற முள்ள புருவங்களும் மழித்தெடுக்கப்பட்டன. கரியும், தூசுக்களும் எண்ணெயுடன் கலந்து அவர்கள் உடல்களில் பூசப்பட்டது; பழைய காலணிகளைக் கோர்த்து அவர்களது கழுத்தில் மாலை யாகத் தொங்க விடப்பட்டது. அவர்களில் ஒருவரது ஒரு கையில் விளக்குமாறும், மற்றொரு கையில், உயர் ஜாதி மக்களைத் தொட்டதற்காக அளிக்கப்பட்டுள்ள தண்டனை என்று எழுதிய வாசகம் பொறித்த அட்டையும் கொடுக்கப்பட்டது. மஹார் சகோத ரர்கள் அந்த நிலையில் சுமார் 75 பேர் அடங்கிய ஊர்வலமாக, முன்னணியில் கொட்டுகள் முழங்க அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்த இரண்டு மஹார் சகோதரர்களாலும், போலீசில் ஒரு புகார் கொடுக்கப்பட்டது. குற்றவாளிகள் தாழு, லஷ்மண் இரு வரும் நடத்தப்பட்ட விதத்தை ஒப்புக் கொண்டு, ஆனால், அந்த இருவரும் தங்களது குற்றத்திற்குத் தண்டனையாக மனமுவந்து அந்தத் தண்டனையை ஏற்றுக் கொண்டனர் என்று கூறினர். தூஷணைக்குள்ளாகி, தாக்கப்பட்டு, கடுமையான தண்டனைக்குட் படுத்துவதாகப் பயமுறுத்தப்பட்டு, காட்டுமிராண்டித் தனமான அவதூறுகளுக்கு உள்ளான தாழுவும், லஷ்மணும் ஏதும் செய்ய இயலாதவர்களாக நின்றனர். இந்தச் சம்பவம், தீண்டத்தகாத இனங்கள் என்று அழைக்கப்படும் மக்களிடையே பெருத்த பர பரப்பை ஏற்படுத்திற்று; முறையிடுபவர்களுக்குத் தகுந்த சட்டரீதி

### தீர்மானங்களும், செயல்களும்

அந்தச் சீர்திருத்தவாதி வருத்தத்துடன் தொடர்ந்து கூறினார்: "தீண்டாமை என்பது ஹிந்து தர்மத்தின் மீதுள்ள ஒரு கறை என்று மகாத்மாஜீ பிரகடனம் செய்தார். ஹிந்து சமூகத்திலிருந்து தீண்டாமையை அகற்றாவிட்டால், நாம் சுயராஜ்யம் பெற முடியாது என்று சுவாமி ஷ்ரத்தானந்தும், லாலா லஜபதிராயும் என்றுமே கூறி வந்துள்ளனர்; கடந்த ஏழு ஆண்டுகளாக, அதை அகற்றுவதற்கான தீர்மானங்களைக் காங்கிரஸ் நிறைவேற்றி வந்துள்ளது; ஆனால், இந்த நடவடிக்கைகளின் நடைமுறை விளைவுதான் என்ன? மேற்கூறியதைப் போன்ற வாசகங்கள், உயர்ந்த கல்வி பெற்றவர்களின் வாய்களிலிருந்து வெளிப்படுகின்றன! நாம் காங்கிரசில் தீர்மானங்களை நிறைவேற்றுகிறோம்; தீண்டத்தகாதவர்கள் கோவில்களில் நுழையவும், பொதுக் குளங்களும், கிணறுகளும் அவர்களுக்குத் திறந்து விடப்பட வேண்டுமென்றும் ஹிந்து சபா பிரச்சாரம் செய்கிறது. ஆனால், அவற்றை நடைமுறையாக்குவதற்கான காலம் வரும்போது, நாம் தீண்டத்தகாதவர்களைக் கண்டிக்கிறோம்; அல்ல, அவர்களைத் தாக்கி, அவர்களுக்கெதிராகச் சட்டத்தைப் பயன்படுத்தி, அவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புகிறோம்."

### வகை எண் 11

தாபோலியில் (ரத்னகிரி ஜில்லா) நடைபெற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பினரது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1 (a) இறந்து போன பிராணிகளின் இறைச்சியை உண்ண மறுத்தமைக்காக, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு எதிராக, இந்த ஜில்லாவிலுள்ள, உயர் ஜாதி ஹிந்துக்கள் என்று அழைக்கப்படுவோர் நடத்தி வரும் அடக்குமுறை இயக்கம் குறித்து, இந்த மாநாடு தனது கடும் சீற்றத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

b) தாழ்த்தப்பட்ட இனங்களைச் சேர்ந்தவர்களது கால்நடைகளை பட்டியில் அடைப்பதன் மூலமும், அவர்களைத் தாக்குவதன் மூலமும், அவர்களுக்கெதிராகச் சரியான சமூகக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதன் மூலம் கடைகளிலிருந்து அவர்களது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகளைப் பெறுவதைத் தடுப்பதன் மூலமும், உயர்ஜாதி ஹிந்துக்கள் என்போர் இழைக்கும் அநீதிக்கும் கொடுமைக்கும் எதிராக, தாழ்த்தப்பட்ட இன மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குப் பதிலாக, இந்த மாவட்டத்தைச் சேர்ந்த போலீஸ் அதிகாரிகளும், மாஜிஸ்ட்ரேட்டுகளும், அவர்கள் மீது ஒழுங்காக வசை பாடுகின்றனர் என்பதைக் காண இந்த மாநாடு பெருத்த வருத்தம் தெரிவிக்கிறது.

c) செத்த பிராணிகளின் இறைச்சியைத் தின்னவும், அவற்றைச் சுமக்கவும், பிச்சை எடுக்கவும் மற்றும் இதர தூய்மையற்ற

காரியங்களைச் செய்யவும் மறுப்பதால், உயர் ஜாதி ஹிந்து கிராமத்தினர், வாட்டன்தர் மஹர்களுக்கு வழக்கமாக வழங்கி வந்த பலூடா ஊதியத்தைத் தராமலிருப்பதற்கெதிராக அரசாங்கம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று, இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

2. a) தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கெதிராக, அட்க்குமுறை இயக்கத்திற்குப் போலீஸ் படேல்களே பல கிராமங்களிலும் ஆதரவு அளிப்பதாகத் தெரிய வந்துள்ளதால், அத்தகைய போலீஸ் படேல்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்த மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

b) தாழ்த்தப்பட்ட இனத்தவரின் பாதுகாப்புக்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்த வகுப்பினரிடையேயிருந்து ஒரு விசேஷ போலீஸ் இன்ஸ்பெக்டரை நியமிக்கவும், போலீஸ் பணிக்கு அந்த இன மக்களை அனுமதிக்குமாறும், இந்த மாநாடு, அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

c) வாத்வால், மாத்வென், துல்சி, தெகோன், மன்டன்காட், சதாரா ஆகிய கிராமங்களில் வசிக்கும் உயர்ஜாதி ஹிந்துக்கள் என்றழைக்கப்படுவோர், தாழ்த்தப்பட்ட மக்கள் அந்தக் கிராமங்களில் வசிப்பதையே அசாத்தியமாக்கும் வகையில், அவர்களைக் கொடுமைப்படுத்தி, சமூகத் தடைகளுக்கும், பகிரங்கத் தாக்குதல்களுக்கும் உள்ளாக்குவதால், தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த இராணுவ ஓய்வுபெற்றோரின் தலைமையில், தண்டனை தரும் போலீசை உடனடியாக, நியமிக்க வேண்டுமென அரசாங்கத்தை இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

3. தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்குப் போதிய பாதுகாப்பின்றி, இந்தியாவுக்கு மேலும் தன்னாட்சி உரிமை கொடுக்கப் படக் கூடாதென்ற அபிப்பிராயத்தை இந்த மாநாடு உறுதியாக வலியுறுத்துகிறது.

## வகை எண்: 12

*(20.10.27 தேதியிட்ட 'பாம்பே கிரானிக்கல்' இதழிலிருந்து)*

குடிதண்ணீர் பானைகள் போன்ற சிறிய விஷயத்தில் பள்ளிகள் கமிட்டி பயத்தால் பீடிக்கப்பட்டு, தன்னைக் கேலிக்குள்ளாக்கியுள்ளது. முனிசிபல் பள்ளிகளில், எந்தவிதமான ஜாதி வேறுபாடும் காட்டப்படக் கூடாதென்ற மாநகராட்சியின் தீர்மானம் இருந்தபோதிலும் கூட, ''தாழ்த்தப்பட்ட'' இனக் குழந்தைகளுக்குத் தனியாகக் குடிநீர்ப் பானைகள் வைக்கப்பட்டுள்ளன. பள்ளிகள் கமிட்டியின் துணைக் கமிட்டியொன்று, எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே வகைப் பானைகள்தான் வைக்கப்பட வேண்டுமென்று பரிந்துரை வழங்கியுள்ளது. ஆனால், பள்ளிக் கமிட்டியின் உறுப்பினர்கள், இந்தப் பரிந்துரை குறித்து தீவிர

*டாக்டர் அம்பேத்கர்:* பம்பாய் அரசாங்கம் சமர்ப்பித்த குறிப்பாணையில் சுட்டிக்காட்டியபடி, தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 14,78,390 பேர். குறிப்பாணை (தொகுதி 7) பக்கம் 3-ல் இதைக் காணலாம்.

*3. "1921 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தேட், மாங், மஹர், ஹோலியா ஆகிய பிரிவுகளைக் கொண்ட தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 14,78,390 பேர் என்று அந்தக் குறிப்பாணை கூறுகிறது. இந்தப் புள்ளி விவரம் சரியானது என்று நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?*

*டாக்டர் அம்பேத்கர்:* என்னுடைய குறிப்பாணையின் 39-ஆம் பக்கத்தில் நான் கொடுத்துள்ள எண்ணிக்கை 28 லட்சம் என்று இருப்பதைக் காணலாம்.

*4. இந்த எண்ணிக்கை 28 லட்சம் என்று இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களா?*

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

*5. இந்த வேறுபாடு எப்படி ஏற்பட்டது?*

*டாக்டர் அம்பேத்கர்:* 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தஸ்தாவேஜுகள், தொகுதி 8, பம்பாய் மாநிலப் பகுதி 2, பக்கம் 176-ல் கண்டுள்ளபடி பம்பாய் மாநில அரசாங்கம் மக்கட் தொகைப்புள்ளி விவரங்களைத் தந்துள்ளது என்று நினைக்கிறேன். ஆனால், நான் அதே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தஸ்தாவேஜுகளின் முதல் தொகுதி இரண்டாம் அத்தியாயத்திலுள்ள புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். வெவ்வேறு மாநிலங்களின் புள்ளி விவரங்களைத் தொகுத்து மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் அளித்திருக்கும் கணக்கைத்தான் நான் "இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை" என்ற தலைப்பில் எனது குறிப்பாணையின் 39 ஆம் பக்கத்தில் அளித்திருக்கிறேன். இங்கே கொடுக்கப்பட்டிருக்கும் இரண்டு வகையான புள்ளி விவரங்களுக்கிடையே வேறுபாடு இருப்பதைக் காண்கிறோம். இந்தப் புள்ளி விவரங்கள், அதே போல மாநிலப்புள்ளி விவரங்களும், மத்தியப் புள்ளி விவரங்களும், எத்தகைய வேறுபாடுமின்றித் துல்லியமாக இருக்க இயலாது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் அளித்த குறிப்புக்களை நான் என்னுடைய குறிப்பாணையின் 39 ஆம் பக்கத்தில் சாய்வு எழுத்துக்களில் தந்திருக்கிறேன், அதைப் பரிசீலித்துப் பார்க்கும்படி இந்த மாநாட்டைக் கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டுவிட்டு, இயக்குநரின் விமரிசனக்குறிப்பு இவ்வாறு கூறுகிறது: "இந்த எண்ணிக்கையை மிகவும் குறைந்த பட்ச மதிப்பீடாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், கீழ்க்கண்டவை அதில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை: 1) சம்பந்தப்பட்ட ஜாதிகள்

மற்றும் குலமரபினரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை பலம், (2) ஹிந்து சமூகத்தினுள் அண்மையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மலைவாழ் மக்கள், இவர்களில் பலர் இப்போதும் தீண்டத் தகாதவராய்க் கருதப்படுபவர்கள். இவ்வாறு, தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படும் தாழ்த்தப்பட்ட மக்களின் ஒட்டு மொத்த எண்ணிக்கையைக் கணக்கிற் கொண்டால், இந்தியா முழுவதிலும் இது 5.5 கோடிக்கும் 6 கோடிக்கும் இடையில் இருக்கும்.'' பிறகு அவர் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியான விவரங்களைத் தந்துள்ளார்.

6. இந்த விஷயத்தை மேலும் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். மக்கள் தொகைக்கணக்கெடுப்பு (சென்சஸ்) விவரங்களின்படி ஒரு சாரார் 14,78,000 என்ற எண்ணிக்கையைக் கொடுத்துள்ளனர். அதே சென்சஸ் விவரங்களை ஆதாரமாகக் கொண்டு இன்னொரு சாரார் 28,00,000 என்கிறார்கள். முதல் சாரார் சேர்த்துக் கொள்ளாத.மக்கள் பிரிவுகளை இரண்டாவது சாரார் சேர்த்துக் கொண்டிருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், அவர்கள் சேர்த்துக் கொள்ளவில்லை. உண்மையில் தீண்டத்தகாத ஜாதிகள் எனக் கருதப்படும் சில ஜாதிகளை பம்பாய் மாநிலம் அளித்துள்ள புள்ளி விவரங்கள் சேர்த்துக் கொள்ளவில்லை.

7. நான் இப்படிக் கூறுவது சரியாக இருக்குமா? சரியில்லை என்றால் உடனே எடுத்துக்காட்டுங்கள். இவ்விஷயத்தில், உங்களுடைய மற்றும் டாக்டர் சோலங்கியினுடைய உதவி எனக்குத் தேவை. ''தாழ்த்தப்பட்ட மக்கள்'' என்று நீங்கள் கூறும்போது, தீண்டத்தகாதவர் என்று கருதப்படும் ஹிந்துக்களை, ஹிந்துக் கோவில்களுக்குள் அனுமதிக்கப்படாத ஜாதிகளைச் சேர்ந்தோரைத் தான் குறிப்பிடுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

8. ''தாழ்த்தப்பட்ட மக்கள்'' என்றவகையில், மேலே நான் குறிப்பிட்ட ஜனங்களை மட்டுமின்றி, குற்ற பரம்பரைக் குல மரபினர், மலைவாழ் மக்கள் போன்ற சமூகத்தில் மிகவும் அடித் தட்டிலுள்ள மக்களை, ஹிந்து சமுதாயத்தில் தீண்டத்தகாதவர் என்று இவர்கள் கருதப்படாமலிருந்த போதிலும், அத்தகையோரும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், சேர்த்திருக்கக்கூடும்.

9. அவ்விதம் கருதுவதற்கு இடமுள்ளது அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், அவ்விதம் கருத இடமுள்ளது.

10. அதனால்தான், தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமான புள்ளிவிவரங்கள் இரண்டு வகையாகக் காணப்படுகின்றன

எனலாமா? அதாவது, ஹிந்து கோவில்களுக்குள் அனுமதிக்கப் படாத, தீண்டத்தகாதவர் எனக் கருதப்படும் ஜாதியினர் தாழ்த்தப் பட்ட மக்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது ஒரு கணக்கு. தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டியலில் குற்ற பரம்பரைக் குலமரபினர், மலை ஜாதியினர் ஆகியோரைச் சேர்த்துக் கணக் கிடுவதன்மூலம், பெரும் எண்ணிக்கை கிடைக்கிறது. இது மற்றொரு புள்ளி விவரக் கணக்கு.

*டாக்டர் அம்பேத்கர்:* மலைஜாதியினர், குற்ற பரம்பரைக்குல மரபினர் போன்றவர்களைச் சேர்க்காமல், தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமே எனது கணக்கில் கொடுத்துள்ளேன்.

11. என்னுடைய கருத்தை உங்களிடம் விளக்கிக் கூற விரும்பு கிறேன். என்னிடம் கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் உள்ளன: 1921 ஆம் வருட சென்சசில் குறிப்பிட்ட படி தீண்டத்தகாதவர் களின் எண்ணிக்கை 14,78,000. மஹர், தேட் போன்ற ஜாதி மக்கள் இதில் சேர்க்கப்பட்டுள்ளனர். பின்னர் குற்ற பரம்பரை குலமரபினர் பற்றிய நீண்ட பட்டியல் உள்ளது. இந்தப் பட்டியலி லுள்ள மக்களின் எண்ணிக்கை 5,89,000. பீல்கள் போன்ற பழங்குடி மக்கள், மலைஜாதியினர் போன்றோர் அடங்கிய மூன்றாவது பட்டியலிலுள்ளோரின் எண்ணிக்கை சுமார் 10 லட்சம். இந்த மூன்று பட்டியல்களில் காணப்படும் மக்கள் தொகைகளையும் சேர்த்தால், உங்களுடைய அறிக்கையில் தரப் பட்டிருக்கும் 28,00,000 என்ற எண்ணிக்கையைப் போல இருக்கிறதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* மக்கட் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநரின் குறிப்பைத்தான் என்னுடைய குறிப்பாணையின் 39-ஆம் பக்கத்தில் தந்துள்ளேன். தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையைத்தான் இயக்குநர் குறிப்பிட்டுள்ளார் என்று கருதுகிறேன்.

12. .... 1921-ஆம் வருட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இயக்குநர் இவ்வாறு கூறியிருப்பதைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்: ''சமுதாயத்தில் ஒரு பிரிவினரை ''தாழ்த்தப்பட்ட மக்கள்'' என்று அழைப்பது அண்மைக்காலத்தில் வழக்கத்திற்கு வந்துள்ளது. இந்தச் சொற்களுக்கு சரியான, இறுதியான விளக்கம் என்ன, எந்தெந்த ஜாதி மக்களை இது உள்ளடக்கியிருக்கிறது என்பது இதுவரையிலும் எனக்குத் தெரியாது.'' பின்னர் அவர் கல்வித் துறை பற்றிய விமர்சனங்களைக் குறிப்பிடுகிறார். இந்த வாசகத்தைத்தான் நீங்களும் சுட்டிக் காட்டுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம். ''தாழ்த்தப்பட்டவர்கள் என்று இந்தப்பட்டியல்களில் தரப்பட்டிருக்கும் மொத்த ஜனத்தொகை 3 கோடி 10 லட்சம் அதாவது, பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ஹிந்து மற்றும் மலைஜாதியினரின் எண்ணிக்கையில் 19 சதவீதம்.''

இந்தக் குறிப்பைக் கவனித்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பினருடன், மலைஜாதியினர் சேர்க்கப்படவில்லையெனத் தோன்றுகிறது.

13. அப்படியா? எனக்குத் தெரியாது. அத்தகைய விளக்கமும் ஒருவேளை தரப்படலாம். குறைந்த எண்ணிக்கையுடைய தொகை, தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுகிறது என்று எடுத்துக் கூற முயன்றேன். இப்படியும் இருக்கலாம் என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன். மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தையும் மேம்பாட்டையும் வளர்ப்பதற்கு ஆர்வம் கொண்டிருப்பவர்கள், தங்களுடைய கணக்கில் குற்ற பரம்பரைக் குலமரபினரையும் மலைஜாதியினரையும் உள்ளடக்கி, கூடுதல் எண்ணிக்கையைக் காட்ட முயலலாம். அப்படியும் ஒரு சாத்தியக்கூறு இருக்கிறதல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: அப்படியும் ஒரு சாத்தியக்கூறு உள்ளது.

14. மற்றொரு விதமான கண்ணோட்டத்தையும் நான் இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன், வெவ்வேறு மாநிலங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்த்தால், இந்தியா முழுவதிலும் மொத்த எண்ணிக்கை 5 கோடி 50 லட்சத்திலிருந்து 6 கோடியாக இருக்கும் என்று உங்கள் தஸ்தாவேஜுவின் 39 ஆம் பக்கத்தில் நீங்கள் சுட்டிக் காட்டி யிருக்கிறீர்கள். அப்படித்தானே?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

15. இந்தியா என்பது சுதேச சமஸ்தானங்களையும் உள் ளடக்கியதாக இருக்கலாம் அல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம், நானும் அதை நினைத்துப் பார்த்தேன், ஆனால், சுதேச சமஸ்தானங்கள் இதில் சேர்க்கப் படவில்லை என்று கருதுகிறேன். ஏனெனில், பரோடாவிற்குத் தனிப் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

16. ஒன்றிரண்டு பெரிய சமஸ்தானங்களை அவர் குறிப் பிட்டிருக்கலாமோ?

டாக்டர் அம்பேத்கர்: ஒரு வேளை இருக்கலாம்.

17. புள்ளி விவரங்களிலேயே அதிக நேரத்தைச் செலவிட விரும்பவில்லை. சரியான எண்ணிக்கை 15 லட்சமா, 20 லட்சமா அல்லது 25 லட்சமா — அது எதுவாக இருந்த போதிலும், பெரும் மக்கள் தொகையை அது குறிப்பிடுகிறது என்பது தெளிவு. அவர் கள் மீது நாம் மிகவும் விசேஷ கவனம் செலுத்தக் கடமைப்பட்ட வர்கள்.

டாக்டர் அம்பேத்கர்: இங்கே ஒரு விஷயத்தை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாநிலப் புள்ளி விவரங்களுக்கு ஆதார மாக இருந்த மக்கள் தொகைக் கணிப்பு விவரங்கள் அட்டவணை

யில் தரப்பட்டுள்ளன. அதில் முக்கியமான பத்து இந்திய ஜாதிகள்தான் குறிப்பிடப்பட்டுள்ளன. அது மிகவும் விஸ்தாரமான அட்டவணை அல்ல. இந்த அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் வெவ்வேறு ஜாதிகளை நான் பரிசீலித்துப் பார்க்கையில், பத்து ஜாதிகளைப் பற்றிய எத்தகைய புள்ளி விவரங்களையும் அது தரவில்லையென்பது தெளிவாகும். இவை முக்கியமான இந்திய ஜாதிகளில் சேர்க்கப்படவில்லை.

18. நீங்கள் இருவரும் ஒப்புக் கொண்டால், ஒரு விஷயத்தை நான் இங்கே பிரரேபிக்க விரும்புகிறேன். தாழ்த்தப்பட்ட மக்கள் எண்ணிக்கையைப் பற்றித்தான் இது வரையிலும் நீங்கள் பிரதானமாக வாதாடியிருக்கிறீர்கள். எனினும், எது சரியான எண்ணிக்கை என்று நம்மால் துல்லியமாக நிர்ணயிக்கமுடியவில்லை. எண்ணிக்கை பற்றிய விவாதத்திற்கு துரிதமாக முடிவு கட்டுவோம். அப்போதுதான், இந்த மக்களுடைய நிலை, அவர்கள் நடத்தப்படும் விதம் ஆகியன பற்றி நாம் பரிசீலிக்கமுடியும். இல்லையென்றால் கணக்கிலேயே நாம் மூளையைக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டியதுதான். இந்த மக்களின் மண்ணிக்கை, குறைந்த அளவில் பார்த்தால் 15 லட்சமாக இருக்கலாம், அதிக அளவில் பார்த்தால் 20-லிருந்து 30 லட்சமாக இருக்கலாம். நான் கூறிய விஷயத்தில் உங்களுக்குச் சம்மதம் தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* பம்பாய்ப் புள்ளி விவரங்கள். பத்து ஜாதிகளின் எண்ணிக்கையைக் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லையென்ற மாறுதலுடன் இதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

*தலைவர்:* உண்மையான விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். அவர்களுடைய பிரதிநிதித்துவம் யாது? இந்தப் புள்ளி விவரங்களிலேயே அதிகக் கால விரயம் செய்ய யாராவது விரும்புகிறார்களா? இந்தப் புள்ளி விவரங்களை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளலாமா என்று திரு. ராஜாவைக் கேட்கிறேன்.

*ராவ் பகதூர் ராஜா:* எந்தப் புள்ளி விவரங்கள்?

*தலைவர்:* 1921 ஆம் ஆண்டு பம்பாய் மாநிலச் சென்சஸ் படி பார்த்தால், மதத்தின் அடிப்படையில் தீண்டத்தகாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டவர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்கள் என்று விவரிக்கப்பட்டிருந்தால் அவர்களுடைய எண்ணிக்கை 15 லட்சம் போலத் தோன்றுகிறது. ஆனால், டாக்டர் அம்பேத்கர் சுட்டிக் காட்டியபடி, நீங்கள் சற்று விரிவான கோணத்தில் முற்றிலும் சட்டபூர்வமான கோணத்தில் பார்த்தால், இந்த எண்ணிக்கை 20 லட்சத்திலிருந்து 30 லட்சமாக இருக்கலாம் போலத் தோன்றுகிறது. எனவே, இதை இப்படியே விட்டு விட்டு, அவர்களுடைய பிரதிநிதித்துவம் என்ற மிக முக்கியமான பிரச்சினையை இப்போது நாம் பரிசீலிக்கலாமா?

*ராவ் பகதூர் ராஜா:* சரி, அப்படியே செய்யலாம்.

*தலைவர்:* இதைப்பற்றி வேறு எவராவது பேச விரும்பு கிறீர்களா?

19. *கர்னல் லேன் ஃபாக்ஸ்:* நமக்கு வந்திருக்கும் இரண்டு குறிப்பாணைகள் எந்த புள்ளி விவரத்தை அடிப்படையாகக் கொண்டவை? ஒவ்வொரு குறிப்பாணையிலும்; தாழ்த்தப்பட்ட இனத்தவருக்கு விசேஷப் பிரதிநிதித்துவம் கேட்கப்படுகிறது. ஒரு குறிப்பாணையில் வயது வந்தோருக்கு வாக்குரிமை கேட்கப்படு கிறது. தரைப்படை, கப்பற்படை ஆகியவற்றில் சேருவதற்கு விசேஷ வாய்ப்பு முதலியன கோரப்படுகின்றன. பழங்குடி மக்களையும், குற்ற பரம்பரைக் குலமரபினரையும் சேர்த்துக் கொண்டால் எண்ணிக்கை அதிகரிக்கிறது. எனவே, இந்தச் சலுகைகள் கேட்கப்படுவது பெரிய எண்ணிக்கைக்கா? அல்லது சிறிய எண்ணிக்கைக்கா?

*டாக்டர் அம்பேத்கர்:* தாழ்த்தப்பட்ட மக்களுக்காக நான் கேட்கிறேன்.

20. பழங்குடியினர் மற்றும் குற்றப் பரம்பரை குல மரபினருக் கும் சேர்த்தா?

*டாக்டர் அம்பேத்கர்:* வயது வந்தோருக்கு வாக்குரிமை என்ற சலுகையை அவர்களுக்கு வழங்குவது சாத்தியமல்ல என்று நினைக் கிறேன்.

21. ஆனால், நீங்கள் கூடுதல் எண்ணிக்கையைக் குறிப் பிட்டிருக்கிறீர்களே?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் எனது குறிப்பாணையில் கொடுத் திருக்கும் எண்ணிக்கை, பழங்குடியினரையும், மலை ஜாதியினரை யும் உள்ளடக்கியிருக்கவில்லை. புள்ளி விவரங்களைச் சரியான படி கணக்கிட்டால், நான் கொடுத்திருக்கும் எண்ணிக்கை தாழ்த்தப்பட்ட மக்கள் தொகை மட்டுமே என்பது தெளிவாகும் என்று நம்புகிறேன். இதற்கு மாற்றுக் கருத்து இருக்கும் சாத்தியக் கூறு உள்ளது என்பதை மட்டுமே ஒப்புக் கொள்கிறேன்.

*தலைவர்:* இங்கே ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சேர்க்க விரும்புகிறேன். சர் ஆர்தர் ஃபுரூம் இதை ஊர்ஜிதம் செய்யக் கூடும். முடிமான் கமிட்டி (சீர்திருத்த விசாரணைக் கமிட்டி, 1925), தம்முடைய அறிக்கையின் 64-ஆவது பத்தியின் இணைப் பாகச் சேர்த்த அட்டவணையில், 28 லட்சம் என்ற எண்ணிக்கை யைக் கொடுத்துள்ளது.

22. *சர் ஹரிசிங் கௌர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற சொல்லும், தீண்டத்தகாதார் என்ற சொல்லும் ஒரே அர்த்தம் கொண்டதுதான் என்று நீங்கள் கூறு கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம்.

**24.** சில பழங்குடியினர் தீண்டத்தகாத்வர்கள் அல்ல என்று நீங்கள் கூறியிருக்கிறீர்களே?

*டாக்டர் அம்பேத்கர் :* சில பகுதிகளில் அவ்வாறு இருக்கலாம். நான் அவர்கள் சார்பாகப் பேச விரும்பவில்லை.

**25.** அவர்கள் தீண்டத்தகாதவர்கள் அல்ல. குற்றபரம்பரை குலமரபினரும் தீண்டத்தகாதவர்கள் இல்லை அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர் :* அவர்களில் சிலர் தீண்டத்தகாதவர்கள் அல்ல.

**26.** சிலர் மட்டும் தானா? அல்லது அந்தக் குலமரபினர் பூராவுமா?

*டாக்டர் அம்பேத்கர் :* குற்ற பரம்பரை குல மரபினர் இதர ஹிந்து ஜாதியினருடன் சமூக ரீதியில் அவ்வளவு அதிகமாகக் கலந்து பழகும் வாய்ப்பு இல்லை. எனவே, இந்த விஷயத்தில் எந்தத் திட்டவட்டமான கருத்துக்கும் வர முடியாது. ஆனால், அவர்கள் மிகவும் கூடுதலாக சமூக ரீதியாகப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டால் அவர்களும் தீண்டத்தகாதவர்கள் போலத்தான் கருதப் படுவார்கள் என்று நினைக்கிறேன்.

**27.** தீண்டத்தக்கவர்களுக்கும் தீண்டத்தகாதவர்களுக்குமிடையே வேறு சில ஜாதிகளும் இருக்கின்றனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* தீண்டத்தகாதவர்களைக் காட்டிலும் கீழே, அடிமட்டத்தில் அத்தகைய ஜாதிகள் இருக்கலாம்.

**28.** இல்லை. சமூக ஏணியின் மேல்மட்டத்தில், அரைகுறை தீண்டத்தகாதார் என்ற ஜாதி இருக்கிறதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* அதைப்பற்றி நான் எதுவும் கூறுவதற் கில்லை. நான் கூறவிரும்பும் விஷயம் இதுதான். குற்ற பரம்பரை குலமரபினரைப் பொறுத்த மட்டில், அவர்கள் தீண்டத்தக்கவர் களா அல்லது தீண்டத்தகாதவர்களா என்று முடிவு செய்வதற்கு நம்மிடம் போதுமான விவரங்கள் இல்லை. ஏனெனில், பிரதான ஹிந்து ஜாதிகளுக்கும் அந்தக் குற்ற பரம்பரை குலமரபினருக்கு மிடையே மிகக் குறைந்த தொடர்பே இருந்து வருகிறது.

**29.** பழங்குடியினர், குற்ற பரம்பரை குலமரபினர் ஆகி யோரை விட்டு விடுவோம். இப்போது தீண்டத்தகாதவர்களை மட்டுமே எடுத்துக் கொள்வோம். தீண்டத்தகாதவர்களிடையேகூட வெவ்வேறு நிலைகள் உள்ளன. இவர்களில் சிலர் அரைகுறைத் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்படுகிறார்கள். இது உண்மையா?

*டாக்டர் அம்பேத்கர்:* (இரண்டு சாட்சிகளும்) இல்லை.

*30.* உங்களுக்கு ஓர் உதாரணத்தைக் கொடுக்கிறேன். சம்பார் என்ற ஜாதியின் நிலை என்ன?

*டாக்டர் அம்பேத்கர்:* சம்பார்கள் முற்றிலும் தீண்டத்தகாதவர்கள்.

*31.* மஹரைப்போலவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

*32.* உங்களுக்கு அது உறுதியாக தெரியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம். பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுப்பது அல்லது ஆலயப் பிரவேசம் செய்வது என்ற அளவு கோலை வைத்துப்பார்த்தால் இது தெளிவாகும்.

*33.* தீண்டத்தகாதவர் என்றால் யார்? அவர் ஓர் உயர் ஜாதி ஹிந்துவைத் தொட்டுவிட்டால், அந்த ஹிந்து அசுத்தமாகி விட்டார், தீட்டுப்பட்டுவிட்டார் என்று கருதப்பட்டால்தானே, அவர் தீண்டத்தகாதவர்.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆலயப்பிரவேசம் அல்லது பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பது என்பதை நீங்கள் ஓர் அளவு கோலாகக் கொள்ளலாம்.

*தலைவர்:* நாம் இங்கே, அரசியல் சாசன மற்றும் அரசியல் சம்பந்தமான விசாரணையில்தான் ஈடுபட்டிருக்கிறோம். சமூகப் பழக்க வழக்கங்களும், உள்ளத்தில் வேரூன்றியிருக்கும் சமய மரபுகளும் எத்தகைய கமிஷனாலும் இரவுக்கிரவே அகற்றிவிடக் கூடியவை அல்ல. இது எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்ததே. ஹிந்து கோவில்களுக்குள் அனுமதி மறுக்கப்படும் வகுப்பினர்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் அதாவது தீண்டத்தகாதவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர் என்பது தெளிவாகிறது. இவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள், தர்ம சத்திரங்கள் போன்றவற்றிலும் இடம் கிடைப்பதில்லை. அரசியல் ரீதியாகவும், அரசியல் சாசன ரீதியாகவும் பேசுகையில் நாம் இன்னொரு விஷயத்தையும் புறக் கணித்து விடக்கூடாது. சர் ஹரி சிங் கௌர் சுட்டிக் காட்டியதைப்போல், குற்றபரம்பரை குலமரபினர், மலை ஜாதியினர் போன்ற நாகரிக வளர்ச்சியில் அதிக முன்னேற்றம் கண்டிராத மக்களும் இருக்கிறார்கள். அவர்களும் இந்திய மக்கள்தான், அவர்கள் பாலும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

*சர் ஹரி சிங் கௌர்:* ஹிந்துக்கள் நான்கு ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். சூத்திரர்கள் கோவில்களுக்குள் நுழைய முடியாது....

*தலைவர்:* இங்கே கூறப்பட்ட விஷயங்களை நாம் பாராட்டு கிறோம். எனினும், நாம் ஹிந்து மதத்திற்குச் சட்டங்களை இயற்றும் பணியில் ஈடுபட்டிருக்கவில்லை. பிரிட்டிஷ் இந்தியாவின்

அரசியல் சாசன அமைப்புப் பற்றித்தான் நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இது முற்றிலும் வேறான விஷயம்.

**34.** நீங்கள் கூறிய புள்ளி விவரத்தையே எடுத்துக் கொள் வோம். இந்திய அரசியல் சாசனத்தில், குறிப்பாகப் பம்பாய் மாநில அரசியல் அமைப்பில், இந்த மக்களுக்கு எத்தகைய பிரதி நிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஹிந்து சமுதாயத்திலிருந்து வேறு பட்டிருக்கும், ஒரு தனித்தன்மை கொண்ட சிறுபான்மையினராக நாங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை முதலில் நான் உங்க ளிடம் சமர்ப்பிக்க விரும்புகிறேன். ஹிந்து சமுதாயத்திற்குள் நாங்கள் சேர்க்கப்பட்டிருந்ததால், எங்களுடைய சிறுபான்மைத் தன்மை இதுகாறும் மூடிமறைக்கப்பட்டிருந்தது. உண்மையில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஹிந்து சமுதாயத்திற்குமிடையே எத்தகைய பிணைப்பும் இல்லை. எனவே, நாங்கள் தனிப்பண்பு கொண்ட, சுதந்திரமான சிறுபான்மையினர் என்று கருதப்பட வேண்டும் என இந்த மாநாட்டில் நான் வலியுறுத்த விரும்பு கிறேன். இதுதான் நான் கூறும் முதல் விஷயம். இரண்டாவதாக, பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள வேறு எந்தச் சிறுபான்மை இனத்த வரைக் காட்டிலும், தாழ்த்தப்பட்ட சிறுபான்மை வகுப்பினரான எங்களுக்கு மிகக் கூடுதலான அரசியல் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்று கோருகிறேன். ஏனெனில், தாழ்த்தப்பட்ட மக்கள், கல்வித்துறையில் மிகவும் பின்தங்கியவர்கள்; பொருளா தார ரீதியில் மிகவும் ஏழைகள், சமூக அளவில் அடிமைப்பட்ட வர்கள், வேறு எந்த இனத்தவரைக்காட்டிலும் மிக மோசமான அரசியல் இயலாமைக்கு ஆட்பட்டுக் கிடப்பவர்கள். எங்கள் அரசியல் பாதுகாப்புக்காக உங்கள் முன் ஒரு கோரிக்கையைச் சமர்ப்பிக்கிறேன். முஸ்லீம் சிறுபான்மையினருக்குத் தரப்பட் டுள்ள அதே அடிப்படையில் எங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும். வயதுவந்தோர்க்கு வாக்குரிமை என்ப துடன் கூடிய இட ஒதுக்கீடு எங்களுக்கு தரப்பட வேண்டும்.

**35.** வயதுவந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்பது இல்லா விட்டால்?

*டாக்டர் அம்பேத்கர்:* அப்படியானால் நாங்கள் தனியான வாக்காளர் தொகுதிகளைக் கோருவோம். மேலும், அரசியல் சாசனத்திலோ அல்லது சாத்தியமானால், ஆளுநருக்கு அளிக்கப் படும் ஆலோசனைப் பத்திரத்திலோ, தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி பற்றியும், அரசாங்கப் பணிகளில் அவர்கள் அமர்த்தப் படுவது பற்றியும் குறிப்பிட்ட சில பாதுகாப்புகள் அளிக்கப்பட வேண்டுமென்று கோருகிறோம்.

**36.** இந்த விஷயங்களை டாக்டர் சோலங்கியும் ஒப்புக் கொள்கிறாரா?

டாக்டர் சோலங்கி: இந்த எல்லா விஷயங்களும் எனக்கு முற்றிலும் உடன்பாடானவை.

37. இவை உங்கள் இருவரின் கருத்துக்கள் — கண்ணோட்டங்கள் — என்று நாங்கள் எடுத்துக் கொள்ளலாமா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம்.

38. உங்களிடம் மேலும் ஒன்றிரண்டு கேள்விகளைக் கேட்கலாமா? தாழ்த்தப்பட்ட மக்கள் ஹிந்து சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும், அரசியல் சாசனக் கண்ணோட்டத்தின்படி, ஹிந்து சமுதாயத்திலிருக்கும் வேறு இனத்தவருடன் முற்றிலும் வேறுபட்ட, தனித்தன்மை கொண்ட சமூகம் என்று கருதப்பட வேண்டும் என்று ஏன் கோருகிறீர்கள்?

டாக்டர் அம்பேத்கர்: அதற்குக் காரணங்கள் உள்ளன.

39. ஹிந்து சமுதாயத்திலுள்ள மேல்ஜாதியினர் உங்களுடைய நலன்களைத் திருப்திகரமாகப் பிரதிநிதித்துவப்படுத்த மாட்டார்கள் என்று நீங்கள் கருதுவதுதான் அதற்குக் காரணமா?

டாக்டர் அம்பேத்கர்: அது ஒரு காரணம். உண்மையாகப் பார்த்தால், ஹிந்து சமுதாயத்தின் ஒரு பகுதியாக எங்களை நாங்கள் கருதிக் கொள்ள முடியாது.

40. நீங்கள், இந்தக் கண்டத்தில் அனாதிகாலந்தொட்டு வசித்து வரும் மக்களைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகிறேன். அது சரிதானா?

டாக்டர் அம்பேத்கர்: அது ஒரு கருத்து என்று நினைக்கிறேன்.

41. நீங்கள் ஆரியர்களுக்கு முந்தியே இங்கே வாழ்ந்து வரும் மக்கள் என்று கருதுகிறேன். நான் கூறுவது சரியா?

டாக்டர் அம்பேத்கர்: உண்மையில் எனக்கு அது தெரியாது. அதுவும் ஒரு கருத்து எனலாம்.

★ ★ ★

43. இங்கே ஒரு விஷயத்தைப் பிரஸ்தாபிக்க விரும்புகிறேன். மிகவும் புகழ்பெற்ற சில ஹிந்துப் பிரமுகர்கள் — அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட விரும்பவில்லை — தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களில் நல்ல அக்கறை காட்டியிருக்கிறார்கள். அதைப் பற்றி எதுவும் கூறவில்லையே?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், மிகப் பெரிய அளவுக்கு பொதுவாகப் பேசப்பட்டுள்ளது.

44. எனக்குத் தெரியும்; எப்படியிருப்பினும் அது உங்களுடைய கருத்து. அரசியல் சாசனக்கண்ணோட்டத்தின் அடிப்படையில், ஹிந்து சமுதாயத்திலிருந்து வேறுபட்ட, ஒரு தனித்

தன்மை கொண்ட பிரிவாக உங்களைக் கருதவேண்டும் என்று கூறுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

45. இனி பிரதிநிதித்துவம் பற்றிப் பார்ப்போம். வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை இருந்தாலும் அல்லது இல்லா விட்டாலும், நியமன உறுப்பினர் என்ற கருத்தை நீங்கள் கைவிட்டு விட்டீர்கள் போலத் தோன்றுகிறது. நீங்கள் தேர்தலை விரும்பு கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

46. இதுதான் உங்கள் இருவருடைய கருத்தா?

*டாக்டர் சோலங்கி:* ஆமாம்.

47. அப்படியானால், வாக்காளர் பட்டியலைத் தயாரிக்க வேண்டியிருக்குமே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

48. வாக்களிக்க வருபவர் வாக்காளர் பட்டியலில் இருக்கும் நபர்தான், வேறொருவர் அல்ல என்று நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டியிருக்குமே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

49. டாக்டர் அம்பேத்கர் அவர்களே, உங்களால் ஒரு மதிப் பீடு தரமுடியுமா? தாழ்த்தப்பட்ட இனத்தவர் என்று அழைக்கப் படும் மக்களிடையே எத்தனை சதவீதத்தினருக்கு எழுதப்படிக்கத் தெரியும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* பம்பாய் மாநிலத்தில் கல்வி பற்றிய கமிஷனிடம் நான் தனியாக ஒரு குறிப்பாணையைச் சமர்ப்பித் திருக்கிறேன். அதில் அந்தப் புள்ளி விவரங்களைக் கொடுத்திருக் கிறேன்.

50. அதுமிகவும் குறைந்த சதவீதமாய் இருக்குமென்று நம்பு கிறேன். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், நீங்கள் கூறுவது முற்றிலும் சரி.

51. அதிர்ஷ்டம் செய்த மக்களைப் போல, இவர்களுக்குப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை என்பது உங்களுடைய முறையீடுகளில் ஒன்றல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

52. தேர்தல் நடை பெற்றால், வாக்குச் சீட்டு என்றால் என்ன என்று கூடப் புரிந்து கொள்ளாத மிகப் பெரும்பான்மையான மக்கள்தான் அதில் கலந்து கொள்ள நேரிடுமல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். இன்றும் கூட, மிகப் பெரும் பான்மையான வாக்காளர் நிலைமை அவ்வாறுதான் உள்ளது.

53. உண்மைதான். பம்பாய் மாநிலத்தில் உங்களுக்காக ஒதுக்கிய இடங்கள் எத்தனை இருக்க வேண்டுமெனக் கோரு கிறீர்கள்?

டாக்டர் அம்பேத்கர்: நான் போட்டிருக்கும் கணக்கின் படி, மொத்தமுள்ள 140 இடங்களில் 22 இடங்கள் எங்களுக்காக ஒதுக்கப்பட வேண்டுமெனக் கோருகிறேன்.

54. பம்பாய்ச் சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களின் மொத்த எண்ணிக்கை 140-ஆக இருந்தால், நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்கு 22 தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்கள் ஒதுக்கியிருக்க வேண்டும் என்றுதானே கோருகிறீர்கள்?

டாக்டா அம்பேத்கர்: ஆமாம்.

55. இன்னொரு மாற்று நிலையையும் பரிசீலிப்போம். வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்பது இல்லாவிட்டால், நீங்கள் தனிப்பட்ட வாக்காளர் தொகுதியைக் கோருகிறீர்கள். அப்போதும் நீங்கள் 22 இடங்களை விரும்புகிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

56. இன்னும் ஒரே ஒரு கேள்வியை மட்டும் நான் கேட்க விரும்புகிறேன். சமூக நிலைமைகளை நன்கு வெளிக் கொணரு வதற்காக, திரு ராஜா ஒரு சில கேள்விகளைக் கேட்க விரும்பு வார் என்று நினைக்கிறேன். இன்றுள்ள பம்பாய்ச் சட்டமன்றத் தில், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக இரண்டு உறுப் பினர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று நினைக் கிறேன். அது சரிதானே?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், இருவர்தான் நியமிக்கப்பட்டிருக் கிறார்கள்.

57. அந்த இருவரில் நீங்கள் ஒருவரா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

58. மற்றவர் டாக்டர் சோலங்கியா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

59. அது சவுத்பரோ கமிட்டியின் அறிக்கையை அடிப்படை யாகக் கொண்டதா?

டாக்டர் அம்பேத்கர்: அப்படித்தான் நம்புகிறேன்.

60. சவுத்பரோ கமிட்டியிடம் நீங்கள் சாட்சியம் அளித்தீர் களல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

61. அந்தக் கமிட்டியிடம் நீங்கள் அளித்த சாட்சியத்தைப் படித்தேன். தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையைப் பற்றி நீங்கள் என்ன கூறியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். பம்பாய் மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 5,77,000 என்று சவுத்பரோ கமிட்டி கூறியிருப்ப தாக, உங்கள் குறிப்பாணையின் 39ஆம் பக்க அடிக்குறிப்பில் நீங்கள் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். அப்படித்தானே?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

62. அது தவறான எண்ணிக்கை என்று கருதுகிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், மிகப் பெரிய தவறு.

63. அவர்களுக்கு எப்படி இந்த எண்ணிக்கை கிடைத்தது என்று நீங்கள் எனக்குக் கூற முடியுமா?

டாக்டர் அம்பேத்கர்: தொட்டால் தீட்டு ஏற்பட்டு விடும் என்று கருதப்படக்கூடிய ஜாதிகளைப் பற்றிய சிறிய அட்ட வணையை அவர்கள் அப்படியே எடுத்துக் கொண்டார்கள் என்று நினைக்கிறேன்.

64. தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றிய மிகக் குறுகிய விளக்கத்தை அவர்கள் கணக்கில் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படித் தானே?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

65. திரு. ஹார்ட் ஷர்ன்: 5,77,000 என்ற சவுத்பரோ கமிட்டியின் எண்ணிக்கையைக் குறிப்பிட்டுவிட்டு, நீங்கள் உங்க ளுடைய குறிப்பாணையில் இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கிறீர் கள்:'' சவுத்பரோ கமிட்டி ஆதாரமாக எடுத்துக் கொண்ட புள்ளி விவரங்களின்படி, 1911ல் பம்பாய் மாநிலத்தில் இருந்த தாழ்த்தப் பட்ட மக்களின் எண்ணிக்கை 21,45,000'' என்று சொல்லி யிருக்கிறீர்கள்.

டாக்டர் அம்பேத்கர்: மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி.

66. அந்த அதிகாரபூர்வமான புள்ளி விவரங்களைத்தான் அவர்கள் ஆதாரமாக எடுத்துக் கொண்டார்களா? அதைத்தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். இரண்டு வெவ்வேறு பக்கங் களில் இரண்டு வேறுபாடுள்ள எண்ணிக்கைகள் கொடுக்கப் பட்டிருந்தன என்று நினைக்கிறேன். ஒருபக்கத்தில் அவர்கள் சிறிய எண்ணிக்கையைக் கொடுத்தார்கள். அதையே ஆதாரமாக எடுத் துக் கொண்டார்கள். எனவே, சவுத்பரோ கமிட்டி அறிக்கை வெளியானவுடன், இந்த மதிப்பீட்டை எதிர்த்து நாங்கள் பம்பாய் அரசாங்கத்திடம் ஆட்சேபனை தெரிவித்தோம்.

67. தலைவர்: 21,00,000 என்ற எண்ணிக்கை எப்படி வந்தது என்பது இப்போது எனக்குத் தெளிவாகிறது. 1921 ஆம் வருட சென்சஸ் கணக்கின்படி, தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கை 14,78,000 என்று நான் ஏற்கெனவே கூறியிருக்கிறேன். குற்ற பரம்பரை குல மரபினர் எண்ணிக்கை சுமார் 6,23,000. இந்த இரண்டு எண்ணிக்கைகளையும் கூட்டினால் 21,00,000 வருகிறது. அப்படித்தானே?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

68. பழங்குடியினரையும் மலைஜாதியினரையும் அதில் சேர்க்கவில்லை. அவர்களையும் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டுமல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

69. திரு மில்லர்: சில சுதேச சமஸ்தானங்களிலுள்ள நிலைமையைப்பற்றிக் கேட்கவிரும்புகிறேன். பரோடாவிலும், மற்றொரு சமஸ்தானத்திலும் என்று நினைக்கிறேன், சில விசேஷச் சலுகைகள் காட்டப்படுகின்றன. இந்த விசேஷச் சலுகைகள், கல்விச் சலுகைகைளுக்கும் கூடுதலானவையா?

டாக்டர் அம்பேத்கர்: இல்லை; கல்விச் சலுகைகளுக்கு அப்பாற்பட்டவையல்ல.

70. அந்தச் சமஸ்தானத்தில் உங்களுக்கு வேலை கிடைக்க முடியுமா?

டாக்டர் அம்பேத்கர்: மிகவும் கஷ்டம் என்று நினைக்கிறேன்.

71. அரசாங்க வேலைகளில் சேரவேண்டுமென்று நீங்கள் மிகுந்த ஆவலுடன் இருக்கிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம், நிச்சயமாக.

72. அதற்கு என்ன காரணம்?

டாக்டர் அம்பேத்கர்: இந்த விஷயத்தைப் பற்றி நான் சற்று விளக்கமாகக் கூறவிரும்புகிறேன். சட்டம் எவ்வாறு அமல்படுத்தப்படுகிறது என்பதில் எங்களுக்கு மிகவும் கசப்பான அனுபவம் உண்டு. பல சந்தர்ப்பங்களில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மிகவும் பிரதிகூலமான முறையில், சட்டம் அமல் செய்யப்படுகிறது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஒரு மாவட்டத்தில்—அதன் பெயரை வெளியிட விரும்பவில்லை—நடைபெற்ற உண்மை நிகழ்ச்சியை இங்கே திட்டவட்டமாக எடுத்துக் கூற விரும்புகிறேன். பம்பாய் மாநில அரசாங்கம், ஆண்டுதோறும் தனது காட்டு நிலங்களை, சில குறிப்பிட்ட ஷரத்துக்களின் பேரில் விவசாயிகளுக்குச் சாகுபடி செய்வதற்கென ஒதுக்குகிறது. பொதுவாக, தாழ்த்தப்பட்ட மக்கள் நிலமற்ற விவசாயக் கூலியாகவோ, அல்லது துண்டு துண்டான நிலம்

பெற்ற ஏழை விவசாயியாகவோதான் இருக்கிறார்கள். எனினும் காட்டு நிலங்கள் இவர்களுக்கு ஒதுக்கப்படுவதில்லை. நிலப் பங்கீட்டுக்கு உண்மையில் பொறுப்பு வகிக்கும் மம்லத்தார்கள், தாழ்த்தப்பட்டோரை ஏறெடுத்தும்பார்க்காமல், உயர் ஜாதி ஹிந்துக்களுக்குத்தான் சகல சலுகைகளையும் வழங்கி வந்தார்கள். சென்ற ஆண்டு ஒரு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களை ஒன்று திரட்டினோம். அந்த மாவட்டத்தின் துணை உதவிக் கலெக்டரை எங்கள் தூதுக்குழு சந்தித்து, காட்டு நில ஒதுக்கீடு சம்பந்தமாக ஒரு மகஜரைச் சமர்ப்பித்தது. அதில் எங்களுக்கு அளிக்கப்படும் அநீதிகள் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அதன் பேரில், அவர் மம்லத்தார்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பினார். தாழ்த்தப்பட்ட மக்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார். எனவே, சில மம்மலத்தார்கள், சுற்றிக்கையின் தாக்கீதுக்கிணங்க, தாழ்த்தப் பட்ட மக்களுக்குக் கொஞ்சம் நிலத்தை ஒதுக்கித் தந்தார்கள். ஆனால், அவர்கள் எங்களை ஏமாற்றிவிட்டார்கள் என்பது எங்களுக்குப் பின்னர்தான் தெரிந்தது. பதிவேட்டின்படி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிக நிலமும், மேல்ஜாதி ஹிந்துக் களுக்கு குறைந்த நிலமும் ஒதுக்கப்பட்டது. ஆனால், நேரில் சென்றுபார்த்தபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம், சாகுபடிக்கு சிறிதும் பயன்படாத கற்களும், பாறைகளும் நிரம்பிய கட்டாந்தரையாக இருந்தது. இந்த நிலத்தில் தாழ்த்தப் பட்ட மக்களால் சாகுபடியே செய்யமுடியாது. மேல்ஜாதி ஹிந்துக் களுக்கு ஒதுக்கப்பட்ட நிலம் மிகவும் வளமான பொன் விளையும் பூமி, நிர்வாகிகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தை மிகவும் மோசமான முறையில் துஷ்பிரயோகம் செய்ததற்கு இது மிகச் சிறந்த எடுத்துக் காட்டு என நினைக்கிறேன். சட்டம் திறமையுடன் அமல்படுத்தப்படுகிறது என்பதைக் காட்டிலும், நல்லமுறையில் அமல்படுத்தப்படுகிறது என்பதற்குத்தான் நான் அதிக முக்கியத் துவம் அளிக்கிறேன்.

73. *தலைவர்:* நீங்கள் கூறிய சேதிகள் உண்மையிலேயே மிக வும் சுவையாக உள்ளன. நம்முடைய தற்போதைய விசாரணைக்கு மிகவும் பயன்படும். எனினும், நிர்வாகத்தின் அன்றாடப்பணி களில் தலையிடுவது கமிஷனுடைய செயல்பாட்டின் ஒரு பகுதி யில்லை அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், இல்லைதான்.

74. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முழுப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற உங்களுடைய கருத்துக்கு ஆதர வாகத்தானே இந்த வாதத்தைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், அரசுப்பணிகளில்.

75. இது உங்களுடைய கருத்தா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், என்னுடைய கருத்துதான். இந்த மாநிலத்தில், நீதிமன்றங்களில் உண்மையில் என்ன நடைபெறு கிறது என்பதைப் பற்றிச் சில உதாரணங்களைக் கொடுக்க விரும்புகிறேன். ஒரு நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கில், ஒரு தாழ்த்தப்பட்ட நபரின் சார்பில் நான் ஆஜரானேன். அந்த நபர் நீதிமன்றத்திற்கு வெளியே, சுவருக்குப் பின்னால் ஒரு சிறிய ஜன்னலுக்கு அருகே நின்று கொண்டிருந்தார். அதைக் கண்டு நான் மிகவும் வியந்தேன். அவர் நீதிமன்றத்திற்குள் நுழையவில்லை. ஏன் உள்ளே வரவில்லை என்று அவரிடம் கேட்டேன். ''உங்களைப் பொறுத்த மட்டிலும் எல்லாம் சரிதான். ஆனால், நாங்கள் நீதிமன்றற்திற்குள் நுழைந்து விட்டால், நீங்கள் சென்ற பிறகு, எனக்குத் தண்டனையாகச் சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படு வேன்'' என்று அவர் கூறினார்.

76. உங்களுடைய கட்சிக்காரர் உள்ளே வர விரும்ப வில்லையா?

டாக்டர் அம்பேத்கர்: உள்ளே வரத்துணியவில்லை.

77. சமுதாயத்திலிருந்து அவர் எவ்வாறு விலக்கி வைக்கப் பட்டிருப்பார்? எத்தகைய சமூக பகிஷ்காரம்?

டாக்டர் அம்பேத்கர்: சமூக பகிஷ்காரத்தைப் பற்றி விளக்கிக் கூறுகிறேன். அவர் கிராமத்திற்குத் திரும்பிச் சென்ற பின்னர், கடைக்காரர்கள் அவரை விலக்கி வைப்பார்கள்; எவரும் அவருக்குத் தானியத்தை விற்க மாட்டார்கள். கிராம ஊழியன் என்ற முறை யில், அவருக்குத் தர வேண்டிய ஊதியத்தைத் தராமல் கிராம மக்கள் நிறுத்தி விடுவார்கள். கிராமத்திற்குள் நுழையவே அவரை அனுமதிக்க மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், எப்போதும் கிராமத்தின் எல்லையில்தான் வசிக்கிறார்கள்; கிராமத்தின் நடு விலோ அல்லது கிராம மக்களுடன் சேர்ந்தோ அல்ல.

78. நீதிமன்றத்திற்குள் நுழையவே அவர் அஞ்சினார், கோழையாக இருந்தார் என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஏனெனில், பின்னர் மேல்ஜாதி ஹிந்துக்கள் — அவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல — அவர் நுழையக் கூடாத இடத்தில் அத்து மீறி நுழைந்து விட்டதாகக் கருதுவார்கள் என்று பயப்பட்டார். அப்படித்தானே?

டாக்டர் அம்பேத்கர்: நிச்சயமாக — தனது சமூக அந்தஸ்தின் எல்லைகளை மீறி விட்டார் என்று கருதப்படுவார்.

79. அது ஒரே ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சியா?

டாக்டர் அம்பேத்கர்: எனக்கு ஏற்பட்ட அனுபவம் அது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் நீதிமன்றங்களுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று பம்பாய் உயர் நீதிமன்றம் ஏற்கெனவே ஒரு சுற்றறிக்கையை அனுப்பியுள்ளது. இத்தகைய சுற்றறிக்கை அனுப்பப்பட்டதற்கு ஒரு காரணம் இருக்க வேண்டும்.

வேறு இடங்களிலும் இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தால்தான், இத்தகைய சுற்றறிக்கை அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்.

*80. திரு. மில்லர்:* இதைப்பற்றி இன்னொரு கேள்வி கேட்க விரும்புகிறேன். சட்டமன்றத்தில் உங்களுக்கு 22 இடங்கள் அளிக்கப்பட்டால், அதற்குத் தகுதியான ·22 பேர்களை உங்களால் கொண்டுவரமுடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், கொண்டுவரமுடியும் என்று நம்புகிறேன்.

*81. கான் சாஹிப் அப்துல் லத்தீப்:* ஒரு சில காரணங்களுக்காக, ஆட்சித் தரப்பினர் பம்பாய்ச் சட்டமன்றத்திலிருந்து வெளி நடப்பு செய்துவிட்டால், அப்போது அங்கே சிறுபான்மையினரின் கதி எப்படியிருக்கும் என்பதை மாநாட்டின் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்த முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* சிறுபான்மையினரின் கதி மிகவும் ஆபத்தானதாய்த்தான் இருக்கும்; இடையூறுகள் நிரப்பியதாய் இருக்கும்.

82. மேல்ஜாதியைச் சேர்ந்த மாண்பு மிகு அமைச்சர், இத்தகைய நிலையைப் பற்றியோ அல்லது முஸ்லீம்கள், பிராமணரல்லாதார், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் உணர்வுகளைப் பற்றியோ ஏதாவது கவலை தெரிவித்தாரா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை, இல்லவே இல்லை.

83. சிறுபான்மை சமூகத்தினர் பம்பாய்ச் சட்டமன்றத்தில் ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, வெற்றிகரமாக நிறைவேற்றிட முடியுமா? அத்தகைய சட்டத்தைக் கொண்டு வருவது சாத்தியமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அத்தகைய வாய்ப்புக்கள் அனேகமாய் இல்லை எனலாம்.

★ ★ ★

*98. சர்தார் மஜும்தார்:* தாழ்த்தப்பட்ட மக்களிடையே கூட அனேக ஜாதிகள் இருக்கின்றனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், இருக்கின்றன.

99. அத்தகைய ஜாதிகளின் எண்ணிக்கை எவ்வளவு இருக்கும் என்று உத்தேசமாகக் கூற முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* தீண்டத்தகாதவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும் பல்வேறு ஜாதிகளைப் பற்றிய விவரங்கள் சென்சஸ் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

100. வெவ்வேறு ஜாதிகளின் எண்ணிக்கையைப் பற்றி நீங்கள் குத்துமதிப்பாக ஏதாவது கூற முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* சுமார் 12 ஜாதிகள் இருக்கலாம்; விவரங்கள் சென்சஸ் அறிக்கையில் உள்ளன.

101. பம்பாயில், தாழ்த்தப்பட்ட மக்களாக எத்தனை ஜாதிகள் சேர்க்கப்பட்டுள்ளன?

*டாக்டர் அம்பேத்கர்:* அனேகமாக எல்லா ஜாதிகளும்.

102. அப்படியென்றால், அந்த வெவ்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்களும், உங்கள் நிறுவனத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம். எல்லாத் தாழ்த்தப்பட்ட ஜாதி மக்களையும் கொண்ட பொதுக்குழு அது.

103. தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் உங்கள். நிறுவனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

104. பீல்கள், வாடியாக்கள், மற்றும் இதுபோன்ற மக்களின் கோரிக்கைகளையும் நீங்கள் கணக்கில் எடுத்துக் கொண்டீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை.

105. அந்தச் சிறுபான்மையினரின் பாதுகாப்பைப்பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுப்பதன்மூலம், அவர்களுடைய நலன்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கருதுகிறேன்.

106. தாழ்த்தப்பட்ட மக்களிடையே கூட, சில சமுதாயத்தினர் சிறுபான்மையினராய் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், இருக்கிறார்கள்.

106.A. அவர்களுடைய நலன்களைப் பாதுகாப்பதற்கு இன்றைய அரசியல் சாசனத்தில் ஏதாவது ஏற்பாடு உள்ளதா?

*தலைவர்:* நீங்கள் குறிப்பிடும் இந்த ஜாதியினர் கூட ஹிந்து கோவில்களுக்குள் பிரவேசிக்க முடியாதா?

*சர்தார் மஜூம்தார்:* அவர்கள் கோவில்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

*தலைவர்:* நாம் இப்போது தீண்டத்தகாதவர்களைப்பற்றித்தான், ஹிந்து ஆலயங்களுக்குள் பிரவேசிக்கும் உரிமை மறுக்கப்பட்டவர்களைப்பற்றித்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஹிந்து கோவில்களுக்குள் நுழைவதற்கு உரிமை பெற்றிருக்கும்

பின்தங்கிய வகுப்பினர் பிரச்சினையை இப்போது நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கவில்லை.

*சர்தார் மஜும்தார்:* பின்தங்கிய வகுப்பினரிடையே கூட, பல்வேறு விதமான சிறுபான்மையினர் இருக்கிறார்கள் என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். இந்தப் பிரச்சினை பொருத்தமானதுதானா என்பது அல்ல. எல்லாச் சிறுபான்மையினரின் நலன்களையும் பாதுகாப்பதே நமது நோக்கம்.

*தலைவர்:* நிச்சயமாக.

*சர்தார் மஜும்தார்:* அந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்பினேன்.

*தலைவர்:* நான் உங்களுக்குத் தெளிவாகக் கூற விரும்புகிறேன். இந்தியாவில் ஏராளமான சிறுபான்மை வகுப்புக்கள் உள்ளன. நீங்கள் சிலவற்றைப் பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஆனால், நாம் இப்போது தாழ்த்தப்பட்ட மக்கள் என்பவர்களைப் பற்றித்தான் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

*சர்தார் மஜும்தார்:* ஆம், ஒப்புக் கொள்கிறேன்.

**107.** *சையத் மீரான் முகம்மது ஷா:* முஸ்லீம்களுக்குத் தரப்பட்டிருக்கும் அதே வீதாசாரத்தில், உங்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமென்று இப்போது நீங்கள் கோரினீர்கள். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**108.** முஸ்லீம்களுக்குத் தரப்பட்டிருப்பதால்தான் அதை நீங்கள் கேட்கிறீர்களா? உங்கள் கோரிக்கையில் ஏதாவது நியாயம் இருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* அதில் நான் நியாயம் காண்கிறேன். சட்டமன்றத்தில், மக்கள் தொகையின் அடிப்படையில்தான் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டுமென்ற கோட்பாட்டை நான் ஒப்புக் கொள்ளவில்லை. பல்வேறு சமுதாயங்களின், பல்வேறு முன்மாதிரிச் சான்றுகளை ஆஜர்ப்படுத்தி வைத்திருக்கக்கூடிய அருங்காட்சியகம் அல்ல சட்டமன்றம். சமூகப் போராட்டங்கள் நடைபெறக் கூடிய இடம் சட்டமன்றமாகும். அங்கே அத்தகைய போராட்டங்கள் மூலம் சலுகைகள் ஒழிக்கப்பட வேண்டும், உரிமைகள் வெல்லப்பட வேண்டும். சட்டமன்றத்தைப்பற்றிய கண்ணோட்டம் இதுவாக இருந்தால், சிறுபான்மையினருக்கு அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப வீதாசார பிரதிநிதித்துவம்தான் அளிக்கப்படவேண்டும் என்று நினைக்க முடியாது. வீதாசார பிரதிநிதித்துவம் மட்டுமே கொடுத்தால், பெரும் பான்மையினரின் செயல்களின் மீது தாக்கம் செலுத்துவதற்கு அவசியமான அதிகாரமின்றி, சிறுபான்மையினர்

என்றென்றுமே சிறுபான்மையினராக இருக்கும்படி தண்டிக்கிறீர்கள் என்றுதான் பொருள்.

109. கிராமப்புறங்களில், உள்ளாட்சிமன்றங்களுக்கான தேர்தல்களில், வாக்களிக்கும் உரிமை குறைக்கப்பட்டால் நீங்கள் திருப்தி அடைவீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: இல்லை. வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்துவேன். வாக்களிக்கும் உரிமையைக் குறைப்பது நல்லது என்ற கோட்பாட்டின் அடிப்படையில், எந்த விதமான குறைப்புச் செய்தாலும் அதை நான் ஒப்புக் கொள்வேன்; ஆனால் அது எனக்குத் திருப்தி அளிக்காது.

110. பழங்குடியினர், குற்றபரம்பரை குலமரபினர், மலை ஜாதியினர் ஆகியோருக்கும் வயதுவந்தோர்க்கு வாக்குரிமை என்பதை விரிவாக்க விரும்புகிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: நிச்சயமாக விரும்புகிறேன்.

111. விரும்புகிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

112. வயதுவந்தோர்க்கு வாக்குரிமை என்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளித்துவிட்டு, அவர்களுக்கு நியமன உறுப்பினர் அந்தஸ்து வழங்க விரும்புகிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: இங்கே நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். குற்ற பரம்பரை குலமரபினரைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு, வயதுவந்தோர்க்கான வாக்குரிமை அளிப்பது சிறந்தது அல்ல. ஏனெனில், தம்முடைய சொந்த சமுதாயத்தின் குறிப்பிட்ட நலன்களில் மட்டுமே அவர்கள் கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்கள். தங்களுடைய பிழைப்பை நடத்துவதற்கு அவர்கள் எத்தகைய முறைகளையும் கையாளும் தன்மை படைத்தவர்கள். ஆனால், பழங்குடி மக்களுக்கு, வாக்கு அளிக்கும் உரிமை அளிப்பதால் எத்தகைய தீங்கும் நேரிடாது என்று நம்புகிறேன்.

113. அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமா? அல்லது நியமனத்தின் மூலம் அவர்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா?

டாக்டர் அம்பேத்கர்: அவர்களை எந்தவிதத்திலேனும் பாதுகாக்கவேண்டும்; எப்படி என்பதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஒவ்வொரு மனிதரும் தான் என்ன விரும்புகிறார் என்பதைத் துல்லியமாகப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அறிவாற்றல் பெற்றிருக்கிறார் என்று கருதுகிறேன். இந்த அம்சத்தில் எழுத்தறிவுக்குப் பெரும் பாத்திரம் இல்லை. ஒருவர் எழுதப் படிக்கத் தெரியாத தற்குரியாக இருக்கலாம்; எனினும் அவர் மிகுந்த புத்திசாலியாக இருக்கக்கூடும்.

**114.** இத்தகைய தனிப்பிரதிநிதித்துவம், வகுப்பு வாத நெருக்கடிக்கு வழி கோலாதா? தனிப் பிரதிநிதித்துவமும், தனி வாக்காளர் தொகுதியும்தான் வகுப்புவாத நெருக்கடிக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. நீங்களும் அப்படித்தான் நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* நெருக்கடிக்கு அது வழிகோலுகிறது என்றே வைத்துக் கொண்டாலும் கூட, அதை எப்படித் தவிர்க்க முடியும் என்பது எனக்குத் தெரியவில்லை. அது நெருக்கடிக்கு வழி கோலுகிறதா என்பது கேள்விக்குரிய விஷயம். ஆனால், சமுதாயம் பல்வேறு வகுப்புகளாகவும், ஜாதிகளாகவும் பிரிவு பட்டிருக்கும் பின்னணியில், எப்படி அதைத் தவிர்க்கமுடியும் என்பது எனக்குப் புரியவில்லை.

**115.** கருத்து வேறுபாட்டுக்கு, பூசல்களுக்கு இதுதான் ஆணி வேர் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

*டாக்டர் அம்பேத்கர்:* அப்படி நான் நினைக்கவில்லை; எனினும் நான் இதைக் கூற விரும்புகிறேன்: வகுப்புவாதப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதன் காரணமாக, சமுதாயத் தலைவர்கள் தங்கள் குறிக்கோள்களை விட்டுக் கொடுக்கும் பாங்கு குறைந்திருக்கிறது எனலாம். இது என்னுடைய கருத்து. ஆனால், இது வகுப்புக் கலவரங்களுக்கு வழிகோலவில்லை என்று நினைக்கிறேன்; வகுப்புக் கலகங்களுக்கு முற்றிலும் வேறுபட்ட காரணங்கள் உள்ளன.

**116.** சையத் மீரான் முகம்மது ஷா: அதிகாரிகளின் நியமனத்தை எடுத்துவிடுவதன் மூலம், வேறு பிரமுகர்கள் அந்த இடங்களுக்கு நியமனம் செய்யப்படலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் நியமனத்தை விரும்பவில்லை.

**117.** மேஜர் ஆட்லி: தொழிற் சாலைகள், நெசவு ஆலைகள் போன்றவற்றில் தாழ்த்தப்பட்ட மக்கள் பணிபுரிகின்றனரா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம். தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் உழைப்பாளர்கள்தான்.

**118.** நான் கூறியதை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை; நான் தொழிற்சாலைகளைப் பற்றிக் கேட்கிறேன். கிராமங்களில், எல்லாவிதமான வேலைகளிலும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால், தொழிற்சாலைகளில், தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும் எண்ணிக்கையில் பணி ஆற்றுகின்றனரா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், மிகப் பெரும் எண்ணிக்கையில்.

**119.** பம்பாய் போன்ற நகரங்களில் பெரும் எண்ணிக்கையில் அவர்கள் வேலை செய்கிறார்கள் அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**120.** இதனால், தீண்டத்தகாதவர்களாக அவர்கள் நடத்தப் படுவதில் சற்றேனும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை. இதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நெசவாலையில் நெசவுப் பிரிவில்தான் சம்பளம் அதிகம். ஆனால், இந்தப்பிரிவில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழைய முடியாது. அவர்கள் நூற்புப்பகுதி போன்றவற்றில் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

**121.** ஏன்?

*டாக்டர் அம்பேத்கர்:* தீண்டாமைதான் இதற்குக் காரணம்.

**122.** அங்கே அவர் வேலை செய்யும்போது, வேறு ஜாதி மக்களுடன் இணைந்து தானே பணிபுரிகிறார்?

*டாக்டர் அம்பேத்கர்:* சரியாக அப்படித்தான் என்று கூறு வதற்கில்லை. ஒவ்வொரு பிரிவிலும் ஜாதிக்கேற்ப வேலையில் அமர்த்தப்படுகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே ஒரு பிரிவில் வேலை செய்கிறார்கள். மற்றொன்றில்—நெசவுப் பிரிவு என்றுவைத்துக் கொள்ளுங்கள்—முஸ்லீம்களும் மேல் ஜாதி ஹிந்துக்களும் வேலை செய்கின்றனர்.

**123.** தொழிற்சங்கங்களில் அவர்கள் சேர்ந்திருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், இப்போது சேரத் தொடங்கி யிருக்கிறார்கள்.

**124.** மேல் ஜாதியினருடன் சேர்ந்து, தாழ்த்தப்பட்ட மக்களும் தொழிற்சங்கங்களில் உறுப்பினர்கள் ஆக முற்பட்டிருக்கிறார் களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**125.** இதற்கான பதிலைத்தான் நான் உங்களிடமிருந்து பெற விரும்பினேன். மக்கள் தொகையின் அடிப்படையில், தாழ்த்தப் பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டுமென்று நீங்கள் கோருகிறீர்கள். இப்போது முற்றிலும் வேறுபட்ட அடிப் படையில்—தொழிலாளர் அடிப்படையில்—கோரிக்கை எழுந்துள் ளது. இவ்விதம் ஒரு குறுக்கு வகை தோன்றியிருக்கிறது. ஏனெனில், ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்கலாம்; அதே சமயம், அவர் தொழிலாளியாகவும் இருக்க முடியும். அப்படித் தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* எப்போதும் இல்லாவிட்டாலும், அவரைப் பொதுவாக தொழிலாளி எனலாம்.

**126.** நீங்கள் வார்த்தைகளுடன் விளையாடுகிறீர்கள். அப் படித்தானே? நான் மூலதனம், உழைப்பு என்பதைப்பற்றிப் பேசுகிறேன்; சாதாரண, ஒழுங்கமைக்கப்படாத வேலைகளைச் செய்வதைப் பற்றி நான் பேசவில்லை; பெரிய தொழிற்சாலை

களிலுள்ள தொழிலாளர்களைப் பற்றிக் கூறுகிறேன். நான் நிறுவன ரீதியாக ஒன்று திரட்டப்பட்ட தொழிலாளர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இந்த சிரமத்தை நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்? ஒரு விஷயத்தில் சமூக அந்தஸ்தின் மூலமாகவும், மற்றொன்றில் தொழிற்சாலைகள் மூலமாகவும் நீங்கள் பிரதிநிதித்துவம் பெறுவதாக இருந்தால், ஒரு குறுக்குவகை தோன்றுகிறது. அதை நீங்கள் எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* நிறுவன ரீதியாக ஒன்றிணைக்கப்பட்ட தொழிலாளர்களுக்கென சில ஏற்பாடுகள் செய்யப்படும்; தாழ்த்தப் பட்ட மக்களில் பெரும்பாலோர் தொழிலாளர்கள்தான்.

**127.** *திரு. ஹார்ட் ஷர்ன்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை என்பதைத்தான் நீங்கள் ஆதரிக்கறீர்கள் என்பதை மிகவும் தெளிவாகக் கூறிவிட்டீர்கள். எனினும், நீங்கள் உங்களுடைய குறிப்பாணையின் 41 ஆம் பக்கத்தில் இவ்வாறு கூறியிருக்கிறீர்கள்: ''தேர்ந்தெடுக்கும் உரிமையை, கிராமப்புறங்களிலுள்ள தாலுக்கா போர்டுகளுக்கு இருக்கும் அதே அளவு மட்டத்தில் சட்டமன்றங்களுக்கும் நிர்ண யித்தால், அதேபோல, மாநிலத்தின் நகர்ப் புறங்களில் மாதம் மூன்று ரூபாய் தீர்வை செலுத்துவோருக்கும் தேர்ந்தெடுக்கும் உரிமை அளிக்கப்பட்டால் சபா திருப்தி அடையும்'' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தத் தகுதியின் அடிப்படையில், எந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமை விதிக்கப்படும் என்பதை நாங்கள் அறிந்து கொள்வதற்கு நீங்கள் ஏதாவது புள்ளி விவரங் களை அளிக்க முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அந்த அறிக்கையைப் பற்றி எனக்கே அவ்வளவு தெளிவு இல்லை. அதை ஒப்புக் கொள்ள நான் தயங்கவில்லை. கிராமப்புறங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களிட மிருந்து நான் சேகரித்த தகவல்களிலிருந்து, இன்றுள்ள தாலுக்கா போர்டுகளுக்கு வாக்களிப்பதற்கான பட்டியலில், தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்தும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினர் சேர்க்கப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

**128.** நான் அதைப்பற்றி சிந்திக்கவில்லை. இன்றுள்ளதற்குப் பதிலாக, மேற்கூறிய தகுதியை அடிப்படையாக எடுத்துக் கொண்டால், பம்பாய் மாநிலத்தில் வாக்காளர்களின் எண் ணிக்கை எவ்வளவு அதிகரிக்கும் என்று எங்களுக்குத் தெரிவிக்க முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த விஷயத்தில் எந்தத் திட்டவட்ட மான செய்தியையும் என்னால் உங்களுக்குத் தரமுடியாது என்று நினைக்கிறேன்.

**129.** மேஜர் ஆட்லி உங்களைக் கேட்ட கேள்வியையே மீண்டும் திரும்பக் கேட்க விரும்புகிறேன். தொழிற்சாலைகளில்

தாழ்த்தப்பட்ட மக்கள், ஒதுக்கிவைக்கப்பட்ட நிலையில்தான் பணியாற்றுகின்றனரா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம், தனித்து ஒதுக்கப்பட்ட நிலையில்தான்.

130. அவர்களுக்கென்று தனியான பட்டறையும், பிரிவும் உள்ளதா?

டாக்டர் அம்பேத்கர்: தனிப்பிரிவு உள்ளது; பட்டறைகள் இல்லை.

131. எப்படியிருந்தாலும், தொழிற்சாலையிலுள்ள இதர தொழிலாளர்களிடமிருந்து, அவர்கள் தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் அல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: அதையே நான் இவ்விதம் கூற விரும்புகிறேன்: சில பிரிவுக்ள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென்றே தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன; வேறு சில பிரிவுகளில் அவர்கள் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

132. சிலவகையான தொழில்கள் அவர்களுக்கு மறுக்கப்பட்டிருக்கின்றனவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், நெசவாலைகளில்.

133. நெசவுப் பிரிவுக்குள் அவர்கள் செல்வதற்கு அனுமதியில்லையென்று நீங்கள் கூறினீர்கள் அல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

134. அவர்கள் ஒரே தொழிற் சங்கத்தில் உறுப்பினர்கள் ஆகிவிட்டால், நெசவுப் பிரிவுகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள், அவர்களின் நுழைவுக்கு அனுமதி மறுப்பார்களா?

டாக்டர் அம்பேத்கர்: உள்ளே அனுமதிப்பதற்கு அவர்கள் மறுப்பார்கள். ஒருவிஷயத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அண்மையில் பம்பாயில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது, இந்த விஷயம் மிக முக்கியமானதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஆலையின் எல்லாப் பிரிவுகளிலும் வேலை செய்வதற்குத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கும் உரிமையைத் தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒப்புக்கொள்ளவில்லையென்றால், தாழ்த்தப்பட்ட மக்கள் வேலை நிறுத்தத்தில் சேரக் கூடாது என்று நான் அறிவுறுத்தித் தடுப்பேன் என்று கூறினேன். பின்னர் அவர்கள், தங்களுடைய கோரிக்கைகளில் ஒன்றாக இதையும் மிகவும் தயக்கத்துடன் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு தங்களுடைய கோரிக்கைகளை அவர்கள் மில் அதிபர்களுக்குச் சமர்ப்பித்த போது, இது அநீதி என்றால், இந்த அநீதிக்குத் தாங்கள் பொறுப்பல்ல என்று மில் அதிபர்கள் அவர்களை மிகவும் எளிதாக மடக்கிவிட்டார்கள்.

135. மில் அதிபர்கள், குறைவான சம்பளத்தில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் நோக்குடன், பொருளாதாரக்

காரணங்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களைக் குறிப்பிட்ட சில பிரிவுகளில் வேலைக்கு அமர்த்தியிருக்கலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை, இதற்குக் காரணம் தீண்டாமை தான்.

**136.** ஒருவேளை நிலைமை இப்படியும் இருக்கலாமல்லவா? அதிகச் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு தொழிலாளி, குறைந்த சம்பளத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் ஒரு தீண்டத்தகாத தொழிலாளி, தன்னுடைய பிரிவில் வேலை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டால், தனக்கு அளிக்கப்பட்டுவரும் சம்பளத்தில் வெட்டு ஏற்படலாம் என்று அஞ்சலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை, சம்பளங்களின் அடிப்படையில் இந்த வேறுபாடு இல்லை.

**137.** அந்தப் பிரச்சினை இல்லவே இல்லையென்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லவே இல்லை.

**138.** வெறும் தீண்டாமை என்பதுதான் பிரச்சினையா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், முற்றிலும் அதுதான் பிரச்சினை.

**139.** *திரு. கடோகன்:* அவர்கள் தொழிற்சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்க முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**140.** *திரு. பிரேம்சந்த்:* வாக்காளர்களின் விசேடப் பதிவேட்டில், தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற முறையில் இடம் பெற்றிருக்கும் ஜாதிகளைப் பற்றிய திட்டமான விளக்கத்தைக் கூற முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* தொட்டால் தீட்டு ஏற்படும் என்று கருதப்படும் ஜாதிகள்.

**141.** ஒரு சமுதாயத்தின் அந்தஸ்து எவ்வளவுக்கெவ்வளவு தாழ்வாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு அதற்குக் கூடுதல் தேர்தல் அனுகூலம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோட்பாடு நியாயமானதா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**142.** எல்லாச் சிறுபான்மையினருக்கும் கூடுதல் இடங்கள் ஒதுக்கப்பட்டால், பெரும்பான்மையோருக்கு என்ன எஞ்சியிருக்கும்?

*டாக்டர் அம்பேத்கர்:* எல்லாச் சிறுபான்மை இனத்தவர்களையும் ஒன்று சேர்க்கும்போது, அது பெரும்பான்மை ஆகி விட்டால், வேறு தனிப் பெரும்பான்மை என்ற பேச்சே எழவில்லை. சிறுபான்மையினரிடையே ஜாதி வேறுபாடுகள் இருக்கக் கூடும். பம்பாய் மாநிலத்திலுள்ள முஸ்லீம்கள் இரண்டு குழுக்களாகப்

பிரிந்துள்ளதைக் காண்கிறேன். ஒரு குழு முதலாளிகளை ஆதரிக்கிறது; மற்றொன்று தொழிலாளர்களை ஆதரிக்கிறது.

143. அரசியல் மனப்பான்மை கொண்டிராத அல்லது அரசியல் பயிற்சி பெற்றிராத மக்கள், அரசியலையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டிருக்கும் தலைவர்களால் வழி தவறி அழைத்துச் செல்லப்படுவது உண்மையில்லையா?

*டாக்டர் அம்பேத்கர்:* எனக்குத் தெரியாது. அரசியலை வாழ்க்கைத் தொழிலாக நான் என்றுமே கொண்டிருந்ததில்லை. எனவே, இதைப்பற்றி நான் எதுவும் கூற முடியாது.

144. சமுதாயத்தில் கல்வியறிவு இல்லாத மிகவும் பெரும்பான்மையான மக்கட்பகுதியினருக்கு வாக்களிக்கும் உரிமையை விரிவாக்குவதனால் அபாயம் ஏற்படாதா? அதைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறு உண்டாகாதா?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் அவ்வாறு நினைக்கவில்லை.

145. மாநிலத்தின் வருவாயைச் செலவழிக்கும் அவசியமில்லாமலேயே, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகளை இன்றைய பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் சேர்ப்பது ஏன் சாத்தியமில்லை என்பதை எனக்குக் கூறமுடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஏனெனில், இன்றைய அமைப்பின்கீழ் அவர்கள் படுமோசமாய்ப் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

146. மாநிலத்தின் வருவாயைச் செலவழிக்கும் அவசியமில்லாமலேயே, தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகளை இன்றைய பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்ப்பது ஏன் சாத்தியமில்லை?

*டாக்டர் அம்பேத்கர்:* அவ்வாறு மறுப்பவர்களிடம்தான் மறுப்பதற்கான காரணத்தை நீங்கள் கேட்க வேண்டும்.

147. என்ன மறுக்கிறார்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* அவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு.

148. கல்லூரிகளிலும் பள்ளிகளிலுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

149. பம்பாய் நகரசபை இப்போது ஒரு சட்டம் இயற்றியிருப்பது உங்களுக்குத் தெரியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அதை எதிர்த்துப் பம்பாயில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தைப் பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

150. ஒரு பிரிவினர் அதை மறுத்திருக்கக்கூடும். ஆனால், நகர சபை இப்போது எல்லா வரையறைகளையும் நீக்கிவிட்டதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* அடுத்த தேர்தலின்போது, இதை எவ்வளவு தூரம் சரியாகக் கடைப்பிடிப்பார்கள் என்பதை இனி மேல் தான் பார்க்க வேண்டும்.

**151.** ஆனால், வரையறைகளை நீக்கியிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**152.** அவர் குறிப்பிட்டிருக்கும் கண்டனக் கூட்டத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்ளலாமா?

*டாக்டர் அம்பேத்கர்:* இதுதான் நிலைமை. பம்பாய் நகரசபை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பம்பாய் நகரத்தில் தனியாகப் பள்ளி களை நடத்தி வந்தது. இப்போது, கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கீழ், பம்பாய் நகரசபைப் பள்ளிகளின் எண்ணிக்கை யைக் கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது; எனவே, சிக்கன நடவடிக்கையாக, பல்வேறு இடங்களில் சிதறிக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகளையும் ஆங்காங்கே உள்ள மேல் ஜாதி ஹிந்துக் குழந்தைகள் படிக்கும் பள்ளிகளில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பள்ளிக் கூடங்களில் குழந்தைகளுக்காகக் குடிநீர் மற்றும், வேறு சில வசதிகள் செய்ய வேண்டியிருப்பது இயற்கையே. குடிதண்ணீ ருக்குச் சில விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டுமா, தாழ்த்தப் பட்ட இனக் குழந்தைகளுக்கும் மேல் ஜாதி ஹிந்துக் குழந்தை களுக்கும் தனித்தனியாகக் குடிநீர்ப் பானைகளை வைக்க வேண் டுமா என்ற கேள்வி எழுந்தது. ''எங்களுடைய பள்ளிகளில் நாங்கள் தீண்டாமையை அங்கீகரிக்க முடியாது'' என்று பம்பாய் நகர சபை தீர்மானம் நிறைவேற்றியது. நகர சபைப் பள்ளிக் கூடங்களில், தனித்தனியாகக் குடிநீர்ப்பானைகளை வைக்கக் கூடாது என்று அது சுற்றறிக்கை அனுப்பியது. இது ஹிந்து மதத் திற்கு எதிரானதென்றும், இவ்விதம் ஒரே மாதிரியான ஏற்பாடு செய்யக்கூடாது என்றும் கண்டித்து, பம்பாய் நகரின் ஒரு முக்கிய ஹிந்துத் தலைவரின் தலைமையில் ஓர் ஆட்சேபக் கூட்டம் நடத்தப் பட்டது.

**153.** *திரு. பிரேம்சந்த்:* ஆமதாபாத் ஆலைகளில் நெசவுப் பிரிவுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் வேலையில் ஈடுபடுத்தப்பட் டிருப்பது உங்களுக்குத் தெரியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அது எனக்குத் தெரியாது.

**154.** அங்கே அவர்கள் நெசவுப் பிரிவுகளில் வேலை செய் கிறார்கள் என்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* இங்கே ஒரு விஷயத்தைக் கூற விரும்பு கிறேன். ஒரு வேளை அந்த நெசவுப் பிரிவில் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கலாம். தாழ்த்தப்

பட்ட மக்களுக்காகவே ஒரு சில தறிகள் தனியாக ஒதுக்கித் தரப் படும் நிலைமையை என்னால் கப்பனை செய்து பார்க்க முடி கிறது. சில ஆலைகளில், நெசவுப் பிரிவுகளில் மொத்தமாகத் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது என்ற பிரேரணையும் தற்சமயம் ஆலோசனையில் இருந்து வருகிறது. அவர்கஸ் வசம் அந்தப் பிரிவுகளை ஆலை அதிபர்கள் ஒப்படைக்க வேண்டும் என்று பிரரேபிக்கப்படுகிறது. ஆனால், ஒரே நெசவுப் பிரிவில் தாழ்த்தப்பட்ட மக்களும், மேல் ஜாதி ஹிந்துக்களும் சேர்ந்து வேலை செய்ய முடியாது.

155. *தலைவர்: கலந்து வேலை செய்வதில்தான் பிரச்சினை உள்ளதா?*

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

156. *சர் ஹரிசிங் கௌர்: அரசியல் சாசன சீர்திருத்தத்தின் பொதுவான திட்டம் பற்றி உங்களுடைய நிறுவனத்தின் கண் ணோட்டம் யாது? இந்த விஷயம் பற்றி ஏதாவது திட்டவட்டமான கருத்துக் கொண்டிருக்கிறீர்களா?*

*டாக்டர் அம்பேத்கர்:* இதை நான் உங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் சாசனப் பிரச்சினைகளில், ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால், தாழ்த்தப்பட்ட மக்கள் அவ்வளவு அதிக ஆர்வம் காட்டவில்லை; எத்தகைய அரசாங்க வடிவம் அமலுக்கு வந்தாலும், தங்களுக்குத் தேவையான வாக்குறுதி களையும், பாதுகாப்பையும் பெறுவதில்தான் அவர்கள் கூடுதல் அக்கறை கொண்டிருக்கிறார்கள், எனவே, மாநில அரசின் வடிவம் பற்றியோ, அல்லது மத்திய சர்க்காரின் வடிவம் பற்றியோ, தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தகைய திட்டவட்டமான கருத்துக்களை யும் கொண்டிருக்கவில்லையென்று தான் நினைக்கிறேன். எனினும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்ற முறையில் இவ் விஷயம் பற்றி என்னுடைய சொந்தத் தனிப்பட்ட கருத்துக்கள் உண்டு; இந்தக் கருத்துக்கள் பொதுவாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரின் கருத்துக்கள் என்று இல்லாமலிருக்கலாம். அதனால் தான், என்னுடைய குறிப்பாணையில் அரசியல் சாசனத்தைப் பற்றி எதுவுமே கூறப்படவில்லை.

157. *அது எனக்குத் தெரியும், அதனால்தான் இந்தக் கேள் வியை உங்களிடம் கேட்டேன். உங்களுடைய தனிப்பட்ட கருத் துக்கள் யாவை?*

*டாக்டர் அம்பேத்கர்:* மாநில சர்க்காரைப் பொறுத்த் மட்டில், நான் மாநில சுயாட்சியை ஆதரிக்கிறேன்.

158. *வரையறுக்கப்பட்டதா? அல்லது வரையறுக்கப்படாததா?*

*டாக்டர் அம்பேத்கர்:* சட்டம், ஒழுங்கு மாற்றம் சம்பந்தமாக சில பாதுகாப்புக்கள் இருக்கலாம் என்று நினைக்கிறேன். சட்டம்

மற்றும் ஒழுங்கு மாற்றப்படுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. நான் மாற்றத்தை ஆதரிக்கிறேன். இருந்தாலும், சில பாதுகாப்பு அவசியம் என்று கருதுகிறேன். எத்தகைய பாதுகாப்பு இருக்க வேண்டும் என்று நான் இப்போது திட்டவட்டமாகக் கூற முடியாது; எனினும், அந்தத் துறையில் சில அனுகூலமான பாதுகாப்பு இருக்க வேண்டும். அதைத் தவிர, முழு மாநில சுயாட்சியை நான் ஆதரிக்கிறேன். (இது என்னுடைய சொந்தத் தனிப்பட்ட கருத்து.)

**159.** மத்திய சர்க்காரைப்பற்றி உங்கள் கருத்து யாது?

*டாக்டர் அம்பேத்கர்:* அங்கே இரட்டை ஆட்சியுடன் தொடங்கலாம் என்று நினைக்கிறேன்.

**160.** வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்பதைப் பொறுத்த மட்டில், வயது வந்த ஆண், பெண் இருபாலாரும் அந்த உரிமையைப் பெற்றிருக்க வேண்டும் என்று தானே கோருகிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**161.** அது நடைமுறைக்கு சாத்தியமானதுதான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* முற்றிலும் நடைமுறை சாத்தியமானது.

**162.** தங்களுடைய சொந்த சமுதாயத்தின் நன்மைக்கு அரசியல் வாக்குரிமையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் அளவுக்கு, மக்கள் அரசியல் உணர்வு பெற்றிருக்கிறார்கள் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் மட்டுமே நான் பேசுகிறேன். பம்பாய் மாநிலத்தைப் பொறுத்த மட்டில், தாழ்த்தப்பட்ட மக்கள் தம்முடைய வாக்குகளை மிகவும் அறிவார்ந்த முறையில் பயன்படுத்துவார்கள் என்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். தீண்டாமை பற்றிய மனக்கசப்பு அவர்களுடைய உள்ளங்களிலே ஆழ்ந்து வேரூன்றியிருப்பதால், அவர்களுடைய வாழ்வின் ஒவ்வொரு நிமிடத்திலும் அதை அவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதால், அரசியல் அதிகாரத்தின் மூலம் மட்டுமே இந்த அவலத்தைப் போக்க முடியும் என்பதை அவர்கள் நன்கு உணர்ந்திருப்பதால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு வாக்காளர் அறிவுபூர்வமான வாக்காளராக இருப்பார் என்று நான் மிக்க உறுதியுடன் கூற முடியும்.

**163.** இதர நாடுகளின் உதாரணத்தைப் பின்பற்றி, இங்கேயும் எத்தகைய வரியும் செலுத்தாதவர்கள், அரசியல் உரிமையும், அரசியல் அதிகாரத்தையும் பெற்று, ஏற்கெனவே வரிச்சுமையில் அழுந்திக் கிடப்பவர்களை மேலும் அழுத்தி அடக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* அப்படித்தான் இருக்க வேண்டுமெனக் கருதுகிறேன். இதில் எவ்விதத் தப்பையும் நான் பார்க்கவில்லை.

*164.* வரி செலுத்தும் சமுதாயத்தைச் சுரண்டுவதில் எத்தகைய தப்பும் இல்லையா? இது உங்களுடைய சொந்தக் கருத்தா? அல்லது, நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்கள் நிறுவனத்தினுடைய கருத்தா?

*டாக்டர் அம்பேத்கர்:* இது என்னுடைய சொந்தக் கருத்து. அதைப் பற்றி எங்கள் நிறுவனம் இங்கே எதையும் கூறவில்லை.

*165.* கமிஷனுக்கு இந்தக் கருத்தைத் தெரிவிப்பதில் உங்களுடைய நிறுவனத்தின் பொதுவான அபிப்பிராயத்தை நீங்கள் பிரதிபலிப்பதாக நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* எல்லா ஏழை எளிய சமுதாயங்களின் கருத்து இப்படித்தான் இருக்குமென்று நினைக்கிறேன்.

★ ★ ★ ★ ★

*167. சர் ஹரிசிங் கௌர்:* தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு தனிப்பட்ட சமுதாயமாக, ஹிந்து சமுதாயத்திலிருந்து தனிப்பட்டிருக்கும சமுதாயமாகக் கருதப்பட வேண்டும் என்று தலைவருடைய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் நீங்கள் குறிப்பிட்டீர்கள். நீங்கள் இதைத் தேர்தல் நோக்கங்களுக்கு மட்டுமே கடைப்பிடிக்கிறீர்களா? அல்லது எல்லா நோக்கங்களுக்குமா?

*டாக்டர் அம்பேத்கர்:* உண்மையில், எல்லா நோக்கங்களிலுமே அவர்கள் தனிப்பட்டவர்கள்.

*168.* தாழ்த்தப்பட்ட மக்கள்தான் உண்மையான ஹிந்துக்கள் என்று நீங்கள் வகைப்படுத்துவீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* பெயரிடும் முறையைப்பற்றி நான் கவலைப்படவில்லை. ஹிந்து சமுதாய எல்லைக்கு வெளியே நான் இருக்கும் வரையிலும், நான் என்னை ஹிந்து என்று அழைத்துக் கொண்டாலும் அல்லது ஹிந்து அல்லாதவன் என்று அழைத்துக் கொண்டாலும், எத்தகைய வித்தியாசமும் இல்லை.

★ ★ ★

*170.* இதில் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. ஹிந்து சமுதாயத்திற்கு வெளியே நீங்கள் இருந்தால்.... உங்களுக்கு ஹிந்துச் சட்டம் செல்லுபடியாகாது. உதாரணமாக, *1923*-ஆம் வருட *30*-ஆம் எண் சட்டத்தின் கீழ், நீங்கள் திருமணம் செய்து கொள்ள முடியாது. திருமணச் சட்டத்தைப் பொறுத்தமட்டிலும் எல்லா ஜாதி வித்தியாசங்களையும் அது அறவே ஒழித்து விட்டது. ஹிந்துவுக்கும் மஹறுக்குமிடையே; தீண்டத்தக்கவருக்கும் தீண்டத்தகாதவருக்குமிடையே எல்லா வித்தியாசங்களையும் அது ஒழித்து விட்டது. இப்போது நீங்கள் அந்தச் சமுதாயத்திற்கு வெளியே சென்றுவிட்டால், அந்தச் சமூக அமைப்புக்குப் புறம்பே சென்று

விட்டால், உங்களை நீங்கள் ஹிந்து அல்லாதவன் என்று அழைத்துக் கொண்டால், அந்த அளவுக்கு நீங்கள் ஹிந்துச் சட்டத்திற்கு அன்னியமாகி விடுவீர்கள். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* இருக்கலாம்.

**171.** அப்படியானால், நீங்கள் எந்த சட்டத்தின் கீழ் வருவீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* உதாரணமாக கோஜாக்களைப் போலவே எங்களுக்கும் ஹிந்துச் சட்டம்தான் செல்லுபடியாகும். கோஜாக்கள் முஸ்லீம்கள், எனினும், சொத்துரிமையைப் பொறுத்த மட்டில், அவர்கள் ஹிந்துச் சட்டத்தின்படி அமல் செய்யப்பட வேண்டுமெனக் கோருகிறார்கள்.

**172.** நீங்கள் 1923-ஆம் வருட 30-ஆம் எண் சட்டத்தின் கீழ் அதாவது ஹிந்துச் சட்டத்தின் கீழ் வருகிறீர்கள். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* தாழ்த்தப்பட்ட மக்கள், திருமணத்தைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று எனக்குத் தெரியாது.

**173.** உங்கள் குறிப்பாணையைச் சற்றே திருப்பிப்பார்க்கும் படி கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாணையின் 39-ஆம் பக்கத்தில் கீழ்வருமாறு குறிப்பிட்டிருக்கிறீர்கள்; என்னுடைய நண்பர் திரு. கிக்காபாய் எழுப்பிய கேள்விக்கும் அதேபோன்ற பதிலைத்தான் சொல்லியிருக்கிறீர்கள். ''ஒரு சமுதாயத்தின் அந்தஸ்து என்பது சமூகப் போராட்டத்தில் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதற்கு அதற்கு உள்ள அதிகாரம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். சமுதாயத்தின் கல்விமற்றும் பொருளாதார அந்தஸ்தின் மீதுதான் அந்த அதிகாரம் சார்ந்திருக்க வேண்டும் என்பது வெளிப்படை.''

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், அது முற்றிலும் சரி.

**174.** ஒரு சமுதாயத்தின் அந்தஸ்து எவ்வளவுக்கெவ்வளவு தாழ்வாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு, இதர ஜாதியினரைக் காட்டிலும் கூடுதலான தேர்தல் அனுகூலத்தை அது பெற்றிருக்க வேண்டும் என்ற கோட்பாட்டிலிருந்து இது தோன்றுகிறது. முந்திய இரண்டு வாக்கியங்களிலிருந்து, வாதத்திலிருந்து தருக்க ரீதியாகப் பெறப்பட்டது என்று இந்தக் கடைசி வாக்கியத்தை நீங்கள் சான்றாகக் காட்டுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**175.** அது தருக்கரீதியாகப் பெறப்பட்டது என்று நீங்கள் கருதுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், முற்றிலுமாக.

**176.** .... நீங்கள் கூறியிருக்கும் விஷயத்தின் பால் உங்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்: ''போதுமான அளவு

பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்ற கோரிக்கையுடன் கூடவே, நாட்டின் அரசியல் சாசனத்தில் இந்த ஷரத்துக்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் கோருவது அவசியம் என்று சபா உணருகிறது.'' இந்த ஷரத்துக்களில் கீழ்க்கண்ட கோரிக்கை போன்ற விஷயங்களும் இருப்பதைக் காண்கிறோம். அதாவது: ''தம்மிடையேயிருந்து விசேஷ போலீஸ் இன்ஸ்பெக் டரை நியமனம் செய்யும்படி கோருவதற்கு ஒவ்வொரு தாழ்த்தப் பட்ட வகுப்பினரும் உரிமை பெற்றிருக்கவேண்டும்.'' இது சரி தானா?

*டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.*

*177.* இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் தங்களிடையேயிருந்து நியமனம் செய்யப்பட்ட ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பெற்றிருப்பார்கள் என்று பணிக்கும் ஒரு ஷரத்து, நாடாளுமன்றத்தின் சட்டத்தில் இடம் பெற்றிருக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* அதில் எதுவும் எனக்கு விசித்திரமாகத் தென்படவில்லை.

*178.* எல்லா சமுதாயங்களுக்கும் இத்தகைய அனுகூலம் அளிக்கும் ஷரத்து சேர்க்கப்படுகிறது என்று வைத்துக் கொள் வோம். (உங்களுக்கு அரசியல் சாசன ரீதியான ஒருசில உத்தர வாதங்கள் அளிக்கப்பட்டால், இதர சமுதாயங்களுக்கும் இதே போன்ற உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பது இயல்பே அல்லவா?) அப்போது, எல்லா அதிகாரப்பதவிகளையும், ஏனைய பலவிஷயங்களையும் பல்வேறு சமுதாயங்களுக்கிடையே பங்கு போட்டுவிட வேண்டியிருக்கும். இந்தியாவுக்கு இத்தகைய அரசி யல் சாசனத்தைத்தான் நீங்கள் எதிர்பார்க்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* எனக்கு அது தெரியாது. நான் தாழ்த்தப் பட்ட மக்களுக்காக மட்டுமே பேசுகிறேன். ஒரு விஷயத்தை நான் தெளிவுபடுத்தட்டுமா?

*179.* என்னுடைய வாக்கியத்தை முடித்து விடட்டுமா? இத்த கைய எதிர்பாரா நிலை உங்களுடைய உள்ளத்தில் எத்தகைய அச்சத்தையும், ஐயப்பாட்டையும் ஏற்படுத்தவில்லையா?

*டாக்டர் அம்பேத்கர்:* நீங்கள் மேலே செல்வதற்கு முன்னர், நான் விளக்கம் அளிக்க அனுமதியுங்கள். ''சிறுபான்மை'' என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஒரு சமுதாயத்திலுள்ள மக்கள் குறைந்த எண்ணிக்கையில் இருப்பதால் மட்டும், அரசியல் நோக்கங்களுக்காக அது சிறுபான்மையெனக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அடக்கி ஒடுக்கப்படும் சிறுபான்மையினர் அல்லது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ள சிறு பான்மையினர் ஆகியோர்தான் அரசியல் நோக்கங்களுக்காகக்

கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சிறுபான்மையினர் என்று கருதுகிறேன்.

*180. இதர நாடுகளில் எங்கெல்லாம் இத்தகைய சிறுபான்மையினர் இருக்கிறார்களோ அங்கெல்லாம் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக, சில சமயங்களில், ஓர் அமைச்சர் நியமிக்கப் படும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நீங்கள் சிந்தித் தீர்களா?*

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

*181. உங்களுக்கு நாங்கள் பாதுகாப்பு அளிக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம்—அது எந்த வடிவத்திலும் தரப்படலாம்.*

*டாக்டர் அம்பேத்கர்:* உங்களைக் குறுக்கிட்டுப் பேசுவதற்கு வருந்துகிறேன். உலகப்போருக்குப் பின்னர் ஏற்றப்பட்ட சமாதானத்தின் விளைவாக, பல்வேறு ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக பல ஸ்லாவ் இன நாடுகளில் வகுக்கப்பட்ட புதிய அரசியல் சாசனங்களில், இந்தக் கோட்பாடு அதிக அளவில் இடம்பெற்றிருப்பதைக் காண்கிறேன். இந்த விஷயத்தில் நான் சற்றே விசேஷ கவனம் செலுத்தியிருக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*182. பர்ன்ஹாம் பிரபு: அமல்படுத்தப்பட்டிருக்கிறதா?*

*டாக்டர் அம்பேத்கர்:* அரசியல் சாசனத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது.

*183. நடைமுறையிலும் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா?*

*டாக்டர் அம்பேத்கர்:* நடைமுறையில் நிறைவேற்றப்பட்டிருக் கிறது; இதுதான் விஷயம், அதாவது, உத்தரவாதம் நிறைவேற்றப் படவில்லையென்று, சிறுபான்மையினர் உணர்ந்தால், சர்வதேச சங்கத்திற்கு விண்ணப்பம் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு.

★ ★ ★ ★ ★

*186. அந்தக் கோட்பாட்டுடன் நான் மனவேறுபாடு கொள்ள வில்லை.*

*டாக்டர் அம்பேத்கர்:* வடிவத்தைப்பற்றி நான் எத்தகைய பிரத்தியேக ஆர்வத்தையும் கொண்டிருக்கவில்லை.

*187. நீங்கள் குறிப்பிட்டிருக்கும் திட்டத்தைப்பற்றிய விவரங் கள் இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் புகுத்தப்பட்டால் நிரந் தரமான வகுப்புச் சண்டைக்கு அது வழிகோலாதா?*

*டாக்டர் அம்பேத்கர்:* வழி கோலக்கூடும்; ஆனால், அது பெரும்பான்மையினரின் மனப் போக்கின் மீதுதான் சார்ந்திருக் கிறது.

188. எனவே, அறிவு நுட்பமுடைய அரசியல் மேதகை என்ற முறையில், அதை நீங்கள் ஆதரிக்க மாட்டீர்களல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் இந்த விஷயங்களையெல்லாம் வற்புறுத்திய போதிலும், இந்த ஏற்பாடுகள் தாற்காலிகத்தன்மை கொண்டவை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்தியா ஒன்றாக ஐக்கியப்பட்டிருக்கும் காலத்தை நான் எதிர்பார்க்கிறேன்; அதையே நான் விரும்புகிறேன். இந்த விஷயங்கள் எல்லாம் அவசியமற்றவை என்று கருதப்படும் காலம் வரும் என்று நான் நம்புகிறேன். ஆனால், இவையெல்லாம், சிறுபான்மையின்மீது பெரும்பான்மை கொண்டிருக்கும் மனப்போக்கின் மீதுதான் ஆதாரப்பட்டிருக்கும்.

★ ★ ★ ★ ★

198. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருடைய வழக்கில் நீங்கள் ஆஜர் ஆனதாகவும், சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்படுவோம் என்ற அச்சத்தின் பேரில், அவர் நீதிமன்றத்திற்கு வெளியே, ஒரு ஜன்னலுக்கு அருகில் நின்றதாகவும் குறிப்பிட்டீர்கள். அது எந்த மாவட்டம்?

*டாக்டர் அம்பேத்கர்:* காந்தேஷ் மாவட்டம்.

199. சாதாரண மாஜிஸ்திரேட் கோர்ட்டா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஸ்டைபெண்டியரி மாஜிஸ்திரேட் கோர்ட்.

200. அந்த மாஜிஸ்திரேட் என்ன ஜாதி?

*டாக்டர் அம்பேத்கர்:* ஹிந்து.

201. குற்றவாளி, நீதிமன்றத்திற்குள் வருவதை அவர் ஆட்சேபிக்கவில்லையல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை. குற்றவாளியே நீதிமன்றத்திற்குள் நுழைய விரும்பவில்லை.

202. ஹிந்துக்களின் கடந்த காலச் செயல்களினால், குற்றவாளி அச்சுறுத்தப்பட்டிருந்தாரா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

203. மேல்ஜாதி ஹிந்துக்களின் அடக்குமுறை காரணமாக, தாழ்த்தப்பட்ட மக்களின் உள்ளங்களில் அச்சம் மிக ஆழமாகப் பதிந்து போயிருக்கிறது. மேல் ஜாதி ஹிந்துக்களால் அளிக்கப்பட்டிருக்கும் கொஞ்சநஞ்சம் உரிமைகளையும் மீறிச் சென்றால், தனக்கு நியாயம் கிடைக்காது என்ற பீதி அவருடைய உள்ளத்தில் வேரூன்றியிருக்கிறது. அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

204. *சர் ஹரிசிங் கௌர்:* டாக்டர் அம்பேத்கர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களின்

பாதைக்குக் குறுக்கேயுள்ள எல்லாத் தகுதியின்மைகளையும் கெல்லியெறிவதற்கும் பாடுபடும் ஒரு முன்னேற்றகரமான இயக்கம் கடந்த சில ஆண்டுகளாய் செயல்பட்டு வருகிறதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**205.** உங்களுடைய விருப்பங்களுக்கும், உள்ளத்திற்கும் ஏற்ற அளவில் சீர்திருத்தங்கள் இல்லை என்பதை ஒப்புக் கொள் கிறேன். ஆனால் அதே சமயம், மேல் ஜாதி ஹிந்துக்களுக்கும், ஜாதியற்ற ஹிந்துக்களுக்குமிடையே உள்ள எல்லாத் தடை மதில் களையும் அகற்றுவதன் மூலம், ஹிந்து மக்கள் அனைவரும் ஒன்று திரட்டப்பட வேண்டும் என்ற உணர்வு வளர்ந்து வருகிறது என்பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். நீங்கள் அதை அங்கீ கரிக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்; மேடையிலிருந்து பேசப்படு கின்றன.

**206.** ஆக்கபூர்வமான செயல்களும் இருக்கின்றனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* நாட்டின் என்னுடைய பகுதியைப்பற்றி அதாவது பம்பாய் மாநிலத்தைப்பற்றிப் பேசுகையில், நீங்கள் வெளியிட்ட கருத்துரையை ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறேன்.

**207.** உங்களுக்குச் சில உதாரணங்களைத் தருகிறேன். ஒவ் வோர் ஆண்டும், ஜாதி மற்றும் ஜாதியில்லாதக் கழகங்கள் இருக் கும் எல்லா இடங்களிலும், ஹிந்துக்கள் வருடாந்தர விருந்துக்கு ஏற்பாடு செய்கின்றனர். ஒரு ஜாதி மக்கள் மற்ற ஜாதி மக்களுடன் பரிச்சயம் செய்து கொள்ளும் நோக்கமுடன் சமபந்தி போஜனம் நடைபெறுகிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த மாநிலத்தில் அவ்வாறு நடைபெறு வது எனக்குத் தெரியாது.

**208.** நான் அத்தகைய பல விருந்துகளில் கலந்து கொண் டிருக்கிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* இந்த மாநிலத்திலா?

*சர் ஹரி சிங்க கௌர்:* இல்லை, நாகபுரியில்.

**209.** இங்கே அத்தகைய இயக்கம் எதுவும் இல்லையா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை.

**210.** ஒடுக்குமுறையும் தீண்டாமையும் ஒழிய வேண்டும் என்ற உண்மை அங்கீகரிக்கப்பட்டு வருகிறது என்பதையும், இந்தத் துறை யில் எடுக்கப்படும் எல்லா முயற்சிகளையும் மேல்ஜாதி ஹிந்துக் கள், குறிப்பாக சீர்திருத்தமனப்பான்மை கொண்டவர்கள், அனு தாபத்துடன் ஆதரிக்கிறார்கள் என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள் கிறீர்கள் அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதில் எனக்குத் தயக்கம் உண்டு.

*தலைவர்:* நடைமுறை உண்மையை நேரில் கண்டவர் என்ற கருத்தின் அடிப்படையில், உங்களை ஒன்றிரண்டு கேள்விகளைக் கேட்கலாமா?

*சர் ஹரிசிங் கௌர்:* நிச்சயமாகக் கேளுங்கள்.

211. *தலைவர்:* இதைச் செய்வதற்கு திரு. ராஜாதான் பல வழிகளிலும் மிகவும் பொருத்தமானவர்; ஆனால், உங்களுடைய சொந்தக் கருத்தைக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன் பம்பாய் மாநிலம் இருந்த நிலைமையையும், இன்றுள்ள நிலைமையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நீங்கள் இங்கே எத்தனை வருடங்களாக இருக்கிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளாக.

212. அதற்கும் முன்னர் பல ஆண்டுகளாகவே உங்களுடைய சொந்த சமுதாயத்தின் நலன்களில் அக்கறை காட்டி வந்துள்ளீர்கள் அல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

213. இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலைமையைப் பற்றி எங்களுக்கு விளக்கிக் கூறுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* சரி.

214. இரண்டு அல்லது. மூன்று விஷயங்களை எடுத்துக் கொள்கிறேன். ஹிந்து ஆலயங்களுக்குள் தாழ்த்தப்பட்ட மக்கள் அனுமதிக்கப்படும் விஷயத்தைப் பொறுத்தமட்டில், எத்தகைய மாற்றமும் இல்லை என்று நினைக்கிறேன். அது மதசம்பந்தமான நடைமுறை மற்றும் போதனை விஷயம். அதை நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஆனால், அதில் எத்தகைய மாற்றமும் இல்லையல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை; இந்தத்துறையில் எத்தகைய மாற்றமும் இல்லை.

215. எனக்குத் தெரிய வேண்டிய விஷயம் இதுதான். இந்த மாநிலத்திலுள்ள இரண்டு அல்லது மூன்று திட்டவட்டமான பிரச்சினைகளை எடுத்துக் கொள்வோம். மாவட்டங்களில், கிராமப் புறங்களில், தாழ்த்தப்பட்ட மக்கள், தீண்டத்தகாதவர்கள், தனியாக ஒதுங்கி வாழ்கிறார்கள் என்று நீங்கள் எங்களிடம் கூறினீர்கள். இதை நாங்கள் பல தடவைகள் பார்த்திருக்கிறோம் என்பது உண்மையே. ஹிந்து கிராமமாக இருந்தால், அவர்கள் கிராமத்தின் ஒரு மூலையில் ஒதுக்குப் புறமாக வசிக்கிறார்கள்; சில சமயங்களில், தங்களுடைய சொந்த குக்கிராமங்களில் வசிக்கிறார்கள். பொதுவான சமுதாயங்களிடையே அவர்கள் குடி

யிருப்பதைப் பொறுத்தமட்டில், கடந்த இருபதாண்டுகளில் எத்தகைய மாற்றமாவது ஏற்பட்டிருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* எத்தகைய மாற்றமுமில்லை.

**216.** சில நாட்களுக்கு முன்னர் நாங்கள் ஒரு சில கிராமங்களைப் பார்த்தோம். அவர்களில் சிலர் நதியிலிருந்து தண்ணீர் எடுக்க முடிவதைக் கண்டோம். கிணறுகளின் மீது ஆதாரப்பட்டிருக்கும் வேறு சில கிராமங்களும் இருக்கின்றன என்று கருதுகிறேன்.

*டாக்டர் அம்பேத்கர்:* நதியைப் பொறுத்தமட்டில் கூட, நீதியின் ஒரு சில பகுதியளிலிருந்துதான் அவர்கள் தண்ணீர் எடுக்க முடியும். அவர்களுக்காக நதியில் ஒரு பாகம் ஒதுக்கப்பட்டிருக்கும்.

**217.** அதாவது, நதியில் மேல் ஜாதி ஹிந்துக்கள் தண்ணீர் எடுக்கும் இடத்திலிருந்து தள்ளி கீழ்ப்பாகத்தில்தான் தாழ்த்தப்பட்ட மக்கள் தண்ணீர் எடுக்க முடியும் என்று கூறுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**218.** கிணறுகளின் மீது ஆதாரப்பட்டிருக்கும் கிராமங்களை இப்போது எடுத்துக் கொள்வோம். அவை அதிகம் இருக்கின்றனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், அதிகம் உள்ளன.

**219.** கடந்த இருபது ஆண்டுகளில் இவ்விஷயத்தில் ஏதாவது மேம்பாடு ஏற்பட்டிருக்கிறதா? இதைத் தெரிந்து கொள்ள ஆர்வமுடன் இருக்கிறேன். ஒளிவுமறைவின்றிக் கூறுவீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* எத்தகைய மேம்பாடும் இல்லை.

**220.** இந்த விஷயம் பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், தீர்மானங்கள் மாத்திரமே.

**221.** ஒருவரைத் தொட்டால் (அல்லது சில சமயங்களில் அவர் நிழல் பட்டாலேகூட,) தீட்டு ஏற்பட்டு விட்டது என்று மேல் ஜாதியினரால் கருதப்படக் கூடிய அளவுக்குத் தீண்டாமை பரவியிருப்பது உண்மையா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**222.** இந்த விஷயத்தில் ஏதாவது மேம்பாடு ஏற்பட்டிருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* கொஞ்சம் முன்னேற்றம் காணப்படுகிறது.

**223.** அதைக் கேட்க நான் மகிழ்ச்சியடைகிறேன். அதாவது, இருபது ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு மேல்ஜாதி ஹிந்து தீண்டத்

தகாதவரைத் தொட்டுவிட்டால் உடனே தனக்கு ஏற்பட்ட தீட்டைப் போக்கி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நினைத்த அளவுக்கு, இப்போது அவ்வளவு கறாராக இருப்பதில்லை. நான் கூறுவது சரியா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**224.** இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட, தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்த சிலர், தம்முடைய வாழ்க்கைத் தொழிலில் மிகவும் முன்னேறியிருக்கிறார்கள் என்று நினைக் கிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன்னர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த யாராவது பம்பாயில் வழக்குரைஞராகப் பணி யாற்றிருக்கிறார்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை.

**225.** இப்போது, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களில் எத்தனை பேர் வழக்குரைஞராகப் பணியாற்றுகிறார்கள்.

*டாக்டர் அம்பேத்கர்:* நான் ஒருவன் மட்டும்தான்.

**226.** சர்தார்கள் மற்றும் இனாம்தார்களுக்கான வாக்காளர் பட்டியலில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இரண்டு உறுப் பினர்கள் இருப்பதாக நேற்று எங்களிடம் கூறப்பட்டதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஒரே ஒருவர் மட்டும்தான். அவருடைய நிலை வித்தியாசமானது. போர்க்களத்தில் செய்த சேவைக்காக, பேஷ்வாக்களால் அவருக்கு அந்த ஜாகீர் வழங்கப்பட்டது. பிரிட் டிஷ் அரசாங்கத்தால் அவருக்கு அந்தப் பட்டம் அளிக்கப்பட வில்லை.

**227.** இப்போது இந்தியாவில் நகரங்களையும் கிராமங்களை யும் இணைக்கும் சாலைகளில் பேருந்துகள் ஓடிக்கொண்டிருப் பதைக் காண்கிறோம். இந்தப் பேருந்துகளில் தாழ்த்தப்பட்ட மக்களும் ஏறலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* கிராமங்களில் ஏறமுடியாது. பல கிராமங் களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் இந்தப் பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

**228.** அவர்களைத் தடுப்பது யார்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஓட்டுநர் அவர்களைப் பேருந்தில் ஏற்றிக் கொள்ளமாட்டார்.

**229.** கட்டணம் கொடுப்பவர்கள் எல்லோரையும் ஓட்டுநர் ஏற்றிக் கொள்ள வேண்டும். ஏற்றிக் கொள்ள அவர் ஏன் மறுக் கிறார்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஏனெனில், இவர்களை ஏற்றிக் கொண் டால், இதர ஜாதியினர் அந்தப் பேருந்தில் ஏறமாட்டார்கள்.

உதாரணமாக, இங்கேயுள்ள நாவிதர், நான் ஒரு ரூபாய் கொடுக்கச் சம்மதித்தால் கூட, எனக்கு அவர் சவரம் செய்யமாட்டார்.

**230.** *ராவ் சாகிப் பாட்டில்:* எந்தப் பயணியையும் ஏற்றிக் கொள்ள மறுத்தால், ஓட்டுநர் சட்டப்படி கைது செய்யப்படலா மல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* எல்லா இருக்கைகளும் நிரம்பிவிட்டன என்று கூறுவதன் மூலம், சட்டத்திலிருந்து தந்திரமாகத் தப்பித்துக் கொள்ளலாம்.

**231.** இந்தத் துறையில் நிலைமை மேம்பட்டுக் கொண் டிருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், மேம்பட்டுக் கொண்டிருக் கிறது. எனினும், இப்போதும் கூட, பேருந்துகளில் தாழ்த்தப் பட்ட மக்கள் ஏறுவதைத் தடுக்கக் கூடிய பல நிகழ்ச்சிகள் நடை பெறத்தான் செய்கின்றன.

**232.** பம்பாயில் ஆலைகளில் வேலை செய்து கொண்டிருக் கும் தாழ்த்தப்பட்ட மக்களை எடுத்துக் கொள்வோம். அவர்களில் சிலர் டிராம் வண்டிகளில் பயணம் செய்கிறார்கள் என்று நினைக் கிறேன். அவர்கள் டிராம் வண்டிகளில் ஏறுவதை யாராவது தடுக் கிறார்கள் என்று நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு சம்பவம் நடைபெற்றது. பங்கி ஜாதியைச் சேர்ந்த ஒருவர் டிராம் வண்டியில் ஏறாமல் தடுக்கப்பட்டார்.

**233.** இரண்டு வருடங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவத் தைப் பற்றிக் கூறினீர்கள். இந்தச் சம்பவம் ஒருவித விலக்கு போலத்தான் எனக்குத் தோன்றுகிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* உதாரணமாக, நான் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்த போது, தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்கள் ரயில் பெட்டிகளுக்குள் ஏறவிடாமல் பயணிகள் தடுத்த நூற்றுக் கணக்கான சம்பவங்களை நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

**234.** *சர் ஹரிசிங் கௌர்:* பங்கி ஜாதி நபரைப் பற்றிய சம்பவத்தைக் குறிப்பிட்டீர்கள். அவர் சரியாக ஆடை அணியாமல் இருந்ததால்தான் டிராம் வண்டிக்குள் ஏற அனுமதிக்கப்பட வில்லை என்றும் இருக்கலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* எனக்கு அதைப்பற்றித் தெரியாது.

**235.** ஒருவர் டிராம் வண்டிக்குள் ஏறுவதற்கு முன்னர், அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்று கேட்கப்படுவதில்லை; கட்டணம் கொடுக்கப் பணம் இருக்கிறதா என்றுதானே கேட்கப்படுவார்?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆனால் ஜனங்கள் அவரைச் சுலபமாக அடையாளம் கண்டு கொள்வார்கள்.

236. அவருடைய ஆடையைப் பார்த்தா?

டாக்டர் அம்பேத்கர்: அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வர் என்று அடையாளம் தெரிந்து விட்டால், அவர் மிகவும் மோசமாக நடத்தப்படுவார்.

237. ஜாதிப் பிரச்சினை தவிர, ஆடைப் பிரச்சினையும் இருக்கிறதா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். ஆனால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள், மிகவும் நன்றாக ஆடை அணிகிறார் கள்.

238. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருடைய நிழல் பட்டாலே தீட்டு என்று கருதப்படக் கூடிய அளவுக்கு பம்பாய் மாகாணத்தில் நிலைமை மோசமாக இல்லையல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். எனினும், கொங்கன் மற்றும் கத்தியவாடின் சில பகுதிகளில் அந்த நிலைமை உள்ளது.

239. அந்தப் பழக்கம் மறைந்து கொண்டு வருகிறதா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

240. ஆமதாபாதிலுள்ள அம்பாலால் சார்லால் பள்ளியை எடுத்துக் கொள்வோம். அவருடைய சகோதரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அந்தப் பள்ளியைத் துவக்கவில்லையா?

டாக்டர் அம்பேத்கர்: அது ஒன்று மட்டுமே மதிப்புக்குரிய விதிவிலக்கு.

241. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இந்தப் பள்ளிக்கூடம் பொதுத்துறை நிதிகளிலிருந்துதான் பராமரிக்கப்படுகிறதா?

டாக்டர் அம்பேத்கர்: அது எனக்குத் தெரியாது. ஆனால், தாழ்த்தப்பட்ட மக்களை மேம்படுத்துவதில் அந்தப் பெண்மணி மிகுந்த ஆர்வம் காட்டி வருவதை நான் நன்கு அறிவேன்.

242. தலைவர்: அது ஒரு விதிவிலக்கான சம்பவம் என்று நான் கருதலாமா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். அது முற்றிலும் விதிவிலக்கான சம்பவம்தான்.

243. டாக்டர் சுஹ்ரவர்தி: சமூக பகிஷ்காரம், மற்றும் கொடுங்கோன்மை பற்றிய உதாரணங்களை நீங்கள் சுட்டிக் காட்டினீர்கள். இதன் காரணமாக, பொதுத் தேர்தலின் போது, உங்களுடைய சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், வாக்குச் சாவடி களுக்குள் நுழைய முடியாதபடி பயமுறுத்தப்பட மாட்டார்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம், அது நடைபெறலாம்:

244. தீண்டத்தகாதவர்கள் வாக்களிக்கச் செல்வதால், தேர்தல் களில் கலந்து கொள்ள முடியாது என்று உயர் ஜாதி ஹிந்துக்கள் மறுக்கக் கூடிய நிலைமையும் ஏற்படலாமல்லவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம். ஏற்படக்கூடும். என்ன நேரும் என்று முன்கூட்டியே கூறுவது மிகவும் கடினம். ஜில்லா போர்டு களில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், உரிமை யுடன் நாற்காலிகளில் அமர முற்பட்டதால், மேல் ஜாதி ஹிந்து உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்தை விட்டே வெளியேறிய நிகழ்ச்சி களும் உள்ளன.

**245.** இந்த நிலைமைகளில், தனி வாக்காளர் தொகுதியைப் பெற்றிருப்பதுதான் உங்களுக்கும் சிறப்பாக இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? ஏனெனில், பொது வாக்காளர் தொகுதிகளில், உங்களுடைய இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் கூட, தனி வாக்காளர் தொகுதி போலத் தானே நடைமுறையில் அது தோற்றமளிக்கிறது.

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

*ராவ் பகதூர் ராஜா:* தாழ்த்தப்பட்ட வாக்காளர் அணியும் உடுப்பைப் பற்றி எனது நண்பர் சர் ஹரிசிங் கௌர் ஒரு கேள்வி கேட்டார். நீங்கள் நன்றாக ஆடை அணியவில்லை என்பதற்காகத் தான் நாவிதர் உங்களுக்குச் சவரம் செய்ய மறுத் தாரா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை; நான் தாழ்த்தப்பட்ட வகுப் பைச் சேர்ந்தவன் என்பதால்தான்.

**247.** நீங்கள் அணியும் ஆடையின் காரணமாக இல்லையே?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை.

**248.** கமிட்டியின் மற்றோர் உறுப்பினர் கேட்ட கேள்வி சம்பந்த மாக, நான் விளக்கத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பேருந்தில் ஏற்றிக் கொள்ள மறுத்ததற்காக, அந்தப் பேருந்தின் சொந்தக்காரர் மீது, கிராமத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் ஒரு வழக்குத் தொடர முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* அது சாத்தியமில்லை.

**249.** தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டு நலன்களில் தாங்கள் மிகுந்த அக்கறை கொண்டிருப்பதை நான் புரிந்து கொள் கிறேன். நீங்கள் இந்தப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது மேல் ஜாதியினர் உங்களுடைய இந்த வேலையில் எத்தகைய உதவி செய்தனர் என்பதை அனுபவ வாயிலாகக் கூற முடியுமா? மேலும் நல்ல முறையில் சுகாதாரமாயிக்க வேண்டும், உடல் நலம் பேண வேண்டும் போன்ற விஷயங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அறிவுறுத்தும் பணியில் அவர்கள் உங்களுக்கு உதவி செய்கிறார் களா?

*டாக்டர் அம்பேத்கர்:* துரதிர்ஷ்டவசமாக, இந்த விஷயத்தில் எனது அனுபவம் மிகவும் கசப்பானது. தாழ்த்தப்பட்ட மக்கள் சில அசுத்தமான பழக்க 'வழக்கங்களைக் கொண்டிருப்பதால்,

அவர்கள் தோழமையுடன் தொடர்பு கொள்வதற்குத் தகுதியற்ற வர்கள் என்று முத்திரை குத்தப்படுகிறது. மேல் ஜாதியனர் எழுப்பும் ஆதாரமற்ற குற்றச்சாட்டு இது. தாழ்த்தப்பட்ட வகுப் பினர் இறந்து போன விலங்குகளின் இறைச்சியை உண்கிறார்கள். அவர்கள் சுத்தமாயில்லை போன்ற குற்றச்சாட்டுக்களை வீசு கின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் சுத்தமான பழக்க வழக்கங் களைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும், தங்களுடைய அசுத்த மான முறைகளைக் கைவிட வேண்டுமென்றும் நான் இந்த மாகா ணத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாகப் பிரச்சாரம் செய்து வருகிறேன். இந்த விஷயத்தில், மேல் ஜாதி ஹிந்துக்களிடமிருந்து மிக அதிகமான ஒத்துழைப்பை நான் எதிர்பார்த்தேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக, மேல் ஜாதி ஹிந்துக்கள் எனக்கு எதிராகத் தான் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்ப்புக்கான காரணத்தை நான் ஆராய்ந்து பார்த்தேன். அசுத்தமான பணி களைச் செய்யும்படி தாழ்த்தப்பட்ட மக்களை அவர்கள் நிர்ப் பந்திக்கிறார்கள். ஏனெனில், அந்த வேலைகளை தாழ்த்தப்பட்ட மக்கள் செய்யவில்லை யென்றால், அவர்களுடைய சமூக அந்தஸ்து உயர்ந்து விடும், மேல் ஜாதியினருடன் அவர்கள் போட்டி போடும் நிலை வந்து விடும். மேல் ஜாதி ஹிந்துக்களின் எதிர்ப் புக்கு இதுதான் காரணம் என்பதை நான் ஆராய்ந்து கண்டு கொண்டேன். உதாரணமாக, கொலாபா மற்றும் ரத்தினகிரி மாவட்டங்களில் வசிக்கும் மஹர் ஜாதி மக்கள் அனைவரும் இறந்த விலங்குகளின் இறைச்சியை சாப்பிடுவதை நிறுத்தி விட்டார் கள்; ஆனால், இந்த மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள கொடுங்கோன்மையையும், சமூக ஒடுக்கு முறையையும் வர்ணிக்க வார்த்தைகளில்லை. அவர்கள் பரிபூரண பொருளா தார, சமூக பகிஷ்காரத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த பல ஆண்டுகளாக, அவர்கள் உழுது சாகுபடி செய்து வந்த நிலத்தை, அவர்களுடைய மேல் ஜாதி ஹிந்து நிலப் பிரபுக்கள் திருப்பி எடுத்துக் கொண்டார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், தங்க ளுடைய பழைய அசுத்தமான பழக்கங்களில் ஈடுபடும்படி அவர் களை நிர்ப்பந்திக்கும் பொருட்டு, அவர்கள் மீது சகலவிதமான சமூக, பொருளாதாரக் கஷ்டங்களும் திணிக்கப்பட்டன. அதிகாரி கள் அனைவரும் மேல் ஜாதி ஹிந்துக்கள். எனவே, தாழ்த்தப் பட்ட மக்களுக்கு அவர்கள் எத்தகைய பாதுகாப்பும் அளிக்க வில்லை. இந்த மக்களுடைய நிலைமை உண்மையிலேயே மிகவும் பரிதாபமாகிவிட்டது. தங்களுடைய அசுத்தமான பழக்கங்களை அவர்கள் விட்டுவிட முயன்றதால்தான் அவர்களுக்கு இத்தனை சிரமங்கள். எனக்கு உதவி அளிப்பதற்கு பதிலாக, மேல் ஜாதி ஹிந்துக்கள் எனக்கு எதிராகத் திரும்பினார்கள். ''தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தத் தீய பழக்கங்கள், அவர்களுடைய கீழ்த் தரத் திற்கான சின்னங்கள்; அவை தொடர்ந்து நீடிக்க வேண்டும்'' எனக் கூறுகின்றனர்.

**250.** துப்புரவு நிறுவனங்களில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கூட இல்லையென்று சில நாட்களுக்கு முன்னர் ஒருவர் சாட்சியம் அளித்ததைக் கேட்டோம். மேல் ஜாதியினரைப் பற்றி இப்போது நீங்கள் கூறிய விஷயம் உண்மையாக இருந்தால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இந்த நிறுவனங்களில் இருந்தால், துப்புரவுப் பணியை மேம்படுத்த முடியுமென்று நினைக்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஒவ்வோர் உள்ளாட்சி மன்றத்திலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

**251.** இந்த மாகாணத்திலுள்ள நீதிமன்றங்களில், தாழ்த்தப் பட்ட மக்களைச் சேர்ந்த சாட்சிகள் நுழைய முடியாது என்று நீங்கள் கூறினீர்கள். இந்த விஷயத்தை எனக்குத் தெளிவுபடுத்தும் படி கேட்டுக் கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வர்கள், சில நீதிமன்றங்களுக்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்று நீங்கள் கூறுகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

**252.** ஒரு வழக்கில், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர், நீதிமன்றத்திற்குள் நுழையவே துணியவில்லை என்று கூறினீர்கள். அப்படித்தானா?

*டாக்டர் அம்பேத்கர்:* தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட சமுதாயத் தரத்தில் தான் இருக்க வேண்டுமென மேல் ஜாதியினர் கருதுகின்றனர். நீதிமன்றத்திற்குள் நுழைவதன் மூலம் அவர் அந்த சமுதாயத் தரத்தை மீறுகிறார். வாழ்க்கையில் இவ்விதம் அவர் சமுதாயத் தரத்தை மீறும் போது, துன்பத்திற்கு ஆளாக்கப்படுகிறார். சமூக வரைமுறைகளை அவர் மீறினால், மேல் ஜாதி ஹிந்துக்களால் அவர் இம்சிக்கப்படுவார். இந்தக் குறிப்பிட்ட வழக்கில் நான் அளிக்கும் பாதுகாப்பு தற்காலிக மானதே; வழக்கு முடிந்தவுடன் என்னுடைய பாதுகாப்பு அவர் களுக்குக் கிடைக்காது என்பதை அவர் அறிவார்.

**253.** நீங்கள் அங்கே இல்லையென்று வைத்துக் கொள்வோம்; அவர் நீதிமன்றத்திற்குள் நுழைவதற்கு முயன்றால், அவருக்கு என்ன நடக்கும்?

*டாக்டர் அம்பேத்கர்:* பம்பாயில் ஒரு கோவிலுக்குள் நுழைய நான் முயன்ற போது, எனக்கு என்ன நேர்ந்ததோ, அதே தான் அவருக்கும் நேர்ந்திருக்கும்.

**254.** இப்போது மருத்துவ உதவியை எடுத்துக் கொள்வோம். தாழ்த்தப்பட்ட இன மக்களுக்கு எத்தகைய மருத்துவ உதவி கிடைக் கிறது என்பதை சற்றே விளக்கிக் கூற முடியுமா?

*டாக்டர் அம்பேத்கர்:* சாதாரணமாக அவர் மருந்தகத்திற்குள் அனுமதிக்கப்படுவதில்லை; நோயாளியின் நிலைமை படுமோசமாக

இருந்தாலொழிய, உதாரணமாக, உள்ளே அனுமதிக்கா விட்டால், டாக்டரின் நடத்தை, மேல் அதிகாரிகளின் கவனத்திற்கு வரும் என்ற நிலைமை இருந்தாலொழிய உள்ளே அனுமதிக்கப் படுவதில்லை. வெளியில் இருந்தபடியே மருந்து வழங்கப்படுகிறது.

**255.** *தலைவர் :* கிராமப்புறங்களிலுள்ள மருந்தகங்களைப் பற்றித்தான் நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம், அரசாங்க மருந்தகங்கள்.

**256.** சுகாதார அமைச்சரின் கீழே தானே அவை உள்ளன.

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம்.

**257.** எல்லோரும் மருந்தகத்திற்குள் செல்லலாம் என்று தானே அமைச்சகத்தின் விதிகள் குறிப்பிடுகின்றன?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம்.

**258.** ஆனால் கிராமப் புறங்களில் அந்த விதி கடைப் பிடிக்கப்படவில்லை என்றா சொல்கிறீர்கள்?

*டாக்டர் அம்பேத்கர் :* இல்லை, கடைப்பிடிக்கப்படவில்லை.

*டாக்டர் சோலங்கி :* மேல் ஜாதி ஹிந்துவாக இருக்கும் ஒரு டாக்டர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு நோயாளியைத் தொட்டுப் பரிசோதனை கூட செய்வது கிடையாது. தகுந்த மருத்துவ உதவி கிடைக்காத காரணத்தால், உண்மையில் நோயாளி இறந்து போன சம்பவங்களும் குஜராத்தில் நடைபெற்றுள்ளன. நிமோனியா காய்ச்சலில் அவதிப்பட்டுக் கொண்டிருந்த ஒரு நோயாளியைத் தொட்டுப் பரிசோதனை செய்ய டாக்டர்கள் மறுத்து விட்ட நிகழ்ச்சிகளை நான் நேரடியாகவே அறிவேன். டாக்டர் தெர்மாமீட்டரை, ஒரு முஸ்லீமிடம் கொடுப்பார். அந்தத் தெர்மாமீட்டரை எப்படிப் பிடிப்பது என்றே அந்த முஸ்லீமுக்குத் தெரியாது. பிறகு அந்த முஸ்லீம் தெர்மாமீட்டரை நோயாளியிடம் கொடுப்பார். இது உண்மையிலேயே நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

**259.** உண்மை நிலைவரத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அதுதான் முக்கியம். நீங்கள் விவரித்தது போன்ற விஷயம் எப்போதாவது நடைபெறக் கூடும். நீங்கள் படம்பிடித்துக் காட்டிய சம்பவங்கள், சில குறிப்பிட்ட டாக்டரின் ஆட்சேபத்தின் காரணமாக நேர்ந்த அசாதாரணமான நிகழ்ச்சிகளா அல்லது அவை அன்றாடம் நிகழக் கூடிய சம்பவங்களா என்பதைப் பற்றி நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*டாக்டர் சோலங்கி :* வைதீகமாக இருக்கும் டாக்டர்கள் அவ்விதம் செய்கின்றனர்.

**260.** டாக்டர் மேற்கொண்ட ஆட்சேபகரமான நடத்தை அவருடைய சொந்த மதக் கண்ணோட்டத்தை அடிப்படையாகக் கொண்டதா?

*டாக்டர் சோலங்கி:* ஆமாம்.

**261.** *ராவ் பகதூர் ராஜா:* சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு இந்த உண்மைகள் கொண்டு வரப்பட்டனவா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

*டாக்டர் அம்பேத்கர்:* இசைந்து ஒத்துப் போதல்தான் நல்லது என்று அமைச்சர் எங்களுக்குப் பதில் அளித்தார்; இசைவிப்பு என்ற சொல்லை அவர் உண்மையில் பயன்படுத்தினார்.

*தலைவர்:* ராவ்பகதூர் அவர்களே, இதைப் பற்றிப் பல்வேறு அம்சங்கள் கூறப்படுகின்றன. நான் உண்மைகளைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இந்த மாகாணத்திலுள்ள சாதாரண பொதுப் பள்ளிக் கூடங்களில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த குழந்தைகளின் நிலைமை யாது? எனக்காக சாட்சியிடம் இதைப் பற்றிக் கேள்விகள் கேட்பீர்களா?

**263.** *ராவ் பகதூர் ராஜா:* தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகளின் பால், பள்ளி ஆசிரியர்கள், அல்லது கல்வி இலாக்கா அல்லது பள்ளிகளின் நிர்வாகிகள் கடைப்பிடிக்கும் போக்கைப் பற்றி எங்களுக்கு எடுத்துக் கூறுவீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் தாழ்த்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று இந்த மாகாணத்தில் கல்வி அமைச்சராக டாக்டர் பராஞ்ச்பே இருந்தபோது சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. ஆனால், அந்த சுற்றறிக்கை அமல் நடத்தப்படவே இல்லை என்பது தான் எங்கள் அனுபவம். அந்தச் சுற்றறிக்கை நடைமுறை யில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று பள்ளிக் கல்வி இயக்குநர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்பது உண் மையே. ஆனால், அந்தக் கருத்திலிருந்து நான் மாறுபடுகிறேன். அது, இன்றுள்ள உண்மை நிலவரத்தைச் சரியாக எடுத்துக் கூறவில்லை. சில நாட்களுக்கு முன்னர், இங்கே புனேயில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தேவூ என்ற கிராமத்தில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தைகள் பள்ளியில் சேருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டார்கள். அவர்கள் அதை வற்புறுத்தியபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கெதிராக அந்தக் கிராமம் சமூக பகிஷ்காரத்தைப் பிரகடனம் செய்தது.

**264.** *தலைவர்:* குறிப்பாணையில் இந்த அறிக்கை சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறதா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம். ஆனால் நான் கூறியது போல சரியான உண்மை விவரங்கள் அதில் சொல்லப்படவில்லை. அதிலிருந்து நான் மாறுபடுகிறேன்.

**265.** ராவ் பகதூர் ராஜா: போலீஸ் இலாக்காவில் ஏன் தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்த்துக் கொள்ள முடியவில்லை என்பதற்கான காரணங்களை, அவருடைய சொந்தக் கருத்துக் களை திரு. கிரிபித் குறிப்பிட்டிருக்கிறார். ஏனெனில், வீட்டிற் குள் நுழைந்து தேடுதல், கைது செய்தல் ஆகியன போலீஸ் காரர்களின் கடமைகளாகும். அது உண்மையென்று ஒரு விவாதத் திற்காக வைத்துக் கொள்வோம்; அப்படியென்றால், இதர மாநில அரசாங்க அலுவல்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் களைப் பணியில் அமர்த்துவது பற்றி இதே போன்ற ஆட்சேபனை கள் எழக் கூடுமல்லவா?

டாக்டர் அம்பேத்கர்: எத்தனையோ ஆட்சேபனைகள் எழுப்பப் பட்டிருப்பதைக் காண்பீர்கள்.

**266.** மாகாண சட்டமன்றத்தில் நீங்கள் ஓர் உறுப்பினரா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

**267.** இந்த மன்றத்திலுள்ள மேல் ஜாதி உறுப்பினர்கள் உங்களுடைய சமுதாயத்தின்பால் எத்தகைய கண்ணோட்டம் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய உங்கள் அனுபவம் யாது?

டாக்டர் அம்பேத்கர்: தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அது சாதக மாக உள்ளது என்று கூற முடியாது.

**268.** உங்களுடைய மாநிலத்தில், உங்களுடைய சமுதாய உறுப்பினர்களின்பால் அரசாங்கம் எத்தகைய போக்கைக் கடைப் பிடிக்கிறது?

டாக்டர் அம்பேத்கர்: மிகவும் அக்கறையற்ற போக்கைக் கடைப்பிடிக்கிறது.

**269.** இந்த மாகாணத்தில் கௌரவ மாஜிஸ்திரேட் நீதிமன்றங் கள் உள்ளன என்று கருதுகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் இதில் இடம்பெற்றுள்ளார்களா?

டாக்டர் அம்பேத்கர்: இப்போது யாரும் இல்லை. ஒரு சில ராவது, அதில் நியமனம் செய்யப்பட வேண்டுமென்பதற்காக பெருமுயற்சி செய்தோம். ஆனால் பலனில்லை. நீதிமன்றத்தில் நியமனம் செய்யப்பட வேண்டுமெனக் கோரி, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், காந்தேஷ் மாவட்டக் கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதற்குக் கலெக்டர் எழுதிய பதிலின் ஒரு பகுதியை இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன். அது ஒரு வேளை மாநாட்டு உறுப்பினர்களுக்கு சுவையாக இருக்கக் கூடும். அவர் அந்த வேலைக்கு ஏன் நியமனம் செய்யப்பட முடியாது என்பதற்கான காரணங்களையும் அக்கடிதம் குறிப்பிடுகிறது. கடிதத்தின் ஒரு பகுதி இவ்வாறு உள்ளது:

"தாழ்த்தப்பட்ட மக்களின் அபிலாஷைகளின்பால் கலெக்டர் மிகுந்த அனுதாபம் கொண்டிருக்கிறார். பல்வேறு பொது ஜன நடவடிக்கைகளில், திரு. மெதே ஆற்றியிருக்கும் நற்பணிகளைக் கலெக்டர் மகிழ்ச்சியுடன் அங்கீகரிக்கிறார், பாராட்டுகிறார். எனினும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு, மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இடம் அளிப்பதற்குக் காலம் இன்னும் கனியவில்லை என்று கலெக்டர் கருதுகிறார். இந்த மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் ஆர்வ அபிலாஷைகளுக்குச் சாதகமாக அரசாங்கம் ஏதாவது ஒரு பிரகடனத்தை வெளியிடும் வரையிலும், இத்தகைய நியமனத்திற்கான பரிந்துரை செய்வதற்குத் தனக்குள்ள இயலாமையை வருத்தமுடன் அவர் தெரிவித்துக் கொள்கிறார்."

இந்தக் கடிதம் 1928 செப்டம்பர் 25-ஆம் தேதியிடப்பட்டது.

270. இந்த நிறுவனங்களுக்கான நியமனங்களுக்கும், சமுதாயங்களின் முன்னேற்றத்திற்கும் எத்தகைய சம்பந்தமும் இல்லை என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம், சம்பந்தமில்லை.

271. மனுச் செய்து தேர்வு நாடும் ஒருவர், தன்னுடைய கடமைகளைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்ற முடியுமா என்பதற்குத்தான் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அப்படித் தானே?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆமாம்.

272. *பார்ன்ஹாம் பிரபு:* தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குள்ள எல்லா வழி துறைகளிலும், நீங்கள் சர்வ ஜன வாக்குரிமைக்குத்தான் கூடுதல் ஆதரவு தருகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* சட்டமன்றத்தில் போதுமான பிரதிநிதித்துவம் என்று நான் கூறுவேன்.

273. சர்வ ஜன வாக்குரிமையை நீங்கள் ஆதரிக்கிறீர்கள் என்று உங்களுடைய பேச்சிலிருந்து புரிந்து கொண்டேன். நான் கூறுவது சரியா?

*டாக்டர் அம்பேத்கர்:* ஆம், சரிதான்.

274. அது உங்களுக்குக் கிடைக்கவில்லையென்றால், நீங்கள் தனி வாக்காளர் தொகுதியைக் கோருவீர்களா? உங்களுக்கு இரண்டுமே கிடைக்காவிட்டால், நியமனம் செய்தல் என்ற கோட்பாட்டிற்கு ஆதரவு அளிப்பீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* இல்லை. எங்களுடைய பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றுதான் நான் வலியுறுத்துவேன்.

275. நீங்கள் பிரரேபித்த நிபந்தனைகளின் அடிப்படையில் தேர்தல் நடைபெறவில்லையென்றால், வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்பதற்கு நீங்கள் முன்னுரிமை அளிப்பீர்களா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம்.

276. *தலைவர் :* தேர்தல் முறையின் மூலம்தான் தாழ்த்தப் பட்ட வகுப்பினருக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கு நீங்கள் வலுவான முன்னுரிமை அளித்துப் பேசினீர் கள். தேர்தல் முறை ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்று வைத்துக் கொள்வோம். தாழ்த்தப்பட்ட மக்களின் மிகச் சிறந்த பிரதிநிதிகள் தான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று நம்புகிறீர்களா?

*டாக்டர் அம்பேத்கர்:* நான் அப்படி நம்புகிறேன்.

277. தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களுக்கு உண்மையிலேயே எதிராக இருக்கக் கூடிய செல்வாக்குகள் தம்முடைய வேலையைச் செய்யத் தொடங்கும் என்று நீங்கள் கவலைப்படவில்லையா?

*டாக்டர் அம்பேத்கர் :* அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அதனால்தான், நான் வயது வந்தோர்க்கு வாக்குரிமை வேண்டும் என்று விரும்புகிறேன்.

278. வயது வந்தோர்க்கு வாக்குரிமை இருந்தால், செல் வாக்குச் செலுத்துதல் எடுபடாது என்று நீங்கள் நினைக்கிறீர் களா?

*டாக்டர் அம்பேத்கர் :* அது சரிக்கு சரி ஈடுசெய்து விடும்.

279. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்குப் போது மான தகுதி இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். பொதுத் தொகுதியில் அவர் வாக்களிப்பாரா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆம், அவர் வாக்களிக்கிறார்.

280. உங்களையே எடுத்துக் கொள்வோம். பொதுத் தொகுதி யில் வாக்களிப்பதற்கு உங்களுக்குத் தகுதி இருக்கிறதல்லவா?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம். பல்கலைக்கழகத் தொகுதியில் நான் வாக்களிக்கிறேன்; என் நண்பரும் அதே போல வாக்களிக் கிறார்.

281. வரி செலுத்தும் விஷயம் எப்படி இருக்கிறது? தாழ்த்தப் பட்ட வகுப்பினர் வரி செலுத்த வேண்டியதில்லை என்று ஓர் ஆலோசனை கூறப்பட்டது. சுங்கவரி மற்றும் இதர மறைமுக வரி களின் காரணமாக, சாமான்களின் விலைகள் உயரக் கூடும். தாழ்த்தப்பட்ட மக்களும் ஏனையோரைப் போலவே கூடுதல் விலையைக் கொடுக்க வேண்டியிருக்கும் என்று நம்புகிறேன். அப்படித்தானே?

*டாக்டர் அம்பேத்கர் :* ஆமாம். மேலும், தாழ்த்தப்பட்ட வகுப் பினர், குறிப்பாக மஹர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், சாதாரண உரிமை முறையில் எப்போதுமே கொஞ்சம் நிலம் வைத்திருப் பார்கள். மீதிப் பேரைப் போலவே, அவர்களும் ஜுடி என்று அழைக்கப்படும் தீர்வையைச் செலுத்துகிறார்கள்.

*282. தனிப்பட்டவர்களிடம், பல மஹர்கள் உணவு மேசைப் பணியாளர்களாக வேலை செய்கிறார்களல்லவா?*

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். ஆனால் வெகு சிலர்தான். பொதுவாக, அவர்கள் நகரங்களில் தொழிற்சாலைகளில்தான் வேலை செய்கிறார்கள்.

*283. உதாரணமாக, ஐரோப்பியர்கள் தங்கள் சொந்த வீட்டிலோ அல்லது கிளப்புகளிலோ மஹர்களை வேலைக்கு அமர்த்துகிறார்கள். அப்படித் தானே?*

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம்.

*284. பொதுத் தொகுதிகளில் அவர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருக்கிறார்களா? இல்லையா?*

டாக்டர் அம்பேத்கர்: அது வாக்குரிமையின் தன்மையைப் பொறுத்திருக்கும்.

*285. சட்டப்படி, உணவு மேசைப் பணியாளர்களுக்கு எந்தத் தகுதியும் இருக்காதா?*

டாக்டர் அம்பேத்கர்: இன்றுள்ள நிலைமைகளில் இருக்காது.

*286. சர்தார் மஜும் தார்: தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மகான்கள் எல்லா ஜாதியினராலும் மதித்துப் போற்றப்படுகிறார்கள் என்பதையும், மேல் ஜாதிகளிலிருந்து வந்த மகான்களை வணங்கிப் பணிவதைப் போலவே, தாழ்த்தப்பட்ட குலத்திலிருந்து தோன்றிய மகான்களையும் மேல் ஜாதியினர் தலைவணங்கிப் போற்றுகின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்களா?*

டாக்டர் அம்பேத்கர்: எனக்குத் தெரிந்து ஒரே ஒரு நிகழ்ச்சிதான் நடைபெற்றிருக்கிறது.

*287. ஆனால், அவ்விதம் தலை வணங்குகிறார்களா இல்லையா?*

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம், முஸ்லீம் பீர்களை வணங்குவதைப் போலத்தான்.

*288. வர்க்காரி பந்த்தில் அதாவது பண்டரிபுரத்திலுள்ள இறைவன் விட்டோபாவின் பக்தர்கள் தீண்டாமையைக் கடைப் பிடிப்பதில்லை என்பதை நீங்கள் அறிவீர்களா?*

டாக்டர் அம்பேத்கர்: அது முற்றிலும் சரியல்ல.

*289. தாழ்த்தப்பட்ட மக்கள் நடத்தப்படும் விதத்தில், கடந்த 25 ஆண்டுகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா? மேல் ஜாதிகளைச் சேர்ந்த படித்த பிரிவினர், தீண்டாமை என்ற இந்தத் தீமையை ஒழிப்பதற்கு முயலுகிறார்கள் என்பதையும், தீண்டத்தகாதவர்கள் என்று கருதப் படும் மக்களுடன் சர்வ சுதந்திரமாகக் கூடிக் குலவ முன்வருகிறார்கள் என்பதையும், தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையிலும்,*

கல்வி கற்ற பொதுமக்கள் அவர்களை நடத்தும் விதத்திலும் சன்னஞ்சன்னமான மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆமாம். எனினும், அனுதாபம் வார்த்தை அளவில் தான் இருக்கிறது; மிக அரிதாகத் தான், அது நடைமுறையில் செயல்படுத்தப்படுகிறது.

290. அனேகமாய் எல்லாக் கிராமங்களிலும், தாழ்த்தப்பட்ட மக்களின் சொந்த உபயோகத்திற்காகவென்றே கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?

டாக்டர் அம்பேத்கர்: இல்லை.

291. அத்தகைய கிணறுகள் இல்லையா?

டாக்டர் அம்பேத்கர்: ஒவ்வொரு கிராமத்திலும் இல்லை.

292. தாழ்த்தப்பட்ட மக்கள் யார்? அந்த ஜாதிகளை நீங்கள் குறிப்பிட முடியுமா?

டாக்டர் அம்பேத்கர்: சென்சஸ் கணக்கில் அந்த விவரம் உள்ளது.

293. மாங் மற்றும் மஹர் ஜாதிகளுக்கிடையே கலப்புத் திருமணம் நடைபெறுகிறதா?

டாக்டர் அம்பேத்கர்: இல்லை. மேல் ஜாதி ஹிந்துக்கள் தங்களுடைய இந்த விஷத்தை எல்லா ஜாதிகளுக்கும் பரப்பி விட்டார்கள்.

294. அவர்கள் சேர்ந்து உணவருந்துகிறார்களா?

டாக்டர் அம்பேத்கர்: ஆம், இப்போதெல்லாம் சேர்ந்து உணவருந்துகிறார்கள். எல்லோரையும் ஒருங்கிணைப்பதற்கான இயக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாங் மற்றும் மஹர் ஜாதிகளுக்கிடையே ஒரு கலப்புத் திருமணம் கூட நடைபெற்றிருக்கிறது.

295. என்னுடைய தொகுதியில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த இரண்டு இனாம்தார்கள் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

டாக்டர் அம்பேத்கர்: எனக்குத் தெரியாது.

# 2

# * தாழ்த்தப்பட்ட வகுப்புக்கள் பற்றி இந்திய வாக்குரிமைக் கமிட்டியிடம் (லோதியன் கமிட்டி) டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் அளித்த அறிக்கை 1932 மே முதல் தேதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

## 1. பொது

1) தாழ்த்தப்பட்ட மக்கள் என்ற சொல்லை தீண்டத்தகாதவர்களுக்கு மட்டுமே பிரயோகம் செய்ய நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன். தீண்டாமையில் உள்ளூரப் பொதிந்திருக்கும் சமூகப் பாரபட்சத்தினால் ஏற்படும் அல்லல்களைப் பகிர்ந்து கொள்ளும் உணர்வுகளைப் பெற்றிராத அனைவரையும், எனவே, தங்களுடைய சொந்த நோக்கங்களுக்காகத் தீண்டத்தகாதவர்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும் என்று கருதப்படும் அனைவரையும் தீண்டத்தகாதவர்களிடமிருந்து விலக்கி விட நானே முடிவு செய்தேன். தீண்டத்தகாத ஜாதிகள் என்னென்ன என்று நிர்ணயம் செய்வதற்காக, கமிட்டியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் 7 மற்றும் 8-ஆவது சோதனைகளைப் பயன்படுத்துவதையும் நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், வெவ்வேறு நபர்கள், வெவ்வேறு வழிகளில் அதைக் கடைப்பிடிக்க முயலுவதையும், அல்லது அதற்கு வெவ்வேறு வகையான பொருள் விளக்கங்களைக் கூற முற்படுவதையும் நான் காண்பதால், இந்த விஷயத்தில் எனது கருத்தை விளக்கி உரைப்பது அவசியம் என்று உணருகிறேன்.

2) முதலாவதாக, தீண்டத்தகாத ஜாதிகளை நிர்ணயம் செய்வதற்கு, எத்தகைய சோதனைகள் கடைபிடிக்கப்பட்டாலும், அவை இந்தியா பூராவிலும் ஒரே மாதிரியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று சில வட்டாரத்தினர் வலியுறுத்துகிறார்கள். இத்தகைய விஷயத்தில், ஒரே மாதிரியான சோதனையை அல்லது சோதனைகளை இந்தியா பூராவிலும் கடைப்பிடிப்பது அவ்வளவு

---

* இந்திய வாக்குரிமைக் கமிட்டியின் அறிக்கை, தொகுதி 1, இரண்டாம் பதிப்பு, பக்கங்கள் 202-11. வட்டமேஜை மாநாட்டின் வாக்குரிமை உப கமிட்டியின் பரிந்துரைகளின் பேரில், 1931 டிசம்பரில் இந்திய வாக்குரிமைக் கமிட்டி அமைக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் உள்பட கமிட்டியில் 18 உறுப்பினர்கள் இருந்தார்கள். நாடாளு மன்றத்துக்கான உதவி இந்திய மந்திரி லோதியன் பிரபு இந்தக் கமிட்டியின் தலைவராக இருந்தார்.

பொருத்தமாக இராது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தியா ஓரினத் தன்மை கொண்ட ஒரு தேசமல்ல. இது ஒரு கண்டம். பல்வேறு மாகாணங்களிலும் மிக அதிக வித்தியாசமான நிலைமைகளைக் காண்கிறோம். இன அல்லது மொழிப் பிணைப்பு இல்லை. இணைப்புத் தொடர்புகள் இல்லாதிருந்ததால், ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி வழிகளில் வளர்ச்சியுற்றன; ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தன்மையான பழக்க வழக்கங்களும், சமூக வாழ்க்கை முறைகளும் அமைந்தன. இத்தகைய சூழ்நிலையில், இந்தியா பூராவிலும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தீண்டாமைக்கான நடைமுறை ஒரே மாதிரியாக இருப்பது உண்மையில் வியக்கத்தக்கதாகும். உதாரணமாக, இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஆலயப் பிரவேசம் மறுக்கப்பட்டுள்ளது. பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பது, தொட்டால் தீட்டு ஏற்படும் என்று கருதப்படுவது என்பவை கூட, எல்லா மாநிலங்களிலும்—எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான கடினப்பாங்குடன் இல்லாவிட்டாலும் கூட—கடைப்பிடிக்கப்படுவதைக் காண்கிறோம். தீண்டாமை என்பது ஒரு சமூக நடத்தை. எனவே, ஒவ்வொரு மாநிலத்திலுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப, ஒவ்வொரு தனி நபருக்கேற்ப நிலைமை மாறியிருக்கும். அதனால், தீண்டத்தகாத ஜாதிகளை நிர்ணயம் செய்வதற்கு முற்றிலும் ஒரே மாதிரியான சோதனையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பது இந்தப் பிரச்சினையுடன் சிறுபிள்ளைத்தனமாய் விளையாடுவதாகும். சட்டப்படி அமைந்த கமிஷன் இத்தகைய விவாதப் போக்கை எதிர்பார்த்தது; எனவே, இதைப் பற்றி நன்கு பரிசீலித்த பின்னர், அதை நிராகரித்து விட்டது. தீண்டாமையை நிர்ணயிப்பதற்குப் பல்வேறுபட்ட சோதனைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற கோட்பாட்டை அது அங்கீகரித்தது. இரண்டாம் தொகுதியின் 67-ஆம் பக்கத்தில் காணப்படும் அதன் பரிந்துரைகள் இவ்வாறு கூறுகின்றன: ''புதிய பிரதிநிதித்துவ முறை பற்றிய பிரதான கோட்பாடுகள் நிச்சயிக்கப்பட்ட பின்னர், இந்தக் கோட்பாடுகளை நடைமுறையில் செயல்படுத்துவதற்காகப் புதிய தேர்தல் விதிகளை வகுக்கும் பணியை (முன்னாள் வாக்குரிமைக் கமிட்டி போன்ற) விசேஷ நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைப்பது மிகவும் அவசியமாயிருக்கும். ஒவ்வொரு மாகாணத்திலும் (சில சமயங்களில் அதே மாநிலத்தில் வெவ்வேறு பகுதிகளிலும்) இருக்கக் கூடிய 'தாழ்த்தப்பட்ட மக்கள்' பற்றிய பொருள் விளக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டியதும், அவ்விதம் விவரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை நிர்ணயம் செய்ய வேண்டியதும் அந்த விசேஷ நிறுவனத்தின் கடமைகளில் ஒன்றாகும்.'' இந்தியா பூராவிலும் தீண்டாமை பற்றி ஒரே விதமான சோதனைகளைப் பிரயோகிக்க வேண்டும் என்று வற்புறுத்துவது பயனற்றது என்றும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தீண்டாமை பற்றிய சோதனைகளில் இருக்கும் வேறுபாடுகள் தீண்டத்தகாதவர்களின் நிலைமைகளில் இருக்கும்

வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுகின்றன என்று கருதுவது அடிப் படைத் தவறாகும். மனப் போக்கைச் சரியாக ஆராய்ந்து பார்த் தால், தொட்டால தீட்டு ஏற்பட்டு விடும் என்ற கருத்து அல்லது பொதுக் கிணற்றைப் பயன்படுத்த மறுப்பு ஆகியவற்றில் எதை நாம் சோதனையின் அடிப்படையாகக் கொண்டாலும், இரண் டுக்கும் ஆதாரமாக இருக்கும் எண்ணம் ஒரே மாதிரியானது தான், ஒன்றே தான் என்பதைக் காணலாம். தூய்மைக் கேடு, அரு வருப்பு, பகைமை, இகழ்ச்சி என்ற அதே உள்ளுணர்வின் வெளிப் பாடே இவை இரண்டும். தீண்டத்தகாதவரை ஒரு ஹிந்து ஏன் தொட மறுக்கிறார்? ஒரு தீண்டத்தகாதவர் கோவிலுக்குள் நுழை வதையோ, அல்லது கிராமத்திலுள்ள பொதுக் கிணற்றைப் பயன் படுத்துவதையோ ஏன் ஒரு ஹிந்து அனுமதிப்பதில்லை? ஒரு தீண்டத்தகாதவர் சத்திரத்தில் தங்குவதற்கு ஏன் ஒரு ஹிந்து ஒப்புக் கொள்வதில்லை? இந்தக் கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் விடை ஒரே மாதிரியானதுதான். தீண்டத்தகாதவர் மிகவும் அசுத்தமானவர், சமூக ரீதியில் கலந்து பழகுவதற்குத் தகுதி யற்றவர் என்பதே அந்த விடை. இன்னொன்றையும் பார்ப்போம். ஒரு தீண்டத்தகாதவர் நடத்தும் மதச் சடங்குகளில் ஒரு பிராமணப் புரோகிதர் ஏன் கலந்து கொள்வதில்லை? தீண்டத்தகாதவருக்குச் சவரம் செய்ய ஏன் நாவிதர் மறுக்கிறார்? இந்தக் கேள்விகளுக்கும் அதே பதில் தான். அவ்வாறு செய்வது கௌரவக் குறைச்சல் என்பதுதான் அது. சமூக இகழ்ச்சிக்கு உட்பட்டு அல்லல்படும் மக்கள் பிரிவினரை வரையறுப்பது தான் நமது நோக்கமென்றால், எந்தச் சோதனையை நாம் கடைப்பிடிக்கிறோம் என்பது அவ்வளவு முக்கியமல்ல. நான் ஏற்கெனவே சுட்டிக் காட்டியுள்ளது போல, இந்த ஒவ்வொரு சோதனையும், தீண்டத்தக்கவர்கள் தீண்டத் தகாதவர்களின் பால் காட்டும் அதே சமூகப் போக்கைத்தான் குறிப்பிடுகின்றன.

3. இரண்டாவதாக, தீண்டத்தகாத ஜாதிகளை நிர்ணயம் செய் வதற்காக, ''தொட்டால் தீட்டு ஏற்படும்'' என்ற சோதனையை அதன் நேருண்மையான நடைமுறை அர்த்தத்தில் தான் பிரயோகிக்க வேண்டும், அதன் கருத்தியலான பொருளில் அல்ல என்ற கண்ணோட்டமும் முன் வைக்கப்படுகிறது. நேருண்மையான நடை முறை அர்த்தத்தில், ஒருவரைத் தொட்டால் தீட்டு ஏற்படும், எனவே அவர் விலக்கப்பட வேண்டும் அல்லது விளக்க முடியா விட்டால் அந்தத் தீட்டை குளிப்பதன் மூலம் போக்கிக் கொள்ள வேண்டும் என்று கருதப்படும் நபர் மட்டுமே தீண்டத்தகாதவர் என்று கொள்ளப்படுகிறது. கருத்தியலான அர்த்தத்தில், தொட் டால் தீட்டு ஏற்படும் என்று பொதுவாகக் கருதப்படும் ஜாதியைச் சேர்ந்த ஒரு நபர் தீண்டத்தகாதவராகக் கொள்ளப்படுகிறார். ஸ்தல நிலைமைகளின் காரணமாக இத்தகைய நபர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்க முடியாமல் இருக்கலாம்;

அல்லது தொட்டுவிட்டால் தீட்டைப் போக்கிக் கொள்ளும் சடங்கைச் செய்து கொள்ளும் அவசியம் இல்லாது இருக்கலாம். நேருண்மையான அர்த்தத்தில் இந்தச் சோதனையைப் பிரயோகிக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் இத்தகைய முடிவுக்கு வருகிறார்கள்; அதாவது, தீண்டத்தகாதவர்களை வேறு ஜாதியினர் தொடுவதை விலக்க முடியாத அளவுக்கு அல்லது தொட்டாலும் தீட்டைப் போக்க சுத்தம் செய்து கொள்ள வேண்டியதில்லை என்று நினைக்கும் அளவுக்கு நிலைமைகள் மாறியுள்ள இடங்களில் தீண்டத்தகாதவர்கள் என்று கூறப்படும் ஜாதியினரை, தீண்டத்தகாதவர்களாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இந்தக் கண்ணோட்டத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது; ஏனெனில் இது தவறான எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டது. பல்வேறு சந்தர்ப்பங்களின் காரணமாக, நேருண்மையான அர்த்தத்தில், ஒரு நபர் தீண்டத்தகாதவராகக் கருதப்படாமலிருக்கலாம். எனினும், இத்தகைய நிர்ப்பந்தமான சூழ்நிலைமைகளுக்கு வெளியே, அவர் தீண்டத்தகாத ஜாதியைச் சேர்ந்தவர் என்பதால், அசுத்தமான நபர் என்றுதான் கருதப்படுகிறார். இந்த விஷயத்தை, பீஹார் மற்றும் ஒரிசாவின் சென்சஸ் கண்காணிப்பாளர் தம்முடைய 1921-ஆம் வருட சென்சஸ் அறிக்கையில் நன்கு தெளிவுபடுத்தியிருக்கிறார். அவ்வறிக்கையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. ஜாதி விதிகளைத் தளர்த்துவதைப் பற்றிப் பேசுகையில் அவர் இவ்வாறு கூறுகிறார்: ''மேல் ஜாதியினர் அல்லது மேல் நிலைமைக்குச் செல்ல அவாக் கொண்டிருக்கும் அதிகம் கல்வியறிவு பெற்ற ஜாதியினர் ஆகியோரிடையே மட்டும் நாம் காணும் இத்தகைய சம்பவங்கள் ஜாதி அமைப்பு தகர்ந்து விழுவதை முன்னதாகவே எடுத்துக்காட்டும் அறிகுறிகள் என்று நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது; மாறாக, அவற்றை நாம் நவீன நிலைமைகளுக்குச் சரி செய்து கொள்ளும் போக்கு என்றுதான் கருத வேண்டும். அதைப் போலவே, நேரடியாகத் தொடுவது அல்லது உணவு அல்லது குடிநீரைத் தொடுவது சம்பந்தமான விதிகளில் ஏற்பட்டிருக்கும் திருத்தங்களையும் எடுத்துக் கொள்ள வேண்டும்.... ஜாம்ஷெட்பூர் போன்ற இடங்களில், நவீன நிலைமைகளில் வேலைகள் நடக்கின்றன. இங்கே அண்டையில் இருப்பவரின் ஜாதி என்னவென்று கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல், தொழிற்சாலையில் எல்லா ஜாதியினரும் இனத்தவரும் அருகருகே இருந்து பணியாற்றுகின்றனர். ஆனால், நூறாண்டுகளுக்கு முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட அதே நடைமுறை விதிகளை, இன்றைய நவீன வாழ்க்கையில் கடைப்பிடிப்பது அசாத்தியமானதாய் இருப்பதால், சுத்தமானது, அசுத்தமானது, தீண்டத்தக்கவர், தீண்டத்தகாதவர் என்பதற்கிடையேயுள்ள வேறுபாடுகள் தற்சமயம் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. ஒரு மேல் ஜாதி ஹிந்து, ஒரு ''தீண்டத்தகாதவரை'' அதே இருக்கையில் அமருவதற்கோ அதே ஹுக்காவில்

புகை பிடிப்பதற்கோ அல்லது தன்னை, தனது இருக்கையை, தனது உணவு அல்லது குடிநீரைத் தொடுவதற்கோ அனுமதிக்க மாட்டார்.'' இந்த அறிக்கை உண்மையான வாழ்க்கையைப் பிரதி பலிக்கிறது என்றால், நேருண்மையில் மற்றும் கருத்தியலில் தீண்டாமைக்கு இடையே உள்ள வித்தியாசம் இறுதியாகப் பார்க்கு மிடத்து எத்தகைய மாறுபாட்டையும் உண்டாக்கவில்லை. ஏனெனில், நேருண்மையான அர்த்தத்தில் அது தொடர்ந்து நீடிக்கிறது என்பதை மேலே தரப்பட்ட அறிக்கை எடுத்துக் காட்டுகிறது. அதனால்தான், தீண்டாமைக்கான சோதனையைக் கருத்தியலான அர்த்தத்தில் பிரயோகிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்து கிறேன்.

4. மூன்றாவதாக, தீண்டாமை வெகுதுரிதமாக மறைந்து வருகிறது என்ற கருத்து எங்கும் பரப்பப்படுகிறது. இந்தக் கண்ணோட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு எதிராக எச்சரிக்கை விடுக்க நான் விரும்புகிறேன்; பிரசாரத்திலிருந்து எதார்த்த உண்மை களைப் பாகுபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பிராமணரும், பிராமணரல்லாதாரும், தீண்டத்தக்கவர்களும், தீண்டத்தகாதவர்களும் சில சமயங்களில் ஒன்றாகக் கலந்து இருப்பதைக் காட்டும் உதாரணங்களிலிருந்து ஜாதி அமைப்பும், தீண்டாமை அமைப்பும் உண்மையில் ஹிந்து சமுதாயத்தின் இரும்புச் சட்டமாக விளங்குகின்றன என்பதை நம் மனத்தில் இருத்திக் கொள்ள வேண்டியது முக்கியம் என்று கருது கிறேன். இந்த பேதங்களைச் சுலபமாகக் கிள்ளி எறிந்து விட முடியாது. ஏனெனில், அவை விவேகமான பொருளாதார அல்லது இன அடிப்படைகளைக் கொண்டிருக்கவில்லை. அதற்கு மாறாக, தீண்டாமையானது மத சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், நன்னம்பிக்கை கொண்ட சீர்திருத்தவாதிகள் எதிர்பார்ப்பதைக் காட்டிலும், எதிர்காலத்திலும் பல ஆண்டு களுக்கு நீடிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. தீண்டாமைக்குப் பக்கபலமாக மதத்தின் நடைமுறை ஆதரவு இருப்பதால்தான், தீண்டாமை அமைப்பை உடைத்தெறிவது மிகவும் கஷ்டமாக உள்ளது. ஒரு சாதாரண ஹிந்து, தனது மத நம்பிக்கைகளின் ஒரு பகுதியாகத் தான் தீண்டாமையைக் கருதுகிறார். அதனால்தான், தீண்டத்தகாதவர்களின்பால் மனிதத் தன்மையற்ற போக்கை அவர் கடைப்பிடித்த போதிலும், ஏதோ தனது மத நம்பிக்கைகளை நிறைவேற்றுவது போலத் தான் அவர் கருதுகிறாரே தவிர, வேண்டு மென்ற குரூரத்தனமாகத் தான் நடந்து கொள்வதாக அவர் நினைப்பதில்லை. மத நம்பிக்கைகளைப் பின்பற்றிவரும் ஒரு சாதாரண ஹிந்து, தீண்டாமை விதிகளைத் தன்னால் கடைப் பிடிக்க முடியாத போது, அவற்றைச் சற்றே தளர்த்திக் கொள் கிறார். அவற்றை எப்போதும் கைவிட்டு விடுவதில்லை. தீண்டா மையைக் கைவிட்டு விடுவதென்றால், அவரும் ஏனைய பெரும் பாலான ஹிந்துக்களும் புரிந்து கொண்டுள்ளபடி, அடிப்படையான

ஹிந்துமதக் கோட்பாடுகளை முற்ற முழுக்கத் துறந்து விடுவதற் கொப்பாகும். மதத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், எல்லா மத சம்பிரதாயங்களையும் போலவே தீண்டாமையும் பிடிவாதமாக நிலைத்திருக்கும். இந்திய மண்ணிலிருந்து தீண் டாமையை ஒழிப்பதற்காக, பல மகாத்மாக்கள் ஏற்கெனவே அரும் பாடுபட்டுள்ளனர் என்பதை இந்திய வரலாற்றில் காண்கிறோம். புத்தர், ராமானுஜர், மற்றும் நவீனகால வைணவ மகான்கள் இவர்களில் அடங்குவர். இத்தகைய தாக்குதல்களையெல்லாம் சமாளித்துத் தாக்குப்பிடித்த இந்த அமைப்புமுறை தகர்ந்து விழுந்து விடும் என்று கருதுவது துணிச்சலானது, அபாயகரமானது. தீண்டாமையைக் கடைப்பிடிப்பது ஒரு மத சம்பிரதாயமாகவும், அதைக் கடைப்பிடிக்காதது பாவச் செயல் என்றும் ஒரு ஹிந்து கருதுகிறார். எனவே, இந்தக் கருத்து நிலைத்து நீடித்திருக்கும் வரையிலும், தீண்டாமையும் நீடித்து வரும் என்பதே எனது அபிப் பிராயம்.

தீண்டாமை அமைப்பின் பொருள் விளக்கங்கள் மற்றும் பண்புகள் சம்பந்தமான பொதுவான கேள்விகளுக்கு என்னுடைய கருத்தை வெளியிட்ட பின்னர், மூன்று மாநிலங்களிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்கட் தொகைப் பிரச்சினையைப் பற்றி (இதில் ஒருமித்த அபிப்பிராயம் இல்லை) என்னுடைய சில கருத்துக்களை வெளியிட விரும்புகிறேன்.

**2. ஐக்கிய மாகாணங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்புக்கள்**

5. ஐக்கிய மாநிலத்திலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்புக்களின் மக்கட் தொகையைப் பொறுத்த மட்டில், கமிட்டியிடம் ஐந்து வித்தியாசமான மதிப்பீடுகள் தரப்பட்டுள்ளன:

1) ஐக்கிய மாநிலங்களின் மாகாண வாக்குரிமைக் கமிட்டி யின் மதிப்பீடு.
2) திரு. பிளன்ட் தனது குறிப்பில் அளித்திருக்கும் மதிப்பீடு.
3) சென்சஸ் கமிஷனர் கொடுத்திருக்கும் மதிப்பீடு.
4) ஐக்கிய மாகாண அரசாங்கம் அளித்திருக்கும் இரண்டு மதிப்பீடுகள்.

இந்த மதிப்பீடுகளைப் பற்றி என்னுடைய கருத்துக்களை இங்கே வெளியிடுகிறேன்:

6) திரு. பிளன்ட்டின் குறிப்பு மிகவும் அதிகாரபூர்வமாக உள்ளது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். 1911-ல் ஐக்கிய மாநிலங்களின் சென்சஸ் கண்காணிப்பாளர் என்ற முறையில் அவருக்குக் கிடைத்த உண்மை விவரங்களை அது அடிப்படை யாகக் கொண்டிருக்கிறது. திரு. பிளன்ட் அவருடைய முதல் முன் வரைவில், ஐக்கிய மாநிலங்களிலிருந்த தீண்டத்தகாத ஜாதி களைப் பற்றி எழுதிய விவரங்கள் சரியாக உள்ளனவா என்று

ஆராய்வதற்காக, ஐக்கிய மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப் பட்ட, அதிகாரபூர்வமற்ற ஹிந்துக்களைக் கொண்ட கமிட்டியின் அபிப்பிராயமும் இதற்குப் பக்கபலமாக அமைந்துள்ளது. எனி னும், கீழ்க்காணும் விவரங்களில், திரு. பிளன்ட் கூறிய கருத்தி லிருந்து நான் மாறுபடுகிறேன்.

அ) முதலாவது விஷயம்: கீழ்க்காணும் ஒரே சமுதாயங்களை, இரண்டு பிரிவுகளாக அதாவது தீண்டத்தக்கவர் மற்றும் தீண்டத்தகாதவர் என்ற இரண்டு பிரிவுகளாக அவர் பிரித்திருக்கிறார்.

| | தீண்டத் தக்கவர் | தீண்டத் தகாதவர் |
|---|---|---|
| 1) போக்சா குழு | 30,000 | 19,028 |
| 2) கோரி குழு | 1,54,867 | 7,75,839 |
| 3) சமார் குழு | 20,00,000 | 41,87,770 |

ஆ) இரண்டாவது விஷயம்: 1,10,032 பேரைக் கொண்ட அரக் குழுவை அவர் தீண்டத்தக்கவர்களாகக் குறிப்பிட் டிருக்கிறார். இந்தக் குழு பாசி சமுதாயத்தின் ஒரு பகுதி யாகும். பாசி சமுதாயம் தீண்டத்தகாத சமுதாயம் என்ப தில் எத்துணை ஐயமுமில்லை.

திரு. பிளன்ட் கடைப்பிடித்த முறை எதார்த்த உண்மைகளுக்கு ஏற்ப இல்லை என்பதே என்னுடைய வாதம். ஹிந்து சமூக வாழ்க்கையின் அடிப்படைத்தத்துவத்தாலும் அது மெய்ப்பிக்கப் படவில்லை. கோரி குழு, சமார் குழுவின் ஒரு பகுதியேயாகும். எனவே, அது முற்றிலும் தீண்டத் தகாதவர்களைக் கொண்ட தாகும். 1911-ல் ஐக்கியமாநிலங்களின் சென்சஸ் கண்காணிப் பாளராகப் பணியாற்றியபோது, திரு. பிளன்ட் அவர்களே சமர்ப் பித்த அறிக்கையில் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார். 1911-ஆம் வருட சென்சஸ் அறிக்கையின் 347-ஆவது பாரா வில், அவர் எழுதிய குறிப்புக்களை நான் ஆதாரமாகக் கொண் டிருக்கிறேன்; அவர் அதில் சமார்களுக்கும் கோரிகளுக்குமிடையே யுள்ள சம்பந்தத்தைப் பற்றி விவாதித்துள்ளார். அதே அறிக்கை யில் அவர் கீழ்க்காணும் கருத்துக்களையும் வெளியிட்டிருக்கிறார்:

"சமார்களுக்கும் கோரிகளுக்குமிடையேயுள்ள உறவு ஏற் கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. கோரக்பூரில் அந்த உறவு மேலும் நெருக்கமாய் இருப்பது போலத் தோன்றுகிறது. அங்கே கோரி சமார்களைத்தவிர, வெறும் கோரிகள் இல்லை யென்று கூறப்படுகிறது. எனினும், கோரி சமார், தம் பெயரி லிருந்து சமார் என்பதை நீக்கிவிட்டு, வெறும் கோரி என்றே அழைத்துக் கொள்கிறார்; அல்லது தமது பெயரில் சிறிது மாற்றம் செய்து கொய்ரி என்று வைத்துக் கொள்கிறார்.

> கோரக்பூர் மாவட்டத்தில், தன்னுடைய கைகளிலிருந்து தண்ணீர் வாங்கிக் குடிக்கும்படி தந்திர மோசடி செய்தாரென்று ஒரு கலாசி, அவருடன் வேலை செய்யும் ஏனைய ஹிந்து சக ஊழியர்களால் மிக மோசமாக அடித்து நொறுக்கப்பட்டார்.''

அரக் குழுவைப் பொறுத்த மட்டில், ''முக்கியமான பாசி குலத்திலிருந்து இந்த ஜாதிகள் அனைத்தும் தோன்றியிருப்பது போலத் தோன்றுகின்றன'' என்று திரு. பிளன்ட்டே ஒப்புக் கொள்கிறார். பாசிகுலம் தீண்டத்தகாத ஜாதியைச் சேர்ந்து என்று அவர் நிர்ணயித்திருக்கிறார். இப்போது சமார் குழுவை எடுத்துக் கொள்வோம். தீண்டத்தகாதவர்கள் என்ற பிரிவிலிருந்து 20 லட்சம் சமார்களை நீக்கி விட்டதற்கான காரணங்களை, தம்முடைய குறிப்பின் 17-ஆம் பக்கத்தில் திரு. பிளன்ட் விவரித்திருக்கிறார். அவர் இவ்வாறு கூறுகிறார்: ''குதிரைச் சேணம் செய்பவர், செருப்புத் தைப்பவர், குதிரை நலம் பேணுபவர் போன்ற சுத்தமான தொழில்களில் பல சமார்கள் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள். காண்பூரிலும், இதர இடங்களிலும் தோல் வியாபாரம் விரிவடைந்திருப்பதால், பல சமார்கள் பணக்காரர்கள் ஆகியுள்ளனர். இதனால், கிராமத்திலுள்ள தங்கள் சகோதரர்களை விட இவர்கள் உயர்ந்த சமூக அந்தஸ்தைப் பெற முனைகிறார்கள். இத்தகைய சமார்கள் பொதுவாகத் தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்படுகின்றனர். பலர் தம்முடைய ஜாதிப் பெயர்களையும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, கோரில், அஹார்வார், ஜாதிய, துசிய என்றும் விசேஷமாக ஜெய்ஸ்வார் என்றும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.'' திரு. பிளன்ட் செய்ததைப் போல, சுத்தமான தொழில்களில் ஈடுபட்டிருக்கக் கூடிய அல்லது பணக்காரர்கள் ஆகிவிட்ட சமார்களை தீண்டத்தகாதவர்கள் பிரிவிலிருந்து விலக்கிவிடுவது முற்றிலும் தவறான கண்ணோட்டம் என்பது என்னுடைய அபிப்பிராயம். ஒரு தனிநபருடைய சமூக அந்தஸ்து, அவருடைய சொந்த சமுதாயத்தின் அந்தஸ்துடனேயே உயர்கிறது அல்லது தாழ்கிறது என்பதுதான் தீண்டாமை அமைப்பின் குணாதிசயங்களில் ஒன்றாகும். ஒரு தீண்டத்தகாதவர் எப்போதும் தீண்டத்தகாதவராகவே இருப்பார் என்பதுதான் ஹிந்து சமூகவாழ்க்கையின் நியதி. இது அதனுடைய அடிப்படையான அம்சம். ஒரு தனிநபருடைய சமூக அந்தஸ்து, அவர் அங்கம் வகிக்கும் சமுதாயத்தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் ஏற்ப மாறுபடாமல், அவருடைய சொந்தத் தகுதி மற்றும் தகுதியின்மைக்கு ஏற்பவே மாறுபடக் கூடிய வர்க்க அமைப்பிலிருந்து இது வேறுபடுத்திக் காட்டுகிறது. ஹிந்து சமூகவாழ்க்கையின் இந்த அடிப்படையான முக்கிய கோட்பாட்டைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், தீண்டத்தகாத ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்று ஒப்புக் கொள்ளப்பட்ட சிலர், தீண்டத்தக்கவர்களாகக் கருதப்படலாம் என்று திரு. பிளன்ட் மேற்கொண்ட கருத்தை விலக்கித் தள்ளி விட வேண்டும். இது உண்மையிலேயே முன்னுக்குப்பின்

முரணானது; எதார்த்த உண்மைகளுக்குப் பொருத்தமாகவும் இல்லை. திரு. பிளன்ட் குறிப்பிட்ட சமார் ஜாதிப் பிரிவினர் தீண்டத்தக்கவர்களாக நடத்தப்படுகிறார்கள் அல்லது கோவில் களுக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள் அல்லது அவர்கள் பொதுக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்கலாம் என்பதெல்லாம் உண்மை யல்ல. அதற்கு மாறாக, தாங்கள் தீண்டத்தகாதவர்களாக நடத்தப் படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்கள் தமக்குத்தாமே புதிய பெயர்களை அளித்துக் கொண்டார்கள் என்று திரு. பிளன்ட்டின் அறிக்கையே கூறுகிறது. ஐக்கிய மாநிலங்களுக்கான 1911-ஆம் வருட சென்சஸ் அறிக்கையில், இதைப் பற்றிய உதாரணங்களை திரு. பிளன்ட்டே அளிக்கிறார். அறிக்கையின் முதல் தொகுதியி லிருந்து கீழ்வரும் பகுதியை மேற்கோள் காட்டுகிறேன்:

> ''ஒரு ஜெய்ஸ்வார் சமார், தான் சமார் என்பதை ஒரு போதும் ஒப்புக் கொள்வதில்லை; தன்னுடைய ஜாதி ஜெய்ஸ் வார் மட்டுமே என்றும், ராஜ்புத் உள்பட பல்வேறு ஜாதி களின் ஓர் உபஜாதி என்றும் அவர் கூறுகிறார். ஆக்ரா மாவட்டத்தில் துண்ட்லா என்ற இடத்தில் குதிரை நலம் பேணும் ஒருவர் என்னை ஏமாற்றமுயன்றார். அங்கே ஏராள மான எண்ணிக்கையில் ஜெய்ஸ்வார்கள் வசித்துவந்தார்கள். விசாரித்த போது, அவர்கள் அனைவரும் பட்டாளத்தில் இருந்த குதிரை நலம் பேணும் சமார்களின் வாரிசுகள் என்றும், அவர்கள் அங்கே குடியமர்ந்திருக்கிறார்கள் என்றும் தெரிய வந்தது.''

என்னுடைய வாதம் ஒப்புக் கொள்ளப்பட்டால், தீண்டத்தக்க வர்கள் என்று திரு. பிளன்ட் குறிப்பிட்டிருக்கும் தீண்டத்தகாத சமூகத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையை, தீண்டத்தகாதவர் களின் மொத்த எண்ணிக்கையுடன் சேர்த்துக் கொண்டால், ஐக்கிய மாநிலங்களில் தீண்டத்தகாதவர்கள் என்று திரு. பிளன்ட் கொடுத் திருக்கும் எண்ணிக்கை 1,14,76,214 ஆக இருக்கும்.

7. தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை 1 கோடி 26 லட்சம் என்று சென்சஸ் கமிஷனரின் மதிப்பீடு கூறுகிறது. மேலும் கறாராகக் கணக்குப் போட்டுப் பார்த்தாலும், தீண்டத்தகாதவர் களை மட்டுமே சேர்த்திருக்கும் ''எ. பட்டியல்'' ஏற்றுக் கொள்ளப் பட்டாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை ஒரு கோடி 10 லட்சத்தைவிடச் சற்று அதிகமாயிருக்கும். இந்த எண்ணிக்கை யானது திரு. பிளன்ட் அளித்த மதிப்பீட்டிற்கு ஏறத்தாழ சரியாக இருக்கிறது.

8. ஐக்கியமாநில அரசாங்கம் இரண்டு மதிப்பீடுகளை அளித் திருக்கிறது. முதல் அறிக்கையில் அது 67,73,814 என்ற எண் ணிக்கையைக் கொடுத்திருக்கிறது. தொட்டால் தீட்டு ஏற்படும் என்ற விளக்கத்திற்குள் வரக்கூடிய ஜாதிகளின் மொத்தத் தொகை

4,59,000 என்று மாநிலக்கமிட்டி அளித்த புள்ளி விவரத்தை தன்னுடைய இறுதி அறிக்கையில் அது ஏற்றுக் கொண்டிருக் கிறது. அதனுடைய முதல் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் 67,73,814 என்ற மதிப்பீடு, ஐக்கிய மாநிலங்களிலுள்ள தீண்டத் தகாத மக்களைப்பற்றிய மதிப்பீடு அல்ல என்று சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகிறது. இந்த விஷயத்தைப் பொறுத்த மட்டில், ஐக்கிய மாநில அரசாங்கம் திரு. பிளன்ட் தன்னுடைய அறிக்கையில் த்ந்திருக்கும் எண்ணிக்கையை மறைமுகமாக ஏற்றுக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. ஐக்கிய மாநில அரசாங் கத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் 67,73,814 என்ற மதிப்பீடு அதனுடைய அபிப்பிராயப்படி, அரசியல் பாதுகாப்பு அளிக்கப் பட வேண்டுமென அங்கீகரிக்கப்பட்ட மக்களைப்பற்றிய மதிப்பீடு ஆகும். இந்த வழிமுறையின் தகுதிகளை நான் கீழே விவாதித் திருக்கிறேன். ஐக்கிய மாநில அரசாங்கம் தந்திருக்கும் இந்த மதிப் பீடு, மொத்தமுள்ள தீண்டத்தகாத மக்களைப்பற்றிய மதிப்பீடு அல்ல என்று மட்டும் நான் இங்கே திரும்பக் கூறவிரும்புகிறேன். ஐக்கிய மாநில அரசாங்கம் தனது இறுதி அறிக்கையில் அளித்திருக் கும் மதிப்பீட்டை, அது சைமன் கமிஷனுக்கு அளித்திருக்கும் மதிப் பீட்டுடன் ஒப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். ஐக்கிய மாநில அரசாங்கம் சைமன் கமிஷனுக்கு அளித்த குறிப்பாணையின் இறுதி யில் சேர்க்கப்பட்ட பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை பற்றிய குறிப்பு அச்சடிக்கப்பட்டிருந்தது. அது இவ்விதம் கூறியது: ''தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்படும் ஜாதிகளின் பட்டியல், 1901-ஆம் வருட ஐ.மா. சென்சஸ் அறிக்கையிலிருந்து எடுக்கப் பட்டது. இந்தப் பட்டியலில் ஒவ்வொரு ஜாதியின் மக்கட்தொகை குறிக்கப்பட்டிருக்கிறது.... உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒருவர், தீண்டத்தகாதவரிடமிருந்து உணவையோ அல்லது தண்ணீரையோ பெற்றுக் கொள்ள மாட்டார். தீண்டத் தகாதவரை அவர் தொட்டு விட்டாலோ அல்லது நெருக்கமாகக் கலந்து விட்டாலோ தான் உணவு அருந்துவதற்கு முன்னரோ, அல்லது ஏனைய மேல் ஜாதி யினருடன் கலந்து கொள்வதற்கு முன்னரோ குளிக்க வேண் டும்.'' குறிப்பாணை சமர்ப்பிக்கப்பட்ட 1928 மே 16-ஆம் தேதி யன்று, தொட்டால் தீட்டு ஏற்பட்டு விடும் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட தீண்டத்தகாத மக்களின் எண்ணிக்கை ஒரு கோடி 30 லட்சம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. நம் முடைய கமிட்டியின் தலைவர் அளித்த விளக்கம், ஐக்கிய மாநிலத் திலிருந்து கிடைத்த விளக்கத்திலிருந்து மாறுபட்டிருக்கவில்லை என்பது தெளிவு. மொத்தம் ஒரு கோடி 30 லட்சம் என்று கணக் கிடுவதற்கு 1928-ல் அரசாங்கம் இதைத்தான் பின்பற்றியுள்ளது. எனவே, இந்த இரண்டு மதிப்பீடுகளுக்கு இடையேயுள்ள பெரும் வித்தியாசத்தை விளக்கிக்கூறும்படி ஐக்கிய மாநில அரசாங்கத் தைக் கேட்டுக் கொள்கிறேன். ஐக்கிய மாநிலங்களில் உள்ள தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையைப் பற்றி, ஐக்கிய மாநில

அரசாங்கம் அளித்திருக்கும் மதிப்பீடுகளில் உள்ள மாற்றங்களும், தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதித்துவம் பற்றிய முறை சம்பந்த மாக ஐக்கிய மாநில அரசாங்கத்தின் கண்ணோட்டங்களில் ஏற் பட்ட மாற்றங்களும் ஒரே மாதிரி உள்ளன என்று விமர்சிக்காமல் இருக்க முடியவில்லை. 1930 ஆகஸ்டு 23-ஆம் தேதியன்று, சைமன் கமிஷனுக்கு அனுப்பிய தம்முடைய அறிக்கையில், ஐக்கிய மாநில அரசாங்கம், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனி வாக்காளர் தொகுதியை அளிக்க வேண்டும் என்று உறுதியாக ஆதரவு தெரி வித்தது. நம்முடைய கமிட்டிக்கு அளித்த தனது முதல் அறிக்கை யில், ஒரு குழுப்பட்டியலிலிருந்து உறுப்பினர்களை அரசாங்கம் நியமனம் செய்ய வேண்டுமென்று கூறியது; ஆனால், அது தனது இறுதி அறிக்கையில், இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென பரிந்துரை செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கை, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் என்ற இரண்டு மிக முக்கியமான பிரச்சினைகளில் அரசாங்கத்தின் கருத்துக்களில் இத்தகைய விசித் திரமான ஊசலாட்டங்கள் ஏற்படுவது தாழ்த்தப்பட்ட மக்களின் இலட்சியங்களுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

9. ஐக்கிய மாநிலங்களின், மாநில வாக்குரிமைக் கமிட்டி அளித்திருக்கும் மதிப்பீடு சம்பந்தமாக, கீழ்க்காணும் உண்மைகளின் பால் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்:

அ) தாழ்த்தப்பட்ட மக்களின், அதாவது தொட்டால் தீட்டு ஏற்படும் என்று கருதப்படும் மக்களின் எண்ணிக்கை 1928-ல் சுமார் ஒரு கோடி 15 லட்சங்களுக்கும் ஒரு கோடி 30 லட்சங்களுக்குமிடையே இருந்ததாக சென்சஸ் கமிஷனர் திரு. பிளண்ட், மற்றும் அரசாங்கம் அளித்த புள்ளி விவரங் கள் கூறுகின்றன. எனவே, வியக்கத்தக்க அளவுக்குக் குறைந்த மதிப்பீட்டைக் கமிட்டி அளித்துள்ளதை அதுதான் நியாயப் படுத்த வேண்டும்.

ஆ) கமிட்டியின் இரண்டு தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த உறுப்பினர்களும், கமிட்டியின் பெரும்பான்மையான உறுப்பினர்களும் அதன் கருத்தை ஏற்றுக் கொண்டதாகக் கமிட்டி கூறுகிறது. அதைப்பற்றி எனக்கு ஐயப்பாடு உள்ளது. எப்படியிருந்தாலும், இந்த விஷயத்தைப் பற்றி பாபு ராம் சரண் தெரிவித்த அபிப்பிராயத்திற்கு எந்த மதிப்பும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன். பொரு ளாதார ரீதியில் ஏழை, கல்வி விஷயத்தில் பின்தங்கிய ஜாதி என்ற அர்த்தத்தில்தான் அவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்; சரியானபடி பார்த்தால், அவர் தீண்டத்தகாத ஜாதியைச் சேர்ந்தவர் அல்ல.

இ) தீண்டத்தகாதவர்களை நிர்ணயிப்பதற்காக ஆலயப் பிரவேசம், தொட்டால் தீட்டு என்ற இரண்டு சோதனைகளை இந்திய வாக்குரிமைக்கமிட்டி கடைப்பிடிக்குள்ளது. ஐக்கிய

தீண்டத்தகாதவர்களுக்குமிடையே கலகங்கள் ஏற்பட்டன. இதனால், சில இடங்களில் தீண்டத்தகாதவர்கள், தங்கள் ஜாதிகளைக் குறிப்பிடாமல், அத்-தர்மிகள் என்று மட்டுமே சென்சஸ் அதிகாரிகளிடம் பதிவு செய்தனர். இதர இடங்களில், அவர்கள் அவ்விதம் செய்யவிடாமல் தடுக்கப்பட்டதால், தங்களை பழைய ஜாதிப் பெயர்களிலேயே ஹிந்துக்கள் என்று பதிவு செய்து கொண்டனர். தீண்டத்தகாதவர்களைப் பற்றிய கணக்கெடுப்பில் சிருஷ்டிக்கப்பட்ட கஷ்டங்களை எடுத்துக் காட்டவே இந்த உண்மைகளை நான் குறிப்பிடுகிறேன். இதை பஞ்சாப் அரசாங்கமும் ஒப்புக் கொண்டிருக்கிறது. பஞ்சாபிலுள்ள தீண்டத்தகாதவர்களின் எண்ணிக்கையும், தீண்டத்தகாத ஜாதிகளின் பட்டியலும் சுருங்கிப் போனதற்கு இது காரணமாக இருக்கக் கூடும். எனவே, இந்த விஷயத்தை மிகவும் கவனமுடன் ஆராய வேண்டியது அவசியம்.

## 4. வங்காளத்தில் தாழ்த்தப்பட்ட ஜாதிகள்

13. வங்காளத்திலுள்ள தாழ்த்தப்பட்ட ஜாதிகளைப் பொறுத்த மட்டில் ஒரு முக்கியமான சான்று உள்ளது. அதன்பால் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். 1911-ஆம் வருட வங்காள சென்சஸில் கொடுக்கப்பட்டிருக்கும் பட்டியல் முற்றிலும் சரியானது என்பதை அது எடுத்துக்காட்டுகிறது. வங்காளத்தில், தீண்டத்தகாத ஜாதிகள் என்று மரபார்ந்த முறையில் கருதப்பட்டு வந்த ஜாதிகள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. 1809-ஆம் வருட 4-ஆம் சட்டத்தின் 7-ஆம் பிரிவை இங்கே சுட்டிக்காட்டுகிறேன். (1806-ஆம் வருட 4 மற்றும் 5-ஆம் எண் சட்டங்களை 1809-ஆம் வருடச் சட்டம் தள்ளுபடி செய்தது. ஜகன்னாதர் ஆலயத்திற்குச் செல்லும் பயணிகளுக்கு விதிக்கப்படும் கட்டணங்களையும், கோவில் விவகாரங்களை நிர்வகித்து மேற்பார்வை செய்வதையும் இந்தச் சட்ட விதிகள் திருத்தியமைத்தன. 1809 ஏப்ரல் 28-ஆம் தேதியன்று கவர்னர் ஜெனரல் இன் கவுன்சில் இந்தச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார்.) 1809-ஆம் வருடச் சட்டம், பூரியிலுள்ள ஜெகன்னாதர் ஆலயத்திற்குள் கீழ்க்காணும் ஜாதியினர் பிரவேசிக்கக் கூடாதென்று தடை செய்கிறது: 1) லோலி அல்லது காஷி, (2) கலால் அல்லது சுன்ரி, (3) மச்சுவா, (4) நாம சூத்ரா அல்லது சண்டாளர், (5) குஸ்சி, (6) கஜுர், (7) பாக்தி, (8) ஜோகி அல்லது நுர்பாஃப், (9) கஹர்-பௌரி மற்றும் துலியா, (10) ராஜ்பன்சி, (11) பிராலி, (12) சமார், (13) தோம், (14) பான், (15) தியார், (16) புயுன்னாலி, (17) ஹரி.

1911-ஆம் வருட சென்சஸ் பட்டியலுடன் இந்தக் கணக்கு ஒத்துப் போகிறது; எனவே இது சரியானது என்று எடுத்துக் கொள்ளலாம். கடந்த 100 ஆண்டுகளில், வங்காளத்தில், தீண்டத்தகாதவர்களின் சமூக அந்தஸ்தில் எத்தகைய மாற்றமும் ஏற்படவில்லை என்பதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

ஐக்கிய மாநிலங்கள், வங்காளம், பஞ்சாப் ஆகிய மூன்று மாநிலங்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையில் வித்தியாசங்கள் உள்ளன. இது சம்பந்தமாக ஒரு விஷயத்தின்பால் கவனத்தை ஈர்க்கவிரும்புகிறேன். தீண்டத்தகாதவர் என்று கருதப்படும் மக்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கு, இந்திய வாக்குரிமைக் கமிட்டி இரண்டு திட்டவட்டமான சோதனைகளைக் கடைப்பிடித்தது. ஆனால், மாநில அரசாங்கங்களும், மாநில வாக்குரிமைக் கமிட்டிகளும் ஒரே ஒரு சோதனையை மட்டுமே, அதாவது, தொட்டால் தீட்டு என்ற சோதனையை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு செயல்பட்டுள்ளன.

## 5. பெயரிடும் முறை

14. அரசியல் சாசனத்தில் பிரரேபிக்கப்பட்ட மாற்றங்களின் விளைவாக வாக்காளர் பட்டியல் திருத்தியமைக்கப்படுகிறது. எனவே, தாழ்த்தப்பட்ட வகுப்புகளுக்கு மிகவும் பொருத்தமான, சரியான பெயரைச் சூட்டும் பிரச்சினையைப் பரிசீலிப்பதற்கு இது மிகவும் நல்ல சந்தர்ப்பமாகும். எனவே, இந்தப் பிரச்சினையின்பால் எனது கருத்தை வெளியிட விரும்புகிறேன். ''தாழ்த்தப்பட்ட வகுப்பு'' என்று தற்சமயம் அழைக்கப்பட்டுவரும் சமுதாயங்கள், அவ்விதம் தாங்கள் வர்ணிக்கப்படுவதற்குக் கணிசமான ஆட்சேபம் தெரிவிக்கின்றன. கமிட்டியிடம் சாட்சியம் கூற வந்த பலர் இந்த ஆட்சேப உணர்வை வெளிப்படுத்தியுள்ளனர். மேலும், ''தாழ்த்தப்பட்ட வகுப்பு'' என்ற இந்தச் சொல், சென்சஸில் பெரும் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. ஏனெனில், தீண்டத்தகாதவர்கள் என்று கறாராகக் கூறப்பட முடியாதவர்களையும் இது உள்ளடக்கியிருக்கிறது. இரண்டாவதாக, தாழ்த்தப்பட்ட வகுப்பு என்ற சொல் தாழ்வுற்ற, நிராதரவான சமுதாயம் என்ற கருத்தை அளிக்கிறது. ஆனால், உண்மையில் ஒவ்வொரு மாநிலத்திலும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படுபவர்களில் ஏராளமான பேர் பணக்காரர்களாகவும், கல்விமான்களாகவும் திகழ்கின்றனர். சமுதாயம் முழுவதும் தன்னுடைய தேவைகளின்பால் விழிப்புணர்வு கொண்டிருக்கிறது; இந்திய சமுதாயத்தில் ஒரு கௌரவமான அந்தஸ்தை அடைவதற்காக ஆர்வமுடன் பாடுபட்டுக் கொண்டிருக்கிறது; அதைச் சாதிப்பதற்காகப் பிரம்மாண்டமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறது. இந்த எல்லாக் காரணங்களையும் கொண்டு பார்த்தால், ''தாழ்த்தப்பட்ட வகுப்பு'' என்ற சொல் பொருத்தமற்றது, தகுதியற்றது. அஸ்ஸாமைச் சேர்ந்த சென்சஸ் கண்காணிப்பாளரான திரு. முல்லன், தீண்டத்தகாதவர்களைக் குறிப்பிடுவதற்காக, ''புற ஜாதிகள்'' என்ற புதிய சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறார். இத்தகைய பெயர் பல அனுகூலங்களைக் கொண்டிருக்கிறது. தீண்டத்தகாதவர்களின் நிலைமையை இது மிகவும் துல்லியமாக விவரிக்கிறது. தீண்டத்தகாதவர்கள் ஹிந்து சமயத்தில் இருக்கிறார்கள், ஆனால், ஹிந்து

சமுதாயத்திற்கு வெளியில் உள்ளனர்; பொருளாதார ரீதியாக வும், கல்வி ரீதியாகவும் தாழ்ந்த நிலையில் உள்ள, ஆனால் ஹிந்து சமயம் மற்றும் ஹிந்து சமுதாயத்திற்கு உள்ளே இருக்கக் கூடிய ஹிந்துக்களிடமிருந்து தீண்டத்தகாதவர்களை இது வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்தச் சொல்லுக்கு வேறு இரண்டு அனுகூலங்களும் உள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பு என்ற தெளிவில்லாத சொல் லைப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்படும் எல்லாக் குழப்பங்களை யும் இது தவிர்க்கிறது; அதேசமயம், இந்தச் சொல் வெறுப்பூட்டு வதாகவும் இல்லை. இந்த விஷயத்தில், பரிந்துரை செய்வதற்குத் தனக்குத் தகுதி இருப்பதாக, எங்களுடைய கமிட்டி உணரவில்லை. ஆனால், இதைவிட நல்ல பெயர் கிடைக்கும் வரை தீண்டத் தகாத ஜாதிகள் தாழ்த்தப்பட்ட ஜாதிகள் என்பதற்கு பதிலாக, இனிமேல் 'புற ஜாதிகள்' அல்லது 'ஒதுக்கப்பட்ட ஜாதிகள்' என்று அழைக்கப்பட வேண்டும் என்று தாழ்த்தப்பட்ட ஜாதி களின் பிரதிநிதி என்ற முறையில் அறிவிப்பதற்கு நான் சற்றும் தயங்கவில்லை.

### 6. தனி ஒதுக்கீடுகள்

15. இந்தக்குறிப்பை முடிப்பதற்கு முன்னர், கமிட்டியிலிருக் கும் எனது முஸ்லீம் சகாக்கள் வெளியிட்ட அதே கருத்தை நானும் வெளியிட விரும்புகிறேன். அதாவது, தொழிலாளர்கள், பெண் கள், மற்றும் இது போன்ற விசேஷ நலன்களுக்காக இடங்கள் ஒதுக்கப்படுவதானது, வட்டமேஜை மாநாட்டில் சமர்ப்பிக்கப் பட்ட சிறுபான்மையினர் ஒப்பந்தத்தில், தாழ்த்தப்பட்ட வகுப் பினர் பாத்தியதை கொண்டாடியிருக்கும் இடங்களின் வீதா சாரத்தைப் பாதிக்கக் கூடாது.

1, மே, 1932. **பி. ஆர். அம்பேத்கர்**

# சிறப்புப் பெயரகராதி


அ

அலெக்சாண்டர் கார்டியூ, சர்., 196

அனந்த கிருஷ்ண சாஸ்திரி, 202

இ

இராமானுசர், 276

எ

எல்பின்ஸ்டன், 140, 142, 153

க

கெய்க்வாடு மஹாராஜா, 208

கோகலே, 39

ச

சவுத்பரோ குழு, 50, 77, 78, 81, 177, 184, 232

சிவசாமி ஐயர், சர்., 126

சோலங்கி, 219, 231

த

தால்வி, டி. ஜி., 218

ந

நேரு, 9

ப

பார்க்கர், 24

பாஜ்பாய், 187

பிளன்ட், 277, 278, 279, 280

பிராஞ்சிபே, டாக்டர்., 40

பிரைஸ், 42

புத்தர், 276

பூர்க்கரி, ஜீ.எம்., 7

ம

மாண்டேகு, 7

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை, 50, 96

மார்லி-மின்டோ திட்டம், 21, 50, 77

மௌலானா அபுல் கலாம் ஆசாத், 9

வ

வாரன் ஹேஸ்டிங்ஸ், 28

வில்லியம் வின்சென்ட், சர்., 87

ராவ், வி.ஜி., 218

லக்னோ ஒப்பந்தம், 85

ஹ

ஹன்டர் கமிஷன், 40, 165, 167

ஹரி சந்த்ராய் விஷின்தாஸ், 7

